
# ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நிலை : **தலைவர்**

**பாட புத்தகம் எண்: 8**



**நிலைகள்:**

5. ஊழியர்
4. தலைவர் / மேய்ப்பர்
3. செல் குழு தலைவர்
2. சீஷர்கள்
1. ஆரம்ப நிலையில் உள்ளவர்

*வேத பாட திட்டங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ந்த ஊழியராகவும் மற்றும் செயல்பாட்டு திறமையில் உயரவும், செயல்பாட்டு திறமையுள்ள ஊழியத்தை பெறவும் !!!*

*தன்னில் தானே படித்துக்கொள்ளவும், அதே வேளையில் மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் எளிதானது !!!*

# ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

**நோக்கம்:**

## → ஒன்றான மெய்தேவனாகிய அவரை அறிந்து கொள்ளுதல்

(வளருதல் / முதிர்ச்சியடைதல்)

- யோசுவா1:8, ''இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்."
- 2 பேதுரு 3:18, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."
- 2 தீமோ. 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."
- கொலோ. 1: 27, 28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."

## → பிறர் அவரை அறிந்து கொள்ள செய்தல்

(பெருகுதல் / இனப்பெருக்கமடைதல்)

- 2 தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."
- 2 தீமோ. 3:16,17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."
- எபே.2:10,"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."
- 2 பேதுரு. 1:8, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

**<u>கொள்கை</u>: ''சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது!'' (ரோமர்.11:36)**

(அறிவிலே அதிகரித்தல்; குணாதிசயத்தில் முதிர்ச்சியடைதல்; ஆவிக்குரிய வரங்களை உபயோகித்தல்)

## அட்டவணை பாட புத்தக எண்: 8 பக்க எண்


- ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவத் தலைவர் ஆவது எப்படி? (14 அதிகாரங்கள்) 4
  - (1) வெற்றியை குறித்தான வேதாகமத்தின் பார்வை 4
  - (2) செயலூக்கமான கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான கோட்பாடுகள் 14
  - (3) சரியான செயல் தூண்டுதல் உணர்ச்சியைப் பெற்றிருத்தல் 19
  - (4) ஒரு நல்ல அஸ்திபாரத்தை போடும்படியாக - நல்லொழுக்கம், ஈவுகள், ஆள்தன்மை 22
  - (5) தலைமைத்துவத்தின் விலையைக் கணக்கிட்டுக் கொள்ளுதல் 33
  - (6) தலைமைத்துவத்தின் சில முக்கியமான அம்சங்கள் 36
  - (7) ஒரு தலைவருடைய ஆவிக்குரிய ஜீவியம் 56
  - (8) மக்களிடையே உள்ள உறவுத்தொடர்புகள் 64
  - (9) தீர்மானங்கள் எடுத்தல் 69
  - (10) பகிர்ந்தளித்தல் என்ற கலை 74
  - (11) ஜெயிக்க வேண்டும் என்ற விருப்பத்தை கட்டுப்படுத்தி செயல்படுத்துதல் 79
  - (12) வரங்களும் தாலந்து ஊழியங்களும் 87
  - (13) அழுத்தத்தை (மனச்சோர்வை) மேற்கொள்வதும், எரிந்து போகுதலை தவிர்த்தலும் 90
  - (14) தலைவருக்குக் கிடைக்கும் வெகுமானம் 124
- தலைமைத்துவத்தின் இருதயமான யோக்கியதாம்சங்கள் (தகுதிகள்) 131
- ஒரு தலைவருடைய இருதயமும், சுய மதிப்பீட்டின் அவசியமும். 152
- உண்மையுள்ள கிறிஸ்தவ தலைவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் 157
- கிறிஸ்துவின் கீழ் தலைமைத்துவம் - பொறுப்புகளும், தகுதிகளும் 163
- கிறிஸ்தவத் தலைமைத்துவத்தின் தகுதிகள் / சுய மதிப்பீட்டு கேள்விகள் 167
- ஆவிக்குரிய தலைமைத்துவம், சுயமான தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் 173
- பவுலின் தலைமைத்துவ நெறிமுறைகள் - (II கொரிந்தியர் நிருபத்தை அடிப்படையாகக் கொண்ட படிப்பு) 179
- பவுலிடமிருந்து தலைமைத்துவத்திற்கான உள்நோக்கு மனத்திறன்கள் - பல தரப்பட்ட தகுதிகள் 185
- வேதாகமத்தின் ஆவிக்குரிய அதிகாரத்துவத்தை விளங்கிக் கொள்ளுதல் (8 அதிகாரங்கள்) 192
  - (1) இராஜ்ஜியத்தின் அதிகாரத்துவம் 192
  - (2) போலியான ஆவிக்குரிய அதிகாரத்துவம் 200
  - (3) பில்லி சூனியத்திற்கு எதிரான நமது கேடகம் 208
  - (4) மாந்திரீகத்தின் ஒழுங்கு முறையான தாக்கங்கள் 215
  - (5) யேசபேலின் ஆவி 224
  - (6) ஆவியின் கட்டுப்பாடும், சட்டரீதியான சார்பும் 227
  - (7) நவீன கால பரிசேயர்கள் 232
  - (8) நமது மகா பெரிய வல்லமையும், நமது பெரிய சத்துருவும் 241

# ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவத் தலைவர் ஆவது எப்படி?

## அதிகாரம் 1 வெற்றியை குறித்தான வேதாகமத்தின் பார்வை

‘‘இந்த நியாயப்பிரமாணப் புத்தகம் உன் வாயை விட்டு பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய்’’ (யோசுவா 1:8) அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய். வெற்றியைக் குறிக்கும் success என்ற ஆங்கில வார்த்தை வேதாகமத்தில் ஒரே ஒரு முறை மட்டும் குறிப்பிடப்படுகிறது. அது sakal ‘சாக்கல்’ என்ற எபிரெயப் பதமாக தெளிவான புரிந்து கொள்ளுதலைப் பெற்றிருத்தல், விவேகம் உள்ளவனாக ஆகும்படியாகவும், சிறந்த வெற்றியை அடைந்து கொள்ளுதல் என்றும் பொருள் விளக்கம் தரும். ‘‘என் கற்பனைகளை நீ விசுவாசமாகக் கைக் கொண்டால் நான் உனக்கு நல்ல வெற்றியைத் தருவேன்’’ என்று யோசுவாவுக்கு தேவன் வாக்களித்தார். தேவன் வாக்குத்தத்தம் செய்தபடியே யோசுவாவுக்கு வெற்றியைத் தந்து தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார் என்று ‘‘யோசுவா’’ என்ற புத்தகத்தின் வாயிலாகக் கண்கூடாகத் தெரிந்து கொள்ளலாம்.

‘‘யாரேஷ்’’ என்ற எபிரெய சொல் தேவனுடைய உதவியால் யோசுவா அடைந்த வெற்றியை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. இது யோசுவா 13:12ல், ‘‘மோசே முறியடித்துத் துரத்தின’’ என்பது யாரேஷ் (Yaresh) என்று குறிக்கப்படுகிறது. முன்னால் குடியிருந்த மக்களை அந்நாட்டை விட்டுத் துரத்திவிட்டு அவர்கள் குடியிருந்த இடத்தைக் கைப்பற்றிக் கொள்ளுதல் என்ற பொருள் விளக்கம் தருகிறது. அவர்களைத் துரத்தி விட்டு, வெளியேற்றி விட்டு அழித்துப் போட்டு அவர்களுடைய சுதந்தரத்தைப் பறித்துக் கொள்வதாகும். அவர்களது சுதந்திர விகிதத்தைக் கைப்பற்றிக் கொண்டு முழுவதுமாக உடைமையாக்கிக் கொள்வதாகும். மேலும் அதுவும் அவர்களது உடைமையானவைகளைக் கையகப்படுத்திக் கொண்டு அவர்களை ஏழ்மை நிலைக்குத் தள்ளிவிடுவதாகும். இது தெள்ளத் தெளிவாக நாட்டை சொந்த உடைமையாக்கிக் கொண்டும், கானான் நாட்டு நகரங்களையும் அதன் முன்னாள் குடி மக்களது சொத்துடைமைகளை உடைமையாக்கிக் கொள்வதும் இதில் அடங்கப் பெறும். ஆனால் அவன் பெற்ற பிரபஞ்சத்து உடைமையாக்கிக் கொள்வதும் இதில் அடங்கப் பெறும். ஆனால் அவன் பெற்ற பிரபஞ்சத்து உடைமைகளாலோ அல்லது இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரித்துக் கொண்டவைகளாலோ அவைகள் அளவிடப்பட முடியாதது. ஆகையால் அந்த வெற்றியானது அவர்களுக்காக தேவனால் முன் குறிக்கப்பட்டு அந்த நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள் என்ற விஷயத்தினால் மட்டுமே அளவிடப்படும்.

வெற்றி என்பது வேதத்தின் தோற்றத்தின்படி பிரபஞ்சத்து செல்வ வளத்தை அடைந்து பெற்றுக் கொள்வதை விடவும், புகழையோ அல்லது விரிவானதோர் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதை விடவும் அதீதமானது என்று பொருள் விளக்கம் பெறும். அகராதியில் கிடைக்கப் பெறும் சாதனைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுதல் வீர சாதனையோ வெற்றியான வெற்றியோ செல்வ வளம், மேல் அதிகாரத்துவம், வெற்றி போன்ற அர்த்த விளக்கங்களை விட அதிக மேன்மையான சொற்பொருள் விளக்கத்தைத் தருவதாகும். வேதாகம தோற்றப் பார்வையில் தேவனுடைய நோக்கம் நமது ஜீவியத்தில் முற்றிலுமாக நிறைவேற்றப் படும் பொழுதுதான் ஜெயம் என்பதொன்று ஜெயம் என்று கருதப்படும்.

<u>வேதத்தின் தோற்றப் பார்வையில் ஜெயம் என்பதன் சொற்பொருள் விளக்கமாவது:</u>

- உன்னுடைய ஜீவியத்தில் தேவனுடைய நோக்கத்தைக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றுவது
- நீ எப்படி இருக்க வேண்டுமோ அவ்வாறு நீ இருக்கும்படியாக தேவன் வாஞ்சிக்கும் ஒரு ஆள் தன்மையுடையவனாக காலா காலத்திற்கும் நித்தியத்திற்கும் இருக்கும்படியாக.
- தேவனுடைய முடிவான ஒப்புக் கொள்ளுதலையும் பாராட்டுதல்களையும் வெற்றியாகப் பெற்றுக் கொள்ளும்படியாக.

யோசுவாவின் புத்தகம் இந்த எல்லா விதமான செயல்பாட்டிலும் மேற்கொள்ளுதல், தோற்கடித்தல் (அ) முறிய அடித்தல் முன்னாள் குடி மக்களை வெளியில் துரத்தி விரட்டி விட்டு அந்த பிடிபட்ட நாட்டில் புதிய குடிமக்களை குடியேற்றி ஜனத்தை அதிகரிப்பது என்றெல்லாம் அதில் உள்ளடங்கும். இது பழைய மனப்பான்மைகளை மேற்கொண்டும் அவைகளின் எண்ணக் கோலங்களையும், கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் வெளியில் புறக்கணித்து அகற்றிவிட்டு அவற்றிற்கு பதிலாக புதிய நடைமுறைகளை நாட்டி வைப்பதாகும். இந்த நடைமுறையானது தேவனுடைய வார்த்தையில் ஒரே சீரானதும், மாறாத தியானமும் அதே போல் மாறாத நேரான பாவ அறிக்கையும் நம்மால் கிரகிக்கப்பட்ட அனைத்தையும் செயல்படுத்துவதும் ஆகும்.

ஜெயத்தைப் பற்றிய தற்காலத்தில் கொடுக்கப்படும் உறுதிப்படுத்துதலானது திருச்சபையின் சில பகுதிகளில் கிறிஸ்தவ அபிப்பிராயத்தை இந்த விவாதத்தின் மீது எதிரும் புதிருமான துருவங்களாக ஆக்கியிருக்கின்றது. இந்த பொருள் தலைப்பின் பேரில் பல்வேறு போக்கான கண்ணோட்டங்கள் உண்டாகியும், மனப்பான்மையிலும் ஒரு விளிம்பு முனையின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கும் வேறுபடுகிறது. ஆகவே ‘‘ஆதிதமான விசுவாசம்’’ என்ற காரணப் பெயரிடப்பட்ட சபைகளையும் ஊழியங்களையும் பெற்றிருக்கிறோம். மற்றவர்கள் மற்றொரு முடிவுக்குப் போய் அங்கே விசுவாசத்தின் வல்லமையைக் குறித்த ஏறக்குறைய முற்றிலுமான மறுதலிப்பைப் பெற்றதாய் இருக்கிறது.

சத்தியம் என்பது சமநிலையை தனக்குள் கொண்டு நம்மை மற்றொரு விளிம்பிற்கு தள்ளிவிடப்படும்படி அனுமதிப் போமானால் நாமும் தவறுக்குள் ஆகிறவர்களாய் இருப்போம். ஒரு சமநிலையான பார்வையே ஆரோக்கியமான வேதத்தின் தோற்றமாகும். இது நாம் தற்சமயம் விவாதித்துக் கொண்டிருக்கும் காரியங்களுக்கு பொருந்தி இருப்பது மட்டுமல்ல பெரும்பான்மையான விவாதங்களுக்கும் தத்துவ போதனைகளுக்கும் இது உண்மையான பொருத்தமாகும். சில கிறிஸ்தவர்கள் இந்த வெற்றிக்குக் கொடுக்கப்படும் அழுத்தத்தைக் குறித்து சலிப்படைந்தவர்களாய் அதை விட்டுச் சரியாகப் பின்வாங்கிச் செல்கிறார்கள். மேலும் ஓர் விதமான எதிர்மறையான மனப்பான்மையை மேற்கொண்டு, அந்த மனப்பான்மையானது அவர்களை இரண்டுங்கெட்டான் என்ற நிலைக்கு அப்பால் ஏதோன்றையும் சாதித்து ஏறக்குறைய நிறைவேற்றக்கூடாதபடிக்கு தள்ளிவிட்டு விடுகிறது. மேலும் வெற்றிக்கு இறுதியான மாற்றொன்றாக இருப்பது தோல்வியே என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. ஒரு வேளை நாம் வெற்றியை பெற்றுக் கொள்ளாவிட்டால் நாம் சிறந்தாக எதிர்பார்க்கக் கூடியது நல்லதும் கெட்டதும் இன்றி ஒரு இரண்டுங் கெட்டான் நிலைமையாகும். Mediocre என்ற ஆங்கில பதமானது சராசரி, நடுவில் அமைந்தது, சாதாரணமானது, என்று பொருள் விளக்கம் தரும். நமது வாழ்க்கையின் அமைப்பு முறையில் எல்லாவற்றிற்கும் பொதுவாக எல்லா ஜனங்களும் இருப்பது போல் தோற்றம் அளிப்பது:

- 10% வெற்றி பெற்றவர்களாகவும்
- 10% தோல்வி அடைந்தவர்களாகவும்
- 80% சராசரி அல்லது இரண்டும் அல்லாத ஓர் நிலையில் அமைந்திருப்பது போலக் காணப்படும்.

இந்த மூன்றில் உன்னுடைய ஜீவியத்திற்காக தேவனுடைய சித்தம் எதுவாயிருக்கும் என்று நம்புகிறாய்? அப்படி என்றால் இந்த மூன்று நிலைகளில் எதற்கு நீ தகுதியாய் பொருந்தி இருப்பாய் என்று விரும்புகிறாய்?

### ‘‘கெடுதல் விளைவிக்கிற ஜெயம்’’ என்ற அப்படிப்பட்டதொன்று இருக்கிறதா?

யோசுவாவுக்கு தேவன் நல்ல ஜெயத்தைக் கொடுப்பதாக வாக்குத் தத்தம் செய்தபடியால் நாம் கெடுதல் விளைவிக்கிற ஜெயம் என்ற ஒன்று இருக்கிறதா என்று வியப்பை அடையலாம். இதற்கான பிரதியுத்தரம் ‘‘ஆம்’’ என்பது தான் என்று நான் நம்புகிறேன். இந்த கெடுதல் விளைவிக்கிற ஜெயத்திற்கான சாட்சியங்கள் நம்மைச் சுற்றியே, உடைந்து போன கனவுகள், உடைந்த ஜீவியங்கள், உடைந்து போன திருமணங்கள் ஆகியவை என்ற வடிவங்களில் சூழ்ந்திருக்கின்றன என்று நான் நம்புகிறேன். ஒரு மனிதன் ஜெயம் பெறக் கூடிய மூன்று வழிகள் அடிப்படையாக அமைந்திருக்கின்றனவென்றும் ஆனாலும் அவைகளினால் பெறும் வெற்றி கெடுதல் (அ) தீங்கு விளைவிக்கும் ஜெயமாகும்.

**a: மற்றவர்களைப் புண்படுத்தியோ அல்லது அவர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கி அடையும் வெற்றியானது.**

வெற்றிக்கு நடத்திச் செல்லும் மார்க்கமாவது மிகவும் உயர்ந்த போட்டிகள் நிறைந்த ஒன்றாகும். வெற்றி பெறும் ஒவ்வொருவருக்கும் எதிராகத் தோல்வியைச் சந்திப்போர் பலரும் இருப்பார்கள். ஏனென்றால் வெற்றி பெறுகின்றவர்களின் ஜெயத்திற்கு விளையும் துணைப் பொருளாக இவ்வாறு சிலர் அடிக்கடி இருப்பார்கள். வெற்றியை அடைவதற்காக தொடர்ந்து போகும் ஓட்டத்தில் உறவுத் தொடர்புகள் பலியாக செலுத்தப்படுவதால் முறிவு ஏற்பட்ட திருமணங்களுக்கும் குடும்பங்களுக்கும் நான் போய் சந்தித்து இருக்கிறேன்.

**b: இந்த நடைமுறையினால் ஒருவருடைய நல்லொழுக்கம் பாதிக்கப்படும் பொழுது.**

சில சமயங்களில் வெற்றியைப் பெற்று அடையும்படியான நடைமுறையில் ஒருவருடைய நன்னடத்தைக் கோட்பாடுகளும் நன்னெறிகளும் அதிதீவிரமாக சவாலாக ஆக்கப்பட்டும் அடிக்கடி விட்டுக் கொடுக்கப்பட்டும் விடுகிறது. இந்த வணிக உலகத்தில் லஞ்ச ஊழல் மிகவும் நிறைந்து சில சமயங்களில் நல்லொழுக்க நியதிகள் அதில் விலையோகும்படியாக சம்பந்தப்பட்ட போதிலும் நேர்மையும் உத்தமமும் கடைபிடிக்கப்பட்டு வைத்தே ஆக வேண்டும். இந்த நேர்மைக்கு விலையாக ஜெயத்தை அடைந்திருந்தால் அது நிச்சயமாகவே அதிக விலை கொடுக்கப்படாமல் திட்டவட்டமாகவே தேவனைப் பொறுத்த மட்டில் ஜெயம் என்று சொல்ல முடியாது.

**c: இவற்றால் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய பலா பலன்களை உடையதல்ல.**

இந்த பிரபஞ்சத்தின் ஜெயமானது ஒருவருடைய இந்த ஜீவிய காலம் மட்டுமே நீடிக்கக் கூடியது. அநேகரான மிகுந்த ஜெயம் பெற்றவர்கள் என்று இந்த உலகத்தில் கருதப்படும் மக்கள் நித்தியத்தில் வறியவர்களாகவும், தோல்வி அடைந்தவர்களாகவும் இருப்பார்கள். மெய்யான வெற்றியானது (நித்தியத்திற்காகவும்) மறுமைக்காகவும் இந்த குறுகிய கால இம்மைக்காகவும் முதலீடு செய்கிறவர்களாவார்கள். வேதாகமம் கூறுகிறதாவது ''மனுஷனுக்கு செம்மையாகத் தோன்றுகிற வழிகள் உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்'' (நீதி 14:12)

## வெற்றி என்பது தேவனிடமிருந்து பிறக்கும் ஒரு வார்த்தையில் ஆரம்பமானது.

யோசுவாவுடைய வெற்றியானது யோசுவா 1:1-9ல் எழுதியிருக்கிறபடி தேவன் அவனுடன் பேசிய வார்த்தைகளிலிருந்து ஆரம்பமானது. தேவன் அவனுடைய ஜீவியத்திற்குள் தாம் வைத்திருக்கும் நோக்கத்தை எடுத்துக் கூறி சவாலாக அதை விடுத்தார். மேலும் ஜெயம் என்பது தேவனுடைய நோக்கத்தைக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றுவதில் அடங்கி இருந்த போதிலும் அந்த நபருக்கு அவர்களுடைய ஜீவியத்தில் தமது குறிப்பிடப்பட்ட நோக்கத்தை வெளிப்படுத்தும் பொழுதுதான் அதை நிறைவேற்றுவதற்கான அறைகூவலை நாடிச் செல்லுதல் ஆரம்பமாகிறது.

<u>நாம் முதலாவதாக யோசுவாவை சந்திக்கும் பொழுது அவன் இருந்த ஸ்தானமாவது:</u>

- வாலிபனாக இருந்தான்.
- அனுபவமற்றவனாகவும் முதிர்ச்சியற்றவனுமாக
- தலைமைத்துவ பொறுப்புகளுக்கு போதுமான ஆயத்தமில்லாதவனாக இருந்தான்.
- மோசேயுடைய நிழலினால் மேலாக மறைக்கப்பட்டான்.

<u>ஆனாலும் அவன் இவ்வாறும் இருந்தான்:</u>

— மோசேக்கு உண்மையான ஊழியக்காரன் எபிரேய பதம் ''Ebed'' அடிமை என்று அர்த்தம் தரும்.
— மோசேயைச் சுறுசுறுப்பாக பின் தொடர்ந்தவன். எண் 1:16,26,28
— மோசேயைக் கூர்ந்து கவனித்தவன்.
— மோசேக்குக் கீழ்படிந்திருந்தவன்.

வழக்கமாக தேவன் தம்மைத் ''தேடுகிறவர்களோடு'' பேசுகிறார்.
''கேளுங்கள். அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.'' (மத் 7:7) தன்னை ஊக்கமாகத் தேடுகிறவர்களும் அவரிடமிருந்து செவி கொடுத்துக் கேட்பவர்களுடைய ஜீவியத்தில் மட்டுமே

தேவன் வெகு அரிதாக இடைபடுவார். அவர் சொல்லுகிறதாவது ''நீங்கள் அவரைத் தேடினால் கண்டுபிடிப்பீர்கள் எப்படியென்றால் உங்கள் முழு மனதோடும் தேடினால்''

உன்னுடைய ஜீவியத்தில் மிகவும் முக்கியமான காரியமாவது: உன்னுடைய ஜீவியத்திற்கான தேவனுடைய சித்தமாகும் நீ உன் ஜீவியத்தில் எதை சாதனையாக நிறைவேற்ற வேண்டுமென்று தேவன் வாஞ்சிக்கிறார் என்பதை நீ தெரிந்திருக்காவிட்டால் நீ ஊக்கமாக ஜெபத்தில் ஜெபித்துத் தேடி தேவன் என்ன நோக்கத்தைக் கொண்டிருக்கிறார் என்பதை அறியும் வரைக்கும் ஜெபத்தில் தரித்திருப்பாயாக.

**சில சமயங்களில் தேவன் தெளிவான குரலில் பேசுகிறார்.**
வேதாகமத்தின் நாட்களில் தேவன் ஜனங்களுடன் கேட்கக் கூடிய தெளிவான குரலில் சமயா சமயங்களில் பேசுவார். இன்றைய நாட்களில் இந்த விதமான அரிதான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே நேரிடுகிறது. ஏனென்றால் ஒரு வேளை வேதாகமத்து நாட்களைச் சேர்ந்த மக்களை விட மிகப் பெரிய அளவில் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை நாம் தற்காலத்தில் பெற்றிருப்பதன் காரணமாக இருக்கலாம். நிச்சயமாகவே தேவன் இன்னும் தெளிவான சத்தத்தில் பேசக் கூடும். மேலும் சமயா சந்தர்ப்பங்களில் அவ்வாறு பேசவே செய்கிறார். ஆனால் வழக்கமாக ஏதோ விபரீதமான எல்லை கடந்த நாடக பாணியான சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு இடைபடுகிறார்.

**சில சமயங்களில் அவர் தரிசனத்தின் மூலமாகவோ அல்லது சொப்பனத்தின் மூலமாகவோ பேசலாம்.**
தரிசனங்களும் சொப்பனங்களும் வேதாகமத்தின் நாட்கள் மட்டிலும் என்று வரையறுக்கப்பட வில்லை. இந்த வழியின் மூலமாக தேவன் இன்னமும் இதன் மூலமாகவும் பேசுகிறார். ஒரு தரிசனத்திற்கும் சொப்பனத்திற்கும் உள்ள வித்தியாசமாவது ஒருவர் விழித்திருக்கும் நிலையில் தரிசனம் நேரிடுகிறது. சொப்பனமாவது ஒருவர் நித்திரை செய்யும் பொழுது நேரிடுகிறது. இந்த மார்க்க சாதனங்களின் மூலமாக தேவன் காட்சிகளாகவும் படங்களாகவும் உண்மையைத் தெரியப்படுத்துகிறார். இந்த விதமான சிறந்த வர்ணங்களால் ஆன நாடக பாணியாக தேவன் அடையாளங்களாலும் உருவகக் கதைகளாலும் அடிக்கடி பேசவே செய்கிறார். என்னவென்றாலும் அடிக்கடி ஒரு தீர்க்கதரிசன சாதனத்திலும் வியாக்கியான விளக்கம் செய்யப்படும்படிக்கு அவசியமாகிறது.

இந்த விதமான தரிசனமாவது அமானுஷ்யமான நடைமுறையில் தரப்படுகிறது. இது வழக்கமான நீண்ட கால ஜெபத்தை ஏறெடுத்து தரித்திருந்து தேவனுக்காகக் காத்திருக்கும் பொழுது நேரிடுகிறது. அது ஒருவருடைய மனதில் சம்பவிக்கலாம், வெளியரங்கமாகவும் நேரிடலாம். ஆனால் அந்த சமயா சமயத்தில் அதைப் பெற்றுக் கொள்பவர் கூர்ந்து கவனித்து அது அவருக்கு முன்பாக நாடகமாடப்பட்டது போலப் பார்க்கிறார். இதற்கான வியாக்கியான விளக்கம் ஜெபத்துடன் நிறைந்து கர்த்தருக்காக காத்திருக்கும் ஓர் கால கட்டத்தில் அது வெளிப்படுத்தப்படும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அதை வியாக்கியானப்படுத்த வெளியிலிருந்து உதவியை நாடவோ அல்லது அதை நிச்சயப்படுத்தவோ அவசியமாகும். தேவன் தீர்க்கதரிசன வழியாகப் பேசும்பொழுது மற்ற தீர்க்கதரிசிகளின் மூலமாக அதை உறுதிப்படுத்திக் கொள்வது விவேகமாகும். (I கொரி 14:26-33)

**தேவன் பரிசுத்த வேதாகமத்தின் மூலமாகவே வழக்கமாகப் பேசுகிறார்.**
இந்த சிறந்த பல முறைகளில் இன்று தேவன் பேசுவது அவருடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலமாகத் தான் பேசுகிறார். பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியில் ஏதோ ஒன்றைத் தூண்டி விட்டோ அல்லது ஏதோ ஒன்றை தம் வார்த்தையின் மூலமாக உறுதிப்படுத்தவோ செய்கிறார். இது நேரிடும் பொழுது நாம் வேதத்தை வாசித்துக் கொண்டிருக்கலாம் அல்லது பரிசுத்த ஆவியானவர் எளிதாக அந்த வேதாகமப் பகுதியை நமது ஞாபகத்துக்குக் கொண்டு வருவதாகவோக் கூட இருக்கலாம். இந்த இரண்டில் ஒன்றான வழிகளில் வேத பகுதி தீடீரென உயிர் பெற்று வந்து பிறந்தவுடன் தேவன் நமது புரிந்து கொள்வதற்கு அதை உட்படுத்தி வைக்கிறார். இந்த விதமான வழிகளில் தேவன் வியக்கத் தகுந்த விவரங்களை நமக்குத் தெரிவிக்கலாம். நாம் அறிந்திருக்கிறோம் என்று உணருகிற வேத பகுதிகள் தீடீரென அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ற பலத்தைப் பெற்ற சம்பந்தமுடையதாயும், முக்கியத்துவத்தும் உடையதாய் பரிணமிக்கிறது. தமது வார்த்தையின் வழியாக தேவன் பேசும் பொழுது, தேவன் தாமே நமக்குக் கொடுக்கும் செய்தியில் தெய்வீகக் கோட்பாடுகளை வலியுறுத்துவார்.

**வெளிப்பாடு என்பது நமது சிந்தனையின் வழியாக மிகவும் மென்மையாக பிரவாகித்து ஓடுகிறது.**
தேவன் தாமே தம்முடைய வார்த்தையின் மூலமாக நம்மிடம் பேசும்பொழுது வழக்கமாக நாடக பாணியில் இடைபடாமல் புற ஜாதியின் நீராவி வடிகட்டுதல் போல் பேசுகிறார். அவருடைய வெளிப்பாடு மென்மையாக நமக்குள் ஆவியில் இறங்குகிறது. காலைப் பனித்துளிகள் பூமியின் மேல் நனைக்க வருவது போல வந்து ஆவிக்குள் விழுகிறது. அது சாதாரணமாக மென்மையான அமைதியுள்ள வற்புறுத்துதலால் நமது உள் மனதின் சிந்தனைகளின் வழியாக வடிகட்டப்பட்டு நமது விளங்கிக் கொள்ளும் தன்மையில் இறங்கி வருகிறது. இந்த வகையான வெளிப்பாடு வழக்கமாக மேலும் தூரமாக கொண்டு போகப்பட்ட ஆவிக்குரிய உரையாடலின் வாயிலாக நமது ஆவி தேவனுடைய ஆவியோடு இரண்டறகலந்து ஐக்கியப்படும் பொழுது பெற்றுக் கொள்ளப்படுகிறது. தாழ்மையானதும் மேலும் பாதிப்பு இல்லாத வகையில் நாம் தேவனுடைய ஆவியுடன் வினா எழுப்ப கூடும். அவர் பிரதியுத்தரம் தந்து தேவனுடைய சித்தத்தை நாம் புரிந்து கொள்ளும் அறிவை அபரிமிதமாக தந்து ஆசீர்வதிப்பார்.

இந்த விதமான வெளிப்பாடானது சற்று சாதாரணமானதாகத் தோன்றினாலும், தேவன் தாம் நேரடியாக நம்மோடு பேசுகிறாரோ அல்லது சாதாரணமான ஏதோ ஒரு கற்பனையின் பறந்து போகும் ஓட்டமோ என்ற கேள்வியை எழுப்பலாம். ஆனால் இந்த பாணியில் தேவன் வெளிப்படுத்தும் காரியங்கள் மெய்யாகவே தேவன் நம்மோடு பேசுகிறார் என்பதற்கு ஆதாரமான நிரூபணமாகிறது. தீடீரென்று சில விஷயங்களோ அல்லது அவற்றைப் பற்றி அறிந்திருக்கும் அறிவையோ நாம் அறியக்கூடாத எந்த வகையான அறிவையும் அறிவதற்குரிய வழியுமின்றி, நம் வசம் நமது பொருளுடைமையில் இருப்பதாக உணருவோம். அந்த விதமான ஞானமானது அடிக்கடி அறிவையுடைய வார்த்தையாகவோ அல்லது ஞானமுள்ள சொற்களாகவோ தேவன் தமது பரிசுத்த ஆவியினால் பகிர்ந்தளித்தது எனப்படும்.

**இதோடு ஒன்று கூடி துணையாக வரும் சந்தர்ப்பங்கள் இந்த வழி நடத்துதலை உறுதிப்படுத்தும்.**
தேவன் ஒரு தடவை நம்முடன் பேசி முடித்த பின்னர் நாம் இந்த வெளிப்பாட்டை முன்னோக்கி கீழ்படிதலுடன் செல்லுமாறு துவங்க வேண்டும். சந்தர்ப்பங்கள் ஒன்று சேர்ந்து நேரிடுவது நாம் சரியான காரியத்தைச் செய்கிறோம் என்பதை உறுதிப்படுத்தும். நாம் விசுவாசத்துடன் மெய்யாகவே முன்னோக்கி புறப்பட்டு போகும் வரைக்கும் இது சம்பவிக்காது. நாம் கீழ்படிதலுடன் முன்னோக்கி போகும்படி ஆரம்பிக்கும்பொழுது நேரிடியான சந்தர்ப்பங்களால் அவருடைய சித்தத்தின்படி ஒருமைப்பட்டு அனுமதித்து விருத்தி செய்யப்படும் பொழுது தேவன் தம்முடைய வழி நடத்துதலை உறுதிப்படுத்துகிறார். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட வேலைக்கு தேவையான ஆதார உதவி வாய்ப்புகளைத் தந்து அனுப்புவார். எந்த விதமான மனிதனுடைய ஆதரவுக்கு உறுதிப்பாடுமின்றி நாம் அதை ஆரம்பிக்கலாம். ஆனால் தேவன் மனதுக்கு அப்பாற்பட்ட வழியில் தேவையான உணவுப் பொருட்களையும் கொடுக்க வழி செய்வார். இது நாம் தேவனுடைய நோக்கத்துடன் ஒருமித்து போகிறோம் என்பதற்கு ஒரு தெளிவான அடையாளமாகும்.

## தேவன் யோசுவாவுடன் பேசினார். அது ஒரு:

**தனிப்பட்ட நேரடி வார்த்தை.**
தேவன் யோசுவா உடன் நேருக்கு நேராகப் பேசினார். மூன்றாவது ஆள் மூலமாகப் பேசவில்லை. உங்களுக்காக ஒரு வார்த்தையைப் பெற்றிருக்கிறோம் என்று உணரும் மக்கள் பல சமயங்களில் இடைபடுவார்கள். ஆனால் இந்த மாதிரியான வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேவன் உன்னோடு பேச விரும்பினால் அவர் மூன்றாவது ஆள் இல்லாமலே பேசலாம். தேவன் உன் உள்ளத்தில் ஏற்கனவே என்ன பேசினாரோ அதை உறுதிப்படுத்துவதற்காக மற்றொரு நபர் மூலமாக ஒரு தீர்க்கதரிசன வார்த்தையை வழக்கமாக வரச் செய்யலாம்.

சிற்சில சந்தர்ப்பங்களில் தேவன் யாரோ ஒருவரை நம்மோடு ஒரு வார்த்தை சொல்லும்படியாக அனுப்புகிறார். இதுவும் நாம் ஏதோ காரணங்களினால் தேவன் தாமே பேசுவதை நமக்காகக் கேட்க முடியாதபடி இருக்கும் பொழுதும் அல்லது தேவனுடைய நோக்கத்தை எதிர்க்கும் பொழுதும் இவ்வாறு நேரிடுகிறது. (உம் தாவீது இராஜாவும், நாத்தான் தீர்க்கதரிசியும்)

**அது ஒரு குறிப்பிட்ட விசேஷமான நடைமுறையானதோர் வார்த்தை.**

யோசுவாவுடன் தேவன் பேசிய வார்த்தை உடனடியாக அர்த்தமுள்ளதாகியது. அது ஒரு தெளிவற்ற அல்லது மறை பொருளான ஆனால் அது வரம்புக்கு மீறிய தெளிவானதும் நன்றாக குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதாயும் இருந்தது. அந்த தேவனுடைய வார்த்தையானது யோசுவாவுக்கு, அவனை தேவன் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அதை எப்படி நிறைவேற்ற வேண்டுமென்றும் அதனால் உண்டாகும் பலாபலன்கள் என்னவென்றும் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டு விவரித்தது. யோசுவாவுக்கு தேவனுக்குக் கீழ்படியும்படியாக உடனே செய்ய முடிந்தது. அதன் பயனாக அவன் பிரமாண்டமான வெற்றிகளைக் காண முடிந்தது. அதுவும் எரிகோவின் மேலும் ஆயி பட்டணத்தின் மீதும் ஏன் கானான் தேசம் முழுவதையும் வெல்லும்படியான வெற்றிகளைத் தந்தது.

சில மக்கள் தேவனிடமிருந்து மிகவும் கடினமான சிக்கல் நிறைந்த கட்டளைகளைப் பெறுவதாகத் தோன்றும் அவற்றை அவர்கள் எப்பொழுதுமே ஒருக்காலும் செயல்படுத்த முடியாது. அவர்கள் பெற்றுக் கொள்ளும் ‘‘வார்த்தையானது’’ அத்துமீறிய ஆவிக்குரியதாய் மிகவும் சிக்கலுற்று அவைகளால் எதுவும் புற நோக்குள்ளதாகவோ செயல்படுத்த முடியாததாகவோ ஆகி விடுகிறது.

**அது ஒரு நிபந்தனையுடன் கூடிய வார்த்தை.**

தேவன் தரும் அதிகமான வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்குட்பட்டவை. அவைகள் செயல்படுத்தப்பட வேண்டுமென்றாலும், நிறைவேற்றப்படும்படி கொண்டு வர வேண்டுமென்றாலும் சில நிபந்தனைகள் சந்திக்கப்பட்டே ஆக வேண்டும். ஆனால் மிகவும் அறியப்பட்ட நிபந்தனை விசுவாசமாகும். ‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.’’ (எபி 11:6)

ஆனாலும் அதற்கான மற்ற நிபந்தனைகளும் இருந்தன. அவைகளில் பெரும்பான்மையானவை தேவனுடைய வார்த்தையின் மீது யோசுவாவுக்கு இருந்த மனப்பான்மை சம்பந்தப்பட்டதாகும்.

a: அவள் அதைப் பற்றி இரவும் பகலும் தியானம் செய்ய வேண்டும். - மனக்கண் முன் நிறுத்திப் பார்த்துத் தியானம்
b: அது அவனுடைய வாயை விட்டு பிரியாதிருக்க வேண்டும் - வார்த்தைகளால் பேசுதல்
c: அதில் எழுதப்பட்டவைகள் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் - நடைமுறையில் செயல்படுத்துதல்
d: அதை நிறைவேற்றுவதற்கு அவன் பலம் மிகுந்தவனாகவும், தைரியமாகவும் இருந்து கீழ்படிய வேண்டும்.
e: அவன் அச்சமுள்ளவனாகவோ அல்லது அதைரியம் உடையவனாகவோ இருக்கக் கூடாது.

இதற்கு மேற்கொண்டு மற்றொரு நிபந்தனையாவது அவன் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் அவனுக்குக் கொடுப்பதாகும். (யோசுவா 1:3) யோசுவா, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை முன்னோக்கிப் போக வேண்டும். அவன் மெய்யாகவே விசுவாசத்தால் முன்னேறிச் செல்ல வேண்டும். அதுவும் தேவன் அவனுக்குக் கொடுத்த எல்லைப் பகுதிக்குள் குறிப்பிடப்பட்டதோர் இடத்தில் அவன் கால் வைக்கும் வரைக்கும் அவன் போயாக வேண்டும். அவன் விசுவாசத்தினால் அதன் எல்லைகள் உட்பட்ட பகுதிக்கு உரிமை கொண்டாடினான். ஏனென்றால் அவன் தேவனுடைய நாமத்தினால் அப்பகுதியின் மேல் அடியெடுத்து வைத்தான்.

தேவனுடைய நிபந்தனைகள் யோசுவாவிடமிருந்தும் இஸ்ரவேல் புத்திரரிடமிருந்தும் கீழ்படிதலுள்ள நடவடிக்கையையே வேண்டி நின்றது. அநேக சமயங்களில் இஸ்ரவேலரைவிட அடிக்கடி இயற்கையான அநுகூலங்களைப் பெற்ற அவர்களுடைய சத்துருக்கள் இஸ்ரவேலரைவிட எண்ணிக்கையில் அதிகமாயிருந்தனர். ஆனாலும் தேவன் அவர்களுடைய விசுவாசத்தையும், கீழ்படிதலையும் கனப்படுத்தி அவர்களுக்கு ஜெயத்தையும் வெற்றி பிரதேசங்களையும் கொடுத்தார். சிறிது சிறிதாகவும், பகுதி பகுதியாகவும் அவர்கள் தேசத்திற்குள் பிரவேசித்து அவர்களது சுதந்தரத்தை உடைமையாக்கிக் கொண்டார்கள்.

## உன்னுடைய வனாந்தரமான இடத்திலிருந்து வெளியில் வரும்படியாக

நமது வனாந்தர அனுபவங்களின் வாயிலாகவே தேவன் தம்முடைய கிரியைகளை அடிக்கடி ஆரம்பிக்கிறார். வறட்சியும் தரிசான நேரங்களாகிய நமது வாழ்க்கையின் அத்தகைய பகுதிகளிலே எந்த விதமான காரியமுமே சரியாக போகக் கூடாதவாறு தோன்றும் பொழுது அல்லது நமது இலட்சிய கனவுகள் எரிக்கும் பாலைவன மணலில் புதைக்கப்பட்டதாக நாம் கருதும் சமயங்களில் தேவன் மேற்கூறியவாறு செயல்படுகிறார்.

இது நிச்சயமாகவே மோசே சம்பந்தபட்ட வரைக்கும் மெய்யாகவே இருந்தது. பார்வோனின் அரண்மனையிலே நாற்பதாண்டுகள் அந்தஸ்த்தும் செல்வமும் தரக்கூடிய எல்லா விதமான சுகபோகங்களை இன்பமாக அனுபவித்த பின்னர் அவன் தன்னை பாலைவனத்தின் பின் பகுதியில் தான் இருப்பதாகத் தெரிந்து கொண்டான். பாலைவனத்தில் அவன் நாளுக்கு நாள் நடந்து போகும் பொழுது இந்த விதமான அவனுடைய (பாலைவன) ஜீவியமானது மறுபடியும் எதற்காவது பயன் கொடுக்கக் கூடுமா என்று அவனால் மேற்கொண்டு அந்த நேரத்திற்கு அப்பால் பட்டு பயன்படுமென்று கற்பனை செய்து கூட அவனால் பார்க்க முடியவில்லை. ஆனால் தேவன் தாமே அவனுடன் வனாந்தரத்தில் இருந்தார். அவனுடைய ஆவியில் ஒரு அக்கினியைக் கொளுத்தி அது என்றுமே அணைத்து விடக்கூடாதபடிக்கு செய்து வைத்தார். தேவனுடைய தலைவர்களில் பலர் இந்த வனாந்தரத்தில் இருந்து இளைத்தெழும்பி அவர்களுடைய ஜீவியத்திற்கான தேவனுடைய அனாதி திட்டத்தை நோக்கமாக கண்டுபிடித்தனர்.

தேவன் நம்முடைய வனாந்தரத்தில் நம்மைச் சந்திக்கிறார் என்று நம்புகிறேன். அது எதற்காகவென்றால் அவருடைய நோக்கமானது நமது ஜீவியத்தில் விருத்தி அடையும்பொழுது நாம் பாலைவனத்தின் பின்புறப் பகுதிகளில் - வறட்சியானதும் தரிசுமான பகுதியில் இருக்கும் பொழுதுதான், தேவன் அவருடைய அதிசயமான நோக்கத்தை நமக்குள் கிரியை செய்யும்படியாக ஆரம்பிக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவு கூறும்படியாகவே அவ்வாறு இடைபடுகிறார். அவருடைய நோக்கம் மேற்கிரியை செய்து பெறப்படும் எந்த விதமான மகிமையும் அவருக்கு மட்டுமே உரியது என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது.

தேவன் தமது குறிப்பிட்ட திட்டத்தை நமது ஜீவியங்களுக்காக கிரியை செய்து தொடங்கும் வரைக்கும் ஜீவியமானது அடிக்கடி வனாந்தரத்தைப் போல் வறட்சியாக ஒன்றும் பலன் தராத தரிசாகவே ஆனது போலத் தோன்றும். ஆனாலும் அவர் தாமே இந்த பாலைவனத்தைப் பூத்துக் குலுங்கச் செய்து பாலைவனத்தை நீரூற்றுகள் உள்ளதாக செய்து விட அவரால் கூடும்.

**நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன்.** (யோசுவா 1:5)
இஸ்ரவேல் புத்திரருடைய தலைமைத்துவத்திற்கு மோசே ஒரு வேறுபட்ட அபேட்சகன் ஆவான். அவன் தனக்கென்று ஒரு தாழ்வான சுய தோற்றத்தையுடையவனாய் இருந்தான். அவன் ஒரு எளிய திறமை குறைந்த பேச்சாளன். அவனுக்குள் தன்னம்பிக்கை குறைவு இருந்தது. இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நடத்திச் செல்ல அவன் சரியான தலைவனாக இருக்க முடியாதது. ஏன் என்பதற்காக சாக்கு போக்குகள் நிரம்பவும் பெற்றிருந்தான்.

தேவன் தாமே இந்த விதமான தடைகள் அனைத்தையும் மேற்கொண்டு மோசேயை செயலூக்கமுடையதோர் தலைவனாகச் செய்வார் என்ற விஷயமானது நிச்சயமாகவே யோசுவாவை பெரிதும் ஊக்குவித்திருக்கக் கூடும். ஒவ்வொரு துடிதுடிப்பான நோக்குடைய தலைவனுக்கும் இது மிகுந்த பிரம்மாண்டமான ஊக்கத்தைக் கொடுத்து எழுப்ப வேண்டியதாக இருக்கும். தேவன் மோசேயில் இருந்து ஒரு மகத்தான தலைவனை உண்டாக்க கூடுமானால் அவ்வாறு அவர் யோசுவாவையும் உண்டாக்க முடியும். அவர் அதை யோசுவாவுக்கு அப்படிச் செய்யக் கூடுமானால் உன்னையும் அவரால் அப்படி ஆக்க முடியும்!

**இயேசு என்றென்றும் ஒன்று போல் இருக்கிறார்.**
புதிய ஏற்பாட்டில் மிகவும் தூண்டி உற்சாகப்படுத்தக்கூடிய வேத பகுதி இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி 13:8)ல் காணக்கிடக்கும் வேதாகமப் பகுதியாகும்.

இந்த வேதாகமப் பகுதியானது தேவன் மக்களைக் குணப்படுத்த வல்லவர் என்பதை அவர்களை உற்சாகப்படுத்தி விசுவாசிக்கும்படி செய்வதற்காக அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்டும் வேதாகமத்துக் காலத்தில் மக்களைச் சொஸ்தப்படுத்திய அதே இயேசுவானவர் இன்றும் அது போலவே இருக்கிறார் என்றும் மேலும் அவர் நோயாளிகளை இன்னும் குணப்படுத்துவார் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காகவும் கையாளப்படுகிறது. இந்த விதமானதோர் அழுத்தத்தை மறுக்கவோ அல்லது குறைத்துச் சொல்லவோ விரும்பாமல் இந்த வேதாகமத்து பகுதிக்கு சொஸ்தமாக்குதல் என்ற கூற்றை சம்பந்தப்படுத்திச் சொல்லக்கூடிய விஷயம் ஒன்றும் இல்லை என்பதற்கு உங்கள் கவனத்தை ஈர்க்கும்படி விரும்புகிறேன். மெய்யாகவே இதற்கு முன்னதான வசனம் தங்களுடைய தலைமைத்துவத்தில் மகா உன்னதமாக தங்கள் திறமைகளிலும் நன்னடத்தையிலும் விளங்கியவர்களைக் குறித்து சொல்கிறது. பவுல் விசுவாசிகளுக்கு புத்திமதியாக உபதேசித்தபொழுது தங்களுடைய தலைவர்களுடைய நேர்த்தியான முன் மாதிரியை பின்பற்றும்படி போதித்து, ''இயேசுக் கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்'' என்று கூடச் சேர்த்துக் கூறும் காலத்தில் கிறிஸ்துவான அவர் அவ்வாறு தமது தலைவர்களைக் கண்ணியமானவர்களாக ஆக்கியவர் அவர்களுக்கும் அது மாதிரி போன்றே செய்யக் கூடியவர் என்று அதிலிருந்து உட்கருத்தாக எடுத்துச் சொல்கிறார்.

## ''நீ'' உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய்

தேவன் தாமே நம்மை வாழச் செய்கிறவர் என்றும் நம்மை வெற்றி பெறச் செய்கிறவர் எனப்பட்டாலும், இந்த நடைமுறையில் ஒரு மனுஷீகமான அம்சமும் இதில் உள்ளது. இந்த நடைமுறையானது கிரியை செய்ய வேண்டுமானால் நமது பங்கிற்கும் நாம் செய்யக் கூடிய சில குறிப்பிட்ட காரியங்கள் இதில் உண்டு. யோசுவா அந்த நாட்டை சொந்தமாக்கிக் கொள்ள ஆயத்தமாகும்படி கட்டளை பெற்றான்.

**பொருள் விளக்கப் பட்டியல் தயாரிக்க.**

ஒவ்வொரு தனி நபருக்குள்ளும் அவர்களால் பயன்படுத்தப்படாத மறைந்துள்ள ஆதார உதவிச் சக்திகள் உண்டு. ஈவுகளும் தாலந்துகளும் ஒருக்காலும் முற்றிலுமாக உபயோகிக்கப்படாதவை நிரம்பவே இருக்கின்றன. அந்த முழுமையான சாத்தியமாகக் கூடிய ஆதாரங்கள் நீ ஒரு தலைவனாக உண்டாக்கப்படுவதற்காக உனக்கு தேவனால் முன் குறிப்பிட்டவைகளே உன்னில் தானே இப்பொழுது நிரம்பி இருக்கின்றன. அவைகளில் சில உனக்குள்ளே உள்ளாக மறைந்து திறமையின் உருவகங்களாக பரிசுத்த ஆவியானவரால் தூண்டி விடப்பட்டு விருத்தி செய்யப்படுவதற்காகவே உள்ளடங்கியுள்ளன. மற்ற அம்சங்களாகப் பட்டவை மனப்பான்மையின் வடிவங்களாக உன்னில் தானே தேவன் அன்போடு வளர்க்க விரும்புகிறார். இதன் மகத்தான மறைந்திருக்கும் ஆதார உதவிச் சக்தியே ''உனக்குள் கிறிஸ்து'' என்பதாக ''கிறிஸ்துவுடைய ஆவியின் பிரசன்னம்'' உன்னில் தான் நிறைந்து அது உன்னுடைய முழு ஆள் தன்மையிலும் ஆக்கிரமித்துக் கொண்டு உன்னுடைய ஜீவியத்தையும் ஒழுக்கத்தையுமே வடிவமைக்கிறது. ''நீ கிறிஸ்துவுக்குள் பூரணமாகிறாய்'' என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பாயாக. (கொலோ 2:10)

கிறிஸ்துவினுடைய ஆவியே உனக்குள்ளும் வாசமாயிருக்கிறது. நீ மனந்திரும்புதலினாலும், விசுவாசத்தினாலும் உன்னுடைய ஜீவியத்தை அவருக்கு ஒப்படைப்புச் செய்த காலத்திலிருந்தே அவர் உனக்குள்ளே வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். ஆனாலும் உன்னிலுள்ள அநேக மானவைகளை உனக்குள் இருக்கும் கிறிஸ்துவின் ஆவிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியவைகள் இன்னும் உண்டு. உன்னிலுள்ள தேவனுடைய நோக்கத்தின் காரணியாவது உன்னுடைய தலைமைத்துவ ஆதார சக்திகளை அவர் விருத்தி செய்யும்பொழுது அவர் உன்னை தம்முடைய குமாரனுடைய சாயலில் மாற்றுவதாகும். **''கிறிஸ்துவுடைய சாயலில் வளர்ந்து வராத தலைமைத்துவம் உடையவன் தேவனுடைய அழைப்பின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றாதவனாக இருக்கிறான்.''**

நாம் இப்பொழுது தீர்க்கதரிசன காலத்தில் வசிக்கிறோம். அப்பொழுது ''தேவனுடைய புத்திரர்'' என்பவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள். இது வரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பிரசவ வேதனைப் படுகிறது. இந்த காலம் மிகவும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இது சம்பவிக்கும் முன்னர் தேவன் விசுவாசிகளால் ஆன சரீரத்தை உண்டாக்கி அதை வெளிப்படுத்தப் போகிறார். அவர்கள் உண்மையான கிறிஸ்துவின் சாயலை பிரதிபலிப்பார்கள். இந்த விசுவாசிகளின் சேனையானது

கிறிஸ்துவின் முன்னால் அவருடைய பிரசன்னமாகவே பூமியில் வாசம் பண்ணுவார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இந்நாட்களில் கிறிஸ்துவின் சாயலான தலைவர்கள் கெடுபிடியாகத் தேவைப்படுகிறார்கள். இந்தத் தலைவர்களின் மாதிரியிலே தங்கள் ஜீவியத்தை விசுவாசிகள் அமைத்துக் கொள்ள வேண்டும். வல்லமையானதோர் பிரசன்னமும், பலம் மிகுந்ததோர் நிர்வாகத் திறனும் அல்லது குணச்சித்திரமான ஆள் தன்மையை பெற்றிருப்பதை விட இது அதிகமான முக்கியத்துவம் உடையது.

**தேவனால் வழங்கப்பட்ட திறன்பாடுகளைப் பற்றியதோர் நேரிடையான மதிப்பீடு செய்க.** ''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவிலே பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தத்தினாலே அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது.'' (II பேதுரு 1:3) அதிகமான பேர்களான விசுவாசிகளுக்கு கிறிஸ்துவுக்குள் அவர்கள் யாரென்றும் அவர்கள் என்னவாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றி சகல வகையிலும் முழுமையானதும் நேரடியானதும் ஆன வேதாகமத்து அடிப்படையிலான மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாகிறது. திருச்சபையானது பாவத்தின் மேல் தான் கொடுக்கும் அதீதமான அழுத்தத்தினாலும் நம்முடைய வீழ்ச்சியுற்ற மனித சுபாவத்தினாலும் போதுமான தோல்விகளை உண்டாக்கி இருக்கிறது. அது மனுஷர்களையும் ஸ்தீரிகளையும் தங்களை திரும்பத் திரும்பச் செய்யும்படி நியமித்துக் கொள்ளும் சுய சிட்சை முறைகளால் அவர்களை இழிவாக நடக்கும்படி கண்டித்தும் தங்களுடைய நலமான கிரியைகளால் தங்களுடைய சொந்த இரட்சிப்புக்காக செயல்படவும் முயற்சிக்கிறது. ஆகவே தேவன் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்பதற்கு புதிய சிருஷ்டியைக் குறித்து அவர் என்ன சொல்ல இருக்கிறார் என்பதை ஆகர்ஷித்துக் கொள்ளவும் அவருடைய இரட்சிப்பின் வார்த்தைகளின் ஒளியில் நடக்கவும் இதுவே (தகுந்த) காலமாகும்.

குறிப்பாக சக்தித் திறன்பாடுகள் தலைவர்கள் தங்களுக்குள் மறைந்து கிடக்கும் தலைமைத்துவ திறன்பாடுகளைக் குறித்ததான ஒரு நேர்மையான மதிப்பீடு செய்து கொள்வது அவசியமாகிறது. தலைமைத்துவ பங்கிற்கு தேவன் அவர்களை அழைத்திருப்பாரானால் அதுவும் அவர்களுக்கு அதற்குரிய திறன்பாடுகள் உள்ளதென்று அவர் அவர்களைப் பற்றி அறிந்திருக்கும் காரணத்தினால்தான். அதுவும் யோசுவாவைப் போல் ''அந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாகச் செய்து வருவார்களானால் தேவன் அவர்களை வாழச் செய்து வழியை வாய்க்கப் பண்ணுவார். அவர்களுக்கு நல்லதோர் ஜெயத்தையும் தந்தருளுவார்.''

<u>நமது குறைபாடுகளின் மேலும் நம்முடைய இயலாமையின் பேரிலும் முக்கியத்துவத்தைக் கொடுக்காமல் நாம் பின்வருபனவற்றைக் குறித்து வாழ்க்கைக்குரிய விழிப்புணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும்</u>.

- தேவனுடைய மட்டற்ற கிருபை
- அவரது இரக்கமும் நல்லவர் என்பதுவும்
- நாம் மகிமையாக மன்னிக்கப்பட்டோம் என்பதற்காக
- நாம் அவருடன் ஒப்புரவாகி, நீதியாக்கப்பட்டதால்
- நாம் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனால் நீதியாகும் படி ஆக்கப்பட்டதால்
- நாம் தேவனுடைய பிள்ளைகளும் தேவனுடைய புத்திரர்களாய் இருப்பதால்
- நாம் கிறிஸ்துவுக்குள் நலமானதைச் செய்யும்படியாக அவருடைய செயலாக ஆக்கப்பட்டிருக்கிறோம்.
- அவருடைய இராஜ்ஜியத்திற்கு என்று அர்ப்பணிக்கப்பட்டு அதிகாரம் பெற்றவர்களானபடியால்
- நாம் இருளிலிருந்து மகிமையான ஒளிக்கு மாறுதல் பெற்றிருக்கிறோம்.
- குழப்பத்திலிருந்து தெய்வீக வெளிப்பாட்டிற்கு
- பயத்திலிருந்து விசுவாசத்திற்குள்ளாக
- நம்முடைய இயலாமையிலிருந்து அவருடைய படைப்புத்திறன் பாட்டிற்குள்ளாக.

**உனக்குள்ளதை (வைத்திருப்பதை) பயன்படுத்த**

தேவன் மோசேயைப் பார்த்து உன் கையிலிருக்கிறது என்ன? என்று கேட்டார். (யாத் 4:2) மோசே அதற்கு ''அது ஒரு கோல்'' என்றான். ஆம் சாதாரணமான எளிமையான கோல்தான். ஆம் ஒரு சாதாரணமான மரத்தின் கிளையுங்கூட தேவன் அதை மகத்தானதோர் வழியில் உபயோகிப்பதற்காக அது எந்த ஒரு பொருளாகவும் இருப்பதாகவும் தோன்றவில்லை. மோசே அந்த எளிய கோலைக் கொண்டும், உடன் விசுவாசத்தையும் கீழ்படிதலையும் சேர்த்துக் கொண்டு தேவன் எப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக் கூடும் என்று விரைவிலே கண்டுபிடிக்கக் கூடியவனாக இருந்தான்.

உன் கையில் எதோ அதிகமாக இருப்பதாகத் தோன்றாமல் இருக்கலாம். நீ ஒரு சராசரியான சாதாரண மனிதனாக குணச்சித்திரமோ அல்லது தாலந்துகளோ இல்லாதவன்தான். ஆனால் நீ வைத்திருப்பதெல்லாவற்றையும் தேவனிடம் முழுவதுமாக ஒப்படைப்புச் செய்தால் மாத்திரமே, அதற்கான கூடுமான காரியங்கள் எதுவாக இருக்கக்கூடும் என்று அவர் அறிவார்.

- உனக்கென்று தேவனால் கொடுக்கப்பட்ட திறன்பாடுகள் உனக்குள் இன்னும் மறைந்திருக்கலாம்.
- நீ அவைகளைக் கண்டறிந்து அவைகளை ஏற்று ஒப்புக் கொள்ள வேண்டும்.
- அவைகளைப் பயிற்றுவித்து விருத்தி செய்யும்படி ஆரம்பிப்பாயாக.
- உனக்காக தேவன் திறந்து வைத்திருக்கும் வாசல்கள் ஒவ்வொன்றின் வழியாகப் போய் பார்.

தேவன் உன்னை நீ எப்படி இருக்கிறாயோ அவ்வாறு இருக்கும்படியாகவே உண்டாக்கினார் என்பதைப் புரிந்து கொள். நீ உன்னைத் தான் அறிந்திருப்பதை விட மிகவும் நன்றாகவே உன்னை அவர் அறிந்திருக்கிறார். உன்னுடைய குறைபாடுகளைப் பற்றியும் உன்னுடைய பலத்தைப் பற்றியும் முழுவதுமாக அறிந்திருக்கிறார். ஆனாலும் உன்னைத் தன் ஜனங்களுக்கு மத்தியில் ஒரு தலைவனாக அர்ப்பணித்திருக்கிறார். நீ ஒரு வகையில் சிறப்புடையவன் அங்கு உன்னைப் போல வேறு யாரும் கிடையாது. நீ தேவனுக்காக மற்ற யாராலும் செய்ய முடியாத ஏதோ ஒன்றை உன்னால் செய்ய முடியும். அவருடைய ஞானத்திலும் உன்னைத் தெரிந்தெடுத்தும் அர்ப்பணித்தும் உன்னுடைய தலைமைத்துவ திறமையில் கனிகளைக் கொடுப்பாய் என்பதற்காக என்பதை ஒப்புக் கொள்வாயாக. அவர் உன்னை ஒப்படைப்பு செய்திருக்கிறார். ''நற்கிரியைகளைச் செய்வதற்கும், அவைகளில் நீ நடக்கும்படியாக முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.'' (எபேசி 2:10)

உன்னுடைய தலைமைத்துவ பங்கில் நீ நல்ல ஜெயத்தைப் பெற வேண்டும் என்று அவர் முன் குறித்திருக்கிறார். நீ அந்த ஆவியானவருடைய வழி நடத்துதலை தாழ்மையுடன் பின்பற்றிச் செல்வாயானால் நீ செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் தேவன் உன்னுடைய தலைமைத்துவத்தை செயலூக்கமும் வெற்றியுமுள்ளதாகச் செய்வார். நீ தாழ்மையுடன் அவர் பேரில் சார்ந்திருப்பாயானால் எது பயனுடையது என்றும் நித்தியமான மதிப்புடையது என்பதைக் கண்டறிந்து கொண்டால் மாத்திரமே உன் மூலமாக அவர் கிரியை நடப்பிக்கும் பொழுது அவை வெற்றியாக தேவனால் சாதனையாக்கப்படும். அவருடைய செயல்பாடுகளுக்கு உன்னை முழுவதுமாக ஆயத்தமாக வைத்து வசதியாக்கு. அவருடைய நோக்கங்களுக்காக உன் ஜீவியத்தை மறுபடியும் புதிதாக அர்ப்பணஞ் செய்து கொள். அவ்வாறு கிருபையினால் அவர் உன்னை முன் குறித்தபடி ஒவ்வொன்றாக இருக்கும்படியாக தீர்மானஞ் செய்து கொண்டு நீ எதை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்தாரோ அதை செய்யும்படியாக செயல்படுவாயாக. அப்பொழுது அவர் உன் வழியை வாய்க்கச் செய்து பின்னர் உனக்கு அவர் நல்லதோர் ஜெயத்தையும் தந்து அருளிச் செய்வார்!

# அதிகாரம் 2 - செயலூக்கமான கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான கோட்பாடுகள்

செயலூக்கமான தலைமைத்துவமானது சாதனை செயலூக்கமுடைமை ஜீவியத்தின் எல்லாப் பகுதிகளுக்குமே ஜெயத்தைக் கொடுக்கும் திறவுகோல் ஆகும். இது மற்ற எந்த ஒரு ஆளுகைப் பிரதேசத்திலும் உண்மையாக இருப்பது போலவே திருச்சபையிலும் மெய்யாகும்.

இந்தப் படிப்பானது கிறிஸ்தவத் தலைவர்கள் மேற்கொண்டு தங்களுடைய இயல்பானதும், ஆவிக்குரியதுமான பெற்றுக் கொண்ட திறமைகளை விருத்தி செய்யும்படியான நோக்கத்துடன் செயல்படுவதாகும். இது தலைமைத்துவத்தின் ஆவிக்குரிய அம்சங்களோடு கூறுவதுடன் தலைமைத்துவத்து திறன்பாடுகளை விருத்தி செய்வதைப் பற்றியும் கூறுகிறது. ஓர் அகில உலக அறுவடைக்காகவும் அவருடைய இராஜ்ஜியம் உலகத்தில் எழும்பி தோன்றும்படியாகவும் தேவன் சமீப காலத்தில் தலைவர்களை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அவர்களை ஒழுக்கத்திலும் கீழ்படிதலிலும், அதிகாரத்துவத்திலும் ஆயத்தம் செய்யும்படி தேடிக் கொண்டிருக்கிறார்.

### நல்லதோர் தலைமைத்துவத்திற்காக ஓர் உச்சக் கட்டமான தேவை

A. சிறந்த தலைமைத்துவம் இல்லாவிட்டால் ஒழுங்கின்மை மிகுதியாகும்.
   நியா. 17:6; 18:1-9. ‘‘அவனவன் தன்தன் பார்வைக்கு சரி போனபடி செய்து வந்தான்.’’
B. தலைமைத்துவம் இல்லாவிட்டால் குழப்பமானது ஆளுகை செய்யும்.
C. ஜனங்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல இருப்பார்கள்.

### தலைமைத்துவத்தைப் பற்றிய சில சொற்பொருள் விளக்கங்கள்:

**A. தலைமைத்துவத்தை வழி நடத்திச் செல்லும்படி ஏற்றுக் கொண்டு வழியைக் காட்டும்படியாக சற்று முந்திப் போய் கொண்டிருப்பவன்.**

ஒரு தலைவன் திறமையுள்ளவனாகவும், ஜனங்களுக்கு முன்னாகப் போய் வழி நடத்திச் செல்ல வேண்டும். அதற்கான முன் முயற்சியை தைரியத்துடனும், விசுவாசத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறது. ‘‘உன் கழுத்தை வெளியே நீட்டுவதற்கு விருப்ப தயாராக இருந்தாலன்றி நீ உன் தலையை கூட்டத்திற்கு மேலாக உயர்த்த முடியாது’’ யாரோ ஒருவர் சொன்னதாகத் தெரியப்படும்.

**B. வழிகாட்டி நடத்திச் சென்று ஒரு குழுவை கட்டளை கொடுத்து நடத்திச் செல்பவர்.**
ஒரு தலைவர் தன்னைத் தனியனாக இருக்கும் படியாக ஒரு போதும் இருக்கக் கூடாது. அவர் ஒரு குழுவின் பகுதியாக ஒரு தலைவனாக யாருக்காகவோ பொறுப்புள்ளவர் ஆவார். அவர் தன்னை தெளிவாக குழுவோடு அடையாளப் படுத்திக் கொண்டு ஒரு அங்கமான நபராக மட்டுமல்ல அவர்களை நடத்துவதற்கும் செயல்பாடுகளுக்கும் பொறுப்பானவராகவும் இருப்பார்.

**C. பிறரது மனப்பான்மைகள் செயல்பாடுகள் மீது தாக்கத்தை உண்டாக்கும் ஓர் மனிதன்.**
மற்றவர்களுக்குள், அவர்களுடைய மனப்பான்மைகளிலும், செயல்பாடுகளிலும் நேரடியானதும் ஒரே சீரானதுமான தாக்கத்தை ஓர் அளவு மட்டம் வரை உண்டாக்கக் கூடிய திறமையை ஒரு தலைவன் ஆனவன் பெற்றவனாய் இருக்கிறான். அவர்களை சரியான திசையை நோக்கி நடத்திக் கொண்டு போகும்படியாகச் செய்கிறான். போகும் சாலை மார்க்கமானது கரடு முரடாகவும் வழியில் தடைகள் இருந்தாலும் அவர்களை வழிப்புடன் தூண்டி எழுப்பி போய் கொண்டிருக்கும்படி செய்கிறான்.

**D. மற்றவர்கள் பின்பற்றி தொடர்ந்து செல்ல விரும்பும் யாரோ ஒருவராக.**
ஜனங்கள் தன்னை விரும்பி பின்பற்றிச் செல்லும் படியான குணச் சித்திரம் உடையவனாக ஒரு தலைவன் இருக்கிறான். இதுதான் தலைமைத்துவ பண்புகளுக்கான இறுதியான அடையாளமாகும். ஏனென்றால் ஜனங்கள் அவனைப் பின்பற்றிப் போகிறார்கள்! ஒரு நபருக்கு தலைமைத்துவத்தைப் பற்றிய எல்லா விதமான புத்தக அறிவைத் தெரிந்து வைத்திருக்கலாம். இந்த தலைப்பின் மீது அவர்கள் சொற்பொழிவு கூட ஆற்றலாம். மேலும் அதைப் பற்றிய புத்தகங்கள் கூட எழுதலாம்.

ஆனால் உண்மையான தலைமைத்துவத்திற்கான பரிட்சையானது ''பின்பற்றுகிறவர்களின் தன்மையைப்'' பொறுத்ததாகும். ஜனங்கள் அவரைப் பின்பற்றிச் செல்கிறார்களா? மேலும் எந்த விதமான காரியங்களை அவர்கள் சாதனை ஆக்குகிறார்கள்?

**E. மற்றவர்கள் இலக்கை அடையும்படி அவர்களை நோக்கங் கொள்ளச் செய்யும் திறமை உடைய ஒருவராக.**

செயலூக்கமான தலைமைத்துவத்தின் ஒரு முக்கியமான பகுதியாவது மற்றவர்களை நோக்கமுடையவர்களாக ஆக்குவதாகும். அதாவது அவர்களை சரியான திசையை நோக்கி முன்னேறிப் போகச் செய்வதாகும். ஆனால் நோக்கங் கொள்ளச் செய்வதென்பது முடிவான இலக்கை மெய்யாகவே அடைந்து விட்டால் மட்டுமே அது செயலூக்கமுடையதாகும். சில தலைவர்கள் மக்களை முன்னேறிச் செல்லும்படியாகச் செய்து கொண்டு இருப்பார்கள். அந்த மக்களை எல்லா விதமான நிகழ்ச்சி நிரல்களிலும் செயல்பாடுகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறு செய்வார்கள். ஆனால் அவர்கள் ஒருக்காலும் முடிவான இலக்கை சாதனையாக அடைவதில்லை. அவர்கள் இயக்கத்தில் மட்டுமே போய் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மெய்யான தலைமைத்துவம் காரியங்களை செய்து முடித்து விடுகிறது. அது தன்னுடைய முடிவான இலக்கை அடைந்து தீர்க்கிறது.

## செயலூக்கமான தலைமைத்துவத்திற்கான சில அம்சங்கள்

**A: தீர்க்கதரிசனமுள்ளவராக, வருங்காலத்தை எதிர்பார்க்கும் திறன் உள்ளவராக.**

நல்ல திறமையானதோர் தலைமைத்துவத்திற்குள் இருக்கும் ஒரு முக்கியமான அம்சமாவது வருங்காலத்தைப் பகுத்தறிந்து அதை எதிர்பார்க்கும் திறமைதான். அந்த ஸ்தாபனத்தின் (நிர்வாகஸ்தர்) நிர்வாகி சந்தையின் வருங்காலப் போக்குகளை முன்னறிந்து கொண்டு வருங்கால ஆண்டுகளில் மக்களை எதை விரும்புவார்கள் என்று எதிர்பார்த்தல் வேண்டும். ஆனால் ஒருவருக்கும் தேவைப்படாத பொருட்களை உற்பத்தி செய்வாரானாலும் ஐந்து ஆண்டு காலப் போக்கில் அதை விரும்பினாலும் அவர் இலக்கைத் தவற விட்டவராகி விடுவார்.

கிறிஸ்தவ தலைமைத்துவ சொல்முறையில், நாம் சில சமயங்களில் இந்த வகையான மனிதர்களை ''தரிசனமுள்ளவர்கள்'' என்று அழைக்கிறோம். எப்பொழுதுமே ஆவிக்குரிய தரிசனங்களை பெற்றுக் கொள்ளும் யாரோ ஒருவர் அல்ல. ஆனால் வருங்காலம் தம்முன் வைக்கும் சந்தர்ப்பங்களையும் சவால்களையும் எதிர் நோக்கி அதை மிகவும் சரியாக நிர்ணயிக்கும் திறமை பெற்ற ஒருவராகவே இருப்பார். எனக்கு சில தலைவர்களைத் தெரியும் அவர்கள் ஜனங்கள் வாசம் பண்ணாத பகுதிகளில் நிலத்தை வாங்கிப் போட்டார்கள். பின்னர் அந்த பிரதேசத்தில் ஒரு ஜனத்தொகை பெருக்கத்தின் காரணமாக அவர்களது ஆலயத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டி எழுப்பப்பட்டன. அந்தத் தலைவர்கள் வருங்காலப் போக்கைக் கணித்து அதற்கு முன்னதாகவே நோக்கிப் போயிருந்தார்கள்.

**B. போர் திறன் யூகமுள்ளவர் வருங்காலத்திற்காகத் திட்டம் போடக் கூடியவர்**

ஓர் போர் திறன்வாதியானவர் அவசியமாக இன்றியமையாதவராக நடைமுறை திறனுள்ளவராவார். வருங்காலத்திற்கான சவாலை மட்டும் கண்டு அடையாளங் காண்கிறவராக அல்ல. அந்த சவாலை சந்திக்கும்படி அவசியமான திட்டங்களையும் வகுக்கக் கூடியவராக இருப்பார். இந்த போர்த் திறன் யூகி ஒரு சொப்பனக்காரரும் அல்லர். அவர் உண்மையான செயலாளர். அவர் தனக்கு முன்பாக உள்ள சந்தர்ப்பங்களைக் கண்டு அறிந்து கொண்டு அதற்காக போதுமான, தெளிவான, செயல்படக் கூடிய, சாதனை பெறக்கூடிய திட்டங்களை வகுத்து வருங்காலத்து அறுவடை செய்வதற்காக முயற்சிப்பார்.

ஒரு கட்டடத்தைக் கட்டி எழுப்புவதற்கு வரைபடம் அவசியமானதாக இருப்பது போல திருச்சபை நாட்டப்படுவதற்கும் அந்தத் திருச்சபை வளர்ச்சி அடைவதற்கும் திட்டம் ஒன்று இன்றியமையாததாகும். முதலாவதாக முற்றிலுமாகத் திட்டமிட்டு வரைபடமாக அந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொண்டு கட்டடத்தை எழுப்ப முயலும் ஒரு கட்டடம் கட்டுபவர் எவ்வளவு முட்டாளாக இருப்பார்? அவர் உட்கார்ந்து ஒவ்வொரு சிறிய அம்சத்தையும் உற்று கூர்ந்து நோக்கி கட்டடத் திட்டமிடுவார். அதற்கான கட்டட கலைஞர் அதை படமாக்கி வரைகிறார். மதிப்பீட்டாளர் அதன் செலவை மதிப்பீடு செய்வார். நில அளவையாளர் அந்த குறிப்பிட்ட மனையின் இயல்புகளை ஆராய்ச்சி

செய்வார். பொறியாளர் அந்த திட்டத்தின் கட்டட ஸ்திரத்தை நிர்ணயம் செய்வார். அனைவரும் சேர்ந்து அவர்களது கண்டுபிடிப்புகளைச் சுருக்கிக் கொண்டு அதை எழுத்தில் மதிப்பீடு செய்கிறார்கள். மற்ற வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் இந்த செயல்திட்டமாவது முற்றிலுமாக திட்டவட்டமாக அமைப்பிடப்பட்டு அதன் செயல்பாடுகள் ஆரம்பிக்கு முன்னர் மதிப்பீடு செய்யப்படுகிறது. எந்த விவேகமுள்ள மனிதனும் சரியான வரைப்படம் இல்லாமல் கட்டடம் எழுப்புவதைக் கனவிலும் கூட நினைக்கமாட்டான். அவர்கள் அதை நிறைவேற்றும்படியாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த ஸ்தல அதிகாரம் பெற்றவர்கள் சரியான திட்ட வரைபடமும், யுக்தி முறையும் இன்றி கட்டடத்தைக் கட்டும்படி அனுமதிக்க மாட்டார்கள். அதே வண்ணமாக கிறிஸ்தவத் தலைவருங்கூட இந்த செயல்பாடுகளில் முதன் முதலாக திட்டவட்டமான ஆராய்ச்சியும், தகுந்த திட்டமுமில்லாமல் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது.

**C: செய்தி தொடர்பாளர்கள்.**

வியூக யுக்திகளும், திட்டங்களும் தெளிவாக சொல் பொருள் விளக்கம் செய்யப்பட வேண்டிய காரணமாவது அவைகளை எழுத்தாக அச்சில் ஏற்றிப் பதிப்பித்து விடுவதால் அவைகளை வல்லமையாக செய்தி தொடர்பாக்கிக் கொள்ளக் கூடும். அந்த பதிப்புகளில் ஒவ்வொரு விவரங்களும் ஒன்றாக உள் இணைக்கப்பட்டு அந்த வியூக யுக்தியானது முற்றிலும், முழுவதுமாக தெளிவாகவும் அதனுள் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் செய்தித் தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு செயலூக்கமான தலைவர் தெளிவாகவும், திறம்பட செயலாற்றும் செய்தி தொடர்பாளராகவும் இருக்க வேண்டும். அவர் தன்னுடைய தரிசனத்தையும் யுக்தி வியூகத்தையும் விளங்கிக் கொள்ளத் தக்க வகையில் பகிர்ந்து கொண்டு அவருடைய உடன் ஊழிய சகோதரர்களும், ஊழியர்களும் ஆகியவர்களின் நம்பிக்கை, ஆதரவு ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த காரியத்தைப் பொறுத்த மட்டில் செய்தித் தொடர்பு திறன்களை விருத்தி செய்து கொள்வது மிகவும் முக்கியமாகும். இந்த வெற்றியுள்ள தலைவர் தன்னுடைய செய்தி தொடர்பு கொள்ளும் திறமையை விருத்தி செய்தும், புதுப்பித்தும் மேலும் எழுத்திலும், பேச்சிலும் மற்றும் சரியான தகுதி பெற்ற வழிகளிலும் தொடர்பு கொள்ளுமாறு முயற்சிக்க வேண்டும்.

**D: செயல் நோக்கத்தைத் தூண்டி ஊக்கப்படுத்துபவர்**

செயல் நோக்கத் தூண்டுதலாவது மக்களுடைய ஆர்வத்தைத் தூண்டி எழுப்பி அவர்களை ஓர் நேரிடையான பணியில் செயல்பட்டு அந்த குறிப்பிட்ட இலக்கைக் குறிப்பாக நோக்கிப் போகச் செய்வதாகும். அதில் அவர்களுக்கு நோக்கத்தைத் தெரிவித்தும், தூண்டி எழுப்பியும் ஒரு குறிப்பிட்ட திசையில் முன் நோக்கிப் போய் கொண்டிருக்கச் செய்வதும் இதில் உள்ளடங்கும். மேலும் இதில் அவர்களை செயல் நோக்கமடையச் செய்வதும் அதில் ஒரே சீராக முன் நோக்கிச் செல்லும்படியாக்குவதும் இதில் அடங்கும். இந்த நோக்கத் தூண்டுதல் செய்பவர் ஊழியர்களை ஊக்கத் தூண்டுதல் கொடுத்தும் அவர்கள் முன்னோக்கி செல்லும் இயக்கத்தில் சமய சந்தர்ப்பவாதத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

**E: செயல்பாட்டு முன் மாதிரிகளும் திருஷ்டாந்தங்களும்.**

ஒரு தலைவர் சிறந்த உதாரணமாகவும், முன் மாதிரியாகவும் இருந்து தன்னைப் பின்பற்றி வருகிறவர்களுக்கு அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக அவர் என்ன உற்சாகம் கொடுக்கிறார் என்பதற்கும் சான்றாக செயல்பட வேண்டும். தான் தெள்ளத் தெளிவாக முழுவதுமாக தன்னை ஒப்படைப்பு செய்யாத ஒரு பணியில் அவர்களையும் ஒப்படைப்புச் செய்யும்படி அவர்களை நயந்து கேட்டுக் கொள்ள முடியாது. உதாரணத்தின் வழியாக அதிகமான ஊக்கத் தூண்டுதல் உபதேசம் செய்வதை விட ஒப்புடைப்பு வருவிக்கப்படுகிறது. மேலும் அவருடைய தலைமைத்துவமானது கண் கூடாக ''நான் சொல்கிறதைச் செய் நான் செய்கிறவைகளை அல்ல'' என்ற போக்கையுடையதாய் இருக்குமானால் ஒரு சில மக்களே நோக்க ஊக்கம் பெற்றவர்களாக இருக்க நேரிடும்.

**F: ஜனங்கள் தாங்கள் பின்பற்றிச் செல்லுமாறு நம்பத் தகுந்த ஒருவர் என்பதை உணர்ந்து கொள்ளும்படி**

ஒரு நல்ல தலைவர் தன்னைப் பின்பற்றி வருபவர்களின் நன்மதிப்பைப் பெறுகிறார். அவர்கள் அவர் செய்கிற மாதிரியே ஏதாவது ஒரு வழியில் செய்யும்படியாக விரும்புகிறார்கள் அவர்களுக்காக ஒரு

மாதிரித் திட்டத்தை உண்டு பண்ணிக் கொடுத்து அதன் மீது தங்கள் ஜீவியத்தை வடிவமைத்துக் கொள்ள விரும்பும்படியாகச் செய்கிறார். இதை சாதனைப்படுத்துவதற்காக இந்தத் தலைவர் நம்பத் தகுந்தவராயும் பின்பற்றுகிறவர்களின் கண்பார்வையில் கனம் பெற்ற மதிப்புள்ளவராயும் இருக்க வேண்டியது அவசியம். இந்த விதமான நம்பத் தகுந்த பண்பானது ஒரு கால கட்டப் போக்கில் சம்பாதித்துக் கொள்ளப்பட வேண்டும். (அதுவும் முக்கியமாக அடிக்கடி அவர்களுக்கு ஊழியஞ் செய்வதன் மூலமாகப் பெறப்பட வேண்டும்)

**G. அதிகாரஞ் செலுத்தும் திறமையுள்ளவராக.**
தலைவர்கள் ஆனவர்கள் அதிகாரத்துவத்தை எவ்வாறு செலுத்த வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதைக் கற்றுக் கொள்வதில் வழக்கமான போக்கு என்னவென்றால் அவர்களே அதிகாரத்துக்குப் பணிந்தவர்களாக இருப்பதன் மூலமாகவே கற்றுக் கொள்ளப்படும். இதன் காரணமாகத் தான் புதிதாக வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் அதிகமான பயிற்சியானது இராணுவத்தில் அவர்களுக்கு கட்டாயமாக்கப்படுகிறது. அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான காரியமாவது அதிகாரத்துவத்திற்கு கீழ் அடங்கிக் கீழ்படிந்து அதனால் கொடுக்கப்படும் ஆணைகளுக்கு மறு கேள்வியின்றி கீழ்படிந்திருப்பதுதான். இது அவர்களுக்குள் திரும்பத் திரும்ப பயிற்றுவிக்கப்படுவது இரண்டு காரணங்களுக்காகவே. முதலாவதாக போர்களத்து படையெடுப்புகளில் தங்களுடைய தலைவர்களால் கொடுக்கப்படும் ஆணைகளுக்கு எந்த விதமான வினாவுமின்றி கீழ்படியும்படி அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். இரண்டாவதாக அதிகாரத்துவத்தின் படிப்படியான கட்ட அமைப்பை அவர்கள் புரிந்து கொள்ளும்படி உதவி செய்வதுடன் மேலும் அவர்களுக்கென்று அதிகாரத்துவத்தில் ஒரு பாகம் அளிக்கப்படும் பொழுது அதைச் சரியாக செயல்படுத்திக் கொள்ள வேண்டும் எனபதன் நோக்கத்தினால் தான்.

இந்த உதாரணமானது கிறிஸ்துவால் பாராட்டப்பட்ட நூற்றுக்கதிபதியின் கதையில் மிக அழகாகச் சித்தரித்துக் கூறப்பட்டுள்ளது. (மத் 8:5-13) அந்த உத்தியோகஸ்தன் அதிகாரத்துவத்தின் குறிக்கோள்களை நன்கு புரிந்தவனாக இருந்தான். ஏனென்றால் அவன் அதிகாரத்துக்குட்பட்டவனாக அதிகாரம் உள்ள ஒரு பதவியை வகித்திருந்தான். இயேசு அவனை சகல இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று பாராட்டினார்.

**H. தான் வாஞ்சித்த இலக்கை அடையும்படி ஒருங்கிணைப்பவர்**
ஒன்றை ஒழுங்குபடுத்தி ஸ்தாபித்து ஒழுங்காக முறையில் அமைத்து அதைத் தனக்காகவும் பிறருக்காகவும் இலக்கை உச்ச அளவில் திறமையாக நிறைவு பெறச் செய்வதில் தான் அது செயலாக்கப் படுகிறது. ஒன்றை ஸ்தாபித்தல் என்பதற்கு திறமையான மேற்பார்வை இன்றியமையாததாகிறது. ஒரு செயலூக்கமான தலைவர் திறமையுடன் தனது திறன்பாடுகளை மேற்பார்வை செய்து ஜனங்களையும் யுக்தி வியூகங்களையும் பொருட்களான உதவி வாய்ப்புகளையும் ஆகியவைகளை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதைச் செய்து சாதனை படைக்க வேண்டுமானால் அவர் ஒரு திறன் வாய்ந்த ஒழுங்குபடுத்துபவராக இருக்க வேண்டும்.

**I. இசைக்குழு நடத்துபவர்கள் ஒருமைப்பாட்டைத் தூண்டி எழும்படி செய்பவர்களாக**
இசைக் குழு நடத்துபவர் தலைமைத்துவம் பற்றிய சகலத்திற்கும் மிக உன்னதமான எடுத்துக்காட்டு ஆவார். இசைக் கருவி இயக்குபவன் ஒவ்வொருவனும் அவன் அல்லது அவளுடைய இசைக் கருவியான சரியானபடி மீட்டப்பட்டுள்ளதா என்று முதன் முதலாக நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். பின்னர் இசைக் குழு நடத்துபவர் ஒவ்வொரு இசைக் கருவியும் தான் வழங்கும் பொது ஸ்வரத்தோடு ஒருமித்துப் போகிறதா என்பதை உறுதி செய்வார். அதன் பிறகு அவர் ஒரு குறிப்பிட்ட ஸ்தாணை ஒவ்வொரு இசைக் கருவியை வாசிப்பவனுக்குக் கொடுத்து, அந்த ஒவ்வொரு இசைப்பவனும் அந்த குறிப்பிட்ட பகுதியை விசுவாசத்துடன் வாசித்து எல்லா இசைக் கருவிகளுக்குள்ளும் ஒருமைப்பாட்டைக் கொண்டு வரும்படி அவர்களை அவசியமாக்குகிறார். இசைக் குழு நடத்துபவர் இசையின் நிலையையும் அந்த பகுதியானது இசைக்கப்படும் முறையையும் நிர்ணயிக்கிறார். இந்த நடத்துதலை ஒவ்வொருவரும் பின்பற்றுகிறார்கள். அதனால் ஒரு உன்னதமான மகிமைக்குரிய ஒருங்கிணைந்த இசை இயக்கம் அதன் விளைவாக அமைந்து விடுகிறது.

**J. தன்னுடைய இராணுவத்தை அணிவகுத்து முன் செல்லும்படி செய்து அதற்கு கட்டளை பிறப்பிப்பவர்.**

இந்த முடிவான ஒப்புமையானது மிகவும் திட்டவட்டமானதாக எல்லாவற்றிற்கும் மேலானதாக அந்த சேனை தளபதிக்கு உதவியாக எப்பொழுதும் தான் தலைமை தளபதிக்கு அவருங்கூட பொறுப்பானவர் என்பதை எப்பொழுதும் நினைப்பூட்டுவதாக இருக்கலாம். அந்த தளபதி எல்லாவற்றிற்கும் கர்த்தாவானவர் அந்த தலைமை சேனாதிபதி உயர்ந்த மட்ட பதவியில் இருந்து மிகுந்த அதிகாரத்துவத்துடன் இருந்தாலும் அவரும்கூட ''அதிகாரத்துவத்திற்கு கீழ் உட்பட்டவர் மனிதன்;'' ஆவார். ஒரு தலைமை தளபதி தன்னுடைய அதிகாரத்தைப் பற்றிய விழிப்புணர்வுடன் அதிகாரத்தைச் செலுத்தினாலும் தனது அதிகாரத்துவம் இறுதியாக தனக்கு மேலுள்ள ஒரு தலைமை தளபதியிடமிருந்து தோன்றி வருகிறது என்பதில் உணர்ந்தவராக இருக்கிறார்.

மேலும் இந்தத் தலைமை தளபதி அவருங்கூட தன்னுடன் பணியாற்றும் உடன் அலுவலர்கள் மீது தான் சார்ந்திருக்க வேண்டும் என்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறார். அதாவது பதிவான அல்லாத அலுவலர்களுடன் மற்ற அந்தஸ்தில் இருப்பவர்களுடன் இருக்க வேண்டும் என்பதை இராணுவத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களும் முக்கியம் வாய்ந்தவர்களே. மிகவும் கீழ் நிலை தனி ஊழியர்களுங்கூட முக்கியத்துவம் பெற்றவர்களே. இராணுவத்தின் செயலூக்கமும் வெற்றியும் சரியான இடத்தில் சரியான நேரத்தில் ஒவ்வொரு ஊழியரும் தங்கள் பங்கில் செயலாற்றும் நடைமுறையைச் சார்ந்திருக்கிறது. தலைமைத் தளபதி தான் இதை முடிவாகச் சாதிப்பதற்குப் பொறுப்பானவர். அவர் தன் இராணுவ மக்களின் ஒழுங்குணர்வு பற்றி உறுதி செய்து கொள்ள வேண்டும். அவர்களது நோக்கத்தின் ஒருமைப்பாட்டை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். அவர் போர்களத்து போர் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக செயல்படவும் மேலும் போர் வீரர் அனைவரும் ஒரே மனிதன் செயல்படுவது போல இந்த இலக்கை அடைவதற்காக கிரியைகளை நடப்பிக்க வேண்டும்.

# அதிகாரம் 3 - சரியான செயல் தூண்டுதல் உணர்ச்சியைப் பெற்றிருத்தல்

‘‘நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே’’ ஏரேமியா 45:5. அநேகமான வழிகளில் கிறிஸ்தவ தலைமைத்துவமானது சகல விதமான மத சார்பற்ற தலைமைத்துவத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. அதிலும் சரியான செயல் தூண்டுதல் உணர்ச்சியைப் பெற்றிருத்தல் ஆனது மிக அவசியமாயிருப்பதை விட மிகவும் அதிகமாக குற்றங் காணபதாகிறது.

## மெய்யான கிறிஸ்தவ தலைவர்கள் பெரிய காரியங்களுக்காக வாஞ்சித்து தேடுகிறார்கள்.

**A: ஆண்டவருடைய மகிமைக்காக.**

வேதாகமத்தில் உள்ள தலைவர்களில் மிகச் சிறந்தவனாகிய மோசேயுடைய வரம்பு கடந்த வாஞ்சையானது தேவனுடைய மகிமையைக் காண்பதற்காகவே ஆகும். (யாத் 33:18) ‘‘மகிமை’’ என்பது தத்ருபமில்லாத ஏறத்தாழ மேகம் போன்றதான அல்லது தெளிவற்ற ஒரு பொருளாகவோ ஆனால் அனுதின சொல் வழக்கில் அதன் சொற்பொருள் விளக்கமாவது ‘‘உயர்த்தி, உயர்த்தி போற்றுதல்’’, ‘‘புகழ்’’, ‘‘துதி’’, ‘‘கீர்த்தி’’, ‘‘கனம்’’ (அ) ‘‘மேன்மை’’ எனப்படும். கிறிஸ்தவத் தலைவர்களாக நமது சிறந்த வாஞ்சையாவது தேவனைச் சிறந்ததோர் வகையில் உயர்த்தி போற்றுதல் ஆகும். நாம், செய்யும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் தேவனுடைய நாமமானது உயர்த்தி போற்றப்பட்டு ஒவ்வொரு காரியத்திலும் மகிமைப்பட வேண்டும் என்பது நமது விருப்பமாக இருக்க வேண்டும். மேலும் நாம் அவருடைய நாமத்தை பரியாசம் பண்ணப்பட வொட்டாமலும் அதற்கு கனவீனத்தைக் கொண்டு வராமலும் இருக்க ஒரு போதும் காரணமாகக் கூடாது என்பதில் உறுதியான தீர்மானத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் மிகவும் வைராக்கியத்துடன் தேவனுடைய நாமத்தை, கீர்த்தியை, கனத்தை பாதுகாக்க வேண்டும்.

**B: தங்களுடைய பொறுப்பில் கொடுக்கப்பட்டவர்களுடைய நலனில்**

கிறிஸ்தவ தலைவர்கள் அடிக்கடி மேய்ப்பர்களாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறார்கள். அதுவும் அவர்களை இயேசுவோடு அவரை நல்ல மேய்ப்பனாகவும் காட்டுகிறார்கள். தேவனுடைய ஜனங்களை ஆட்டுக்குட்டிகளாகவோ அல்லது ஆடுகளாகவோ படமாகப் பிடித்துக் காட்டப்பட்டும் வருகிறோம். மேலும் அந்த ஆட்டுக் குட்டிகளுக்காகவும் ஆடுகளுக்காகவும் நம்மை துணை மேய்ப்பர்களாக அவர்கள் பால் உண்மையான அன்பையும் கரிசனையையும் நாம் கொண்டிருக்க வேண்டும். இந்த நல்ல மேய்ப்பனானவர் ‘‘ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறார்’’ என்று சொல்லப்படுகிறது. (யோவான் 10:15,17) அவர் நமக்குச் சிறந்த உன்னதமான எடுத்துக்காட்டாக அவரையே நாம் தீர்மானமாக பின்பற்றிக் காட்ட வேண்டும். நாம் ஒரு ஊழியக்காரனுடைய இருதயத்தை ஆடுகளுக்காகவும் அவர்களின் நலனுக்காகவும் கொண்டவர்களாகவும், அவர்களின் சார்பில் அவர்களது ஆடுகளின் சார்பிலும் நாம் நமது ஜீவனைக் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

**C: இழந்து போனவர்களுக்காக கிறிஸ்து தாமே மரித்தார்**

இந்த ஒரே மேய்ப்பன் தொண்ணூற்று ஒன்பது ஆடுகளை தன் தொழுவத்தில் பாதுகாப்பாக விட்டு விட்டு தனக்குள்ள எல்லா விதமான ஆபாயங்களைக் கொண்ட இரவினூடே வெளியில் சென்று தான் அதைக் கண்டு பிடிக்கும் வரைக்கும் அதை அயராமல் தேடி, அதை கடைசியாகக் கண்டு பிடித்து காணாமற்போன அந்த ஆட்டை திரும்பவும் வீட்டுக்குக் கொண்டு வருகிறான். மறுபடியும் அவர் நமக்கு இலட்சியமான மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் இருக்கிறார். இந்த ஒப்புமையில் நல்ல மேய்ப்பன் சுவிசேஷ பிரபல்ய அறிவிப்பு கதா பாத்திர பாகத்தில் காணப்படுகிறார். பாவத்தின் பாதைகளில் வழிதப்பித் திரிந்த ஆட்டை மீட்பதற்காகவே தன் ஜீவனையும் கொடுக்க விருப்பமாயிருந்தார்.

**D: தேவனுடைய இராஜ்ஜியத்தின் வளர்ச்சியும் அது விரிந்து முன்னேற்றம் அடைதலும்**
ஒவ்வொரு கிறிஸ்தவ தலைவனும் அதன் பிரபல்ய முன்னேற்றத்திற்காகவோ, தனக்காகவோ, தனது நற்செய்தி ஸ்தாபனத்திற்காகவோ தன்னுடைய ஸ்தல ஸ்தாபனத்திற்காகவோ, ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காகவோ தன்னை அர்ப்பணித்துக் கொண்டவனாக இருக்க வேண்டும். இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்துக் கற்பித்து ஜெபிக்கும்படி கட்டளையிடப்பட்ட சிறந்த ஆதி மூலமான ஜெபமாவது ''உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக'' என்பதாகும். தலைவர்களாகிய நாம் அந்த இராஜ்ஜியத்தின் வேலைக்காரர்கள், நமது புற நோக்காவது அந்த ஜெபமானது நிறைவேற்றப்படுதலாக இருக்க வேண்டும்.

## சில தவறான தூண்டுதல் உணர்ச்சிகள் (அ) நோக்குகள்

**A: அதிகாரத்தை ஆண்டு அனுபவித்தல்**
அநேகமான மக்களிடையே மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் சந்தர்ப்பங்களை ஆண்டு அனுபவிக்க ஓர் சுயமும் அதை சாத்தியப்படுத்துகிற பெருமையும் உண்டு. மாம்சீகமான தலைவருக்கு கிறிஸ்தவ ஊழியமானது இதை மட்டும் செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்க முடிகிறது. இதைக் குறித்து நாம் எப்பொழுதும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நாம் ''கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களாக இருப்போமானால்'' இதற்காக ஏதோ ஒன்று என்றும் நம்மை குற்றமற்றவர்கள் என எடுத்துக் கொள்ள மாட்டார்.

**B: மற்றவர்கள் மேல் நமது செல்வாக்கைப் பயன்படுத்தி மற்றவர்களைக் கட்டுப்படுத்துதல்**
அநேகரது ஜீவியங்கள் மாம்சீகமானதும், காரணமின்றி வேண்டாத தாக்கங்களால் ஆன மாம்சீகமானதோர் கட்டுப்பாட்டினால் சீர் குலைந்து விட்டன. ஒரு கிறிஸ்தவத் தலைவர் அவ்விதமான உணர்ச்சித் தூண்டதல்களை நோக்கங்களை என்ன லாப நஷ்டம் நேரிட்டாலும் புறக்கணிக்க வேண்டும். இப்படிப்பட்ட அதிகாரத்தைப் புரட்டுபவர்களை ஒரு நாள் தேவன் நியாயத்தில் கொண்டு வருவார் என்று நம்புகிறேன்.

**C: ஒப்புயர்வற்ற அந்தஸ்த்திற்காக ஆசை**
கிறிஸ்துவுடைய கையினால் தெரிந்தெடுக்கப்பட்ட சீஷரில் சிலர் மத்தியிலுங்கூட ஒப்புயர்வற்ற ஸ்தானத்தை வசிக்கும் ஆசை வருந்தத்தக்க பிரகாரமாகப் பரவலாகக் காணப்பட்டது. இயேசுவும் பல எண்ணற்ற சமயங்களில் அதைக் கண்டிக்க நேர்ந்தது. இந்த விதமான உணர்ச்சி தூண்டும் நோக்கங்கள் இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய மார்க்கத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாக ஓடுகிறது. ஆகவே ''உங்களில் எவனாவது முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு பணிவிடைக்காரனாக இருக்கக் கடவன்'' என்றாகிறது. (மாற்கு 10:44)

**D: தனிப்பட்ட நிறைவைச் சாதனையாக்க**
ஊழியமானது மன நிறைவு பெறுதலுக்கும், திருப்தியடைவதற்கும் சந்தர்ப்பங்களை அளிக்கிறது என்பதில் நியாயமான கருத்தறிவு உண்டு. ஆனால் இது நமது அடிப்படையான அல்லது முக்கியமான இலக்காக இருக்கக் கூடாது. நமது நோக்கமாவது கர்த்தருடைய வாஞ்சையை நிறைவேற்றுதலும் அவரைப் பிரியப்படுத்துவதுமாகும். ''அதாவது அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்.''

## கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்குள் வேலைக்காரன் ஆளுமையும் உள்ளடங்கும்

மாற்கு 10:35-45ல் இயேசு விளக்கிச் சொன்னதாவது தேவனுடைய இராஜ்ஜியத்தின் மகா உயர்ந்த மேன்மைக்குத் திறவுகோலாவது வேலைக்காரன் என்ற ஆளுமை தான் என்றார். யாக்கோபும் யோவானும் ஆகிய செபதேயுவின் குமாரர்கள் அவரை அணுகி தங்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒப்புயர்வற்ற ஸ்தானத்திற்காக வேண்டிக் கொண்டனர். மேலும் இயேசு சொன்னதாவது தேவனுடைய இராஜ்ஜியமானது புற ஜாதிகளின் (இராஜ்ஜியம்) உலகத்தை விட வித்தியாசமானது என்று தெளிவாகச் சொன்னார். அந்த புறஜாதியாரின் உலகத்தில் தலைவர்கள் தங்களுக்கு பின்பற்றிச் செல்கிறவர்கள் மேல் அதிகாரம் செய்து தங்கள் அதிகாரத்துவத்தை உபயோகித்து அவர்கள் மேல் ஆளுகை நடத்தினார்கள். ''உங்களில் எவனாகிலும் முதன்யானவனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன்'' என்றார். (மாற்கு 10:35-45)

இயேசுவே நமக்கு நேர்த்தியான முன் மாதிரியாவார். மேலும் அவர் நம்மிடம் வேண்டுகோள் விடுத்துக் கேட்பதாவது நாமும் அவரைப் போன்ற தூண்டி எழுப்பும் நோக்கம் உடையவர்களாக அவரைப் போலவே இருக்க வேண்டும் என்பதையே பிலிப் 2:5ல் ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது'' என்று கூறுகிறது.

**A: தாழ்மை.**

தாழ்மை என்பது முதலாவதாக மனமும் இருதயமும் தாழ்மைப்படுத்துவதாவது பணிவாகியும் அடக்கத்தைக் கொள்ளுதலுமாகும். அது ஒரு ஊழியக்காரனுக்கென்று தகுந்த கட்டுப்படுத்தலும் என்பதை இயேசுவின் அவருடைய மறு அவதார கதா பாத்திரத்தில் மிகவும் அழகாகவும் விரிவாகவும் எடுத்துக்காட்டாகக் காண்பிக்கப்படுகிறது. ''அவர் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்.'' (பிலிப் 2:7)

**B: பணிவு**

பணிவு என்பது தாழ்மையுடன் எளிதில் பழகக் கூடியதும், வளைந்து கொடுக்கக் கூடியதும், கீழ்படிதல் உள்ளதுமானது என்று அர்த்தம் தரப்படும். இது மிகவும் வியக்கத் தகுந்தவாறு இயேசுக் கிறிஸ்துவில் சிறந்த எடுத்துக்காட்டாக ''தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போல என்று காண்பிக்கப்படுகிறது'' (ஏசாயா 53:7) பணிவு என்பதை பலவீனத்தோடு ஒரு போதும் குழப்பி விடக்கூடாது வேதாகமத்தில் பணிவுக்கு மிகச் சிறந்த மகத்தான எடுத்துக்காட்டாக மோசேயும், இயேசுவுமாகக் காணப்படுகிறார்கள். இவர்களில் யாரையேனும் பலவீனர் என்று எண்ணி விடக்கூடாது. பணிவு என்பது கட்டுப்பாட்டுடன் கூடிய சமானியமான பெரிய பலமேயாகும்.

**C: கீழ்படிதல்.**

கீழ்படிதல் என்பது மற்றொருவருடைய விருப்ப சித்தத்திற்கு பணிந்து போகுதலாகும். அது ஒரு நபரை தாழ்மையான புகார் செய்பவராகவும், எஜமானருக்கும் அதிகாரத்துவத்திற்கும் இனிமையான பணிவு உடையவராக சித்திரிக்கப்படுவார்கள். ஆகையால் தேவனுக்கு கீழ்படிவதென்பது இரட்சிப்புக்கு அத்தியாவசியமானதாகும். அப். பவுல் ''புறஜாதியாரை வார்த்தையினாலும், செய்கையினாலும் கீழ்படியப்பண்ணும் படிக்கு'' என்று பேசுகிறார். (ரோமர் 15:18) கீழ்படிதல் என்பது சீஷத்துவத்திற்கும், ஆவிக்குரிய அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாததாகும்.

# அதிகாரம் 4 - ஒரு நல்ல அஸ்திபாரத்தை போடும் படியாக

**ஒரு நல்ல அஸ்திபாரத்தின் முக்கியத்துவம்**
அஸ்திபாரங்கள் ஒளித்து வைக்கப்பட்டும் பார்வைக்கு அலங்கார மற்றவையாகும். ஆனாலும் அவைகள் முக்கியமான காரணியாக அதன் பலத்தின் மேல் அந்த கட்டடம் முழுவதும் முற்றிலுமாக சார்ந்திருக்கிறது.

## அத்தியாவசியமான காரணிகளாக தலைமைத்துவத்தின் அஸ்திபாரத்திற்கு தேவைபடுபவன:

**நல்லொழுக்கம், ஈவுகள், ஆள்தன்மை**

நாம் சுருக்கமாக இவற்றைப் பற்றி கவனிப்போம்:

**1. நல்லொழுக்கம்**

ஒரு மனிதனுடைய நல்லொழுக்கமாவது அல்லது நல்லொழுக்கமுடையவன் என்று சொல்லப்படுகிறவன் தனக்கென்று குறைவுறாத உள்ளான பலத்தையும், அமைதியான தன்மையும், நம்பகத் தன்மையையும், ஒரே சீரான தன்மையுடனும் இருந்து உயர்ந்த தரமான நல்லியல்புகளையும் உத்தமத்துவத்தையும் கைக்கொண்டிருக்க வேண்டும். அத்தகைய மனிதன் ஒரு போதும் தன்னுடைய கோட்பாடுகளை விட்டுக் கொடுக்க மாட்டான். அவன் தனது தனிப்பட்ட தராதரத்திற்கு எட்டக் கூடாத மக்கள் இருப்பார்களானால் அவர்களை அலட்சியமாகப் பார்க்கமாட்டான். அவன் நியாயமுள்ளவனாகவும் பாரபட்சமில்லாதவனாக ஒவ்வொருவரையும் சமமாக விருப்பு வெறுப்புடன் நடத்த மாட்டான்.

நல்லொழுக்கம் என்பது உள்ளான ஜீவனை சக்திகள் அடங்கிய மெய்யான மனிதனாக கலந்தவையாகும். அது நேர்மை, உத்தமம், தீர்க்கமான அமைதி மனோ பலம் ஒரே சீரான தன்மை ஆகியவை இரண்டறக் கலந்து அவற்றால் அரணாக பலப்படுத்தப்பட்டதாகும். மெய்யொழுக்கமானது பகட்டான ஒப்பனையுடைய ஆடம்பரமாகாது. அது உண்மையாகவே ‘‘இருதயத்திற்குள் மறைந்திருக்கும் உள்ளான மனிதனாகும்.’’ ஒழுக்கம் என்பது ஒரு மனிதன் மெய்யாகவே தனக்குள் (உள்ளத்தில்) என்னவாகவே இருக்கிறான் என்பதைப் பற்றியதாகும். அது திட பண்புகளாகிய உத்தமம், தாழ்மை, தன்னடக்கமுடையை, நம்பகத்தன்மை, பொறுமை, நியாயம். மேலும் அது மற்றவர்கள் உனக்கு எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அதையே அவர்களுக்கும் நீ செய்வாயாக என்ற தங்க சட்ட வாக்கியத்தால் ஒப்படைப்புச் செய்து ஜீவிக்க வேண்டியதோர் ஜீவியத்தையும் தனக்குள்ளாகக் கொண்டதாகும்.

நல்லொழுக்கத்தின் ஆழம் தனக்கென்று உரியதான வெகுமானங்களைப் பெற்றிருக்கிறது. சங்கீதக்காரன் சொல்லுகிற பிரகாரம் ‘‘நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு. அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்’’. (சங் 37:37) நீ சாதனையாக சாதிப்பதைப் பார்க்கிலும் நீ என்னவாக உண்டாக்கப்படுகிறாய் என்பதில் தேவன் மிகுந்த ஆர்வம் உடையவராக இருக்கிறார். இங்கேதான் ஆர்வத்தை தரக்கூடிய ஆனால் முக்கியமானதோர் சமன்பாட்டை சகல தலைவர்களும் தங்கள் கருத்தில் கொள்ளும்படி குணச்சித்திரமானது நல்லொழுக்கம் இல்லாமல் பெருங் குழப்பமாகும். குணச்சித்திரம் - நல்லொழுக்கம் = பெருங்குழப்பம்.

அநேகமான கிறிஸ்தவத் தலைவர்கள் தங்களது ஸ்தானத்திலிருந்து விழுந்து போனார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களுக்கென்று மிகுதியான குணச் சித்திரத்தைப் பெற்றிருந்தார்கள். (ஆளுமையும் சுயமும்) ஆனால் மிகக் குறைவாகவே நல்லொழுக்கம் உடையவர்களாய் இருந்தார்கள். தேவன் தாமே நமது நல்லொழுக்கத்தில் மிகுந்த ஆர்வம் உடையவராக இருக்கிறார். (நமது ஆளுமையின் கட்டமைப்பின் தன்மையில்) நாம் எதைச் சாதிக்கிறோம் என்பதைப் பற்றி அல்ல.

நல்லொழுக்கம் என்பது நமது அமைதி நிறைந்த ஆளுமையின் ஒரு அம்சமாகும். நீ யாராகவே மெய்யாக இருக்கிறாய்! அது ஒருங்கிணைந்த ஒரு கூட்டமான பண்புகளாக ஆகிறது அல்லது நமது சிறந்த குணமான பண்புகளால் ஆகிய நம்மை உண்டாக்கிற தோற்றமாகும்.

ஆனால் சாதாரணமாக எண்ணற்ற தாக்கம் விளைவிக்கும் காரணிகள் உள்ளே:

a: **மரபு வழியான.** நமது பெற்றோர் முற்பிதாக்களின் மரபணுக்கள் மூலமாக நாம் சுதந்தரித்துக் கொள்ளும் சிறந்த குணப் பண்புகள்.

b: **நாம் வளர்க்கப்படும் முறை.** நமது சூழ்நிலைமையின் தாக்கமும், நன்னெறிகளும், கோட்பாடுகளுமான நமது ஆரம்ப கால ஜீவியத்தில் நமக்குக் கற்றுக் கொடுக்கப்படுவன.

c: **கல்வி.** நமது கல்வி போதனையின் நடைமுறையினால் நாம் ஒட்டு மொத்தமாகக் கற்றுக் கொள்பவை.

d: **அனுபவம்.** நாம் கற்றுக் கொள்கிறதும், ஜீவிய கால அனுபவத்தில் ஆகர்ஷித்துக் கொள்வதும்.

**நமது நல்லொழுக்கத்தை உண்டாக்கிக் கொள்ளும்படி உதவிய இயற்கையான தாக்கங்கள் உள்ளன. நாம் கிறிஸ்தவர்களாக ஆகும்பொழுது ஒரு முழுமையான விரிந்த அளவு தாக்க ஏதுக்கள் வந்து கிரியை செய்கின்றன.**

a: ''உனக்குள் கிறிஸ்து'' என்ற காரணி. (கொலோ 1:27)
கிறிஸ்து நமக்குள்ளே இருந்து நம்மை மாற்றும் படி வந்தார்.

b: அவருடைய ஆவியின் கனிகள். (கலா 5:22-23)
– தனி நபரான கிறிஸ்தவனுக்குள் - **அன்பு, சந்தோஷம், சமாதானம்.**
– மனித உறவுத் தொடர்புகளில் - **தயவு, நற்குணம், சாந்தம்**
– தேவனுக்காக அவரை நோக்கி - **விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்**

c: ஜீவனுள்ள வார்த்தை - என்ற காரணி
தேவன் தமது வார்த்தையில் இருக்கிறார். அவருடைய நல்லியல்புகள் அதற்குள்ளே அடங்கி இருக்கிறது. நாம் அவரையும் அவரது குணமான நல்லியல்புகளையும் அவருடைய வார்த்தையின் மூலமாகவே மனதில் உள்வாங்கிக் கொள்ளுகிறோம். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக' (கொலோ 3:16) வேதாகமம் தேவனுடைய குணநலன்களால் நிரப்பப்பட்டுள்ளது. அதிலுள்ள ஒவ்வொன்றும் தேவனுடைய நல்லியற் பண்புகளோடு சீராகவே இருக்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தையால் போஷிக்கப்படும் பொழுது தேவனுடைய நல்லொழுக்கப் பண்புகளும் நமக்குள்ளே உருவாகின்றன. நீதிமொழிகளின் புத்தகம் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். அது நடைமுறைக் கூற்றுகளான ஞானத்தினால் நிரப்பப்பட்டு தேவனுடைய பார்வையில் பழக்கத்தின் நன்னெறிகளுடன் ஒரே சீராகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு தலைவனும் தினம் ஒரு அதிகாரத்தை நீதிமொழி புத்தகத்திலிருந்து படிக்க வேண்டும். அது நடைமுறை ஞானமாக விளங்கி அதனால் சன்மார்க்கமான பண்புகள் தலைவனுடைய ஆவியில் அச்சடையாளங்களாகப் பதிந்து அவனுக்குள் தேவனுக்குள்ள நல்லியல்பு பண்புகளை உண்டாக்கும்.

d: பரிசுத்த ஆவியானவர் என்ற காரணி
சீஷர்கள் பெந்தேகோஸ்தே நாளில் மறு சாயலாக ஆக்கப்பட்டார்கள். (அப் 2ம் அதி) நாமுங்கூட பரிசுத்த ஆவியின் வல்லமையால் மறு சாயலாக ஆக்கப்படலாம். இயேசு சொன்னதாவது அந்த பரிசுத்த ஆவியானவர் ''சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்'' என்று கூறினார். அவருடைய பிரசன்னமானது விசுவாசிக்குள் இருந்து அமைதியாக அடுத்தடுத்து மெல்லிதாக உள்ளாக இருந்து பேசிக் கொண்டிருப்பார். அது நம்மை என்றென்றும் சத்தியத்திற்குள் வழி நடத்திச் செல்லும் தவறுக்குள் வழி நடத்துவதில்லை. ஆகையால் நாம் தினந்தோறும் (நாடோறும்) அந்த ஆவியின் உள்மனதின் மெல்லிய சப்தத்தாலே நம்மை வழி நடத்திச் செல்லுமாறு அனுமதித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது அந்த ஆவியானவர் ஒரே சீராக வழி நடத்தி ஒழுக்கம், நீதி, கற்பு (பரிசுத்தம் (அ) தூய்மை) அழகு, நற்கீர்த்தி உள்ளவைகளுக்கு நேராக நடத்துவார். (பிலிப் 4:8) நாம் இந்த நல்லியல்புகளாகிய பண்புகளில் நடக்கும்பொழுது தேவனுடைய மெய் நல்லொழுக்கம் நமக்குள்ளும் உருவாகும்.

உ: தேவனுடைய செயல்பாட்டு கிரியைகளாகிய காரணி

தேவன் ஆதியில் மனிதனை தன்னுடைய ரூபத்திலும் சாயலிலும் சிருஷ்டித்தார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அந்த சாயலானது அவனது வீழ்ச்சியின் மூலமாக மாசுபடுத்தப்பட்டது. அந்த நாள் முதற்கொண்டு மனிதன் தன்னுடைய இயல்பான முன்னோர்களின் சாயலைத் தரித்துக் கொண்டான். கிறிஸ்துவின் மூலமாக தேவன் அவனுடைய ரூபத்தையும் சாயலையும் திரும்ப பெற்றுக் கொள்ளும்படியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அது அவனுக்கு சாதாரணமாகவோ சுலபமாகவோ பெற்றுக் கொள்ளக் கூடிய காரியமல்ல. அது முயற்சி இல்லாமல் நேரிட முடியாது. தேவன் நம்மை வேறுபட்ட சந்தர்ப்பங்களிலும், சூழ்நிலைமைகளிலும் நம்மை வழியாகப் போகும்படி அனுமதித்து அந்த சமயங்களில் நம்மோடு இடைபடுகிறார். அன்றியும் என் மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே அவரால் கடிந்து கொள்ளப்படும் பொழுது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைச் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்கிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லிருக்கின்ற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திராயிராமல் வேசி பிள்ளைகளாய் இருப்பீர்கள். (எபி 12:5-8)

<u>நாம் சுருக்கமாக இதை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் மெய்யொழுக்கத்தையும் ஆளுமை தன்மையையும் காட்டுவோம்:</u>

| **மெய்யொழுக்கம்** | **ஆளுமை தன்மை** |
|---|---|
| அமர்ந்த பண்பாடு | சுறுசுறுப்பான அம்சம் |
| நீ யாராக இருக்கிறாய் | நீ என்ன செய்கிறாய் |
| தனிப்பட்டது | பகிரங்கமானது |
| உள்ளான நோக்கு | புறநோக்கு |

**கிறிஸ்துவின் நல்ல மெய்யொழுக்கத்தை விருத்தி செய்து கொள்ளும்படியாக**

கலா 5:22-23ல் அப்.பவுல் ஆவியின் கனிகளைப் பற்றி வருணிக்கிறார். அதாவது “அன்பு,சந்தோஷம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (அ) தன்னடக்கம்” என்பவை ஆனவைகள் நாம் சிரமப்பட்டு உண்டாக்கும் நற்பண்புகளல்ல. அவைகள் மிக இனியவைகளாக நமக்குள் வாசம் பண்ணும் கிறிஸ்துவின் ஆவியின் பிரகாரம் நடப்போமானால் நாம் பெற்றுக் கொள்ளும் கனிகளாகும். இவைகள் வெளிப்படையானதாக வருகிறதும், கிறிஸ்து வாசம் பண்ணும் ஒரு மனிதனுக்குள்ளும் அவர் அவர்களுக்குள்ளும் வாசம் பண்ணும் படியாக நாம் அனுமதிக்கிறதற்கு இது ஆதாரமாகும். அந்த விதமான கிருபையானது தேவன் உன்னில் மெய்யாகவே வாசம் செய்கிறார் என்பதற்கு சாட்சியாகும். யாரோ ஒருவர் கேள்வியாக எழுப்பினதாகக் கூறப்படுவது என்னவென்றால் நீ ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதற்காகக் கைது செய்யப்பட்டால் உன்னை தண்டிக்கும் படியாக போதுமான சாட்சியம் இருக்குமா?

இந்த விதமான பண்புகள், குணநலன்களின் அட்டவணையானது கிறிஸ்துவின் நல்மெய்யொழுக்கத்தை சித்தரித்துக் கூறுவதாகும். மெய்யொழுக்கம் என்பது நாம் யாராக இருக்கிறோம் என்பதன் அமைதியான அம்சமாகும். அடிக்கடி “யாரோ ஒருவருக்காக சிபாரிசான நற்சான்று அளிக்குமாறு ஒரு போதகர் கேட்டுக் கொள்ளப்படலாம். ஒரு வேளை கூடிவரும் சபையில் ஒரு நபராகக் கூட இருக்கலாம். அவர் உண்மையாகவே அந்த நபர் எந்த மாதிரியானவர் என்பதை விவரித்துச் சொல்ல முயற்சிப்பார்.”

நான் கடந்த ஐந்து ஆண்டுகளாக இவரை நன்கு அறிந்திருக்கிறேன். அந்தக் காலங்களில் அவரை மிகவும் விசுவாச பயபக்தியுள்ளவராகவும் நம்பத் தகுந்தவராகவும் இருக்கிறார் என்று பார்த்திருக்கிறேன். அவர் கடின உழைப்பாளியாகவும் விழிப்புள்ளவராகவும் அறிவேன். அவரை நான் அதிகாரத்திற்கு மரியாதைக் கொடுப்பவராகவும், ஒழுங்குக்குரியவராகவும் நான் அறிவேன். அவனோ / அவளோ ஒரு சிறந்த பணி செய்பவராக நம்பத் தகுந்த சேவை புரியக் கூடியவராக இருப்பார். என்ற நற்சான்று கொடுக்கலாம். இவர் எந்த மாதிரியான மனிதன் என்பதை விவரித்துச் சொல்ல இது முயற்சியாகும். இப்பொழுது பரிசுத்த ஆவியானவரால் இயேசு எந்த மாதிரியானவர் என்று விவரிக்க

விரும்பும் பொழுது, அவரைப் பற்றி ஆவியானவர் கூறுவதாவது ''இயேசு அன்பாக இருக்கிறார். அவர் சந்தோஷமும் சமாதானமுள்ளவர். அவர் நீடிய பொறுமையும் சாந்தமும் நற்குணமும் உள்ளவர். அவர் விசுவாசமும் தயவும் இச்சையடக்கமுடையவர்'' என்பார்.

இதே பரிசுத்த ஆவியானவர் உன்னையும் என்னையும் குறித்து இதைப் போலவே சொல்லும்படி ஏங்கி இருக்கிறார். அவர் மிகவும் மேன்மையாகவும் உண்மையாகவும் நமது மெய்யொழுக்கத்தைப் பற்றி இதே சொற்களில் சொல்லும்படியாக வாஞ்சிக்கிறார். அவர் நம்மைக் கிறிஸ்துவின் சாயலாக மாற்ற விரும்புகிறார். (I கொரி 3:18) அதில் நாம் கிறிஸ்துவின் மெய்யொழுக்கத்தைப் பெற்றிருப்பதும் அடங்கும். ஆனால் உச்ச நிலையாக நாம் கிறிஸ்துவின் ஜீவனை முதிர்ச்சியான பூரணமடைவதில் எந்த உயர் அளவுக்கு வெளிப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு கிறிஸ்துவின் ஜீவனைப் பற்றி சாட்சியம். நம்முடைய ஜீவியத்திலும் தெளிவாகவும் ஒரே சீராகவும் எடுத்துக்காட்டப்பட முடியும். இந்த அனுபவமானது நாம் அந்த பரிசுத்த ஆவியானவரது மெல்லிய சத்தம் பேசுவதை நமது உள்ளான மனிதனில் உண்மையாகப் பின்பற்றிக் கீழ்படிந்தால் அதை அம்மட்டில் மாத்திரமே சாதனை செய்து நிறைவேற்றுபவர்கள் ஆவோம்.

<u>கிறிஸ்தவ தலைவர்களுக்கு இங்கே தரப்படும் வாஞ்சிக்கத்தக்க நல்லொழுக்கப் பண்புகளாவன:</u> இவைகள் அனைத்தும் தேவன் தாமே நமக்குள் விருத்தி செய்ய இணக்கமாக இருக்கும் ஒழுக்கப் பண்புகளாகும். அவைகள் நமது இயல்பான ஒழுக்க நெறியில் ஓரளவுக்கு வாசமாய் இருக்கலாம். ஆனால் தேவன் தாமே நமக்குள் அதை பலப்படுத்தி நமக்குள் இருக்கும் ஆவியின் கனிகளின் வெளிப்பாடுகளாக விளங்கும்படி செய்கிறார். தேவன் நம்முடைய ஜீவியங்களில் கொண்டு வந்த சகல ஆவிக்குரிய தாக்கங்களும் இதில் இரண்டற கலந்து பிதாவின் அச்சு சாயலாகத் திகழும் கிறிஸ்துவின் ரூபத்திலும் சாயலிலும் நாம் மறு சாயலாக ஆகும்படியாகச் செய்கிறது. இந்த மெய்யான செயலூக்கமான கிறிஸ்தவத் தலைவன், தன்னால் உருவாக்கப்பட்டதோர் மனிதனாக அல்ல. ஆனால் தேவனால் உருவாக்கப்பட்ட மனிதன் ஆவான். நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் தனிப் பண்புக் கூறுகளும் குண நலன்களும் இயற்கையான மனுஷீகமான குணநலன்களல்ல. ஆனால் கிறிஸ்து நமக்குள் வாசம் பண்ணுவதால் வரும் பலா பலன் ஆகி கூட்டல் முறையினால் அதிகப்படுவனவாகும். கர்த்தருடைய வார்த்தை நம்முடைய ஜீவியத்தின் மேல் கொள்ளும் தாக்கத்தின் காரணமாக நம்மில் உண்டாக்கப்படுவதாகும். நமது ஆவிக்குரிய பக்தி விருத்தியானது தேவனிடமிருந்து வரும் முக்கியமான கரிசனையே ஆகும். ஆகவே அவர் கொண்டு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நமக்குள் அவருக்குப் பணிந்து கீழ்படிய வேண்டும். இதை நாம் கைக் கொள்ளும்பொழுது அவர் தமக்கு எதிர் கொண்டு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நம்மை இயேசுவின் சாயலில் உருவாக்கும்படியாக பயன்படுத்துகிறார். ஆகவே <u>மற்றவர்களைக் கொண்டு நீ என்ன செய்யக் கூடும் என்பதை விட தலைமைத்துவப் பாகத்திற்கு தேவன் உன்னைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்பதே அதிகமானது என்பது மெய்யாகும்.</u>

**1. நீடிய பொறுமை.**

சகிப்பு அல்லது நீடிய பொறுமை என்பது வேதாகமத்தில் அழைக்கப்படுகிறது போல ஒரு அந்நியமான பண்பை போல தோற்றம் அளிக்கலாம். தலைப்பாக அதைக் கொண்டு ஒரு வரிசை நன்மதிப்புப் பெற்ற குணநலன்களை ஒரு செயலூக்கமான தலைவருக்கு இருக்கும்படியான தகுதிகள் என்று கூறலாம். ஆனால் அனுபவமானது அது மிகவும் அவசியமானதென்றும் இன்றியமையாத ஒன்றாகும் என்று கற்றுக் கொடுக்கிறது.

இயேசுவுடைய ஊழியம் இதை நிச்சயமாகவே உறுதிபடுத்தியது. அவருடைய சீஷர்களுடன் அவர்களுடைய ஆதி நாட்களில் கொண்டுள்ள உறவுத் தொடர்பானது அவரது நீடிய பொறுமையால் அவருடைய குணங்கள் அலங்காரம் பெற்றதாய் இருந்தது. அவர் பொறுமையுடன் தடைகள் இருப்பினும் அவர்களுடன் தொடர்ந்து முயற்சித்து வந்திராவிட்டால் இந்த ஆதித் திருச்சபையானது பிறந்திருக்கக் கூடுமா என்று வியப்படையலாம்.

கிறிஸ்தவ தலைமைத்துவம் இரண்டு காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. தேவனும் மக்களும் நாம் எப்பொழுதாவது மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால் நமக்குப் பொறுமை அவசியம். தேவன் தாமே இந்த அவசியத் தேவையை அடிக்கடி பிரயோகித்து நீடிய பொறுமையாகிய கனியை நமக்குள் விருத்தி செய்கிறார். தேவன் நமது ஜீவியத்தில் சந்தர்ப்பங்களையும்

மக்களையும் பயன்படுத்தி அவருடைய ஆவியின் கிரியையை நமக்குள்ளே மேலும் கிரியை செய்து தேவனுடைய சாயலை நமது ஜீவியத்தில் திரும்பப் பெறும்படியாகச் செய்து கொண்டு இருக்கிறார்.

**2. உணர்ச்சியில் தன்னைப் புறநிலைப் படுத்திக் கொள்ளும் மன இயக்கம்**

இந்த மன இயக்கமானது ஒரு விளங்கிக் கொள்ளுதலிலும் இரக்கமான வகையிலும் மற்றவர்களின் யோசனைகளையும் உணர்ச்சிகளையும் கண்டறிந்து கொள்ளும் திறமையாகும். அதாவது உன்னை மற்றொருவரின் இடத்தில் வைத்து அவர்களுடைய தோற்றத்தையும் பார்வைக்குறிப்பையும் முழுவதுமாக புரிந்து கொள்வதாகும். இயேசுவானவர் ''நம்முடைய பாடுகளைப் பற்றிய உணர்ச்சியால் தொடப்பட்டார்.'' அவர் நம்முடைய தேவைகளைப் புரிந்து கொண்டு நம்முடன் கனிவிரக்கத்துடன் நெருங்கி வருகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவ தலைவனும் அடுத்தடுத்த காலங்களில் சற்று தாமதித்துத் தங்கியிருந்து தனது இருதயத்தை பரிசீலனை செய்து அது மெய்யான கரிசனையுடன் மற்றவர்களுக்காக நோக்க மனப்பான்மையுடன் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

**3. உத்தமமும் நேர்மையும்**

உத்தமம் என்பது நமது உள்ளான நேர்மை, ஒழுக்க மேன்மை, நல்லொழுக்க சுத்தம் என்பதைக் குறிக்கும். அது ஒரு உறுதியானதும் சீரானதுமான உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடுகளுக்கும் நன்னெறி முறைக்கும் பற்றிக் கொள்ளுதல் என்றும் மறைபொருளான விளக்கத்தையும் கொடுக்கும். ஒரு நீண்டகால போக்கில் பல தரப்பட்ட சந்தர்ப்பங்களில் காட்டப்பட்ட சீரான நேர்மையாலும், நம்பிக்கைக்கு உகந்த தன்மையாலும் பெற்றுக் கொள்ளப்பட்ட நம்பகத் தன்மையாகும். ஒரு உத்தமமான நபராக இருப்பது என்பதன் அர்த்தமாவது தங்களுக்கென்றும் மற்றவர்களுக்கென்றும் முழுவதுமாக உண்மையாக இருப்பதாகும். அதாவது நாம் நம்பி சார்ந்திருக்கக் கூடியவர்கள் என்று பொருள்படும். அதாவது ஒரே சீரான நேர்மைக்கும் சார்பு நிலைக்கும் உறுதியான நற்பெயருடைய நபராகும்.

**4. பாரபட்சமின்மை.**

ஒரு நல்ல தலைவன் தன்னுடைய நோக்க மனப்பான்மையில் ஒரே சீராக மக்களுடன் நடந்து கொண்டு ஒவ்வொருவரையும் சமமாகப் பாவிக்க முயற்சிக்க வேண்டும். அவர் பட்சபாதமில்லாதவராக எல்லா நேரங்களிலும் இருக்க வேண்டும். ஒவ்வொருவரையும் சமமாக பாவித்து நடத்தி பண்புடனும் நடுநிலைமை தவறாமலும் நடந்து கொள்ள வேண்டும். ஒரு போதகர் தனது சபையில் தனக்கு இஷ்டர்களாக யாரையும் வைத்து கொள்ளக் கூடாது. ஆனாலும் வெளிப்படையாக ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிறரைவிட நெருக்கமானவர்களைக் கொண்டிருப்பார்கள். இயேசுவானவருங்கூட தனது உள்வட்டத்தில் பேதுரு, யாக்கோபு, யோவான் என்பவர்களை வைத்திருந்தார். ஆகிலும் மற்ற அனைவரோடும் பண்பாகவே நடத்தினார். தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாஸையும் சேர்த்து அவ்வாறு நடத்தினார்.

**5. பலமும் நம்பத் தகுந்த தன்மையும்**

ஒரு தலைவர் பலம் உடையவராக உறுதியுடனும் சபல புத்தியுடையவராக அல்லாமலும் இருத்தல் வேண்டும். இயேசுவானவர் இளகிய மனதுடையவராகவும் சாந்தமுடையவராகவும் இருந்தாலும் அவர் உறுதியுள்ளவராயும் தீர்மானமுடையவராயும் இருந்தார். ஒருவர் உறுதியாக இருக்க வேண்டுமானால் கடினமானவராக இருக்க வேண்டியதில்லை. உறுதியாக இருப்பது என்று மனத் திண்மையும் உறுதியான தீர்மானமும் உடையவராக இருத்தல் அதன் அர்த்தமாவது எப்பொழுதுமே நிரந்தரமான அசையாது நிலை நிற்பவராக வேண்டும். ஆகவே வேதாகமம் சொல்கிறது ''ஆம்'' என்பதை ஆம் என்றும் ''இல்லதை'' இல்லது என்றும் சொல்ல வேண்டும். இது தான் மன உறுதி எனப்படும்.

**6. மனத்திண்மையும் உறுதித் தீர்மானமும்**

ஒரு நல்ல தலைவர் தனது மனதை உறுதிப்படுத்தி நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். சாத்தியக் கூரான பின் செல்கிறவர்களுக்கு தன் மனதைத் திடப்படுத்திக் கொள்ளக் கூடாத அல்லது தன் மனதை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் ஒரு தலைவர் இருப்பது போன்று குழப்பமாக ஆக உள்ளது வேறொன்றும் இல்லை. தீர்மானம் எடுத்தல் என்பது மிகவும் மட்டுக்கு மிஞ்சிய முக்கியமான நல்லதோர் தலைமைத்துவத்தின் வடிவமாகும். வெட்டொன்று துண்டு இரண்டு எனவும் ஒரே சீரான தன்மையுமாக இருக்கும் திறமை அத்தியாவசியமானது.

7. நல்ல நகைச் சுவை உணர்வு.

தலைமைத்துவம் என்பது மிகவும் கருத்தூன்றிய அலுவலாகும். மேலும் அது அடிக்கடி பணியிலிருந்து நகைச் சுவை உணர்வால் தளர்த்தியாக்கவும் வேண்டுமானால் காரியங்கள் விநோதமான மறுபக்கத்தையும் பார்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். இது அவரை புத்துணர்ச்சி பெறவும் கடினமான ஓர் சூழ்நிலைமையின் போக்கைத் தளர்த்தவும் கூடும். மற்ற அநேகக் காரியங்களைப் போலவே மேலும் அதிகமாக வரம்புக்கு மீறி செயல்படவும் கூடும். ஒரு பழமொழி கூறுவதாவது இறுக்கமாகபட்ட ஓர் வில்லானது எப்பொழுதுமே விரைப்பாக நிற்பதால் வெகு சீக்கிரத்தில் தன் பலத்தை இழந்து விடக் கூடும். ஆகவே இந்தத் தலைவருக்குங்கூட பொழுது போக்கும் அயர்வு நீக்கு பானமும் அவசியமாகும். தன்னைத் தளர்த்தியாகவும் வைத்துக் கொள்ளும் திறமையுடன் தான் மகிழ்ச்சியை அனுபவிப்பது ஜீவியத்துக்கு முக்கியமானதாகும். நகைச் சுவை உணர்வுடன் சிரித்து மகிழும் திறமையும் வேடிக்கைகளுக்கு ஓர் உணர்வும் அழுத்தமான நேரத்தில் நல்ல உடல் நலத்தையும் கட்டிக் காத்துக் கொள்வதற்கான ஒரு பாதுகாப்பு அமைவாகும். மேலும் மிக மிக முக்கியமாக செயல்படக்கூடிய நகைச் சுவை அம்சமானது தலைமைத்துவத்தில் நடைமுறைப்படுத்திக் கொள்வது சில சமயங்களில் தன்னைக் குறித்தே தனக்குத் தானே சிரித்து மகிழ்ந்து கொள்வதாகும். அநேக தலைவர்கள் தங்கள் பால் பாரத்தையும் பதவியையும் மிகமிக கண்டிப்பானதாக எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். அவர்களும் ஏதாவது ஒரு சமயத்தில் தரையில் கீழ் இறங்கி வந்து தங்களைக் குறித்தே நகைச் சுவையுடன் சிரித்துக் கொள்ள வேண்டும்.

8. அணுகுவதற்கு கூடிய திறமை.

ஒவ்வொரு மனிதனுக்கும் விசேஷமாக தலைமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு தங்கள் ஜீவியத்தில் அவர்களுக்கென்று தனிப்பட்ட தனிமையான நேரம் தேவை. ஒரு நல்ல தலைவர் தம்மைப் பின்பற்றிச் செல்பவர்கள் அவரை அணுகி கலந்து கொள்வதற்கு வசதியாக தம்மை வைத்துக் கொள்ள வேண்டும். அவர் யாராலும் எளிதில் அணுகக் கூடியவராக இருத்தல் வேண்டும். தலைவர் தனது இனிமையானதோர் தனிமையிலே தன்னை மூடி மறைத்துக் கொள்கிறார் என்று மக்கள் அவரைப் பற்றி வருந்தக் கூடாது.

9. கீழ்படிதல்

“ஆகையால் நான் அந்த பரம தரிசனத்திற்குக் கீழ்படியாதவனாயிருக்கவில்லை” (அப் 26:19) ஊழியத்திற்குள் நமது அழைப்பானது மெய்யாகவே பரத்திலிருந்து கொடுக்கப்படும் அழைப்பாகும் அல்லது அது ஒரு பரம தரிசனம் எனப்படும். அதற்கு முடிவான பொறுப்பாவது அந்த அழைப்புக்கு நாம் கீழ்படிவதே ஆகும். என்னவென்றாலும் அந்த அழைப்பு எதை எல்லாம் வேண்டியதாக விரும்புகிறதென்பதைத் தெளிவாகத் தீர்மானஞ் செய்து கொள்ள வேண்டும். நமது மெய்யான அழைப்புக்கு உள்ள குறிப்பிட்ட தன்மையைக் கண்டறிந்து கொள்ள வேண்டும். தேவன் நீ எதைச் செய்ய வேண்டும் என்று குறிப்பாகக் காட்டுகிறார். உனக்காக அருளிச் செய்யப்பட்ட அந்த குறிப்பிட்ட எந்த வரத்திற்காக உனக்கு உத்ரவாதத்தைக் கொடுத்திருக்கிறார். நீ ஒரு அப்போஸ்தலனா, தீர்க்கதரிசியா, சுவிசேஷகனா, போதகரா அல்லது ஆசிரியரா அல்லது அந்த வரமானது மேற்கூறப்பட்ட ஏதாவது வரங்களின் சேர்மானமா? இதைக் குறித்து நீ மிகவும் கவனமாக இருப்பாயாக. இதற்கான மாயையான அமைதித் தோற்றமோ அல்லது இந்த அற்புதமான வரங்களில் ஒன்றையும் பெற்றிருக்கவில்லை என்று புரட்டுகிறாயா? உண்மையாக இந்த வரங்களில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருக்காவிட்டால் ஒரு வேளை தேவன் உன்னை ஊழியக்காரனாக அழைத்திருக்க மாட்டார். அவர் எவனுக்கு அழைப்பைக் கொடுக்கிறாரோ, அவருங்கூட துடிப்பாக பேசுகிறார். ஆகவே அந்தக் குறிப்பிட்ட தேவன் உனக்குக் கொடுத்த அழைப்பைக் கண்டுபிடித்து அதை பின்பற்றிப் போவாயாக. உன்னுடைய அழைப்பை செயல்படுத்த தேவ சித்தத்திற்குக் கீழ்படிந்து செயல்பட வேண்டுமென்று தீர்மானஞ் செய்து கொள். நீ குறிப்பிட்ட ஓர் இடத்திற்கும் சபைக்கும் நீ தற்சமயம் ஊழியம் செய்பவர்களுக்காக அழைக்கப்பட்டிருக்கிறாயா? நீ சரியான ஆளாக, சரியான இடத்தில் சரியான நேரத்தில் நிற்கிறாயா? இதைப் பற்றி நீ தெளிவாக இருந்தால் அங்கே தேவன் உனக்கென்று ஒரு குறிப்பிட்ட திட்டத்தை நீ பின்பற்றிச் சென்று நிறைவேற்றும்படியாக வேண்டும். உன்னுடைய முக்கியமான கடமையாவது அதைக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றுவாயாக.

### 10. புறநோக்காக

புறநோக்குடன் இருப்பதாவது, முதலாவதாகக் காரியங்களை பாரபட்சமின்றியும், நடுநிலைமையாகவும் தப்பெண்ணங் கொள்ளாதபடியாகப் பார்ப்பதாகும். உணர்ச்சிபூர்வமான, உணர்ச்சி வசப்பட்டோ தனிப்பட்ட தாக்கங்களுக்கு விடுபட்ட நிலையில் இருப்பதாகும். காரியங்களை நடைமுறையாகவும் மனித நலனுக்காகவும் கண்காணுதலும் இடம் பெறும். தீர்மானங்களை எடுப்பது உணர்ச்சி வசப்பட்டு எடுப்பதைவிட விஷய அடிப்படையில் எடுப்பதே நல்லது. ஒரு செயலூக்கமான மிக விரிந்த அளவில் பிரயோகிக்கப்படுகிற பாணியில் செய்யப்படும் மேற்பார்வையாவது மிகவும் புகழுடன் சொல்லப்படுகிற M.B.O அல்லது புறநோக்குடன் மேற்பார்வை செய்தல் என்பதே. (Management by objective) அது ஒரு மேற்பார்வை செய்யும் பணியை குறிப்பிட்டு அதன் முடிவான புறநோக்கைத் தெரிந்து கொண்டு அதன் புறநோக்கு இலக்குகளைச் சென்றடைந்து அந்த புறநோக்கு காரியங்களை நிறைவேற்றுவதற்காக அதை எல்லாவற்றை வெட்டிக் கத்தரித்து தயாராக்குகிறது. அது முடிவான புறநோக்கு இலக்கை அடையாளங் கண்டு அதை பொருள் விளக்கம் செய்யப்படுவதை முக்கியமானதாக அழுத்தம் கொடுக்கிறது. மேலும் அந்த இலக்கை அடையக்கூடிய முடிவான நிறைவேற்றுதல் என்ற நடைமுறைக் கொள்கையை அந்த கருத்தொளியில் தீர்மானஞ் செய்கிறது. இந்த அறியப்பட்டதும், அந்த குழுவின் ஒவ்வொரு அங்கத்தினரான நபருக்குச் சொந்தமானதுமான அந்த நீண்டகால புறநோக்கு இலக்கை நோக்கி உரிமை கோருகிறது. அது குறுகிய கால இலக்குகளுக்கும் வேண்டிய தேவையை பூர்த்தி செய்தும் அதைக் கொண்டு நீண்ட கால புறநோக்கு இலக்குக்கு நேராக இட்டுச் செல்கிறது.

இது வரவேற்கத்தக்க திருப்பு முனை மேற்பார்வை சமாளித்தல் என்ற பாணியில் அநேகமான திருச்சபைகள் அவற்றைப் பற்றி முன்னறிந்து கொள்ளாமலே சுவிகாரம் செய்து கொண்டு அவர்களை அந்த இடர்பாடான நிலையிலிருந்து அடுத்த மற்றொன்றுக்கு உள்ளாக்குகிறது.

இது கிறிஸ்தவ ஊழியப் பணியில் ஏற்படக் கூடிய தொழில் சம்பந்தப்பட்ட விபத்தான - ‘‘ஆதிதமான பரலோக மனப்போக்கினால் பிரபஞ்சத்துக்கு எந்த விதமான பயனற்றதோர்’’ நிலையாகிறது. நிர்வாகத் திறமையானது சில சமயங்களில் ஆவிக்குரியதற்கும் தரம் குறைந்ததாக மதிக்கப்பட்டு தங்களை ஆவிக்குரிய பிரமுகர்கள் என்று தங்களைத் தான் கருதிக் கொள்பவர்களால் வெறுத்து ஒதுக்கப்படுகிறது. ஆனால் இது உண்மைக்கு புறம்பானது. தேவன் தாமே நமக்கு ஒரு தேவ தரிசனத்தை அருளிச் செய்திருக்கிறார். அதிலும் நமது தலைமைத்துவ வரங்களில் ஒரு பகுதியை அந்த தரிசனத்தை பிரபஞ்சத்து உண்மையாக அதை நிதரிசனமாக்கி ‘‘உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுவதாக’’ என்ற நிலையை அடைய வேண்டும். அநேகமான மக்களுக்கு இந்த ஆவிக்குரிய கோட்பாடானது துல்லியமற்றதாகவும் அவர்கள் விளையாட்டாக ஆவி என்கிற குறிப்பளவுக்கு போய் விடுகிறார்கள். நமது சமநிலை பெற்ற வாஞ்சையானது இயல்பான ஆவியினாலும், ஆவியின் நிறைவினால் இயல்பானதாகவும் இருக்க வேண்டும். நாம் கொடுக்கக்கூடிய செய்தியாவது தேவன் தமது குமாரனுடைய ரூபத்தில் உலகிற்கு வந்தார். நாம் அந்த பூலோக வெளிப்பாட்டை தேவையுள்ளதாகவும் உண்மையாகவும் அதை ஏற்று செய்து கொள்ள வேண்டும்.

### 11. சமயோசிதமாக.

சமயோசித புத்தியாவது உணர்ச்சி பூர்வமாக மற்றவர்களுடன் விசேஷமான சந்தர்ப்பத்தங்களில் இடைபடுவதாகும். அது சரியான நேரத்தில் தகுந்ததோர் பாணியில் சரியான படியாக சொல்ல வேண்டியதை அறிந்து செயல்படும் கலையாகும். மக்களுடன் அவர்களுக்கு அனாவசியமான தீங்கையோ அல்லது புண்படுத்துதலையே விளைவிக்காமல் இடைபடும் திறமையாகும். மேலும் மிகவும் உக்கிரமான வெடிக்கக்கூடிய சூழ்நிலைமைகளில் அதை தகுந்த அணுகு முறையால் அணுகி அந்த விவாதங்களுக்கு சாமாத்தியமாகவும் கரிசனையான பாணியில் தளர்த்தியாக்கி விடுவதாகும். அது ஒருவருக்கொருவருக்குள்ள உறவுத் தொடர்புகளை ஆளக்கூடிய கலையாக அதற்கு சரியான கலவையான சாந்தமும் உறுதியும் அவசியத் தேவையாகிறது.

### 12. அவதானிக்கை கூர்ந்து கவனித்தல்

வேதாகமத்தில் போதகர் என்பதற்கு ஆன நல்லபதமாவது கண்காணிப்பாளர்கள் அர்த்தமாவது மேற்பார்வை செய்து கவனித்தலாகும். ஆகவே கிறிஸ்தவ தலைவர் அதனால் மிகவும் கூர்ந்து கவனிக்க கூடியவராக இருக்க வேண்டும். ‘‘உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்து

கொள். உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு'' (நீதி 27:23) உன் கவனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய முதல் பகுதி உன்னுடைய சொந்த ஜீவியம், பழக்கவழக்கமும் உன் நடத்தையுமாகும். இரண்டாவது பகுதி உன்னுடைய கூடிவரும் சபையாகும். (ஆடுகளும் மந்தையும்) ஒரு மேய்ப்பனாக உனக்கு எத்தனை ஆடுகள் உன்வசம் இருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆடுகளை நீ நேராக உன் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்க வேண்டும். அவைகளின் நிலைமையை நீ அறிதல் அவசியம். அவர்களுடைய நலனில் ஆவிக்குரிய நலனில் நீ உண்மையாகவும், ஆழ்ந்த கரிசனையும் கொள்ள வேண்டும். நீ அவைகளை பாதுகாக்க வேண்டும். வழி நடத்தி, பாதுகாத்து, போஷித்தல் வேண்டும். நீ இவைகளைப் பற்றிய தற்காலிக நிலைமையை முதலாவதாக அறிந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் மாத்திரமே மேற்கூறியவைகளை அவர்களுக்குள் திறமையாக நடைமுறைப்படுத்த முடியும். நீ இதை சரியான மேற்பார்வை, ஸ்தாபன ஒழுங்கு முறை நிர்வாகம் இவற்றின் மூலமாகவே கண்காணிக்க முடியும்.

**13. ஆதிதமான கவனம் செலுத்துதல்.**

ஒரு நல்ல செயலூக்கமான தலைவர் ஆனவர் மிகுந்த கவனம் செலுத்துகிற நடைமுறை செயலாற்றுபவராக இருக்க வேண்டும். அவர் ஒரு பேரறிஞனை விட, திருமறை நிபுணனை விட, ஒரு தத்துவ அறிஞனை விட சிறந்தவனாக இருக்க வேண்டும். அவன் சுறுசுறுப்புள்ளவனாக பணியாற்றி வேலை செய்து பலாபலன்களைப் பெறுபவனாக இருக்க வேண்டும். Diligent என்பது கவனம், சுறுசுறுப்பான கடின உழைப்புள்ள நீடித்து இருக்கிற என்று அர்த்தம் தரும் வேறு விதமாகச் சொல்வதென்றால் பாடுபட்டு உழைக்கிறவனாகவும் கடின உழைப்பும் ஒரே சீரான முரண்பாடற்றவனாகவும் செயலூக்கமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். ''தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால் அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்'' (நீதி 22:29) நான் திரும்பி வருமளவும் இதைக் கொண்டு வியாபாரம் பண்ணுங்கள். (லூக்கா 19:13) என்று சொன்னான். இந்த வார்த்தையான ''occupy'' என்பது ''வியாபாரம் செய்தல்'' என்று அர்த்தம் கொடுக்கும். இதற்கான கிரேக்க பதமாவது ''pragmatazomai'' அதிலிருந்து ''pragmatic'' என்ற வார்த்தையானது வந்து ''நடைமுறை குறித்த நோக்கத்திலிருந்து காரியங்களை செயல்படுத்துதல்'' என்றாகும். ''ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகை செய்யும். சோம்பேறியோ பகுதி கட்டுவான்'' (நீதி 12:24) ''ஜாக்கிரதையுள்ளவனுடைய பொருளோ அருமையானது''. (நீதி 12:27)

**14. ஆர்வங் கொள்.**

இதற்கான மூல பதம் 'Enthusiasm' என்பதற்கு கிரேக்க பதமாவது En Theos அல்லது (in god) ''தேவனுக்குள்'' என்று பொருள்படும். ஆகையால் கிறிஸ்தவத் தலைவர்கள் மெய்யான ஆர்வக் கிளர்ச்சி கொண்டால் அதைப் பற்றி மனக் குழப்பம் அடைவதோ அல்லது வெட்கப்படவோ ஒரு போதும் அவசியமில்லை. அநேக கிறிஸ்தவ இடர்பாடுகளுள்ள செயல்பாடுகளில் இந்த விதமான போக்கானது வருந்தப்படத்தக்கதாய் குறைவுற்றதாகிறது. என்னவென்றாலும் மிகச் சிறிதளவே இந்த தைரிய முயற்சி இல்லாவிட்டால், சாதனையாக்கப்படும். துர் அதிர்ஷ்டவசமாக அநேகமான கிறிஸ்தவர்களும் குறிப்பாக ஊழியத்திலுள்ளவர்களும் தங்களுடைய ஆர்வக் கிளர்ச்சியின் ஒரு பகுதியான உணர்ச்சிப் பூர்வமான வெளிப்பாட்டையுங் கூட சேர்த்து சந்தேகத்தோடு காண்கின்றனர். அவர்கள் தங்கள் ஜீவியத்திற்காக இன்ப துன்பங்களை நடு நிலையில் இருந்து ஏற்றுக் கொள்கிற மனப்பான்மையைக் கையாளுகிறார்கள். ஆனால் ஆர்வமுள்ள மனப்போக்கை விட மேற்கூறியதையே பயன்படுத்துகிறார்கள். நாம் இந்த இரண்டைப் பற்றியே பயப்படாமல் அவைகளை ஒரு சமநிலையில் கையகப்படுத்தி சரியான பரிமாண அளவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**15. இக்கட்டான சூழ்நிலைமைகளிலும் நம்பிக்கையுடன்.**

தலைமைத்துவமான எந்த விதமான இடர்பாடுகளில் நம்பிக்கையுடையதாய் இருக்க வேண்டும். இந்த இடர்பாடுகள் நம்பிக்கையானது ஜீவியத்தின் நேரிடையான பார்வையையும் சந்தர்ப்பங்களையும் கொண்டது. இந்தப் பார்வையானது எப்பொழுதுமே பிரச்சனைகளை விட ஆகக் கூடிய காரியங்களையே கண்ணோக்கிப் பார்க்கிறது. யோசுவாவும் காலேபும் மிகவும் உயர்ந்ததோர் உன்னதமான இடர்பாடிடை நம்பிக்கைக்கு உரியவர்கள். அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் நேரிடையான அம்சங்களையே தங்கள் நோக்கில் பார்த்தார்கள். ஆனால் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்கள் இராட்சதப் பிறவியான மக்களைப் பற்றிய விழிப்பான சிந்தனையால் மூழ்கடிக்கப்பட்டிருந்தனர்.

விசுவாசமானது எப்பொழுதுமே இடர்பாடிடை நம்பிக்கையாகும். திருச்சபை வளர்ச்சிக்கு இந்த நம்பிக்கையானது கண்டிப்பான நியதியாகும். உன்னிடம் விசுவாசம் இருக்குமானால் நீ இடர்பாடுகளுக்குள்ளாக நம்பிக்கைக் கொண்டவனாய், மேலும் நீ நேரிடையாகவே எதிர்மறையானவற்றின் மேல் ஜெயம் கொள்ளக் கூடும் என்று நம்புவாய். இதற்கான பிரச்சனைகள் அனைத்துமே சந்தர்ப்பங்கங்களாக நிரூபணம் ஆகும். நீ நம்புகிறதாவது, "உனக்காக உன் பக்கம் நிற்பவர்கள் உனக்கு விரோதமாக இருக்கும் சகலரிலும் மகத்தானவர்கள்" என்பதாகும். Optimism என்ற வார்த்தையின் மூலத்தில் ஆன வேரிலிருந்து தோன்றும் வேறு இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன. இவை இரண்டுமே தலைவர்களுக்கு முக்கியமானவைகள் ஆகும். முதல் வார்த்தையான optimisc என்பது காரியங்களை மிக அதிகமாக செயலூக்கமான பயனுக்காக தன்னால் சிறப்பாக செய்ய முடிந்த திறமையைப் பயன்படுத்துவதாகும். இரண்டாவதான optimum என்பது வளர்ச்சிக்கு அவசியமான சிறந்த அனுகூலமான நிபந்தனைகளை அளிப்பதாகும். இடர்பாடிடை நம்பிக்கையாளர் மட்டுமே இந்த விதமான திறன்பாடுகளைப் பிறப்பித்துக் கொள்ள முடியும்.

**16. தூண்டி ஊக்கப்படுத்தி எழுப்பும் வல்லமையுள்ள**

ஒரு செயலூக்கமான தலைவர் தன்னுடைய வார்த்தைகளாலும் முன் மாதிரியாலும் மற்றவர்களைத் தூண்டி ஊக்கப்படுத்தி எழுப்பும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். தூண்டி ஊக்கப்படுத்தி எழுப்புதல் என்பது ஊக்குவிக்கவும் ஆராய்ந்து அறியவும் அவர்களை நோக்கப்படுத்தி செயல்படச் செய்வது என்ற அர்த்தம் தரும். அதன் அர்த்தமாவது மக்களுக்குள் ஆவியை ஊற்றுவதாகும். அவர்களை விழித்தெழச் செய்து புது ஜீவன் பெறச் செய்வதாகும். இதைச் செய்வதற்கு ஒரு தலைவர் தமக்கு தாமே தம்மட்டில் உண்மையாகவே ஊக்குவிக்கப்பட்டால் இந்த தூண்டி ஊக்குவித்தலின் பண்பானது தேவனிடம் இருந்து மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

**நல்லொழுக்கப் பண்புகளுடனும் அதைத் தவிர்த்தும் இருக்க வேண்டிய ஆவியின் வரங்களும் ஆளுமை தன்மையும்**

**வரம் பெற்றதான ஈவுகள்.**

வரங்கள் ஆகியவை நம்மிடமே இருக்கும் திறமைகளும் அதன் திறன்பாடுகளும் ஆகியவற்றுள் சில இயற்கையால் அருளப் பெற்றவை பிற நாம் சம்பாதித்துக் கொண்ட திறன்பாடுகளாகும்.

**A. இயற்கையான திறன்பாடுகள்**

இயற்கையான மனநிலை, உணர்ச்சிகள், இயற்கை பண்புகள் தோற்றம் சப்த ஒலித் தன்மைகள் தனித் தன்மை ஆகியவைகள் மனிததன்மையாகும். இவை நமது ஒப்பற்ற இருத்தலிலும் தனித் தன்மையிலும் ஆன இயற்கை அம்சங்களாகும். சில மக்கள் தங்கள் மரபு பண்பான தனித் தன்மையைப் பெற்றிருப்பதில் மற்றவர்களை விட அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறார்கள். பலருக்கு இயற்கை முகத் தோற்றபாவம் வசீகரமும் கவர்ச்சியான ஆளாக உண்டாக்கி மற்றவர்களால் வியப்புக்குட்பட்டவர்ளாக அனைவராலும் மிகவும் வேண்டப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். மற்றவர்களோ அவர்களை விட அதிர்ஷ்டம் குறைந்தவர்களாக கவர்ச்சிக் குறைவான குணவியல் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்காக ஒருவரும் குறைபட்டுக் கொள்ள வேண்டியதில்லை. ஏனென்றால் தனித்தன்மையானது விருத்தி செய்து விரிவாக்கிக் கொள்ளப் படலாம். சில நபர்கள் ஆரம்பத்தில் குறைந்த தனித்தன்மையை பெற்றிருந்தாலும் வெற்றிகரமாக அதை அபிவிருத்தி செய்து அதீதமான ஆர்வமுடையவர்களாகவும் கவர்ச்சியானவர்களாகவும் ஆகப் பெற்றும் ஆகி விடுகின்றனர். இவ்வாறு கிறிஸ்துவின் ஆவியின் கனியானது நமக்குள் விருத்தியாகும்படி அனுமதிக்கப்பட்டால் நமது தனித்தன்மையும் அழகு செய்யப்பட்டு விரிவடைகிறது. ஒரு நபரை விசாலமாக்கும்படியாகச் செய்வது ஆச்சரியமான கிறிஸ்துவின் வெளிப்பாடு அவர்களில் காணும்பொழுது இதைத் தான் தேவன் அவர்களிடத்தில் சாதனையாக்கிக் கொள்ளும்படி தேடுகிறார்.

மற்ற வரங்களை சிறிது சிறிதாகப் பெற்றுக் கொள்ளலாம். அவைகளை நாம் அழைப்பதாவது:

**B. இயற்கையான அல்லது சம்பாதித்துக் கொண்ட திறன்பாடுகள்.**

இவற்றில் மெய்யறிவு, கற்றுணரப்பட்ட திறன்கள், பிரசங்கிக்கும் திறமைகள், ஆராதனை நடத்தும் திறமை, நிர்வாகத் திறமை, ஸ்தாபன அமைப்புத் திறமைகளும் இதில் உள்ளடங்கி இடம் பெறும்.

இவைகள் அனைத்தும் நாம் கற்றுக் கொண்டும், அப்பியாசித்தும் அதை திறம்பட அபிவிருத்தி செய்தும் தலைமைத்துவமான எந்த விதமானதொரு தகுதி பெற்றும் வருங்கால தலைவராக விளங்கும் தலைமைத்துவத்தை மேலோங்க செய்வதாகும். உம்முடைய தலைமைத்துவத்தை மேலாக்கும் உம்முடைய தலைமைத்துவ திறமைகளை கடினமான படிப்பினாலும் அப்பியாசத்தினாலும் விரிவாக்குவதற்கு நீர் தீர்மானமுள்ளவராக இருக்க வேண்டும். நீவிர் பொறுத்தமான புத்தகங்களைப் படித்தும் தலைமைத்துவ மகா நாடுகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். உம்முடைய அறிவையும் தலைமைத்துவ திறமையை விரிவாக்கும், பலவிதமான விளங்கிக் கொள்ளும் திறமைகளை அதிகரிப்பதற்கு கூடுமானவரை ஒவ்வொறு முயற்சியையும் எடுத்துக் கொள்ள வேண்டும். உங்களது மூத்த தலைவர்களைக் கூர்ந்து கவனித்து அதிலும் குறிப்பாக தங்களது பாத்திர பாகங்களில் வெற்றி பெற்றவர்களை அடையாளங் கண்டு பார்த்தறியவும். அவர்களைப் போலவே அசலாகச் செய்யாமல் அவர்கள் மாதிரியை சமமாகவோ அல்லது அதை விடச் சிறப்பாகவோ பின்பற்றவும். அவர்களுடைய விசுவாசமும், தேவனுக்காக அவர்களுடைய சாதனைகளும் உமக்கு உற்சாகத்தைத் தூண்டும் ஊற்றாயிருப்பதாக. அவர்களை உமக்கு சிறந்த ஆலோசக நடத்துனர்களாக தத்தெடுத்துக் கொண்டு விடவும். (அனுபவமிக்க நம்பகத்தக்க ஆலோசகர்கள்) சில மக்கள் பிறரை விட இயல்பாகவே அதிகமான வரம் பெற்றவர்களாய் இருப்பார்கள். ஆனால் அநேக வரங்களும் திறமைகளும் கடினமான படிப்பின் உழைப்பாலும், ஆயத்தம் செய்வதாலுமே கிடைக்கப் பெற்றவையாகும்.

கிறிஸ்தவத் தலைமைத்துவத்திற்கு தேவையான அநேக விதமான திறன்பாடுகள் படிப்புப் பயிற்சி திட்டங்கள் வேதாகமக் கல்லூரிகளிலோ அல்லது மகாநாடுகளின் வாயிலாகவும் கற்றுக்கொள்ள கூடியதாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த விதமான அநேக ஸ்தாபனங்களில் பாரமான உபதேசமாகவோ, அறிவு சார்ந்ததாகவோ அல்லது கோட்பாடு சார்ந்ததாகவோ அந்த முக்கியமான அழுத்தங்களாக இருக்கக்கூடும். தலைமைத்துவ நடைமுறை விவாதங்கள் சிற்சில சமயங்களில் அவர்களுக்காக காத்திருக்கும் பணிகளாக இருக்கும். மேலும் பல சாத்தியக்கூறு வாய்ந்த தலைவர்கள், சுவிசேஷகர்கள், போதகர்களுங்கூட தங்களுக்கு என்று சந்தர்ப்பம் பெற்று வேதாகமக் கல்லூரியில் பயிற்சி பெறக்கூடிய அனுகூலத்தைக் கூட தவறும்படி விட்டு விடுகிறார்கள். இங்கே நாம் இந்த அடிப்படையான விவாதங்களுக்கும், திறன்பாடுகளுக்குமான சில போதனா முறைகளைத் தரும்படியாக முயற்சித்திருக்கிறோம். அவைகள் செயலூக்கமான கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு இன்றியமையாதவையாகும்.

**மனிதனின் தனித்தன்மை**

மனிதனுடைய தனித்தன்மை என்று சொல்லப்படுகிறதாவது இயற்கையான மனநிலை, ஒழுக்கம், தோற்றம், குரல் வளம் ஆகியவை அனைத்தும் ஒன்றாகக் கலந்து ஒரு நபருடைய ஒப்பற்ற தனித்தன்மையாக அமைப்புப் பொருந்தியதாகும். ஒரு மனிதன் தன்னுடைய உள்ளான தன்மையை வெளிப்படுத்துவதற்கான வழிமுறையாகும். ஒரு மனிதனின் தனிப்பட்ட குணாதிசயங்களையும், தனித்திறன்பாடுகளையும் பிரத்தியட்சமானதும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளக்கூடியதுமானதாகும். ஒரு தனிமனிதனின் ஒட்டுமொத்தமான தனிப்பட்ட சிறப்பியல்புகளாக வெளிப்பாடுடையவைகளாக, மேலும் இது ஒன்று தான் ஒரு மனிதனை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியதாகும்.

ஒரு மனிதனுடைய தனிச் சிறப்பியல்புகளை மாத்திரம் ஒழுக்கத்தை சொல்பொருள் விளக்கம் செய்வதைப் போல எளிதானதொன்றல்ல. இதில் அடிக்கடி வரையறுத்து வருணிக்கக் கூடாத சில அம்சங்களையும் உடையதாகும். இது பல மார்க்கங்களின் வழியாக செய்தித் தொடர்பு தரக் கூடும். மேலும் வரம்புக்கு மீறிய முக்கியத்துவம் வாய்ந்த செய்தித் தொடர்பு திறன்பாட்டின் அங்கமாகும். அதுவும் குறிப்பாக வாய் மொழி செய்தித் தொடர்பு கொள்வதிலாகும். ஒரு எழுச்சியூட்டும் தனித் தன்மையாளர் ஒரு சலிப்பைத் தரும் பிரசங்கத்திற்கும், ஆனந்த எழுச்சியூட்டும் செய்திக்கும் (தூது) உள்ள வித்தியாசமானதாக இருப்பார். பிறர் கவனத்தை தன் பால் ஈர்த்துக் கொள்ளும் தனித் தன்மையாளர், சபையினரின் கவனத்தை நிலைபெறச் செய்து அச்சமயத்திலே தான் அந்த மக்களுக்கு ஆவிக்குரிய சத்தியத்தையும் வழங்கி போஷிப்பார். ஆனால் ஒரு நேர்மையான பிரசங்கியார் தனித்தன்மை பண்புகளில் குறைபாடு உடையவராக இருந்தால் தன் சபையின் கவனத்தை அவர்களுடன் இழந்து விடக் கூடும். இதற்கு மாறாக பரிசுத்தம் பெற்ற தனித் தன்மையாளர், நகைச் சுவையுடையவராக எழுச்சி மிக்கதான முறையில் சொல் தொடர்பு கொள்ளும்

திறமையுடையவரானால் அந்த கூடிவரும் சபையினரை கவர்ந்திழுத்துக் கொண்டு அவர்களை ஆனந்தக் களிப்படைந்தவர்களாக ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிக்கும் பொழுது அவர்களை தன் பிடிக்குள் வைத்துக் கொள்ள முடியும்.

எந்த விதமான ஐயப்பாடுக்கும் இடம் இன்றி இயேசு வசீகரமும் கவர்ந்திழுத்துக் கொள்ளும் தனி நபராக இருந்தார். அவர் தம்மைக் கவனித்து கேட்பவர்களுக்கு எழுச்சியூட்டும் ஆனந்த களிப்புத் தரக்கூடிய வழியில் தாம் சொல் வழியாகத் தொடர்பு கொள்ளும் பொழுது தம்மை தனிப்பட்டதோர் கவர்ச்சி மிகுந்த தனிப் பண்பாளாராக சாட்சியாக தம்மை வெளிப்படுத்திக் கொண்டார். அவர்கள் மணிக்கணக்காக உட்கார்ந்து அவருடைய உபதேசத்தைக் கவனித்துக் கேட்டார்கள். உணவையும் ஏன் இந்த பிரபஞ்சத்துக்குரியவைகளைக் கூட மறந்து விட்டார்கள். அவர் உபதேசிப்பதைக் கேட்பதற்காக பல கல் தூரம் நடந்தே சென்றனர். அவர் ஆச்சரியம் மிகுந்த உவமைகளையும், திருஷ்டாந்தங்களையும் உபயோகித்தார். அவருடைய பிரசங்கங்களில் மனித சம்பந்தமான கவர்ச்சியுள்ள கதைகளாலும் நிரம்பப் பெற்றிருந்தது.

உம்முடைய தனித்தன்மையானது உமக்கு கிடைத்த மனுஷீகமான முதலீடாகும். அதைப் படித்துப் புரிந்து கொள்ளவும். அதை விரிவாக்கி பயன்படுத்துக. ஆனாலும் ‘உன்னிலுள்ள கிறிஸ்துவே’ ஒப்புயர்வற்ற உன்னதமான முதலீடு என்பதை எப்பொழுதும் நினைவூட்டப் படுவதாக.

ஒரு தலைவராக கவர்ச்சி மிகுந்த தன்பால் கவர்ந்திழுத்துக் கொள்ளும் தனித் தன்மையானது உமக்கு முக்கியமானதொரு முதலீடாகும். இது நீர் ஒரு பிரசங்கியாராக இருந்தாலும் பொருத்தமுடையதுதான். என்னவென்றாலும் அதை தேவனுக்கு ஒப்படைப்புச் செய்ய வேண்டும். மேலும் அதை அவருக்குப் பிரியமானதோர் வடிவத்தில் உயிர்த்தெழுந்து செய்யும் படி அவரை அனுமதிக்க வேண்டும். ஆனால் நான் என்ற அகந்தையான தனித் தன்மையானது (தன்னையே மையமாகக் கொண்டு பெருமை, பிடிவாதத்தால் நிறைந்ததொன்று) பரிசுத்தமாக்கப்பட்டத் தனித்தன்மையானது ஆசீர்வதிக்கப் பெற்றதால் இந்த முன்னைய அகந்தையான தனித்தன்மை பிரச்சனைக்குரியதாகும்.

# அதிகாரம் 5 - தலைமைத்துவத்தின் விலையை கணக்கிட்டுக் கொள்ளுதல்

“நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?” (மத் 20:22) “உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகம் உண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ் செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?” (லூக்கா 14:28) பயன்படக்கூடிய ஏதோன்றையும் செய்வதற்கு என்று ஒரு பெருமதியான விலையைச் செலுத்த வேண்டும். அது போலவே கிறிஸ்தவ தலைமைத்துவமும் அதற்கு விதி விலக்கல்ல. ஆகவே நாம் இயேசுவானவருடைய ஆலோசனைக்குக் கீழ்படிய வேண்டும். “உட்கார்ந்து செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும்.” நாம் தலைமைத்துவம் உடையவருக்கென்று கொடுக்கும் பெருமதியான விலையை செலுத்துவதற்கு வசதியுள்ளவர்களாகவும், விருப்ப சித்தமுடையவர்களாகவும் இருக்கிறோமா? என்று பார்க்க வேண்டும். இங்கே இதற்கான பெருமதியான விலைகள் சில இருக்கின்றன.

**இதற்கான பெருமதியான விலைகள் சில இருக்கின்றன.**

**1. தேவனுடைய ஊழியம் பணிக்கான பொறுப்பு**

தலைமைத்துவத்திற்காகத் தேவனுடைய பிள்ளைகள் மகா உன்னதமானதோர் பரிசுத்த அழைப்பான சிறந்த பொறுப்பாகும். இந்த விதமான பொறுப்பை எப்பொழுதுமே எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும் பொறுப்புள்ளவர்கள். ஏனென்றால் மக்கள் அடிக்கடி தேவனை அவருடைய மக்களுடைய நடத்தையைக் கொண்டும் குறிப்பாக தலைமைத்துவ பங்கில் உள்ளவர்களின் போக்கை வைத்து மதிப்பீடு செய்வார்கள்.

**2. உயர்ந்த எதிர்பார்ப்புகள்**

தேவன் தமது ஊழியக்காரர்களைக் குறித்து உயர்ந்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார். நம்முடைய தலைமைத்துவத்தின் கீழ் உள்ள மக்களும் பொது ஜனமும் பொதுவாக எதிர்பார்ப்புகளை உடையவர்கள். நமக்கும் கிறிஸ்தவத் தலைவர்களாக உயர்ந்த எதிர்பார்ப்புகள் நம்மை பற்றியே நமக்கும் இருக்கிறது.

**3. தலைமைத்துவத்தின் பாரம்**

இதன் பாரமாவது மிகுந்த கனமான பொறுப்பு என்ற சுமையாகும். கர்த்தருடைய வசனத்தைப் போதித்தல் என்பது மிகவும் கனமான பாரமாகிய பொறுப்பாகும். தேவனுடைய ஜனங்களுக்காக அவர்களின் பாதுகாப்புக்காக பொறுப்புள்ளவர்களாதல் பெரிய பாரச் சுமையாக இருக்கக்கூடும். மோசே தலைமைத்துவ பொறுப்பான கனத்த பார சுமையை சுமந்து சென்றான். அதற்காக மூப்பர்கள் அந்த சுமையைப் பகிர்ந்து கொள்ளும்படி ஆலோசனையாக எத்திரோ மோசேயிடம் கூறினான். (யாத் 18:2) இயேசுவும் நமது சுமைகளை இலகுவாக்கக் கூடிய சில இரகசியங்களைத் தம்மிடமிருந்து கற்றுக் கொள்ளும்படி நம்மை உற்சாகப்படுத்தினார். (மத் 11:28-30)

**4. தலைமைத்துவத்தின் ஏகாந்த நிலைமை**

எந்த நிறுவனத்திலும் உயர்ந்த ஸ்தானமான பதவியைப் பற்றிக் குறித்தான ஏகாந்தம் எப்பொழுதும் இருக்கக் கூடியதாகும். சில சமயங்களில் எப்பொழுதுமே பிறருடன் பகிர்ந்துக் கொள்ளத் தகுதியற்ற கரிசனைகள் அடிக்கடி வரும். மற்ற ஜனங்கள் மிகவும் நம்பகத்தக்க காரியங்களை அந்தரங்கமாக பகிர்ந்து கொள்வார்கள். அந்த நம்பகத் தன்மையுடைய கரிசனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாது.

**5. தலைமைத்துவத்தின் அழுத்தமும் சோர்வும்**

மிகவும் கருத்தூன்றிய பொறுப்புகள், கனமான வேலைப் பளு, அவசரப் படுத்தும் காரியங்கள் ஆகியவை அடிக்கடி அழுத்தத்தையும், மனச் சோர்வையும், கடுமையான மனத் தாக்குதலையும் ஒரு தலைமைத்துவம் உடையவருக்கு கொடுக்கக் கூடும். ஒரு தலைவர் தனக்காக ஓய்வு எடுத்துக் கொள்ளவும். தலைமைத்துவ அழுத்தங்களிலிருந்து ஒரு சிறிது இடைவெளி எடுத்துக் கொள்வது என்பதை கற்றுக் கொள்ளுதல் அவசியமாகும். இயேசுவும் இதையே பல சமயங்களில் மேற்கொண்டார். அவருக்கே அப்படி செய்வது அவசியமென்றால் நமக்கும் எவ்வளவு அதிகமாக அவசியமாகும்.

## 6. விமரிசனத்தைக் கையாளுவதைக் கற்றுக் கொள்ளுதல்

ஒரு இலட்சியமான அமைப்பில் விமரிசனம் இருக்கக்கூடாது. ஆனால் வாழ்க்கையின் நிஜமாக அது இருக்கவே இருக்கிறது. ஒவ்வொரு தலைவரும் அதை எவ்வாறு சமாளிப்பது என்று படித்துக் கொள்வது தேவையாகும். அல்லாவிட்டால் அது அவரை அதைரியமடையச் செய்து அழித்து விடும். அதிகமான குற்றங்குறை காணுதல் அதற்கான தகுந்த தீர்ப்புகளைச் செய்ய சற்றும் யோக்கியதாம்சம் பெறாத மக்களிடமிருந்து வருகிறது. நான் இதற்காக கேள்வி என்னையே கேட்டுக் கொள்வதே உதவியாக இருக்கும் என்று எப்பொழுதும் கண்டு பிடித்திருக்கிறேன். இந்த நபர் இந்த விதமான விமரிசனம் செய்வதற்கு என்ன தகுதி பெற்றிருக்கிறார்? என்ற வினாவைத் தான். அந்த நபர் அந்த விஷயத்தைப் பற்றிய அறிவையோ, அவர்கள் விமரிசனம் செய்யும் காரியங்களைப் பற்றிய அனுபவத்தையோ பெற்றிருக்கவில்லை என்று நான் உணருவேனாகில் நான் அவர்கள் செய்யும் தீர்ப்பை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உணருவேன். என்னவென்றாலும் அனுபவமும் அறிவும் பெற்ற யாராவது ஒருவர் அவர்கள் எதைப் பற்றி பேசுகிறார்களோ அதை நன்கு அறிந்திருக்கிறார்கள் என்று நிருபிப்பார்களானால், நான் அதைக் கவனித்துக் கேட்டு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை மதிப்பீடு செய்வேன்.

## 7. சோதனைகளை மேற்கொள்ளுதல்

வேதாகமத்திலுள்ள சிறந்த கதா பாத்திரங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களை அடிக்கடி சோதனைகளுக்கு இலக்காகிறார்கள் என்று நீருபிக்கிறது. அதற்காக நாம் விதிவிலக்கு பெற்றவர்கள் என்று முன் யோசனையாக எடுக்கக் கூடாது. ஆகவே வேதாகமம் சொல்கிறது, ''தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்.'' (I கொரி 10:12)

கிறிஸ்தவ தலைவர்கள் சத்துருவுடைய விசேஷமான இலக்காகிறார்கள். சாத்தான் மேய்ப்பனை அடிக்கக் கூடுமானால் ஆடுகள் சிதறடிக்கப்படக் கூடும். இந்த சாத்தான் ஒரு தலைவனுடைய வீழ்ச்சியைக் கொண்டு வரக் கூடுமானால் மக்களுடைய ஒழுங்குணர்வு நாசமாக்கக் கூடியவாறு பாதிக்கப்படும். ஒவ்வொரு தலைவரும் எச்சரிக்கையான கவனமான காவல் உணர்வுடனும் எப்பொழுதும் விழிப்பாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் ''நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான்.'' (I பேதுரு 5:8)

## 8. உன்னுடைய உத்தமத்தை நிலைநிறுத்துதல்

உத்தமம் என்பது ஒழுக்க சுத்தம், உண்மை, ஒழுக்கத்தின் மேம்பாடான உன்னத நிலையாகும். அது உன்னுடைய நல்ல, ஒரே சீரான, நம்பகத் தன்மையையும் நற்பெயரையும் குறித்துக் காட்டுகிறது. இந்த உத்தமம் integrity என்ற பதத்தின் மூல வேரான (integer) என்பது பூரணத்துவத்தையும் நம்பகத் தன்மையையும் குறிக்கிறது. ஒழுக்கம் என்பதன் சம்பந்தமாக அது வாய்மை, பண்பு, ஒழுக்க நம்பகத்தன்மை, கௌரவமான நேர்மையுடைமை, குறிக்கோள் என்பதையும் உள்ளடக்கும். இது கிறிஸ்தவ தலைவருக்கு பல வழிகளில் மிகவும் முக்கியமானதாகும். முதலாவதாக தேவனுக்கு முன்பாக அந்த தலைவர் தமது உத்தமத்தை நிலை நிறுத்துதல் முக்கியமானதாகும். அதாவது அவர் உள்ளும் புறமும் தேவனோடு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும். இரண்டாவதாக அவர் மக்களுக்காகவும் தேவனுடைய வேலைக்காகவும் உத்தமானதோர் நபராக இருத்தல் வேண்டும். ஜனங்கள் தங்களுடைய தலைவரை தாங்கள் நம்பக்கூடிய ஒருவர் என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இதை விட மிகவும் முக்கியமான விஷயம் யாதெனில் அந்தத் தலைவர் தனது சொந்த பெயர் பிழைபடாது இருக்க உத்தமத்தைக் கடை பிடிக்க வேண்டும். ஏனெனில் அந்தத் தலைவர் மெய்யான உத்தமத்தில் குறைபாடு உடையவரானால் அவர் தன்னோடு தானே ஜீவிக்க முடியாதவர் ஆகி விடுவார்.

## 9. தலைவருடைய குடும்பத்தின் மேல் உண்டாகும் அழுத்தம்

தலைமைத்துவத்தின் அழுத்தங்கள் தலைவர் மேல் மட்டும் தனிப்பட்ட முறையில் விழுவதில்லை. அது அவருடைய மனைவியையும் குடும்பத்தையுங் கூட பாதிக்கும். அதற்காக அவர்களுக்குங்கூட இந்த தாக்கம் எப்பொழுதும் வரலாம். தலைமைத்துவ அழுத்தங்களில் இருந்தும் கொஞ்சம் இடைப்பட்ட ஓய்வு தேவையானதாகும். போதகருடைய பிள்ளைகள் விரும்பக் கூடாத பல அழுத்தங்களைச் சமாளிக்க வேண்டியதிருக்கும். ஏனென்றால் மக்கள் அவர்களிடமிருந்து மிகுந்த எதிர்பார்ப்பை நோக்கி நிற்பார்கள். காரணமாவது அவர்களுடைய பெற்றோர்களும் அவர்களாக இருப்பது தான்.

அவர்களுக்குச் சகாயமும் உற்சாகமும் இதைச் சமாளிக்க அவசியமாகும். அவர்கள் தங்கள் பங்கிற்காக சில நஷ்டயீடுகளையும் நன்மைகளையும் அனுமதித்து மகிழ்வது தேவையாகும்.

இந்த விவாதத்தின் முக்கியத்துவத்தை தலைவர் கண்டறிந்து கொள்வது சிறப்பாகும். இந்த சவாலின் மெய்யான நிலைமையைப் பற்றி விசாரிக்க சில நேரடியான நடவடிக்கைகளை எடுக்கிறார். அவர் தமது குடும்பத்தின் பங்கை அவர்கள் பெற்றிருக்கும் ஆசீர்வாதங்களுடனும் நன்மைகளுடனும் மேலும் பொறுப்புகளுடனும் சேர்த்து சமநிலைப்படுத்தவும் அவர் நேரடியாகப் பிரயாசம் எடுத்துக் கொள்கிறது அவசியமாகும். அவர்களுடைய பதவி ஸ்தானத்தை முன்னிட்டு அவர்கள் மகிழ்ந்தனுபவிக்கக் கூடிய சலுகைகளுடன் அந்தப் பதவிக்குரிய பொறுப்புகள் அனைத்தையுமே சுமந்தே ஆக வேண்டும்.

# அதிகாரம் 6 - தலைமைத்துவத்தின் சில முக்கியமான அம்சங்கள்

**ஒரு செயலூக்கமான தலைவருக்குத் தேவையானது:**

**1. தான் போகும் திசையைப் பற்றியதோர் தெளிவான அறிவு (அ) உணர்வு**
''தீர்க்க தரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப் போவார்கள்.'' (நீதி 29:18) ஒரு செயலூக்கமான தலைவராக இருக்க வேண்டுமென்றால் ஜீவியத்தில் எங்கே போய் கொண்டிருக்கிறீர் என்ற பொது கருத்து உமக்கு இருக்க வேண்டும். நீவிர் எங்கே நோக்கிப் போய் கொண்டிருக்கிறீர் என்பதை அறிந்திருக்க வில்லை என்றால் எப்படி மற்றவர்களை வழிகாட்டி நடத்தி முன் செல்ல முடியும்?

**<u>இதற்கென்று ''ஒரு தரிசனம்'' இருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது:</u>**

**A: தேவனால் அளிக்கப்பட்டதான**
செயலூக்கமான கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் ஒருவருடைய சொந்த தரிசனம் நிறைவு பெறுவது மட்டும் சம்பந்தப்படாமல் தேவனால் அளிக்கப்பட்ட தரிசனமே நிறைவுறுதல் பெற வேண்டும். இதன் எண்ணமாவது புதிதாக ஒரு தரிசனத்தைத் தோற்றுவிப்பதல்ல. தேவனுடைய இருதயத்திலிருந்து வரும் தரிசனத்தை மட்டுமே நிறைவுறச் செய்தலாகும்.

**B: ஆவிக்குரியதான**
இதற்கான தரிசனம் பரிசுத்த ஆவியானவரால் தரப்படுகிறது. ஆகவே அது ஒரு ஆவிக்குரிய தரிசனமாகும். நான் அமானுஷ்யமானதோர் விதமான தரிசனத்தைப் பற்றி அதாவது வேதாகமத்தில் அடிக்கடி அனுபவித்ததொன்றைப் பற்றி குறிப்பிட வில்லை. ஆவிக்குரிய தரிசனம் என்னவென்பதை உம்முடைய உள்ளத்தில் தோன்றும் மனோ ரீதியான அல்லது ஆவிக்குரியதோர் படக் காட்சியை, பரிசுத்த ஆவியானவரால் உமது உள்ளத்தில் ஜெநிப்பிக்கப்பட்ட தரிசனத்தை பற்றியே அர்த்தம் கற்பிக்கிறேன். ஒரு ஆவிக்குரிய காட்சி படம் அல்லது என்ன நிகழப் போகிறதென்பதைப் பற்றிய விழிப்புணர்வாகும். நமது கடமைப் பணியாவது அந்த தரிசனத்தை வியாக்கியானம் செய்து அதை நேரிடப் பண்ணுவதுதான். ''தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதைப் போல் பூமியிலும் செய்யப்பட வேண்டும்'' என்பதை தரிசனமாகக் காண்பது தானாகும்.

**C: குறிப்பிடப்பட்டதொரு**
அந்த தரிசனம் ஆரம்பத்தில் ஆவிக்குரிய தன்மையுடையதாய் இருந்தாலும் அது தெளிவற்றதும், முற்றுப் பெறாததும் அல்ல. நாம் ஜெபத்திலும் தியானத்திலும் தேவனுக்காக காத்துக் கொண்டிருக்கும் பொழுது அவர் குறிப்பிடும் விவரங்களை நாம் அவருக்காக நிறைவேற்ற வேண்டும் என்று அவர் வாஞ்சிப்பதை நமக்கு வெளிப்படுத்தி தெரியப்படுத்துவார். இதற்கான நேர்த்தியான உதாரணம் ''மோசேயும் ஆசரிப்புக் கூடாராம்'' என்பது பற்றியதைத் தான் குறிப்பிடலாம். தேவன் மோசேயுடன் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றியும் அவன் அதை ஸ்தாபனம் பண்ண வேண்டும் என்றும் பேச ஆரம்பித்த பொழுது அந்த இடத்தைப் பற்றிய தரிசனம் மோசேயின் இருதயத்தை ஆக்ரமித்துக் கொண்டது. அவன் தொடர்ந்து நாற்பது நாட்களாக இரவும் பகலும் தேவனுடன் அந்த மலையில் வசித்து வந்தான். அந்த சமயத்தில் தானே தேவன் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய ஒவ்வொரு முழு விவரங்களையும் அதன் ஆசன அலங்காரங்களையும் அதற்குரியதான பணிகளையும் பற்றிக் கூறினார். (யாத் 24:18; 40:36)

தேவனிடமிருந்து ஒரு பொதுக் கருத்தைப் பெற்றுக் கொள்வோமானால் அதை அவர் முன் ஜெபத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த தரிசனத்தைப் பற்றி ஜெபத்துடன் தியானம் செய்து ஆண்டவரிடம் நீண்டகாலம் நாம் தரித்திருந்து காத்திருப்போமானால் அது தெளிவாகவும், அதிகமான குறிப்பிடப்பட்டதாகவும் அது ஆகிவிடும். நாம் தேவனுடைய சமூகத்தில் கவனத்துடன் காத்திருப்போமானால் அவர் நமக்காக அதற்குத் தேவையான குறிப்பிடும் விவரங்களை சீனாய் மலையின் மேல் மோசேக்கு தெரியப்படுத்தினதுப் போல நமக்கும் வெளிப்படுத்தித் தெரிவிப்பார். தலைவர்களாகிய நமக்கு தேவனுடைய குரலை மிகத் தெளிவான வகையில் நாம் கேட்டு அறிந்து தெரிந்து கொள்வது இன்றியமையாததாக ஆகும். தேவன் நம்மால் நிறைவேற்றப்படும் படி விரும்புவதைப் பற்றித் தெளிவற்ற முடிவு பெறாத கருத்துக்களை பெற்றுக் கொள்வது

போதுமானதாகாது. நமது ஆவியில் அவர் காட்டும் திசையை தெளிவாகப் பதிவு செய்து கொண்டு நாம் மிகவும் தெளிவாகவும் முழு விவரத்துடனும் அவர் நம்மால் நிறைவேற்றும்படியாக நமக்காக அவர் திட்டமிட்டிருக்கிறதைத் தெரிந்திருத்தல் அவசியமாகும்.

ஆரம்பத்தில் மோசேக்கு அவன் என்ன செய்யும்படி தேவன் வாஞ்சிக்கிறார் என்பதைப் பற்றிய விரிவான கருத்தை மாத்திரம் பெற்றிருந்தான். தேவன் அவனை இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலை வீரனாகத் தன்னை ஆயத்தம் செய்வதாக உணர்ந்தான். எகிப்திய எஜமானர்களால் அவர்களுக்கு நேரிட்ட இடுக்கண்களாலும் அநீதியால் படும் துன்பத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை கொண்டு வர வேண்டும் என்பதையும் யூகித்தான். அதன் விளைவுகளாக அதைத் தன் சொந்த பலத்தினால் நிறைவேற்ற முயற்சியை ஆரம்பித்தான். ஆனால் அவனால் சாதித்தது எகிப்தியனாக கொலை செய்தது மட்டும் தான். பின்னர் அவன் ஒரு அகதியாக நாட்டை விட்டே ஓடிப் போக வேண்டியிருந்தது. என்னவென்றாலும் அது தான் அந்த ''பாலைவன வனாந்தரத்தின் பின்பக்கம்'' ஆகும். அடைக்கலமாக அங்கே மோசே ஓடி வந்ததும் அங்கே மோசே தேவனைப் பற்றி ஆழமானதோர் பெரிய விரிவான அளவிலே அவரை அறிந்து கொண்டதுடன், தேவன் அவனை என்ன செய்யும்படி விரும்புகிறார் என்பதையும் மிகவும் தெளிவாகக் கண்டறிந்து கொண்டான். இதன் பிறகு மோசே மிகவும் அதிகமானதும் சீரானதுமான உறவுத் தொடர்பை தேவனுடன் உண்டாக்கிக் கொண்டான். அத்தகையதோர் உறவுத் தொடர்பில் அவனும் கர்த்தரும் செய்தி தொடர்புக்கான பரிமாற்ற கோடுகளை ஸ்தாபித்துக் கொண்டு அதன் மூலமாக தேவன் தமது மனதை அவனுடன் பகிர்ந்து கொண்டு மோசேக்காக அவர் திட்டம் பண்ணிய நேர்த்தியான விவரங்களை அவனுக்குப் புலப்படுத்தினார்.

நாம் மெய்யாகவே தேவனைக் கிட்டிச் சேர்ந்து உற்சாகப்படுத்தப் படும்படியாக தேவன் சில சமயங்களில் நம்மை இடுக்கண்களுக்குள்ளாகவும் பாலைவனம் போன்ற சோதனைகளுக்குள்ளாகவும் போகும்படி அனுமதிக்கிறார். இதுவும் ஓர் வரம்பு கடந்த எல்லை மீறிய இடத்தில் சிற்சில சமயங்களில் நேரிடுகிறது. நாம் அந்த முனையால் அடிக்கப்பட்ட கயிற்றின் நுனியை அடையும் பொழுது நமது சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தேவன் நம்மோடு நடந்து கடந்து வந்து அடி எடுத்து வைத்து நம்மிடம் வருகிறார். ஏனென்றால் நாம் அவரைத் தேட ஆரம்பித்து ஒரு விசுவாசமான முழு மனதுடன் அவரை நோக்கிக் கூப்பிட ஆரம்பிக்கிறோம். நாம் நம்மை சோதனையான சூழ்நிலைமையில் கண்டு கொள்ளும் பொழுது தேவன் மெய்யாகவே நமது கவனத்தைப் பெற்றுக் கொண்டு அந்த சூழ்நிலைமைக்கென்று எந்த விதமான மனுஷீகமான தீர்வும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நம்மோடு இடைபடுகிறார். எத்தனையோ தேவனுடைய ஊழியக்காரர்கள் சோதனையான காலத்தையும் மனுஷீகமான கூடாத நிலைமையிலுமே தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது தங்கள் ஜீவியத்திற்கான தேவனுடைய அழைப்பைப் பெற்றும் எப்படி ஊழியத்தில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதை அறிந்து கொள்வது உற்சாகத்தைக் கொடுக்கும். அந்த விதமான எல்லை மீறியதோர் இடத்தை அடையும்படி தேவன் அனுமதிக்கும் பொழுது அதற்காக விசாரமடையாதே. உன்னுடைய பாலைவன வானாந்திர அனுபவத்தில் தேவன் உன்னுடனே கூட இருக்கிறார். இந்த விதமான இடுக்கண் நிறைந்த காலத்தில் அதன் ஊடே உன்னை நடத்திக் கொண்டு வர வல்லவராயிருக்கிறார். அந்த சூழ்நிலைமையில் நீ உயிர் தப்பி மீண்டு வாழ்வதுடன் தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தில் உன்னைக் கொண்டு வந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதன் ஊடாக நீ வளம் பெற்று அதிகமானதோர் தகுதியுள்ள ஆயத்தமுள்ளவனாக உன்னை மீட்டுக் கொண்டு திரும்பவும் கொண்டு வருகிறார். தேவன் தாமே இத்தகைய அற்புதமான காரியங்களை அநேக சமயங்களில் செய்திருக்கிறார். அதையே மறுபடியும் அவரால் நிறைவேற்றக் கூடும்.

### D. அளவிடப்படக்கூடியவை

தேவன் மோசேக்கு அருளிச் செய்த விவரங்களில் குறிப்பிட்ட அளவைகளும் கனமான நிறுவையளவைகளும் அடங்கும். அந்த திட்டம் முழுமையாக திட்டவட்டமாக அளக்கப்பட்டு, மதிப்பிடப்பட்டு, விலை மதிப்பும் பெற்றுக் கணக்கேற்றப்படும். இதே மாதிரியான நடவடிக்கைகளிலும் அந்த தீர்க்கதரிசனத் திட்டமானது தேவனால் வளர்ச்சியை கொடுக்கப்பட்டும், விரிவாக்கம் பெற்றும் அதை அளவிடப்படக் கூடுமானாதாகவும் அது நிறைவேற்றப்படுதலையும் கூட கண்காணிக்க முடியும். சில சமயங்களில் தேவனுடைய திட்டங்கள் எப்படிப்பட்ட ஆச்சரியமான விவரங்கள் பெற்றதாயும் அதன் மிகச் சிறிய நுட்பமான விவரங்கள் வரைக்கும் நிறைவேறுதலைக் காணும்பொழுது அது அளவு மீறிய எழுச்சியை உண்டாக்குவதாய் இருக்கும்.

**E: அதற்கென்று விசுவாசமாகிய காரணி இருக்க வேண்டும். (ரோமர் 12:3)**
தேவன் அருளிச் செய்யும் ஒவ்வொரு தரிசனத்திலும் அதன் உள்ளே விசுவாசமாகிய காரணி கட்டி அமைக்கப்பட்டதாக இருக்கும். ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்'' (எபி 11:6) அதனால் அந்த தரிசனம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் உன்னுடைய விசுவாசம் கிரியை செய்வது அவசியத் தேவையாகிறது. அது நிறைவேற்றப்படுதலுக்காக நாம் கிரியை செய்யும் பொழுது தேவன் உன்னுடைய விசுவாசத்தை விரிவாக்கி அதை அதிகரிக்கச் செய்வார். இந்த விசுவாசமாகிய காரணியாவது அந்தத் திட்டத்தின் ஒவ்வொரு பகுதியும் நிறைவேற்றப்படுவதற்காக இந்த காரணியான விசுவாசமானது கிரியை செய்யும்படி வேண்டுகோள் விடுக்கும். மேலும் இதில் எப்பொழுதுமே தோல்வியைச் சந்திக்கக் கூடுமான நிலைமை ஏற்படக் கூடும் என்பது விசுவாசமில்லாமல் அந்த ஊழியமானது செய்யப்படாவிட்டால் அப்படி நேரிடுகிறது என்று அர்த்தம் சொல்வது மிகையாகாது. நம்முடைய பலத்தினால் மட்டுமே தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றுவது என்பது கஷ்டமானதாக மாத்திரம் அல்ல - அது முடியவே முடியாத காரியமாகும்!

<u>இவ்வாறு உன்னுடைய தரிசனத்தை நிதானிக்க வேண்டியது அவசியம்:</u>

# <u>ஜெபத்துடன்.</u>
நாம் தேவனுக்காக எப்பொழுதும் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் ஜெபத்துடன் துவங்கப்பட வேண்டும். அது அதன் விருத்திக்கும் நிறைவேறுதலுக்கும் ஜெபத்தையே சார்ந்திருக்கிறது. தேவன் உன்னுடன் உன் இருதயத்தோடு பேச வேண்டும் என்று விரும்பினாலும் அவர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றாலும் அச்சமயம் அவரை ஜெபத்தில் தேடும்படியாக தீர்மானித்துக் கொள்க. தேவனோடு நீ சாதாரணமாகப் பேசுவது மட்டும் ஜெபம் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். அந்த ஜெபத்தின் பிரத்தியேகமான அம்சம் என்னவென்றால் தேவன் உன்னோடு பேசுவது தான் அதி முக்கியமான காரியமாகும். வேதாகமத்து ஒவ்வொரு கதா பாத்திரமும் அவர்கள் தேவனுக்காக எதையாவது சாதித்திருப்பார்கள் என்றால் அந்த ஜெப ஸ்தானத்திலும் ஆவிக்குரிய ஐக்கியமான அந்நியயோந்நியத்திலும் அந்த திட்டத்தை பெற்றவர்களாக இருப்பார்கள். தேவனுக்காக எதாவது ஒன்றை நிறைவேற்றுபவர் இன்று அவர் ஒரு ஜெப வீரனாக (ஜெபிக்கும் மனிதனாக) இருத்தல் அவசியமாகிறது.

# <u>பொறுமையுடன்.</u>
கர்த்தருடைய பாரமானது ஒரு நபருக்கு அவருடைய ஓய்வு நேரங்களில் அறிவிக்கப்படுவதில்லை. அது அதன் முழுமையான வடிவத்தில் அவர்கள் பொறுமையுடன் அவருக்கு முன்பாக சமுகத்தில் காத்திருக்கும் பொழுது வெளிப்படுத்தப்படுகிறது. மோசே சீனாய் மலையில் தேவனோடு நாற்பது நாட்கள் பகலும் இரவும் செலவழித்தான். அந்த நேரம் முழுவதுமாக அதன் வழியில் தேவன் பொறுமையுடனும் நீண்ட நேரமாக மோசேயுடன் அவர் ஏற்படுத்திய திட்டத்தை அவன் நிறைவேற்றும் படியாக ஒவ்வொரு சிறிய விவர நுட்பத்தையும் அவனுக்கு அருளிச் செய்தார்.

# <u>நேரடியாகவோ எதிர்மறையாகவோ அல்ல.</u>
நாம் தேவனுடன் காத்திருந்து அவருடைய சித்தம் வெளிப்படுத்தப்படும் படியாக தரித்திருந்தாலும் நாம் அப்படி செய்வது நமது இருதயம் சிந்தனையின் நேரடியான மனப்பான்மையுடன் காத்திருப்பது அத்தியாவசியமாகும். தேவன் தமது சித்தத்தை விசுவாசமுள்ள ஜனத்திற்கு மட்டுமே திரை அகற்றி வெளிப்படுத்துவார். சாதாரணமான மனிதனின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட காரியங்களை வெளிப்படுத்துவார். இதற்கு நேரிடையான விசுவாசமானதோர் மனப்பான்மை பெற்றுக் கொள்வதானது அவசியமாகத் தேவைப்படும். அவர் வெளிப்படுத்துகிற காரியங்களுக்காக நாம் நேரடியான மனப்பான்மை நோக்கத்தை கிரியை செய்யுமாறு கைக் கொள்ளும் பொழுது மாத்திரமே நாம் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமான தேவனுடைய நோக்கம் நிறைவேறும் பொழுது அங்கு போய் சேர முடியும். தேவனுடைய நேரத்தை வீணாக்காதே அல்லது உன்னுடையதையுமே அவர் சித்தத்தை கண்டு கொள்ளும் முயற்சியில் ஈடுபடும் பொழுது ஒரு எதிர்மறையான போக்கை அல்லது சந்தேகிக்கும் போக்கை உனக்குள் ஒளித்து வைக்கும் பொழுது தான் அவ்வாறு நேரிடக்கூடும்.

# <u>தீர்க்கதரிசனமாக.</u>
நேரடியான மனப்போக்கை வைத்திருப்பதன் கூடவே நீ ஒரு தீர்க்கதரிசனமான கண்ணோட்டத்தை பழக்கி வைத்துக் கொண்டு தேவனுடைய வருங்காலத்திற்குள் விசுவாசக் கண்களுடன் நோக்கிப்

பார்த்தும் விசுவாசித்தல் ஆவிக்குரிய நிறைவுறுதலை காரியங்களில் அவை இயற்கையாகச் சம்பவிக்கும் முன்னர் பார்த்தறிதல் அவசியம். அந்த எல்லா காரியத்தைப் பற்றியும் உன் ஆவியில் தீர்க்கதரிசன படக் காட்சியாக பெற்றுக் கொண்டு உன்னைக் கொண்டு தேவன் உன் மூலமாக சாதிக்க வேண்டிய திட்டத்தை உனக்காக அவர் முன் குறித்திருக்கிறார்.

<u>தேவன் அருளிய தரிசனத்தின் மற்ற அம்சங்கள்:</u>

a: அதைத் தரிசனமாக பார்ப்பாயாக உன்னுடைய ஆவியின் கண்களைக் கொண்டு.
b: மதிப்பீடு செய். அதைப் புரிந்து கொண்டு மதிப்பீடு செய்து முற்றிலுமாக அதைப் புரிந்து கொள்வாயாக.
c: அதை எழுத்தில் வடிவமைக்க. ஒவ்வொரு நுட்ப விவரத்தையும் எழுத்தில் கொண்டு வரவும்.
d: அதை வெளியில் சொல்வாயாக. அதை வினைச் சொற்களால் உருவாக்கி, அறிக்கை செய்து, ''என்னுடைய வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரிதீயாய் இருப்பதாக. (சங் 19:14)

**2. ஒரு தீர்மான வாஞ்சை நிறைவேறுதலுக்காக.**
ஒரு தரிசனம் பிறப்பதற்கும் அதன் முடிவான நிறைவேறுதலுக்கும் இடையில் அநேக சோதனைகளும் சவால்களும் காணக் கிடக்கின்றன. அதற்காக உனக்குத் தேவையானது:

**A: வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனப்படும் தீர்மானம்**
அதற்காக வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனப்படும் முடிவான ஒப்படைப்பைச் செய்து அதில் ஒட்டிக் கொண்டிருப்பாயாக. ''இரு மனமுள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாக இருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.'' (யாக்கோபு 1:7-8)

**B: அர்ப்பணிப்பு.**
அந்த தரிசனத்தின் நிறைவேறுதலுக்காக உன்னை முழு இருதயத்தோடும் அர்ப்பணித்துக் கொள்வாயாக. அதன் இலக்கிற்கோ அல்லது தொழிலுக்கோ ஒரு மனப்பட்ட விசுவாச பக்தியுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று பொருள்படுகிறது. ஏதோ ஒன்றை அர்ப்பணித்தல் என்பதற்கு வேதாகமத்தில் ஒரு வல்லமையான அடையாள முக்கியத்துவம் உண்டு. ஒரு காலத்தில் ஏதோ ஒன்றை தேவனுக்கென்று அர்ப்பணித்துக் கொண்டால் அது அவருக்கே ஆகி விடுகிறது. அது ''கர்த்தருக்கென்று பரிசுத்தம்'' என்று நேர்ந்து கொள்ளப்பட்டதாகும். எக்காலத்திலுமே மீட்டுக் கொள்ளப்பட முடியாததாகும். இந்த விதமான அர்ப்பணிப்பு அந்த விதமான தன்மையையே தேவன் உரிமையாக அவருக்காகவும் அவருடைய இராஜ்ஜியத்தின் பணிக்காகவும் அதிகாரத்தோடு கேட்கிறார்.

**C: உறுதியான தீர்மானம்**
உறுதிப்பட்ட தீர்மானமாவது அந்த நோக்கத்தைப் பற்றிய முற்றிலும் பூரணமான தீர்மானத்துடன் செயல்படுவது என்று பொருள்படும். இந்தக் காரணிதான் உறுதியான தீர்மானத்தையும் அர்ப்பணிப்பையும் ஒன்று சேர்த்து செயலூக்கமாக வேலை செய்ய உதவுகிறது. ஏனென்றால் அதன் உட்கருத்தாக:

– ஒரு குறிப்பிட்ட திட்டமான தீர்மானத்தைச் செய்து கொள்வது.
– அந்த தீர்மானம் நிறைவேறுதலுக்காக உன்னையே ஒப்படைப்புச் செய்து கொள்வது.
– அந்த உறுதியான தீர்மானமான நோக்கத்தோடு, என்ன வகையான இடறல்கள் எழுந்தாலும் அதை நேராக அதன் வழியில் கொண்டு செல்வது.

**3. ஒரு சுய கிரியைகளால் உந்தப்பட்டதோர் நபர்.**
ஒரு சுயமான ஆரம்பிப்போன் - அதற்கான முதல் முயற்சிகளை தெரிவு செய்பவன் ஆவான். அவன் மிகவும் உயர்ந்ததோர் நிலையில் நோக்கம் பெற்ற நபர் ஆவான். தலைவர்கள் ஆகப்பட்டவர்கள் வழக்கமாக ''வரிசையின் உச்சி ஸ்தானத்தில்'' நிற்பவர்கள் அவர்களுக்கென்று அவர்கள் மட்டத்திற்மேல் தலைமையான எஜமானன் இருந்து அவர்களை நோக்க மனப்பான்மையுடன் முனைந்திருக்கச் செய்வதற்கென்ற நபர் கிடையாது. அதன் காரணமாக அவர்கள் தாங்களாகவே பலத்துடன்

சுய நோக்க ஆரம்ப காரணர்களாக இருந்து கொண்டு அவர்களுடைய சொந்த ஆர்வமான உற்சாகத்தையும் சக்தி நிலைகளையும் தூண்டி எழுப்பக் கூடியவர்களாக இருக்கின்றனர். இந்த வகையான உற்சாக சக்தி மட்டங்களை நிலை நிறுத்தி நடத்தி ஒரே சீராக கொண்டு போகக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**4. சுய ஒழுங்கில் பயிற்சி பெற்றவர்கள்.**

மத் 16:24; ‘‘ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் (என் சீஷனாக) அவன் தன்னைத் தான் வெறுத்து (ஒழுங்கு நடைமுறையில்) தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்.’’ சுய ஒழுக்கம் ஒழுங்கு என்பது ஒரு தலைவருக்கு மிகவும் அவசியமானதாகும். அவர் தன்னுடைய தனிப்பட்ட உத்தமத்துவத்தைப் பேணிக்காப்பது என்பது தன்னைப் பின்பற்றிச் செல்பவர்களுடைய ஒழுங்குணர்வை தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ள அவசியமாகிறது. அவருடைய தலைமைத்துவ பதவியானது தன்னுடைய திட்டங்கள் மற்றும் ஒப்படைப்பு மட்டங்களை நிர்ணயஞ் செய்ய ஓரளவு சுதந்திரம் அவர் பெற்றுக் கொள்ளும் படியாகச் செய்வதால் அவர் தனக்குத் தானே உண்மையுள்ளவராக இருப்பதோடு மேலும் தேவனுக்கும், அவருக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய அழைப்பிற்கும் மேலும் உடன் சக ஊழியர்களுக்கும் உண்மையுள்ளவராக தன்னை வைத்திருக்க வேண்டும். அவர் அந்த ஊழியக் குழுவிற்குத் தலைவராக இருப்பதாலும் அவருடைய துணை உதவியாளர்களுக்குள் ஒழுங்கை கைக் கொள்ளும்படிச் செய்யும் பொறுப்புள்ளவராகையால் அவன் தனது ஜீவியத்திலும் ஒழுங்கை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அவர் ஒழுங்கை நடைமுறைப்படுத்த வேண்டியது.**

- **அவர் ஆவிக்குரிய ஜீவியம்.**

தனது ஆவிக்குரிய ஜீவியம், பக்தி முறைகள் முதலியவற்றில் இது ஒழுங்கு முறை நடைமுறைப்படுத்த வேண்டிய எல்லா பகுதிகளிலும் மிகவும் முக்கியமானதும் குற்றங் குறை காணும் பகுதியும் ஆகும். ஏனென்றால் ஒருவர் இங்கு தவறிவிட்டால், மற்ற எல்லா பகுதிகளுமே தாக்கமடையக் கூடும். ஆகவே ஒழுங்கு முறை நடைமுறைபடுத்தலினால் அவருடைய ஆவிக்குரிய ஜீவியமும், மற்றும் ஒவ்வொரு காரியங்களும் உறவுத் தொடர் முறையில் தங்களுடைய சரியான மட்டத்தைக் கண்டுபிடித்துக் கொள்கின்றன. தலைவர் ஆனவர் தன்னுடைய ஆவியின் புதுப்பித்தலுக்காகவும் தன்னுடைய ஆவிக்குரிய சக்திகளைத் திரும்பப் பெற்று புதுப்பித்துக் கொள்வதற்காகவும் அவர் நேரத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள தவறி விட்டால் பின்னர் தன்னுடைய தனிப்பட்ட ஜீவியத்தின் முக்கியமான பிற பகுதிகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்குத் தேவையான பலத்தில் குறைவு பெற்றவராவார்.

- **அவருடைய கால அவகாசம்.**

ஒரு தலைவர் தமது கால அட்டவணையைக் கடைபிடிப்பதில் அடிக்கடி பொறுப்புள்ளவர் ஆகிறார். அவர் அடிக்கடி தனது ஊழியத் திட்டத்தை வகுத்துத் தெரிந்து கொண்டு தன்னுடைய நேரத்தோடு எவ்வாறு செயல்படுவது என்பதைத் தெரிந்திருக்கக் கூடும். ஆகவே இந்த உரிமையான சலுகையை உத்தமத்தைக் கடைபிடித்து பாதுகாத்துக் கொள்வது இன்றியமையாததாகும். அதனால் அவருடைய விலையேறப் பெற்ற நேரத்தை வீணாகக் கழிக்கவோ தவறாக பயன்படுத்தாதபடி உறுதி செய்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் மற்ற சக ஊழியர்கள் அவருக்குக் கணக்கு ஒப்புவிப்பது போல இவரும் யாராவது ஒருவருக்கு கணக்கு ஒப்புவிக்கும் பொறுப்புள்ளவர் ஆகிறார்.

- **அவருடைய பாலுறவு தூண்டல்களும், சக்திகளும்**

ஒவ்வொரு நபரும், கிறிஸ்தவ தலைவர்களுங்கூட தங்களுக்குள் உள்ளடங்கிக் கிடக்கும் பாலுறவு தூண்டல்களும், சக்திகளும் ஏதாவது ஒரு வழியில் அல்லது மற்றொரு வழியில் வெளிப்படுத்தப்பட வேண்டியவையாகும். இதைச் செயல்படுத்துவதற்காக முதலாவதாகவும், அதிகமாக அறியப்பட்ட விதத்தில் நிறைவேற்றப்படுவதும் அதன் சந்தர்ப்ப இடத்தின் நிலைமையும் ஒரு நபருடைய திருமணத்தின் உறவுத் தொடர்புமாகும். ஆவிக்குரிய தலைவர்களுக்கு ஆரோக்கியமான திருமண உறவுத் தொடர்புகளும் போதுமான பாலுறவு நிறைவுகள் அதனால் அந்த உறவுத் தொடர்புகளால் ஏற்படும் பரவச நிலையுமாகும். என்னவென்றாலும் இந்த விதமான சக்திகளை முழுவதுமாக முற்றிலும்

வளம் மிகுந்ததும் நிறைவு மிகுந்த திருமணத்து உறவு தொடர்புகளால் ஆகர்ஷித்துக் கொள்ள முடியாது. அந்த சக்திகளை மற்ற படைக்கும் ஆற்றலுள்ள சக்தியை வேண்டி நிற்கிற செயல்பாடுகளில் திருப்பி விடப்பட்டு பிறரது நன்மைக்காக அதன் முழுமையான அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த விதமான ஓட்டங்கள் சக்திகளையும் பலத்தையும் பிறப்பிக்கும் மூலங்களாகவும் ஒரு நபரின் திறமைகளை தூண்டி பற்றி எரிவதற்காகத் தேவைப்படும். இவற்றை முழுவதுமாக ஜீவியத்திலும் ஊழியத்திலும் பயன்படுத்தப்பட வேண்டும். அல்லாவிடில் அவைகளை துர்ஆலோசனையும் தகுதியற்ற தன்மையான வழிகளில் வெளிப்படுத்த வழி தேடப்படும்.

- **அவருடைய தனிப்பட்ட உறவுத் தொடர்புகள்**

ஒரு தலைவர் எப்பொழுதும் தமது ஞானத்தை பகுத்தறிவையும், பிரயோகித்து தமது நண்பர் குழப்பத்தை தெளிவு செய்தும் அதன் மூலமாக ஸ்தாபிக்கப்பட விருக்கும் உறவுத் தொடர்புகளையும் தீர்மானித்து நிர்ணயஞ் செய்ய வேண்டும். அவருக்கென்று ஒரு உள் வட்டம் இருப்பதாகக் காட்டக் கூடாது. ஆனால் தனது சக நண்பர்களாலும் உடன் ஊழியர்கள் அடங்கிய வட்டத்திற்கு அப்பால் மற்றொன்றைக் காட்டிக் கொள்ளக் கூடாது. மேலும் தனது நண்பர்களுக்கு நட்பின் காரணமாக அளிக்கும் சலுகைகளை அளிப்பதில் பாரபட்ச மற்றவராகத் தோன்றுதல் வேண்டும். தலைவர்கள் எதிர் பால் மக்களுடன் எந்த விதமான உறவுத் தொடர்பும் வைத்துக் கொள்ளும்பொழுது அவர்கள் தங்களுடைய உறவைக் குறித்து நிதானித்து நிர்ணயம் செய்வதில் ஒரு பலமிக்க செயல்பாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும். இவைகளின் நிமித்தம் காரியங்கள் கையை விட்டு கடந்து செல்வதால் நாசகரமான விளைவைக் கொண்டு வரும்.

**5. ஒரே சீரான நிலைமை**

ஒரே நிலையை உடைய நபர் எப்பொழுதுமே நிலை பெற்றவராகவும் தன் நிலையை உறுதியாயும், விசுவாசமும் தனது கோட்பாடுகளுக்காக நிற்பவராய் இருக்க வேண்டும். நம்பத் தகுந்த சீரான, எப்பொழுதும் ஒன்று போல் எப்பக்கமும் சாராமல் நிற்க வேண்டும். ஒரே சீரானது, நம்பத் தகுந்ததுமான அம்சங்கள் நல்லொழுக்கத்தின் அடையாளங்களாகும். ஆனால் கிறிஸ்தவத் தலைவர்களாக நாம் மிகவும் அதிகமாக மனுஷீக குண நலன்களை விட, அவை மட்டுமல்லாது மிகவும் அபரிமிதமாகப் பெற்றிருக்க வேண்டும். நமக்கு தேவன் அவசியமானவர். அவருடைய ஒழுக்க அம்சங்களுக்கு இந்த பண்பியல்களெல்லாம் ஒருங்கிணைந்தனவாக மேலும் நமது ஆவிக்குள்ளாக அவற்றைக் கட்டி எழுப்பக் கூடியதாகும்.

**6. நல் மனச்சாட்சி**

நல் மனச்சாட்சி என்பது நமது ஒழுக்கப் பண்புகள் அமைந்த சிந்தனைகள், வார்த்தைகள், செயல்பாடுகள் அனைத்திலும் ஒரு விதமான தாக்க விளைவை அதற்குள் ஏற்படுத்தும் மனத் திறன்பாடு ஆகும். ஒரு அமைதியற்ற மனச்சாட்சியைப் பெற்றிருக்கும்பொழுது எந்தக் கிறிஸ்தவனும் தனது முழு ஆத்ம சக்தியுடன் செயலூக்கமாகக் கிரியை செய்ய முடியாது. ஒரு புண்பட்ட மனச்சாட்சியை மறைத்து வைத்துக் கொண்டு தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சிப்பது ஒரு வாகனத்தை நிறுத்தும் சுக்கானைக் கையில் பிடித்துக் கொண்டே ஓட்டிச் செல்வதாகும். யோவான் சொல்கிறார் "பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக் கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுவதெதுவோ அதை அவராலே நாம் பெற்றுக் கொள்கிறோம்." (I யோவான் 3:20-21) "நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்." (அப் 23:1) "சுத்தமான இருதயத்திலும் நல் மனச்சாட்சியிலும்" (I தீமோத் 1:5) ஒரு துன்பப்படும் மனச்சாட்சியானது தேவனிடம் நமக்குள்ள நன்னம்பிக்கையைத் திருடி விடுகிறது. மேலும் நமது விசுவாசமான மனத் திறன்பாடுகளை செயலிழக்கச் செய்கிறது. (I யோவான் 3:21) நம்முடைய பெற்றுக் கொள்ளும் திறமையை அளவிட்டு குறைத்து விடுகிறது. (நாம் நன்மையை விட தீங்கையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.)

**7. தாழ்மையானதும் போதிக்கப்படக் கூடியதுமான ஆவி**

ஒவ்வொருவரும் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இதைக் கண்டறிந்து கொள்ளவும், ஒப்புக் கொள்ளவும் உண்மையான தாழ்மை பெற வேண்டியதாய் இருக்கிறது. இயேசுவானவர் தாமே கற்றுக் கொடுக்கப்படக் கூடியதோர் ஆவிக்கு உன்னதமான எடுத்துக்காட்டு ஆவார்.

‘‘நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்.’’ (மத் 11:29) என்று கூறினார். ‘‘அவர் பட்டபாடுகளினாலே கீழ்படிதலைக் கற்றுக் கொண்டார்.’’ (எபி 5:8)

**8. பரத்திலிருந்து அளிக்கப்பட்ட ஞானம்**

இந்த ஜெயம் (அ) வெற்றியின் இரகசியம் என்ன? - ஆம் சரியானத் தீர்மானங்களைச் செய்வதற்கான ஞானத்தைப் பெற்றிருத்தலாகும். யாக்கோபு கூறுவதாவது உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் தேவனிடத்தில் கேட்கக் கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். (யாக்கோபு 1:5-8; 3:17) மனுஷீக ஞானம் நல்லது தான். மேலும் அது ஒரு தலைவருக்கு மிகுந்த சிறந்த முதலீடாகும். ஆனால் ஆவிக்குரிய தலைமைத்துவம் சந்திக்கும் சகல சவால்களுக்கும் போதுமானதல்ல. மெய்யாகவே நமக்கு மனுஷீகமும் தெய்வீகமும் கலந்த ஒரு கலப்பு ஞானம் தேவையாகிறது. ஆனால் தெய்வீக ஞானமும், மனுஷீக ஞானம் இரண்டுமே சில சமயங்களில் வேறுபட்டதாகத் தோன்றுவதாக உணர்ந்து கொண்டு சில சமயங்களில் அந்த தெய்வீக ஞானமானது முன்னிடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். சாலொமோன் இராஜா ஒரு ஞானமுள்ள தலைவனுக்கு சிறந்த உதாரணம் ஆவார். அவன் தன்னுடைய இயல்பான ஞானத்தை உபயோகித்து தெய்வீக ஞானத்தைப் பெற்றுக் கொள்ளப் பிரயோகித்தான். அது அவனுடைய தலைமைத்துவத் திறமைகளை மிகுதியாக விசாலமடையச் செய்தது. (II நாளா 1:7-12)

**9. ஒரு சமநிலையான வாழ்க்கை நடைமுறை**

‘‘இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிமாய் விருத்தி அடைந்தார்.’’ (லூக்கா 2:52) அவருடைய வளர்ச்சி, நான்கு பக்கங்களில் விருத்தி அடைந்தது. மன ரீதியாகவும், சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், சமூக ரீதியாகவும் - வளர்ந்தது. அது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியேயாகும். உன்னுடைய ஜீவியத்தையும் நடபடிக்கைகளையும் சமநிலையில் வைத்துக் கொள்ள முயற்சி செய்க. பக்தி விருத்திக்கான செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்க. அது உன் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் விருத்தி செய்து பலப்படுத்தும். அதோடு சரீரப் பிரகாரமாக வளரும் பொழுதும், விருத்தி அடையும் பொழுதும் இயேசுவானவர் ஞானத்தையும் விருத்தி செய்து கொண்டார். இது மனோ ரீதியானதும் (அ) அறிவுத் திறன் சார்ந்த விருத்தியாகும். நாம் இதை சிறந்த புத்தகங்களை வாசித்தும் படித்தும், மகா நாடுகளையும், சொற்பொழிவுகளையும் தவறாமல் கவனித்துப் படித்துக் கொள்வதாலும் இதைத் தொடர்ந்து கற்றுக் கொள்ளலாம். நாம் அநேக விஷயங்களைக் குறித்து நமது அறிவையும், சொற்பொருள் விளக்கத் திறனையும் விரிவாக்கி விசாலமாக்கலாம். நமது மனதானது எழுப்பித் தூண்டப்பட்டும் சவால்களால் ஆக்கப்படவும் வேண்டும். நமது மனதின் தொடுவானத்தை நேரடியான வழியில் விரிவாக்குவதால் நாம் அபரிமிதமான நன்மைகளை அடையலாம்.

இயேசுவானவர் சமூக பிரகாரமும் விருத்தி அடைந்தார். ‘‘அவர் மனிதரிடத்தில் தயை பெற்றார்.’’ இதில் எவ்வாறு மக்களுடன் உறவுத் தொடர்பு கொள்வதைக் கற்றுக் கொள்வது என்பதும் அடங்கும். துர்அதிர்ஷ்ட வசமாக அநேக பிரசங்கிமார்கள் இந்த விதமான கலையின் அபிவிருத்தியை அனாவசியமானதாகவும் அவசியமற்றது என்றும் கருதுகிறார்கள். அவர்கள் சமூக நயங்களையும் உறவுத் தொடர்புகளை விரிவாக்கும் சடங்காச் சாரங்களையும் அவர்களோடு கலந்து பழகுவதையும் இகழ்ச்சியாகக் கருதுகிறார்கள். ஆனால் இயேசுவானவர், மிக வெட்ட வெளிப்படையாக இந்த பகுதிகளில் பழகிக் கொண்டு பொது ஜனங்களிடையே மிகப் பிரபலமாகவும் தன் உலக வாழ்க்கையின் பெரும் பகுதியில் சிறந்து விளங்கினார்.

ஆம், நமது ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சியானது மிகவும் அதிக முக்கியமாகக் காணப்பட்டாலும் மற்ற வளர்ச்சி விருத்திகள் மிகவும் முக்கியமானதாகவோ அவற்றை விட அதிகப்பட்டதாகவோ அல்லது அவசியமற்றதாகவோ ஆக முடியாது.

**சாலையின் மத்தியில்**

நான் எப்பொழுதுமே ‘‘உண்மையானது சாலையின் மத்தியிலே இருக்கிறது’’ என்று நம்புகிறவன். அது சமநிலையுடையதாகும். நாம் வலது புறமோ அல்லது இடது புறமோ விளிம்பு வரைக்கும் போவோமானால் நாம் தவறுக்குட்படுகிறவர்கள் ஆவோம். ஆகவே எல்லை மீறி விளிம்பு வரை போகிறவன் ஒரே சீரான நிலைமையை பெற முடியாது. ஒரு மனிதன் குறுகிய மனதுடையவனானாலும், அதீதமான ஆவிக்குரிய அல்லது அதீதமான பரிசுத்தம் அடைந்தவன் ஆனாலும் அந்த இருவருமே சீரான நிலையில்லாதவர்கள் ஆவார்கள்.

ஒரு சிறந்த ஆசிரியர் எழுதியதாவது, ‘‘ஒரு மனிதன் சொல்வதாவது’’ பொறுமை, மாம்ச இச்சை, கௌரவமான கனத்திற்காக பேராசை ஆகியவைகள் தீமையான வழிகள். நான் என்னை அவற்றிலிருந்து முற்றிலுமாக தனிமைப்படுத்திக் கொள்வேன். அதனால் மற்ற வரம்பு மீறிய எல்லைக் குறியில் நின்று நல்ல சுவையான உணவை உட்கொள்ளுவதை அனுபவித்து மகிழ்வதை எனக்குள் மறுத்துக் கொண்டு மேலும் எங்கோ ஒரு மனைவியைத் திருமணம் செய்து கொண்டு அல்லது நல்லதோர் இல்லத்தில் வசிப்பதையோ அல்லது அழகிய ஆடைகள் அணிவதையோ வெறுத்து ஒதுக்கி விட்டு அதற்கு பதிலாக கந்தையாடைகளை அணிந்து வாழவதைத் தெரிவு செய்து கொள்வான் என்றால் இதுவுங் கூட ஓர் தீமையான மார்க்கமாகும்.

ஆகவே சிறந்த நேர்பாதை என்பதில் ஒரு மனிதன் தன்னை சாலையின் நடுவில் போகும்படி பழக்கப்படுத்திக் கொள்வானானால் (ஆம் எங்கே நிதானமான தன்மையை ஒவ்வொரு தனித் தன்மையான பண்பாட்டு அம்சங்களில் அமைத்துக் கொண்டால்) அவன் சாலையின் மத்தியில் முன் நோக்கி செல்வதால் ஞானமுள்ளவன் என்று அழைக்கப்படுவான்.

**10. ஜனங்களின் மனிதனாக இருப்பாயாக.**

நான் வாலிபரான பிரசங்கிமார்களுக்கு ஊழியம் என்பது அடிப்படையில் இருவகைப்பட்டதென சொல்லி உணர்த்துவதில் தளர்வடைவதில்லை. அதாவது தேவனைப் பற்றியும் அது மக்களைப் பற்றியும் என்பதாகும். தேவனோடு உனது உறவுத் தொடர்பை விருத்தி செய்தல் மிகவும் அவசியமாகும். ஆனால் மனுஷீக தன்மையைப் படித்து மக்களை நேசிக்கவும் அவர்களோடு சுமுகமாகப் பழகுவதும் மிகமிக அவசியமாகும். இயேசு மனுஷ தன்மையை கற்பதில் சிறந்த மாணவராயிருந்தார். வேதாகமம் சொல்கிறது, ‘‘இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால் அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை.’’ (யோவான் 2:24-25)

**11. நல்லதோர் நகைச் சுவையுணர்வை உண்டாக்கிக் கொள்க.**

ஒரு நல்ல நகைச் சுவை உணர்வு எப்பொழுதுமே சிறந்ததோர் ஆசீர்வாதமாகும். மேலும் குறிப்பாக தலைவர்களுக்கு அது சிறந்ததாகும். அநேகமான விபரீதமும் சோகமான சம்பவங்கள் உங்களுடைய ஜனங்களுக்கான ஊழியப் பாதையில் நேரிடலாம். மேலும் மனச் சோர்வுக்கான பல ஆதாரங்களும் உண்டாயிருக்கும். உமக்கு தேவையான ஓய்வும், ஜீவியத்தின் நகைப்புக்கு உரிய பகுதிகளைக் கண்டறிவதற்கான ஓய்வான அவகாசமும் உமக்குத் தேவையாகும். ஒரு நல்ல நகைச் சுவை உணர்வு உறவுத் தொடர்புகளை மகிழ்ச்சிகரமாக கிரியை செய்யுமாறு உதவக் கூடும். அதுவும் ஒரு பிரசங்கியாருக்கு விசேஷமான ஆசீர்வாதமாகும். பிரசங்கம் செய்வது என்பது அடிக்கடி பாரமான காரியமாகக் கூடும். சில சமயங்களில் சற்று ஓய்வு அவசியம். இதுவும் ஒரு நேர்த்தியான நகைச் சுவை உணர்வால் மாத்திரமே தர முடியும். என்னவென்றாலும் பிரசங்கம் செய்பவர் இங்கேயும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இந்த நகைச் சுவை பொருத்தமானதாகவும், நல்ல சுவையுடையதாயும் இருக்க வேண்டும். நாம் மற்றவர்களை சுட்டிக் காட்டி அவரை மதிப்பிடும் வகையில் குறிப்பாகச் செய்யப்படும் நகைச் சுவை பரியாசங்களைத் தவிர்த்தல் வேண்டும். ஒருவருக்கு நகைப்புக்கு இடமானதென்றால் அது மற்றொருவரை புண்படுத்துவதாயிருக்கும். ஆனால் குறிப்பாக உம்மைப் பற்றியே தனக்கு தானே ஏதோ ஒரு சமயத்தில் நகைத்துக் கொள்வது அருமையாய் இருக்கும். நீவிர் உம்மைத் தானே நகைத்துக் கொள்ளும்படி அனுமதிக்காவிட்டால் சில சமயங்களில் நீ அழுதே தீர்த்து விட நேரிடும்.

**12. தத்துவ ஞானமுடையவனாக இருக்கவும்.**

இதன் அடிப்படையில் கருத்தாவது ‘‘ஞானத்தின் பால் நேசம்’’ என்ற அர்த்தத்தை இந்த வார்த்தை தருவதாகும். என்னவென்றாலும் இது மேலும் அர்த்தம் தருவது ‘‘அது நிர் சிந்தையாக மனச் சோர்விலும் அமைதியாக இருக்கப் பழகுவது தான்’’ நான் இந்த இரண்டாவது வகையான அர்த்தத்தைத் தான் நான் அது பற்றி கரிசனையாக இருக்கிறேன். நமது ஊழியத்தில் நாம் அடிக்கடி அநேக மக்களின் பிரச்சனைகளிலும், காயமடைவதிலும் தலையிட்டுக் கொள்ள அவசியமாகிறது. நாம் நம்மைத் தானே மிகவும் உணர்ச்சி வசப்பட்டு தலையிட்டுக் கொள்ளுமாறு அனுமதித்தால் அதனால் உண்டாக்கப்படும் தாக்கமானது நமது சரீர அமைப்பே கையாளக் கூடாத நிலைமை ஏற்படக் கூடும். ஆகையால் நாம் அடிக்கடி உணர்ச்சி வசப்படாத நிச்சலனமான நிலைமையை

நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும:, ஒரு நல்ல மருத்துவருக்கு இதைப் பற்றி நன்மையை நன்கு அறிவார். அவர் அதீதமான உணர்ச்சி வசமான பற்றுதலைப் பற்றி அபாயத்தைப் பற்றி நன்கு விழிப்பாக இருப்பார் அல்லது தனது நோயாளியின் மீது கரிசனையாக இருப்பார். இதைப் பற்றி செயலூக்கமான பணி செய்ய ஒரு மருத்துவ நிபுணரோ அல்லது மருத்துவரோ ஓரளவு தூரத்தையும் தூரமாக விலகி இருப்பதையும் கையாள வேண்டும். இது ஊழியத்திலும் ஓரளவு உண்மையாகும். ஒருவருக்கு அடிக்கடி வாழ்க்கையை ‘‘தொடும் கோட்டிலிருந்து’’ அதிகமான விஷயத்தை, ஒரு நபருடனும் அவருடைய பிரச்சனையுடனும் மிக அருகில் இருக்கும்பொழுது அறிந்து கொள்ள முடியாது.

அங்கே மிக அதிக எண்ணிக்கையுள்ள மக்கள் பிரச்சனையுடையவர்களாக உங்கள் உள்ளத்தில் கண்டு கொள்ளக் கூடிய மெய்யான அபாயமும் உண்டு. அழுத்தங்களும் மனச் சோர்வுகளையும் அதிக எண்ணிக்கையுள்ள சுமைகளைச் சுமந்து செல்வதும் சில சமயங்களில் ஒரு நபருக்கு மிகையாக இருக்கும். அதிலும் இந்தக் காரியமானது குறிப்பாக ஜனங்களுக்காக ஒரு கரிசனையாகவே குறிப்பாக இருக்கும். அவர்களுக்காக மிக ஆழமாக விசாரப்படலாம். ஆனாலும் நாம் இந்த பாரமான சுமைகளை கர்த்தர் பேரில் போட்டு விட வேண்டும் என்பதை நன்கு அறிவோம். ஆனாலும் சகல விதமான ஒவ்வொருவருமே இதை எப்படிச் செய்ய வேண்டும் என்று தேவைப்படுகிறதோ அப்படி செய்யலூக்கத்துடன் செய்ய முடிவதில்லை. அதன் விளைவாக இந்த உணர்ச்சிப் பூர்வமான சுமையின் பாரத்தால் கீழே விழுந்து அழிந்து விடும்படி ஆகி விடுவார்கள். இந்த விதமான தன்மையுள்ள ஏதோ காரியம் பவுலுடைய நண்பனாகிய எப்போபிராத்துவுக்கு நேர்ந்தது. அவன் நோயினால் பிடிபட்டு சாவுக்கேதுவான நிலைமையில் இருந்தான். ஏனென்றால் கிறிஸ்துவுக்கான ஊழியப்பணி அவனை மரணத்துக்கு சமீபமாய் கொண்டு வந்து விட்டது. அவன் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாய் இருந்தது. மெய்தான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படி அவன் தன் பிராணனையும் எண்ணாமல் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்துக்குச் சமீபமாய் இருந்தான். (பிலிப் 2:27a,30)

அது மிகவும் ஒரு மெய்யானதும் அச்சம் விளைவிக்கிரதுமான தொழிலால் வரும் அபாயமாகும். அதை எந்த விலை கொடுத்தாகிலும் தவிர்க்க வேண்டும். மித மிஞ்சிய வேலையும் அதிகமான அழுத்தமும் இந்த நிலைமையை உண்டாக்கக் காரணமாக இருக்கலாம். ஒவ்வொரு தலைவரும் இந்த அபாயத்தைக் குறித்து விழிப்புடன் இருந்து, அதற்கு பலி கடாவாக ஆகிவிடாத படி தவிர்க்க தகுந்த பாதுகாப்புகளை எடுக்க வேண்டும். நான் பின்வரும் ஒரு அதிகாரத்தையும் இதன் அங்கீகாரத்தையும் பிரச்சனையை கையாளும் விதத்தைப் பற்றியும் கூறும்படியாக எடுத்துக் கொண்டுள்ளேன்.

**13. செயலூக்கமான தலைவர்கள் நல்ல செய்தித் தொடர்பாளர்களாக இருக்க வேண்டும்.** ஒரு செயலூக்கமான தலைமைத்துவத்திற்கு மிகவும் முக்கியமான அம்சம் என்னவென்றால் நல்ல செய்தித் தொடர்பு ஆகும். ஆகவே ஒவ்வொரு தலைவரும் மனுஷீக உறவு செய்தித் தொடர்புகளில் கவனத்தை ஒன்று கூட்டி செலுத்தியும் ஒவ்வொருவரும் கூடுமான அளவில் அதை விருத்தி செய்ய வேண்டும். இவற்றில் முதற்கண் முக்கியமானது குரல் விழித் தொடர்பாகும். பேச்சு மொழியின் வாயிலாக விஷயங்களை வெளித் தொடர்பு கொள்ளச் செய்யும் திறமையானது தெளிவாகவும் சுருக்கமாகவும் இந்த திறன்பாட்டை விருத்தி செய்து மக்களை தம்பால் ஈர்த்தும் கவனத்தைக் கவர்ந்தும் இருக்கும்படி சொற்களை அமைத்தும் கொள்வதாகும். மேலும் இதற்கான கூடுதலான திறன்பாடு விருத்தி செய்யக் கூடியது எழுத்தாகும். ஒரு வாரத்து செய்திக் கடிதம் மக்களுக்கு அவர்களுடைய இயக்கமுள்ள நிகழ்ச்சித் திட்டத்தின் பல அம்சங்களையும் பற்றி விஷயங்களை சொல்லி வைத்துக் கொள்வதாகும்.

**<u>a: தலைமைத்துவம் உடையவர்களிடையே தெளிவான செய்தித் தொடர்பு இருத்தல்</u>** தரிசனத்தின் போது அதன் யுக்தி முறைகளும் திட்டங்கள் இன்னும் கரு என்ற படி நிலையில் இருக்கும் பொழுதே அந்த தலைமைத்துவக் குழு ஜெபத்துடனும், மிகவும் கவனத்துடனும் அந்த அமல்படுத்த விருக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒவ்வொரு அம்ச பகுதியையும் நிதானிக்க வேண்டும். அவர்கள் அதைப் பற்றி கட்டாயமாக ஜெபித்தும் அதைப் பற்றி பேசியும் அதைப் பற்றி விவாதித்தும் தீர்க்கமாகக் கலந்துரையாடியும் அதை முழுவதும் மிகச் சரியாகவும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

அதைப் பற்றி ஏதாவது முடிவுறாதோ என்ற வீண் ஐயப்பாடுகளோ அல்லது வேறே எந்த விதமான தப்பெண்ணமோ எழுப்பப்படுமானால் அதை நுட்பமாகக் கண்டு பிடித்துக் கொள்வது இதுவே தருணமாகும். இந்த முழுமையான முன் மொழிதலானது குற்றங் குறைகளை பொதுவாக அறிவிக்கப்பட்டும் நுட்பமாக விவாதித்தும் ஆகவே அதனால் ஏற்படுக்கூடிய எந்த விதமான எதிர்பராத முறையில் ஏற்படக்கூடியவற்றையும் அக்கறையோடு கவனிக்கப்படலாம்.

மேலும் இந்த கால கட்டத்தில் தான் தலைமைத்துவமானது தரிசனத்தைப் பற்றிய நம்பிக்கையான தெளிவைப் பற்றி ஒரு வழியிலோ அல்லது மற்றொரு வழியிலோ விளக்கம் பெறுகிறது. அவர்கள் மனஊக்கம் எழுச்சி பெற்ற தூண்டுதல் எதிர்பார்ப்புள்ளவர்களாகவோ அல்லது அந்த தரிசனத்தின் மெய்ம்மையையோ அல்லது செயலாக்கப்படக் கூடிய தன்மையைப் பற்றியோ தப்பெண்ணம் கொள்பவர்களாக ஆகின்றனர்.

<u>இந்த தலைமைத்துவம் மிக விரிவான விளக்கத்துடன் தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.</u>

- அதைக் குறித்து ஒன்று சேர்ந்து கூடி ஒருமனப்பட்டு ஜெபிக்கவும்.
- ஒரே குழுவாக சேர்ந்திணைந்து திட்டமிடுக.
- அதற்கான தெளிவான பணி விளக்கவுரைக் குறிப்புகளைத் தருக.
- போதுமான அதிகாரத்துவத்தை பிரதி நிதித்தவப் படுத்துக.
- அதற்கான ஒழுங்கான அறிக்கைகளை முறைப்படியே திரும்பவும் பெற்றுக் கொள்க.
- ஒருங்கிணைந்த தலைமைத்துவத்தை முறைப்படி சந்திக்கவும்.
- தனி நபரான தலைவர்கள் முறைப்படி சந்தித்துக் கொள்ளவும்.

<u>b: ஒரு தெளிவான தரிசனம் மக்களுகக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.</u>

ஒரு குறிப்பிட்ட பணியை செயலூக்கத்துடன் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதனோடு சம்பந்தப்பட்ட மக்கள் அனைவரும் அதற்காகத் தேவை எவை என்று ஆழ்ந்து சிந்தித்து அறியப்படுபவைகளையும் அதற்கான பிரத்தியேகத் தேவையுடையவைகளையும் பற்றிய சரியான முழுவதுமான விளக்கம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அந்தத் தலைவர்கள் மட்டும் அதற்கான வழிமுறைகளை முன்னதாக அறிந்திருத்தல் போதாது. அந்த தரிசனம் நிறைவேற்றப்படுவதில் பகுதியாக இருக்கும். மற்ற ஒவ்வொருவருக்குங்கூட அதைப் பற்றித் தெளிவான முறையான புரிந்து கொள்ளுதல் பெற்றிருக்க வேண்டும். அந்தப் பணியைப் பற்றித் தெளிவாகவும், விரிந்த விசாலமான பிரகாரமாகவும் அறிவிக்க வேண்டியது தலைவரைச் சார்ந்ததாகும். அப்பொழுது கர்த்தர் எனக்கு பிரதியுத்தரமாக ‘‘நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படியாக பலகைகளிலே தீர்க்கமாகவரை’’ என்று சொன்னார். (ஆபகூக் 2:2)

ஒரு திருச்சபையானது ஒரு நிகழ்ச்சி நிரலையோ அல்லது தரிசனத்தையோ விளங்கி கிரகித்துக் கொள்ள வேண்டுமானால் அந்த தரிசனமாவது தெளிவாகவும், ஒரே சீராகவும், விரிவாகவும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் அதைத் திரும்பத் திரும்ப கேட்டு ஒவ்வொரு கண்ணோட்டத்திலும் விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் அதை செவி கொடுத்துக் கேட்டும், பார்த்தும் இருக்க வேண்டும். அது அவர்களுக்கு விரிந்த வேறுபட்ட வழிகளில் சொல்லப்பட வேண்டும். அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, உற்சாகப்படுத்தப்பட்டும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நோக்க மனப்பான்மையால் தூண்டப்பட்டு அந்த தரிசனம் அவர்கள் ஜீவியத்தில் ஒரு பகுதியாக ஆகும் வரைக்கும் அவ்வாறு செயலாற்றப்பட வேண்டும். இதை அவர்கள் செயல்படுத்த வேண்டுமானால் தலைமைத்துவம் உடையவர்கள் ஜெபத்தோடு நிரம்பப் பெற்றும், அந்த தரிசனத்தின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் அந்த தரிசனத்தின் அறிமுகப்படுத்துதலையும் பெற்று அந்த தரிசனம் அவர்களிடம் அடிக்கடி முறையே சொல்லப்படுவதால் அது அவர்களுக்கு இரண்டாந்தன்மையுடையதாகிறது.

அவர்கள் அதை தெளிவாக அறிவிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

- உங்களுடன் தேவன் என்ன பகிர்ந்து கொண்டார்? - உற்சாகத் தூண்டுதல்
- திருச்சபை எதை நோக்கி எங்கே போய் கொண்டிருக்கிறது? - போகும் திசை
- நாம் அந்த இலக்கை எப்படி அடையப் போகிறோம்? - அதை சாதிப்பதற்கான நோக்கமான இலக்குகள்.
- இதற்கான என்ன விதமான வழி காட்டுதலும், பயிற்சியும் கிடைக்கும்படி பெற்றுக் கொள்ளக் கூடும்?

**C: தனிப்பட்ட ஒருவொருவருக்கான உறவுத் தொடர்புகளை அறிவித்தல் முறையை நுட்பமாக கற்றுத் தேர்ந்து கொள்க.**

இந்தத் தலைவர் அதற்கான தொடர்பு அறிவிப்புகளை ஒவ்வொரு குழு அங்கத்தினருக்கும் தனித் தனியாகவும் நேர் முகமாகவும் அந்த முழுக் குழுவின் முன்னிலையில் அறிவிக்க வேண்டும். இதனால் ஒவ்வொரு குழு அங்கத்தினரும் மெய்யாகவே அந்தப் பணிக்காக அர்ப்பணித்துக் கொள்ளுதலை, உறுதி செய்வதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. இந்த தரிசனமானது அந்த குழுவின் கூட்டமைப்பு பொதுவான முன்னிலையில் விவாதிக்கப்படுமானால் அதைப் பற்றி அங்கத்தினர்களில் ஐயப்பாடுகளும் மனதில் இருப்பதை வெளிக்கு சொல்லக் கூடாத நிலைமையுடையவர்கள் குழுவின் பொதுக் கூட்டத்தில் அதைச் சொல்ல தைரியமில்லாதவர்களாயும் இருக்கலாம். ஆகவே ஒவ்வொரு அங்கத்தினரையும் தனித்தனியாக அணுகியும், பேசவும் செய்வதால் அவர்கள் உண்மையாகவே அந்த தரிசனத்தைப் பற்றி பொதுவாக என்ன உணருகிறார்கள் என்பதையும், குறிப்பாக அவர்களது பங்கைக் குறித்தும் பகிர்ந்து கொள்வதற்கு போதுமான சந்தர்ப்பத்தை அளித்ததுமாகும். ஆகவே தலைவர் ஒவ்வொரு குழு அங்கத்தினரையும் அணுகிக் கட்டாயமாகக் கேட்டுக் கொள்ள வேண்டியதாவது.

- அவர்களுடைய வழி நடத்தி முன் செல்லும் திறமையை அபிவிருத்தி செய்து கொள்ளவும்.
- அவர்களது முன்னேற்றத்தை அல்லது மாறானதாக இருந்தாலும் அதை கணக்கெடுத்துக் கொள்ளவும்.
- உங்களுடைய ஆலோசனை கூறும் திறமைகளை உபயோகிக்கவும்
- நீங்கள் அவர்களை அணுகும் முறையானது மிரட்டுதல்கள் அல்லாதவைகளாக இருக்கவும்.
- நீ உணர்ச்சி வசப்பட்டிருக்கும் பொழுது யாரையும் எதிர்க்காதபடி இருக்கும்படியாக.

**14. நல்ல வழிகாட்டி முன் செல்லும் தலைவர்கள் நன்றாக செவி கொடுத்துக் கேட்டுக் கவனிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்**

தலைவர்கள் திறமைசால் அறிவிப்பாளர்களாக இருக்க வேண்டும் என்பது மெய்தான். ஆனால் அவர் நன்றாகச் செவி கொடுத்துக் கேட்டும் நல்ல கவனிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். அந்த தலைவரின் செவிகள் எப்பொழுதும் தேவனுக்குத் திறந்ததாகவே இருக்க வேண்டும். மேலும் இணை ஊழியர்களுக்கும், குழு அங்கத்தினர்களுக்குங்கூட அவ்வாறே இருத்தல் வேண்டும். இவைகள் செயல்படுத்தப்பட வேண்டிய இடங்களில் ஒன்றானது.
உதாரணமாக: அலுவலர் கூட்டம்

A: ஒவ்வொருவரும் வெளிப்படையாகப் பேசுவதற்கு சந்தர்ப்பம் பெறுகிறார்களா?
B: உன்னுடைய தலைமைத்துவம் மெய்யானதோர் குழு உணர்ச்சியை முன்னேற்றுவிக்கிறதா?
C: குழுவின் உறவுத் தொடர்புகள் ஒருவருக்கொருவர் ஒருமித்து கலந்து செயல்படுவதால் முன்னேற்றப்படுகிறதா?
D: குழுவின் யோசனைகளான கோர்வைகளை உங்களுக்கு வியாக்கியானம் விளக்கம் பண்ணவும் அறிவிக்கவும் முடியுமா?
E: அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மெய்யாகவே அந்த பொது குழுவின் தீர்மானங்களா?

**15. நல்ல தலைவர்கள் செயலூக்கமான பேச்சாளர்களாகவும் இருக்க வேண்டும்.**

செயலூக்கமான தலைவர்கள் திறமையால் தகவல் அறிவிப்பாளர்களாக எல்லா செய்தி தொடர்பு துறைகளிலும் விளங்க வேண்டும். ஆனால் அவர்கள் குறிப்பாக வாய் மொழித் திறனிலும், பேச்சுத் திறமையிலும் கைதேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். வேதாகமத்தில் வெளிப்படையாக பார்க்கிறபடி தலைவர்களில் அநேகர் செயலூக்கமான வாய் மொழி, பேச்சுத் திறன் வாய்ந்தவர்களாக இருந்தார்கள்.

செயலூக்கமான பேச்சு வல்லமையுள்ள மன நோக்க முன்னேற்றமுள்ளதாக கிடைக்கப் பெறுகிறது. வல்லமையான சொற்பொழிவாளர்கள் தங்கள் தேசத்தின் வரலாற்றில் உச்ச கட்டமான நிலைமைகளில் எழுச்சி அடையச் செய்திருக்கிறார்கள். கிறிஸ்தவ தலைமைத்துவ பகுதியில் பேச்சுத் திறமையின் வல்லமையானது பிரசங்கம் செய்வதிலும் போதிப்பதிலும் ஆகிய இரு துறைகளிலும் முக்கியம் என்பது மிகவும் தெளிவானது. இதனோடு கூடுதலாக மன உணர்ச்சி தூண்டுதலிலும் மக்களை நோக்கப்படுத்தி அவர்களுடைய திருச்சபைகளுக்கான தரிசனத்தை நிறைவேறச் செய்வதிலும் மேலும் குறிப்பிடத்தக்கது.

**16. நல்ல தலைவர்கள் எல்லா மட்டத்திலும் செயலூக்கமான தகவல் தொடர்பு வலை அமைப்பை நிறுவி அதை விருத்தி செய்து செயல்படுத்துகிறார்கள்.**

ஒரு செயலூக்கமான தலைவர் தனிமையில் வேலை செய்தல் கூடாது. அவருடைய வெற்றியின் இரகசியமாவது அவரது குழுவும், பின்பற்றி செல்பவர்களும் ஒருங்கிணைந்து கிரியை செய்வதால் பெறப்படுவதாகும். இதைச் சாதித்து அடைய வேண்டுமானால் அந்த தலைவர் தமது தகவல் தொடர்பு வரிசைகளை திறந்ததாகவும் பயனுள்ளதாகவும் வைத்திருப்பது இன்றியமையாததாகும்.

**ஊழியர்கள் மட்டத்தில்.** அர்த்தமுள்ள முறையான கூடும் கூட்டங்களால் அங்கே அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, கலந்துரையாடப்பட்டு அணு அணுவாக பிரித்து பரிசீலிக்கப்படலாம். மேலும் திட்டங்களும் வருங்காலத்து செயல்பாடுகளுங்கூட ஜெபத்துடன் வடிவமைக்கப்பட்டு இந்தத் தலைமைத்துவ மட்டத்தில் உருவாக்கப்படலாம்.

**திருச்சபை மட்டத்தில்.** திருச்சபை அங்கத்தினர்களுக்கு அந்தத் திட்டத்தின் எல்லா மட்டங்களின் விவரங்களை தகவலாக அறிவித்திருப்பது நல்லதாகும். அவர்களுடைய ஜெப உதவியான ஆதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகும். பல திறப்பட்ட செயல்பாடுகளைப் பற்றிய செய்திகள் பொது வாய் மொழி அறிவிப்புகளின் மூலமாக பகிர்ந்து கொள்ளப்பட்டும் மேலும் கூடுமானால் ஒருமுறை முறையாக வரும் பத்திரிகை அறிக்கையின் மூலமாகவோ அல்லது செய்திக் கடிதத்தின் மூலமாகவோ பகிர்ந்து கொள்ளலாம்.

**சிறிய செல் குழு மட்டத்தில்.** வருங்காலத்து செல் குழுக்களின் சபைகள் அல்லது வீட்டு சபைகள் ஆகியவை அதிகமாக முக்கியமானவைகளாக முன்னாட்களைக் காட்டிலும் சிறப்புப் பெறும். செல் குழு சபைகளே வருங்காலத்து சபைகளாகும். ஆகவே அவைகள் முக்கியமாக இந்த செல் குழுக்களின் தலைவர்களும் அங்கத்தினர்களும் முறைப்படி தவறாது திருச்சபைகளின் நடவடிக்கைகள் மேலும் திட்டங்கள் பற்றியும் தகவல்கள் பெற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். அவர்கள் அந்த தரிசனத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்க வேண்டும்.

**17. நல்ல தலைவர்கள் (அ) முன் நடத்திச் செல்பவர்கள் நேர் மறையான வேகம் சார்ந்த இயற்கை ஆற்றலை பிறப்பித்துக் கொள்ள வேண்டும்.**

**செயலூக்கமான வழிகாட்டி முன் செல்லும் தலைவர்கள் தலைமைத்துவ ஆற்றலை வெளிக்கு கொண்டு வருகிறார்கள்.**

செயலூக்கமான தலைவர்கள் தங்களுக்குள் உடைமையாக பெற்ற வல்லதான குறிப்பிட்ட குணச் சித்திரப் போக்கை அல்லது தாக்கத்தை பிறப்பிக்கிறார்கள். அது மக்களைக் கவர்ந்திழுத்துக் கொண்டு அவர்களுக்குள் தாக்கத்தையும் உண்டாக்குகிறது. அது சில சமயங்களில் விளக்கிக் கூற முடியாத விசித்திர போக்காக மக்களால் உணரப்பட்டும் பிறரால் மனதின் விழிப்புணர்வு ஆன அடித்தளத்தில் அறிமுகமானதாகவும் இருக்கும். இது காந்தத்தைப் போல மக்களைக் கவர்ந்திழுக்கும் கண்ணுக்குப் புலப்படாத தன்மையாகும்.

அதிமிகுதியாக வேதாகமத்து பெரும்பான்மையான கதா பாத்திரங்கள் அவ்வகையான பிரசன்னத்தைப் பெற்றிருந்ததாக அறியப்படுகிறது. அதி நிச்சயமாகவே இயேசு அதை ஒளி வெள்ளமாக ஒளிரச் செய்தார். அவர் எங்கு சென்றாலும் மக்கள் திரளாக அவருக்குப் பின்னால் திரளாக வந்தார்கள். அவருடைய பேச்சுகளால் வசீகரிக்கப்பட்டு அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். அவருடைய பேச்சிலும் செய்த எல்லா நடவடிக்கைகளிலும் அவருடைய தலைமைத்துவ பிரசன்னம் வெளிப்பட்டது. யோவான் ஸ்நானகனுக்கும் இது போன்ற இயற்பாற்றல் இருந்தது. மெய்யாகவே மக்கள் அவரை இயேசுவைப் போல நினைத்துக் கொண்டார்கள். (மத் 16:14) பவுல் அப்போஸ்தலனும் இவ்விதமான இயற்பியற் செயலாற்றைப் பெற்றிருந்தான்.

ஆனால் இந்த பிரசித்த ஆற்றல் வெளிப்படுத்தப்படும் விதம் நபருக்கு நபர் வித்தியாசப்படும் என்னவென்றாலும் எந்த வடிவத்தில் இது நேரிட்டாலும் ஒரு தலைவருக்கு இந்த விதமான பண்பு இன்றியமையாததாகும். இந்த விதமான நல்லியல்பு தான் அவரை ஜனங்களின் தலைக்கும் தோள்களுக்கும் மேலாக தூக்கிப் பிடித்து அவருக்கு மெய்யான தலைவர் என்ற அடையாளத்தைக் கொடுக்கும். ஒரு தலைவர் தலைவருக்கான நற்பண்புகளாகிய தன்மைகளை சராசரிக்கு மேலாக அதி உயரமாக எடுத்துக் காண்பிக்க வேண்டும்.

**ஒரு தலைவர் பார்த்துக் கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.** அவர் மற்றவர்களை விட எளிதில் பார்க்கக் கூடியவரான தலைவராக இருக்க வேண்டும். மக்கள் இதை எளிதில் உடனே பார்த்தறியக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அவர் மேல் ஒரு விசேஷமான அடையாளக் குறியீடு இருக்கும் தலைமைத்து அதிகாரத்தின் மெல்லிய ஆடை அவருடைய ஜீவியத்தின் மேல் போர்த்தப்பட்டிருக்கும்.

**ஒரு தலைவர் மக்கள் அவருக்கு செவிகொடுக்கும்படியான தகுதி பெற்றிருக்க வேண்டும்.** ஒரு மெய்யான தலைவரின் குரலில் ஒரு கட்டாயப்படுத்தும் வலிமை இருக்கும். அது இயற்கையாக இருக்கும் குரல் வளத் தொனியில் இருக்க வேண்டும் என்பதல்ல. ஆனாலும் அவர் கவனத்தை ஈர்க்கும் காரியங்களை சொல்லும் பாணியில் ஏதோ பாணியில் பேசப்பட்டு கேட்பவனின் கவனத்தை ஈர்த்துக் கொண்டு அவர்களை செயல்பாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்து ஊழியம் செய்ய ஊக்கப்படுத்துகிறது.

**ஒரு தலைவர் முன் மாதிரியான எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.** ஒரு நல்ல தலைவர் உதாரணமாகவும் எடுத்துக்காட்டும் மாதிரியாகவும் தன்னுடைய துணை ஊழியர்களும் பின்பற்றிச் செல்பவர்களுக்கும் அவ்வாறு இருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய ஜீவியத்தை அவரைப் போல் வடிவமைக்க கூடியவராக இருத்தல் நலம். அவருடைய தலைமைத்துவமானது அதிகமானதோர் அழுத்தத்தையும் பலனையும் கொடுக்கக் கூடியதாக ஜனங்கள் அவரை தம் ஜீவியமானது அவர்களுடைய விசுவாசம் தரிசனம் இவற்றின் வாய்மையையும் நேர்மையையும் எடுத்துக் காட்டுகிற ஒரு நபராகக் கண்டு கொள்ளச் செய்கிறது.

**ஒரு தலைவர் ஆவலையும் மன எழுச்சியையும் தூண்டுபவராகவும் ஆற்றலுள்ளவராகவும் இருக்க வேண்டும்.**
ஆதி அப்போஸ்தலர்கள் குணச் சித்திரப் பாத்திரங்களாக விளங்கினார்கள். ஆனாலும் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வலிமை மிக்க ஆற்றலினால் நிரப்பப்பட்டு பலம் மிக்கவர்களாய் அதிகாரம் பெற்றிருந்தனர். பெந்தேகோஸ்தே நாளின் நிகழ்ச்சிகள் (அப் 2ம் அதி) அவர்களுடைய ஜீவியத்தை முற்றிலுமாக மாறுதலடையச் செய்து அவர்களுடைய தலைமைத்துவ வலிமையை விரிவாக்கச் செய்தது. பெந்தேகொஸ்தே நாளின் ஆற்றல் வாய்ந்த அனுபவத்திற்கு முன்னர் அவர்கள் சீஷர்களாக மட்டுமே இருந்தார்கள். (தொழில் பழகுகிறவர்கள்) ஆனால் அந்த ஆற்றல் வாய்ந்த பெந்தேகோஸ்தே அனுபவத்திற்கு பிறகு அவர்கள் செல்வாக்குடைய தலைவர்களாக பின்னர் ஒரு கால கட்டத்தில் கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்த நற்செய்தியை எடுத்துக் கொண்டு உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று அறிவிப்பவர்களாக ஆகி விட்டார்கள்.

அந்த ஆதி அப்போஸ்தலர்கள் மெய்யான குணச் சித்திரமான தலைமைத்துவத்தை வெளிக்கு எடுத்துக் காட்டினார்கள். இந்த வார்த்தையான ''குணச் சித்திரம்'' என்பது அதன் மூல அர்த்தமான பரிசுத்த ஆவியின் அருட்பாடு என்பதைக் குறிக்கும். சமீப காலத்தில் இந்த வார்த்தையானது (மதம் சரா உலகம்) பிரபஞ்சத்தால் தத்தெடுக்கப்பட்டு வல்லமையான ஆளுமை தன்மையும் தலைமைத்துவமும் உடைய ஒருவரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகும். இந்த வார்த்தையின் பிற்கால பிரயோகமானது நியாயமாகவே கிறிஸ்தவத் தலைவர்களுக்குங்கூட பொருத்தமாக பயன்படும். கிறிஸ்தவத் தலைவர்களானவர்கள் குணச் சித்திரமானவர்களாக இந்த வார்த்தையின் இரண்டு விதமான அர்த்தத்தின் பிரகாரம் இருக்க வேண்டியதவசியமாகிறது. ஆவியின் வரங்களினால் அருள் வரம் பெற்று தலைமைத்துவத்தின் வல்லமையான ஒளி வட்டத்தை தங்கள் ஜீவியத்தின் மேல் அணியப் பெற்றிருக்க வேண்டும்.

பெந்தேகோஸ்தே என்ற புலன்களின் உணர்வுக்கு அப்பாற்பட்ட நியதியால் இந்த ஆளுமைத் தன்மையின் விரிவாக்கம் ஏற்பட்டது என்பதை கவனிப்பது ஆர்வத்தைத் தூண்டுவதாகும். சகல அப்போஸ்தலர்களும் மிகுந்த வல்லமையும் ஆற்றலுமுள்ள நபர்களாக முன்னைவிட ஆகியிருந்தனர். ஆனால் மற்றவர்களில் யாரேனும் பேதுருவைப் போல் அதிகமாகக் குறிப்பிடத் தக்கவர்களல்ல. அவன் கிறிஸ்துவை மூன்று முறை மறுதலிப்புக்கு பிறகு அவன் மிகுந்த கவலைக்குரிய தோல்வியைத் தன்னுடைய தலைமைத்துவத்தை அடையும் வேட்கையில் அடைந்திருந்ததாகத் தோன்றினாலும் தேவன் அவனை மன்னித்து திரும்பவும் சீர் பொருந்தச் செய்தார். அவன் ஆதியில் கொண்டிருந்த

ஆற்றல்களுக்கும் அப்பால் உயர்ந்து தன்னுடைய தலைமைத்துவத் தகுதித் திறமைகளை இயல்பாகவே வளம் மிக்கதாக விரிவாக்கிக் கொண்டான். இன்றும் இதே விதமான பரிசுத்த ஆவியானவரின் ஆற்றலான வல்லமை தலைவர்களுக்கும் பெறும்படியாக இருக்கிறதாகும். தேவன் தாமே ஒரு தலைவர்களால் ஆகிய சேனையை அவருடைய பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டும் அதிகாரமிக்கவர்களாகச் செய்கிறார். இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்ததாவது, ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலனடைந்து ('பலன்' கிரேக்க பதம் dunamis) விடுவீர்கள்'' கிறிஸ்தவக் குழுவின் உண்மையான ஆற்றலான வல்லமை அவர்களுடைய தலைமைத்துவத்தின் மூலமாக அல்ல பரிசுத்த ஆவியின் மூலமாகவே வர வேண்டும். அந்த குழு முழுவதிலுமுள்ள தலைவர்களும் ஊழியர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பலப்படுத்தப்பட வேண்டும். அபிஷேகித்தல் என்பது ''வல்லமையான சக்தியாக'' பரிசுத்த ஆவியின் மூலமாக ஊற்றப்பட்டு அந்தக் குழு முழுவதையுமே செயலூக்கமான ஈடுபாட்டிலும் கிரியையிலும் கொண்டு செல்கிறது.

போதுமான நேரிடையான தலைமைத்துவம் இல்லாமை சோம்பலுக்கு இடமளித்து நிறைவேற்றுவதற்கு ஏதுவான பலத்தை வீணாகப் போக்கச் செய்கிறது. ஆனால் வலிமை வேகம் சார்ந்த தலைமைத்துவ திறன்பாடானது ஆர்வத்தைத் தூண்டி விட்டு சந்தர்ப்பத்தை நிலை நிறுத்துகிறது. இந்த வேகம் சார்ந்த வல்லமையானது பலவிதமான எண்ணற்ற வழிகளில் ஒளிரச் செய்கிறது. ஆனால் மிகவும் சிறப்பாக மூத்த தலைவரிடத்தில் வழக்கமாக இது காணப்படும். இது தலைமைத்துவத்தின் குணச்சித்திர திறன்பாடாக அபிஷேகித்தலும், அந்தக் குழுவால் அடிக்கடி பிடித்துக் கொள்ளும் ஆவியின் மகிமையாகும். அது நம்பிக்கையைத் தூண்டி விட்டு கற்பனையை வீறு கொண்டு எழச் செய்து அந்த குழுவினிடையே மறைந்து அடங்கிக் கிடக்கும் சக்திகளை மனோ நோக்கமுடையதாக்குகிறது.

**நாம் எப்படி ஓர் நேர்மறையான வல்லமையை பிறப்பிக்க முடியும்?**

**A: வேதாகம அடிப்படை சார்ந்த நேர் முகமானதோர் செய்தியை பீடத்திலிருந்து கொடுக்கவும்.**

வேதாகமம் முழுவதிலுமே நேரிடையானதும் எதிர்மறையானதுமான கூற்றுகள் நிரம்பப் பெற்றுள்ளன. நாம் அவை இரண்டையும் பற்றியுமே மனதில் கவனம் கொள்ள வேண்டும். துர் அதிர்ஷ்டவசமாக பல சபைகள் எதிர் மறையையே பெரிதாக எடுத்துக் கொண்டு நேரிடையானவைகளை சந்தேகத்துடன் பார்த்தும் மனதிலுள்ளதை வெளியே கூறாது ஒதுக்கியும் வைத்து விடுகின்றன. அதற்காக ஒரு நேர் மறையான பலாபலனை பிறப்பிக்க வேண்டுமானால் நாம் ஒரு நேரிடையான பார்வையை மேற்பார்வை கொண்டு அதை பெரிதாக்கிப் பேச வேண்டும். நமது பிரபலமான பழைய பாட்டில் ''நாம் நேரிடையானவற்றை தட்டி எழுப்பி எதிர்மறையானவற்றை ஒதுக்கி புறக்கணித்துத் தள்ள வேண்டும்.''

நாம் ஒரு நேரிடையான மேற்பார்வை கொண்டு அழுத்தம் கொடுத்தாலன்றி நாம் ஒருக்காலும் எதையும் சாதித்து நிறைவேற்றுகிறவர்களாக இருக்க முடியாது. ஆகையால் ஒரு நேர் முகமான ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள பயப்படாதே. தேவன் நேரிடையானவர் தான் சுவிசேஷமும் நேர் மறையானதுதான். வேதாகமும் நேர் முறையானதே விசுவாசமும் அத்தன்மையானதே.

**B: அந்த வேகம் சார்ந்த பரிசுத்த ஆவியை கிரியை செய்யும் படி அனுமதிப்பாயாக.**

இந்த அண்ட சராசரத்தில் பரிசுத்த ஆவியே மிகவும் வேகம் சார்ந்தியங்கும் (சக்தி) ஆற்றலாகும். நமது ஜீவியத்தின் மேல் (கட்டுப்பாடு) ஆதிக்கம் கொள்ளும்படி அனுமதிப்போமானால் அவர் நமது வழியாக தமது வேகம் சார்ந்த ஆற்றலை பிரத்தியட்சமாக்குவார். இயேசுக் கிறிஸ்துவின் திருச்சபையானது தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆளுகையினால் ஆளப்பட வேண்டும் என்று முன் குறிக்கப்பட்டுள்ளது. தேவன் தமது மக்களை உயிர் பெற்று எழச் செய்யும்படியாக இருக்கிறார். தமது வல்லமையையும் அதிசயங்களையும் இந்த பிரபஞ்சத்தில் புதுப்பிக்கப் போகிறார். நாம் பரிசுத்த ஆவியானவரை கிறிஸ்துவின் திருச்சபையில் தமக்குரிய சரியான நியாயமான இடத்தை எடுத்துக் கொள்ளும்படியாக அனுமதிக்க வேண்டும். ''கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கு விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.'' (II கொரி 13:17-18) நாம் பரிசுத்த ஆவியானவரை மெய்யாகவே கர்த்தராக அனுமதிப்போமானால் அவர் தமது வல்லமையான அதிகாரத்துவத்தாலே நம்மை மறுரூபமாக்குகிறார்.

**18. தலைவர்கள் எப்பொழுதுமே முன் நிலையின் மேல் நிற்க வேண்டும்.**

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுதெல்லாம் லேவியர் எப்பொழுதும் ஜனங்களுக்கு 2000 முழம் முன்னதாகவே சென்றார்கள். தேவன் ஆசாரியத்துவம் பெற்றவர்களை தமது ஜனங்களுக்கு ஆவிக்குரிய தலைவர்களாக முன் குறித்துத் தெரிந்து கொண்டு அவர்களை வழி நடத்திச் செல்வதற்காக முன்னதாகவே போகும்படி கட்டளையிட்டார். மேலும் அவர்கள் 2000 முழம் முன்னே போகும்படியாக குறிப்பிட்டு இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு முன்னே போகும்படி நியமித்தார். அவர்கள் ஜனத்துக்கு முன் வழி நடத்திச் செல்வதற்காக முன்னால் போகும்படி குறிப்பிட்டு பின்னாக மக்கள் பின்பற்றி வர வேண்டிய இடத்திற்கும் இடையிலுள்ள தூரத்தையும் நிர்ணயித்தார். ஆனால் அவர்கள் பார்வையில் இல்லாதபடி வெகுதூரம் முன்னால் போகக் கூடாது என்றும் கட்டளையிட்டார். இதுவும் கிறிஸ்தவ தலைமைத்துவ கோட்பாடுகளுக்கும் அதீதமான முக்கியத்துவம் உடையதாகும். நாமும் மக்களுக்கு சற்று தூரம் முன்னதாகவே இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து வெகு தூரமாகப் போய் விடக் கூடாது.

நல்ல தலைவர்களின் ஜீவியத்தில் சாட்சி பெற்ற எண்ணற்ற பண்புகளும் நல்லியல்புகளும் நிரம்பவே இருக்கின்றன. அவைகள் ஜனங்களின் பார்வையில் அவர்களை நிறுத்தி வைத்துக் கொள்ள உதவுவதுடன் அவர்களை போல உதவி செய்யும். இவ்வாறு செய்வதால் ஜனங்கள் தேவனுடைய வழிகளில் பின்பற்றி நடக்க உதவி செய்து மேலும் குணாதிசயங்களை விருத்தி செய்து அவர்களைத் தலைவர்களாக வளம் பெறச் செய்யவும் மேலும் உதவுகிறது.

**நீ முன்னாலே மேலே போகும்படி வைத்துக் கொள்ளும் இயல்பான ஏதுக்கள்.**

**A:** <u>ஒரு நேர்மையான நோக்கமும் தோற்ற அமைப்பும்.</u>

ஜனங்கள் தாங்கள் எங்கே போகிறோம் என்று வெளிப்படையாக அறிந்த யாரோ ஒருவரை மட்டுமே பின்பற்றிச் செல்லும்படியாக விரும்புவார்கள். அதாவது தனது தீர்மானத்தில் ஒரே உறுதியான முடிவை எடுத்துக் கொள்ளுபவரையே விரும்புவர். அவர் ஒரு திட்டவட்டமான நோக்கத்தோடும் அந்த பெருமான பணியை நிறைவேற்றிச் சாதிக்கும் தீர்மானம் உள்ள ஒருவராக இருக்க வேண்டும் என்பதாகும். அவர்கள் ஒரு நேர்மறையான மனப்பான்மையையும் தோற்றத்தையும் உடைய தலைவருக்காகவே பார்த்திருப்பார்கள். அவர் மெய்யான தலைவராக சந்தேகமின்றி அறியப்பட்டும் திட்டமாக இடங்களுக்கு கடந்து செல்லக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

**B:** <u>உத்தமமும் நல்லொழுக்க கோட்பாடும்.</u>

ஒரு தலைவராகப்பட்டவர் உத்தமமாகவும் நேர்மையாகவும் நம்பத் தகுந்தவராகவும் ஒரு பலமிக்கதுமான நல்லொழுக்கமான தராதரத்தையும் நம்பிக்கையுடன் கடைபிடிக்கிறவராகவும் இருக்க வேண்டும். சட்டம் சார்ந்த நபராக சட்டத்தை எழுத்தின்படி ஒட்டி நடக்கிறவராக அல்லாமல் ஆனாலும் சட்டத்தின் ஆவியின் படி நடக்கிற உண்மையான ஒரு நபராக இருக்க வேண்டும். ஆம் கிறிஸ்து வாசம் பண்ணுவதாக சாட்சி கொடுக்கும் ஒரு நபர் அவரில் தானே பரிசுத்தாவியானவர் தமது பரிசுத்த ஜீவியத்தின் அவர் மூலமாக வெளிப்படுத்துகிறவராக இருக்கிறார். ஆகவே பவுல் சொல்லுகிறதாவது, ‘‘எழுத்துச் கொல்கிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது’’ என்கிறார். (II கொரி 3:6)

**C:** <u>நேர்மையும் உண்மையும்.</u>

நேர்மை என்பது ஒரு தலைவனுக்குள் இருக்க வேண்டிய அத்தியாவசியமான தன்மையாகும். அன்பைப் போல ‘‘அது சகல பாவங்களையும் மூடும்’’ நேர்மை என்பது மாய்மாலம் என்பதற்கு எதிர் பதமாகும். ஒரு மனிதன் தவறு இழைக்கும் போதுங்கூட அவர்கள் நேர்மையின் ஆவியின் வெளிப்புறமாக செய்தால் பொதுவாக மன்னிக்கப்படத்தக்க தாகும். ஜனங்கள் நேர்மையை எளிதில் உணர்ந்தறியக் கூடும். அது மெய்யானதாக இருக்காவிட்டால் அதை படம் பிடித்துக் காட்ட முடியாத கடினமானதொன்றாக ஆகிவிடும்.

**D:** <u>பலமும் கட்டுப்பாடும்.</u> (தனிப்பட்டதும் ஜனங்களுக்காக பொதுவானதாகவும்)

பெலவீனங்கள் ஒரு போதும் மரியாதையைப் பெறுவதில்லை. அதிலும் குறிப்பாக ஒரு தலைவரிடத்தில் தன்னைப் பின்பற்றிச் செல்பவர்களின் நன்மதிப்பைப் பெற வேண்டுமென்றால் ஒரு தலைவர் பலத்தை தன் உடைமையாக வைத்துக் கொண்டு அதை வெளியிலும் எடுத்துக் காட்ட வேண்டும். இந்த விதமான பலம் முதலாவதாக அவளுடைய சொந்த ஜீவியத்தில் வெளிக்காட்டப் படக் கூடியதாக

இருக்க வேண்டும். ஒரு மனிதன் தன்னில் தானே பலமில்லாதவனாகவும், முடிவு செய்யும் ஆற்றல் இல்லாதவனாகவும் தன்னோடு இருப்பானானால் அவன் மற்றவர்களுடன் அதே போல் இருக்க முடியாது.

அவன் பலத்தை பிரயோகித்தும் தன்னுடைய தனிப்பட்ட ஜீவியம், பழக்க வழக்கங்கள், இயற்கையான மனநிலை, நடவடிக்கை இவைகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். தன்னை சரியான படியாக ஒழுங்கில் பயிற்சி பெற முடியாதவனுக்கு மற்றவர்களுக்குள் பலத்தை தூண்டி எழுப்ப முடியாது. அவருடைய சொந்தத் தோற்றத்திலும் காலம் தவறாமையிலும் சீரான தன்மையிலும் அவருடைய தனிப்பட்ட சொந்தமான பலமும் கட்டுப்பாடும் பிரத்தியட்சமாக இருக்க வேண்டும். மேலும் இந்தத் தன்மைகளானவை அவர் தனது குடும்ப விவகாரங்களையும் குடும்பத்தின் ஒழுங்கு முறைகளையும் எவ்வாறு நடத்துகிறார் என்பதுங்கூட பிரத்தியட்சமாகக் காணக் கூடும். ஆகவே வேதாகமம் கேட்கும் கேள்வியாவது, ‘‘ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?’’ (I தீமோத் 3:5)

**E: <u>ஜனங்களுக்காக ஒரு மெய்யான கரிசனை.</u>**

ஊழியம் என்பது மெய்யாகவே ஜனங்களுடைய தொழிற்சாலை. மேலும் மக்களுடன் தகவல் தொடர்பு கொள்ளும் திறமை ஒரு நல்ல முக்கியமான தேவையாகும். ஊழியம் என்பது உண்மையில் இரண்டு விஷயங்களைப் பற்றியது. அது தேவனைப் பற்றியதாகும். அது ஜனங்களையுங்கூட பற்றியதாகும். ஆகையால் அதற்கான பெரியதோர் அனுகூலமாவது ஒருவருடைய இயற்கை பண்புகளைக் கொண்டு எல்லா வகையான மக்களுடன் சாதாரணமாகவும் சுலபமாகவும் தொடர்பு கொள்ளக் கூடும்.

**F: <u>நட்புறவும் அணுகக் கூடிய எளிமையும்.</u>**

‘‘நண்பர்களை எவ்வாறு தன் பால் ஈர்த்துக் கொள்வதும் மக்களைத் தாக்கம் செய்வதும்’’ என்ற புத்தகம் எழுதப் படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே வேதாகமம், ‘‘சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்’’ என்று கூறுகிறது. (நீதி 18:24) இயேசுவும் பல தடவைகளில் ‘‘ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்’’ என்று அழைக்கப்பட்டார். அவர் மிகவும் அணுகப்படக்கூடியவராக திரளான மக்களால் ஈர்ப்பு ஆற்றலால் ஈர்த்து இழுக்கப்பட்டவர்களாக அனலூட்டும் அவருடைய ஆள்தன்மை நட்பு என்றவைகளால் உண்டாகும் நன்மைகளை அனுபவிக்கவே கூடி வந்தனர். ஒரு கிறிஸ்தவ தலைவராக நீ எவ்வளவு வெற்றியுள்ளவராக இருந்தாலும் உன்னுடைய ஜெயமானது மக்களிடமிருந்து உம்மை அந்நியர் ஆக்கிவிடும்படி அனுமதிக்காதே. நீர் மெய்யாகவே கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டுமானால் எப்பொழுதுமே ஒரு நட்பு மிகுந்து அணுகக்கூடிய நபராக இருக்கவும்.

**G: <u>செவிகொடுத்து நன்கு கவனித்துக் கேட்பவராக</u>**

இயேசு பல சமயங்களில் உரையாடலையும் சம்பாஷணையையும் உற்சாகப்படுத்தினார். முதலாவதாக அவர் வினாக்களை எழுப்புவார். பிறகு அவர் கவனித்து இருந்து ஜனங்கள் அவருக்கு பிரதிக் கிரியையாக பிரதியுத்தரம் சொல்லும் போது கவனிப்பார். சில சமயங்கள் இருக்கவே இருக்கிறது எதற்காகவென்றால் நாம் சும்மா ஒரு நபர் பேசுவதைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தால் அதுவே அவர்களுக்கு மிகவும் உயர்ந்தோர் அவர்கள் விரும்பும் பாராட்டைச் செலுத்தியது போல் ஆகும். ஆனால் கவனித்துக் கேட்பதற்கு தயாராக இல்லை என்றால் அது அவர்களுக்கு மனதை புண்படுத்தும் காரியமாகும். துர்அதிர்ஷ்டவசமாக அநேக தலைவர்கள் தாங்கள் மிகவும் முக்கியமானவர்களாகத் தங்களை உணர்ந்து கொண்டு மற்றவர்களுக்கு செவி கொடுத்துக் கவனிக்க மாட்டாது இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் மற்றவர்களுக்கு செவிகொடுத்து கவனிக்கும் கலையை இழந்து விட்டதாகத் தங்களைப் பற்றி கூறிக் கொள்வதற்கு பழக்கப்படுத்திக் கொண்டவர்களாகிறார்கள்.

**H: <u>வசீகரமும் பார்த்து வியக்கத்தக்கத் தோற்றமும்</u>**

எந்த விதமான பொதுத் தொடர்புகளோடுள்ள பங்கில் ஒரு வசீகரமும் கவரத்தக்க தோற்ற ஆள் தன்மையுடைமையும் ஒரு தனிப்பட்ட அனுகூலமாகும். மிகவும் வெளிப்படையாக ஊழியமும் பொது உறவுத் தொடர்பை விட மிகவும் அதிகமான நடவடிக்கையாகவும், மேலும் அதனுடைய வெற்றியானது நல்ல மனுஷீக உறவுத் தொடர்புகளை விட அளவிற்குட்படாத வகையில் உயர்ந்த காரியங்களைச் சார்ந்திருக்கிறது. என்னவென்றாலும் நபருக்கு நபர் தனிப்பட்ட உறவுத் தொடர்புகள் பெரிய

அளவில் எந்த நெருக்கமான சமூகத்திலும் திருச்சபையையும் சேர்த்து நேரிடுகிறது. மேலும் மக்களை கவர்ந்திழுத்து தங்கள் பால் அவர்களைக் கொண்டு வந்து அவர்களைத் தூண்டி எழுப்புவதும் இன்றியமையாததாகிறது. ஒரு தலைவர் கவர்ச்சியாகவும் நட்பு மனப்பான்மையும், வசீகரமான தனித் தன்மை பெற்றிருப்பாரானால் இதை வழக்கமாக மிக எளிதில் சாதித்தடைந்து விட முடியும். ஒரு தலைவர் யாவாராலும் பார்வை மதிப்புப் பெற்றவரானால் மக்கள் அவரை விரும்புவதற்கு எளிது என்று காண்பார்கள். இது ஒரு சிறந்த அனுகூலமாக மக்கள் உறவு தொடர்பு ஏற்படுத்துவதில் சுலபமாகக் கண்டு அந்தத் தலைவரைப் பின்பற்றிச் செல்லுவார்கள்.

**19. உம்முடைய தலைமைத்துவ பலத்தை விருத்தி செய்து கொள்வது.**

**I. உம்முடைய தலைமைத்துவ அதிகாரத்து பலத்தை வெளிப்படுத்தி உணர்த்துவது.**
தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை எப்படி வெளிப்படுத்துவது என்பதை அறிந்திருக்க வேண்டும். தலைமைத்துவம் அற்ற குழு குழப்பத்திற்குள் இழுத்துச் செல்லப்படும். தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை நேர் முகமாக தங்கள் கீழ்உள்ள ஊழியர்களை பகைத்துக் கொள்ளாமலும் அல்லது அந்நியபடுத்தாமலும் அதை மேற்கொள்ள வேண்டும். அவர்களுடைய அதிகாரத்துவம் உபயோகமானது எப்பொழுதும் தாழ்மையும், பலமும் இரண்டும் சேர்ந்த கலந்த நிலைமையில் நடைபெற வேண்டும்.

**II. தலைவர்கள் செயல்பாட்டைத் தொடங்கி வைத்து அதை முறைப்படுத்த வேண்டும்.**
உண்மையான தலைவர்கள் செயல்பாடுகளை இயங்க செய்பவர்கள் ஆவர். அவர்கள் செயல்பாட்டைத் தொடங்கி, மற்றவர்களைத் தங்களோடு சேர்ந்து கொள்ளும்படி தூண்டி எழுப்பி அந்த ஆரம்பத்தை நிலை நிறுத்துவார். நல்ல தலைவர்கள் பணிகளை தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கச் செய்து அவைகளை மேல் கொண்டு நடத்திச் சென்று அந்தத் திட்டம் முடிவு பெறும் வரை செயல்படுவார். செயலூக்கமான தலைமைத்துவம் காரியங்களை செய்து முடிக்க அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டி எழுப்பியும் மற்றவர்களுடைய முயற்சியை ஒருங்கிணைத்தும் சாதித்து விடுவார்.

**III. சங்கிலி தொடரான அதிகாரத்துவத்தை விளங்கிக் கொண்டு.**
மத் 8:9, ‘‘நான் அதிகாரத்துக்குக் கீழ்பட்டவனாய் இருந்தும்’’ என்று சொல்லுகிறது. நீவிர் அதிகாரத்திற்கு கீழ்பட்டவராய் இருக்கவேண்டும். ஏனென்றால் அதை செயலூக்கமாகப் பிரயோகிப்பதற்காகவே அந்த நூற்றுக்கதிபதி என்பவர் சங்கிலித் தொடர் போன்ற அதிகாரத்தையும் அது எவ்வாறு செலுத்தப்படுகிறது என்பதை முழுவதுமாகப் புரிந்து கொண்ட ஏதோ ஒரு நபருக்கு பொருத்தமான சிறந்த உதாரணமாக விளங்குகிறான். அவன் தனது ஜீவியத்தின் மேல் உள்ள அதிகாரத்துவத்தைப் புரிந்து கொண்டவனாகவும் அது எவ்வாறு தனக்குக் கீழ் உள்ள அலுவலர்கள் மீது தனக்கு எந்த மாதிரியாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் புரிந்து கொண்டவனாக இருந்தான்.

நாமும் நமது அதிகாரத்தின் மூல காரணமான ஸ்தானத்தின் கீழ் இருந்து கொண்டிருந்தால் மாத்திரமே மக்களை நமது அதிகாரத்தின் கீழ் இருக்கும்படி எதிர்பார்க்கலாம். நமது அதிகாரம் தேவனிடத்திலிருந்து வருகிறது. அதற்காக அவர் நம்மை முன் குறித்திருக்கிறார். ஆனால் அந்த அதிகாரம் நம்மீது சட்டபூர்வமாக இருக்க வேண்டுமானால் நாமும் நமக்கு தேவன் ஜீவியத்தின் மேல் இருக்கும்படி வைத்துள்ள மூலகாரணமான அதிகாரத்தின் கீழ் ஜீவிக்க வேண்டும்.

**IV. மூல காரணமான அதிகாரத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.**
இதற்கு முக்கியமான மூன்று அதிகாரத்து மூல காரணமானவைகள்:

**a) பொதுவான செயல் அதிகாரம்** (நமது பணியுடன் வரும் அதிகாரம்)
நமது கடமையானது தேவனால் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் அவரே அந்த கடமையைச் செய்வதற்கான நமது அதிகாரத்திற்கு மூல காரணமானவர். மருந்து கொடுக்கப் பதவிப் பட்டத்திலே நமக்கு அதிகாரமில்லை. நாம் மருத்துவர் குருவானவர், போதகர், என்றோ அல்லது வேறெந்த பதவிப் பெயர் பெற்றிருந்தாலும் நமது உண்மையான அதிகாரமாவது இதை விட மேலாக உயர்ந்ததாகும். நாம் ஏதோ ஒரு ஸ்தாபனத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது நமது ஸ்தாபனத்தாலோ ஒரு உயர் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் நமது அதிகாரத்தின் மூல காரணம் இன்னும் தேவனாகவே இருக்கிறார். ஆகையால் இதற்காக மிகவும் முக்கியமான தென்னவென்றால் நமது அதிகாரத்தின் மூல காரணத்தோடு சரியான உறவுத் தொடர்பு கொண்டிரு. அவருடைய

வார்த்தையாகிய வசனத்தோடும், அவர் முன் குறித்த வல்லமைகளோடும் ஐக்கியத்தில் ஜீவித்திரு. நீ தேவனுடைய அதிகாரத்துக்குள் நிலைத்திருக்கும்பொழுது அவர் உன்னுடைய அதிகாரத்தையும் நிலைநிறுத்துவார். அவருடைய அதிகாரத்ததின் மறைவிலிருந்து நீ வெளியே வந்து விலகுவாயானால் பொறாமையினாலோ, கீழ்படியாமையாலோ அப்படி செய்வாயானால் அப்பொழுது அவருடைய அதிகாரத்துவம் உன் ஜீவியத்தின் மூலமாகக் கிரியை செய்ய இனி மேலும், மேற்கொண்டும் முடியாது.

**b) <u>அறிவே பலமாகும்.</u>** (அறிவு, திறமை இவற்றின் வழி பெறப்படுகிற வல்லமை முதலியன) ஒரு முதிர்ச்சி பெற்றதும் போதுமான புரிந்து கொள்ளப்படும் உனது கடமையும், அதை நிறைவேற்றுப்படுதலும் அதற்கென்று ஒரு அளவு அதிகாரத்தைக் கொடுக்கிறது. நீ என்ன செய்கிறாய் என்பதை நீ அறிந்திருக்கிறாய் என்பது வெளிப்படையானால் ஜனங்கள் அந்தப் பணியை நிறைவேற்றி முடிப்பதற்கு உன்னுடன் இணைந்து கொள்வதை சௌகரியமாக இருக்கிறதென்பதை உணர்ந்தறியக் கூடும். மேலும்: அதனால் உண்டாகும் விளைவுகளை நீ சாதித்திருப்பதற்கு நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை உண்மையாக நீ அறிந்திருப்பாயானாலும் அதை அவர்கள் அந்த விளைவுகளில் இருந்து கொள்ளக் கூடுமானால் அதை அவர்கள் தயாராக கண்டறிந்து கொண்டும், ஒப்புக் கொண்டும் உன்னுடைய தலைமைத்துவ அதிகாரத்தைக் கனப்படுத்துவார்கள். ஒப்புக் கொள்ளப்பட்ட செயலாற்றும் திறமையானது அந்தத் தலைவரிலும் அவரது குழாத்திலும், இரண்டிலுமே நம்பிக்கையை உற்பத்தி செய்ய முடியும்.

**c) <u>ஆள் தன்மையின் வல்லமை.</u>** (உனது தனிப்பட்ட செல்வாக்கு)
அந்த மூன்று அதிகாரத்துவ மூல காரணங்களில் சந்தேகமின்றி இது மிகக் குறைந்த முக்கியத்துவம் உடையது. ஆனால் இது இன்னும் அதீதமான செயலூக்கம் உடையதாய் முன்னேற்றத்திற்குத் தகுதி பெற்றது. நான் இங்கே சொல்லிக் கொள்வதாவது தன்னடக்கமும், நேரிடையானதும், நம்பிக்கையையுங் கூட வெளிச்சங் காட்டும். தலைவரால் பிறப்பிக்கப்படும் அதிகாரத்தைப் பற்றி தான் பேசுகிறேன். அதாவது தெரிந்திருக்கின்றபடி தனக்குள்ளும் தான் என்ன செய்கிறேன் என்பதிலும் அமைதியான நம்பிக்கையைப் பெற்ற ஒருவரைப் பற்றி தான் குறிப்பிடுகிறேன். அதாவது தன்னுடைய திறமையான கட்டுப்பாட்டுக்குள் ஒவ்வொன்றையும் வைத்திருப்பதாக அபிப்பிராயத்தை அறைகூறும் ஒரு தலைவரைப் பற்றி குறிப்பிடுகிறேன். அதிகமான மக்களுக்கு பாதுகாப்பான உணவு தேவையாகும். திறமையான தலைமைத்துவமே அவ்வண்ணமான உணர்வை தருவதற்கு உதவி செய்கிறது.

ஆள் தன்மை என்பது தன்னுடன் ஒரு மட்ட அளவு செல்வாக்கையும் கொண்டு செல்கிறது. ஒரு உயிர் துடிப்புள்ளதும் வருண ஜாலம் உள்ளதுமான ஈடுபடுத்திக் கொள்ளும் நன்றாகத் தனது செல்வாக்கை பயன்படுத்தி மற்றவர்களைக் கவர்ந்து கொள்வது போல கண்டிப்பான மனோ பாவக் கற்பனை இல்லாத ஒருவருடைய முக பாவத்தால் பெற முடியாது. சரியான தனித்தன்மையான பலத்தை முறையாக விருத்தி செய்து கொள்வது நிச்சயமாகவே நியாயமானதும் விரும்பத் தக்க ஒன்றாகும். தேவன் தாமே உன்னுடைய தனித்தன்மையை திட்ட முன் மாதிரிப் படுத்துகிறவர். அவர் உன்னுடைய தனித் தன்மையைத் தீர்மானித்து உருவாக்கும் பல வேறுபட்ட காரியங்களை ஒன்று சேர்த்து இணைத்து வைக்கிறார். அவர் உன்னுடைய தனித்தன்மையை விருத்தி செய்தும் அபிவிருத்தி செய்யுமாறு எதிர்பார்க்கிறார். அதனை நேரிடையாக அதன் உள்ளுறை சக்திகளையும் செல்வாக்கையும் உபயோகித்து விடும்படி செய்கிறார். நீ தனிப்பட்ட விதமானதோர் மனிதனாக இணையற்ற தனித்தன்மையை உடையவன். தேவன் தாமே **உன்னை** ஒரு குறிப்பிட்ட பணிக்கு தெரிந்தெடுக்கிறார். அவர் **உன்னை** உபயோகிக்கவும் உன்னுடைய இணையற்ற விசேஷமான தாலந்துகளையும் தனித் தன்மையையும் அவர் விரும்புகிற ஏதோ ஒரு காரியத்தை வேறு யாருமே அதை போல் செயலாற்ற முடியாத முறையில், அதே வழியில் செய்து முடிக்கப்படும் படி விரும்புகிறார். இந்த மாதிரியான பலத்தின் மூல காரணங்களை பயன்படுத்துவதெப்படி?

**a: அந்தப் பணிக்கான பலத்தை செயலூக்கமாக பிரயோகிக்க**
மோசே இதற்கான சிறந்த எடுத்துக்காட்டு ஆவான்.

– அவன் தன்னுடைய சொந்த குறைபாடுகளைக் அடையாளங் கண்டு கொண்டான்.
– தேவன் அவனுடன் போகாவிட்டால் அவனும் போகமாட்டான்.
– அவன் மிகுந்த மனத் தாழ்மையுடன் அதிகாரத்தைச் செலுத்தினான்.

**b: அந்தப் பலத்தைப் பற்றிய அறிவை பயன்படுத்துதல்.**
படித்துக் கொண்டிருப்பதை நிறுத்தி விடாதே. மேலும் உன்னுடைய திறன்பாடுகளையும் அதிகரித்துக் கொள்க. ''சத்திய வசனத்தை, நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாகவும் உன்னை தேவனுக்கு முன்பாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.'' (II தீமோத் 2:15)

**c: தனித் தன்மையின் வல்லமையை உபயோகித்து**
''இயேசுவுக்குள் நீ, நீயாகவே இருக்கக் கற்றுக் கொள்.''

## V. உன்னுடைய அதிகாரத்தை பிரயோகிக்க.

உன்னுடைய அதிகாரத்தை தொடர்பு படுத்திக் கொள்ள உணர்ச்சி பூர்வமான அல்லது உணர்ச்சி பூர்வமற்ற வழிகள் இருக்கின்றன. ஒன்று அழிவை உணடாக்குவது போல மற்றொன்று பலா பலன்களை உண்டாக்குவதாகும். செயலூக்கமான வெற்றி பெறும் தலைவர்கள் ஆனவர்கள் தங்கள் உடன் ஊழியர்களை அந்நியபடுத்தவோ அல்லது விரோதித்துக் கொள்ளவோ அல்லாமல் தங்களுடைய தலைமைத்துவத்தை விரிவாக்கக் கூடிய முறையில் அதை உபயோகிக்கும்படி பொதுவாகக் கற்றுக் கொண்டவர்களாக இருப்பார்கள். உம்முடைய அதிகாரத்துவ தோற்றத்தை எண்ணற்ற வழிகளில் ஸ்திரப்படுத்திக் கொள்ள கட்டாயம் தேவையாகும்.

**# உன்னுடைய பலத்தை உமது ஒப்புமையால் அதை திடப்படுத்தி தகவல் தொடர்பு கொள்க.**
ஒவ்வொரு தலைவரும் தங்கள் ஒப்புமையைக் குறித்துப் பொறுப்புடன் நியாயமான அதிகாரத்துவ ஒப்புமையை விருத்தி செய்து அதை அவர்கள் விருப்ப சித்தத்துடன் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். நீ ஒரு தலைவனைப் போல செயல்படாவிட்டாலும் பின்னர் ஜனங்கள் உனக்கு சரியானபடி பதில் சொல்லாவிட்டாலும் நீ அவர்களை குறை சொல்லக் கூட முடியாது.

**# மனத் தாழ்மையான அதிகாரத்துடன் பேசியும் செயல்படுவாயாக.**
அதிகாரத்துவ செயல்பாடுகள் எப்பொழுதும் ஓரளவு தாழ்மையுடன் திட்டமிட்டு முன் வைக்கப்பட வேண்டும். தலைவர்களிடையே காணப்படும் தலைக் கனத்தினால் அநேக மக்கள் ஒரு வெளித் தோற்றமான வெறுப்பைக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை கொடுமையில்லாமல் செலுத்த முயற்சிக்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டால் ஜனங்கள் மகிழ்ச்சியுடனும் மரியாதையுடனும் பணிவுடனும் பிரதியுத்தரம் தருவார்கள். அதிகாரத்துவமானது அகந்தையுடன் செலுத்தப்படுமானால் விருப்பத்திற்கு மாறான விளைவை எளிதில் உண்டாக்கக் கூடும்.

**# உன்னுடைய தீர்மானங்கள் மீது உறுதியாய் நிற்க.**
செயலூக்கமான தலைமைத்துவம் பலமான தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதையே வேண்டுகிறது. அது இல்லாவிட்டால் மக்கள் சில சமயங்களில் பாதுகாப்பு இன்றி இருப்பர். ஏனென்றால் ஜனங்களுக்கு என்ன நேரிடுகிறது என்பது உண்மையில் அறியமாட்டார்கள். ஒரு தடவை தீர்மானங்கள் எடுக்கப்பட்டும் அறிவிக்கப்பட்டும் இருந்தால் அவைகள் கைக்கொள்ளப்பட வேண்டும். அப்படி ஏதாவது சூழ்நிலை சந்தர்ப்பம் ஏற்படுமானாலும் நல்ல காரணங்கள் ஏற்பட்டாலும் அதன் காரணமாக அவை மாற்றப்படலாம். இவை அப்படி பல தடவைகள் அடிக்கடி ஏற்படக் கூடாது. தீர்மானங்கள் மாற்றப்பட வேண்டியவையாய் இருக்குமானால் அவை வழக்கமாக தவறானவைகளாக இருக்கலாம். மேலும் அநேகமான வறுமையான பல தீர்மானங்கள் மக்களுடைய நம்பிக்கையை அவர்களுடைய தலைமைத்துவ வழி நடத்தி முன் செல்லுதலில் அழித்து விடுகிறது.

**# ஒழுங்கை மீறுபவர்கள் தனியாகக் கூட்டத்தில்**
ஒவ்வொரு தலைவருக்கும் குழுவைச் சேர்ந்த சில அங்கத்தினர்களுக்கு சீர்திருத்தமும் ஒழுங்கு முறையும் போதிக்க வேண்டிய சில சந்தர்ப்பங்கள் இருக்கக் கூடும். கூடுமானால் இதை பொதுவாக ஒருக்காலும் செய்யக் கூடாது. எந்த விதமோ சீர்திருத்தமோ கடிந்து கொள்ளுதலோ தனிமையான

கூட்டத்தில் நிறைவேற வேண்டும் என்ன வென்றாலும் அவர்களது மீறுதல் பகிரங்கமான தென்றால் மேற்கொண்டு எந்த விதமான மீறுதல்களும் பகிரங்கமாக நடவடிக்கைக்கு கட்டுபட வேண்டியதிருக்கும் என்று அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட வேண்டும்.

# **அடிக்கடி குழுக் கூட்டத்தை கூடிவரச் செய்து அதை நடத்தவும். அதில் ஆய்வுரை விவாதங்களை ஊக்கப்படுத்தவும். ஆனால் அது எல்லாமே தன் பொறுப்பில் உள்ளது என்பதைக் காட்டவும்.**

உம்முடைய தலைமைத்துவ அதிகாரத்தை முதலாவதாக அலுவலர் கூடுகை போன்ற கூட்டங்களில் உபயோகிக்கவும். ஏனென்றால் அங்கு கூட்டம் சிறியதாகவும், சுமுகமான உறவு கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இதனால் மனப்பான்மைகளையும் செயல்பாடுகளை சரிபடுத்தவும் வேண்டுமானால் அதை பொதுவான பெரிய கூட்டமான கூடுகையில் செய்வதால் அனாவசியமான குழப்பத்தை உண்டாக்கும் மன உணர்வை உணரப்படக் கூடும். ஆகையால் சிறிய கூடுகைகளில் இதை எளிதாகச் செய்ய முடிகிறது.

**VI: "அந்தக் கோடு" இழுக்கப்படுவதை எப்பொழுது எங்கே என்று தெரிந்து கொண்டு.**

நீவிர் அதிகாரத்தைப் பயன்படுத்தும் பொழுது தேவன் எப்பொழுதும் உங்களுடனே இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்க. "நீங்கள் எதைச் செய்தாலும், வார்த்தையிலும் செய்கையிலும் ஒவ்வொன்றையும் கர்த்தருடைய நாமத்தினால் செய்யும்படியாக" என்று நமக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது. தேவனே நமது அதிகாரத்திற்கு முடிவான மூல காரணராக இருப்பதால் அதை எப்பொழுதும் பயன்படுத்தும்பொழுது அவருடைய நாமத்தின் நல்ல மகிமைக்கு ஏற்ப அதை செலுத்தவும் ஒரு தலைவனுக்கு தேவனால் வழங்கப்பட்டால் மாத்திரமேயன்றி வேறு அதிகாரம் கிடையாது. ஆகையால் அந்த அதிகாரத்தைச் செலுத்தும் போதெல்லாம் அதை தேவனுடைய நாம்த்தின் விழிப்புணர்விலும் அவருடைய நீதியின் பிரகாரமே செலுத்தவும்.

உங்களுடைய தலைமைத்துவத்தைப் பின்பற்ற வேண்டும் என்று ஜனங்களை ஒரு போதும் வற்புறத்த முயற்சித்தல் கூடாது. மத்திய கிழக்குப் பகுதியில் கிழக்கித்திய மேய்ப்பர்கள் எப்பொழுதும் தங்கள் மந்தை ஆடுகளைத் தங்களுக்கு முன்னால் போகும்படி ஓட்டுவார்கள். ஒரு போதும் பின்னுக்கு இருந்து விரட்ட மாட்டார்கள். இயேசுவும் இது போன்ற மேய்ப்பராக இருந்தார். நாமும் கூட அவ்வாறு இருப்போம்.

**20. எப்பொழுதும் தேவனுக்கு அவருக்குரிய கனத்தையும் மகிமையையும் செலுத்துங்கள்.**

# அதிகாரம் 7 - ஒரு தலைவருடைய ஆவிக்குரிய ஜீவியம்

இந்த அத்தியாயம் இந்த பயிற்சி படிப்பில் முக்கியமானதொன்றாகும். கிறிஸ்துவுடன் நம்முடைய உறவுத் தொடர்பை விருத்தி செய்யும் மெய்யானதும் அதிகாரப் பூர்வமான கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு இது திறவு கோலை உடையதாகும். அவருக்காக செய்யப்படும் நமது ஊழியமானது அந்த சரியான உறவுத் தொடர்பின் கனியாக இருக்க வேண்டும். அவருடன் நாம் கொண்டுள்ள ஆரோக்கியமான உறவுத் தொடர்பு மூலமாகவே நாம் உண்மையாகவே கிறிஸ்துவுக்கு சேவை புரிய முடியும். உறவுத் தொடர்பு இல்லாத ஊழிய சேவையானது இயந்திர மயமாய், அன்பு இன்றி செல்லத்தக்கதாகும். ஆகவே அவ்வாறானது தேவனுக்கு என்று ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதல்ல.

மற்ற அதிகாரங்கள் தலைமைத்துவ திறமையின் பல்வேறுபட்ட பல அம்சங்களைப் பற்றிக் கூறுகின்றன. நிச்சயமாகவே அவைகளும் முக்கியமானவைகளே. ஆனால் <u>ஆவிக்குள்ளான மனிதனின் சரியான விருத்தியானது முக்கியமானதும் அத்தியாவசியமானதுமாகும். நமது அழைப்பின் நிறைவேறுதலுக்கு அது அஸ்திபாரமாகும்.</u>

இயேசு தமது சீஷர்களுக்காக பிரயோகித்த நடைமுறைகளை நாம் ஆராய்ந்து பார்க்கும் பொழுது அதாவது அவருடைய அதி முக்கியமான கரிசனையாவது அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் பக்தி விருத்தியாகும். சீஷர்களுடன் அவருடைய ஆதி உறவுத் தொடர்புகளின் போது தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக ஜீவிக்கும் ஜீவியத்திற்கான வல்லமையான சத்தியங்களுக்குள் இருக்கும் உட்கருத்தை விளக்கி கூறி வந்தார். அதாவது நாம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும் சத்தியமான மலைப் பிரசங்கமாகும். (மத் அதி 5-7) மேலும் அவர் தெள்ளத் தெளிவாக அந்தப் பிரசங்கத்தில் அவருடைய சீஷராக இருக்கப் போகும் அனைவருக்கும் தேவையான அடிப்படைத் தத்துவத்தை விளக்கிக் கூறலானார். தேவனுடையதும் இயேசுக் கிறிஸ்துவுடையதுமான இராஜ்ஜியத்தின் அங்கத்தினர்களுக்கு அவர்களுடைய முன்நாட்களிலுள்ள பழைய ஜீவியத்தின் வாழ்முறை பழக்கத்திற்கும் புதிய வாழ்க்கை நடைமுறைக்கும் உள்ள பெரும் மாற்றமான வித்தியாசத்தை அழுத்த திருத்தமாகக் கூறினார்.

ஒரு செயலூக்கமான தலைவருடைய முதல் பொறுப்பாவது தேவனுக்குள் அவருடைய சொந்த ஜீவியத்தின் ஆரோக்கியமான விருத்தி முன்னேற்றமும் தொடர்ச்சியான ஜீவியத்தின் வளர்ச்சியுமாகும். மோசேயின் உடன்படிக்கையின் படி லேவியரது முன் மாதிரியாக இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய நோக்கத்தின் படி பிரயாணம் செல்லும் பொழுதுதெல்லாம் ஆசாரியர்கள் அந்த ஜனத்திற்கு சற்று தூரமாக 2000 முழங்கள் முன்னால் போய் நடத்திச் செல்ல வேண்டும். அதே மாதிரியான வழியில் கிறிஸ்தவ தலைவரும் ஜனங்களுக்கு சிறிது முன்னதாகவே முன் உதாரணமாக இருக்க வேண்டும். அவர்கள் தன்னைப் பின்பற்றி வரும்படியாக வழிகாட்டி நடத்த வேண்டும். அவருடைய ஆவிக்குரிய முன்னேற்ற விருத்தியும் அதன் விளைவாக ஏற்படும் வாழ்க்கை நடைமுறையும் அவர்களுக்காக எப்பொழுதும் முன் மாதிரியாகவே இருத்தல் வேண்டும். ஆகையால் அடிக்கடி சொல்லப்படும் கூற்றாவது ''தேவன் ஒரு திருச்சபையை அதன் தலைவரை விட பெரிதாக வளரச் செய்ய முடியாது'' என்பதாகும். மேலும் இது ஓரளவுக்கு உண்மையும் ஆகும். ஆகையால் தலைவருடைய கரிசனையாவது ''என்னுடைய சபையை எப்படி வளரச் செய்வது'' என்பதல்ல. ஆனால் என்னுடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியத்தை ஒழுங்கான நடைமுறையில் இருக்கும்படி நிச்சயித்தும் மேலும் நான் எச்சமயத்திலுமே இயேசு கிறிஸ்துவுடைய கிருபையை அறிகிற அறிவிலும் வளரும்படியாக எப்படியும் உறுதி செய்து கொள்வேன் என்பதாய் இருக்க வேண்டும். தலைவருடைய ஜீவியம் தவறாயிருக்குமானால் அந்த சபையின் உண்மையான அஸ்திபாரங்களே அடி சரிந்து வீழ்ந்து போகக் கூடும்.

விவாத அடிப்படைக்கான கேள்விகளில் ஒன்றாவது, அந்தத் தலைவர் எப்பொழுதுமே விழிப்புணர்வுடன் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது தொழில் சார்ந்த மனப்பான்மை பற்றியதாகும். அதாவது ஊழியத்தை ஆவிக்குரிய அழைப்பிலிருந்து சீர் குலைத்து மத சார்பற்ற தொழில் சார்ந்த மனப்பான்மையாக்குவதற்காக அனுமதிப்பதாகும். ஒரு திருச்சபை நடத்த உதவும் நுட்பங்களில் அதீதமான ஈடுபாடு எளிதாகக் கொள்ளும்படி செய்வதால் ஒருவருடைய தனிப்பட்ட ஆவிக்குரிய

ஜீவியமானது வேதனை உண்டாக்கக் கூடிய வழியில் புறக்கணிக்கப்படுகிறது. சூலமித்தியின் துக்ககரமான புலம்பலாவது, ''என்னைத் திராட்சத் தோட்டங்களுக்குக் காவற் காரியாக வைத்தார்கள். என் சொந்தத் திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை'' என்பது தான். (உன் 1:6b) இந்த எளிய சொற்கூற்று ஊழியத்திற்கு ஏற்படும் ''தொழில் சார்ந்த ஆபத்தை'' வற்புறுத்திச் சொல்கிறது. பிறரது ஆவிக்குரிய ஜீவியங்களை பராமரிப்பதில் சுறுசுறுப்பாக இயங்கும் போக்கானது ஒருவருடைய சொந்தமான ஆவிக்குரிய ஜீவியத்தை அபாயகரமாக புறக்கணிக்கச் செய்கிறது. இந்த விதமான நம்பிக்கை துரோகமான பொறியானது அநேக தலைவர்களுடைய வீழ்ச்சியைக் கொண்டு வந்திருக்கிறது என்று நான் நிச்சயமாக உணருகிறேன். செயலூக்கமான தலைவர்கள் தங்களை ஊழியத்தின் தேவைகளை கடைபிடிப்பதில் தங்களை ஆழந்து திளைத்துக் கொள்ளச் செய்வதால் தங்களுடைய சொந்தமான ஆவிக்குரிய நலனை புறக்கணிக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்படுகின்றனர்.

தலைமைத்துவ திறன்பாடுகளும் மேற்பார்வை செய்யும் திறமைகளும் மிகவும் முக்கியமானவை. ஆனால் கிறிஸ்தவத் தலைவருடைய ஆவிக்குரிய ஜீவியமானது அடித்தளமானதால் அவர் இங்கே நிலைத்து நிற்கவோ அல்லது விழுந்து விடவோ நேரிடலாம். ஒரு கிறிஸ்தவ தலைவரது ஆவிக்குரிய உட்கொள்ளும் திறன் அவரால் வெளியில் காட்டி வைக்கப்படுவதை விட எப்பொழுதும் அளவுக்கு மிஞ்சியே இருக்க வேண்டும். நமது மேலான ஆவிக்குரிய கிரியைகளாவது கிறிஸ்துவுடன் நமது உறவுத் தொடர்பை விருத்தி செய்வதுடன் அவருடைய சாயலில் வளர்ந்தும் அவருடைய ஊழியத்திற்காக தகுதிகளைப் பெற்றுத் தரித்துக் கொள்வதாகும்.

இந்த விதமான யோசனைகளை இருதய சிந்தனையில் வைத்துக் கொண்டு தான் நான் ஒரு தலைவருடைய ஜீவியத்தின் பராமரிப்புக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத ஆவிக்குரிய செயல்பாட்டுக் கிரியைகளை அணுகுகிறேன். இந்த ஒழுங்கு முறைகள் மிகவும் அத்தியாவசியமான உபகரணங்களாக நாம் கிறிஸ்துவுடன் கொண்டுள்ள தனிப்பட்ட உறவுத் தொடர்பை விருத்தி செய்ய உதவும். அவற்றை தொடர்ந்து பின்பற்றிச் செல்வதோ அல்லது அவைகளை அப்பியாசித்து செய்து கொள்வதோ தன்னில் தானே போதாக் குறைவாகவும், போதுமானதாகவும் இருக்க முடியாது. அதை ஒரு மதச் சடாங்காச்சாரமாகவோ அல்லது நடைமுறை ஒழுங்காகவோ சீர் குலைந்து போகும்படியாக அனுமதிக்கக் கூடாது. இந்த விதமான பயிற்சிகளைக் குறித்த விசேஷித்த குறிப்பாவது வேதாகமத்தை வாசிப்பதாலோ அல்லது ஜெபிப்பதாலோ ஒருவருடைய கடமையை நிறைவேற்றியதாகாது. அதன் விசேஷித்த குறிப்பாவது நாம் நமது எஜமானரான கர்த்தரோடு அமைதியான நேரத்தைக் காத்திருந்து செலவழிப்பதற்காகவும் அவருடன் நமது உறவுத் தொடர்பில் ஜீவனுள்ளதாகவும் முக்கியமானதாகவும் வைத்துக் கொள்வதற்காகவே ஆகும்.

1. ஜெபம்.

அதிகமான கிறிஸ்தவர்களும் ஏராளமான தலைவர்களும் ஜெபத்தைப் பற்றிய முன் கூட்டியே உணர்ந்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கின்றனர். அதிகமாகப் பரவியுள்ள ஒரு கருத்தாவது, ''ஜெபம் என்பது தேவனுடன் பேசுவது'' என்பதே. இது நம்பிக்கைத் துரோகமான கருத்தாகும். ஏனென்றால் அது ஒரு பகுதியாகவும் முழுவதுமாக அல்லாமலும் உண்மையாகும். ஆம் ஜெபம் என்பது தேவனுடன் பேசுவது என்றாலும் அது தேவன் (சொல்வதைக்) கவனித்துக் கேட்பதும் ஆகும். உண்மையில் அது தேவனுடன் கூடிப் பேசி கூடியிருப்பதும் ஆகும். அவருடன் பேசவும், உன்னுடைய இருதயத்தை ஊற்றி விடவும் உன் கரிசனைகள் சகலத்தையும் அவருடன் பகிர்ந்து கொண்டு மேலும் அவருடைய பதிலை கவனித்துக் கேட்பதும் ஆகும்.

**எப்பொழுதுமே தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார் என்பது நாம் அவருக்கு என்ன சொல்லக் கூடும் என்பதை விட மிகவும் முக்கியமானதென்று ஞாபகத்தில் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும்.** ஜெபம் என்பது இருவழி சம்பாஷனை ஆகும். அதில் செவிகொடுத்து கேட்பதும் அதோடு பேசுவதும் உள்ளடங்கும். தேவனுக்கு முன்பாக உனது குறிப்பிட்ட நிகழ்ச்சி அட்டவணையோடு வந்து, அவருடைய காதுகளுக்குள் அந்த சுமையை அவிழ்த்து விட்டு அப்புறம் நீ ஜெபித்து விட்டதாக உணர்வைத் தவிர்த்து விடவும். ஜெபம் என்பது அதி முக்கியமாக தேவனுடன் ஒருமித்த தோழமையாகும். அதாவது ஒரு நம்பிக்கைக்குரிய பிரியமான நண்பனுடன் தரித்து தாமதிப்பது போல தேவனுடன் அமைதியான நேரத்தை செலவழிப்பதுவும் ஆகும். சில சமயங்களில் அது தேவனுடைய முக தரிசனத்தை நாடுதல் எனவும் அழைக்கப்படும். ''என் முகத்தைத் தேடுங்கள்

என்று சொன்னீரே. உம்முடைய முகத்தையே தேடுவேன். கர்த்தாவே என்று என்னுடைய இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று.'' (சங் 27:8)

இது ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய பழங்கால வழக்கில் உள்ள சொற்களாகும். இது அன்பு கொண்ட ஒருவரை தேடிக் கண்டுபிடித்து அவருடன் ஒருமித்து நீண்ட நேரம் தாமதித்திருந்து உம்முடைய இருதயத்திலுள்ள நேசத்தின் நோக்க வாஞ்சையோடு தரித்திருப்பதற்காக ஆகும். அது ஒரு வாலிபன் தொடர்ந்து காதலிப்பதைப் போலாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தேடிக் கண்டுபிடித்துத் தனக்குப் பிரியமானவரின் முகத்தை ஒரு கண நேரம் பார்க்கக் கிடைப்பதைப் போலாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகளை கைமேல் பற்றிக் கொண்டும் தன் இருதயத்திற்கு மிகழ்ச்சியைத் தருபவளுடன் ஒன்று கூடியிருக்கும் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்வது தான் இருதயத்தின் ஆசை என்பதும் தனக்குப் பிரியமானவரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதுவும் மேலும் அது காதலருடைய கண்களில் பட்டு பிடித்துக் கொள்ளப்படுவதற்காகவே தேவனுடன் நமது உறவுத் தொடர்பும் ஒரு காதல் நாடகம் ஆகும். அதை நாம் நேசத்துடனும் மன எழுச்சியான உற்சாகத்தோடும் பின் தொடர்ந்து பற்றிக் கொள்ள வேண்டும். இந்த விதமான உறவுத் தொடர்பை ஆன அம்சத்தை உயிர் துடிப்புள்ளதாகவும் மேலும் முக்கியமானதொன்றாக எப்பொழுதுமே முக்கியமான கரிசனையாகவும் பின்பற்றிச் செல்லுதலாக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த அன்பின் உறவுத் தொடர்பு வழியாக காதுகளில் ஓதப்படும் மெல்லிய சத்தமான அன்புச் சொற்களும் காதலரின் இரகசியங்களுமாக ஒரு பிதாவினுடைய இருதயத்தின் திரையை நீக்கிக் காட்டுபனவாக அமைந்து விடும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் சூழ்நிலைமையிலுமே நமது ஆவிக்குரிய ஜீவியமானது வளம் பெற்று பெறுகுவதுடன் அதன் வழியாக இந்த விதமான செழிப்பில் அதிகாரப் பூர்வமான ஊழியமும் பெருக்கெடுத்து ஓடும்.

மெய்யான ஜெபமானது தேவனுக்காக அமர்ந்து தரித்து காத்திருத்தலையும் உட்படுத்திக் கொள்கிறது. ''கர்த்தருக்குக் காத்திருக்கிறேன். என் ஆத்துமா காத்திருக்கிறது. அவருடைய வார்த்தையை நம்பி இருக்கிறேன்.'' (சங் 130:5) இந்த வாக்கியம் யோசனையாகக் கூறுவதாவது தன் எஜமானுக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் ஒரு வேலைக்காரனுடைய மனப்பான்மையைப் பற்றியும் தன் எஜமானுடைய இதயத்தின் விருப்பங்களையும் ஆசைகளையும் தெரிந்து கொள்வது தான். இது உண்மையான தேவனுடைய ஊழியக்காரனைப் பற்றிய இலட்சியமான கற்பனை உருவமாகும். அந்த எஜமானருடைய சித்தத்தைச் செய்து அவரது வாஞ்சையை செய்வதற்கும் அவருடைய நோக்கங்களை மக்களுக்கு சொல்வதற்கும் அந்த எஜமானரது சமூகத்தில் காத்திருப்பது வேண்டியதாகும். இது தான் ஊழியத்தைப் பொறுப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சுவிசேஷ அறிவிப்புக் குழுக்களையும் வரவேற்பதற்கும் அதிகாரப் பூர்வமான இடமாகும். ஆனால் நாம் அங்கு காத்திருப்பதற்கான சிறந்த காரணம் அதுவல்ல. நமது முதலாவதான தேவனுடன் கொண்டுள்ள அக்கறையாவது கர்த்தருடன் ஒருமித்து ஐக்கியம் கொண்டு பேசுவதற்கும் அவர் முகத்தைத் தரிசிப்பதற்கும், அவரை ஆராதித்து சாஷ்டங்கம் செய்யவும் அவரிடமிருந்து செய்தியைப் பெற்றுக் கொண்டு நாம் யாருக்கு ஊழியம் செய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கிறோமோ அவர்களுக்கு அந்த தூதை கொடுக்கவும் வாஞ்சிக்கிறாரோ அவர்களுக்கு கொடுக்கவும் வேண்டும்.

**2. தேவனுடைய வசனத்தினால் ஜீவித்தல்**

''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.'' (மத் 4:4) இயேசு இந்த வசனத்தை உபாகமம் 8:3ல் இருந்து எடுத்துச் சொன்னார். அவருடைய நோக்கமாவது மனிதனுடைய ஆசைகளை திருப்தி செய்வதை விட தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிதலே நல்லது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே ஆகும். என்னவென்றாலும் மேலும் இரண்டு யோசனையான கருத்துக்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்:

a. நாம் எந்த வார்த்தைகளின் படி (பிழைக்க) ஜீவிக்க வேண்டுமோ அது நடைமுறையில் உள்ள தேவனுடைய ஜீவனுள்ள வசனங்களே. தற்காலத்திய தேவனுடைய வார்த்தைகளாகிய சத்தியம் தேவனுடைய வாயிலிருந்து பிறந்து புறப்பட்டு வருகிறவைகள் ஆகும். தேவன் நிகழ்காலத்து சத்திய வசனங்களை வைத்திருக்கிறார். அவர் அவற்றை நமக்கு அறிவிக்க விரும்புகிறார். நம் தற்காலத்தில் எந்த வகையான சந்தர்ப்ப சூழ்நிலைமைகளில் நாம்

இருப்பதாகக் கண்டு கொள்கிறோமோ அதற்காகவே நமக்குத் தகுந்த மாதிரியான விசேஷித்த வசனங்கள் இருக்கவே இருக்கின்றன. நாம் சில சமயங்களில் இதை Rhema தேவனுடைய வார்த்தையென்று Logos என்பதிலிருந்து வேறுபட்டதாக அது தற்காலத்திய நடைமுறையில் உள்ள வார்த்தை என்றும் அது எப்பொழுதும் நிகழ்காலத்தில் உள்ளதாகும்.

b. அந்த வார்த்தைகள் தான் தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வருபனவாகும். அவை நமது ஆவிக்குரிய செவிகளால் செவிகொடுத்துக் கேட்டு பெற்றுக் கொள்ளப்படும். இவை நாம் வாசித்து அறிந்து கொள்ளும் வார்த்தைகள் அல்ல. நாம் காதுகளால் செவிகொடுத்து கவனித்து கேட்பவை ஆகும். நாம் தற்சமய்ம் வேதாகமத்தைப் படித்துக் கொண்டே தான் இருப்போம். இந்த வழியாக தேவன் நம்மோடு பேசுவார். அது ஏதோ ஒன்றைத் தீடீரென்று கோடிட்டு காட்டி, நமது கவனத்தைக் கட்டாயமாக அந்த வசனத்தின் மீது திருப்பி இழுத்துக் கொண்டு தற்காலத்து நடைமுறையில் நமக்குப் பொருத்தமாக இருக்கக் கூடிய வார்த்தையை நமது ஆவிக்குள் மெல்லிசைக் குரலில் பேசுவதாகும். இது தான் சுாநஅய வார்த்தையாக அதன்படியே நாம் ஜீவிக்கும் படியான தொன்றாகும்.

இது மிகவம் அதீதமாக தலைவர்கள் என்போர் ‘‘தேவ வசனத்தின் மனிதர்களாக’’ இருப்பது முக்கியமாகும். நேசர்கள், வாசிப்பவர்கள், மாணவர்கள், தேவ வசனத்தைக் கைக் கொள்ளுகிறவர்களும் முக்கியமானதே. உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள். என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன். (சங் 119:103,104)

ஊழியத்தில் நேரிடும் மற்றொரு தொழில் சார்ந்த விபத்தைப் பற்றி விழிப்புடன் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நான் இங்கே, வேதாகமத்தை பிரசங்கிக்கும் விஷயத்தைப் கொடுக்கும் மூல காரணமாகக் கருதுவதைக் குறிப்பிடுகிறேன். அதாவது நமது கூடிவரும் சபைக்கு பிரசங்கிக்கக் கூடிய பிரசங்கங்கள் மட்டுமே வேதாகமத்தில் எளிதாக நிரம்பப் பெற்றவை என்று கருதும் எண்ணத்தோடு அணுகும் முறையைக் கண்டிக்கிறேன். நாம் இந்த வகையான மனப்பான்மை நோக்கைக் கொண்டிருப்போமானால் அதை ஜனங்களுக்கு மாத்திரம் தேவனுடைய பொறுத்தமாகக் கூடும் என்பதைக் கொண்டிருந்தாலும் ஆனால் நமக்கு மிகவும் முக்கியமானதாக கூடுமானதல்ல. இது மிகவும் ஆபாயகரமானதாக நம்மை இரண்டு விதமான தராதரங்களை தேவனுடைய வார்த்தையை செயலில் மக்களுக்கு கொண்டு வருவதற்காக கையாளும் படியாக நடத்திச் செல்லக் கூடும். ஆனால் முக்கியமாக அது நமக்காக மட்டும் அல்ல. மக்களுக்காக ஒரு தராதரமும் நமக்காக மற்றொரு தராதரமும் அவசியமாகலாம்.

நாம் எப்பொழுதுமே நமது சொந்தமான ஆவிக்குரிய தேவைகளுக்கு அது வளர்வதற்கும் ஆராதிப்பதற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அப். பவுல் நம்பிக்கைத் துரோகமான ஓர் ஆபாயத்தைக் குறித்து விழிப்புணர்வுள்ளவனாக இருந்தான். ‘‘மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்படுத்துகிறேன்.’’ (I கொரி 9:27)

**3. ஆவிக்குள் ஜீவித்திருப்பது.**

‘‘நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.’’ (கலா 5:25) ஆவிக்குள் ஜீவித்திருத்தல் என்பது வசீகரமானதொரு சிறியபொழுது போக்காக நமது அதிகாரப் பூர்வமான கிறிஸ்தவ விசுவாசப் பாதையை விட்டு விலகிச் செல்வதல்ல. மேலும் அது ஒரு விருப்பமான தெரிந்தெடுத்துக் கொள்ளும் மிகையான தொன்றாக ஆத்ம பலம் கொண்ட மனப்போக்குடன் மகிழ்ந்து அனுபவிக்கும்படியான தொன்றல்ல. ஆவிக்குள் ஜீவித்தல் என்பது அதிகாரப் பூர்வமான வேதாகமத்து வழியில் ஜீவிக்கும் கிறிஸ்தவ ஜீவியமாகும். அது புதிய ஏற்பாட்டு கோட்பாட்டுப்படியான தேவன் தமது மக்களை ஜீவிக்கும் படியாக விரும்பும் கிறிஸ்தவ ஜீவியத்தின் நடைமுறை பழக்கமாகும். அதன் வேர்கள் தேவனுடைய வார்த்தை என்ற மண்ணில் உறுதியாக நாட்டப்பட்டவைகளாகும். இந்த விதமான ஜீவியத்து நடைமுறை பழக்கத்திலே இயேசுவும், அப்போஸ்தலர்களும் ஜீவித்தனர். அவைகள் இருக்கிற பிரகாரமாகத் தானே கிறிஸ்தவத்திற்கும் சட்ட ரீதியானவை. அநேகக் காரியங்களைப் போலவே இதுவும் கற்றுக் கொண்டு மனத்திற்குள் உள் வாங்கிக் கொள்ளக் கூடியதாகும்.

இந்த பிரகாரமாக ஜீவிப்பதற்கான ஒரே வழியாவது இந்த கோட்பாடுகளை அப்பியாசத்தில் வைத்துக் கொண்டு அனுபவத்தின் மூலமாக கற்றுணர்ந்து கொள்வதாகும். (அதாவது நமது தவறுகளால்) தாழ்மையாகத் தரித்திரு, உன்னுடைய தவறுகளை கர்த்தரிடம் அறிக்கை செய்க. அவருடைய பாவ மன்னிப்பையும், சீர்திருத்துதலையும் அனுபவித்துக் கொள்க. அவர் உன்னுடைய தவறுகளை கர்த்தரிடம் அறிக்கை செய்க. அவருடைய பாவ மன்னிப்பையும், சீர்திருத்துதலையும் அனுபவித்துக் கொள்க. அவர் உன்னுடைய நடையை ஒழுங்குபடுத்த உதவுவார். மேலும் நீ அவருடைய ஆவியை உண்மையாக விசுவாசத்துடன் பின்பற்றும்படி முயற்சித்தால் அவன் உன்னுடைய சாகசச் செயல்களை மேலும் மேலும் உற்சாகப்படுத்துவார்.

ஆவியில் ஜீவிப்பதாவது உன்னுடைய ஆவிக்குரிய அறிவுணர்வுகளின் படி ஜீவிக்க கற்றுக் கொள்வதாகும். அதுவும் உன்னுடைய இயற்கையான உணர்வுகளுக்குப் பதிலாக அவ்வாறு ஜீவிப்பதாகும். (இயற்கையான) சாதாரணமான மனிதன் தனது இயல்பான உணர்ச்சிகளான, ஐம்புலன்களினாலே, சுவாசித்தல், ருசித்தல், தொடுதல், பார்த்தல், கேட்டல் ஆகியவற்றால் ஜீவிக்கிறான். மனிதன் இந்த விதமான ஐம்புலன்களால் ஜீவிப்பது அவனது ஆவிக்குரிய உணர்வுகள் செத்துப் போயிருக்கும் காரணத்தினால் தானாகும். நாம் கிறிஸ்து விடம் வரும் பொழுது அவரது தீவிரமாக நாம் உயிர் பெறச் செய்து விடுவதால் நமது ஆவிக்குரிய மனிதன் விழித்தெழுகிறான். நாம் நீண்டகாலம் நமது இயற்கையான உணர்வுகளால் ஜீவிப்பதற்குப் பதிலாக அவர்கள் நமக்குச் சொல்லிக் கொள்வதாவது தேவன் நமக்கு என்ன சொல்கிறாரோ அவ்வாறு விசுவாசத்தில் ஜீவிக்கும்படி ஆரம்பிக்க வேண்டும்.

### 4. மனத் தாழ்மை

தாழ்மை என்பது முக்கியமாக இருதயத்துடன் சிந்தனையும் சேர்ந்த மனப்பான்மையாகும். அதுவும் ஒருவருடைய திறமைகளையும் முக்கியத்துவத்தையும் தன்னடக்கமான மதிப்பீடு செய்தலாகும். மேலும் அது தாழ்மையான, பணிவு உள்ளதுமான மனப்பான்மையாகும். தேவனுடைய மகத்துவமான சர்வ வல்லமையைக் குறித்தான விழிப்புணர்வு பெற்றிருத்தல் மாத்திரமே மற்ற பிற செயல்பாடுகளைவிட தாழ்மையான மனப்பான்மையை தூண்டி விட முடியாது. தாவீது இராஜா பணிவும் தாழ்மையுமான ஆவியை தன்னில்தானே உடைய ஒரு மனிதனாக இருந்தான். இளம் வயதில் அவன் தாழ்மையுடையவனாகவும் பின்னர் அவன் இராஜாவாக உயர்ந்த பொழுது அவன் இன்னுங்கூட ஒரு அழகிய ஆவியின் தாழ்மையை தன்னில் வைத்துக் கொண்டிருந்தான். இது தேவனுடைய மகத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வினால் அவனுக்குள் பெரிதாக இருந்ததாக நான் நிச்சயமாக உணருகிறேன். மேலும் அத்துடன் ஒப்பிடும்பொழுது தனது முக்கியமற்ற தகுதியற்ற தன்மையையும் உணர்ந்திருந்தான். ‘‘உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.’’ (சங் 8:3,4)

தாழ்மையாய் இந்த ஒருவரை தேவன் பயன்படுத்தவோ ஆசீர்வதிப்பதோ கடினமானதாகும். ஏனென்றால் அவர்களுக்குள்ள மனப்போக்கானது தங்களுக்கென்று மகிமையைப் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் தேவன் தமது மகிமையை மற்றொருவருடன் பகிர்ந்து கொள்ள மாட்டார். ‘‘நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.’’ (I பேதுரு 5:5-6)

தேவனுடைய ஒரு ஊழியக்காரனிடம் பெருமை என்பது முற்றிலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. ஏனென்றால் அந்த நபரால் தேவனுடைய கிருபையும் தயவான பிரியமும் அவரிடம் இல்லாவிட்டால் அவரால் ஏதொன்றையும் சாதித்து விட முடியாது. முயற்சி, திறமைகள், விடா முயற்சி ஆகியவை ஜீவியத்தின் எந்த பகுதியிலும் அவற்றின் மூலமாகவே வெற்றி என்பது வரும். ஆனால் தேவனுடைய ஊழியப் பணியில் நாம் முழுவதுமாக முற்றிலுமாக அவரையே சார்ந்திருக்கிறோம். தேவனுடைய வேலைக்காரன் தனது மோசமான சத்துருவாக அதைக் கருதிக் கொண்டு அவனை விட்டு விட்டு ஓடிப் போக வேண்டும். பெருமையானவர்களுடைய வழியில் இருக்கும் அபாயங்களைக் குறித்து தேவன் எண்ணற்ற எச்சரிக்கைகளை விடுக்கிறார்.

– ‘‘தீமையையும், பெருமையையும், அகந்தையையும் வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்.’’ (நீதி 8:13)-
– ‘‘அகந்தை வந்தால் இலச்சையும் வரும். தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு.’’ (நீதி 11:2)
– ‘‘அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும். ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு.’’ (நீதி 13:10)
– ‘‘அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. அகங்காரிகளோடே கொள்ளைப் பொருளைப் பங்கிடுவதைப் பார்க்கிலும் சிறுமையானவர்களோடே மனத் தாழ்மையாயிருப்பது நலம்.’’ (நீதி 16:18-19)

**5. விசுவாசம்.**

‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.’’ (எபி 11:6) ஒவ்வொரு விசுவாசியும் விசுவாசமுள்ள நபராக இருக்க வேண்டும். ஆனால் குறிப்பாகத் தலைவர்கள் வல்லமையான விசுவாசமுள்ள மனிதர் அல்லது ஸ்தீரிகளாக இருக்க வேண்டும். தேவனுடைய ஊழியப் பணியானது விசுவாசக் கிரியை இல்லாமல் சாதிக்கக் கூடாததாகும். தேவனுக்காக நாம் முயற்சி எடுத்துச் செய்யும் எந்தத் திட்டமும் விசுவாசத்தின் திட்டமாகும். தலைவர்கள் விசுவாச வீரர்களாய் இருந்து சவால்களை விடுத்தும், தூண்டி எழுப்பும் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரின் விசுவாசம் ஆகியவற்றை உற்சாகப்படுத்த வேண்டும்.

நாம் இப்பொழுது பேசுகின்ற விசுவாசமானது அத்தியாவசியமான தேவனுக்குள்ளும் அவருடைய வார்த்தைக்குள்ளும் வைத்திருக்கிற விசுவாசத்தைப் பற்றி பேசுகிறோம். இந்த வகையான விசுவாசத்தை பயன்படுத்த வேண்டுமானால் தேவனிடமிருந்து ஒரு குறிப்பிட்ட விசேஷமான வார்த்தையைப் பெற்றுக் கொண்டு அதன் மேல் அடிப்படையில் நமது விசுவாசத்தை வைக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு அவசியமானது குருடான விசுவாசமோ அல்லது தன்னில்தானே விசுவாசமாயிருப்பதோ அல்லது ஒருவருடைய திறமையின் மேல் கொண்டுள்ள விசுவாசமோ அல்ல. மெய்யான விசுவாசமானது ஒரு நேர் மறையான பிரதியுத்தரமாக, தேவனுடைய குறிப்பிட்டதோர் வார்த்தைக்காக எடுத்துக் கொள்ளப்படும் செயல்பாடுமே ஆகும். தேவன் உன்னை ஏதோ ஒன்றைச் செய்யும்படியாக சொல்லுவாரானால் உன்னைக் கொண்டே உன் மூலமாக தேவன் அதை செய்து முடிப்பார் என்பதை உண்மையென எடுத்துக் கொண்டு அவருடைய ஆணைகளுக்குக் கீழ்படிதலுடன் செயல்படுவாயாக. ‘‘எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்.’’ (யோபு 23:14)

கர்த்தரிடத்தில் கொண்டுள்ள மெய் விசுவாசமானது பொறுப்பற்றதாகவோ அல்லது தகாத நம்பிக்கையைக் கொண்டிருப்பதோ அல்ல. அது காற்று வெளியிலிருந்து ஏதோ மகத்தான பெரிய திட்டங்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து ‘‘நான் இதற்காக தேவனை நம்பப் போகிறேன்’’ என்று சொல்வதில்லை. ஒரு விசுவாசியான மனிதன் தன் சொந்தத் திட்டங்களைத் தீட்டியோ பின்னர் அவைகளை ஆசீர்வதிக்குமாறு தேவனை விசுவாசிப்பதில்லை. மெய்யான விசுவாசமானது தேவன் வார்த்தையைப் பிறப்பிக்கும் பொழுதே ஆரம்பிக்கிறது. தேவனிடமிருந்து பிறக்கும் குறிக்கப்பட்ட வார்த்தைக்கு பிரதியுத்தரமான நேர்மறையான கீழ்படிதலாகும்.

விசுவாச மனிதன் வழியை காட்டி முன் நடத்திச் செல்ல வேண்டும். தேவனுக்குள் கொண்டுள்ள விசுவாசமாவது எதையெல்லாம் பற்றியதென்பதற்கு அவன் எப்பொழுதுமே முன் உதாரணமாக இருக்க வேண்டும். தேவனால் கொடுக்கப்படும் ஆணைகளை பெற்றுக் கொள்ளத் தகுதி பெற்ற மனிதனே தேவனுடைய கற்பனைகளாகியவற்றிற்கு தகுதியான பிரதியுத்தரத்தை முன் யோசனையுடன் சிந்திப்பவன் ஆவான். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இடைபடும் அனைவருக்குள்ளும் விசுவாசத்தை தூண்டி எழுப்பக் கூடியவன் ஆவான்.

அப்படிப்பட்ட ஒரு மனிதன் தான் நெகேமியா. எருசலேமின் துக்ககரமான நிலைமையைக் குறித்து ஏதோ செய்ய வேண்டும் என்பதை அவன் தேவனுடைய சவாலாக உணர்ந்த நேரத்திலிருந்து அவன் விசுவாசத்தினால் பிரதி கிரியை செய்யத் தொடங்கினான். ஆட்களை தேர்ந்தெடுப்பது, நிதியுதவி பெற்றுக் கொள்வது வியூக யுக்திகளை நிர்ணயிப்பது வேலையாட்களான சேனையை ஒழுங்காக அமைப்பது போன்றவைகளைச் செய்தான். ஆனாலும் அவன் செயலூக்கமான ஒரு

தூதுக் குழுவுக்கு சிறந்த முன் உதாரணம் ஆவான். நெகேமியா என்ற புத்தகம் செயலூக்கமான தெய்வீகமானது தலைமைத்துவத்தைப் பற்றி அநேக படிப்புகளைப் போதிக்கக் கூடிய முக்கியமான பாடங்களைக் கொண்டிருக்கிறது. அது திறமைக்கும், செயலூக்கமான செயல்பாட்டிற்கும் வல்லமையானதோர் உதாரணமாகத் திகழ்கின்றது. ஆகவே அந்த புத்தகம் முழுவதையுமே இதை மனத்தில் கொண்டு தயவு செய்து படித்துப் பாருங்கள். அந்த எல்லா நிறுவனங்களைப் பற்றிய ஸ்தாபனம், நிர்வாகம், தலைமைத்துவ திறன்பாடுகள் ஆகிய சகல கோட்பாடுகளைப் பற்றியும் நீவிர் கண்டுபிடித்துக் கொள்வதைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும்.

### 6. ஆவிக்குரிய பகுத்தறிவு.

செயலூக்கமான தலைமைத்துவம் வாழ்க்கையின் எந்தப் பகுதியிலுமே சரியான தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதைச் சார்ந்தே இருக்கின்றது. ஒரு சமயம் ஒரு வாலிபனான தலைமை நிர்வாகி ஒரு மூத்த அனுபவம் வாய்ந்த வரும் திறமை மிகுந்த வெற்றியுள்ள தொழில் துறை நிபுணரான முனைவரை சந்தித்துப் பேசும் சந்தர்ப்பத்தை பெற்றார். அவர் வெகு விருப்பமான நோக்கத்தோடு ‘‘ஐயா உமது வெற்றியின் இரகசியம் யாது?’’ என்றார். அந்த முதியவர், ‘‘சரியான தீர்மானங்கள் எடுத்தல்’’ என்றார். அந்த இளையவர், மறுபடியும் ‘‘சரியான தீர்மானங்கள் எடுத்துக் கொள்ள எப்படி நீங்கள் கற்றுக் கொள்கிறீர்கள்?’’ என்று கேட்டார். அந்த முதியவர் ‘‘அனுபவம்’’ என்றார். அந்த இளையவர் மறுபடியும் ‘‘நீங்கள் அனுபவத்தை எவ்வாறு அடைகிறீர்கள்’’ என்று தொடர்ந்து வற்புறுத்தினார். ஆம் தவறான தீர்மானங்களை எடுத்துக் கொள்வதால் என்று வெற்றி சித்தியுள்ள மனிதர் பதிலிறுத்தார்.

சரியான தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுதலும் கிறிஸ்தவ தலைமைத்துவ சாம் ராஜ்ஜியத்தில் வெற்றிக்கானதொரு கோட்பாடாகும். ஆனால் இதைச் செய்யக் கூடிய திறமையானது தவறான தீர்மானங்களை எடுத்துக் கொள்வதால் வரும் பலா பலன் என்றாகாது. ஆவிக்குரிய பகுத்தறிவின் முன்னேற்றமாவது நமது சரியான தீர்மானங்களுக்கு மூல காரணமான ஊற்றாக இருக்க வேண்டும். தேவனுடைய ஊழியப் பணியில் நமது தீர்மானங்களை எடுத்துக் கொள்வதில் பரிசோதனைகள் செய்து கொண்டிருப்பது கூடாத காரியமாகும். மேலும் தவறான தீர்மானங்கள் எடுத்தும் ஊறு உண்டாக்கும் நிலையை ஏற்படுத்தக் கூடாது. ஏனென்றால் தேவனுடைய நாமத்தைத் தரித்த எந்த ஊழியப் பணிக்கும் நாம் பொறுப்புள்ளவர்களாவோம். மேலும் ஓரளவில் அவரது நாமம். சறுக்குதலுக்குட்படும். மேலும் நமது தவறுகள் எதிர் மறை விளைவுகளால் தேவனுடைய நாமத்தையும், அவரைப் பற்றிய மக்களின் நல்லெண்ணத்தையும் பாதிக்கவுங் கூடிய அபாயம் நேரிடக் கூடும். ஆகவே நாம் நமது கவனத்தை முற்றிலுமாகப் பயன்படுத்தி தேவனுடைய உத்தமம் பிரதிபலிப்பதை மோசமாக பாதிகும் எந்த விதமான தவறையும் செய்யாதபடி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இந்த சரியான தீர்மானங்களை எடுத்துக் கொள்வதற்கு வழியாவது நமது திட்டங்கள் அனைத்தையும் தேவனுக்கு முன்பாக சமர்ப்பித்துக் கொள்வதை உறுதி செய்து கொள்வதுடன், அவருடைய பதில் உத்தரவுகளுக்காக திறந்ததோர் இருதயத்தையும் சிந்தனையையும் கொண்டிருக்க வேண்டும். எசேக்கியா தேவனுக்கு முன்பாக அவன் பெற்றுக் கொண்ட நிரூபத்தை விரித்துப் பிடித்துக் காண்பித்து அவருடைய வழிகாட்டுதலுக்கும் ஆணைக்கும் காத்திருந்தது போல நாமும் தேவனுக்கு முன்பாக நமது திட்டங்களை விரித்துக் காண்பிக்கும்படி வைக்க வேண்டும். (II இராஜா 19:14-19) தேவனுடைய ஊழியக்காரராக தேவனுடைய நாமத்தைக் கனப்படுத்தியும் மகிமைப்படுத்துவதற்குமான ஒரு பெருமிதமான மாறுதல் நமக்கு உண்டு. ஆகவே நாம் அதிகமான பல தவறுகள் செய்து கொள்ளும் ஆடம்பரத்தை எடுத்துக் கொள்ள முடியாது. மேலும் அந்தத் தவறுகளானவை ஆபத்தானவைகளாக நீண்ட கால விளைவுகளாகவோ, நாசத்தை விளைவிப்பவைகளாகவோ தேவனுடைய ஊழியப் பணிகளுக்கு இருக்கக் கூடாது.

### 7. கீழ்படிதல்.

‘‘பலியைப் பார்க்கிலும் கீழ்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் (கீழ்படிதலுக்கு எதிர்மறை) பில்லி சூனிய பாவத்திற்கும் முரட்டாட்டம் பண்ணுதல் அவ பக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது.’’ (I சாமு 15:22-23) தேவன் கீழ்படிதலுக்கு மேன்மையான முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறார். இது ஏனென்றால் ஊழியத்திற்கான வேலையாக, திருச்சபையின் கடமையாக இராஜ்ஜியத்தைக் கட்டும் கட்டுமானமாக,

சகலமுமே தேவனுடைய வேலையாக இருக்கிறது. அவரே சகலத்திற்கும் சர்வ வல்லமையுள்ள தலையானவர். ஆகையால் இதன் ஒவ்வொரு அம்சமும் அவருடைய ஆரம்ப முயற்சியிலும், மேலும் நமது பங்கிற்கான ஒவ்வொரு செயல்பாடும் அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்படிதலின் பலாபலன் ஆக இருக்கிறது. இதற்கு இரண்டிலொன்றான எந்த மாறுதலும் நினைத்துப் பார்க்கக் கூட முடியாததாகும். தேவன் அதை இரண்டகம் பண்ணுதல், முரட்டாட்டம் பண்ணுதல் என்று கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது அவருடைய பார்வையில் அவைகள் பில்லி சூனியம், அவ பக்தி, விக்கிரக ஆராதனை போன்றவை என்கிறார்.

# அதிகாரம் 8 - மக்களிடையே உள்ள உறவுத் தொடர்புகள்

செயலூக்கமான தலைமைத்துவம் என்பதில் ஒருவருக்கொருவர் தனிப்பட்ட உறவுத் தொடர்புகள் அவசியமாக இருக்கிறது. ஒரு தலைவர் செயலூக்கத்துடன் தனது தலைமைத்துவ குழுவுக்கும் அவரைப் பின்பற்றி வருகிறவர்களுக்கும் அவர்களுடன் உறவு தொடர்பு வேண்டும். இயேசு இதற்கு உயர்ந்த தரமுடைய உதாரணத்தை அவருடைய சீஷர்களுடன் கொண்ட உறவுத் தொடர்பில் தந்து உதவுகிறார். தலைமைத்துவத்தின் இன்றியமையாத ஒரு அம்சமாவது மக்களைத் திறம்பட மேற்பார்வை செய்வது ஏனென்றால் மக்கள் தாம் தலைவருடைய சிறந்த உதவும் வகை முறை ஆவார்கள்.

செயலூக்கமான தலைவருக்குத் தேவையானது:

**ஜனங்கள்.**

ஒரு தலைவர் எப்பொழுது தலைவராக இருக்க மாட்டார்? - அவரை ஒருவரும் பின்பற்றிச் செல்லாத பொழுது!

ஒரு தலைவரை அவரது தலைமைத்துவ திறமைகளால் நிர்ணயிக்கக் கூடாது. ஆனால் அவரைப் பின்பற்றிச் செல்லும் மக்களின் தகுதியைப் பொறுத்துதான்.

- இயேசு பன்னிரு சீஷர்களை வெகு கவனத்துடன் தெரிந்து எடுத்தார்.
- அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவருடைய நேரத்தை எடுத்துக் கொண்டார்.
- அவர்களுக்குள் இருந்த தலைமைத்துவ சாத்திய கூறுகளைக் கண்டு அறிந்து கொண்டார்.
- அவர்களுடன் தகுந்த நேரத்தை செலவழித்தார்.
- தன்னுடைய ஜீவியத்தை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.
- அவருடன் அவர்கள் கொண்டிருந்த பொது நோக்குடன் ஒன்று சேர்ந்திருந்ததால் கற்றுக் கொண்டனர்.

கிறிஸ்து தேர்ந்தெடுத்த வியூக யுக்தியான தெரிந்து கொள்வதற்கு ஆர்வத்தைத் தூண்டுவதும் சவாலாக அக்கறையுடன் கவனிக்க வேண்டியதாகும். அவரது தூது பரப்பும் திட்டமாவது இந்த உலகத்தை இரட்சித்து பின்னர் அவரது மீட்பின் நற்செய்தியால் இந்த உலகத்தை நிரப்புவது தான். இதன் பின் பகுதியைத் தொடர்ந்து அதை எவ்வாறு நிறைவேற்றினார் என்பதைக் கவனிப்பது வசீகரித்து கவரக் கூடியதாகும். மேலும் தனது ஊழியத்தின் பெரும்பகுதியை பன்னிரு சீஷர்களைப் பயிற்றுவிப்பதில் செலவழித்தார் என்பதும் மறைபொருளான சாட்சியாகும். அவருடைய முன் உதாரணம் இந்த விஷயத்தில் சாத்தியமாகிற தலைவர்களைப் பற்றிய முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறது.

டாக்டர் பில்லி கிரஹாம் வரலாற்றிலே வேறு யாரையும் விட அதிகமான மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தவராக ஒரு கால் இருக்கக் கூடியவர். ஒரு தடவை அவரைப் பார்த்து அவருக்கு தம் ஜீவியத்தை மறுபடியும் வேறு வித்தியாசமான விதமாக ஏதாவது செய்வாரா என்ற வினா கேட்கப்பட்டது. அவரது பிரதியுத்தரமானது அதீதமான தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை தூண்டக்கூடியதாக இருந்தது. அவர் சொன்னதாவது தமக்கு தமது ஜீவியத்தை ஜீவிக்கும்படி சந்தர்ப்பம் தந்து அவரது ஊழியத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடுமானால் பன்னிரண்டு மனிதர்களுக்கு பயிற்சி கொடுப்பதில் தம் கவனத்தை ஒருமுனைப்படுத்தி தமது ஜீவனையும் தாம் தெரிந்து கொண்ட ஒவ்வொன்றையும் அவர்களுக்குள் தமது ஜீவனையும் ஊற்றி விடுவதாகக் கூறினார்.

<u>ஆகவே தலைவருடைய முதன்மையான கடமையாவது மற்ற வழி நடத்தி முன் செல்லும் தலைவர்களைப் பயிற்றுவிக்க வேண்டியது தான்</u>!!! சில நூற்றுக்கணக்கான மக்களை ஒரு மனிதனால் செயலூக்கத்துடன் மேய்த்து நடத்தலாம் என்பதை நம்பிக்கையாக எடுக்கக் கூடாது. அப்படி சேனைக்கு ஆட்களை தெரிந்தெடுத்து அந்த மாதிரியான மக்களுக்கு பயிற்சி கொடுத்தால் தலைவர் தனது சாத்தியக் கூறுகளை பெருக்கல் முறையில் பெருக்கஞ் செய்கிறார். அவருக்கு இணை ஊழியர்கள், உதவியாளர்கள், கீழ்மட்ட மேய்ப்பர்கள் தேவைப்படுகிறார்கள். ஆகையால் ஒரு மூத்த போதகர் தனது மேய்ச்சல் குழுவை நல்ல மேய்ப்பனாக கூர்ந்த கவனத்துடன் வழி நடத்துவதால், அவர்களும் தங்கள் முறையில் அதிலும் பெரிதான மந்தையை (சபையை) மேய்க்கக் கூடும்.

ஒவ்வொரு தனி நபரான தலைவருக்கும் தங்களுக்கு அருளப்பட்டிருக்கும் குறிப்பிட்ட ஈவுகளை சார்ந்திருப்பதில் அவர்களுக்கு என்று தனிப்பட்ட குறைமட்ட அளவு உண்டு. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட போதகர் சுமார் நூறு நபர்களை வெற்றிகரமாக மேய்த்து நடத்திச் செல்லும் திறமை பெற்றிருக்கலாம். ஒரு தடவை தனக்கு என்று எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்களை அடைந்த பின்னர் மேலும் சில அங்கத்தினர்களை அதிகமாகப் பெற்று ஒரு சிலரை இழக்க நேரிடலாம். ஆனால் கூடிவரும் சபையினரின் எண்ணிக்கையாக ஏறக்குறைய நூறாக அங்கத்தினர்கள் இருக்கலாம். அவர் அந்த தடுப்புச் சுவரை எவ்வாறு உடைத்து முன்னே போகலாம்? இதற்காக தெரிந்ததோர் வழியானது தனது பிரசங்கிக்கும், போதிக்கும், நிர்வாகம் செய்யும், பொதுத் தலைமைத்துவ திறன்பாடுகளை அபிவிருத்தி செய்து கொள்வது தான். இந்த முறையானது அவரை நூற்றைம்பது அங்கத்தினர்களானதோர் இலக்கை அடையச் செய்யக் கூடும். ஆனால் இதை விடச் சிறந்த நல்லதோர் முறையானது வரமும், திறமையும் பெற்ற மற்ற ஊழியர்களை தனது செயல்பாட்டை ஈடு செய்ய கண்டுபிடித்துக் கொள்வது தான். ஒரு எடுத்துக்காட்டாக மூத்த போதகர் ஒரு செயலூக்கமான சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தை பெற்றிருக்கலாம். ஆனால் அவர் நல்ல மேய்ப்பர் அல்ல. அவர் அநேக மக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயம் செய்வார். ஆனால் அவர்களை பிடித்து நிறுத்த அவரால் முடிவதில்லை. ஆகையால் அவர் மேய்ப்பனாக பலமான வரத்தை உடைய ஒருவரைக் கண்டுபிடித்துக் கொள்ளும்படியாக அவசியமாகிறது. இந்த வர ஈவுகளின் கலந்த சேர்க்கையானது 300 அங்கத்தினர்கள் என்ற எண்ணிக்கைக்கு உயர்த்தும்படியான சாத்தியக் கூறு ஆகும். மேலும் சரியானபடி மற்ற வரங்களும் கூடுதலாக சேர்ந்து கலந்த சேர்க்கையாகும் பொழுது அந்த எண்ணிக்கையான மக்களின் சாத்தியக் கூறு அவர்கள் செயலூக்கத்துடன் தீடீரென எதிர்பாராத விதமாக எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது எச்சரிக்கையுடன் கிரியை செய்ய முடியும்.

**ஒரு பொது நோக்கு இணை குழுவாக அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.**
இயேசுவுடைய சீஷர்கள் அவருடன் கூடி இருந்தபடியால் அவரிடமிருந்து மிகவும் அதிகமாகப் படித்து அறிந்தனர். அவர்கள் அவர் சொன்னது ஒவ்வொன்றையும் கவனித்துக் கேட்டனர். அவர் செய்த ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்த்தனர். ஒரு அறிவுரையாளரிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய இது சிறப்புடையதான கற்றுக் கொள்ளும் காரியமாகும். இயேசுவுடன் ஒரு இணை நோக்குடன் இருந்ததால் சீஷர்கள் மிகவும் எளிதாக அதிகமான விஷயங்களைப் படித்தறிந்தனர். அவர்கள் கற்றுக் கொண்டதில் பெரும் பகுதியானது அடிமனத்தால் கிரகித்துக் கொள்ளப்பட்டிருக்கும். அவர்களுக்கு சாதாரணமான வகுப்பறைக் கல்வி போதனை இல்லை. அவர்களுடைய பயிற்சியான ‘‘கைமேல் பயிற்சி’’ அதாவது ‘‘பணியிடைப் பயிற்சியாக’’ பணிமேல் பயிற்சியாக இருந்தது. இயேசுவுடைய ஆவிக்குரிய போதிக்கும் முறையில் படித்தனர். ‘‘அது செய்து கற்றல்’’ என்ற போதனை முறை விதியாகும். இயேசு அவருடைய சீஷர்களுக்கு முன்பாக அநேகக் காரியங்களைச் செய்தார். அவர் அவற்றை எப்படிச் செய்தார் என்று கவனமாகப் பார்த்தனர். பின்னர் அவர் அவர்களைப் பார்த்து அதே காரியங்களைச் செய்யும்படியாக பணித்தார். சிலர் இந்த நடைமுறையை ஒரு எளிதான விதத்தில் விவரிக்கின்றனர்.

1: நான் அதைச் செய்கிறேன். நீங்கள் என்னை கவனித்துப் பாருங்கள்.
2: நான் அதைச் செய்கிறேன். நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள்.
3: நீங்கள் அதைச் செய்யுங்கள். நான் உங்களுக்கு உதவுகிறேன்.
4: நீங்கள் அதைச் செய்யுங்கள். நான் அதை கவனித்துப் பார்க்கிறேன்.
5: நீங்கள் அதைச் செய்யுங்கள். யாரோ மற்றொருவர் அதைக் கவனித்துப் பார்க்கட்டும்.

**அவர்கள் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்று காண்பித்தார்.**
இயேசு தமது சீஷர்களுக்கு ‘‘பணிமேல் பயிற்சி’’ பெற்றுக் கொள்ளுமாறு செய்தார். தனது ஊழியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அவர்களுக்குச் செய்து காட்டினார். அவரைப் பார்த்து கவனித்த பொழுதே அவர்கள் கற்றுக் கொண்டனர். பிறகு அவர்களுக்கு அவர் கற்பித்த பிரகாரமே அவர்கள் செய்ய வேண்டும் என்பதை அவர் அவசியமாக்கினார். இந்த நடைமுறை நமக்குக் கூட மிகவும் திறமையானதாக வேலை செய்யக் கூடும். இந்த முறையிலான தலைமைத்துவத்தைத் தான் அநேக போதகர்கள் இதை நீணடதாக சலிப்பாகவும் அதீதமான பாரமுடையதாகவும் பார்க்கின்றனர். சிலர் தங்களுடைய வேலையையும் கடமைகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதைக்

கடினமாகக் காண்கின்றனர். அவர்க்ள ஏகாந்தமான பண்ணை மேய்ப்பர்களாகவே இருக்க விரும்புகிறதுடன் தலைமைத்துவத்தின் பங்கையும் தாங்களே வைத்துக் கொள்ள நினைக்கின்றனர். ஆனால் இந்த ஏதேச்சாதிகார முறையான தலைமைத்துவத்தில் ஒரு தலைவர் மற்ற சகோதரர்களை விட்டு நீங்கி தனிமையில் கிரியை செய்வாரானால் அவருக்க வேதாகமத்துத் திட்ட முறைப்படியான தலைமைத்துவத்தில் எந்த விதமான பங்கும் கிடையாது. அது கட்டுப்படுத்தும் முறைகளாலும் ஒளி மறைவான ஆபாயங்களால் நிரம்பப் பெற்றதாகும். மெய்யான ஊழியக் குழு தரக் கூடியதான கண்டிப்பும் சம நிலையும் அங்கு குறைவு படுவதாலும் தனக்கு நெருக்கமும் சமமான உடன் ஊழியர்களுடைய பாதுகாப்பு அவருக்கு இருப்பதாலும் அவரை மேற்கொள்ளக் கூடாத ஆபாயங்களுக்கு அந்த ஏகாந்த நிலை ஊழியரை ஆளாக்கி விட்டு விடக் கூடும். இயேசு உபயோகித்து செய்து காட்டிய நடைமுறை எப்பொழுதுமே அறுவடை தரக்கூடியது. அவர் தம்மைச் சுற்றி தமது சீஷர்களைக் கூட்டிச் சேர்த்து அவர்களுடன் தமது ஜீவியத்தைப் பகிர்ந்து கொண்டார். தமது சீஷர்களுக்கு இராஜ்ஜியத்தின் பணியை எப்படி செய்வது என்பதை செய்து காட்டி பின்னர் அவர்களை அதே பணியைச் செய்யுமாறு மகா திட்டத்தைக் கொடுத்தார்.

**அவர்களுக்குத் தனித்தனி பொறுப்பை ஒதுக்கித் தந்தார்.**

இயேசு சொன்னதாவது, ''நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்'' என்றார். (மத் 14:16) இயேசு தமது சீஷர்களுக்குப் பட்டங்களையோ, கௌரவமான பதவிப் பெயர்களையோ அல்லது அலுவலர்களாகவோ அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆனால் பொறுப்புகளை அவர்களுக்கு ஒதுக்கித் தந்தார். அவர்களுக்குக் கடமைகளைக் கொடுத்து அதை நிறைவேற்றச் செய்தார். அந்தத் திரளான மக்கள் பசியினால் அவர்கள் மயக்கமடைய ஆயத்தமாயிருந்தபொழுது சீஷர்கள் இந்த நிலைமையை இயேசுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு முன்பாக அந்த சவாலை நேரடியாக வைத்தார். அவர்களை நோக்கி, “அவர்கள் போக வேண்டுவதில்லை, நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்'' என்றார். அவருடைய சகாயத்தினாலும் ஆசீர்வாதத்தினாலும் அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களைப் போஷிக்க முடிந்தது. சீஷர்களுக்கு என்ன அற்புதமானதோர் அனுபவம். நாளின் முடிவில் அந்த விதமானதோர் சாதனையை திரும்பிப் பார்க்கும்பொழுது என்ன ஆனந்தமான மனக் கிளர்ச்சியான நிலைமையாகும்.

ஆகவே நீங்கள் சுவிசேஷ சேனைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும்பொழுது அதிகாரத்துவத்தை நாடி நிற்பவர்களை அல்ல. பொறுப்புகளைக் கிட்டிச் சேர்ந்து அடைய விரும்பும் மக்களையே தெரிவு செய்தல் நலம். இதை நான் ஒரு நிர்ணயிக்க உதவி செய்யும் அளவு கோலாகக் கருதுகிறேன். பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள விரும்பும் ஊழியர்களையும், அத்துடன் நடத்தப்படும் ஊழியமும் செயல்படுமானால் உமக்கு எப்பொழுதுமே உள் மனச் சாட்சியுடனும் கடினமாக உழைக்கக் கூடிய ஊழியர்களும் இருப்பார்கள். ஆனால் ஆட்களைத் தெரிவு செய்யும் பொழுது பதவி, பட்டம் அதிகாரம் இவற்றுடன் கூடிய பதவிகளில் கவனமுள்ள மக்களைத் தெரிவு செய்தால் நீங்கள் இந்த மக்களை அடிக்கடி கடினமாக உழைப்பதற்கு ஈடுபாடற்றவர்களாகக் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.

**அவர் அதிகாரத்துவத்தை அவர்களுக்கு பகுத்துக் கொடுத்தார்.**

அதிகாரத்துவத்திற்கு முன்னதாகவே பொறுப்பே எப்பொழுதும் முன்வரும் அதிகாரத்துவம் என்பது ஒருவரை செயலூக்கத்துடன் பொறுப்புகளை நிர்வகித்து வருவதற்காக அதிகாரப் பூர்வமாகக் கொடுப்பதாகும். இயேசு கொடுத்த அதிகாரத்துவமானது அவரது நாமத்தினாலே அதிகாரப் பூர்வமாக அளிக்கப்பட்டதாகும். அவர் தமது சீஷர்களை வெளியே உலகத்திற்குள் அனுப்பிய பொழுது அவர்களுக்கு ஒரு உன்னதமான பொறுப்பை அவர்களுக்குப் பகுத்துக் கொடுத்தார். அதாவது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட மகா திட்டமாவது “நீங்கள் உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்றார். பின்னர் அவர்களுக்கு அதிகாரத்துவத்தை வழங்கினார். “என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள். சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என்றார். (மாற்கு 16:15-18)

அந்த பணியோடு உடன்போவது இந்த அதிகாரத்துவமே. இந்த அதிகாரத்துவமானது இயேசு நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரோ அதை செய்து நிறைவேற்றுவது

தான். உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது, அவர்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, திருச்சபையையும் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் உலகமெங்கும் ஸ்தாபிக்க வேண்டும். நாம் இதை □அவருடைய நாமத்தினால்□ செய்தல் வேண்டும். ஏனென்றால் இதை தான் அவர் கட்டளையாகக் கொடுத்தார்.

**அவர்களுக்கு வல்லமையை பகிர்ந்து கொடுத்தார்.**

இயேசு மேலும் தமது வல்லமையையுங்கூட சீஷர்களுக்குக் கொடுத்தார். நீங்களோ உன்னதத்தில் இருந்து வரும் பலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். ஆம் அது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தான். இயேசு நமக்கு செய்து காட்டியதும் தமது சீஷர்களைச் செய்யுமாறு பணித்ததுமான திட்டத்தைப் பற்றிய பணிகளை நாம் செய்து நிறைவேற்றக் கூடியதாக ஆக்குகிறது. ''நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்த படியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்.'' (அப் 10:38) மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ''நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.'' (யோவான் 14:12)

**அவர்களுடைய நடவடிக்கைகளைக் (மேற்பார்வை செய்தார்) கண்காணித்தார்.**

இயேசுவும் அவருடைய சீஷர்களும் நாடெங்கும் சுற்றித் திரிந்து பிரயாணம் செய்தனர். அவர் அடிக்கடி அவர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து பார்வையிட்டு அறிவுரை கூறுவார். அவர்களுடைய மேற்பார்வையாளர், அவர்களுடைய மனப்பான்மைகளையும் அவர்கள் பல திறப்பட்ட செயல்பாடுகளை மேற்கொண்டபொழுதும் கவனித்து அடிக்கடி அவர்களைச் சீர்திருத்தம் செய்தும் கண்டித்துணர்த்தியும் சரியான ஆவியில் நிலைமைகளில் நிலைநிறுத்தவும் அறிவுரை கூறுவார். அவர்களுடைய வேலையை கட்டுப்பாட்டுடன் கையாண்டு சீர்திருத்தம் செய்வார்.

**பற்பல சமயங்களில் இயேசுவானவர் தமது சீஷர்களை பிழைதிருத்தி சீர்திருத்தம் செய்ய வேண்டி இருந்தது.**

சிற்சில சந்தர்ப்பங்களில் அவர்களை சரியாக கண்டிக்க வேண்டியதும் இருந்தது. அதை அவர் முற்றிலும் கட்டாயமாகச் செய்தார். அவர்கள் சாதாரணமாக நிறைவேற்றிய பணியைத் தவிர்த்து அவர்களுடைய மனப்பான்மைகளையே அவர் வழக்கமாகத் திருத்த வேண்டியதிருந்தது. ஆனால் மனப்பான்மைகளே அதீதமான முக்கியத்துவம் உடையதாக தேவனுடைய ஊழியப் பணிகளில் கருதப்படுகிறது.

அவர் அடிக்கடி தமது சீஷர்களைத் திருத்தியும் அவர்களை அவருடன் ஒழுங்காகவும் ஆக்கினார். எப்பொழுதுமே இயேசு இந்த செயல்பாட்டை முடிவில் நேர்மறையானதும் பலா பலன் அளிக்கக் கூடியதான போக்கிலே செய்து கொண்டார். அவர் தமது சீஷர்களுக்கு பிழைத் திருத்தத்தை மருந்து போலப் பயன்படுத்தினார். மேலும் அவர்களை தாங்கள் அதைரியம் அடைந்து விடாமலும் அவர்கள் ஆவிக்குள் நொறுங்கிப் போகாதபடிக்கும் ஒரு வித பாணியில் கடிந்து கொண்டு அவர்களை சரியான நிலைக்கு நிற்கும்படிக் கொண்டு வந்தார். பொதுவாக மக்கள் நீங்கள் அவர்களை எதிர்பார்க்கும் அளவுக்கு உயர் மட்டத்தில் எழும்புவார்கள். இயேசுவும் தமது சீஷரிடமிருந்து மிகவும் உயர்ந்த மட்டத்திலிருந்து வந்ததை எதிர்பார்த்தும் பெற்றுக் கொள்ளவும் செய்தார்.

**அவர்கள் பெருக்கல் அட்டவணையாக பெருக்கம் உண்டாக்கும்படி அவசியமாக்கினார்.**

சீஷர்களாக ஆக்கப்பட்ட ஒவ்வொருவரும் பின்னர் ஒரு கால கட்டத்தில் யாராவது ஒருவரை சீஷராக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். மெய்யாகவே ஒருவர் எப்படி நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் முடிவான பரீட்சையானது அவர்களுடைய சீஷர்கள் எவ்வாறு நன்றாகச் செய்கிறார்களா என்பதைக் கவனித்துப் பார்ப்பதாகும். ''அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.'' (II தீமோத் 2:2)

**சில மனப்பான்மைகள் அவர்களுக்குள் ஆழமாகப் பதியும்படி செய்தார்.** (மனதில் ஆழமாகப் பதியும்படி)

**# மனத்தாழ்மை**

இயேசுவானவர் தாமே தமது சீஷர்களுக்கு மனத்தாழ்மைக்கு நிலையானதோர் உதாரணமாக விளங்கினார். அவர் இந்த வாழ்க்கைக்குத் தேவையான சத்தியத்தை உதாரணமாகவும் நல்லொழுக்க விதியாகவும் அவர்களுக்குப் போதித்தார். தேவன் மனத் தாழ்மையுள்ளவர்களுக்கு பிரியமான இடம் வைத்திருக்கிறார். அவர் இருதயத்தில் அகந்தை உடையவர்களை வெறுத்தும் தமது அபரிமிதமான இரக்கத்தையும், கிருபையையும் தாழ்மையுள்ளவர்களுக்கு அளிக்கிறார். விழுதலுக்கு முன்னால் மனமேட்டிமை வரும். ஆனால் மனத் தாழ்மையானது தேவனுடைய இராஜ்ஜியத்தில் பதவி உயர்வுக்கு முன்னதாக வைக்கப்பட்டிருக்கிறது.

**# ஒருமைப்பாடு**

"உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் (symphoneo) பரலோகத்திலே இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்." (மத் 18:19) தேவன் ஒருவராயும், மூவர் ஒன்றாகவும் இருக்கிறார். அவர் ஒருமைப்பாட்டின் மேல் பிரியமாயிருந்து அதை ஆசீர்வதிக்கிறார். (சங் 133) ஒரு தலைமைத்துவ குழுத் தலைவர்களை ஒருமித்திருக்க வற்புறுத்துகிறார். மேலும் எங்கே ஒருமைப்பாடும் இராஜ விசுவாசம் இல்லையோ அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை ஆசீர்வதிக்க மாட்டார்.

**# ஒழுங்குணர்வு**

ஒரு தனி நபருக்குள் ஒழுங்குணர்வு என்பது நல்ல ஆர்வமுடைமையும், நேர் மறையான எதிர் பார்ப்புகளால் நிறைந்தும், வருங்காலத்தைப் பற்றி மன எழுச்சியுடைமையையும் பற்றிப் பேசுகிறது அதாவது தங்களுக்கு முன் வைத்திருக்கும் திட்டத்தில் ஈடுபாடு கொள்ளும்படியான ஆர்வமும் மன எழுச்சி கொண்ட ஒருவரைக் குறிக்கிறது.

தோழமையான மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடும் பொழுது மேற்கூறப்பட்டவை அனைத்தையும் தனக்குள் சேர்த்துக் கொண்டு மேலும் அதனோடு கூட்டப்படும் கோட்பாடான சிறந்த ஒருமைப்பாடு, இணக்கம் (உடன்பாடு) நம்பகத் தன்மை ஆகியவையான தோழமையான கூட்டத்தின் ஒன்றுபட்ட திறமையும் ஆகும். ஒரு இராணுவ நிகழ்ச்சியில் இந்த விதமான மனப்பான்மை உயர்ந்த வெகுமதியானது ஒரு சேனை அணியின் ஒழுங்குணர்வைப் பற்றி ஒருவர் சொல்லும் பொழுது அது அவர்கள் நம்பத்தக்க தன்மையுடனும், பாதுகாப்பு, நேர் மறையானதாயும் இருக்கிறதென்பது அர்த்தமாகும். மேலும் இந்த விதமான மனப்போக்கு அந்த அணியில் உள்ள அனைவருக்குமே பொதுவானதாகும். அவர்கள் நம்பகத் தன்மையான உணர்வுடன் தங்களுடைய சேனை அல்லது பட்டாளத்தைப் பற்றிய ஒன்றுபட்ட திறமையைப் பற்றி இருப்பார்கள். இது தான் அடிக்கடி குழுவின் "துடிதுடிப்பான அறிவுக் கூர்மை" எனப்படும். ஒருமைப்பாட்டின் ஆவி, இணக்கம், ஒற்றுமை, ஒன்றையொன்று சார்ந்திருத்தல் பரஸ்பரமான மரியாதையாகும். இந்த விதமானதோர் ஆவி உணர்வையே இயேசு தம் சீஷருடைய மனதில் பதித்து விட விரும்பினார். அதையே அந்த ஆவி உணர்வையே கிறிஸ்தவத் தலைவர்களிடையே காணப்படும் படியாக அதைப் பார்க்க விரும்புகிறார்.

# அதிகாரம் 9 - தீர்மானங்கள் எடுத்தல்

நல்ல தலைமைத்துவமானது சரியான தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதில் பெருமளவு சார்ந்திருக்கிறது. ஒவ்வொரு தலைவரும் தொடர்ந்து நேரிடுகிற தேவைகளுக்கான தீர்மானங்கள் செய்வதைச் சந்திக்கும் படியாய் இருக்கிறது. மேலும் அதன் முடிவான செயலூக்கமான தன்மையானது அந்த தீர்மானங்களில் உயர்ந்த சதவிகிதமானவைகளை சரியாகச் செய்யும் அளவைச் சார்ந்ததாகும். செயலூக்கமான தலைவர் நல்ல தீர்மானங்கள் செய்யக் கூடியவராக அவரது செயலூக்க தன்மையானது இந்த முக்கியமான விவாதத்தை பெரிதும் சார்ந்திருக்கிறது.

<u>தீர்மானஞ் செய்தலுக்கு எதிரான சில சத்துருக்கள்:</u>

**1. தோல்வியைப் பற்றிய அச்சம்**

ஒவ்வொரு சாத்தியக் கூறுள்ள தலைவரும் நேருக்கு நேர் சந்திக்கக் கூடியதும் இன்னும் நடவடிக்கை எடுக்கக் கூடியதுமான தோல்வியைப் பற்றிய அச்சமாகும். ஒரு நபர் இந்த விதமான பிரச்சனையை ஒரு காலும் சந்தித்திருக்காதவரானால் ஒரு வேளை அதிகமான சுய நம்பிக்கையுடையவராக பாதாள வீழ்ச்சி அடையக் கூடிய ஆபத்தில் இருப்பார். (நீதி 16:18) வேதத்தில் மிகப் பெரிய தலைவர்கள் கூட இந்த அச்சத்தை மேற் கொண்டார்கள். பின்னர் தேவன் அவர்களை மகா பெரிய சாதனைகளை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொண்டார்.

**2. போதாக் குறையான தகவல்கள்**

சரியான தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கான திறவு கோலாவது கையின் மேல் இருக்கும் பிரச்சனைக்குத் தேவையாக எவ்வளவுக்கு அதிகமாகத் தகவல்களைப் பெற முடியுமோ அவ்வளவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அறை குறையானதும் போதாதுமான தகவல்களைக் கொணடு நல்ல தீர்மானங்களை ஒரு போதும் எடுத்துக் கொள்ள முடியாது. எதிரும் புதிருமான கட்சிகளுக்கு இடையே வழக்குகளைத் தீர்த்து வைக்கத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளும்பொழுது இது குறிப்பாக உண்மையானதாகும். தீர்மானமானது ஒரு கட்சியிக்கு சார்பாக தீர்ப்பாகவும் இரண்டாவது கட்சிக்கு எதிராகவும் இருக்குங்கால், கிடைக்கக் கூடிய சகல விஷயங்களையும் தகவல்களையும் உங்கள் வசம் பெற்றிருப்பதற்காக கால அவகாசம் எடுத்துக் கொண்டு அதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பாரபட்சமான தோற்றத்தைக் கொண்டு தீர்மானம் எடுத்துக் கொள்ள ஒரு போதும் கூடாது. ஏனென்றால் அது உங்களுடைய நம்பகத் தன்மையை ஆபத்தான குழி தோண்டுதலுக்கு நடத்திச் செல்லும்.

**3. உறுதியான நம்பிக்கையில் குறைபாடு.**

தீர்மானம் எடுப்பதில் உறுதியான நம்பிக்கைக் குறைவைக் குறித்துப் பயப்பட வேண்டாம். நமது தீர்மானங்களில் பல தூர நோக்கைக் கெண்டவையாக அநேக மக்களுடைய ஜீவியத்தைப் பாதிப்பதாகும். குறிப்பிட்ட அளவு உறுதியான சுய நம்பிக்கைக் குறைவானது நமக்கு ஒரு எச்சரிக்கை குறிப்பை அறிமுகப்படுத்துகிறது. முடிவாக நல்லதோர் தீர்மானஞ் செய்ய உதவுமானால் அது ஒரு ஆரோக்கியமான காரியமாகும்.

உறுதியான நம்பிக்கைக் குறைவானது உம்மை பல முக்கியமான காரியங்களைச் செய்யும்படி தூண்டி விடும்.

a: அதிகமான எச்சரிக்கையைப் பயன்படுத்துமாறு.
b: மேலும் அதிக ஊக்கமாக ஜெபம் ஏறெடுக்கும்படியாக.
c: தேவ ஞானத்தை அதிக ஊக்க வாஞ்சையுடன் தேடும்படியாக. (யாக் 9:5-7)
d: நம்பிக்கைக்குரிய உங்கள் ஆலோசகர்களைக் கலந்து ஆலோசிக்கும்படியாக. (நீதி 11:14)

**4. காரியங்களைத் தள்ளி வைக்கும் போக்கு**

உறுதியான நம்பிக்கைக் குறைவும் தனது தனிப்பட்ட பாதுகாப்பின்மையும் தீர்மானஞ் செய்தலை ஒரு பயமுறுத்தும் பாரச் சுமையான பொறுப்பாக ஆக்கி விடக் கூடும். அத்தகைய உணர்ச்சிகளின் போக்குக்குச் சிறப்பானதோர் பிரதிச் செயலாவது தீர்மானஞ் செய்வதைத் தாமதப் படுத்துவதாகும். ஆனால் அடிக்கடி தாமதமாக்கப்படும் தீர்மானமானது அந்தப் பிரச்சனையை முன்னை விட அதிகமாகக் குழப்பம் அடையும்படி செய்யும்.

முக்கியமான தீர்மானங்களை அவசர அவசரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சில சமயங்களில் மிகவும் சிறந்த தீர்மானம் ஒருவர் எடுத்துக் கொள்ளக் கூடுமானால் அந்தக் காரியத்தைத் தூங்கும்படி செய்வது தான். (அதாவது ஆறப் போட்டு வைப்பதாகும்) என்னவென்றாலும் சில சிறிய தீர்மானங்கள் அடிக்கடி ஏற்பட்டு அதனால் நம்மிடமுள்ள உறுதியான சுய நம்பிக்கைக் குறைவு அதைத் தாமதிக்குமாறு நடத்தி விடக் கூடும். தாமதம் என்பது நேரத்தை திருடுகிறவன் மட்டுமல்ல. மேலும் குழப்பத்தைத் தொடர்ந்து நீடிக்கச் செய்பவராகும். சிறிய தீர்மானங்கள் குவிந்துக் கொண்டு ஒருவரை மூழ்கி ஆழ்த்தி விடும் வரைக்குங்கூட குவிந்து கொண்டிருக்கும். உங்கள் திட்டமானது நடைமுறைப் படி ஓடிக் கொண்டு இருக்கும்போது தீர்மானங்களை நிறைவேற்றி நிலை நிறுத்த முயற்சிக்க வேண்டும். அவைகளை உங்கள் மேல் தலைக்கு மேல் போகும்படி அனுமதித்தல் கூடாது.

**முக்கியமான தீர்மானங்கள் கலந்தாலோசித்தலுக்கு தகுதி பெற்றவையாகும்.**
''ஆலோசனை இல்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள். அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்.'' (நீதி 11:14) ''நல்யோசனை செய்து யுத்தம் பண்ணு. ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயம் கிடைக்கும்.'' (நீதி 24:6) அப். பவுல் சொல்லுகிறார், ''ஆனால் எங்களுக்கோ (பன்மை) கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (I கொரி 2:16) எந்த ஒரு தனி நபரும் ''கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது'' என்று உரிமை கொண்டாடுவது அளவுக்கு மீறி ஆபத்தானதாகும். அதிலும் குறிப்பாக அந்தக் காரியத்தில் அவருடைய தீர்ப்பை ஆமோதிக்காத ஒரு சமூகத்தின் பகுதியாக இருப்பாரானால் அவ்வாறு ஆகக் கூடும். ஆகவே ஒரே நிறுவனமாகக் கூட்டாகச் சேர்ந்து கிறிஸ்துவின் சிந்தையைத் தேடுவது அதிகப் பாதுகாப்பாகும். மேலும் பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது. அப் 15:28 என்ற உரிமையைக் கொண்டாடக் கூடிய ஒரு முடிவுக்கு வருவதும் பாதுகாப்பாகும்.

பெருமையும், வஞ்சனையும் இரண்டுப் பொது காரணங்களால் ஏன் சில தலைவர்கள் தெய்வீக ஆலோசனையை தங்களுக்கு சமமான ஆலோசகர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்பதாகும். பெரிய தீர்மானங்கள், குறிப்பாக மற்றவர்களுடைய ஜீவியத்தை அடியோடு பாதிப்பவைகளாக அவைகள் எப்பொழுதுமே நிறுவனக் குழு உறுதிப்படுத்துதலுக்குத் தகுதி பெற்றவையாகும். பெரும்பான்மையான அவருடைய நண்பர்களுடையதும் ஆலோசகர்களுடையதுமான ஆலோசனையான புத்திமதிகளுக்கு எதிராக யாராவது ஒரு தலைவர் தொடர்ந்து அந்தத் திட்டத்தை நடத்துவதில் பிடிவாதமாக இருந்தால் அவர் தோல்வியைத் தீர்ப்பாக அடையக் கூடியதொன்றை மேற்கொண்டு நடத்தும்படி வஞ்சிக்கக் கூடிய அபாயத்துக்குள்ளாவார்.

<u>நல்ல தீர்மானங்களைச் செய்து கொள்ளுதல்:</u>

**# பெறக் கூடிய அனைத்துத் தகவல்களையும் சேகரித்துக் கொள்க.**
இது ஒரு துப்பறியும் நிறுவனம் நடத்தும் போக்கில் செய்யப்படக் கூடாது. ஆனால் இது எல்லா வகையிலும் முழுமையானதுமான மனப்பான்மையோடு சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும். அது சட்ட ரீதியான முறையில் மேற் கொள்ளப்படாமல் இனிமையான பண்புடனும், கருணையுடனும் செயல்படவேண்டும்.

**# அவைகளை மிகச் சரியாகவும் நியாயமானதாகவும் மதிப்பீடு செய்து வியாக்கியானம் (பொருள் விளக்கம்) செய்யவும்.**
தேவனை எப்பொழுதுமே வேதாகமத்தில் கிருபையான அருள் உள்ளம் படைத்த இரக்கமுள்ள நீதிபதியாகவும் மேலும் முற்றிலும் நம்பிக்கைக்குகந்த தீர்ப்புச் செய்யும் ஒருவராகவும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. ஆபிரகாம் சொன்னதாவது, ''பூமி அனைத்திற்கும் நியாயாதிபதியானவர் சரியானதைச் செய்யாமல் இருப்பாரோ?'' என்று சொன்னான். இது சொல் வன்மையான கேள்வியாகும். இது ஒரு கேள்வி என்பதை விட நேர் மறையான கூற்று என்று சொல்லலாம். அதிலும் மெய்யாகவே இந்த அண்ட சராசரத்தையும் உருவாக்கினவரானவருக்கு தவறு செய்வது முடியாதது என்பதாகும். தெள்ளத் தெளிவாக நமது மனுஷீகமானது நாம் தேவனைப் போல நம்பத் தகுந்தவர்களாக இருப்பதற்கு விலக்கி விடுகிறது. எதற்கென்றாலும் தேவனுடைய ஊழியக்காரராகவும், பிரதி நிதிகளாகவும் நாம் சிறந்த நீதிபதிகளாக நம்பந் தகுந்தவர்களாக பிழையற்றவர்களும் நம்பிக்கைக்குரியவர்களுமாக எப்பொழுதுமே இருக்க வேண்டும்.

**# அந்த விவாதத்திற்கு முழுவதுமானதும் கூடுமானதுமான புரிந்து கொள்ளுதலையும் பெற்றுக் கொள்க.**

நான் இங்கே குறிப்பிடுவது ''பரத்திலிருந்து வருகிற ஞானம்'' என்பதாகும். (யாக் 3:17) ''பரத்திலிருந்து வருகிற ஞானமோ, முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயும் இருக்கிறது.'' (யாக் 3:17) அதை உண்மையாய் வாஞ்சிக்கிறவர்களுக்கு இந்த வகையான ஞானம் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன். இருமனமுள்ளவன் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினையாதிருப்பானாக.'' (யாக் 1:5-7)

அந்த குறிப்பிட்ட சூழ்நிலைமையில் தேவனுடைய ஞானத்தைக் கொண்டு வருவதும் அக்காரியத்தில் அவருடைய சிந்தையைக் கொண்டிருப்பதும் இன்றியமையாததாகும். நாம் கர்த்தருடைய நாமத்தினால் சூழ்நிலைமைகளுக்குள் தீர்ப்பைக் கொண்டு வருவதற்காக முன் குறிக்கப்பட்டவர்கள் அவரால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஞானத்தினால் நாம் எப்பொழுதுமே முக்கியமான தீர்மானங்களை எடுத்துக் கொள்வது அவசியமாகிறது.

**# அதை ஊக்கமானதும் நீடிய பொறுமையுமுடைய ஜெபத்திற்கான காரியமாக ஆக்குக.**

ஒரு தீர்மானத்திற்குள் அவசரப்பட்டு ஒரு போதும் ஓடக் கூடாது. மேலும் முக்கியமானதோர் தீர்மானத்தைப் பற்றி ஜெபிக்க போதுமான நேரம் இல்லாத காரணத்தினால் அவசர அவசரமாக செய்து கொள்ள வேண்டுமென்று உணரக் கூடாது. அவசர அவசரமான அவைகளை நடைமுறைப்படுத்துவதால் தவறுகள் செய்யப்படக் கூடும்.

**# கர்த்தருக்கு முன்பாக காரியம் முழுவதையும் முன் வைக்க வேண்டும்.**

''எசேக்கியா ஸ்தானாதிபதிகளின் கையிலிருந்து நிருபத்தை வாங்கி வாசித்து பின்பு அவன் கர்த்தரின் ஆலயத்திற்குப் போய் அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்தான்.'' (II இராஜா 19:14) அந்தக் காரியம் முழுவதையும் முழு விழிப்புடன் கர்த்தருக்கு முன்பாக வைக்கப்பட வேண்டும் என்பதை, கர்த்தருக்கு முன்பாக விசுவாசத்துடனும் ஜெபத்துடனும் ஆவிக்குரிய அந்நியோந்நியத்துடனும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை உறுதியுடன் நிச்சயப்படுத்திக் கொள்ளவும். அப்படி நீ செய்யும் பொழுது, அவருக்கு முன்பாக சந்நிதானத்தில் காத்திருந்து அவருடைய பிரதியுத்தரத்தையும் அச்சு அடையாளங்களையும் உன்னுடைய ஆவியில் பெற்றுக் கொள்ளவும்.

**# கர்த்தருடைய சிந்தையைப் பெற்றுக் கொள்ளும்படியாக தீர்மானஞ் செய்து கொள்க.**

சில சமயங்களில் நாம் சகல விவாதங்களும் அபாயத்துக்குள்ளாக இருப்பதாகவும், பலவேறுபட்ட மக்களுடைய கண்ணோட்டமான குறிப்புகள் உள்ளடங்கி இருப்பதாகவும் கூட்டலாக நமது சொந்த இயற்கையான அபிப்பிராயங்களும் சேர்ந்திருப்பதாகவும் நாம் அந்த விவாதத்தைப் பற்றி விழிப்புள்ளவர்களாக இருப்பதால் அந்த சூழ்நிலைமையில் தேவனுடைய சிந்தனையை பெற்றுக் கொள்ளாத படி புறக்கணித்து விடுகிறோம். எப்பொழுதுமே தேவனுடைய நோக்கப் பார்வையானது மற்ற ஏதோன்றையும் விட முக்கியமானதாக அந்த மட்டத்திற்கு நாம் தேவனுடைய சிந்தனையைத் தவற விட்டிருப்போமானாலும் நாம் முக்கியமான காரணியான ஏதுக்களையும் தவற விட்டிருப்போம்.

**# நெருக்கமான நம்பத் தகுந்த ஆலோசகர்களைக் கலந்து ஆலோசிக்கவும்.**

அநேகமானத் தீர்மானங்களை ஊழியத்திற்காகவும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காகவும் கூட்டாக கலந்தாலோசிக்கப் பட வேண்டும். எந்த ஒரு மனிதனுக்கும் கர்த்தருடைய சிந்தனையின் மேல் எந்த விதமான ஏக போகமான உரிமை கிடையாது. சகல முக்கியமான விவாதங்கள் அனைத்தும் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு முடிவான பொறுப்பு உள்ளவர்களாக உள்ளடங்கிய முக்கூரான தலைமைத்துவத்தினால் ஒருமித்து தீர்மானிக்கப் பட்டாக வேண்டும்.

**# ஜெபத்துடன் அதன் விளைவாகிய பலனை மனதின் சாட்சியாக பார்க்கவும்.**

அந்த சூழ்நிலைமையின் ஊடே ஜெபிக்கும் பொழுது உம்முடைய ஆவியில் தேவனுடைய நோக்கத்தின் பலனாக வரக்கூடிய விளைவு எப்படியிருக்க வேண்டும் என்பதை கற்பனை செய்து பார். இதை

சுத்தமான மன நோக்குடனும் ஜெபத்துடனும் செய்தாயானால் நீ ஒரு தீர்க்கதரிசனமான தோற்றக் காட்சியைப் பெறக் கூடும். நீ மெய்யாகவே ஆவிக்குள்ளாக தேவனுடைய விருப்பமாயிருக்கும் விளைவைப் ''பார்ப்பாய்''. பின்னர் நீ அந்தக் கருத்தோட்ட விளக்கத்தில் அதற்குரிய தீர்மானத்தை எடுத்துக் கொள்ளக் கூடும். தேவனுடன் ஜெபத்தில் காத்திருந்து அதை நிறைவேறும்படி கொண்டு வர தேவன் கண்பார்க்க வேண்டும்.

**ஞாபகத்தில் வைத்திருக்கவும்:**

**ஒரு தீர்மானமானது வாஞ்சிக்கும் முடிவை சாதனையாக அடைய முடியுமானால் அது ''நல்லதோர் தீர்மானமாகும்.''**

ஒரு நல்ல தீர்மானத்திற்கு எப்பொழுதுமே ஒரு செயல்படக் கூடிய பலாபலன் இருக்கும். ஒரு தீர்மானம் ஆனது கொள்கை அளவில் இருக்குமானால் அது மேலும் நல்லதாகவோ அல்லது சரியானதாகவோ இருக்க முடியாது. முற்றும் பிழையற்ற தீர்மானங்கள் சரியான பலாபலனைத் தரும்.

**நல்ல தீர்மானங்கள் செய்வதில் உள்ளே அடங்கியவை:**

1. சரியான பிழையற்ற தீர்ப்புகள் செய்தல்.
2. உறுதியான தீர்மானத்தை அதன் பால் செலுத்துதல்.
3. அசையாத தடுமாற்றமின்றிய ஒப்படைப்பைச் செய்தல்.
4. சமயத்திற்கேற்ற தகுந்த நடவடிக்கை எடுத்தல்.
5. அந்த வாஞ்சிக்கும் பலா பலனை அடைதல்.

**சாராம்சம்:**

**செயலூக்கமான தலைமைத்துவமானது எளிதாக நல்ல தீர்மானங்கள் செய்தல் என்பதல்ல. அதை மேலும் அதிகாரத்துடனும் வெகு விரைவில் முடிவானதொன்றாக எடுத்து கொள்ளப்படவும் வேண்டும்.**

1: நல்ல தீர்மானங்கள் செய்து கொள்வது சரியான வழியில் உன்னைக் கொண்டு செல்லும்.

2: வழியில் உன்னைக் கொண்டு செலுத்தும் அதிகமான நல்ல தீர்மானங்கள் உன்னை அதை தொடர்ந்து நிறைவேற்ற உதவும்.

3: சரியான தீர்மானங்கள் உன்னைப் பின்பற்றுகிறவர்களை எண்ணிக்கையில் அதிகரிக்கச் செய்யும்.

4: தனிப்பட்ட தீர்மானங்கள் செய்யும் போது:
   a. அமைதியாக உட்கார்ந்து கொண்டு, ஓய்வாகவும் அழுத்தமின்றியும் இருப்பாயாக.
   b. கவனத்தை சிதறவைக்கும் காரணங்களை அப்புறப்படுத்துக.
   c. உன்னுடைய யோசனைகளை ஜெபத்துடன் தேவனிடம் ஒப்படைப்பு செய்வாயாக.
   d. உன்னுடைய வேதாகமத்தையும், எழுதும் நோட்டுப் புத்தகத்தையும் உன்னுடன் வைத்துக் கொள்க.
   e. உனது ஆவியில் தேவனுடன் ஐக்கியப்படுக.
   f. உன் சிந்தனையில் வரும் ஒவ்வொன்றையும் எழுதி வைத்துக் கொள்க.

5: தீர்மானம் செய்வதற்கான சிறப்பு விதி:
   a. ஜெப சிந்தையுள்ள மனப்பான்மை
   b. கவனித்துக் கேட்கும் இருதயம்.
   c. முடிவு செய்யும் ஆற்றலுள்ள
   d. (நிச்சயித்த தீர்மானமுள்ள) உறுதியான சித்தம்.
   e. வேண்டும் என்று எடுக்கப்படுகிற செயல்பாடு.

6: யோசனை செய்வதில் தெளிவான தன்மை.
குழப்பம் செய்து ஏற்படுத்தும் காரணிகளை ஒதுக்கித் தள்ளுக.

7: உறுதியற்ற நிலையில் தீர்மானிக்கக் கூடாமை ஒரு கெட்ட தீர்மானமாகும்.
பலவீனமான சமயங்களில் நாம் சில வேளைகளில் நம்மால் தீர்மானங்கள் எடுக்கக் கூடாத நிலைமை என்று நினைக்கிறோம். ஆகவே அவ்வாறு போவதைத் தாமதப்படுத்துகிறோம்.

என்னவென்றாலும் இது தன்னில்தானே அடிக்கடி ஒரு உறுதியற்ற தீர்மானமாக அமையக் கூடும். தீர்மானம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற தீர்மானமானது தன்னில் தானே ஒரு மோசமான தீர்மானமாகும். தீர்மானம் எடுத்தலைத் தாமதிப்பது சில தலைவர்களிடையே பழக்கமாக ஆகிவிடுகிறது. அவர் வெகு அரிதாகவே தங்களுக்குள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தான் முக்கியமான தீர்மானங்களைச் செய்யக் கூடும். ஒரு தலைவருக்குள் இந்த விதமான பண்பாடானது வறுமையானதாகும். மேலும் வெற்றி பெற வேண்டுமானால் அதை மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். தலைமைத்துவத்தின் பங்கிற்கு உறுதியற்ற தன்மையான அளவுக்கு மீறி அதைரியப் படுத்துவதாகவும் குழு அங்கத்தினரிடையே குழப்பமாகவும் ஆகக் கூடும்.

8: ஒரு மோசமான தீர்மானம் என்பது காரியத்தின் முடிவு என்றாக முடியாது.
தவறிழைக்காதவர்கள் ஒருவருமே கிடைக்கவே கிடையாது. ஒவ்வொருவரும் சில சமயங்களில் தவறிழைக்கக் கூடியவர்களாய் இருக்கக் கூடும். ஆனால் இது ஆபாயகரமானதாக இருக்க முடியாது. ‘‘நான் ஒரு தவறான தீர்மானம்’’ செய்தேன் என்று சொல்லுவதற்கு எப்பொழுதுமே, விருப்ப ஆயத்தமாயிருங்கள். தாழ்மையாயிருந்து அதை சீர்படுத்த ஆயத்தமாயிருங்கள். இந்த விதமான மனப்பான்மை உண்மையாகவே நம்பிக்கையை அதிகரிக்கும். நீங்கள் தவறு செய்யாதவர்கள் அல்ல. உங்களது துணை ஊழியர்களும் பின்பற்றிச் செல்பவர்களும் அத்தன்மையுடையவர்களே. நீங்கள் தாழ்மையாயிருந்து அதைப் பற்றி மனம் வருந்துகிறவர்களானால் அவர்கள் உங்களை மன்னித்து உங்கள் தவறைத் திருத்தித் கொள்ளும்படியாக உதவுவார்கள்.

9: அதிகமான எண்ணிக்கையான தவறான தீர்மானங்கள் மக்களுடைய நம்பிக்கையை நாசப்படுத்தி விடும்.
சில சமயங்களில் சில தவறுகள் தவிர்க்க முடியாதவை ஆகும். ஆனால் பல எண்ணிக்கையான தவறுகள் செய்யப்பட்டாலும் மேலும் ஒரு தலைவர் தவறான தீர்மானங்கள் எடுப்பவர் என்ற பெயர் பெற்றுக் கொள்ளும்படி ஆரம்பம் ஆனாலும் அவருடன் துணை ஊழியர்கள் தலைவராக அவரிடமுள்ள நம்பிக்கையை இழந்து விடுவார்கள். சற்று மோசமான தீர்மானங்களை செய்வதால் உம்முடைய தலைமைத்துவ அதிகாரத்துவத்தில் ஒரு போதும் நம்பிக்கையை வளர்க்காது.

10: தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கான மூன்று ‘‘C’s’’ கள்
அதிகமான உயர்ந்த தீர்மானங்கள் செய்வதற்குத் தேவ ஞானம் தேவைப்படுகிற நேரங்களில் தேவ ஞானத்தினால் எந்த விதமான வெளிப்பாடும் பெறும்படியாகத் தேவையற்ற பல சிறிய தீர்மானங்களும் இருக்கின்றன. ஒரு தலைவராகப் பங்கேற்கும் எந்த நபரும் அடிக்கடி அப்படிப்பட்ட தீர்மானங்களைச் செய்து கொள்ளுவது தேவையாக இருக்கலாம். அவ்வாறு தீர்மானங்கள் செய்யும் பொழுது தனது சொந்த ஞானம் அனுபவம் இவற்றிலிருந்து நம்பிக்கைக்கு உகந்ததாகச் செய்து கொள்ள வேண்டும். இதற்கான மூன்று அடிப்படையான மூல காரணிகள் இதைச் செய்யும் நடைமுறையில் உதவி செய்யக் கூடியவையாகும்.

**a: பொது அறிவு.**

எந்த ஒரு தலைவருக்கும் இது அத்தியாவசியமானது. ஆனால் வருந்தத்தக்கதாய் நாம் சில சமயங்களில் பொது அறிவு என்பது சாதாரணமாகப் பொதுவானதல்ல என்ற கண்டுபிடித்துக் கொள்கிறோம். மற்ற வார்த்தைகளில் சொல்வதென்றால் இந்தப் பகுதியில் அநேக மக்கள் குறைவுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்கதாகும். உன்னுடைய பொது அறிவை உபயோகப்படுத்துவதை உன் வாணிபமாக ஆக்கிக் கொள். நீ எவ்வளவுக்கு அதிகமாய் பயன்படுத்துகிறாயோ அவ்வளவுக்கு அதிகமாய் அது விருத்தி அடையும்.

**b: ஒப்படைப்பு.**

ஒரு தடவை தீர்மானஞ் செய்து கொண்டால் அதை அமல்படுத்தி நடைமுறைப் படுத்துவதற்கு உன்னை முழுவதுமாக ஒப்படைப்பு செய்து கொள்.

**c: தைரியம்.**

தீர்மானஞ் செய்தல் என்பது தொடக்கம் என்பது மாத்திரமே மட்டும் ஆகும். அதற்கென்று ஒரு தரம் ஒப்படைப்பு செய்து விட்டால் என்ன நேரிட்டாலும் சரி அதை நிறைவேற்றி முடிப்பதற்கான ஊக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

# அதிகாரம் 10 - பகிர்ந்தளித்தல் என்ற கலை

நாம் சற்று சுருக்கமாக தீர்மானஞ் செய்தலின் முக்கியத்துவத்தை விவரித்து விவாதித்தோம். மேலும் செயலூக்கமான தலைமைத்துவத்திற்கு அது எவ்வளவு முக்கியமானது என்றும் சொன்னோம். அடுத்து விவாதத்திற்கான பொருளாகவும் செயலூக்கமான தலைமைத்துவத்திற்கான தீர்வுக்குரியது என்னவென்றால் பகிர்ந்தளித்தல் கோட்பாட்டின் கொள்கைகளை கண்டு அறிந்து கொண்டு அவைகளை அப்பியாசித்துக் கொள்வதாகும். இதோடு சம்பந்தப்பட்ட சில அடிப்படையான விவாதத் தலைப்புகளுக்கு நமது கவனத்தைத் திருப்புவோம்.

**தலைமைத்துவம் என்பது தேவனால் அருளப்பட்ட பொறுப்பாகும்.**
கிறிஸ்தவ தலைமைத்துவமானது மற்றெல்லா தலைமைத்துவத்தினின்றும் மாறுபட்டதாகும். அரசியல், தொழில், வணிகம் (அ) வியாபாரம் ஆகியவற்றின் தலைவர்கள் மனுஷீக பலத்தாலும், திறமைகளாலும் இயங்குகின்றனர். ஆனால் கிறிஸ்தவ தலைமைத்துவமானது தேவனால் அருளப்பட்ட பொறுப்புக்கு பிரதிகிரியையாக வேலை செய்கிறது.

**சகல தலைவர்களும் அதிகாரத்தின் கீழ் வந்து யாரோ ஒருவருக்கு பதில் கொடுக்க வேண்டியவர்கள் ஆகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ தலைவர்கள் தேவனுக்கே பதில் கூறுவதற்குப் பொறுப்பானவர்கள்.**

**தலைமைத்துவமானது** (தன்னிச்சையாகத்) **துறந்து விட முடியாது.** (சம்பிரதாயப் படி கொடுத்து விட)
ஒரு செயலூக்கமான தலைவர் விவேகமுள்ள பகிர்ந்தளிப்பவர் என்று நாம் அறிவோம். ஆனால் சிற்சில காரியங்கள் ஒரு போதும் பகிர்ந்தளிக்க முடியாததாகும். மேலும் தலைமைத்துவத்தின் முடிவான பொறுப்பு அவைகளில் ஒன்றாகும். மோசே செயலூக்கமான விளக்கம் செய்பவராக பகிர்ந்தளித்தல் பற்றிய கோட்பாட்டுக்கு சிறந்து விளங்கினார். ஆனால் அவர் தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கு சிறந்த தலைவராகவே அமைந்து இருந்தார்.

அதிகமான திருச்சபைகள் அதிலும் நாடக பாணியான வளர்ச்சியை அனுபவிப்பவைகளுக்கு (போதகராக) மேய்ப்பனாக அல்லது ஊழியக் குழுவை வைத்துக் கொண்டு நல்ல குழு ஊழியக் கோட்பாடுகளை விருத்தி செய்து கொள்கின்றனர். என்னவென்றாலும் யாராவது ஒருவர் அந்த குழு அமைப்புக்குத் தலைவராக இருந்தே ஆக வேண்டும். ஒரு திருச்சபை அமைப்பில் மூத்த போதகரே அதற்குத் தகுந்த நபர் ஆக ஆவார். அவர் எந்த வகையான மாதிரி குழு தலைமைத்துவமாக செயல்படலாம். ஆனால் **அவர் தலைமைத்துவ நடைமுறையில் கூரான முனைப் பகுதியில் இருக்க வேண்டும்.**

தேவனுக்குக் கீழ் அவர் திருச்சபைக்குத் தேவையான தூண்டுதல் உணர்ச்சியையும் அறிவுரைகளையும் தர வேண்டும். மூப்பர்கள் அடங்கிய குழுவுடன் இணைந்து அவர் ஊழியம் செய்யலாம். ஆனால் முடிவான பொறுப்பு தேவனுக்குரியதாகும். பலவிதமான திருச்சபை சூழ்நிலைமைகளில் நான் போதகராக ஊழியஞ் செய்தபொழுது நான் அடிக்கடி மூப்பர்கள் குழுவுக்கு சொல்லுகிறதாவது, ‘‘நான் போதகராக உங்களோடு ஊழியம் செய்வேன். உங்களுக்காக அல்ல. தேவனே என்னுடைய எஜமானன் ஆனவர். அவருக்கே அவருக்கு மட்டும் தான் பிரதியுத்தரம் சொல்ல வேண்டும்.’’ என்று சொல்லுவேன்.

என்னவென்றாலும் ஒரு தலைவர் தனியாகவோ அல்லது கட்டாயமாகவோ வேலை செய்யக் கூடாது. அவருடைய தனிப்பட்ட திறன்பாடுகள், அவர் தனியாக ஊழியம் செய்ய முற்படுவாரானால் அதீதமாக மட்டுப் படுத்தப்பட்டு விடும். அவர் கட்டாயமாகக் கற்றுக் கொண்டு பயிற்சி செய்து கொள்ள வேண்டிய முக்கியமான திறமைகளில் ஒன்று பகிர்ந்தளித்தலாகும். மேலும் ஒரு ஊழியக் குழுவை எப்படி கட்டி எழுப்புவதும் என்பதுவுங் கூடத்தான்.

**பகிர்ந்தளித்தளித்தல் என்பதற்குச் சொற்பொருள் விளக்கம்:**
''ஒரு பணியானது செயல் நிறைவேற்றப்படுவதற்காக மற்றொருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.''
''உங்கள் சார்பில் மற்றொருவரைச் செயல்படுமாறு உத்தரவிடுவதாகும்.''

பகிர்ந்தளித்தலின் வெற்றியானது அடங்கியிருப்பது எதிலென்றால்:
– பகிர்ந்தளித்தலுக்கான அவசியத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுவதற்கு
– பகிர்ந்தளிக்களிக்கப்பட வேண்டிய பணிகளை கண்டு அறிந்து கொள்ளும்படி.
– பகிர்ந்தளிக்கக் கூடாத பணிகளையும் அறிந்து கொள்ளுவதற்காக.

பகிர்ந்தளித்தலின் சம்பந்தப்பட்ட மூன்று விதமான மனப்பான்மைகள் இருக்கின்றன.
– எது ஒன்றையுமே பகிர்ந்தளிக்காதவர்கள்.
– எல்லாவற்றையும் (ஒவ்வொன்றையும்) பகிர்நதளிப்பவர்கள்.
– எதைப் பகிர்ந்தளிக்கலாம். எதைப் பகிர்ந்தளிக்கக் கூடாது என்று அறிந்தவர்கள்.

**பகிர்ந்தளித்தல் என்பது ஒரு வேதாகமத்துக் கோட்பாடு**

**1. தேவன் இந்த உலகத்து மக்களை இரட்சிக்குமாறு தமது சொந்தக் குமாரனைத் தந்தருளினார்.**
அந்த மீட்பு என்ற மகா திட்ட நோக்கத்தில் தேவன் தம்முடைய சொந்தமான ஒரே குமாரனை தமது சார்பில் இந்த உலகத்திற்குள் தந்தருளிச் செய்து நமக்கு இரட்சிப்பை பெருமதியான விலைக்கு வாங்கினார். இயேசு கூறியதாவது ''தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்'' என்றார். (எபி 10:7) நமது மீட்பராக இருக்கும்படியாக தேவன் தமது குமாரனை தந்து அருளிச் செய்தார்.

**2. மோசே இஸ்ரவேல் புத்திரரிலுள்ள மூப்பர்களுக்கு தன்னோடு நிர்வாகம் செய்யும்படி அதை அவர்களுக்குப் பகிர்ந்தளித்தான்.**
யாத் 18:13-27 வசனங்களில் பகிர்ந்தளித்தல் கோட்பாடு பற்றிய நேர்த்தியான விளக்கங்களில் ஒன்றானதும் உதாரணமுமான விளக்கமும் நமக்கு இருக்கிறது. மோசேயின் மாமனாராகிய எத்திரோ தன்னுடைய மருமகனுக்கு அதன் அவசியத்திற்குள்ளும் இந்த விதமான தலைமைத்துவ கலையைப் பற்றியும் அறிவுரை கூறினார். எத்திரோ பகிர்ந்து கொண்ட கோட்பாடுகள் இன்றைய வரை நடைமுறையிலும் மேலும் பரவலாக இன்றைய தலைமைத்துவ பகுதிகளில் உலகத்தின் மிகப் பெரிய நிறுவனங்களிலுங் கூட சேர்ந்து கையாளப்பட்டு வருகிறது.

**3. இயேசுவானவர் இந்த உலகத்தைச் சுவிசேஷ பிரபல்ய மயமாக்குமாறு தமது சீஷர்களுக்குப் பகிர்ந்தளித்தார்.**
இயேசு இந்த மாதிரியான தலைமைத்துவ பாணியைத் தெரிந்து கொண்டு தமது திருச்சபையையும் தேவனுடைய இராஜ்ஜியத்தைத் ஸ்தாபிக்குமாறு தெரிந்து கொண்டார் என்பதைக் கவனித்துப் பார்ப்பது ஆர்வத்தைத் தூண்டும் பயிற்சியாகும். மெய்யாகவே பிதாவானவர் இயேசுவானவரை அந்த மகாத் திட்டத்திற்குள் ஆணைப்படுத்தும் பொழுது உபயோகித்த அந்த ஒன்று போலான கொள்கைகளையே இயேசுவும் தனக்குள்ளாக எடுத்துக் கொண்டார். ''பிதா என்னை இந்த உலகத்திற்குள் அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்'' என்றார். அதாவது இந்த பாணியின் மாதிரியிலே ''பிதா என்னை அனுப்பினார், நானும் உங்களை அனுப்புகிறேன்'' என்றார். பிதாவானவர் இயேசுவை மனுக் குலத்தின் மீட்பராக நியமித்தார். பிதாவானவர் இயேசுவுக்கு மீட்புப் பணியை நிறைவேற்றும்படியாகப் பகிர்ந்தளித்தார்.

**4. தேவன் நமக்கு அந்தப் பணியை நிறைவேற்றி முடிக்கும் படியாகத் தந்தருளியிருக்கிறார்.**
இதோ போன்ற முறையில் இயேசு தமது சீஷர்களுக்கு உலக முழுவதும் எங்கிலும் இராஜ்ஜியத்தின் நற்செய்தியை அறைகூவி பிரபலமாக்கி நிறைவேற்றும்படியான பணியைப் பகிர்ந்தளித்தார். இதை நிறைவேற்றும் நடைமுறையில் நாமும் பகிர்ந்தளித்தல் என்ற நடைமுறையைக் கையாள வேண்டும்.

**விவேகமுள்ள பகிர்ந்தளித்தலானது உள்ளடக்கிக் கொள்வதாவது:**

**1. சரியான தனி நபரை பணிக்கு உத்தரவு இடுதல்**

இது வெளியில் தெரிந்தது போலத் தோன்ற அதற்கு எந்த விதமான வற்புறுத்தலும் அவசியமில்லாது இருக்கலாம். ஆயினும் இது அடிக்கடி தெரிந்திருக்கிறபடி, தனி நபர்கள் அந்தப் பணியை நிறைவேற்றுமாறு பணி உத்தரவு பெற்றுள்ளனர். அதற்காக அவர்கள் வெளிப்படையாக தகுதி பெற்றிருக்க மாட்டார்கள். இதற்கான பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று அனுகூலம் என்பதனால் இதற்குச் சரியான நபர் இருப்பதாகத் தோன்றாத காரணத்தால் வேறு ஒருவர் பணியில் உத்தரவு பெறுகிறார். இது அடிக்கடி நேரிடுகிறது ஏனென்றால் தேவனால் நியமிக்கப்பட்ட காலங்கள் சரியாக அனுமானிக்கப்படுவதில்லை.

**2. சரியான காலத்தில்**

தேவனுடைய அனுமதித்த காலமாவது இந்த மாதிரியான விஷயங்களில் சிக்கலானதாகும். சரியான நேரத்தில் தேவன் வழக்கமாக சரியான ஆட்களையே வைத்து இருக்கிறார். நாம் அதை எப்படி அனுமானித்து தேவன் குறித்த காலத்தோடு சேர்ந்து இயங்கி அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுதலுக்காக முன் செல்ல வேண்டும். இதற்கு தேவனோடு அமர்ந்து ஒரே சீராக கர்த்தருக்காகக் காத்திருத்தல் தேவையாகிறது. தேவனுக்காக கூர்ந்தறியும் திறனும் கீழ்படிதலுமாகியவை வழியில் அவரோடு அடிமேல் அடிவைத்து நடக்கும்பொழுது நேரிடுகிறது.

**3. சரியான பணிகளுக்காக**

ஒரு தவறான பணிக்காக பணி உத்தரவு பெற்ற நபர் தாவீது சவுலுடைய படைத் தளவாடங்களை அணிந்து கொள்ள முயற்சி செய்தது போலாகும். மேலும் அது சாதாரணமாக அணிந்து கொள்ளக் கூடியதாகவோ அல்லது பொருத்தமானதாகவோ இருக்க வில்லை. ஆனால் ஒரு தடவை யாராவது ஒருவர் அந்த பாகமாகிய குறுகிய துவாரத்திற்குள்ளாக போகும் வழி என்றால் அது அவர்களுடைய இயற்கையான மனநிலையும் வரங்களும் ஆக அவர்கள் உற்சாகத்தோடும் அர்ப்பணித்தலோடும் வேலை செய்ய ஆரம்பித்து மிக உயர்ந்த மேன்மையான பலா பலன்களை அடைவார்கள்.

**4. பகிர்ந்தளித்தலின் நடைமுறை.**

இங்கே சுருக்கமாக வெற்றி பெறக் கூடிய பகிர்ந்தளித்தல் நடைமுறையின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**(a) அந்த பணியை தேர்வு செய்து அதன் வரையறை செய்து விளக்கஞ் செய்க.**

அந்த பணி முழுவதுமே அதற்குள் அமைந்துள்ள வேறுபட்ட சிறிய சிறிய பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளப்பட வேண்டும். ஒரு திருச்சபை சூழ்நிலைமையில் இதில் பின்வருபவர்களும் உள்ளடங்குவார்கள். மூத்த போதகர், இணை போதகர், இசைக் கலைஞர், சுவிசேஷ போதக ஊழியர், சிறுவர், ஊழிய போதகர்கள், சபை பாதுகாப்பு குழு ஆகியவர்கள் இடம் பெறுவர். மேலும் அதற்கென்று நிர்வாகஸ்தர், செயலாளர், பொக்கிஷதாரர், ஆக முதலியவர்களும் இடம் பெறுவர். இந்த பலதிறப்பட்ட பகுதி பாத்திரங்களும் தெளிவாக வரையறை செய்து மேலும் அத்துடன் சேர்ந்த பணிகளையும் ஒருங்கிணைத்து அதற்கான பணி உத்தரவு பெற்றவர் திட்டவட்டமாக யாருக்காகவும் யாருக்கும் பதில் சொல்ல வேண்டும் என்று வரையறுத்தல் பெற வேண்டும்.

**(b) சரியான நபரை(களை) தெரிவு செய்க.**

அந்த பலதிறப்பட்ட பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு, பணி உத்தரவு பெற்றவர்கள் இருக்க வேண்டிய அவசியமாவது.

- a: அந்த பணியை செயல்படுத்தக் கூடிய திறமை அல்லது அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டும்.
- b: அவர்களுடைய பணியை செயல்படுத்தும் பொழுது அவர்கள் கடினமாக உழைப்புக்கு விருப்பமுடையவராய் இருக்க வேண்டும்.
- c: மற்ற குழு அங்கத்தினர்களோடு இணைந்த ஒற்றுமையுடன் வேலை செய்ய வேண்டும்.

**(c) தகவல்களை தெளிவாகத் தெரியப்படுத்தும்படி அறிவிக்க.**

பணியும், அதனுடன் பொறுப்புகளும் தெளிவாக தெரியும்படி அறிவிக்கப்பட வேண்டும். இதைச் செய்வதற்கான சிறந்த முறையாவது பணி விவரங்களை அறிக்கையாக எழுத்தில் வடிவமைப்பது. அவர்களைச் சார்ந்ததாக ஆக்க வேண்டும். இதில் அந்த நபருடைய பகுதி விவரமும், பதவிப் பெயரும், யாருக்கு பொறுப்புள்ளவர் என்பது அவர்களுடைய திட்டவட்டமான பொறுப்பாளர் எவை என்பதும் அடங்கும்.

**(d)பொறுப்பை ஒதுக்கி ஒப்புவித்தல்**

பணி விவரக் குறிப்புகளில் ஒவ்வொரு வேலைப் பகுதியையும் எந்த பதவிப் பெயருள்ள நபர் பொறுப்பு என்பதைச் சொல்லும் இடம் பெறும் என்பதும் முடிவாக அவர்களிடம் என்ன எதிர்பார்க்கப் படுகிறது என்பதும் தெளிவாகத் தகவலாகத் தரப்பட வேண்டும். பொதுவாக அறிந்திருக்கிற பிரகாரம் இது சம்பாஷணையிலும் விவாதிக்கும் பொழுதும் அறிவிக்கப்படும். மூத்த போதகர் பணி உத்தரவு பெற்றவர்கள் அவர்களிடமிருந்து என்ன தேவையாய் எதிர்பார்க்கப்படுகிறதென்பதை முழுவதும் சரியாக புரிந்து கொண்டார்களா என்பதை கட்டாயமாக உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**(e) போதுமான அதிகாரத்துவத்தை வழங்குக.**

ஒரு தடவை அந்த நபர் பணி உத்தரவைப் பெற்றுக் கொண்டார் என்றால் அவர்களுடைய அதிகாரமானது தெளிவாக ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். அவர்களுடைய பணி பங்கில் ஒவ்வொரு அம்சத்தையும் போதுமான அளவில் நிறைவேற்றுவதற்காக அவர்களுக்கு வேண்டிய அளவில் அதிகாரத்துவம் கட்டாயமாக இருந்தே ஆக வேண்டும்.

**(f) கணக்கொப்புவித்தலை அவசியமாக்குக.**

அந்த பணி உத்தரவு பெற்றவருக்கு அந்த பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்குப் போதுமான அதிகாரம் கொடுக்கப்பட்டாலும் அவர்கள் கிரமமாக பணியைப் பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பதை கட்டாயமாகச் செய்ய வேண்டியவர்கள் ஆகிறார்கள். இதற்காக ஏதோ ஒரு வழிமுறையைப் பின்பற்றும்படி வகுத்துக் கொண்டு அவர்கள் முன்னேற்றம், பிரச்சனைகள் ஆகியவை பற்றி ஒரு முழு அறிக்கையைச் சமர்ப்பிக்கக் கூடியதாகச் செய்தல் வேண்டும். இதை ஓர் அளவு ஊழியர் கூட்டங்களிலும் செய்ய முடியும். ஆனாலும் அவர்களுக்கு ஒழுங்காக சந்தர்ப்பங்கள் தரப்பட்டு அதனால் அந்த நபருடைய மேற்பார்வையாளரால் பணி விவரங்களைப் பற்றி தகவல்கள் அவருக்கு அவ்வப்போது தரப்படும்படியாக செய்ய வேண்டும்.

**(g) மேற்பார்வை செய்து மதிப்பீடு செய்க.**

அந்த பணியாளருடைய திறமையும் செயலூக்கமான பண்பும் ஒரே சீராக மேற்பார்வை செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மாறுதல்களும் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியங்களும் வழக்கமாக அந்த பணிப் பகுதி அதிகமாக பலா பலன் தர வேண்டுமானால் காலா காலத்தில் செய்யப்பட வேண்டும்.

**(h) ஆணைகளைப் பிறப்பித்து செயல்படுத்து அந்த சாதனையை வெகுமானம் தந்து கனப்படுத்துக.**

ஒவ்வொரு குழுவின் அங்கத்தினரும் ''ஜெயத்தினால் கிடைக்கும் கொள்ளைப் பொருளில்'' ஒரு பங்கு பெறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் உழைப்பினால் கிடைக்கும் கனிகளையும் அனுபவித்து மகிழ வேண்டும். நன்றாக நிறைவேற்றப்பட்ட பணியானது குழுத் தலைவரால் ஒப்புக் கொள்ளப்பட்டு மதித்தும் பாராட்டப்படவும் வேண்டும். எப்பொழுதுமே அவர் உற்சாகத்தையும் நேர்மறையான புத்திமதிகளையும் கொடுக்க வேண்டும்.

<u>ஞானமும் செயலூக்கமான பகிர்ந்தளித்தல்:</u>

**1. உம்முடைய செயலூக்கமான பண்பை அதிகரித்துக் கொள்க.**

உம்முடைய செயலூக்கத்தை பல சமயங்களில் ஞானமுள்ள பகிர்ந்தளித்தலால் பெருக்கல் முறையான பெருக்கம் செய்யலாம். நேரத்தை அதிகமாக வேண்டும் பணிகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதால் நீர் உம்முடைய நிபுணத்துவத்தை, திட்டவட்டமாகத் தேவைப்படும் காரியங்களுக்காக உமது கவனத்தை ஒருங்கே செலுத்த முடியும்.

**2. ஒரு செயலூக்கமான குழுவை கட்டி எழுப்பிக் கொள்க.**

பெரும்பான்மையான திருச்சபைகளானவை இன்றைய நாட்களில் நாடக முறையில் வளர்ச்சியை அனுபவிக்கிறவைகள் குழு ஊழியத்தையே பயன்படுத்துகின்றன. ஒரு கூடிவரும் சபையானது ஒரு கால கட்டத்தில் சில நூறு அங்கத்தினர்களைக் கொண்டதாக வளர்ச்சி அடையும்பொழுது ஒரு தனி நபரால் சபை முழுவதற்குமே போதுமான கவனம் எடுத்துக் கொள்ள முடியாது. ஐக்கியத்திற்குள் செயல்படும் ஒரு குழுவானது தனி நபரான ஒரு தலைவரை விட மிக அதிகமாக சாதித்து நிறைவேற்ற முடியும். இதற்கு மேலும் அதிகமான திறமைகள் அகலமாக விரிந்துள்ள தேவைகளை ஒருங்கிணைப்பதற்கு கிடைக்கப் பெறக் கூடும்.

**3. பிற மக்களிடம் புதிய திறமைகளை விருத்தி செய்து கொள்க.**

குழு ஊழிய சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் ஆனவை ஊழியத்து முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கு சிறந்த சூழ்நிலையாகும். அந்த குழு அமைப்புகள் மற்றவர்களை சீஷத்துவத்திற்குள் நடத்தவும் விருத்தி செய்யவும் நல்ல சந்தர்ப்பங்களைத் தருகின்றன.

**4. மகத்தான பெரிய பணிகளை நிறைவேற்றுகின்றன.**

ஒரு வல்லமையான குழு எந்தவொரு தனிப்பட்ட தலைவரும் சாதிக்க முடியாதவைகளுக்கு அதிகமாக பணிகளை கையில் எடுத்துக் கொண்டு நிறைவேற்றக் கூடும். உமக்கு ஒரு மகத்தான பணியைச் செய்யுமாறு தரிசனம் இருக்குமானால் அதன் துவக்க காலத்து ஆரம்ப மட்டங்களில் உம்மைச் சுற்றி ஒரு பலம் வாய்ந்த ஊழியர் குழுவைக் கட்டி எழுப்பிக் கொள்ள வேண்டும். அதனால் எப்படி வெகு விரைவிலும் உம்முடைய குழுவுக்கு அடித் தளத்தை உருவாக்கியதாகாது. மிகச் சிறிய திருச்சபை கூட ஒரு வல்லமையான குழுவுக்கான அஸ்திபாரத்தைப் போடும்படியாக ஆரம்பிக்கக் கூடும்.

**5. அதிகமான விசுவாசிகளை சீஷராக்குங்கள்.**

உலக சுவிசேஷ பிரபல்யத்தில் முழுமையாக்கக் கூடிய தன்மையானது "சீஷர்கள் உண்டாக்குவதுதான்" (மத் 28:19) சீஷத்துவத்தை உண்டாக்கும் நடைமுறைகள் பணிகளும் ஊழியங்களும் பகிர்ந்தளிக்கப்படுதலைக் கைக் கொள்ளுகிற ஒரு சபை அமைப்பில் மேற்கூறிய நடைமுறைகள் செயலூக்கத்துடன் கையாளப்படக்கூடும். பகிர்ந்தளித்தலின் தத்துவமும், குழு ஊழியமும் திருச்சபையில் அதிகமான மக்களைப் பயன்படுத்துதலை உற்சாகப்படுத்துகிறது. இந்த முறையானது மக்களை சீஷத்துவத்தில் உண்டாக்குவதில் ஈடுபாடு கொள்ளச் செய்து விடுகிறது. ஏனென்றால் அவர்களால் விருத்தி செய்யப்படுகிற திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும்படி அதிகமான சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறுகிறது.

**6. தேவனுடைய சேனையை ஆயுததாரியாக ஆக்குக.**

தேவனுடைய சேனையில் பதவிகளும் அதிகாரத்துவ அமைப்பும் தேவைப்படுகிறது. இவைகளை அதிகமான தயாராக ஏற்ற சந்தர்ப்பத்தில் விருத்தி செய்து அதிகார அமைப்புத் திட்டத்தின் அங்கம்சமாக விளங்குகிறது.

**7. தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டி எழுப்புதல்.**

தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆளுகை இரண்டு குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டதாகும்:

a: தேவனுடைய அதிகாரத்துவம்

b: அந்த அதிகாரத்துக்கு நாம் பணிந்து கீழ்படிதலும்

# அதிகாரம் 11 - ஜெயிக்க வேண்டும் என்ற விருப்பத்தை கட்டுப்படுத்தி செயல்படுத்துதல்

**"நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?"** (யோவான் 5:6)

கிறிஸ்தவ ஜீவியம் ஆரம்பித்த காலத்திலிருந்து விருப்ப சித்தம் என்பது மிகவும் முக்கியமானது. தகுதி பெற்றயொதொன்றும் விருப்ப சித்தத்தின் கிரியை இல்லாமல் சாதித்துக் கொள்ள முடியாது. இது தலைமைத்துவ சாதனைகளைப் பொறுத்த மட்டில் நிச்சயமாகவே மெய்யாகும்.

ஆத்மா என்பது சிந்தனை, விருப்ப சித்தம், உணர்ச்சிகள் ஆகியவைகளால் ஆனது. இவை அனைத்தும் செயலூக்கமான ஒரு தலைவருக்கு இன்றி அமையாத ஏதுக்களாகும். சிந்தனை என்பது அடிப்படையில் அமைதியானது, உணர்ச்சிகள் சுறுசுறுப்பாக இயங்கக் கூடியவை. விருப்ப சித்தம் என்பது சமநிலைப் படுத்தும் காரணியாக இணைப்பு இயக்க ஊக்கியாக கருத்துக்களையும் கோட்பாடுகளையும் செயல்பாடுகளாகவும், சாதனைகளாகவும் மொழி பெயர்க்கிறது. விருப்ப சித்தம் என்ற காரணியானது கனவுகளையும் தரிசனங்களையும் நிதரிசனமாக மறுசாயலாக்குகிறது. அது சுறுசுறுப்பான விசுவாசத்தைத் திருப்ப உதவும் சாதனமாகும். அதை அமைதியான எதிர்பார்ப்புகளிலிருந்து சுறுசுறுப்பாகப் பங்கெடுத்துக் கொள்ளுவதற்கு மறுரூபமாக்குகிறது. அதுவே தான் நம்மை அமைதியான ஆர்வத்துடன் நம்புவதிலிருந்து சாதனை படைக்கும் விசுவாசத்தோடு இணைக்கும் பாலமாகும். நாம் நமது விருப்ப சித்தத்தை ஒப்படைப்புச் செய்யும் வரைக்கும் நாம் விசுவாசத்தின் செயல்பாடுகள் என்ற ஆளுகைப் பகுதிக்குள் நுழைந்து விட்டு அதற்குப் பிறகு தேவன் நமக்கு வாக்களித்த காரியங்களை சுறுசுறுப்பாக சொந்தமாக்கிக் கொள்ள ஆரம்பிப்போம்.

பெதஸ்தாவில் ஓர் மனிதனைச் சவாலாக வினாவினார். அதாவது சொஸ்தமாக வேண்டும் என்று விரும்புகிறாயா? என்று கேட்டார். நீ சொஸ்தமாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறாயா? (விருப்ப சித்தமுள்ளவன்) என்பதாக அல்ல, ஆனால் நீ விருப்ப சித்தத்துடன் விரும்பு - அதாவது நீ சொஸ்தமாகும்படி தீர்மானித்திருக்கிறாயா? என்று தான் வினாவினார். நமது விருப்ப சித்தத்தைக் கிரியை செய்ய வைப்பதானது நமது விசுவாசத்தை ஒருமுகப்படுத்துவதும் நமது உணர்ச்சிகளின் ஒரு முனைப்படுத்துதலையும் நமது ஒப்படைப்பு செய்தலை வெளிக்கு தெரியப்படுத்துதலுமாகும். அது நமது முழுமையான நமது ஜீவனை ஒரு முனைப்படுத்துதலை தகுந்த செயல்பாட்டின் மூலமாக வெளியே சொல்லி தெரியப்படுத்துதலாகும்.

"தேவன் நான் சித்தமாயிருக்கிறேன்" என்று பல தடவைகளாகச் சொல்லுவதைக் கவனித்துப் பார்க்கவும். புதிதாகப் படைக்கும் ஐக்கியத்தில் அவருடன் ஜீவிப்பதற்கு நாமும் அவருடன் சேர்ந்து "நான் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்ல வேண்டும். நமது சித்த பலத்தை தேவனுடைய சித்தத்தோடு ஒரே கோட்டில் ஒருமுனைப் படுத்தும் பொழுது மாத்திரமே நாம் தேவனுடைய படைப்பு வல்லமையிலிலும் பலத்திலும் ஐக்கியத்துடன் வாழ முடியும்.

**தேவனுக்கு அடியில் நமது விருப்ப சித்தமானது நமது பிரபந்தத்தை நிர்ணயிக்கிறது.** (முடிவை)

- a: நமது விருப்ப சித்தமாவது நாம் தெரிவு செய்து கொள்ளும் திறமை அதாவது சரியானதும் தகுதியானதுமான தெரிவுகளை உண்டாக்கிக் கொள்ளுதல்.
- b: நமது விசுவாசத்தை வெளிப்படுத்தலுக்கு ஒத்துப் போகக் கூடிய தகுந்த செயல்பாடுகள் ஆரம்பித்துக் கொள்ளக் கூடிய நமது திறன்பாடாகும்.
- c: அந்த செயல்பாட்டைப் பிழைக்கச் செய்யும் வல்லமையையும் பலத்தையும் அது விடுவிக்கிறது.
- d: அழுத்தத்தின் சவாலுக்கு கீழ் அது வளர்ந்து செழிப்படைகிறது.
- e: அது படைக்கும் ஆற்றலை சாதனை நிறைவேற்றும் வரை தாங்கி பிழைக்கச் செய்கிறது.

**இந்த விதமான விருப்ப சித்தம் இயற்கையாகவே தன்னிச்சையானது.**
நம்முடைய முந்தைய கிறிஸ்தவ நிலைமையில் மாம்சீக இச்சையான விருப்ப சித்தமானது தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்கிறது. நாம் ஒரு காலத்தில் விசுவாசிகள் ஆகி விட்டால் அந்த விருப்ப

சித்தமானது நமது மீட்டு இரட்சிக்கப்பட்ட ஆவியோடு ஐக்கியத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். இந்த விருப்ப சித்தமானது ஒரு காட்டுக் குதிரையைப் போல அது உடைத்து நொறுக்கப்பட்டு கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அந்த தற்காலிக நிலைமையான உடைத்து நொறுக்கப்படும் பொழுது அதன் ஆவியானது உடைத்து நொறுக்கப்படுவதில்லை. அது ஒழுங்கு என்னும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுகிறது. அப்பொழுது அது பலமுள்ளதாக இருக்கிறது ஆனால் அது ஒழுங்கின் கீழ் கொண்டு வரப்பட்டதாகும்.

அங்கே அடிப்படையில் மூன்று விதமான மக்கள் இருக்கின்றனர்:

1: **சார்ந்திருக்கும் வகையினர்.** இவர்கள் அடிப்படையில் பின்பற்றி செல்பவர்களாக, ஆட்டின் இயற்கையான மந்தை உள்ளுணர்வை உடையவர்களாக வழக்கமாக முதல் முயற்சி எடுக்க முடியாதவர்கள்.

2: **சார்ந்திருக்கும் வகையினர்.** இது வெள்ளாட்டு வகையைச் சேர்ந்தவர்கள். செம்மறி ஆட்டினின்றும் மாறுபட்டவர்கள். அவர்கள் தங்களுக்குச் சொந்தமானதையே செய்ய விரும்புவார்கள். அதிகாரத்திற்கு அடிக்கடி பணிந்து கீழ்படிவதை விரும்ப மாட்டார்கள். இது கிறிஸ்தவத் தலைவர்களுக்கு அபாயத்தை விருவிக்கும் குணச் சிறப்பியல்பாகும்.

3: **சார்ந்தும் - சாராதிருப்பவர்களும்.** யாருடைய விருப்ப சித்தமானது உடைத்து நொறுக்கப்பட்டதோ தேவனால் ஒழுங்கப்படுத்தப்பட்டதோ சகல தேவனுடைய சிறந்த தலைவர்களும் இந்த வகையில் இருக்கின்றார்கள். அவர்கள் வழக்கமாகவே இயற்கையில் பலமான விருப்ப சித்தமுடைய நபர்களாகவும் தங்கள் ஆள் தன்மையில் யாரையும் சாராதவர்களாகவும், மேலும் முதல் முயற்சி எடுத்துக் கொள்வதில் பலமிக்கவர்களாகவும் சித்தமுள்ள வல்லமையையுடையவர்களாயும் இருப்பார்கள் என்ன வென்றாலும் தேவனுடைய நோக்கத்தை அவர்கள் செயலூக்கத்துடன் சேவை செய்யும் முன்னர், அவர்களுடைய இயற்கையான விருப்ப சித்தமானது உடைத்து நொறுக்கப்பட்டு தேவனுடைய சித்தத்துடன் ஐக்கியத்தில் கொண்டு வரப்பட வேண்டும். (அவருடைய இயல்பு தன்மை நோக்கம் ஆகியவைகளுடன்) தேவனுடைய நோக்கங்கள் சுய விருப்பத்தினாலோ அல்லது சுய முயற்சியாலோ தன் ஆளுமை அல்லது குணச் சித்திரமான பலத்தாலோ ஒருக்காலும் சாதித்து அடைய முடியாததாகும்.

மோசே இதற்கான தெளிவானதோர் முன் உதாரணமாவான். எகிப்தில் சுமார் நாற்பது ஆண்டுகளாக இளவரசனாக இருந்ததின் விளைவாக மோசே மேற்பார்வை திறன்கள், ஆளுகை திறன்பாடுகள் ஆகியவற்றின் சகல கலைகளிலும் கற்பிக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டிருந்தான். இந்த ஆரம்ப கால பயிற்சியிலிருந்து சுய நம்பிக்கையும், திறமையும் வாய்ந்த நிர்வாகியாக வெளியில் எழும்பினான். தன்னுடைய சுய பலத்தால் ஒர இஸ்ரவேலனை கொடுமையிலிருந்து மீட்க முயற்சித்தான். ஆனால் அவன் அந்த எகிப்தியனைக் கொலை செய்வதில் மட்டும் சித்தி பெற்றான். அதன் காரணமாக எகிப்தை விட்டே தன் உயிருக்காக தப்பி ஓடும்படி நேர்ந்தது. தேவன் அவனை நாற்பது ஆண்டுகளாக பாலைவனத்திற்குள் இட்டுச் சென்று அவனுக்குள் இருந்த அந்த சகல விதமான எகிப்திய சுய நம்பிக்கையைக் களைந்து விட்டு, கர்த்தர் மேல் சார்ந்திருக்கும் ஒரு மனிதனாக உருவாக்க வேண்டி இருந்தது. அந்த பாலைவனத்து அனுபவங்கள் யாக்கோபு, தாவீது, பவுல், ஏன் இயேசுவுக்குங்கூட நேரிட்டது. மெய்யாகவே, இது எல்லாருக்கும் நேரிடாவிட்டாலும் பெரும்பான்மையானவர்களான தேவனுக்கு கீழ் இருக்கும் தலைவர்களுக்கு நேரிடுகிறது.

இந்த வனாந்தரத்து அனுபவமானது அத்தியாவசியமான அம்சமாக செயலூக்கமான தலைவர்களை தயார் செய்வதில் அமைகிறது. இது நமக்கும் நேரிடுமானால் இது பற்றி நாம் ஆச்சரியப்படவோ அல்லது அதைரியப் படவோ கூடாது. இந்த வகையான வனாந்தரத்து அனுபவங்களில் தேவன் நம்மை, தற்புகழ்ச்சி, தந்நலம் பாராட்டுதல், சுய நம்பிக்கை ஆகியவற்றிலிருந்து விடுதலை செய்கிறார். நம்மைத் தாழ்மையுள்ளவர்களாக பணிந்து கீழ்படியவும், கீழ்படிதல், இரக்கம், முதிர்ச்சி ஆகியவற்றில் உருவாக்குகிறார். நம்மை சுயமாய் உண்டாக்கப்பட்ட நபர்களாக இருப்பதிலிருந்து தேவனால் உண்டாக்கப்பட்ட மனிதர்களாக மறுரூபப்படுத்துகிறார்.

**விருப்ப சித்தத்தை (செயல்பாட்டில்) இயங்கச் செய்தல்:**

இந்த விருப்ப சித்தமான அதீதமான சாத்தியக் கூறுகளும் தாலந்து பலத்தையம் பெற்றிருக்கிறது. இது விசுவாசம் என்ற சங்கிலியால் தேவனுடைய வல்லமையோடு இணைக்கப்படும் பொழுது விசேஷமாகவே உண்மையாகிறது. ஆனால் அது இயங்கச் செய்யும்படி அவசியமாகிறது. இந்த விருப்ப சித்தத்தை இயங்கும்படி தூண்டிவிட்டு அதற்குள் மறைந்து கிடக்கும் சக்திகளை விடுவிப்பதற்கான சில காரணிகள்:

**a: அதை ஒரு சவாலுக்குள் வெளிப்படுத்துக.**

விசுவாசமான செயல்பாடுகளை வேண்டும் சவால்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு விசுவாசத்தோடு வரிசையில் நிற்கும் பொழுது இது சிறப்பாகக் கிரியை செய்கிறது. தமது சீஷர்களிடம் இயேசு அடிக்கடி இப்படிப்பட்ட சவால்களை வெளிப்படுத்தினார். உதாரணமாக அவர் கூறியதாவது, ‘‘இதோ வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்து பாருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ என்றார். (யோவான் 6:15) இது எப்படிப்பட்ட மகத்தானதோர் சவால் ஆகும். இது தான் நம்மில் அநேகரை எதிர்த்து நிற்பதாகும். இந்த உலகமானது அதன் உள்ளடங்கிய மக்கள், ஒரு பரந்த அறுவடை வயலாகும். எந்த விதமான மனுஷீக முயற்சிகளாலும் கோட்பாடுகளினாலும் ஒருக்காலும் அறுவடை செய்யக் கூடாத பெரிய அறுவடையைத் தனக்குள் கொண்டுள்ளது. தேவனுடைய வல்லமை, அதிகாரம் தேவ பலம் ஆகிய இவைகளுக்குள் அன்றியும் இதைத் தவிர வேறெந்த வழியினாலும் ஒருக்காலும் சேகரிக்கக் கூடாத பெரிய அறுவடை ஆகும். இந்த விதமான மகா திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்கு நமது விருப்ப சித்தத்தை ஒப்படைப்புச் செய்யவும் நமது தன்மையில் ஒவ்வொரு அம்சத்தையுங் கூட அர்ப்பணிக்குமாறு வேண்டி நிற்கிறது.

**b: உங்களுடைய சிந்தனை அதன் மேல் கலந்து வாசம் பண்ணட்டும்.**

இந்த சவால் உங்களுக்குள்ள யோசனைகளில் கலந்து குடியிருக்கட்டும். அதைப் பற்றி யோசித்துப் பார். அதை பிரித்துப் பகுத்துப் பார். அதை ஆராய்ச்சி செய்து பார். அதைப் பற்றி வினா எழுப்பிப் பார். அதை ஒவ்வொரு கோணத்தில் இருந்தும் துப்பறிந்து பார். அதனுடைய மகத்தான விரிந்த தன்மை உன் கற்பனையில் நிறைந்திருக்கட்டும். அது உன்னுடைய முழுமையான விழிப்புணர்வையும் கழுவட்டும். இந்த மகத்தான சவாலுக்கு உறவுத் தொடர்ப கொண்ட எல்லா விதமான தூண்டி எழுப்பும் கைகூடும் காரியங்களை உன் சிந்தனை உண்டாக்குவதற்கு என்று ஆரம்பிக்கும் வரைக்கும் அதனுடைய விரிவான எல்லை மட்டில் ஆகர்ஷித்துக் கொள்ள முயற்சியைச் செய்யுமாறு மேற்கொண்டிரு.

**c: உன்னுடைய உணர்ச்சிகள் அதற்கு செயல் மூலம் பதில் செய்யட்டும்.**

அப்படிப்பட்டதோர் சவாலைப் பற்றி தியானம் செய்யும் பொழுது நீ அந்தக் காரியத்தை ‘‘தேவன் பார்ப்பது போலவே பார்க்கத் துவங்குவாய்’’. நீ அதைப் பற்றி யோசிக்கவும் உணரவும் அவர் (தேவன்) செய்வது போலவே செய்வாய். அந்த சுற்றுப் புற சூழ்நிலைகளால் ஏற்பட்ட மனநிலை உனக்குள் உணர்ச்சிகளையும் உற்சாகத்தையும் கிளர்ச்சி அடையச் செய்யட்டும். அப்படிப்பட்ட சவாலுக்கு சரியான பிரதி செயலால் பதில் கூறக்கூடியதற்கு முன்னர் அது உன்னுடைய முழுவதுமான ஆள் தன்மையையே அசைத்து விட வேண்டும். அது யோசித்தல் என்ற நடைமுறையை விட சிறந்ததாக வேண்டும். அது உன்னுடைய முழு ஆள் தன்மையையே இறுகப் பிடித்து உனக்குள் கிளர்ச்சியை உண்டாக்க வேண்டும்.

**d: அதைப் பற்றி நேர்மறையாக யோசித்தும் பேசியும் இருப்பாயாக.**

அதை பலாபலன் தரும்படியாக இதைப் போன்ற ஒரு பெரிய விரிந்த திட்டத்திற்குள் ஈடுபடுத்தும் முன்னால் நீ உன்னைத் தானே நேர் முகமாக இருக்கும்படி அனுமதித்துக் கொண்டு முன்னேறிச் செல்லும்படி ஊக்கங் கொடுத்து சொல்லி ஊக்குவிப்பாயாக. இது எப்பொழுது ஏற்படக் கூடும் என்றால் உன்னுடைய முதலாவதானது முழுவதுமாக செயல்படும்படி பேசி ஊக்கப்படுத்தப்பட்டால் நீ பலாபலன் தரும்படியாகவும் செயலூக்கமாகவும் ஈடுபாடு கொள்ளலாம். அதற்காக நீ அந்த காரியத்திற்காக ஒரு நேர் முகமான அணுகு முறையை ஆயத்தம் செய்தாக வேண்டும். நேர் முகமான எல்லா கோணங்களிலும் நோக்கிப் பார். உன்னுடைய எண்ணங்கள் அதைப் பற்றியே

எண்ணி அதிலே வாசம் பண்ணட்டும். பின்பு அதைக் குறித்து நீ பேசலாம். அதைச் செய்யும் படி தூண்டிச் சொல்வதற்கு உன் எண்ணங்களையும் வாய் சொற்களையும் தவிர வேறொன்றும் கிடையாது. நீ அதைச் செய்யக் கூடும் என்று நினைப்பாயானால் ''நான் அதைச் செய்ய முடியும்'' என்று சொல்வாயாக. ஆகவே அதைச் செய்யும் வழியில் நீ தானாகவே செய்து கொண்டிருப்பாய். நீ அதை விசுவாசித்து அறிக்கை செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் நீ அதை நிறைவேற்றி வெற்றி பெறுவதற்கான வழியை ஆயத்தம் செய்வாய்.

**e: வெற்றியை நிதரிசனமாகக் காண்பாயாக.**

நமது சிந்தனைக்கு மிகப் பெரிதான படைப்புத் திறன்பாடுகள் உண்டு. அவற்றில் ஒன்று நிதரிசனமாகக் காணக் கூடிய திறனாகும். இது மெய்யாலுமே ''விசுவாசத்தினாலே காரியங்களை தேவன் அவைகளை எப்படிக் காண்கின்றாரோ அவ்வண்ணமே பார்த்தலாகும்.'' தெய்வீக பிரசன்னம் உன்னோடு இருக்கிறதென்ற உணர்வு இருக்குமானால் இதைச் சிறப்பாக நிறைவேற்றிச் சாதிக்க முடியும். தேவனுடைய சவாலாக இருக்கும் திட்டத்தைப் பற்றி தேவனுடைய இருதயம் சிந்தனை இவற்றில் என்ன இருக்கிறதென்பதனை நிதரிசனமாகப் பார்க்கும்படி உன்னுடைய எண்ணங்களையும் கற்பனை சக்தியையும் அனுமதித்து விட்டு விடு. அது மெய்யாகவே தேவனுடைய இருதயத்திலிருந்து உன்னுடையதற்கு மாறுதல் மாற்றம் பெறுவதாகும். உன் மூலமாக தேவன் என்ன நிறைவேற்ற விரும்புகிறார் என்பதைப் பற்றிய கற்பனைக் காட்சியானது உன் ஆவியால் விரிவடைந்து உண்டாகும் பொழுது நீ நம்புவதற்கு ஏதோ ஒன்றை வைத்திருப்பது போலவும் அதை நோக்கி நீ முன்னேறிப் போகவும் உதவும்.

**f: தேவன் (அந்தத் திட்டத்திற்குள்) இருக்கிறார் என்பதை பூரணமாக நிச்சயப்படுத்திக் கொள்க.**

நிதரிசனமாகக் காணும் நடைமுறையானது தன்னில் தானே சுயமானதொன்று அதை நோக்கமான நிர்ணயநியதிகளைக் கொண்டு கண்காணித்து அறிவுரை கூறப்பட வேண்டும். இதைச் செய்யும்படியான ஒரு சாதகமாவது அதன் உன்னுடைய உடன் ஊழியர்களுடன் பகிர்ந்து கொண்டு அதை குழுவின் மதிப்பீட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். வேதம் சொல்லுகிறது ஆலோசனைக்காரர் அநேகரால் ஞானம் உண்டு. ஒரு தரிசனமாவது ஒரு எண்ணிக்கையுள்ள ஆவியில் முதிர்ச்சி பெற்றவர்களால் உறுதிப்படுத்தப்படும் பொழுது தேவன் அந்தக் காரியத்தில் உண்மையாகவே இருக்கிறார் என்பதை நம்பிக்கையுடன் உணர்ந்திருக்கலாம்.

**g: ஜெபத்துடன் தகுந்த நடவடிக்கையைத் தீர்மானஞ் செய்யவும்.**

நீ அந்தத் தரிசனத்தின் முடிவான நிலையை ''பார்க்க'' அவசியமாகும். அதற்காக உடனடியான நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும். உனக்குத் தரிசனத்தைக் கொடுக்கும் அதே தேவன் அதற்குத் தகுதியான யுக்திகளையும் திட்டங்களையம் நடவடிக்கைகளையும் அதை நிறைவேற்றுவதற்காக உனக்குத் தந்து உன்னைத் தூண்டி எழுப்புவார். தேவன் ஒரு செயல்படும் தேவனாக அதற்காக நடைமுறையான அடிகளைத் தந்து அந்தத் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காகச் செய்வார்.

**h: விசுவாசத்தில் முன்னேறிச் செல்ல துவங்கு.**

தேவனுடைய பணி எப்பொழுதுமே விசுவாச வீரர்களால் நிறைவேற்றப்படுகிறது. ஒவ்வொரு தேவனுடைய திட்டமும் விசுவாசத்தின் முயற்சி ஆகும். யோசுவாவுக்கு சொல்லப்பட்டதாவது, ''உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்'' என்பதாகும். ஆகவே விசுவாசத்தில் அவன் அணிவகுத்து முன்னேறிச் செல்ல வேண்டியதிருந்தது. ஒவ்வொரு காலடியும் விசுவாசத்தின் காலடியாகும். அவன் விசுவாசத்துடன் தன் காலடியை வைத்த ஒவ்வொரு இடத்தையும் தேவன் அவனுக்குக் கொடுத்தருளினார்.

இந்த விஷய காரணமாக நீ தெரிந்து உணர்ந்து கொள்ள வேண்டிய ஏதோ ஒன்று என்னவென்றால் எந்தக் காரியமாவது அதற்குள் தோல்வியை அடையக் கூடாததாக இருக்குமானால் அது விசுவாசத்தின் முயற்சியான செயல்பாடல்ல. நீ அந்த தேவனுடைய தரிசனத்தை செயல்படுத்துங்கால், அங்கு பல சமயங்களில் தோல்வியை நேருக்கு நேர் சந்திக்கக் கூடியதாயிருக்கும். சில காலங்களில் அந்த தரிசனத்தின் ஒரு பகுதி நேரிடாமல் போகலாம் போலத் தோன்றும். தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்காக வராமல் இருக்கிறார் என்றும் தோன்றும் சமயங்களும் உண்டு.

சில கால கட்டங்களில் நீ அமைதியான விசுவாசத்துடனும் தேவன் மேல் சார்ந்தும் தொடர்ந்து முன்னேறிப் போய் கொண்டிருக்கலாம். அதற்காக மறுபடியும் மறுபடியும் தேவன் அவருடைய வார்த்தையையும் வாக்குத்தத்தையும் கனப்படுத்துகிறார் என்ற மனக் கிளர்ச்சியையும் நீ பெறலாம்.

**அடிமனத்தளத்தின் வல்லமையை பயன்படுத்திக் கொள்ளுதல்.**
இந்த விருப்ப சித்தத்தில் ஒன்றிணைந்து இருக்கும் பகுதியாவது அடிமனத் தளமாகும். அதற்குள் மறைந்து கிடக்கும் மகா சக்திகள் உண்டு. அவற்றை ஒரு வாய்க்கால் வழிப்படுத்தியும் விடுவித்தும் உம்முடைய முழுவதுமான இயன்றதை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த மனதின் அடித்தளமானது கணிணியில் உள்ள கடினமான வட்டைப் போன்றதாகும். அது எல்லா நிகழ்ச்சித் திட்டங்களையும் தன்னில் பெற்றுக் கொண்டு நீ செயலூக்கத்துடன் வேலை செய்வது அவசியமாக்குகிறது.

<u>மனித சிந்தனை மூன்று பகுதிகளில் கிரியை செய்கிறது:</u>

1. விழிப்புணர்வுடைய சிந்தனை மேற் கொண்டதாகும்.

இந்த ஆளுகைப் பகுதியில் நமது உடனடியான சுறுசுறுப்பாக இயங்கும் எண்ணங்கள் இருக்கின்றன. நாம் விழிப்புணர்வுடன் யோசிக்கும் ஒவ்வொரு காரியமும் நாளுக்கு நாள் இந்த பகுதியில் தங்கி விடுகிறது.

2. இந்த மனத்தின் அடித்தளமானது விழிப்பு மனத்தளத்தின் கீழே அதற்கு நேராக அமைந்துள்ளது. இது ஆழமானது தரைமட்ட பகுதிக்குக் கீழ் உடனடியாக தேவைப்படாத அறிவும் தகவல்களும் சேமிக்கப்படுகின்றன. நாம் எப்போதோ படித்ததெல்லாம், பெற்றுக் கொண்டவைகளும் சேகரித்து சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த அடிமனத்தளத்து பழங்கால சேமிப்பு அறைகளுக்குள் நாம் ஆழந்து மூழ்கி நாம் எப்போதோ கற்றுக் கொண்ட அநேக காரியங்களைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம். நாம் உடனடியாக இந்த எல்லா அலகு உருப்படிகளையும் பற்றி விழிப்புணர்வுடன் இல்லாவிட்டாலும் அவைகள் எப்பொழுதுமே வரம்புக்கு மீறி செல்வாக்கு படைத்தவை ஆகும்.

3. விழிப்புணர்வில்லாத சிந்தனை.

இந்தப் பகுதிதான் நமது மூளையின் இயந்திர கதியான எல்லா நடவடிக்கைகளையும் ஆளுகை செய்வதாகும். இந்த அடிமனத்தளத்தைப் பற்றி வேதாகமம் அதிகமாகச் சொல்வதற்கு இருக்கிறதென்று நம்புகிறேன். இதைத் தான் வேதத்தில் குறிப்பிடப்படுவதாக நீதி 23:7ல் ''அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்'' என்று சொல்லப்படுகிறதாக நான் நிச்சயமாக உணருகிறேன்.

**அடிமனத் தளத்தைப் பற்றிய சில விஷயங்கள்.**

இந்த அடிமனத்தளமானது:

- எப்பொழுதும் இயங்குகிறது. நாம் விழித்திருந்தாலும் உறங்கினாலும் இயங்குகிறது.
- ஆச்சரியப்படும் படியாக படைப்பாற்றலும் நூதனங்களை உண்டாக்குதலை பெற்றதாக.
- இதற்கென்று தனிப்பட்ட தன் விருப்ப செயல்பாடுகள் கிடையாது. ஆனால் கட்டளைகள் எடுத்துக் கொண்டு அதை மாற்றி அமைக்கவோ மனதிற் இசைவாகச் செய்து கொள்ளவோ செய்கிறது. ஆனால் அதை ஒரு போதும் ஒதுக்கித் தள்ளுவதில்லை.

இந்த அடிமனத்தளமானது நேரடியாக (நேராகவே) நிலைமைக்குப் பொருத்தமாக்கப்பட வேண்டும்.

இதற்கான செய்யக் கூடிய தெரிந்த வழி முறையான தேவனுடைய வார்த்தையில் ஒரே சீராகப் போஷிக்கப்பட்டு அதனால் உன்னுடைய மனதின் அடித்தளத்தை தேவனுடன் ஐக்கியத்தில் அவருடைய வழிகளை, நோக்கங்களையுங்கூட கொண்டு வருகிறது. இயேசு கூறியதாவது ''மனிதன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'' என்றார். தேவனுடைய வார்த்தையை உனக்குள் உள் வாங்கிக் கொள்ளுதல் உன்னுடைய சிந்தனையை தேவனுடைய எண்ணங்களோடு ஐக்கியத்தில் கொண்டு வருகிறது. அவருடைய வார்த்தைகள் உன்னில் வாசம் பண்ணினாலும் தேவன் தம்முடைய எண்ணங்களை உன் வழியாகவே

யோசிக்கிறார். இது ஒரு ஆரோக்கியமான வகையுள்ள நேரடியாக யோசிப்பதை முன்னேற்றுவிக்கிறது. இது ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலைமைக்கும் நேரான மனப்பான்மையை சுகந்தரித்துக் கொள்வதுமல்லாமல் மேலும் நேர் மறையாக தேவனுடனும் அவருடைய வார்த்தைகளுடனும் எல்லாக் காரியங்களிலும் இணக்கத்துடன் ஒத்துப் போகிறது.

**உன்னுடைய அடிமனத்தளத்திலுள்ள சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ளும்படியாக.**

**உன்னுடைய சிந்தனையானது இரண்டு வடிவமான படைப்புச் சக்திகளைப் பெற்றிருக்கிறது:**

1: **சுறுசுறுப்பில்லாதது.** எண்ணங்கள், யோசனைகள், தரிசனங்கள், திட்டங்கள், வியூக யுக்திகள்.
2: **சுறுசுறுப்பானது.** அந்த எண்ணங்கள் திட்டங்களை நிதரிசனமாகச் செயல்படுத்துவது.

**சுறுசுறுப்பில்லாத மந்தமான சக்தியை உபயோகித்தல் படைப்பு யோசனை சக்திகள்.**

a: எப்பொழுதுமே விழிப்புடனும் எச்சரிக்கையான கவனத்துடனும் கருத்துக்களுக்கும் கோட்பாடுகளுக்கும் இருப்பது.
b: விசாரணை செய்தும் உளவு பார்த்தும், ஆராய்ந்தும் வினா எழுப்பியும் இந்தக் கருத்துக்களை பரிசீலிக்கவும்.
c: அகழ்ந்து பார்க்க - தரைமட்டத்திற்குக் கீழ் ஆழமாகத் தோண்டிப் பார்க்க.
d: ஒரு முனைப்படுத்து - தியானித்து, ஆழ்ந்து சிந்தனை செய்து அந்தக் காரியங்கள் மீது யோசனை செய்!
e: பொறுமையைக் கையாளு. உனது ஊழியத்திற்காகக் காத்திரு.
f: நம்பிக்கையுடன் தரித்திரு.
g: உன்னுடைய மன நோக்கங்களை சுத்தமாகவும் மாசின்றியும் வைத்திரு அல்லது குற்றவுணர்வு உன்னை அவிழ்த்து வீழ்த்தி விடும்.
h: (கூட்டுறவுடன்) ஒத்துழைத்திரு - மிகப் பெரிய எண்ணங்களுக்கு கூட்டுறவான நிறைவேறுதல் அவசியமாகும்.

**சில சக்திகளை சுறுசுறுப்பாக்கும் கிரியா ஊக்கிகள்.**

இங்கே சில வல்லமையான கிரியா ஊக்கிகளாக இயங்கி, சக்திகளை விடுவித்து சாதனை படைக்கச் செய்யும் சில காரணிகள்

**a: தனது நிறைவேறும் காலத்தையும் வரப் பெற்றுக் கொண்டிருக்கும் மகத்தான கருத்துக்கள்.**

தனது நிறைவேற்றப்படும் காலத்தை வரப் பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு தரிசனமான கோட்பாட்டை, ஒரு அற்புதமான கருத்தைப் பெற்றுக் கொண்டதாகத் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிலும் மனக்கிளர்ச்சியை உண்டாக்கி ஆர்வத்தைத் தூண்டும் ஒன்றைப் பார்க்கிலும் எதுவும் சிறந்ததாக இருக்க முடியாது. ஏற்ற காலத்தில் நிறைவேறும்படி வரப்பெற்று தகுந்தாகவும் ஒரு வருங்கால வாக்குத்தத்த தீர்க்கதரிசனத்துடன் இருக்கும் திட்டமானது, வரவேற்பை பெற்றதும் தேவனுடைய குறிப்பிட்ட காலத்திற்கும், நோக்கத்திற்கும் (தகுந்ததுமான) பொருத்தமானதும் தகுந்ததுமானமாக உறுதிபடுத்தப்பட்டதுமாய் இருக்கும்.

**b: உள்ளக் கிளர்ச்சியை தரும் ஒரு வெற்றி வாய்ப்பு நிலை**

வாழ்க்கையின் நடைமுறை ஒழுங்கானது உலக வாழ்க்கையைச் சார்ந்து ஒளிரும் தன்மையில் குறைவுடையதாய் ஆகலாம். ஒரு புதிய கோட்பாடானது ஒவ்வொரு காரியத்திலும் புதிய ஜீவனை ஊதியும் மனக் கிளர்ச்சியையும் உண்டாக்கலாம். தேவன் அடிக்கடி நமக்குள் புதிய காரியங்களைப் பிறப்பிக்கும் படியாக வாஞ்சிக்கிறார். ஆனால் பழையனவற்றை கழித்தலும் புதியனவற்றை தழுவிக் கொள்ளவும் நாம் விருப்ப சித்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். முந்தினவைகளை நினைக்க வேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும். (ஏசாயா 43:19) நாம் சில சமயங்களிலே மாறுதல்கள் உண்டாவதைப் பற்றி பயப்படுகிறோம். அது கொண்டு வரும் சவாலும், அதன் பயனாக நாம் வழக்கற்றவைகளோடு தேவன் நம்மை புதியதும் செயலூக்கமான காரியங்களை அனுபவத்தில் உணரும்படி விரும்பும்பொழுது மேற்கூறிய உலக வழக்கில் இல்லாதவற்றோடு கட்டப்பட்டு விடுகிறோம்.

**C. நேரடியான வெற்றி வாய்ப்புகள் - வருங்காலத்தைப் பற்றிய மன எழுச்சியானதோர் எதிர்பார்ப்பு**

நேர்முகமான அசைவு ஒலிகள் எப்பொழுதுமே கிளர்ச்சி அடையச் செய்யும். அவைகள் புதிய மனக் கிளர்ச்சியையும் உற்சாகத்தையும் நமது ஆள்தன்மை முழுவதற்குள்ளும் செலுத்துகிறது. நாம் ஏதோ ஒன்றைச் செய்யும்படி ஈடுபட்டுக் கொண்டு இருக்கும்பொழுதும் அதுவும் ஒரு வெற்றி வாய்ப்பை வருங்காலத்திற்காக கொண்டிருக்கும் பொழுதும் நமது ஜீவியத்தைப் பற்றிய கண்ணோட்டம் முழுவதுமே விரிவடைகிறது.

**D: விசுவாசம் - நேரிடையான எதிர்பார்த்தலும், திட நம்பிக்கையும்.**

விசுவாசத்தின் ஜீவனானது விசுவாசியின் பிறந்து வளர்ந்த பூமியின் சூழ்நிலையாகும். நாம் விசுவாசத்தினால் ஜீவிக்கும் பொழுது எப்பொழுதுமே சிறந்த நல்லதொரு கிரியை செய்து கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு உண்மையான தேவனுடைய திட்டமானது விசுவாசத்தின் துணிகரமான முயற்சியாகவும் நமது ஈடுபாடும் நமக்குள் இருக்கும் விசுவாசமாகிய மூலப் பொருளை வெளிக்கு கொண்டு வருகிறது. நமது ஈடுபாட்டின் வழியாக நாம் உயிர் வாழ்ந்து பூவாக மலர்ந்து நமது விசுவாசமாகிய இயற்கைத் தன்மையை நம்மிடமிருந்து வெளியில் இழுத்துக் கொண்டு வருகிறது.

**e: பேரார்வம் - உணர்ச்சிப் பூர்வமான ஈடுபாடும் அதனால் உண்டாகும் உள்ளக் கிளர்ச்சியும்.**

தேவன் உணர்ச்சியுள்ளவரான ஓர் ஜீவன் ஆவார். மேலும் அவரது சாயலிலும் ரூபத்திலும் நம்மை உண்டாக்கியிருக்கிறார். ஆதலால் நாமும் உணர்ச்சியுள்ளவர்களாக உணர்ச்சிப் பூர்வமான ஜீவன்களாக இருக்கிறோம். நாம் நமது முழுமையான அளவு திறமையில் கிரியை செய்யும் பொழுது அதற்காக தவிர்க்க முடியாதபடி ஓர் உணர்ச்சிப் பூர்வமான ஈடுபாடும், வெளிப்படுத்துதலும் இருக்கிறது. மெய்யான பேரார்வத்தை உணர்ச்சி பூர்வமான விளக்கமாகச் சொல்லுதலுடன் வராவிட்டால் அதை அனுபவத்தில் பார்க்க முடியாது. அதற்காக பேரார்வத்தைக் குறித்து பயப்பட வேண்டாம். பெரும்பான்மையான பிரசங்கிமார்களும் திருச்சபைகளும் உள்ளக் கிளர்ச்சியான (உற்சாகத்தை) பேரார்வத்தை அது கேடுள்ளதாகவும் பாவம் நிறைந்தது எனக் கூறி அந்த ஆர்வம் அடைவதை ஆதரிப்பதில்லை. ஆனால் இதற்கு எதிர்மறைதான் உண்மையாகும். நாம் எப்படி தேவனுடைய பிள்ளைகளாய் இருந்து கொண்டு அதைப் பற்றி பேரார்வம் கொள்ளாமல் இருக்க முடியும். இது செய்யக் கூடாமை என்பதற்கு செய் பொருள் விளக்கமாகும். தேவனுடைய ஊழியமும் அவருடைய இராஜ்ஜியத்திற்கான பணியும் இந்த அதீதமான பேரார்வத்தை இன்னும் அதிகமாகப் பயன்படுத்தக் கூடும். இந்த உணர்ச்சி பூர்வமான வெளிப்படுத்துதலானது நமது கிறிஸ்தவ சாட்சிக்கு இடையூறு விளைக்கும் என்று சிலர் நம்புகிறார்கள். மேலும் அதிக எண்ணிக்கையான மக்கள் பேரார்வத்தோடும் உணர்ச்சி பூர்வமாக ஈடுபாடு கொள்வார்களானால் திருச்சபை இன்னும் அபரிமிதமாக நன்மை அடையக் கூடும் என்பது எனது திடமான நம்பிக்கை ஆகும்.

**எப்படி நீ, ‘‘உண்மையான நீயாக’’ இருக்க முடியும்.**

செயலூக்கமான தலைமைத்துவத்தை உபயோகிக்க வேண்டுமானால் நீ சற்று தளர்த்தியாகவும் இருக்க வேண்டும் இல்லை என்றால் தலைமைத்துவத்தின் அழுத்தங்கள் அதிகமாக கட்டி எழுப்பப்பட்டு தாங்க முடியாதபடி ஆகிவிடும். சில தலைவர்கள் மற்ற வெற்றியுள்ள தலைவர்களைப் போலவே அதே மாதிரியில் தங்களை வைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அதனால் தங்கள் மீது சகிக்க முடியாத பாரத்தை சுமத்திக் கொள்ளகிறார்கள். மற்றவர்கள் போல அவர்கள் மாதிரியிலே செய்ய முயற்சிப்பது தாவீது சவுலின் போராயுதங்கள் அணிய முயற்சித்தது போலாகும். வெகு சீக்கிரத்தில் அது பெரிதாகவும் அவனால் அணியக் கூடாதபடி இடைஞ்சலாகவும் இருக்கிறதாக உணர்ந்தான். தேவனுடைய நோக்கத்தை அவனுக்கென்று உள்ளதை நிறைவேற்ற வேண்டுமானால் அவன் தான் தானாகவே இருந்து கொண்டு தேவன் அவனுக்காக வேண்டி கொடுத்ததை வைத்துக் கொண்டு தன்னுடைய ஆள் தன்மையில் அதை உபயோகிக்க வேண்டும்.

**நீ, நீயாக இருப்பதைப் பற்றி பயப்படாதிருப்பாயாக.**

ஒரு வாலிப கிறிஸ்தவனாக மற்ற கிறிஸ்தவர்களைப் போலவே அவர்கள் மாதிரியிலே அவர்களைப் போல என்னை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற யோசனை எனக்கு இருந்ததை நான் இப்பொழுது ஞாபகத்தில் நினைவு கூறுகிறேன். ஆனால் இதைக் கொண்டு கிரியை செய்யப்

போவதில்லை என்பதையும் வெகு விரைவில் உணர்ந்து கொண்டேன். என்னுடைய கரிசனையை தேவனிடம் எடுத்துக் கொண்டு போன போது நானும் மற்ற கிறிஸ்தவர்களைப் போல இருப்பதற்கு அவர் உதவி செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்ட பொழுது, ''நான் உன்னை மற்ற யாரையும் போல் இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை. உன்னை நான் இயேசுவுக்குள் சுதந்திரமாக வைத்துக் கொள்ள விரும்புகிறேன்!'' என்று அவர் சொல்லுவதைத் தெளிவாக உணர்ந்தேன்.

தேவன் தாமே இன்றியமையாத நீயாகவே உன்னைப் படைத்து இரட்சித்திருக்கிறார். உன்னை இயேசுவுக்குள் நீயாகவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் உன்னை ஒரு தலைமைத்துவ பங்கிற்கு அவருடைய குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும்படியாக உன்னை அழைத்திருக்கிறார். ஆகவே நீ, நீயாக இருப்பதற்கு நீ சௌகரியமாக இருப்பதாக உணர்ந்து கொள்ள வேண்டும். நீ, நீயாகவே இருப்பதைப் பற்றி அக மகிழ்ந்து ''நீ நீயாக இருப்பது மிகச் சரியே'' என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நீ சற்று வித்தியாசமாக இருப்பதைப் பற்றி அச்சப்பட வேண்டாம். தேவன் தாமே பலரகத் தன்மையுடைய தேவனாயிருக்கிறார். அவர் ஒவ்வொருவரையும் ஒன்று போல் இருக்கும்படியாக விரும்பியிருப்பாரானால் அந்த வழியிலே நம்மையும் படைத்திருப்பார். ஆகவே அவர் நம்மை பற்பல விரிந்த வேறுபட்ட வடிவங்களில் செய்திருக்கிறபடியால் அந்த வழியிலே தானே நம்மை இருக்கும்படி அவர் விரும்புகிறார். மற்றவர்களோடு அனுகூலமில்லாமல் உன்னை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற சோதனையைத் தவிர்த்து விடு. ஆகவே ஆரோக்கியமானதோர் நம்பகத் தன்மையில் உன்னில் விருத்தி செய்து கொண்டு தேவன் உன்னைப் படைத்து வடிவமைக்கிறபடியால் அதில் நிலைத்திரு.

# அதிகாரம் 12 - வரங்களும் தாலந்து ஊழியங்களும்

கிறிஸ்தவ தலைமைத்துவத்தையும் மேற்பார்வை செய்வதைப் பற்றியும் நாம் சுருக்கமாக அதன் இரண்டு அம்சங்களையும் குறித்து பார்க்கலாம்.

“தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும் இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.” (I கொரி 12:28) மற்றொரு மொழிப் பெயர்ப்பில் “திருச்சபையில் தேவன் முதலாவதாக அப்போஸ்தலர்களையும் இரண்டாவதாக தீர்க்கதரிசிகளையும் மூன்றாவதாக போதர்களையும் மேலும் மற்றவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களையும் (உதவிக் காரர்களையும்) நிர்வாகத்தைச் செய்யக் கூடிய வரங்களைப் பெற்றவர்களையும்” என்று சொல்லுகிறது.

<u>**வேதாகமத்தில் தலைமைத்துவத்தின் இரண்டு அம்சங்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டப் படுகிறது.**</u> அந்த இரண்டு அம்சங்களுமே செயலூக்கமான கிரியை செய்வதற்கும், வளர்ச்சிக்கும், பலத்திற்கும் சபைக்குள்ளே இன்றியமையாததாக இருக்கிறது.

சுருக்கமாகக் கூறுவதற்காக நான் இவைகளை பின்வருமாறு பெயரிட்டு அழைக்கிறேன்:

**1: வரங்களால் நடத்தப்படும் ஊழியங்கள்.**
(உ-ம்) அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள்.

**2: தாலந்துகளால் கிரியை செய்யும் ஊழியங்கள்.**
(உ-ம்) உதவிகள், நிர்வாகத்துக்கான வரங்கள் பெற்றவர்கள்.

இவர்களைக் கீழ்கண்ட பெயர்களால் எளிதாகக் கண்டறிந்து கொள்ளலாம்:

1: **தலைமைத்துவம்**
2: **மேற்பார்வை செய்தல்**

இந்த இரண்டு வகையான போக்குகளும் திருச்சபையின் ஆரம்ப காலத்திலே தெளிவாகக் காணக் கிடக்கின்றன.

**1. அப்போஸ்தல தலைவர்கள்.**
நற்செய்தியை பிரபலப்படுத்தவும், கூட்டங்களை திரட்டவும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணிப்புச் செய்ய அழைப்பு விடுப்பதும் புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதுவுமே. (அப் 2 மற்றும் 3ம் அதிகாரங்கள்)

**2. நிர்வாகிகள்**
புதிய விசுவாசிகளை செயலூக்கமான கிரியை செய்யும் குழுக்களாக ஸ்தாபித்து ஒழுங்குபடுத்தவும் (ஸ்தல திருச்சபைகளில்) நிர்வாக ஊழியங்களாக விதவைகளை போஷித்தல் போன்ற திட்டங்களை அமைத்தலுமாகும். (அப் 6:1-7)

இந்த இரண்டு வகையான ஊழியங்களும் திருச்சபையின் செயலூக்கமான தன்மைக்கு முற்றிலும் அவசியமானவை. இவைகளை ஒரே நபரில் பார்ப்பது அரிதாகும். உ-ம். மோசே. (யாத் 18:13-27)

பின்வரும் சிறப்பியல்புகளான பண்புகள் அடிக்கடி எதிர்மறையான (முரண்பாடாக) இருக்கும் இந்த விதமான சூழ்நிலைமைகளுக்கு மிகவும் தெரிந்திருக்கும் விடை என்னவென்றால் இந்த இரண்டு ஊழியங்களையும் ஒருங்கிணைத்து ஒன்றுக்கொன்று இசைவான இணக்கத்துடன் செயல்படச் செய்வதாகும். (குழு ஊழியம், ஒப்படைத்தல், பயிற்சி ஆகியவை)

| தலைவர்கள் | நிர்வாகம் |
|---|---|
| ஆரம்பித்து வைக்க | ஒருங்கிணைக்க |
| இலாப நஷ்டங்களை எடுக்க | இலாப நஷ்ட காரணிகளைக் குறைவாக்க |
| தரிசனங்களைப் பார்க்க | இலக்குகளை நியமிக்க |
| தூர தரிசனங்களின் வழியாகப் பார்க்க | தூர தரிசனங்களின் வழியாகப் பார்க்க |
| திசை நோக்கி இயக்கம் | முன்னேற்றத்தைக் குறித்து எச்சரிக்கை செய்பவர் |
| முன்னோடியானவர் | பலப்படுத்துக. |
| பொறுப்புக்காக கிட்டிச் சேரும்படி | பொறுப்புகளை ஏற்றுக் கொள். |
| சந்தர்ப்பங்களை உண்டாக்குக. | சந்தர்ப்பங்களை ஏற்றுக் கொள்க. |
| அதிகாரத்தை வன்மையாக உபயோகி. | எச்சரிக்கையுடன் அதிகாரத்தை உபயோகப்படுத்து. |
| மன எழுச்சியுடன் ஒப்படைப்புச் செய். | எச்சரிக்கையுடன் ஒப்படைப்பு செய். |
| விசுவாச இலக்குகளை ஏற்படுத்து. | நியாயமான இலக்குகளை ஏற்படுத்து. |
| முன்னேற்றத்திற்கு முயற்சி செய். | பாதுகாக்க வேலை செய். |
| மக்களை ஒருமுகப்படுத்து | திட்டங்களை கட்டுப்பாட்டில் மேற்பார்வை செய். |
| படைத்துக் கொள். | நிலைப்படுத்தி பாதுகாத்துக் கொள். |

**மனக் கிளர்ச்சியான தலைமைத்துவமும் + சிறந்த மேற்பார்வையும் = வெற்றி!!!**

உனக்குச் சொந்தமான ஊழியத்தில் பலவீனமான பண்பியல்புகளில் பலமுள்ள ஒருவரை உனக்குத் தெரியுமா?
உன்னுடைய பலத்தை அவர்களுடைய பலத்துடன் ஒருமித்து இணைக்க அவற்றை எப்படி நன்றாக இரண்டையும் கலந்திருக்கச் செய்ய முடியும்?

இந்தக் கூற்றுகளை நிதானிக்க:

A: தலைவர்கள் நல்ல மேற்பார்வையாளர்களாக ஆகலாம்.
B: மேற்பார்வையாளர்கள் மிகவும் அரிதாக ஆற்றல் வாய்ந்த தலைவர்களாக.
C: மேற்பார்வை திறன்பாடுகள் ஒரு போதும் தலைமைத்துவ திறன்பாடுகளை அவற்றிற்காக பதிலிடம் பெற முடியாது.
D: செயலூக்கமான தலைவர் முடிவாக தன்னைப் பின்பற்றிச் செல்பவர்களின் தன்மையால் நிதானிக்கப்படுகிறார்.

இந்த இரண்டு பாகங்களான தலைமைத்துவமும் மேற்பார்வை செய்தலும் மிகவும் அதிகமாக வித்தியாசமானதாகவும், மேலும் இந்த ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான வகையான ஆட்களும் ஒவ்வொன்றுக்கும் வழக்கமாகவே வித்தியாசமாகவே இருக்கின்றனர். இரண்டுமே சிறப்புடையதாகும். மேலும் தலைமைத்துவ மாதிரியான வெற்றிக்கும் இன்றியமையாததாகும். இந்த இரண்டு பாகங்களும் இதை நுனித்தறிந்து கொள்வது கட்டளையாகும்.

தலைவரானவர் நிர்வாகத் துறையைச் சார்ந்ததும் மேற்பார்வை செய்வதுமான நடைமுறைகளுக்கு போதுமான தனது தேவையைக் கண்டறிந்து கொள்வது கட்டாயமாகும். நிர்வாகஸ்தர் இந்த வரமானது தனது முடிந்த உச்ச அளவுக்கு செயலூக்கத்துடன் கிரியை செய்வது என்றால் தலைவருடைய தரிசனமான ஆர்வத்தைத் தூண்டும், மன நோக்கத்தையும் உடைய பலமும் இது தலைவருடையதாக இல்லை என்றால் முடியாதது ஆகும் என்பதைக் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

அப். பவுல் சொல்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் மற்ற அங்கங்கத்தினர்களை கண்டறிந்து கொண்டு கனப்படுத்த வேண்டும். அவர்கள் மற்றவர்களுடைய வேறுபாடுகளையும், கிரியைகளின் பல திறப்பட்ட வகைகளையும் கண்டு உணர்ந்து கொண்டு தங்களை விட அவர்களை மிகவும் உயர்வாக எண்ணி மரியாதை செய்ய வேண்டும். செயலூக்கமானதும் திறமை வாய்ந்தது சபையானது பல திறப்பட்டதும் வேறுபட்டவர்களின் பிரசன்னத்தைச் சார்ந்ததாகவும் மேலும் அவர்கள் தகுதியாகப் பொருந்தி இருந்து எந்த விதமான இடறலும் இன்றி கிரியை செய்யும் அவர்களுடைய திறமையையும் (விருப்ப சித்தத்தையும்) சார்ந்ததாகும்.

**வரங்களில் வித்தியாசங்கள்** (I கொரி 12:14-31)
''சரீரமும், ஒரே அவயமாயிராமல் அநேக அவயங்களாயிருக்கிறது'' (I கொரி 12:14) பவுல் அப்போஸ்தலன் அவற்றைப் பாதங்கள், கைகள், காதுகள் மேலும் கண்கள் என்று பிரித்துக் காட்டுகிறார். தலைவர்கள் (தரிசனம் உடையவர்கள்) வழக்கமாக வித்தியாசமான நபர்களாக வரங்களைப் பெற்றவர்களைவிட பொருத்தமானவர்களாகவும், யோக்கியதாம்சம் உடையவர்களாக நிர்வாகப் பங்குகளுக்கு என்று இருக்கின்றனர். அவர்களுடைய தனித்தன்மையானதும் இயற்கையான மன நிலையும் ஆளுமை தன்மையும் வேறுபட்டே காணப்படுகின்றன. இந்தத் தலைவரானவர் அடிக்கடி தன்னிலே ஆவியாகிப் போகிறவராகவும், குணச் சித்திரப் பாங்கு உடைய நபராகவும் உயர்ந்த மன உற்சாகம் உடையவராகவும் செலவாளியாகவும் இருப்பார். நிர்வாகஸ்தர் என்பவர் வழக்கமாக முற்றிலும் வேறுபட்டவராக, முழுவதுமாக எதிர்மறையாக இல்லாமலும் இருப்பார். ஒவ்வொருவரும் அவரவருகளுக்குள் இருக்கும் வித்தியாசங்களைக் கண்டு உணர்ந்து கொண்டு அவர்களுடைய பல திறப்பட்ட வரங்களின் அவசியத்தையும் உணர்ந்தாக வேண்டும். அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்றால் பாதங்கள் கைக்கு வித்தியாசமாகவும் கண்கள் காதுக்களுக்கும் வித்தியாசமாக இருப்பது போல் இருக்க வேண்டும்.

**பல திறப்பட்ட அவர்களுடைய வகையான கிரியைகள்.**
அவர்களுடைய வரங்கள் எவ்வளவு விசாலமாக வேறுபடுகின்றனவோ அவ்வண்ணமே அவர்களுடைய வரங்களின் கிரியைகளும் வேறுபடும். கைகளே இல்லாத ஒரு மனிதன் சாதாரணமாக கைகளையும் விரல்களையும் கொண்டு செய்யப் படும் வேலையைக் கால்களைக் கொண்டு செய்ய வேண்டியது எவ்வளவு கடினமானதாக இருக்கும்.

**அவர்களுடைய கிரியைகளில் ஒன்றுக்கொன்று நிறைவு செய்யும் தன்மை**
ஒரு சரீரத்தின் அழகானது பல திறப்பட்ட அவயவயங்கள் ஒன்றுக்கொன்று நிறைவு செய்கிறதினால் ஆகிறது. அங்கே பொறாமைக்கோ போட்டிக்கோ இடமில்லை. தேவன் தாமே தனித்தனி ஒவ்வொரு அங்கத்தினரையும் மகிமையாக உருவமைத்து, தங்களது குறிப்பிட்ட கிரியைகளை நிறைவேற்றவும் செய்திருக்கிறபடியால் முடிவான பலாபலன் ஆவது பார்ப்பதற்கு நேர்த்தியான செயலூக்கமான ஒருங்கமைப்பாகும். இந்த சரீரம் தனது பல அங்கத்தினர்களான அவயவங்கள் மூலமாக வேலை செய்யும் பொழுது ஒருவரால் மட்டுமே நிறைவேற்ற முடியாத திரளான பணிகளை வெற்றிகரமாக சாதிக்க முடியும்.

# அதிகாரம் 13 - அழுத்தத்தை மேற்கொள்வதும், எரிந்து போகுதலை தவிர்த்தலும்

**(இரகசியமான நோயை மூடியிருக்கும் திரையை நீக்குதல்)**

அதீதமானதும் அபாயகரமானதுமான மருத்துவ நிலைமையானது திருச்சபை போதகர்களான ஊழியர்களையும் கிறிஸ்தவ வேலைக்காரர்களையும், கிறிஸ்தவ நல ஊழியர்களையும் பொதுவாக முந்தைய பத்தாண்டுகளாக கொள்ளை நோயாக தாக்க ஆரம்பித்திருக்கிறது. இந்த நிலைமையானது அந்த வரிசை பதவிகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான மக்களை பாதித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அதைப் பற்றி கொஞ்சங்கூட தெரிந்து கொள்ளப்பட்டதாகத் தோன்றவில்லை. மிகச் சிலரே இதன் உண்மையைப் பற்றிச் சொல்ல விரும்பி தயாராக இருக்கிறார்கள்.

இந்த வரவேற்கப்படக் கூடாத கள்ள வழியாக நுழைபவனைப் பற்றி முதலாவதாகக் கண்டுபிடித்துக் கொண்ட பிறகு நான் அடிக்கடி அதை ‘‘இரகசிய நோய்’’ என்று அழைப்பதுண்டு. இந்த பிரச்சனையை எவருமே ஒப்புக் கொள்ள விரும்புவதில்லை. நான் அடிக்கடி குறிப்பிடும் இந்த நிலைமை தான் ‘‘எரிந்து போனது’’ (Burn Out) என்று பொதுவாக அறியப்படுவதாகும். இது ஒரு தொழில் சாராத வார்த்தையாக முழுவதுமான நரம்பு - உணர்ச்சி தளர்ச்சியைக் குறிப்பதாகும்.

இந்த சுருக்கமான அத்தியாயத்தை நான் எழுதும் நோக்கமாவது முதலாவதாக இந்த இரகசிய நோயைப் பற்றிய இரகசியத்தை அதன் திரை மூடியை விலக்குவதற்காக - அதாவது அதன் திரை மூடியை கிழித்தெறிந்து அது என்னவாக இருக்கிறது என்பதை பகிரங்கப்படுத்துவதற்காகத் தான். ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்காகவும், நல ஊழியர்களுக்கு சம்பந்தப்பட்டதோர் நிலைமையைப் பற்றி அவர்கள் ஏதோ கொஞ்சம் அறிந்திருக்கக் கூடுமானாலும் ஆனாலும் அடுத்த மூலையில் ஒளிந்து திரிந்து கொண்டு அவர்கள் மீது பாய்ந்து பிடித்துக் கொள்ளும் சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு காரணிக்காகத்தான்.

நான் இந்தப் பிரச்சனையை வெளிக்குக் கொண்டு வர எத்தனிப்பது இந்த பிரச்சனையின் காரணமாக தற்சமயம் அழிவில் கஷ்டப்பட்டுக் கொண்டு தங்களுக்கென்று நம்பத் தகுந்த நபரைக் கண்டுபிடிக்கக் கூடாமல் இருக்கும் நிலையில் இருப்பவர்களுக்காகவே. மேலும் நான் இந்த பிரச்சனையை வெளிக்குக் கொண்டு வரப் பிரயத்தனப்படும் நோக்கமாவது, ஏன் ஒரு சிறிய கூட்டமான மக்கள் மருத்துவ வல்லுநர்களையும், போதகர்களையுமே உள்ளே சேர்த்து இந்த ஆபத்தான பிரச்சனையைப் பற்றிய உண்மையான அமானுஷ்யமாக கிளர்ச்சி யூட்டும் அறிவைப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இந்த பொதுவான சமுதாயத்திற்கு இந்த கொள்ளை நோயைப் பற்றிய அச்சம் விளைவிக்கும் உண்மையைத் தகவலாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய கருணையுள்ள ஆர்வத்தை இந்த உயர்ந்த கொள்கைக்காக உறுதிபடுத்தி இதற்காக இக்கட்டில் உள்ளவர்களுக்கு ஏதோ உலக நடப்பு சார்ந்த உதவியை மூல காரணமாக கொடுத்து உதவி செய்யும்படியாக வாஞ்சிக்கிறேன்.

அது ஏன் ‘‘ஒரு இரகசிய நோயாக’’ இருக்கிறது? - ஏனென்றால் அந்த துர் அதிர்ஷ்டம் உள்ளவர்களாக அதை அனுபவிக்கிறவர்கள் அடிக்கடி வெட்க முற்றும் குழப்பம் அடைந்தும், இந்த பிரச்சனையை இரகசியமாகவும், தனிமையாகவும் அதற்கு எதிர்த்து போர் செய்வதை விட ஏதோ ஒரு பகிரங்கமான வழியில் அப்படி ஒரு பிரச்சனையை அனுபவிக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்வதில்லை. இதுவும் பெரிதான அளவில் அடிக்கடி ஏதோ ஒரு விதமான ஆவிக்குரிய தோல்வி என்ற கண்டும் கேட்டும் உணரப்படும் காரணத்தினால் தான். இப்படிப்பட்டதோர் பலவீனத்தை எந்தக் கிறிஸ்தவ போர்வீரனும் பெற்றிருக்கக் கூடாது. இந்த விதமான பிரச்சனை ஏதோ ஒரு அடிப்படையான தோல்வியை சுட்டிக் காட்டுவதாக இருக்கலாம். அதாவது அவர்களுடைய விசுவாசத்தை விட்டு வெளியில் ஜீவிப்பது ஆகும். அது கைக்கொள்ளப்படும் படியாக வேண்டிதொன்றாக இருக்கிறது. இந்த விதமான நோயை சில கிறிஸ்தவர்கள் மிகவும் சுலபமாக முடிவு செய்யக் கூடும். அதாவது ‘‘அவர்களுக்குள் அதிகமான விசுவாசம் உடையவர்களாய் தேவனுடைய வார்த்தையை உண்மையாகவே விசுவாசிப்பதால் அவர்களுக்கு இது ஒருக்காலும் நேரிட்டிருக்க முடியாது’’ என்பதே.

இதற்கு மேலும் ஒரு காரணமாக ஏன் அதைப் பற்றிக் கொஞ்சமாகப் பேசப்பட்டு அதிகமாக புறக்கணிக்கப்படுகிறது. ஏனென்றால் மற்றொன்றிலும் தொடர்புடைய சில மக்கள் உண்மையிலே அதைப் பற்றி அதிகமாகப் புரிந்து கொள்கிறார்கள். மிகவும் அதிகமான மக்கள் ''எரிந்து போகுதல்'' என்று அழைக்கப்படுகிற ஏதோ ஒன்றைப் பற்றி அவர்கள் அதை எதைப் பற்றி கருத்தாய்க் குறிக்கிறது என்பது பற்றி தெளிவற்றதாய் தெரிந்திருக்கிறார்கள். அவர்களில் மிகச் சிலரே உண்மையிலே அதைப் பற்றி விஷயம் அறிந்து அதைப் பற்றி விளங்கிக் கொண்டவர்களாகவோ அது எதைப் பற்றியது என்பது பற்றி குறிப்பிட்ட கருத்து ஒன்றையும் பெற்றிருப்பதில்லை. எனது தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஊழியரும் கிறிஸ்தவ வேலைக்காரர்களும் இந்த நடப்பு பற்றிய அடிப்படைகளுக்கான சரியான புரிந்து கொள்ளுதலைப் பெற்றிருக்க வேண்டும் என்பது இரண்டு முக்கியமான காரணங்களுக்காகத் தான். முதலாவது காரணமாவது அவர்கள் தாங்களே நேரில் அவசியமான எல்லா எச்சரிக்கைகளையும் எடுத்துக் கொண்டு அதற்கு பலிகடாவாகும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக இரண்டாவதான நல்ல காரணமாவது இந்த பிரச்சனையினால் அவதிபடும் உடன் ஊழியர் அவர்கள் அவசியமான நம்பத் தகுந்த சகாயத்தையும் அர்த்தமுள்ள உதவியையும் கொடுத்து உதவ முடியும் என்பதால் தான்.

நான் இந்தக் கட்டுரையை மூன்று தோற்றப் பார்வைகளில் எழுதுகிறேன்.

- எனது சொந்த அனுபவம்
- மற்றவர்களைக் கருணையுடன் கவனித்தல்
- இந்தப் பிரச்சனையில் ஆர்வமுள்ள ஆராய்ச்சியை மேற்கொள்வது

நான் இந்தப் படிப்புக் குறிப்புகளை மருத்துவ நோக்கப் பார்வையில் எழுதவில்லை என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். நான் அதற்கான இந்தப் பகுதிகளில் ஒழுங்கு முறையான படிப்புத் தகுதியைப் பெற்றிருக்கவில்லை. மேலும் நான் போதகர் என்ற முறையில் தான் எழுதுகிறேன். நான் போதகராக என்னுடைய உடன் போதகர்களுக்கு அவர்களுடைய நன்மைக்காக அதைப் பற்றிய அறிவூட்டவும். அவர்கள் யாருக்கு ஊழியம் செய்கிறார்களோ அவர்களுக்கு நன்மைக்காக ஊழியத்தை வளப்படுத்தவும் இதை எழுதுகிறேன். நான் இந்த 'எரிந்து போகுதலை' என்ற பிரச்சனையினால் அதை அனுபவித்து கஷ்டப்படுகிறவர்களுக்கும் ஆன அநேகருக்காகவும் இதை எழுதுகிறேன். குறிப்பாக முழுவதுமாக அல்லாவிட்டாலும் கரிசனை எடுத்துக் கொள்ளும் ஊழியத்தில் பங்குள்ளவர்களுக்கும் யாருடைய உழைப்பால் தங்களுக்குதான் நேரிட்ட தனிப்பட்ட சொந்த கஷ்டங்கள் அனுபவிப்பவர்களுக்கும் எழுதுகிறேன். மேலும் 'எரிந்து போகுதல்' என்பதை சொந்த அனுபவத்தில் அனுபவித்தவனாக அதன் பலனாக அளவுக்கு மீறின கரிசனையை மற்றவர்களுக்காக எடுத்துக் கொண்டு குறிப்பாக இந்த அமானுஷ்யமான நடப்புகளுக்கு பலிகடாவாக ஆக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறேன். இதற்கானதாக அவர்களுடைய வழியில் சில சுட்டிக் காட்டக் கூடியவைகளை முன் வைக்க விரும்புகிறேன். சில எச்சரிக்கை சமிக்கைகள், அவர்களை அந்த அபாயத்திலிருந்து விலக்கி வழி நடத்தக் கூடியனவாக இருப்பதைத் தருகிறேன். சில நேர்மறையான செய்திகளாக நம்பிக்கையை ஊட்டக் கூடியனவற்றை அவர்களுடைய பயணத்தில் இலகுவாக்கக் கூடிய சில யோசனைகளை அவர்களை முழுமையான சொஸ்தமாகுதலை உணரும் அனுபவத்தில் கொண்டு வருவதற்காகவும் கொடுக்க விரும்புகிறேன்.

சமீபத்திய மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டுவதாவது 90% சதவீதமான குடும்ப மருத்துவரை சென்று பார்த்தலானது இன்றைய நாட்களில் அழுத்தம் சம்பந்தப்பட்ட உடல் நல கேடுக்களுக்காக ஆகும். நவீன ஆராய்ச்சியானது அழுத்தத்திற்கும் அநேக உடல் நல கேடுகளுக்கும் சம்பந்தமுண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது. அநேக ஆராய்ச்சியாளர்கள் இருதயம் சார்ந்த பிரச்சனைகள், இரத்த அழுத்தம், தைராய்டு பிரச்சனை, புற்று நோயுங்கூட சில சமயங்களில் தூண்டி எழுப்பப்பட்ட அழுதத்தமாக இருக்கலாம் என்று நம்புகின்றனர். 'எரிந்து போகுதல்' என்ற இவற்றின் மிகவும் பொதுவான அழுத்தம் தூண்டிய உடல் நல கேடுகள் பத்தொன்பதுகளின் கொள்ளை நோய் என்று தீவிரமாக பரவி வருவதாக அழைக்கப்படுகிறது. இந்த நவீன கொள்ளை நோயால் அடிக்கடி பாதிக்கப்படும் அதிகமான பலிகடாக்கள் ஆனவர்கள் யாரென்றால், வணிக நிர்வாகஸ்தர்கள், மேலும் ''கரிசனை என்ற தொழிலில்'' சம்பந்தப்பட்டவர்களான: செவிலியர், மருத்துவர்கள், நல ஊழியர்கள், சமய குருக்கள், போதகர்கள், திருச்சபை ஊழியர்களும் ஆவார்கள். அநேகமான கிறிஸ்தவர்களும் ஊழியர்களும் இதைப் பற்றி மறுப்புத் தெரிவிப்பதாவது இந்த விதமான நோயில் இருந்து கிறிஸ்தவர்கள்

ஒரு போதும் கஷ்டப்படக் கூடாது என்று கூறுவார்கள். அவ்வாறு செய்வதென்றால் அவர்கள் தேவனுடைய பலத்தில் வேலை செய்வதை விட தங்களுடைய சொந்த பலத்திலே தானே கிரியை செய்தார்கள் என்று அர்த்தமாகும். அவர்கள் சொல்லுகிற கோட்பாட்டை நான் நிச்சயமாகவே ஆதரவு கொடுக்கிறேன். ஆனால் அதோடு கூட சேர்த்து இந்த விஷயங்கள் சுட்டிக் காட்டுகிறதாவது அநேக உண்மையான நேர்மையானவர்களான தேவனுடைய ஊழியக்காரர்கள் பயன்படுத்திக் கொள்கிற அதிகமான அளவான சரீர, உணர்ச்சி பூர்வமான மனோ சக்திகளை தங்களை அறியாமலே அவர்களாகவே செலவழித்து தீர்த்து விடுகிறார்கள். அநேக கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் நேர்மையாகவும் முழுவதுமாக தங்களுடைய பணிக்கு ஒப்படைப்புச் செய்து கொண்டு தங்களையே அதற்குள்ளாக அந்த அளவுக்கு ஊற்றிக் கொண்டு தங்களுடைய வாழ்க்கைக்கு தேவையான சக்திகளை நீள அகலங்களில் விரிவாக்கிக் கொள்கிறார்கள். அந்த வகையான மக்கள் தங்கள் நேரத்தில் அடிக்கடி அதிக அளவை தங்களது சக மக்களுக்கு ஊழியம் செய்வதில் செலவழித்து அவர்களுடைய ஓய்வுக்கம், நோய்க்கு பின் உடல் நலம் பெறுவதற்கும் உள்ள அவசியத்தை புறக்கணிக்கிறார்கள். பவுல் அப்போஸ்தலன் ''நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.'' கலா. 6:9. பவுல் அப்போஸ்தலன் நன்மை செய்கிறதில் சேர்ந்து போகாமல் இருப்பதைப் பற்றியே சொல்லவில்லை. நன்மையான காரியங்களுக்காக உழைப்பதற்கு நேரிடையாக ஈடுபடுவதால் உண்டாகும் களைப்படைதல், சோர்வடைதல், பலம் முற்றிலும் குன்றிய நிலையை அடைவது ஆகியவை அதனால் உண்டாகும் நேரடி விளைவுகளாகும். அவர்கள் முற்றிலுமாக சோர்வடைந்து விடுகிற ஆபாயத்திற்குள்ளா-கிறவர்களாய் நன்மை செய்கிறதற்கு எடுத்துக் கொள்ளும் அநேக உழைப்பு காரியங்களால் மயக்கமடையக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இந்த எரிந்து போன நிலைமையை விவரிக்க நான் அடிக்கடி மோட்டார் வாகனத்தில் பெட்ரோல் தொட்டியானது வெறுமையாய் இருக்கிறது. சக்கர ரப்பர் வட்டங்களும் காற்று இன்றி மட்டமாக இருக்கின்றது. அந்த பேட்டரியும் மட்டமான நிலையில் இருப்பதோடு அந்த பேட்டரியைத் தூண்டி எழுப்பக்கூடிய இராசாயன உட்பொருட்கள் கூட முற்றிலும் வெறுமையாகி உள்ளது. மேலும் அந்த பேட்டரியைத் திரும்பவும் தூண்டி இயங்கச் செய்வது என்பது இனி மேல் கூடாத காரியமாகும். ஆகவே இப்பொழுது இந்த தூண்டி எழுப்பச் செய்யும் ஓட்டத்தைக் கொண்டிருக்கும் இராசாயனத்தை திரும்பவும் மாற்றாக புதுப்பித்துக் கொள்வது அவசியமாகும்.

<u>'எரிந்து போகுதல்' என்ற பெயரானது விரிவாக உபயோகப்படும் பெயராக பின்வருபவற்றைக் குறிக்கிறது. கடுமையான உணர்ச்சி பூர்வமானதும், நரம்பு தளர்ச்சியும், சரீரம் களைப்படைவதுமாகும்.</u> அது ஒரு தொழில் நுட்பம் சாராத சொல்லாய் தன் போக்கில் வேறுபட்ட ஆனால் அதை ஒத்த நிலைமைகளையும் ஒன்று சேர்த்து மறைத்துக் கொள்வதாகும். இதற்கான ஒரே சீரான அடையாளமாக இருப்பது சரீரம், சிந்தனை, ஆவி ஆகியவற்றில் ஏற்படும் முழுமையான சோர்வாகும். நாள்பட்ட சோர்வு மனிதனுடைய முழு ஆள் தன்மையையும் பாதிக்கிறது. இந்த ஒரு சோர்வானது ஒரு முன்னிரவு தூக்கத்தாலோ அல்லது நல்லதொரு இரவு தூக்கத்தாலோ இனிமேல் நிவாரணம் பெற முடியாது. எந்த அளவு முன்னிரவு தூக்கங்களாலும் போதுமானபடி சோர்வை மேற்கொள்ள முடியாதபடி அது ஓர் மட்டத்தை அடைந்திருக்கிறது. இந்த நபர் நீண்ட கால நாள் பட்ட சோம்பலினால் கஷ்டப்படுகிறார். மிகவும் எளிதான வேலையை மேற்கொள்வதற்குக் கூட பலக்குறைவு அடைகிறார்கள். அவர்களது படைப்பாற்றல் முழுவதுமாக தளர்ச்சி அடைகிறது. அவர்கள் நேரடியாகச் சிந்தனை செய்வதற்கு கொஞ்சங் கூட முடிவதில்லை. அவர்களது ஓட்டமும் வேலையில் ஈடுபாடும் கூட இருப்பதில்லை. அந்த வேலை என்ற எண்ணம் கூட அவர்களை சோர்வுள்ளவர்களாக ஆகச் செய்து அவர்கள் சக்தியை வெறுமையாக்கி விடுகிறது.

'எரிந்து போகுதல்' என்பதற்கு குறிப்பிட்ட காரணங்கள் எண்ணற்றவையாகும். ஆனால் அதற்கான அடையாளங்கள் ஒன்றுக்கொன்று ஏதோ ஒரு மாதிரி வித்தியாசப்படலாம். இதற்காகத் தேவைப்படும் மருத்துவ சிகிச்சையானது எந்த வடிவத்திலிருந்தாலும் அதிகமான சம்பந்தக் குறிப்புடையதால் வெளிப்படையாக கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்த குறுகிய படிப்பின் நோக்கத்தில் நாம் பல திறப்பட்ட அந்த குழப்பங்களைப் பற்றி விவரிக்காமல் நாம் அவற்றைப் பற்றி ஒட்டு மொத்தமாக எரிந்து போகுதல் என்ற பொது நாமகரணத்தில் கருத்துத் தெரிவிப்போம்.

குறிப்பாக போதகர்கள் இந்த நய வஞ்சகமான குழப்பத்துக்கு ஆளாகிறதை மூன்று முக்கிய காரணங்களால் என்று கண்டு பிடித்திருக்கிறேன்.

a: ஜனங்களுக்காக அவர்கள் எடுத்துக் கொள்ளும் பணியின் தனிப்பட்ட தன்மையின் காரணமாக
b: மனச்சாட்சியின் படிய விழிப்புணர்வுள்ள ஊழியர்கள் மீது தங்களால் சுமத்தப்படும் கடினமான வேலையின் பார சுமையின் காரணத்தால்
c: அது அவர்களுக்கு ஒரு போதும் நேரிடக் கூடாது என்ற பொய்யான பாதுகாப்பு உணர்வை இருப்பது போல் பாசாங்கு செய்வது.

**1. இந்த எரிந்து போகுதலுக்கான (Burn Out) வேதாகம உதாரணங்கள்**

அநேகமான கிறிஸ்தவர்கள் ஒரு தேவனுடைய பிள்ளையானது ஒரு போதும் இந்த விதமான ஒழுங்கீனக் குழப்பங்களான நரம்புத் தளர்ச்சி அல்லது எரிந்து போகுதல் என்பதில் இருந்து அவதிப் படக் கூடாது என்று நம்பினாலும் தேவனுடைய சிறந்த ஊழியர்களில் சிலர் இந்த விதமான சோதனைகளை அனுபவிக்கிறார்கள் என்பதை உறுதிபடுத்த போதுமான சாட்சிகள் வேதாகமத்தில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். திருச்சபை சரித்திரத்திலும் மிகச் சிறந்த தலைவர்களில் சிலர் இந்த விதமான எரிந்து போகுதல் என்ற மன வேதனைகளில் இருந்து கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**மோசே இந்த எரிந்து போகுதல் என்பதன் விளிம்பில் இருந்திருந்தானா?**

ஒரு வேளை எரிந்து போகுதல் என்ற விஷயத்தை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்த ஒரு மனுஷனுக்கு மோசே தெளிவானதோர் உதாரணமாவான். அதாவது அவனுடைய ஞானமுள்ள மாமனார் தலையிட்டு அவனுடைய சில பொறுப்புகளான சுமையை இறக்கி ஒப்படைத்தல் என்ற நடைமுறையில் சிலருக்கு தரும்படியாக இணங்க வைத்தான். (யாத். 18:13-27) எத்திரோ தன்னுடைய மருமகனைப் பற்றிய பல காரியங்களை கவனித்து அறிந்திருந்தான்.

வச.13. அவன் நீண்ட நேரம் வேலை செய்தான். காலையில் இருந்து மாலை வரைக்கும். அவனுக்கு மக்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டிய பொறுப்பு இருந்தது.
வச.14. இந்த சுமையைத் தானே சுமந்து கொண்டிருந்தான்.
வச.16. ஜனங்களுடைய துன்பங்களைத் தீர்த்து வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.
வச.18. தனது பலத்திற்கு அதிகமான சுமையான வேலையால் தன்னையே சோர்வடையச் செய்து கொண்டு இருந்தான்.
வச.18. ஜனங்களுக்கும் சரியானபடியாக பணி செய்யப்படவில்லை.

பொருத்தமான தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் தனது பொறுப்புகளில் அதிகமானவற்றை அந்த தலைவர்களிடம் ஒப்படைக்கும் படியாக எத்திரோ தன் மருமகனுக்கு ஆலோசனை கூறினான். இதற்குப் பிறகு மோசேயைப் பற்றி எரிந்து போனதாக அதிகமாக அவனைப் பற்றிச் சொல்லப்படவில்லை. இந்த புதிய திட்டம் அவனை முழுமையான சோர்விலிருந்து காப்பாற்றியதாக யூகித்துக் கொள்ளலாம்.

**எலியா எரிந்து போகுதலை அனுபவித்தான். (I இராஜா 19:1-8)**

I இராஜா 18ம் அதிகாரத்தில் எலியா பலவிதமான கடுமையான ஆவிக்குரிய நாடகங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தான். அவைகளை அவனை வெறுமையாக்கி, சோர்வடையும் படியாக ஆவிக்குரிய பிரகாரமாகவும், சிந்தனையிலும் உணர்ச்சி பூர்வமாகவும் தளர்ச்சி அடையச் செய்தது.

வச.20-40 அவன் எதிர் சவால் விட்டு, பாகாலின் 450 தீர்க்கதரிசிகளைத் தோற்கடித்தான்.
வச.41-45 அந்த வறட்சியான பஞ்சத்தைப் போக்க மழைக்காக ஜெபம் பண்ணினார்.
வச.46 ஒரு இரதத்தை முந்திக் கொண்டு 15 மைல்கள் முன்னே ஓடினான். ‘‘கர்த்தருடைய கை எலியாவின் மேல்’’ இருந்தாலும் அவன் யெஸ்ரயேலை வந்து சேர்ந்த பொழுதும் அவன் இன்னும் சோர்வுற்றவனாகவே இருந்தான். ‘‘எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும்’’ என்று அப். யாக்கோபு சொல்லுகிறார். (யாக் 5:18) சமீப காலத்து சம்பவங்களால் நேரிட்ட ஆவிக்குரிய இழப்புகள் அவனை பலவீனமாகவும் பலம் தீர்ந்தவனாகவும் விட்டிருந்தது. யேசபேல் அவனை பயமுறுத்தி மிரட்டியபொழுது தன் ஜீவனுக்காக தப்பி ஓடினான்.

அதிகாரம் 19ல், முக்கியமான சில ‘எரிந்து போகுதல்’ என்றதற்கு பலவிதமான அடையாளங்களைப் பார்க்கிறோம்.

**A: அழுத்ததில் இருந்தும் பொறுப்புகளில் இருந்தும் விட்டு ஓடி போகுதல்**
வச.14ல் ‘‘அவன் வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய் ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து’’.

இந்த உலகத்தில் இருந்தும் அதன் பிரச்சனைகளில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு ஒவ்வொன்றிலிருந்தும் ஓடிப் போக வேண்டும். (சாக வேண்டும்) என்ற அவனுடைய விருப்பமானது அழுத்தத்திற்கும் சோர்வுக்கும் காரணமான பொதுவான அடையாளங்களாகும். மேலும் எங்கோ தனிமையாக உட்கார்ந்து கொள்ள வேண்டும் என்ற போக்கும் அடிக்கடி தாயின் கர்ப்பத்தில் இருக்க வேண்டும் என்ற ஸ்தானத்தை யூகித்துக் கொண்டும் அடிக்கடி தைரியமில்லாமை, நம்பிக்கையில்லாமை என்கின்ற படுகுழிக்குள் பல சமயங்களில் இறங்குவதாகும். இதில் வருந்தத்தக்க விஷயமாவது பொறுப்புகளிலிருந்து ஓடி விட வேண்டும் என்ற போக்காக இருந்தாலும் இன்னும் உன்னை வனாந்தரத்தில் தரித்திருக்கக் கண்ட நிலைமையே ஆகும்.

தங்கள் படுக்கையிலிருந்து எழுந்திருக்க மறுத்தும் அதே நிலையில் பல வாரங்கள் தங்கியிருக்குமாறு தெரிவு செய்து கொண்ட மக்களை எரிந்து போனவர்களாக எனது தனிப்பட்ட முறையில் நேரிடையாகவே அறிவேன். அவர்கள் வேலைக்குப் போகவும், எந்த விதமான வேலையைச் செய்யவும் மறுத்து விடுவார்கள். அவர்கள் அந்த நிலைமையில் பல வாரங்கள் தங்கியிருப்பார்கள். அவர்கள் பகலும் இரவும் தங்கள் படுக்கையில் இருந்து கொண்டு அங்கு அவர்களுக்கு இருக்கும் பாதுகாப்பை விட்டு விடுவதற்குப் பயத்தினால் நிறைந்திருப்பார்கள். சில சமயங்களில் அவர்கள் கர்ப்பத்தில் இருக்கும் ஸ்தானத்தைப் போல சுருண்டு படுத்துக் கொண்டு தங்கள் தாயின் கர்ப்பமாகிய அடைக்கலமும் பாதுகாப்பும் உள்ள இடத்திற்கு திரும்பி வரும்படி முயற்சிப்பதைப் போல இருப்பார்கள். அவர்கள் ஜீவியத்தில் ஏற்பட்ட ஒரு காலத்திற்கு திரும்பி வர விடுதலை பெற்று கொள்ளுமாறு, அவர்களுக்கு எந்த விதமான பொறுப்புகளும் சோர்வுமே அவர்களுக்கு இல்லாத சமயங்களில் முயற்சிப்பார்கள்.

**B: ஜனங்களிடமிருந்து விடுபட்டு சொல்லுதல்.**
வச.3. ‘‘தன் வேலைக்காரனை அங்கே நிறுத்தி விட்டான்.’’

இங்கே தான் மக்களை விட்டு விடுபட்டு செல்லும் சிறந்த போக்கு ஆனது ஏகாந்தத்தையும் தனிமையையும் தேடுவதாகக் காண்கிறோம். இதனால் பலிகடாவாக ஆக்கப்படும் நபர் தனது பிரியமானவர்கள் அவரைப் புரிந்து கொண்டு உற்சாகப்படுத்தும் படியாக முயற்சித்தாலும் அவர்களுடைய பிரசன்னத்தை அவரால் அடிக்கடி சகித்துக் கொள்ள முடியாமல் இருப்பார். மேலும் தனக்கு நெருக்கமான நம்பக் கூடிய நண்பர்களுடைய பிரசன்னத்தைக் கூட சகித்துக் கொள்ள மாட்டார். மேலும் அவருக்கு சொந்த பந்தமான அருமையானவர்களைக் கூட புறக்கணிப்பார்கள். அவன் ஜனங்களை வெளியே விட்டு விடுவதுடன் அவர்களுடைய தோழமையைக் கூட சகித்துக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் கூடி இருக்கும் ஓர் அறையில் தான் போக முடியாதபடி இருப்பதாக அடிக்கடி கண்டு கொள்வான். அவன் தெருவிலோ அல்லது வேறெந்த பொது இடங்களுக்குப் போவது அவனுக்கு முடியாததாகும். அவன் ஒரு கடைக்கு போவதற்கோ உணவு விடுதியில் மற்ற மக்களுக்கு அருகாமையில் இருப்பதற்கோகூட அஞ்சுவான்.

**C: நம்பிக்கையைக் குலைத்து விடும் ஓழுக்கத்தைச் சிதைத்து விடும்.**
வச.3. ‘‘தன் பிராணனைக் காக்க பெயெர்செபாவுக்கு புறப்பட்டு போய்’’

அந்த 450 பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு தன்னந்தனியாக அறைகூவல் விட்ட மனிதனாகிய எலியா இப்பொழுது தன்னை மிரட்டிய ஒரு ஸ்தீரியின் பிரசன்னத்திலிருந்து ஓடுகிறான். அவனுக்கு என்ன நேர்ந்தது? அவன் தனது ஒருங்குணர்வைத் தீர்த்துப் போக்கி விட்டான். அவனது உள்ளான பலமும் மன வலிமையும் தைரியமும் கூட அவனை கை விட்டு விட்டது. பலரான பொய்யான தீர்க்கதரிசிகளுக்கு வெற்றிகரமாக எதிர் சவால் விட்டு தோற்கடித்த மனிதன் ஒரு ஸ்தீரியை எதிர்த்து நிற்க தைரியமில்லாது போனான்.

**D: தனது சுய மரியாதையின் முழுமையான இழப்பு**
வச. 4b. ‘‘போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும். நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல’’ என்று சொன்னான். ‘‘எரிந்து போகுதலின்’’ பலிகடாவானவன்

காலாகாலங்களில் தனது சுய மதிப்பையும் உள்ளான உறுதியான நம்பிக்கையையுங் கூடு முற்றிலுமாக இழந்து துன்புறுகிறான். அவனது உறுதியான சுய நம்பிக்கையும் தன்னைப் பற்றிய சுய தகுதியுமான உணர்வு அடிமட்ட பாதாளத்தில் இருக்கின்றன. அவன் தன்னைப் பற்றிய சுயவுணர்வடைதலானது முழுவதுமாக அது எதிர் மறையாகி விடுகிறது. தன்னுடையதான தன்னில் தானே எந்த விதமான நல்லியல்புகளையோ தனக்குள்ளான தகுதியையோ அல்லது திறமைகளையோ எப்பொழுதுமே கண்டு கொள்வதில்லை. இந்த விதமான எதிர்மறையான மதிப்பீடு தனக்குள் மிகுந்த வல்லமை பெற்றதாக ஆவதினால் அவன் தான் ஜீவிப்பதில் எந்த நோக்கத்தையும் இனிமேல் பார்ப்பதாக இல்லை. தன்னுடைய ஜீவியத்தைப் பற்றி அதனால் எந்த விதமான தகுதியும் மறுபடியும் இருக்க போவதில்லை என்பதைப் பற்றித் திட்டமாக தெரிந்து கொண்டிருப்பதால் அவன் தேவனிடம் ஜெபித்து ''கர்த்தாவே என்னுடைய ஜீவனை எடுத்துக் கொள்ளும;'' என்று மன்றாடுகிறான்.

**E: ஆழ்ந்த நாள்பட்ட சோர்வை அனுபவித்தல்**

அவனுடைய மன நோக்கம், உடலின் தோற்ற அமைப்பு, வார்த்தைகள், வெளிவரும் சொற்கள் அனைத்துமே ஆழ்ந்த சோர்வையுடைய மனிதனைப் பற்றிச் சொல்லும் அவனுக்குள்ள புறநோக்கு முற்றிலும் எதிர்மறையானதாகும். அவனுக்கு எதைப் பற்றியும் நேரிடையாகச் சொல்வதற்கு எதுவும் கிடையாது. அவனுக்குத் தன் வருங்காலத்தைப் பற்றி நேரிடையான எதிர்பார்ப்பு ஒன்றுமில்லை. முன்னோக்கிப் பார்ப்பதற்கு எதுவும் இல்லை. அவனுடைய மனநிலையானது இருண்டதாகவும் விடுதலை எதுவுமின்றி மந்தமாகவும் இருக்கும். பயத்துடனும், பலவீனப்படுத்தியும் வருகிற சோர்வு ஒரு வேளை அதிகமாக சாதாரணமாகவும் அல்லது அதிகமாக பயமுறுத்துகிற சின்னமாக ''எரிந்து போகுதலுக்கு'' விளங்குகிறது.

**F: ஆழமான நம்பிக்கை இல்லாமையும், நம்பிக்கையை இழத்தலும்**

திடீரென அவனுடைய ஜீவியமானது பயனற்றதாக தோன்றலாம். தான் ஜீவிப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை என்ற உணரலாம். ''போதும் கர்த்தாவே'' என்று கதறுகிறான். நான் வாழ்க்கையை இனிமேல் சந்திக்கப் போவதில்லை. நம்பிக்கையின்மை என்பது முற்றிலுமான நம்பிக்கை இழப்பு அல்லது நம்பிக்கை இல்லாதிருப்பதாகும். எலியா உள்ளச் சோர்வும் உற்சாகம் இன்மையும் உடையவனாக இருந்தான். ஆவியில் எவ்வளவு கீழாக இருக்க முடியுமோ அவ்வளவு கீழான நிலைமையில் இருந்தான்.

**G: பரிதாபமான ஓர் மரண வாஞ்சை**

வச.4. ''தான் சாக வேண்டும் என்று கோரி போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்'' என்று ஜெபித்தான்.

அநேகமான கிறிஸ்தவர்களுக்கு இந்த மகா பெரிய தீர்க்கதரிசி, அதீதமான உயர்வை உடைய ஆவிக்குரியவரான மகான் சாவுக்காக எப்படி வாஞ்சிக்கலாம் என்பதைப் புரிந்து கொள்வதை கடினமான நேரமாகக் காண்பார்கள். அவர்கள் ஆழமான நம்பிக்கையின்மையை இந்த மனுஷன் அனுபவித்த வண்ணமாய் ஒருக்காலும் அனுபவித்து இருக்க மாட்டார்கள். அவர்கள் அனுபவிப்பதாகத் தோன்றும் வாழ்க்கையை விட மரணமே சிறந்தது என்று உணரும் படியாகச் ஒரு மனுஷனுக்கு செய்யக் கூடிய மனச் சோர்வின் இருட்டைப் பற்றி அவர்கள் அறிந்திருக்க முடியாது. சாவைப் பற்றிய வாய்ப்பானது ஜீவனை விட விரும்பத்தக்கது என்று தோன்றும் பொழுது சாவு-விருப்பம் என்பது நேரிடுகிறது. இதைத் தான் ஒரு காலம் தாவீது சங் 23:4ல், ''மரண இருளின் பள்ளத்தாக்கு'' என்பதைப் பற்றிச் சொல்லும் பொழுது குறிப்பிட்டு பேசி இருக்கலாம்.

இந்த விதமான பிணியினால் விளையும் ஆபத்தைக் குறித்து புரிந்து கொள்வது இரண்டு காரணங்களுக்காக முக்கியமானது.

- அந்த விதமான நிலைமைக்கு பலிகடாவாக ஆகும்படி சாத்தியமாக ஆக்கக் கூடிய எந்த நிலைமையையும் தவிர்க்கக்கூடும் படியாக.
- அந்த இருண்ட நிலைமையை அனுபவிக்கும் மற்றவர்களுடன் நீங்கள் உண்மையாகவே கற்பனையில் உள்ளக் கிளர்ச்சியை உண்டு பணணக் கூடியதாக.

**H: அவருடைய முடிவான முந்திய நிலைக்கு வரும்படியாக.**
தேவனுக்கு ஸ்தோத்திரம்! இந்த கதையானது மரணம் விருப்பம் ஆனதோடு முடிவு பெறுகிறதில்லை. தேவன் உள்ளே அடி எடுத்து வைத்து தம்முடைய விடுதலையையும் திரும்ப முன்னிருந்த நிலைக்கு வருவதை மறுபடியும் கொண்டு வருகிறார். இதற்காக தேவனுடைய சிகிக்சை நிவாரண விதியாவது நீண்ட நேரம் தூங்கவும் நல்ல உணவும் உள்ளாக்கிக் கொண்டதாகும். (I இராஜா 19:6) இன்னமும் கூட இயற்கையான நிவாரணங்கள் தான் எளியதும் சிறந்ததும் என்று பல தடவைகளில் கருதப்படுகிறது.

**தாவீது இதற்கு மற்றொரு பலிகடாவாக இருந்தானா?**
“என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்?” (சங் 42:11)

தாவீது இந்த எரிந்து போகுதலுக்கான மேம்பாடுடைய அடையாளங்களான உணர்ச்சி பூர்வமான காயம், நரம்புத் தளர்ச்சி ஆகிய நோய் வீச்சுகளின் பலனாக ஏற்படும் மனச் சோர்வை அவன் ஒருகால் அனுபவித்திருப்பானோ என்பதை நாம் கண்டு அறிந்து கொண்டால் மாத்திரமே தாவீதின் எழுத்துக்களால் காட்டப்படும் வல்லமையான நாடக பாணியில் அமைந்ததுமான கற்பனைக் காட்சியை புரிந்து கொள்ள முடியும். துக்கமான உட்கதையான பத்சேபாளோடு அவனுக்கு இருந்த தொடர்பால் அவன் அதிகமான துன்பத்திற்குள்ளாகி மனோ நிலை சம்பந்தமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் தளர்ச்சியால் கஷ்டப்பட்டிருப்பான். (II சாமு 11:1-13) “மறு வருஷம் இராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படும் காலம் வந்த போது” கீர்த்தி பெற்ற யுத்த வீரனான தாவீது எருசலேமில் இருந்து விட்டான். ஒரு வேளை யுத்தத்தினால் வந்த களைப்பினால் அப்படி இருந்திருக்கலாம். அப்பொழுது அவன் நடுவயதினனாக இருந்தான். ஒரு வேளை ஜீவியத்தின் நடுபகுதியில் ஏற்பட்ட திருப்பு முனையாகவும் இருக்கலாம். அவன் தூக்கமின்மையினாலும் தடைப்பட்ட தூக்கம் போக்கினாலும் அவன் அவதிபட்டான். இது எரிந்து போதலுக்கு பொதுவான மற்றொரு அடையாளமாகும். என்ன சம்பவித்தது என்பதற்கு இந்தக் காரணங்களில் எதுவுமே சாக்கு போக்காகச் சொல்லப்படவில்லை. ஆனால் இது அது ஏற்படக் கூடிய சற்றுக் கொஞ்சமான பின்னணியாக அந்த துக்க சம்பவத்துக்கு கொடுக்கப்பட்டதானது மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலாகும்.

**ஆத்துமாவுக்கு ஏற்பட்ட இருள் சூழ்ந்த இரவு**
சங்கீதம் 22ல் கொடுக்கப்பட்டுள்ள ஓவியமான கற்பனைக் காட்சியை, அந்த நிகழ்ச்சியானது தாவீதுடைய “எரிந்து போகுதலின்” அனுபவத்தால் ஏற்பட்ட காட்சி என்று நாம் கண்டறிந்து கொள்ள முடியுமானால் அதை சற்று நன்றாக விளங்கிக் கொள்ள முடியும். இந்த பின்னணியை மனதில் வைத்துக் கொண்டு இந்த வசனங்களைப் படிப்போமானால் அவற்றில் பல நமக்கு அர்த்தத்தைக் கொடுக்க முடியும். அல்லவென்றால் அவைகளைப் பெரிதுபடுத்திக் கூறப்பட்டது போலத் தோன்றும் இந்த சங்கீதமானது மேசியாவின் பாடுகளுக்கு தீர்க்கதரிசன முன்னுரையாக தெரிந்தாலும் நாம் அதை முதலாவதாக தாவீதுடைய அனுபவத்தின் அறிக்கையாக இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இருக்கும் பொழுது அவனுடைய இருண்ட நேரங்களின் கஷ்டங்களில் இருக்கும்பொழுது அவன் ஒரு மேசியாவைப் போல ஒரு போக்கில் ஆகிறான். அங்கே எண்ணிக்கையற்ற திருப்பு முனையாக வல்லமையான பயமுறுத்தும் வசனங்கள் உள்ளன. ஆனால் அதில் ஒன்றாவது தொடக்கமான வரிகளைப் போல பயமுறுத்துவாக இல்லை. “என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்.” (சங் 22:1) இது கலக்கம் அடையாத சிந்தனையாக இந்த வசனத்தைக் கருத்தில் கொள்ளும் பொழுது இது தாவீது இயேசு என்ற இருவருடைய அனுபவத்தைப் பற்றிச் சொல்லுகிறது. இந்த இரண்டு பேருமே இருண்டதும் சோர்வும் மனத் தளர்ச்சியுமான காலத்தைக் கடந்து வந்து இந்த போக்கானது பயமுறுத்துவதாக தோன்றியதால் தேவன் அவர்களை கைவிட்டு விட்டது போலவும் அந்த கஷ்டத்தின் காட்சியிலிருந்து தேவன் அவர்களை அந்த மகாக் கஷ்டத்தின் காட்சியிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டு விட்டது போலவும் அவர்களுக்கு காணப்பட்டது. மனச் சோர்வும் உணர்ச்சிப் பூர்வமான தளர்ச்சியும் மிகவும் ஆழமானதாகவும் இருண்டதாகவும் ஆன பள்ளத்தாக்கானது அந்த பலிகடாவாக ஆக்கப்பட்ட நபர் தன்னோடு தேவனுடைய பிரசன்னத்தை இனி எக்காலத்திலும் உணர முடியாதது போல் ஆக்கியது.

அதிகமான எண்ணிக்கையுள்ள தேவனுடைய மனுஷரும் ஸ்தீரிகளும் இந்த விதமான அடிகளால் உண்டான காயத்தைப் போலவே அதே விதமான காயமான வேதனையை அனுபவித்திருக்கிறார்கள்.

ஆவிக்குரிய இராட்சதர்களான ஆகஸ்டின், மார்டின் லூதர் போன்றவர்களும் மற்றும் பலரும் தங்களுடைய ''ஆத்துமாவின் இருண்ட இரவை'' பற்றியதான அனுபவத்தைப் பொருத்தளவில் குறித்து வைத்திருக்கிறார்கள். அது ஒரு பள்ளத்தாக்கைப் போல பலரும் அதன் ஊடாகக் கடந்து வந்து பின்னர் அதிலிருந்து ஒரு புதிய ஒளியின் இராஜ்ஜியத்திற்குள்ளும் முதிர்ச்சிக்குள்ளும் இருந்து எழுந்து வந்திருக்கிறார்கள். ஒருகால் இதுதான் இதுவுங்கூட தாவீதால் குறித்து சொல்லப்பட்ட ''மரண இருளின் பள்ளத்தாக்காக'' இருக்கலாம். (சங் 23) ஒரு வேளை இந்த அனுபவமுங்கூட ''சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற் காலத்திலே களிப்பு உண்டாகும்'' என்று அவன் சொல்லும் பொழுது அவனால் (தாவீதால்) குறிப்பிடப்படுவதாகும். நிச்சயமாகவே இந்த விவிலிய நூல் பகுதியும் அதனால் கூறப்படும் கருத்துக் கோட்பாடும் இந்த போக்கான சோதனையை அனுபவிக்கும் ஒரு நபருக்கு அதீதமான தைரியத்தைக் கொடுப்பதாக இருக்கும். மேலும் இந்த விதமான இருளானது என்றைக்குமே நீடித்து நிற்பதில்லை என்ற உணர்வானது, அந்த இரவைப் போல பின்னர் சம்பவிப்பதாக புதிய மகிமையான நாளின் உதயத்திற்காக இடங் கொடுப்பதாகும்.

**புதிய ஏற்பாட்டு ஓர் உதாரணம்.**

யாரோ ஒருவர் சொல்லலாம், ''அதாவது இவையெல்லாம் மெய்யாக இருக்கலாம். ஆனால் அது பழைய ஏற்பாட்டு மக்களுக்கு சம்பவித்தது. அவர்களுக்கு புதிய உடன்படிக்கையின் உறவுத் தொடர்பின் அனுகூலத்தைப் பற்றி தெரிந்திருப்பார்களானால் அவர்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டத்தை அனுபவிக்க நேர்ந்திருக்காது.'' நாம் ஒருகணம் புதிய ஏற்பாட்டில் எப்பாபிரோதீத்து என்பவரின் அனுபவத்தைக் கவனித்துப் பார்ப்போம். (பிலிப் 2:25-30)

**<u>அவனுடைய பின்னணி</u>**

a: அவன் பவுலுக்கு நெருங்கியதோர் நண்பன் ''என் சகோதரன்'' என்று பவுல் கூறினார்.
b: அவன் ஒரு உடன் வேலையாள் - பவுலுக்கு குறைச்சலில் உதவி செய்தவன்.
c: உடன் சேவகன் - ஆவிக்குரிய போராட்டத்தில் அனுபவம் பெற்றவன்.
d: பவுலுக்கு ஊழியத்தில் உடன் உதவியாள்
e: ஒரு கிறிஸ்தவ தலைவராக - கௌரவம், அனுபவம், முதிர்ச்சி பெற்றவன்.

**<u>அவனுடைய நோயின் இயல்பு</u>**

A: அவன் அளவுக்கதிகமாக வேலை செய்தான் - ''கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம்'' வச.30
B: வேறெந்த காரணமும் சொல்லப்படவில்லை.
C: அவன் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாயிருந்தான். வச.27. ''நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்திலே, உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு, அவன் தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்.'' (வச. 30)

சரியான சரீரப் பிரகாரமான வேலை உன்னைக் களைப்படையச் செய்யும். ஆனால் மரணத்திற்கு சமீபமாய் உன்னைக் கொண்டு வராது. ஆனால் அதனால் அழுத்தம், கரிசனை, பொறுப்பைப் பற்றிய கவலை, பல மக்களுடைய வேலையைச் செய்வதற்காக முயற்சி செய்வது நிச்சயமாகவே அவ்வாறு உண்டாக்கக் கூடும். நமக்குத் தெரிந்தபடி எப்பாபிரோதீத்து பல நபர்களுடைய வேலையை அதாவது ''பவுலுக்கு ஊழியத்திலே அவர்கள் செய்ய வேண்டிய வேலையின் குறைவை நிறைவாக்கும் படியாக'' அவ்வாறு செய்ய முயற்சித்தான்.

**<u>அவனுடைய மீட்சி</u>**

வச. 27. ''தேவன் அவனுக்கும் இரங்கினார்'' - பவுலுக்கும் இரங்கினார்.

எப்பாபிரோதீத்து தேவனுடைய ஊழியத்தில் மறுபடியும் சுறுசுறுப்பாக கிரியை செய்ய ஆரம்பித்தான். பிலிப்பியர்கள் மறுபடியும் தங்களுடைய பொறுப்புக்கு எழுந்திருந்து பவுலுக்கு அவர்கள் முன்னாட்களில் ஊழியம் செய்தது போல வேலை செய்தார்கள். அதாவது எப்பாபிரோதீத்து வசமாக தங்கள் ஈவுகளை அனுப்பித் தந்தார்கள். இந்த சோக சம்பவத்தினால் ஏற்பட்ட நல்ல விளைவுகளில் ஒன்றாவது மேலும் அநேக மக்கள் ஊழியத்தில் இடைபட்டார்கள். இது அடிக்கடி நேரிடக் கூடிய ஒரு விளைவாகும்.

## 2: எரிந்து போகுதலுக்கான (Burn Out) சில பொதுவான அடையாளங்கள்.

**எரிந்து போகுதல் என்பது மனதினுடையதும் உணர்ச்சிப் பூர்வமானதுமான திறமைகள் முற்றிலுமாக தீர்ந்து போய் அதனால் பாதிக்கப்பட்டவர் ஜீவியத்தையும் அதன் பொறுப்புகளையும் மேற்கொண்டு எப்பொழுதுமே செய்யக் கூடாதபடி ஆகி விடுகிறார்.** இந்த எரிந்து போகுதலுக்கான சில அடையாளங்கள் என்ன? அதற்கு பலியாகும் ஆபத்தைப் பற்றி நீ எப்படித் தெரிந்து கொள்ளுவாய்? நான் உங்களுக்கு சுருக்கமாக ஒரு அட்டவணையாக கூடுமாக நேரிடக் கூடிய அடையாளங்களைப் பற்றி சொல்லுவேன். ஆனால் அவைகளைப் பற்றி எந்த விதத்திலும் முடிவானவைகளாக ஆக முடியாது. நீங்கள் அவற்றில் கொஞ்சத்தையோ அல்லது முழுவதையுமே அடையாளங் கண்டு கொள்ளலாம். அப்படி என்றால் நீங்கள் அவற்றைப் பற்றிய நிலைமையை பரிசீலனை செய்து அதிலிருந்து தப்பிக்கக் கூடிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இந்த மாதிரியான போக்கின் ஆரம்ப கட்டங்களில் இருந்தால் ஒரு விதமான குறுகிய இடைவெளியோ அல்லது விடுமுறையோ உங்களது பிரச்சனையை சரி செய்து விடும். உங்களுடைய ஜீவியத்தை சீர் செய்து அமைத்துக் கொள்ளும்படி அவசியமாகலாம். அதை திரும்பவும் கால அட்டவணைப் படுத்தி ஏதோ ஒரு சமயம் உங்களுடைய வேலைச் சுமையை ஒரு இணை ஊழியருடன் ஒப்புவித்து விடலாம். அந்த அடையாளங்கள் அதிகமாக முன்னேறிச் சென்று அதிகமான ஆழமாக குழியில் இறங்கி இருக்குமானால் அதற்காக அதிகமான சிரத்தையுள்ள செயல்பாடுகளை ஒரு வேளை எடுக்கும்படியாக நேரிடலாம். நீங்கள் ஒருமுறை விடுமுறை எடுத்துக் கொண்டாலும், அங்கு நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள முடியாமல் இருந்தாலும் நீங்கள் ஒரு அபாயகரமான இக்கட்டுக்குள் போய் கொண்டு இருக்கிறீர்கள் என்பது சுட்டி காட்டுதலாகும். அதனால் அதற்காக சிரத்தையான பொறுப்புள்ள நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது அவசியமாகும். அங்கு ஏற்கனவே அநேக எண்ணிக்கையான எச்சரிப்பு அடையாளங்கள் வழக்கமாக இருக்கின்றன. அவைகளுக்கு முன்னதாகவே போதுமான கவனம் எடுத்தால் அந்த பிரச்சனையின் போக்கை இலகுவாக்க சில எளிய நடவடிக்கைகள் நீ எடுத்துக் கொள்ளும்படி செய்யலாம். என்னவென்றாலும் அதைப் புறக்கணித்து அது நம்மேல் பலமான பிடியை எடுத்துக் கொள்ளும்படி அனுமதிக்கப்பட்டால் அதற்கான தீர்வானது இலகுவானதாக விரைவில் செய்ய முடியாமல் அதன் நிலைமையானது சொஸ்தமாகாதபடிக்கு கடினமானதாக ஆகி விடுகிறது.

இதற்காக ஒரு சமமான ஒப்புமையை பின்வருமாறு சில சமயங்களில் நான் உபயோகிப்பதுண்டு. கற்பனை செய்து பார். மிகவும் இருட்டானதோர் இரவில் நீ உனக்குத் தெரியாத பாதையில் போவதாக கற்பனை செய். உனக்கு முன்னால் ஒரு கரத்தையும் பார்க்கக் கூடாதபடி இருக்கும்பொழுது நீ அந்த வயலின் வழியாகப் போகும்படி தீர்மானஞ் செய்து கொண்டிருக்கிறாய். அப்படியே நீ மெதுவாகவும் கவனத்துடனும் போய் கொண்டிருக்கிறாய். ஆனால் உன்னுடைய எச்சரிக்கையான தன்மையையும் மீறி நீ கிளைகள், பாறைகள் உன் வழியின் குறுக்காக இருக்கும் போதும் நீ அவற்றின் மேல் இடறி விழுந்து சில சிறு காயங்களை அடைகிறாய். இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக அந்த வெளிச்சம் நன்றாக வெளுக்கும் வரை தாமதித்து காத்திருக்கும்படி தீர்மானிக்காமல் நீ முட்டாள்தனமாக தொடர்ந்து போகத் தீர்மானமாய் இருக்கிறாய். பின்னர் நேரிடுவதாவது ஆழமான இருண்ட குழியில் பின்னர் விழும்படி நேரிடுகிறது. அதிலிருந்து தப்பித்து வெளியே வருவதற்கு வழியே கிடையாது. இப்பொழுது அந்த துவாரத்திலிருந்து வெளியே ஏறி வருவதற்கு உனக்கு கொஞ்சம் உதவித் தேவையாக இருக்கிறது. ஆனால் அதற்காக சற்று நேரம் எடுத்துக் கொள்ளக் கூடும். அதற்குத் தேவையான நேரம் ஓரளவுக்கு வித்தியாசப்படலாம். அதே போல் அந்த வகையான வேதனையும் நீ அனுபவிக்கும் நம்பிக்கையின்மையான கலக்கமும் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் வித்தியாசப்படலாம். ஆனால் விஷயம் என்னவென்றால் நீ சுலபமாக எழும்பி வர முடியாமல் இருப்பாய். ஒரு வேளை உன்னால் என்றுமே அறிந்திருக்காத இருண்ட நாட்களில் சிலவற்றை அனுபவித்திருப்பாய். அப்படியே உனக்குப் பிரியமானவர்களுங்கூட அனுபவித்திருப்பார்கள்.

இந்த விதமான அச்சுறுத்தும் விபரீதமான போக்கை நீ ஒரு நாளும் பார்த்திருக்காவிட்டாலும் அல்லது அனுபவித்திருக்கா விட்டாலும் நான் அதனால் வரக்கூடிய எதிர் விளைவுகளை பெரிது படுத்துகிறேன் என்று நீ உணரலாம். அதன் விளைவாக என்னுடைய எச்சரிக்கையை நீ தெரிந்தும் புறக்கணிக்கலாம். ஆனால் என்னை பொறுத்த மட்டில் இந்த நோய் மிகவும் உண்மையானதாக

முற்றிலும் அச்சுறுத்தக் கூடியதென்பதை வற்புறுத்திச் சொல்வேனாக நிச்சயமாகவே அது ஒரு கற்பனையின் வர்ண ஜாலமல்ல. இது மிகவும் ஆபத்தானதாக நாசஞ் செய்யக் கூடியதாய் அழிவை உண்டாக்கக் கூடியதாகும். ஆயிரக்கணக்கானவர்கள் தற்காலிகமாக அதனால் வரும் நாசத்தை அனுபவிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு வரும் முன்னதாகவே அதனால் வரும் அடையாளங்களைக் கண்டுணராமல் போனதற்கு வருத்தப்படுகிறார்கள் என்பதில் நிச்சயமாயிருக்கிறேன். மேலும் தங்களைத் தப்புவித்துக் கொள்வதற்காக அது நீண்ட காலப் பிரச்சனையாக ஆவதற்கு முன்னரே செயலூக்கமாக ஏதோ ஒன்றைச் செய்வார்கள் என்பது எனக்கு நிச்சயமாகும்.

ஆகையால் இதைப் பற்றிய பொதுவான முன் அடையாளங்களைப் பற்றி ஏதோ கொஞ்சம் முக்கியமாகத் தெரிந்து கொண்டால் அவைகளை வெகு விரைவில் அடையாளங் கண்டு கொண்டு அந்த பிரச்சனை ஆழமாகவும் உறுதியாகவும் குழியில் பதிந்து கொள்ளும் முன்னால் அதற்கான தப்பிக்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள ஏதுவாகும். நான் சுருக்கமாக அந்த அடையாளங்களைப் பற்றி என் கருத்தைத் தெரிவிப்பேன்.

இந்த அடையாளங்கள் பொதுவாக மூன்று வகைப்படுத்தப்படும்.

1: உணர்ச்சி பூர்வமான இழப்பான முழுச் சோர்வு. சலிப்பு, களைப்பு, மன அழுத்தம்.
2: தன்னைப் பற்றிய தாழ்வுணர்ச்சி, குறைந்த சுய மதிப்பு
3: படைப்பாற்றல் மனதை ஒருமுகப்படுத்துதல், உற்பத்தி திறன் ஆகியவற்றில் இழப்பு.

ஆரம்ப அடையாளங்களும் பின்வருபனவற்றையும் உள்ளடக்கும்.

- சிந்தனையும் எண்ணங்களும் கட்டுப்பாட்டை மீறி ஓட்டம் எடுத்தல்
- வயிற்றை பிரட்டுதல்
- சரீரத்தில் அழுத்தம்
- தீவிரமான இருதய ஓட்டத் துடிப்பு
- பீதியான உணர்வு, கலக்கம், குழப்பம் ஆகியவற்றை உணருதல்.

**இதனால் பாதிக்கப்படுபவர் பின்வருபனவற்றில் சிலவற்றையோ அல்லது முழுவதையுமோ அனுபவத்தில் உணருவார்கள்:**

a. உயர் மட்ட அளவு ஆன வருங்காலத்தைப் பற்றிய பயமும் - கவலையும் அளவுக்கு மிஞ்சிய கவலை கொள்ளுவதும் அக்கறைப்படுதலும்
b. தொடர்ந்து வரும் களைப்பு - ஏறக்குறைய முழுவதுமான பலத்தை இழத்தல்
c. உணர்ச்சிகளை அடக்குதலும் விருப்பு வெறுப்பு இன்மையும், குறைந்த அளவில் பொறுப்பு உணர்வு
d. பயனற்று போனதாக ஓர் உணர்வு - நம்பிக்கையற்றுப் போன உணர்வு - நம்பிக்கையின்மை
e. படைப்பாற்றலும் மனதை ஒருமுகப்படுத்துவதையும் - இழந்து விடுதல் உற்பத்தியில் வறுமை
f. அச்சம் - காரணம் காட்டி விளக்கமுடியாதபடி ஒவ்வொன்றைப் பற்றியும் வீண் பயம்
g. எளிதில் சீற்றம் கொள்ளுதல் - தன்னுடனும் பிறருடனும்
h. பாதிக்கப்பட்ட உறவுத் தொடர்புகள் - குறிப்பாக மனைவியோடும் குடும்பத்தினரோடும்
i. மனச் சோர்வு - துயரம் கொண்ட மனநிலையும், சக்தி உற்சாகம் வைராக்கியம் ஆகியவை தளர்வுறுதல், துயரம் நிறைந்த
j. தூங்கும் முறைகளில் அமைதி குறைவு - தூக்கம் இன்மை
k. உணவு பசி சரீர கனம் இவற்றில் மாறுதல். விரைவில் சரீர கனம் குறைவதோ அல்லது கனம் கூடுதலோ ஆகும்.
l. எதிர்மறை உணர்வு - முற்றிலுமான எதிரடையான புறநோக்கு
m. காரியங்களின் தோற்றப் பார்வையில் இழப்பு - சிறு புற்றுங்கூட மலையாகத் தோன்றும்.
n. குழந்தையைப் போல் அழ வேண்டும் என்கிற விருப்பம்.
o. முடிவுக்கு வரக் கூடாமை - மிகச் சிறியத் தீர்மானத்தைக் கூட எடுத்துக் கொள்ள கூடாமை
p. சமூகத்தோடு ஒட்டி வாழாமை - தன்னந்தனியாக இருக்க விருப்பம்
q. குறைந்த சுய மதிப்பீடு - சுய நம்பிக்கையில் இழப்பு
r. உயர்ந்த அழுத்தம் - அழுத்தம் - சோர்வினால பாதிப்பு
s. உணர்ச்சியின் இழுப்பு விசையினால ஏற்படும் அடையாளங்கள் (உம்) இருதயத்தாக்க வேதனை

t. படுக்கையிலே இருக்க விருப்பம் - அடிக்கடி கர்ப்பத்திலிருப்பது போல நிலையில் இருத்தலாக உணர்தல்
u. தோல்வி உணர்ச்சி - ஜீவியத்தின் கடமைகளில் முடிவாகத் தோல்வியடைந்ததாக பயம்
v. ஒதுக்கி வைக்கப்பட்டதாக உணர்வு
w. ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாமை
x. வேதாகமத்தைப் படிக்கக் கூடாமை - எதுவும் அர்த்தமாகத் தோன்றுவதில்லை.
y. தேவ பிரசன்னத்தை இழந்து விடுவதாக உணர்வு - தேவன் பிரசன்னத்தை உணரக்கூடாமை.
z. சாவை வாஞ்சித்தல் - சாவுதற்காக நோயுற்ற வாஞ்சை, தற்கொலை செய்யக் கூடிய போக்கு

**தலைவர்களை பொறுத்த மட்டில் அவர்களோடு இணைந்துள்ள சில பிரச்சனைகள்**

நான் இந்த அதீதமான நிலைமையை, கடந்த பல ஆண்டுகளாக கூர்ந்து படித்ததில் நான் இந்த நிலைமையில் பல திறப்பட்ட உப காரியங்களை குறிப்பாக கிறிஸ்தவ தலைவர்களின் ஜீவியத்தில் காணப்படக் கூடியவைகளைக் கவனித்தறிந்தேன். அவைகள் ஒரு சில இணை பிரச்சனைகளாக அளவுக்கு மீறி வேலை செய்த தலைவர்களிடையே விசேஷித்த சாதகமான போக்குடையதாய் அவர்களுக்காக குறிப்பான அக்கறை கொள்ளக் காரணமாகிறது. அவைகளில் ஏழு குறிப்புகளை மட்டும் சுருக்கமாகக் குறிப்பிடுவேன்.

**A: <u>மெய்யான வாழ்க்கையில் இருந்து விடுபட்ட மனோ நிலை</u>**

ஆரம்பத்தில் இது மிகுந்த சாதுவான வடிவத்தில் தோன்றலாம். எளிதான தெளிவற்ற (மெய்யான வாழ்க்கை பற்றி) பொய்யான உணர்வு அல்லது ‘‘இது உண்மையிலே நடக்கவில்லை. நான் இங்கே மெய்யாகவே இருக்கவில்லை.’’ என்ற உணர்வே தான். இதில் அடிக்கடி கனவு போன்ற தன்மையானது உன் ஜீவியத்தைப் பற்றி உண்டாகி அதனால் ஜீவியத்தில் நீ மிதந்து செல்வது போலவும் மேலும் உனது பாதங்கள் மெய்ம்மை என்றும் தரையைத் தொடாமல் இருப்பதாக உணர்வின் தன்மை உண்டாகிறது. இந்த விதமான உணர்வு நீடித்து நிலைத்து மோசமாக வளர்ந்தால் அது உடலை விட்டு வெளியே இருக்கும் அனுபவமாக உணடாக்கிக் கொண்டு நீ அங்கே ஆஜராகி இருக்கவில்லை என்பது போன்ற போக்கில் உனது ஜீவியத்தை தொலைக்காட்சித் திரையில் பார்ப்பது போல தோன்றும். அந்த ஜீவியத்தின் சம்பவங்களில் பங்கெடுத்துக் கொள்பவர் என்பதை விட அதை கவனித்து பார்ப்பவர் என்ற எண்ணமானது ஒரு வேளை மேலோங்கக் கூடும்.

**B: <u>பொறுப்பைக் குறித்து ஒரு குறைவுறும் உணர்வு</u>**

அதிகமாக நிஜத்திலிருந்து விடுபட்டதன் விளைவாக அடிக்கடி தனிப்பட்ட பொறுப்பில் குறைந்து கொண்டு வரும் உணர்வு ஏற்படும். ஆகவே உமது சிந்தனையில் உன்னுடைய அழுத்தத்தில் அதிகமான பகுதி உன்னுடைய பல பொறுப்புகளால் உண்டாகும் விளைவே என்று தெளிவாக உன் சிந்தனையில் உணர்வடையச் செய்கிறது. அதன் கண்கூடாக இந்த பொறுப்புகளை ஒரு வகையான சத்துருவாகக் கருதிக் கொண்டு அதனால் அந்த சிந்தனை பின்னோக்கிச் சென்று அவற்றிலிருந்து தப்பித்துச் செல்லத் தீர்மானிக்கிறது. அந்த பொறுப்புகளைக் குறித்து ஒரு விதமான கோபம் அதனால் கட்டி எழுப்பப்பட்டு விடுகிறது. ஏனென்றால் அவைகளாலே தான் வேதனை உண்டாக்கப்பட்டது போல் தோன்றுகிறது. அடிமனதளவில் ‘‘நான் உனக்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை’’ என்ற உணர்ச்சியை மறைத்து வைத்திருக்கிறாய். இது தன் முறைக்கு உள் மனத்தில் அந்த பொறுப்புகளுக்கு சேவை புரிவதற்கு எதிராக கலகத்தை எழுப்புகிறது. மேலும் அதைப் புறக்கணிக்கும் விருப்பத்தையோ அல்லது அதற்குத் தேவையானவைகளைத் தவிர்க்கவோ காரணமாகி விடுகிறது.

இந்த மனப்பான்மையானது வழக்கமாக பாதிக்கப்பட்டவரின் முன்னுரிமைகளைத் தாறுமாறுக்குகிறது. அவர்கள் சிந்தனையின் ஒரு பகுதியில் அந்த பொறுப்புகளை நிறைவேற்ற மிக முக்கியமானவைகளாக உணரச் செய்தாலும் மேலும் அவைகள் நிறைவேற்றப் படாததால் அவைகளைக் குறித்து குற்ற மனப்பான்மையை உடையவராக இருந்தாலும் சிந்தனையின் மற்றொரு பகுதியானது அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு இடைபடுவதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இதன் ஒரு பகுதியாக விளக்கஞ் சொல்லக் கூடிய ஓர் ஒப்புமையை தருகிறார். ஒரு நபர் மேஜையின் அருகில் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் முன்னே பதில் அனுப்ப வேண்டிய ஒரு கட்டு அவசரக் கடிதங்கள் வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அங்கே அந்தக் கடிதங்களுக்கு ஒன்றுஞ் செய்யாமல் அந்த நபர்

மணிக் கணக்காக காகித ஊக்குகளோடு விளையாடிக் கொண்டும், மேஜையின் இழுக்கும் அறைகளில் இருந்து காகிதங்களைச் சுத்தம் செய்து கொண்டும் இருக்கிறார். அந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும்படி வேண்டிய கவனம் செலுத்த ஏதாவது செய்ய வேண்டும் என்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைத் தவிர்ப்பதற்கு எதையும் செய்ய நினைக்கிறார்.

இந்த குறைந்து வரும் பொறுப்புணர்வானதுங்கூட மிகவும் அபாயகரமானது. ஏனென்றால் ஆத்மிகமான பொறுப்புள்ள பகுதியில் அது வேண்டாத நபராக நுழைந்து விடக் கூடும். இந்த கிறிஸ்தவ தலைவருக்கும் ஆத்மீகமான நேர்மைக்கு மாதிரியாக இருப்பதற்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. எப்பொழுதுமே அவருக்கு நற்பண்புகளுக்கும் உத்தமத்திற்கும் மாதிரியாக இருப்பதற்கான தேவையானவைகளைப் பற்றிய நிலையான அழுத்தம் இருக்கிறது. சிந்தனையின் ஒரு பகுதி இந்த தேவையின் முறையான முடிவுகளைப் பற்றி கண்டு கொள்கிறது. சிந்தனையின் மற்றொரு பகுதியானது அந்த பொறுப்புகளினால் ஏற்பட்ட அதீதமான பாரத்தால் இந்த தேவையின் அவசியத்தை எளிதாக மற்றொரு பொறுப்பு சுமத்தப்பட்டதாக அதற்கு வேண்டியதான வேண்டுகோள்கள் மீது சீற்றம் கொள்கிறது. ஆகவே பாதிக்கப்படும் நபர் அந்த அறிந்து கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கான குறைந்த மனப்போக்குடையவராக உணர்கிறார். இப்படி இருப்பதால் அவர் அந்த சோதனையை எதிர்த்துத் தாங்க முடியாத படியும் எளிதில் பாதிக்கப்படக் கூடியவராயும் ஆகி விடுகிறார்.

**C: <u>அதீதமான சுறுசுறுப்பான மனச்சாட்சி</u>**

''குறைந்து வரும் பொறுப்புணர்வு'' பற்றியும் அதீதமான சுறுசுறுப்புள்ள மனச்சாட்சியுடன் சேர்த்து சொல்லும் எனது கருத்துக்களை பின்பற்றிச் செல்வதற்கு மிகவும் அந்நியமாகத் தோன்றலாம். ஆனால் அவ்வாறு முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையானவைகள் அதிகமான அழுத்தத்தின் காரணமாக ஒரு சிந்தனையால் முனைந்து கண்டுபிடிக்கப்பட்டவைகள் அவ்வாறு இருக்கலாம். பாதிக்கப்பட்ட ஒரு நபர் ஆனவர் அந்த பொறுப்புகளை நேராகச் சந்திக்காமலும் நிறைவேற்றாமலும் இருக்கும் விஷயமானது அவரது மனச்சாட்சி செத்து விட்டதாக அர்த்தம் தருவதில்லை. முற்றிலுமாக அடுத்தடுத்த சமயங்களில் எதிர்மறையே உண்மையாயிருக்கும். அந்த பலி கடாவாக ஆனவர் குறைந்து வரும் பொறுப்புணர்வுக்கும் வெறி பிடித்த அதீதமான சுறுசுறுப்பாக இயங்கும் மனச்சாட்சிக்கும் இடையே கிழித்துப் போடப்படுகிறார். இந்த விஷயம்தான் வித்தியாசமாகவும் ஆனால் அச்சம் கொடுக்கும் கலந்த இணைப்பாக அவருடைய அதிகமான மனக் குழப்பத்திற்கும் மனச் சோர்வையும் உண்டாக்குவதற்கு காரணமாகிறது. அவர் பற்பல சமயங்களில் பீதி அடைவதற்கு நெருங்கியதோர் நிலைமையை நிலையாக சுதந்தரித்துக் கொள்கிறார். உயர்ந்த நிலையை அடைந்த அல்லது சில சமயங்களில் மிகைப்பட வருணிக்கப்படும் மனச்சாட்சியின் விதிகளை மீறுகிறவராக தன்னைக் கண்டு கொள்ளும் பொழுது அவ்வாறு ஆகிறார்.

அவர் கிறிஸ்தவ ஜீவியம் செய்த ஆண்டுகள், ஒரு கிறிஸ்தவ சமுதாயத்துக்காக அவருக்கு கொடுக்கப்பட்ட தலைமைத்துவமும் அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற வல்லமையான விழிப்புணர்வை அளித்திருக்கிறது. ஆனால் தற்காலத்திய அவருடைய சிதைக்கப்பட்ட சிந்தனையானது கடினமான பொறுப்புகளால் உடைத்து நொறுக்கப்பட்டு தனது மனச்சாட்சி அவருக்கு ஆணையிடுகிறபடியாக அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகளிலிருந்து தான் விடுபட்டு சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று ஏங்குகிறது. அவர் ஒரு பயங்கரமான சிக்கலான நிலைமையில் இருக்கிறார். இரண்டு வல்லமையான சக்திகளுக்கிடையே அதாவது அவரது மனச்சாட்சிக்கும் அழுத்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக முரட்டுத் துணிச்சல் உள்ள சிந்தனைக்கும் இடையே கிழித்துப் போடப்படுகிறார்.

**D: <u>பலமானதொரு குற்ற உணர்வு</u>**

குற்ற மனப்பான்மை என்ற ஏதோ ஒன்றோடு அநேக கிறிஸ்தவர்கள் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார்கள். திருச்சபையின் உறுதித் தன்மையானது தங்கள் குற்றங்களைக் குறித்து மக்களை விழிப்புணர்வு உண்டாக்கி உணர்வடைய செய்வதில் ஒரு தலைபட்சமாக இருக்கிறது. இதற்கான திருச்சபையின் முதல் செய்தித் தூதாவது வழக்கமாக ''நீ ஒரு குற்றஞ் செய்த பாவியாய் இருக்கிறாய்'' என்பது தான். இது நன்கு தெரிந்தபடி ஒரு அவசியமான முன்னோடியாக மன்னிப்பு, இரட்சிப்பை திரும்ப சீர்பொருந்துதல் தேவனுடன் ஓர் உறவுத் தொடர்பு ஆகியவற்றிற்கு அமைந்து இருக்கிறது. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக குற்றவுணர்வு மீது உள்ள உறுதிப்பாடு

ஆனது அடிக்கடி கணக்கில் வைக்கப்பட்ட நேர்மையை விட கனத்தில் மேம்பாடு உடையதாய் இருக்கிறது. அதனால் விளையும் துர்அதிர்ஷ்டமான பலாபலன் ஆவது அதனால் அநேக மக்கள் ஓர் ஆழமான உள் மனதின் குற்றவுணர்வை சுவிகரித்துக் கொள்கிறார்கள். இது பல சமயங்களில் பாவ மன்னிப்பு, சுத்திகரிக்கப்படுதல் ஆகியவற்றில் கொண்டுள்ள நம்பிக்கையினால் புனிதமாக்கப்படுகிறது. ஆனால் எல்லாமும் அடிக்கடி மனதின் மேல் தட்டில் தரை மேல் வந்து அந்த பலிகடாவான நபரை குற்றஞ்சாட்டவும் துன்புறுத்தவும் மறுபடியும் தரைமட்டத்திற்கு மேல் வருவதற்கு ஓர் சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கிறது.

எரிந்து போகுதலினால் சம்பவிக்கும் மன உணர்ச்சிகளினால் ஏற்படும் முழு மனச் சோர்வானதுமான நிலைமை. அப்பேர்ப்பட்ட வகையான திறப்பைத் தந்து விடுவதால் அதனால் பாதிக்கப்படுபவர் தொடர்ந்து ‘குற்றவாளி குற்றவாளி’ என்று அலறிக் கொண்டிருக்கும் ஓர் மனச் சாட்சிக்கு கிடைக்கும் வேட்டைப் பொருளாக ஆகி விடுகின்றனர். மக்கள் மனச் சோர்வடைகின்றனர். (இதுதான் சாதாரணமாக எரிந்து போகுதலுக்கான அடையாளமாகும்) வழக்கமாக நிலையான அனுபவம் குற்ற உணர்வுகளோடு போரிட்டுக் கொண்டே இருக்கிறது.

<u>அடிப்படையில் அங்கே இரண்டு வகையான குற்றவுணர்வுகள் உண்டு - மெய்யானதும் கற்பனையானதும்</u>

# இந்த உண்மையான குற்றவுணர்வானது ஒரு பரிசுத்த தேவனுக்கு மனதை காயப்படுத்திய ஏதோ பாவத்தாலோ அல்லது நடத்தையாலோ ஏற்படும் பலாபலன் ஆகும். பரிசுத்த ஆவியானவரால் மனந்திரும்புதலுக்கும், பாவமன்னிப்புக்கும் கழுவப்படுதலுக்கும் முதற்படியாக குற்றவுணர்வை ஒரு மனிதனுக்குக் கொண்டு வருகிறார். இது தான் முயற்சி செய்யப்பட்டு நம்பப்படுகிற கொள்கை வழியாகும். மேலும் பாவத்துக்கும் அந்த பாவத்தால் ஏற்படும் குற்றவுணர்வுக்கும் இது தான் உண்மையான ஒரே நிவாரணமாகும். இது சாதாரணமாக எளிதானதும் அதீதமான செயலூக்கமான கொள்கை வழியாகும். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார். (I யோவான் 1:9)

# கற்பனை செய்யப்பட்ட குற்றவுணர்வானது மிக அதிகமாக சிக்கலாகவும் அதனால் செயல்பாட்டுக்கு அதிகதிகமான கடினமானதாகவும் ஆகிறது. எரிந்து போகுதலினால் பாதிக்கப்பட்ட நபர்கள் உண்மையான குற்றவுணர்வோடு இடைபடுவதில்லை. அவர்கள் மீறுதல் செய்தோ அல்லது தேவனை காயப்படும்படி புண்படுத்தியோ நடக்கவில்லை. அவரும் அவர்களை குற்றவுணர்வுக்குக் கீழ் அதன் அடியில் கொண்டு வர முயற்சிப்பதும் இல்லை. அவர்கள் குற்றவுணர்வினால் அவதிப்படுகிறார்கள்.

மனச் சோர்வுகளுக்கு ஆளான கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக புலன் உணர்வுகளால் உணரப்படும் தவறுகளாலும் தோல்விகளாலும் அளவுக்கு மீறி உணர்ச்சி பூர்வமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் குற்றவுணர்வுள்ள போக்கில் உணருகின்றனர். அவர்கள் வரம்புக்கு மீறிய எதிர்மறையான உள்நோக்குப் பார்வையை தங்கள் ஜீவியத்தின் மேல் வைத்துக் கொண்டு வல்லமையான தோல்வி உணர்வுக்கும் அதன் விளைவாக ஏற்படும் குற்றவுணர்க்கும் இடையே போராடுகிறார்கள்.

உண்மையான குற்றவுணர்வை வெகு விரைவில் பாவ அறிக்கை மூலமாகவும் மேலும் மனந்திரும்புதல் பாவ மன்னிப்பு ஆகியவற்றால் தேவனுடைய வாக்குப்படி சரி செய்யப்பட்டாலும், கற்பனையான குற்றவுணர்வை இதே வழியில் சரி செய்ய முடியாது. முதல் இடமாக குற்றவுணர்வு மெய்யானதல்ல. அது அமைதி குலைந்த குழப்பமான சிந்தனையால் உண்டாக்கப்பட்ட படைப்பாக, ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றுக்கு எதிரான விருப்பத்தைக் கொண்டு அதனால் பாதிக்கப்பட்டவரை தண்டிக்க வேண்டும் என்று கருதுகிறது. அந்த விதமான உணர்வுகளை எவ்வாறு குறைத்துப் போக்குவது, கற்பனை செய்யப்பட்ட குற்றவுணர்வின் வல்லமைப் பிடியில் இருந்து பாதிக்கப்பட்டவர் எவ்வாறு விடுவிக்கப்படுவது? அது கற்பனை செய்யப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வதாலும் அதுவும் உண்மையானது அல்ல என்பதாலும், நீ பாவஞ் செய்யவில்லை என்பதாலும் மேலும் தேவன் அவரைத் தண்டிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கவில்லை என்பதைக் கொண்டு உணர்த்தலாம்.

நீ உன் அடிமனதளவில் உன்னைத் தானே தண்டித்துக் கொண்டிருக்கிறாய். நீ ஏமாற்றம் அடைந்து இருக்கிறாய். உன்னுடைய நோயின் காரணமாகச் சோர்வடைந்து இருக்கிறாய். உனக்கு சுகமில்லாததால் நீ குற்றவுணர்வு கொள்கிறாய். உன் சிந்தனையில் உள்ள விந்தையான காரியமானது உன்னை தண்டிக்க விரும்புகிறது. ஏனென்றால் நீ ஒரு முட்டாளாக இருப்பதால் உன்னையே ஒரு நோயாளியாக ஆகும்படி செய்து கொண்டு நீ செய்ய வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் சந்திக்கக் கூடாதபடி ஆகிறாய். இப்பொழுது நீ உன்னைத் தானே மன்னித்துக் கொள். உன்னை விடுவித்து கொள்ளும் படியாக.

**F: <u>ஆவிக்குரிய இருளும் (மரண) நிழலின் பள்ளத்தாக்கும்</u>**

ஒரு கிறிஸ்தவ தலைவருக்கு எரிந்து போகுதல் என்ற நிலையில் சமாளிப்பதற்கு கடினமான காரியமாக வழக்கத்தில் இருக்கிறது. தேவனுடைய பிரசன்னத்தைத் தன்னோடு அதிகமாக இருக்கும்படி அவசியமாக இருக்கும் பொழுது அவனால் அதை உணரவோ அல்லது உணர்ந்து கொள்ளவோ முடியாது. நிச்சயமாகவே தேவன் அவரைக் கைவிட்டு விட்டார் என்பதாக அல்ல அல்லது அவரை விட்டு நீங்கி விட்டார் என்பதாகவும் அல்ல பாதிக்கப்பட்டவருடைய மனோ ரீதியானதும், உணர்ச்சிப் பூர்வமானதும், ஆவிக்குரிய திறன்கள் அனைத்தும் வெறுமையாக்கப் படுவதால் சில சமயங்களில் தேவனுடைய பிரசன்னம் தன்னோடு இருக்கும் உணர்வை அவரால் பதிவு செய்து கொள்ள முடிவதில்லை.

என்னுடைய கருத்துக்களைப் படிப்பவர்களில் பலர் சில நல்ல இறையியல் காரணங்கள் இவைகள் என் நேரிடக் கூடாது என்பதை அறிந்திருப்பார்கள். மேலும் அவர்கள் வேதாகமத்தின் பல மேற்கோள்களை எடுத்துக் காட்டி, ஏன் இது நேரிடக் கூடாது என்பதையும் சுட்டிக் காட்டுவது போல் தோன்றுகிறவைகளை எடுத்துக் காட்டுவார்கள். நான் அந்த சகல வேதாகமத்து மேற்கோள்களை ஒருகால் ஒத்துப் போகலாம். மேலும் அவைகளிலிருந்து உற்சாகமான தைரியத்தையும் ஆறுதலையுமே பெற்றுக் கொள்ளலாம். என்னவென்றாலும் அப்படிப்பட்டதோர் காரியம் நேரிடக் கூடும் என்றும் அறிவேன். முதலாவதாக வேதாகமத்திலிருந்து தாவீது இராஜாவுடையதும் மரித்து உயிர்த்த இயேசு கிறிஸ்துவினுடையதுமான இருவருடைய அனுபவத்திலிருந்து சங் 22:1ல் அறிக்கை செய்யப்பட்டபடி, ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர், எனக்கு உதவி கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்'' என்றதிலிருந்து அறிவேன். மேலும் தேவனுடைய மகா பரிசுத்தவான்களில் சிலர் திருச்சபை வரலாற்றில் குறித்து அறிக்கை செய்தபடி தங்களுடைய ஜீவியத்தில் சமயா சமயங்களில் நேரிட்டதுமான அப்படிப்பட்ட சம்பவங்களின் அனுபவத்தை அவர்களால சொல்லப்படுகிறதிலிருந்தும் அறிந்து கொள்ளுவேன். இறுதியாக என்னுடைய தனிப்பட்ட சொந்தமான அனுபவத்தில் இருந்தும் இதைப் பற்றி ஏதோ கொஞ்சம் அறிந்திருக்கிறேன்.

அந்த மாதிரியான காலங்களில் தேவனுடைய பிரசன்னம் உன்னுடன் இருப்பதை உணர்ந்து கொள்வது கடினமாக இருப்பது போலவே, முன்னதாகவுள்ள நம்பகத்தக்கதும் மெய்யென்று நிரூபிக்கப்பட்ட ஆவிக்குரிய பலத்தைக் கொடுக்கும் மூல காரணிகளிலிருந்து உதவியையும் ஆறுதலையும் பெற்றுக் கொள்வதுங்கூட கடினமானதாகும். எரிந்து போகுதல் என்பது வேதாகமத்தையும் அந்த எல்லை மீறிய சந்தர்ப்ப சூழ்நிலைக்கு முழுவதுமாக அவசியமற்றது போல தோன்றும்படி செய்யக்கூடிய திறமை பெற்றது. வேதாகமம் என்றும் மாறுவதில்லை. ஆனால் நேரிட்டது என்னவென்றால் உம்முடைய புலன்களால் கண்டுணரும் சக்திகள் குறைந்து போய் வெறுமையாக ஓரளவுக்கு மேல் போய் எதுவுமே மேற்கொண்டு இனிமேல் அர்த்தம் கொடுக்காதபடிக்கு மீறிப் போய் விட்டதாகும். அந்த மாதிரியான சமயங்களில் வேதாகமத்தைப் படித்து அல்லது எந்தக் காரியத்திலோ சிந்தனையை போதுமானபடி ஒருமுனைப் படுத்தி அதிலிருந்து எந்த உதவியைப் பெற்றுக் கொள்வது கூடாத காரியமானால் கடினமானதாக அதைக் கண்டு கொள்ளக் கூடும். உனக்கு உதவியாய் இருக்கக் கூடிய புத்தகங்கள் இருக்கலாம். ஆனால் சிந்தனையை போதுமானதாக ஒரு முனைப்படுத்தி அவற்றிலிருந்து எதையாவது எடுத்துக் கொள்ளலாம் என்றாலோ அதுவும் உன்னை ஆழமான சோர்வுக்குள் ஆழ்த்தி விடும். ஆகவே உன்னுடைய முழு அங்கமும் உனக்குச் சொல்ல முயற்சிப்பது என்னவென்றால் நீ, பல காரியங்களில் அதிகமாக உன்னை ஒரு முனைப்படுத்திக் கொண்டதால் உன் சிந்தனைக்கு இடைவெளியான ஓய்வு அவசியம் என்பதை வற்புறுத்துகிறது. ஆகையால் நீ செய்யக்கூடியது ஒரு சமயத்தில் என்னவென்றால் வேதாகமத்தைப் படிக்கும்படி உன்னை வற்புறுத்தி வேண்டிக் கொள்வதை விட அந்த உற்சாகப்படுத்தும் உனக்குத் தெரிந்ததும், பல ஆண்டுகளுக்கு

முன் மனப்பாடம் செய்த வேதாகமத்து பகுதிகளை மறுபடியும் ஞாபகத்திற்கு கொண்டு வரும்படி முயற்சி செய்வாயாக. அவைகளை ஞாபகத்திற்குக் கொண்டு வந்து அமைதியாக தியானம் செய்து சிந்தனை செய். இதைத் தான் சங் 77:10ல் தாவீது என்னதாகச் செய்திருக்கலாம் என்று நம்புகிறேன். ''அப்பொழுது நான் இது என் பலவீனம். ஆனாலும் உன்னதமானவருடைய வலது கரத்திலுள்ள வருஷங்களை நினைவு கூறுவேன். கர்த்தருடைய செயல்களை நினைவு கூறுவேன்.'' (சங் 77:10-11b)

மேலும் ஜெபம் செய்வதற்கு கூடாத காரியமாகத் தோன்றுகிறதென்பதை நீ கண்டுபிடித்துக் கொள்ளலாம். குறிப்பாக உன்னுடைய கண்டிப்பான ஆனால் பல சமயங்களில் மனமார்ந்த மாதிரியான ஜெபங்களானவைகளை நீ வழக்கமாக ஜெபிக்கும்படி செய்யும் ஜெபங்களைக்கூட ஜெபிப்பதற்குக் கடினமாகத் தோன்றலாம். மறுபடியும் உன்னுடைய சிந்தனையை ஒருமுனைப்படுத்தும் வல்லமைதான் உன்னில் குறைந்து வெறுமையானது. இதற்கு விடையாவது நீ உன்னைப் பற்றி குற்றவுணர்வுள்ளவனாக ஜெபிக்காததைக் குறித்து - உன்னைக் குற்றவுணர்வள்ளவனாக அனுமதிக்கக் கூடாது என்று நான் நம்புகிறேன். ஆனால் தேவனுடன் சாதாரணமான நேரடியான சம்பாஷணையில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். உன்னுடைய மிகவும் பிரியமான நம்பக் கூடிய நண்பனுடன் பேசுவது போல தேவனுடன் சாதாரணமாக திறந்த மனதுடனும் நட்புடனும் சம்பாஷித்துக் கொள். அவருடன் உன் ஐக்கியத்தை மதச் சார்பானதாகவும் ஆவிக்குரியதாகவும் ஆக்க முயற்சி செய்யாதே. அதை ஒரு சமய சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு உன்னுடைய இருதயத்தின் சுமையை இறக்கி வைத்து விட்டு உன்னுடைய ஏமாற்றங்கள், விபரீதமான குழப்பங்கள், பயங்கள் யாவற்றையும் அவர் சமூகத்தில் ஊற்றி விடு. அவரிடம் உன்னுடைய மோசமான பயங்களைச் சொல், உன்னுடைய ஆழ்ந்த அந்தரங்கங்களை அவரிடம் அறிக்கை செய். அவரை அதிர்ச்சி செய்யக் கூடியதுமான ஒரு வழியும் உனக்கு கிடையாது. அவர் உன்னைத் தானே சுமையை இறக்கி வைத்து விட்டு ''அவர் உன் பேரில் கவனமாயிருக்கிறபடியால் அவர் பேரில் உன் பாரத்தை வைத்து விடு.''

**G: <u>ஏன் சில தலைவர்கள் விழுந்து விடுகிறார்கள்.</u>**

ஒரு துக்கமான நிஜமாக நேரத்திற்கு நேரம் மேலும் அளவுக்கு அதிகமாக நாம் விரும்புவதற்கும் மீறி தேவனுடைய கிருபையில் இருந்து விழுந்து விட்ட தலைவர்களைப் பற்றிக் கேள்விப் படுகிறோம். மனிதர்களும், ஸ்தீரிகளும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும், நிறுவனங்களுக்கும் தலைவர்களாகப்பட்டவர்கள். தேவனுடைய ஜனங்களை வழிகாட்டி முன் செல்ல முயற்சித்து கிறிஸ்தவ இலட்சியங்களையும் எடுத்துக்காட்ட முயற்சி செய்தும் அவர்கள் தாங்களாகவே சோதனைக்கு பலிகடாவாக ஆகி அழுத்தத்திற்கு இடம் கொடுத்து விடுகிறார்கள். இதைப் பற்றி நாம் எல்லோரும் மிகவும் ஆழமாக யோசனை செய்து ''அது ஏன்?'' என்பதைப் பற்றி வியப்படைந்து இருக்கிறோம்.

நமக்குத் தெரிந்தபடி இதற்கு ஒன்றுக்கதிகமான காரணமுண்டு. இந்தக் கேள்விக்கு ஒரு பொதுவான விடையைக் கூறுவது கூடாத காரியம். சிலருக்கு அது ஒழுங்கினமானதும் இச்சை காரியங்களில் ஈடுபடுகிற சாதாரணமான விஷயமாகும். தலைமைத்துவ பதவிகளில் இருக்கும் நபர்களை அடிக்கடி தாக்கும். வல்லமையான பல திறப்பட்ட சோதனைகளின் மத்தியில் சந்திக்கும் பொழுது போதுமானதாக இல்லாமல் இருக்கும் சுய ஒழுங்காகும்.

என்னவென்றாலும் அந்த விதமான சோதனைகளுக்கு பலியாடாக விழும் ஜனங்கள் அச்சமயம் அபாயகரமான அழுத்தத்தில் இருந்தும் மற்றும் ஓரளவு ஆவிக்குரியதும் மனரீதியானதும், உணர்ச்சி பூர்வமானதுமான வெறுமையில் நன்கு கஷ்டப்பட்டிருப்பார்கள் என்று நான் சொல்கிறேன். இந்த கருத்துச் சொற்களைக் கூறுவதற்கு நான் அந்த வகையான மோசமான நடத்தையும் பாவங்களும் மன்னிக்கப்படும் படியோ அல்லது கண்டிக்கப்படவோ வேண்டும் என்று சொல்லிக் கொள்ளவில்லை. மேலும் நான் மோசமான நடத்தை என்ற ஒவ்வொரு விஷயத்திலும் ''இது உண்மை'' என்றும் நான் யூகிக்கவில்லை. ஆனால் சொல்ல முயற்சிப்பது சில சமயங்களில் இந்த மாதிரியான நடத்தைக்கு பின்னணி காரணமாக இருக்கும் என்ற குறிப்பையே முன் வைக்க முயற்சிக்கிறேன்.

வேதாகமம் கற்பிப்பதாவது சாவுக்கேதுவான மனிதன் ஒழுக்கங் கெட்டவனாக சீர் கெட்டு போய் இருக்கிறான். மனிதனுடைய விழுந்து போகுதலான தன்மையான வீழ்ச்சியே ஒழுக்கக் கேட்டினால் வந்த ஒன்றாகும். இந்த ஒழுக்க கேட்டின் மிகச் சாதாரணமான அர்த்தமாவது ''ஒழுக்கம் மாசுபடுத்தப்படுதலும் பொல்லாத தன்மையும் ஆகும்.'' இதற்கு மற்றொரு அர்த்தமாவது ''அந்த

பலவீனமான மையத்தில் உடைந்து விழுந்து விடுதல்'' என்றும் பொருள் தரும். இது சுருக்கமாக மனித இயல்பின் அடிப்படையான நிலைமையை விவரித்துச் சொல்கிறது. ஒவ்வொரு தனி நபரும், குறைந்தது ஒரு பலவீனமான இணைப்பைக் கொண்ட தொடர் சங்கிலி போல இருக்கிறார். மிகுந்த அளவான அழுத்தமும் சோர்வும் அந்த சங்கிலி மேல் அழுத்தம் கொடுத்தால் அதன் விளைவாக அது அறுந்து போகும் அதுவும் அதன் பலவீனமான மையத்திலே அறுந்து போகும். இதைப் போலவே தான் மனிதர்களுடைய விஷயத்திலுங்கூட நடக்கிறது. மேலும் பாரம் தாங்கிக் கொள்ளும்பொழுது அளவுக்கு மிஞ்சிய அழுத்தம் ஒரு நபர் மீது செலுத்தப்பட்டால் அவர்களும் தங்களுடைய பலம் குறைந்த ஸ்தானத்தில் விழுந்து விடக் கூடும். அந்த மையமானது அவர்களது நரம்புகளாகவோ, சிந்தனையாகவோ, சரீர அமைப்பாகவோ அல்லது அவர்களுடைய ஒழுக்க பலமாகவோ கூட இருக்கலாம்.

சாதாரண நிலைமைகளில் அந்த நபர் அறிவிற்கு ஏற்புடைய பலம் உள்ளவராக இந்தப் பகுதியில் இருப்பாரானால், நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றிருப்பார். ஆனால் அளவுக்கு மீறிய, ஒரே சீரான, அசைக்க முடியாத அழுத்தத்தால் ஏதோ கொஞ்சம் உடைந்து விழக் கூடும். ஒரு காப்பு அமைப்பு திடீரென வெடித்து விடுகிறது. அந்த நபர் அதற்குப் பிறகு அந்த அழுத்தம் பெற்ற சூழ்நிலைமையிலிருந்து உடனடியாக விடுதலையைத் தேடுகிறார். இதற்காக ஏதோ ஒரு வகையான மனமகிழ்ச்சியான இடைவெளியை தரக்கூடிய பொழுது போக்கை விரும்புகிறார். அந்த இடைவெளியானது அழுத்தம் பெற்ற ஜீவியத்திலிருந்து நிஜத்துக்கு நடத்திச் செல்லக் கூடியதாகும். ஒரு தற்காலிக துயர் தணிக்கும் நிவாரணமாக அவர்களுடைய நொறுங்கி உடைந்து போகிற நிலைமையின் திரும்பத் திரும்ப வரும் அழுத்தம் வரும் மனச் சோர்வுக்கு ஏதோ ஒன்றை வழியாகத் தேடுவார்கள். இதற்கான பொழுது போக்கு ஒருகால் குடிவெறியாட்ட உருவில் இருக்கலாம். ஆகவே அவர்களுடைய மனச்சோர்வான எண்ணங்களையும் நோயை வாஞ்சிக்கும் சுய ஆராய்ச்சியை மூழ்கடிக்கச் செய்யும் முயற்சியேயாகும். மேலும் பாலியல் இது திடீரென ஆர்வங் கொள்ளும் அல்லது சிரத்தையோடு கள்ளத் தொடர்பு கொள்ளும் வடிவத்தை எடுக்கலாம். நேரிடக் கூடியதாவது ஒரு அதீதமான சாதாரணமான பொழுது போக்காக திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவுத் தொடர்பு வைத்துக் கொள்வதாக இருக்கும். அதுவும் பல காரணங்களால் நேரிடலாம். அதற்கான முக்கிய காரணம் நெருக்கடியான தேவையாக விடுதலையைக் கண்டுபிடிக்கவும். ஏதோ கொஞ்சம் பொழுது போக்கை சகிக்க முடியாதபடி கட்டி எழுப்பப்பட்டிருக்கும். மன சோர்வில் இருந்து அந்த விடுதலையை பெற்றுக் கொள்வதற்காகவே.

இந்த மாதிரியான பிரச்சனைகளில் அநேக பெயர் வாங்கிய தலைவர்கள் விழுந்து விடுவதற்கு பல காரணங்களில் ஒன்றாகும். அவர்களுடைய புகழும் பெயரும் உயர, உயர அந்த மனச் சோர்வும் கூடவே அதிகரிக்கும். அவர்களுடைய திருச்சபை பெரிதாகப் பெரிதாக அவர்களுக்கு அதிகமான பொறுப்பும் வேலையும் உண்டாகும். அந்த மாதிரியான தலைவர்கள் இணை ஊழியர்கள், உடன் ஊழியர் மேலும் திருச்சபை அங்கத்தினர்களுடைய ஜெபங்களினால் அடிக்கடி சுற்றி சூழப்பட்டு இருக்க வேண்டுமென்பது இதற்கும் மேற்பட்ட கூடுதலான காரணமாகும். கிறிஸ்தவ தலைவர்கள் சராசரி திருச்சபை அங்கத்தினரை விட ஏன் இவ்வாறு மேலும் அதிகதிமாக தாக்கத்திற்கு ஆளாகிறார்கள் என்பதற்கு சந்தேகமின்றி இதுவும் காரணங்களில் ஒன்றாகும். அவருடைய இடத்துக்குப் பதவிக்குரிய அதிகப்படியான பொறுப்புகள் மேலும் அதிகமான அழுத்தமாக அவர் மேல் விழுகிறது. ஆகவே அடிக்கடி அந்தத் தலைவர் சோதனைக்கு அப்பாலும் அதற்கு விதி விலக்காக தற்காப்பு பெற்றவராகக் காணப்படுகிறார். ஆனால் நிஜமாகவே அந்த தலைமைத்துவத்தின் புதிய முன்னேற்ற வழிகளில் நடத்தும் குழுக்களின் நடவடிக்கைகளால் அவருடைய உள்ளுரத்தின் சக்தி மூலங்கள் குறைவடைந்து வெறுமையாகி அவரை எளிதில் சோதனைக்குள்ளாகக் கூடியவராக அவருடைய சகித்து சுமக்கக் கூடாத அழுத்தங்களிலிருந்து ஒரு விடுதலையைப் பெற்றுக் கொள்ளும்படி வாக்குக் கொடுக்கிறது.

மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக இந்த காயமடைந்த போர் வீரர் அவர்களுடைய மீள் சுயபார்வையில் ஒரு மாய்மாலக்காரராக கண்டு கொள்ளப்படுகிறார். ஒன்றை பிரசங்கித்து விட்டு மற்றொன்றைக் கைக் கொள்ளுகிறார். மேலும் அவர் ஒரு கேடு கெட்ட மனிதராக இருந்திருக்க வேண்டும் என்று எல்லா காலத்திலும் இருந்திருக்கிறார் என்றும் மேலும் தனது கோட்பாடுகளை எப்பொழுதும் மூடி மறைக்க முயற்சி செய்து அதனால் இணை ஊழியர்களை வஞ்சித்திருக்கிறார் என்றும் அடிக்கடி அவரைப் பற்றி உணரப்படுகிறது. ஆனால் அடிக்கடி மேற் கொள்ளப்படுவது கெட்ட மனிதன் அல்ல.

ஆனால் மேற்கொள்ளப்பட்டவர் நல்ல மனிதன் தான். அவர் என்றுமே உணர்ந்திராததும் ஒப்புக் கொண்டதுமான மிகவும் அதிகமான அழுத்தத்திற்குள் மிகவும் கடினமாக வேலை செய்பவராக இருப்பவரே தான். தான் நம்பிக்கையுடன் பேசி பரஸ்பரமாக பகிர்ந்து கொள்ளக் கூடிய தனக்குச் சமமான ஒருவரும் இல்லை என்பதை உணருகிறவர் தனது கடுமையான மனத்தாக்கத்தை மற்றவர்களுடன் அதை ஒப்புக் கொள்ள பயந்து சீசாவுக்குள் அடைத்து வைத்திருக்கிறார். அதன் காரணமாக அது வெடித்து சிதறி விடுகிறது.

அநேக தலைவர்களானவர்கள் சோதனைக்குள் விழுந்து விட்டவர்களாகவும் பல ஆண்டுகளாக நல்ல போராட்டத்தைப் போராடி காயமடைந்தவர்களாகவும் என்ற அந்த கை கூடும் நிலைமையை நாம் கண்டு அறிந்து கொள்வது அவசியமாகும். ஆனால் காலப் போக்கில் யுத்த போராட்டத்தினால் தளர்வுற்றும் காயம் அடைந்தும் சத்துருவின் புதிய யூகத் தந்திரங்களுக்கு ஆளாகி விழுந்து விடுகின்றனர். திருச்சபை இந்த காரியத்தை புரிந்து கொண்டால் அவருடைய நடத்தையை சட்ட ரீதியான நோக்கின் கண்ணோட்டத்தின் போக்கில் எப்பொழுதும் எடுத்துக் கொண்டு அந்த பிரச்சனைக்கான தீர்வாக அவரை ஒழுங்கு முறைப்படுத்துவது என்பதை உணர்ந்து கொண்டு எளிதாக அவரை தூக்கி எறிந்து விடுவார்கள். ஒரு சிறிது ஒழுங்கு முறை அவசியமாக வேண்டும் என்பது நல்லதென அறிந்து அது தான் அவரை குணப்படுத்தவும் பழைய நிலைக்கு சீர்படுத்தவும் முக்கியமான உடனடி தேவை என்பதை அறிய வேண்டும்.

இது வேதாகமத்தில் இருந்து பவுல் அப்போஸ்தலன் வழியாக நமக்குக் கொடுக்கப்படும் தெளிவான கண்டிப்பாகும். ‘‘சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனை சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.’’ (கலா 6:1-2)

ஒரு சகோதரன் மீறுதலைச் செய்யும் பொழுது அவருடைய ஆவிக்குரிய சகோதரர்களால் ஏதாவது செய்யப்பட வேண்டும் என்பதை தேவனும் கண்டு அறிந்து கொள்கிறார். ஆனால் அந்த கொஞ்சமானதான ஒன்று சட்ட ரீதியான தணிக்கை செய்வதோ அல்லது அந்த நபரை ஒழுங்காக்குவதோ அல்ல. ஆனால் இவற்றை விட சாந்தமுள்ள ஆவியே அந்த சகோதரர்களைச் சீர்பொருந்தச் செய்வதற்கு அவசியமாக இருக்கிறது.

### 3: எரிந்து போகுதலுக்கான பரவலாக மலிந்து கிடக்கிற காரணங்கள் என்ன?

<u>மறுபடியும் ஒரு தரம் சுருக்கமாக என் கருத்தை மாத்திரம் சொல்லுவேன். கிறிஸ்தவ ஊழியர்களுக்கான மிகவும் சாதாரணமான காரணங்களை மட்டும் சொல்லி என்னை வரம்புக்குள் நிறுத்திக் கொள்வோம்.</u>

a. மன அழுத்தமும் மனத் தாக்கமும் அதிகமான அழுத்தத்தைச் சுட்டி காட்டுகிறது.
b. அளவுக்கு மிஞ்சிய வேலை. நீண்ட மணி நேரங்கள், போதமான விடுமுறையோ அல்லது இடைவெளியே இல்லாமை.
c. நிறைவேற்றப்பட்ட எதிர்பார்ப்புகளுக்குக் கீழே
d. மற்றவர்களுடைய பிரச்சனைகளையும் கவலைகளையும் சுமந்து செல்லுதல்
e. தலைமைத்துவத்தின் கனமான பொறுப்புகள்
f. மிகக் குறைந்த ஓய்வு
g. கிருமிகளால் ஏற்படும் அழுத்தத்திற்கு பிறகு - மருத்துவ பரிசோதனை செய்து கொள்க.
h. எதிர்மறையான உணர்ச்சிகள், ஏமாற்றங்கள், அதைரியமடைதல் முதலியன
i. தங்களுடைய அந்தரங்கங்களை பரஸ்பரமாகப் பகிர்ந்து கொள்வதற்கு புரிந்து கொள்ளும் குறைந்த அளவு இணை ஊழியர்கள்.

### 4: இந்த அழுத்தத்தை நேரிடையாக எவ்வாறு பயன்படுத்துவது.

எல்லா வித அழுத்தங்களும் எதிர் மறையாகவோ அல்லது அழிவை விளைவிக்கிறதாகவோ இருப்பதில்லை. மேலும் ஒரு நேர்மறையான வடிவமுள்ள அழுத்தம் இருக்கிறது. அது உணர்ச்சியையும் செயல்பாட்டையும் உயர்ந்து நிற்கச் செய்கிறது. இந்த விதமான அழுத்தத்தைத் தான் விளையாட்டு வீரர்கள் தங்களுடைய அனுகூலத்திற்கு சாதகமாக திருப்பிக் கொள்கிறார்கள். அது தான் பின்வருபனவற்றிற்கு சாதகமான அழுத்தமாகும்:

- சவால்
- உள்ளக் கிளர்ச்சி
- நேர்மறையான எதிர்பார்ப்பு
- தூண்டி எழுப்புதல்
- சாதனைகள்

சில வகையான நேர்மறையான அழுத்தமானது நமக்குள் இருக்கும் சிறந்த பண்புகளை வெளிக்குக் கொண்டு வரக் கூடியதாகும். ஆனால் அவைகள் நமது உணர்ச்சி பூர்வமான மூல காரணிகளை வடிந்து விடச் செய்கிறது. இந்த உணர்ச்சி பூர்வமான உச்ச மட்டங்களிலிருந்து நம்மை கழற்றிக் கொள்ள நமக்கு நாமே கால அவகாசத்தையும், சந்தர்ப்பத்தையும் எடுத்துக் கொள்வதற்கு அனுமதித்துக் கொள்ள வேண்டும். பிரசங்கம் செய்வதற்கும் ஒரு கூடிவரும் சபைக்கு ஊழியம் செய்வதற்கும் நேர் மறையான அழுத்தத்தின் நுண்பொருள் ஒன்று அதில் உள் அடங்கி இருக்கிறது. அநேக பிரசங்கியார்கள் உணர்ச்சி பூர்வமாக ஆகி தங்கள் வேலையில் ஈடுபாடு கொண்டு அதில் ஓரளவு மட்ட உயரத்திற்கு உணர்ச்சி பூர்வமாக ஆகி விடுகிறார்கள். அவ்விதமான அனுபவங்களுக்குப் பிறகு அவர்கள் எவ்வாறு ஓய்வு எடுத்துக் கொள்வது என்பதைக் கற்றுக் கொண்டு அவர்கள் எய்திய உணர்ச்சி பூர்வமான அழுத்தத்தை எவ்வாறு பொறுப்புடன் நிறைவேற்றுவது என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

மக்களுக்கு ஊழியம் செய்வதில் ஒரு குறிப்பிட்ட அளவு ஆவிக்குரிய பலம் நிறைவேற்றப் படுகிற தென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பெரும்பாடுள்ள ஸ்திரீக்கு இயேசுவானவர் கிரியை செய்த பொழுது அந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் சொல்லுகிறார். ''அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டதை உணர்ந்தார்'' என்கிறார். நாம் ஜெபத்திலும் விசுவாசத்திலும் மக்களுக்கு ஊழியம் செய்யும் பொழுது நம்மிலிருந்து பலத்தைப் பெற்றுக் கொள்ளும் அவர்களுக்கு நமது ஜீவனையும் பலத்தையுமே நம்மிலிருந்து கொடுத்து விடுகிறோம். இதற்கு பின்னர் சற்று ஓய்வும் பலம் புதுப்பிக்கப்படுதலும் தேவைப்படுகிறது. இதை கண்டு உணர்வதற்குத் தவறினாலும் நமது உணர்ச்சி பூர்வமான மூல காரணிகளை நாம் திரும்பவும் ஜீவன் கொடுக்க தகுதியான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளாவிட்டாலும் இது மிகவும் அபாயகரமான தளர்ச்சிக்கு நடத்திக் கொண்டு போகும்.

### 5: இதற்காக அழுத்த நீக்கிகளை பயன்படுத்துக.

எரிந்து போகுதல் சம்பவிக்கக் கூடிய நிகழ்ச்சிகளை ஒருவர் குறைத்து இலகுவாக்கிக் கொள்வதற்கு எண்ணற்ற பல செயலூக்கமான வழிகள் இருக்கின்றன.

### I. ஆரோக்கியமான மனப்பான்மை, குணம் கை ஆளுதல்

ஆரோக்கியமான மனப்பான்மையை தெரிந்து கொண்டு அதைத் தீர்மானஞ் செய்து கொள்ளலாம் என்று வேதாகமம் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. ''கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது'' என்று கூறுகிறது. (பிலிப் 2:5) மேலும் வேதாகமம் கற்பிக்கிறதாவது நமது சிந்தனையையும் மற்றும் மனப்பான்மைகளையும் நமது சிந்தனை முழு பாதையும் ஆதிக்கம் செலுத்தும்படி அனுமதித்தால் அவைகள் நமது ஆரோக்கியம் சரீர நலன் பேரிலும் ஒரு அளவுக்கு அதிகமான வல்லமையானதோர் தாக்கத்தை விளைவிக்கும். நமது மனப்பான்மைகளை சரியாக தெரிந்து எடுத்துக் கொண்டால் நமது ஜீவியத்தையும் பிராப்தத்தையும் ஒரு பெரிய அளவிலே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக் கூடும்.

இந்த மனப்பான்மை என்ற வார்த்தையானது மனித சிந்தனை உணர்ச்சிகள் இவற்றோடு அதிகமாக சாதாரணமாக இணைத்து சொல்லப்பட்டு ஒரு நபர் யோசனை செய்யும் வழிகள், செயல்பாடுகள், நடத்தை முறை வாழ்க்கைக்கு எவ்வாறு பதில் செயல் கூறுவதைச் சுட்டிக் காட்டுகிறது. நாம் சில சமயங்களில் ''அவருக்கு ஒரு ஆச்சரியமான மனப்பான்மை வாழ்க்கையைக் குறித்து இருக்கிறது'' என்று சில சமயங்களில் சொல்லுகிறோம்.

அந்த வார்த்தைக்கு மற்றும் சிலவற்றிற்கு செயலில் பொருந்தக் கூடியதாகும். அதில் ஒன்று ஆகாய விமானம் பறந்து செல்லும்போது அது செல்லுகின்ற கோணத்தைதான் விவரிக்கிறது. ஒரு விமானம் தரையில் இறங்கும் போது மிகவும் முக்கியமானதாகும். அது இறங்கும் பொழுது அதை சரியான கோணத்தில் அணுக வேண்டும். மேலும் இது ஒரு கப்பல் இயக்கச் சொல்லாகும்.

சமுத்திரத்தில் செலுத்தப்படுகிற கப்பலின் மேல் ‘‘பாய் மரங்களை இயக்குதல்’’ என்று அர்த்தப்படும். இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடங்களில் ஒன்றாவது அந்த மாலுமி தனது படகை தான் விரும்பும் எந்த திசைக்கு நேராக, அதன் மீது விசும் காற்று எந்த திசையிலிருந்து வீசினாலும் சரி அதை செலுத்த முடியும். அதற்காக அதன் பாய் மரங்களை சரியான சூழ்நிலைக்கு ஏற்றவாறு விரித்து வைக்க வேண்டும். அந்த பாய் மரங்களை சரியான ஏற்றுதலும் அமைத்தலுமான செயல் அவன் சேர வேண்டியதாக விரும்பும் இடத்திற்கு அந்த முரண்பாடாக எந்தக் காற்று வீசினாலும் அந்த இடத்திற்குப் போய் சேர முடியும்.

இதைப் போன்றதோர் நிலைமையில் நமது ஜீவியத்தின் மேலும் அதன் சவால்கள் மேலும் நாமும் சரியான மனப்பான்மைகளைக் கொண்டிருப்பதாலும் நமது சரீர ஆரோக்கியத்தைத் தீர்மானித்துக் கொள்ள முடியும். இதை சாதித்துக் கொள்வதற்காக இங்கே சில எளிய யோசனைகள்:

**A: உனது மனதில் ஓடிக் கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்து.**
‘‘கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொள்ளுங்கள்.’’ நீங்கள் என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். **அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும்.** (பிலி 4:8-9)

பவுல் அப்போஸ்தலன் நம்மை உற்சாகப்படுத்தும்படி சொல்லுகிற எலலா காரியங்களைப் பற்றிச் சிந்தித்தும் தியானிக்கும்படியாக ஆலோசனைகள் அனைத்தும் நேரிடைதையானதும் முழுவதும் உடலுக்கு நலம் அளிக்கிறதும் ஆக்க சம்பந்தமானதாகவும் இருக்கிறது. நமது சிந்தனைகளை அந்த விதமான நேரிடையான காரியங்களைப் பற்றி சிந்திக்கப் பயிற்றுவிக்கும் பொழுது நாம் எப்பொழுதும் வாசம் பண்ணும் அந்த எதிர்மறையான காரியங்களிலும் மிகவும் அழுத்தத்தைக் கொடுக்கக்கூடியதையும், நாசத்தை விளைவிக்கக் கூடியதையும் நம்மை விட்டு அகற்றி விடுகிறோம்.

**B: உங்களுடைய சிந்தனைகளில் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. (பிலிப் 2:5)**
‘‘கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது.’’ தேவன் உங்களுக்குள் அவருடைய ஆவியால் வாசம் பண்ணுகிறார். ஆகவே அவருடைய யோசனைகளும் உணர்ச்சிகளும் உங்களிலும் இருக்கிறது. என்னவென்றாலும் உங்களுக்கு, நீங்களுங் கூட உங்களுக்குச் சொந்தமான இயற்கையான யோசனைகளையும் உணர்ச்சிகளையும் உடையவர்களாதலால் உங்கள் சிந்தனைகளை அவருடைய சிந்தனையில் இரண்டறக் கலந்து விடக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய சொந்த உணர்வுகளை உங்களில் இருக்கும் கிறிஸ்துவின் சிந்தனையோடும் அதன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கற்றுக் கொள்ளுங்கள். மேலும் அவருடைய யோசனைகளை எப்படி யோசிப்பது என்பதைக் கற்றுக் கொண்டு, காரியங்களை அவருடைய நோக்கப் பார்வையில் பார்க்கவும். கற்றுக் கொள்ளுங்கள்.

**C: சாந்தமும் மனத் தாழ்மையுமான ஒரு சரீர தோற்ற அமைப்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.**
‘‘வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது’’ என்றார். (மத் 11:28-30)

**D: உங்களை ஒரு நேர்முறையான வெளிச்சத்தில் பாருங்கள்**
கிறிஸ்துவைத் தவிர யாரும் பூரணமானவர்களல்ல. ஒவ்வொருக்கும் சில எதிர்மறையான அம்சங்கள் உண்டு. அது போலவே பல நேரிடையானவைகளும் உண்டு. எதிர்மறைகளைப் பற்றி விசேஷமாகப் பேசாதே. உன்னுடைய நேரிடையான பண்புகளைப் பற்றியே பேசுக. அவைகளை மற்றவர்களுடைய

நன்மைக்காகவும் தேவனுடைய மகிமைக்காகவுமே பயன்படுத்து. உன்னுடைய நேரிடையான பண்புகளைப் பற்றி ஒரு அட்டவணையை எழுதிக் கொள். அவைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்து. அவைகளில் அக மகிழ்ந்திரு. அவைகளை செயல்படுத்தி இயக்கங் கொள்ளச் செய். தேவன் உன்னை நேசிக்கிறார். உனக்காக ஒரு நேரிடையான மனப்போக்கைக் கொண்டிருக்கிறார். நீயும் உன்னைப் பற்றி நேரிடையானதோர் மனப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும். அல்லாவிட்டால் நீ தேவன் யோசிப்பதற்கு முரணாக எண்ணிக் கொண்டு இருக்கிறாய். நீ தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்கிறவனாய் இருப்பாய்.

**E: ஒவ்வொரு திருப்புமுனையையும் தேவன் பேரில் நம்பிக்கை வைப்பதற்க ஒரு சந்தர்ப்பமாகக் காண்பாயாக.**

'திருப்பு முனை' என்பதற்கான சீன பதம் இரண்டு விதமான குண இயல்புகளைக் கொண்டது. முதலாவதன் அர்த்தமாவது அபாயம், அந்த மற்றதான இரண்டாவது சந்தர்ப்பம் என்பதைக் குறித்துக் காட்டுகிறது. ஒரு பெரிய திருப்பு முனை நமது ஜீவியத்தின் மேல் மூடி நிழலிடும் பொழுது. அது ஒரு நல்லொழுக்கக் கேடாகவும், நாசமாக்குகிறதாகவும் இருக்கும். நாம் எவ்வளவுக்கு அதிகமாய் அதைப் பற்றி யோசனையால் எதிர்மறையாக பிரதிபலிக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாய் நமது சமாதானத்தையும் நம்பகதன்மையையும் இரண்டையும் இரை மேய்ந்து விடுகிறது. ஆகவே நாம் அதை தேவன் நமக்கு தமது இரட்சிப்பை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகக் கண்டு கொள்ள உறுதியாக இருக்கும்படி தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

**F: உன்னுடைய வாயின் காவலையும் காத்துக் கொள்.**

நாம் விழிப்புணர்வுடனோ அல்லது அடிமனது விழிப்புணர்வுடனோ ஒவ்வொருவரும் நமக்கு நாமே பேசிக் கொள்கிறோம். அந்த உரையாடல் ஒன்று எதிர் மறையாக நாசத்தை விளைவிப்பதாகவோ அல்லது நேரிடையானதாக அல்லது பயனுள்ளதாகவோ இருக்கும். இந்த உரையாடல்கள் ஒருவரின் சிந்தனையில் இருக்கும் பொழுது அவை எண்ணக் கோலங்களாகும். அவைகள் முற்றிலும் வல்லமையுடையனவாகவும் நன்மை பயப்பதாகவும் இருக்கும் அல்லது பாதகம் விளைவிப்பதாக ஆனால் ஒரு தரம் வார்த்தைகள் நம் வாய்க்குள் உருப்பெற்று உதடுகளால் பேசப்பட்டால் அவைகள் மேலும் அதிக வல்லமையை உண்டாக்கிக் கொள்கிறது. ஆகவே நாம் விழிப்புணர்வுடன் எதிர்மறையான எண்ணங்களையும் சொற்கூற்றுகளையும் சொல்லிக் கொள்வதிலிருந்து தவிர்த்து இருக்க வேண்டும்.

மன தத்துவ நிபுணர்கள் இந்த வகையான உரையாடல்களை "சுய பேச்சு" என்றழைக்கின்றனர். மேலும் அது உன்னுடைய ஜீவியத்தின் மேல் கொண்டு வரக் கூடிய அதீதமான வல்லமையையும் தாக்கத்தையும் குறித்து அவர்களுடைய முடிவில் ஒன்று போல் இருக்கிறார்கள். அது அளவுக்கு மிஞ்சிய பலத்துடன் ஒன்று நன்மைக்கோ அல்லது தீமைக்கோ நம்மைப் பாதிக்கக் கூடும்.

வேதாகமம் சொல்லுகிறது "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரதிலிருக்கும்." (நீதி 18:21) "ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ விருட்சம் நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்." (நீதி 15:4) "ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம்." (நீதி 12:18)

**G: ஒன்றுக்குமே கவலைப்படாதிருங்கள் (பிலிப் 4:6)**

கவலைப்படுவதால் எதையும் சாதித்து அடைய முடியாது. I பேதுரு 5:7ல் கவலைப்படுவதைத் தவிர்க்கும் இரகசியம் காணக்கிடக்கிறது. அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள். (I பேதுரு 5:7) 105 வயதுள்ள மூதாட்டி ஒரு தடவை என்னிடம் கூறியதாவது, "ஒருவரும் கவலைப்படக் கூடாதவை இரண்டு காரியங்கள் இருக்கின்றன. முதலாவது நீ மாற்றக்கூடிய காரியங்களைப் பற்றியும் இரண்டாவது நீ மாற்றக் கூடாத காரியங்களைப் பற்றியுமே." வாழ்க்கையின் தத்துவ ஞானமானது நீ ஏதோ கொஞ்சம் செய்யக் கூடிய காரியங்களைக் குறித்து அதைப் பற்றி கவலைப்படுவதில் பயன் ஒன்றுமில்லை. அவைகளைப் பற்றி ஏதோ கொஞ்சம் செய்ய முயற்சி செய். அதற்கு பதிலாகக் கவலைப்படாதே. நீ ஒன்றுமே செய்யக் கூடாத காரியங்களைக் குறித்து கவலைப்படுவதினால் ஒன்றும் அர்த்தமில்லை. எந்த வழிகளினாலும் உன்னால் கவலைப்படுவதால் ஒன்றையும் மாற்றுவதற்கு உன்னால் முடியாது!

**H:** **ஒவ்வொரு காரியத்திலும் சாந்தமாக இருக்கும்படி அப்பியாசிக்க முயற்சித்துக் கொள்.** ''உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.'' பிலிப் 4:5.

சாந்தகுணம் என்பது ''அடக்கம்'' ஆகும் அல்லது தன்னடக்கத்தை பழகிக் கொள்ளுதல் என்றாகும். அது அத்துமீறிய செயல்களைத் தவிர்ப்பதாகவும் எந்த வகையான அத்துமீறுதலும் எப்பொழுதுமே ஆபாயகரமானதாகும். ஜீவியத்தின் ஆரோக்கியமான சமநிலைக்கு அழிவை உண்டாக்கி மனச்சோர்வைத் தூண்டி வருகிறது. ஆகவே நாம் ஒவ்வொரு காரியத்திலும் செயல் தன்னடக்கமும் முனைப்பின்மையும் இருக்கும்படியாக நோக்கமாக இருக்க வேண்டும். அத்துமீறிய வேலையோ அல்லது அத்துமீறிய உணவை உண்ணுதலோ கூடாது. ஒரு ஆரோக்கியமான சமநிலையை ஒவ்வொன்றிலும் கடைபிடிக்க வேண்டும்.

**II. உனது ஜீவியத்தின் மேல் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ள**

காரியங்களைக் கையை விட்டு மீறி கடந்து போயிற்று என்ற உணர்வே அழுத்தத்தை தூண்டி விட்டு எரிந்து போகுதலுக்கும் ஆன பல காரணிகளில் ஒன்றாகும். இது பல எண்ணிக்கையான மூல காரணங்களினால் உண்டாக்கும்படி ஆக்கப்படுமதலாலும் அவைகள் தன்னில் தானே முக்கியம் அல்லாதவைகளானாலும், ஆனால் ஒன்றாக இணைந்து கொள்ளும்பொழுது எரிச்சலை உண்டு பண்ணுவதாய் உன்னுடைய ஆரோக்கிய நிலையையும் நம்பிக்கையையும் சீர் குலைத்து விடும்.

**உன்னுடைய நேரத்தின் மேல் கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்**

காலம் உன்னை விட்டு தப்பித்து ஓடி வருகிறது என்ற உணர்வும், நீ செய்ய வேண்டிய காரியங்களுக்கு அதைச் செய்யும் படி போதுமான நேர அவகாசம் இல்லை என்பதும் பொதுவான பிரச்சனையாகும். நீ அதன் உச்சஸ்தானத்தை அடையாவிட்டால் இது உனக்குள் பீதியையும் மன வேதனையையும் உண்டாக்கக் காரணமாகும். இந்தப் பிரச்சனையை மேற்கொள்ளுவதற்குத் தெரிந்த வழியாவது, ''உனது வேலையைத் திட்டமிடு. பின் அந்தத் திட்டத்தை வேலை செய்து செயல்படுத்து'' என்பதாகும். ஒரு எளிய நிகழ்ச்சி நிரலான காலத்தை மேற்பார்வை செய்தல் உனக்கு உதவியாக இருக்கும்.

இதற்கான எளிய வழியாவது உனது நாட்களை அதற்கற்கென்று பிரித்து வைத்துக் கொள்வது தான். சில குறிப்பிட்ட நாட்களில் செய்யப்பட வேண்டிய வேலைகளை முன்னதாகவே தீர்மானஞ் செய்து கொள். அதற்கு பிறகு தனிப்பட்ட நாட்களைத் திட்டமிடு. அவற்றை ஒரு மணிக் கூறுகளான பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு அந்த நாளைப் பகுத்துக் கொண்டு நீ நிறைவேற்ற பலவேறுபட்ட பணிகளுக்கு அதை பயன்படுத்திக் கொள்க.

மேலும் உன்னுடைய நேரத்தை காலாவதியாக்கும் எதிர்பாரா அழைப்புகளைக் குறைத்துக் கொள்ள சில வழிகளைக் நீ கண்டுபிடித்தே ஆக வேண்டும். (உம்) முன்னறிவிப்பின்ற உன்னைப் பார்க்க வரும் ஜனங்கள். உன்னுடைய வேலை நேர அட்டவணையில் உள்ளே குறுக்கிடும் தொலைபேசி அழைப்புகள் அவசரம் என்பது போன்ற சில குறுக்கிடுகள் தவிர்க்க முடியாதவன ஆகும். மற்றவைகளை நல்ல மேற்பார்வை செய்வதால் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

**III. உன்னை நீ தானே ஸ்திரப்படுத்தி நிலைபடுத்திக் கொள்.**

தாறுமாறாக ஆக்கப்பட்ட நிலைமை அழுத்தமான மனச்சோர்வுக்கு முக்கிய காரணமாகும். ஒவ்வொன்றும் அலங்கோலமாகவும் கை கடந்த நிலையில் இருப்பதுமான உணர்வு அடிக்கடி சோர்வு உண்டாவதற்கு ஒரு காரணமாகும். நீ ஏற்கனவே சோர்வு, நரம்புத் தளர்ச்சியால் அவதிப்படும் பொழுது இது குறிப்பிட்ட மாதிரி அவ்வாறு நேரிடக் கூடும். நீ கடல் போன்ற காகிதங்களுக்குள் அமிழ்ந்து போகக் கூடிய நிலையில் இருப்பதாக நீ ஓர் உணர்வை பெற்றுக் கொள்ளக் கூடும்.

இதற்கு நிவாரணமாவது அந்த பொருட்களை சுத்தமாகவும் ஒழுங்காகக் கூடுமானவரை ஒழுங்குபடுத்திக் கொள்வதாகும். உன்னுடைய மேஜையையும் அலுவலகத்தையும், ஒரு இடைவெளியை ஏதோ ஒரு சமயம் எடுத்துக் கொண்டு சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நீ அடிக்கடி தவறுதலாக வைத்துக் கொள்ளும் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட இடத்தைக் குறித்து வைக்கவும். ஒவ்வொன்றையும் எவ்வளவு ஒழுங்காக வைக்க முடியுமோ அவ்வாறு வைத்துக் கொண்டால் ஒவ்வொன்றும் எங்கு இருக்கிறதென்று நீ அறிந்து கொள்ளலாம்.

**உன்னுடைய முன்னுரிமைகளைத் தீர்மானஞ் செய்து கொண்டு அதில் உன்னை ஒருமுகப்படுத்திக் கொள்.**

ஒவ்வொரு நபரும் அதிகமான எண்ணற்ற பொறுப்புகளைப் பெற்றிருப்பவர் அந்த முன்னுரிமையின் வரிசையை தீர்மானஞ் செய்து கொண்டு அதைத் தெளிவாக சிந்தனையில் ஸ்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் கடமைகளைச் செய்யும்பொழுது உன்னை கடினமாக வேலை செய்வதாக எளிதில் கண்டு கொள்ளலாம். இது உண்மையில் முன்னுரிமையின் கீழ்பட்டதாக இதை விட முக்கியமானதான மற்றவைகளை புறக்கணிக்க நேரிடும்.

உன்னுடைய பொறுப்புகள் அனைத்தையும் அதோடு நீ நிறைவேற்ற வேண்டியவைகளையும் அட்டவணைப்படுத்திக் கொள்ளவும். முதலாவதாக ஆரம்ப கட்டத்தில் அவைகளை ஒழுங்காக எழுதி வைத்துக் கொள்ளவும். பிறகு அந்த அட்டவணையைப் படித்து அந்த முன்னுரிமை வரிசையை நிலைப்படுத்திக் கொள்ளவும். எல்லா விவரங்களையும் 1-15 வரையிலான எண்களையோ அல்லது எது வேண்டுமோ அந்த எண்களை வரிசையாகக் கொடுக்கவும். ஒரு தடவை அந்த வரிசையின் முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் நிர்ணயஞ் செய்த பின்னர் அந்த அட்டவணையிலுள்ள ஒவ்வொன்றிற்கும் போதுமான நேரத்தை ஒதுக்கி அளிக்கவும். உம்முடைய குடும்பத்துடன் ஒன்றுபட்டு மகிழ்ச்சியாக ஓய்வு எடுத்துக் கொள்ளுதல் அதற்கான நேரம் போன்றவற்றையும் குறித்துக் கொள்ள மறந்து விடக் கூடாது. உமக்குப் புத்துயிர் அளித்து புதுப்பிக்கும் பொழுது போக்கான நேரங்களுக்கும் சில கால அவகாசத்தை தந்து செலவழிக்க வேண்டும். உம்மை நல்ல ஆரோக்கியத்துடன் பேணிக் காத்துக் கொள்ளவும், அதற்கான நேர் முகமான ஒரு மனப்போக்கும் கொண்டிருப்பது மிகவும் உயர்ந்த முன்னுரிமை ஆகும்.

**IV: ஓய்வு எடுத்துக் கொள்ள நேரம் எடுத்துக் கொள்ளுதல்**

திருச்சபை வரலாற்றில் அப்போஸ்தலன் யோவானை சந்திக்கச் சென்ற ஒரு வாலிப பிரசங்கியாரைப் பற்றிய கதை உண்டு. அந்த வாலிப பிரசங்கியார் அந்த கனத்துக்குரிய அப்போஸ்தலரைப் பற்றி அதிகமாக கேள்விப்பட்ட படியாலும் அந்த மகா மனிதரை முற்றிலுமாக ஜெபத்தில் தரித்திருப்பதாகவோ அல்லது ஏதோ மற்றொரு ஆவிக்குரிய கிரியையில் இடைபட்டுக் கொண்டிருப்பதாகவோ எதிர்பார்ப்புடன் பார்க்கச் சென்றார். அதற்கு பதிலாக யோவான் ஒரு கிளியுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அந்த மனிதரான வாலிபர் இதைப் பார்த்து விட்டு, ஓரளவு வியப்புடனும் விமரிசனமான யோசனையுடனும் அதைப் பற்றி கருத்துத் தெரிவித்தார். ஆனால் அந்த ஞானவானாகிய முதியவரான அப்போஸ்தலர் பதிலாகக் கூறியதாவது, 'எப்பொழுதும் வளைத்து வைக்கப்பட்டிருக்கும் வில்லானது வெகு விரைவில் தன் பலத்தை இழந்து விடும்' என்று சொல்லி அந்த வாலிபனான மனிதனுக்கு சில பொழுதுபோக்குகளும், வாழ்க்கையின் அழுத்த சுமையிலிருந்து சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுதலையும் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்.

**a: உன்னுடைய இல்லத்தை இளைப்பாற்றிக் கொள்ளும் இடமாக வைத்துக் கொள்.**

ஒவ்வொருவரும் விசேஷமாக பொது வாழ்வில் ஈடுபடும் நபர்களுக்கு இளைப்பாறுதல் எடுத்துக் கொள்ளவும், அவர்கள் அவர்களாகவே இருக்கக் கூடியதோர் இடம் அவர்களுக்கு அவசியத் தேவையாக இருக்கிறது. இதற்காக மிக அறிமுகமானதும் இலட்சியமானதுமான இடம் உன்னுடைய இல்லமாகும். இதற்கு ஆக நமக்குத் தெரிந்த மக்களாக செயல்படக் கூடியவர்கள் உம்முடைய குடும்பத்தினரே ஏனென்றால் பொது வாழ்வு பதவிகளில் வகிக்கும் மக்கள் பேரில் வைக்கும் உரிமைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் சில ஓய்வுகளை பெற்றுக் கொள்வதற்கு அவர்களும் தகுதியானவர்களாவர் அந்தத் தலைவருக்கும் ஒரு கடினமான உழைப்பின் நாளின் முடிவில் எங்கோ ஓரிடத்தில் தமது சுமையைக் கழற்றி விட வேண்டும். அவருக்கு அவரோடு ஓய்வு எடுத்துக் கொள்வதற்கும் ஏதோ சாதாரணமான உரையாடலில் மகிழ்ச்சி அடைவதற்கும் இளைப்பாறுதலில் ஈடுபடவும் நகைச் சுவையுடன் பொழுதைப் போக்குவதற்கும் ஆட்கள் தேவை. உம்முடைய பொறுப்புகளிலிருந்து உமக்கு இடைவேளை தேவையாய் இருக்கிறது. உமது மனைவியும் குடும்பத்தினருக்குங்கூட பொதுமக்கள் பார்வையிலிருந்து ஒரு இடைவெளியான ஓய்வு அவசியமாய் இருக்கிறது.

**b: உமது இல்லத்தை உமது அலுவலகம் அல்லது திருச்சபையின் மற்றொரு நீட்டித்த பகுதியாக ஆக்கக்கூடாது.**

உமது இல்லமானது ‘‘தனித்த அப்பாற்பட்ட பகுதியாக’’ இருக்க வேண்டும். ஒரு போதக சேகரத்தின் அல்லது மற்ற தலைமைத்துவ பொறுப்புகளால் உம்மேல் சுமத்தப்படும் அவசியத் தேவைகளிலிருந்து தனித்து போய் சிறிது ஓய்வை அனுபவிக்க ஓர் இடம் தேவையானதுதான்.

ஆகவே நாள் முடிவில் வேலைப் பளுவை வீட்டுக்கு எடுத்துச் செல்வதை தடுத்து நிறுத்தவும். உம்முடைய வீட்டை பொது மக்கள் கூடும் பொது இடம் போல ஆக்கி விடக் கூடாது. ஆகவே ஒவ்வொருவரையும் போகும் மார்க்கத்தில் எந்த நேரத்திலாவது உங்கள் வீட்டையும் எட்டிப் பார்த்துச் செல்வதையும் உற்சாகப்படுத்தக் கூடாது. உமது பொறுப்புகளில் இருந்து உமக்கு இடைவெளி அவசியம். உமது மனைவியும் குடும்பத்தினருங்கூட பொதுமக்கள் பார்வையிலிருந்து விடுபட ஒரு இடைவெளி அவசியமாகும்.

**c: உமது தினசரி ஒழுங்கு முறையில் சிறிது ஓய்வையும் அட்டவணையில் சேர்த்துக் கொள்ளவும்.**

இயேசு அவர்களை நோக்கி, வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார். ஏனெனில் வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம் பண்ணுகிறதற்கும் அவர்களுக்கு சமயமில்லாதிருந்தது. மாற்கு 6:31.

யாரோ ஒருவர் சொன்னதாவது, ‘‘நாம் தனியாக அப்பால் வந்து சற்று இளைப்பாறாவிட்டால் நாம் பின்னர் ஒரு காலத்தில் தனித்து வந்து விடுவோம்.’’ இயேசு தாமே அடிக்கடி தனிமையாகவே ஒரு ஏகாந்தமான இடத்திற்குப் போய் ஜெபம் பண்ணுவதற்காகவும், தமது உடல் நலத்தை திரும்பப் பெறவும் போனார். மேலும் தமது சீஷர்களையும் அவ்வாறு செய்யும்படி உற்சாகப்படுத்தினார். இயேசுவும் அவருடைய சீஷர்களும் இளைப்பாறும்படிக்கு சமயம் எடுத்துக் கொள்ள வேண்டுமானால் நமக்கும் எவ்வளவு அதிகமாக அதைச் செய்யும்படி தேவையாய் இருக்கிறது?

அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளும் திறமையை இழந்து விட்டார்கள். அவர்கள் எப்பொழுதுமே ஏதோ கொஞ்சக் காரியத்தை செய்து கொண்டும் இருக்காவிட்டால் குற்ற உணர்வு உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். அந்த மாதிரியான மக்கள் வழக்கமாக தங்களை காவல்காரராக பணி நியமனம் செய்து கொண்டு மற்றும் ஒவ்வொருவரும் ஏதோ கொஞ்சம் ஆவிக்குரிய செயல்பாட்டில் அதீதமாக ஈடுபடாவிட்டால் குற்ற உணர்வுள்ளவர்களாக தங்களை உணர்ந்து கொள்கின்றனர்.

**V: தேகப் பயிற்சி**

‘‘சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.’’ (I தீமோத் 4:8) சில கிறிஸ்தவர்கள் இந்த வேத பகுதியானது சரீர பயிற்சி பிரயோஜனமுள்ளதல்ல என்று சுட்டிக் காட்டுகிறது என்று நம்புகிறார்கள். ஆனால் உண்மையாயிருக்கும் பொழுது அது பிரயோஜனமுள்ளது என்று கூறுகிறது. ஆனால் ஒரு சிறிது மட்டுமே பிரயோஜனமானது, தேவ பக்தியோடு ஒப்பிடும் பொழுது நமது ஆவிக்கு நித்தியத்துக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறது. இதற்கு காரணம் அது கொஞ்சமாக பிரயோஜனமுள்ளது. ஏனென்றால் சரீரமானது ஒரு காலத்திற்கு மட்டும் நிலையானது. ஆனால் நமது ஆவியோ நித்தியமானது. துர்அதிர்ஷ்டவசமாக அநேக கிறிஸ்தவர்கள் தேகப் பயிற்சியானது ஆவிக்குரியதல்ல என்ற கருத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு இந்தக் கருத்து இருப்பது எதற்கு என்றால் அவாகள் கிறிஸ்தவர்களாக இருக்கும் காரணத்தினால். அவர்களுடைய சரீரங்கள் கிறிஸ்தவரல்லாதவர்களின் சரீரத் தேவைகளுக்குட்படுவது போல ஆகக் கூடாது என்பதாகும்.

ஒழுங்கான தினசரி பயிற்சி என்பது நமது சரீர ஆரோக்கியத்தை சரியாகப் பாதுகாப்பதற்கு அவசியம் என்பது சர்ச்சைக்குட்படாத விஷயமாகும். மேலும் நமது உணர்ச்சி பூர்வமான ஆரோக்கியத்திற்கும் இது அவசியமானது என்பதும் உண்மையாகும். ஆரோக்கியமான மக்கள், நாடோறும் ஒழுங்காக தேகப் பயிற்சி செய்பவர்கள் அழுத்தத்தினால் உண்டாகக் கூடிய சுகாதாரக் கேடுகளிலிருந்தும் அரிதாக அவதிப்படுவார்கள். சுறுசுறுப்பான நடையானது எளிதானதும் கூடுமானவரை நேர்த்தியான

பயிற்சி முறையாகும். அதற்காக எந்த விதமான பிரத்தியேகமாக கருவிகளும் அவசியமில்லை. ஆனால் மிகவும் சுலபமாக உங்களது தினசரி ஒழுங்கான வாழ்க்கை முறையோடும், ஒப்படைப்புகளோடும் பொருந்திப் போகக் கூடியதாகும்.

### VI: இந்த அழித்து நாசமாக்கும் நோவை குணமாக்குதல்

இந்த அதிகாரத்தைப் படித்து முடித்த பின்னர் நீவிர் உமது சொந்த நிலைமையை கண்டுபிடித்துக் கொண்டீர்களென்று உணர்ந்து கொண்டால் உங்களால் என்ன செய்ய முடியும்?

1: நீங்கள் எரிந்து போகாவிட்டாலும் உடனடியாக நீங்கள் உங்களாகவே எரிந்து போனதாக உங்களை பற்றி சொல்ல முயற்சிக்காதீர்கள். ஜனங்கள் தங்களை ஏதோ ஒரு வகையில் வெறுமையாக உணர்வார்களானாலும் தைரியத்தை இழந்து போனாலும் தங்களுக்குள் அதே மாதிரியான ஒரு அட்டவணை அடையாளங்களைப் படித்துக் கொண்டும் அதனால் அந்த வேதனையைத் தாங்களும் பெற்றிருப்பதாகக் கற்பனை செய்தும் கொள்ளுகிறார்கள். மேலும் கரிசனையான செயல்பாடுகளில் ஈடுபடுகிறவர்கள் களைப்படைந்தும் ஓரளவு தைரியத்தை இழந்தும் விடக் கூடும். அதனால் நீங்கள் இதைப் பெற்றிருக்கிறீர்கள் என்றோ அல்லது எரிந்து போகுதலுக்கு ஆன நிலைக்குள் வருவார்கள் என்று அர்த்தம் ஆகாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஏதோ கொஞ்சமாக சோர்வுற்றாலும் எதிர்மறையாக இயங்கும் ஒருமனப் போக்கும் இந்த விதமான மன அமைப்பில் உங்களது நோய் அடையாளங்கள் மிகவும் அபாயகரமான ஒன்றை அந்த நிலைமையில் உண்மையாக இல்லாவிட்டாலும் அப்படிக் காட்டுவதாக கற்பனை செய்து கொள்கிறார்கள்.

2: ஒரு நம்பத் தகுந்த நண்பனிடம் பரஸ்பரமாக நம்பிக்கை வைப்பாயாக. உமக்கு நெருக்கமான ஒருவரிடம் உமது கரிசனைகளைப் பகிர்ந்து கொள்ளவும். உங்களுக்கு என்ன நேரிடுகிறதென்பதை நீ புரிந்து கொள்ளும்படி உமக்கு உதவுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளவும். ஒரு நல்ல நண்பனைக் கிட்டிச் சேர்ந்து அவரிடம் உமது இருதயத்தை திறந்தாலும் முழுவதும் உண்மையாகவும் நீவிர் யாருடன் உமது அச்சங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடுமோ அவர் மகா பெரிய ஆசீர்வாதமாவார். இந்த வகையான பகிர்ந்து கொள்ளுதல் மிகவும் வயிற்றைப் பிரட்டுகிறதாக இருந்தாலும் நீங்கள் பகிர்ந்து கொள்வதால் உங்களது உடல் அமைப்பில் இருந்து காரியங்களை வெளிக்குக் கொண்டு வர மற்றொருவருடன் சம்பாஷணையாகப் பகிர்ந்து கொள்ளுவதால் சரி செய்ய முடியும்.

3: நல்ல ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒரு உடன் கிறிஸ்தவத் தலைவருடன் பேசவும். (என்னவென்றாலும் அநேக தலைவர்களால் நான் விவரித்துச் சொல்லும் பிரச்சனைகளை உண்மையாகவே புரிந்து கொள்வதில்லை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களால் உங்களுக்கு உதவும்படி முடியவில்லை என்றாலும் உங்களுடைய பிரச்சனையைக் கூட புரிந்து கொள்ள அவர்களால் முடியாது. இது இப்படி என்றால் அவர்களால் கொடுக்கப்படும். பிரதிச் செயலானது கொஞ்சங்கூட உதவி செய்ய முடியாதபடியாக இருக்கலாம்.) இந்த இலட்சியமான நிலைமையானது உண்மையான குழு ஊழியத்தின் ஒரு பகுதியாக அதற்குள் இருக்கும் எல்லா நபர்களும் நம்பிக்கைக்குரிய நண்பர்களாகவும் உடன் இணை ஊழியர்களாகவும் இருப்பார்கள். உன்னுடைய குழுவை ஒரு வணிக நிர்வாக கழகத்தைப் போல செயல்படும்படி அனுமதிக்கக் கூடாது. உண்மையான சகோதரர்களாக ஒருவருக்கொருவர் இருங்கள். உங்கள் சுமையான பாரங்களையும் பிரச்சனைகளையும் போல மேலும் ஜெயத்தையும் வெற்றிகளையுங்கூட பகிர்ந்து கொள்ளுங்கள். ஒன்றுக்கொன்று பரஸ்பரமான ஒன்றான ஐக்கியத்திற்காக நேரத்தை வைத்துக் கொள்ளுங்கள். அங்கே ஒவ்வொருவரும் மனந்திறந்து பகிர்ந்து கொள்ளட்டும். இந்த விதமான சூழ்நிலைமையில் ‘‘நீங்கள் சொஸ்தமாகும்படி ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்யுங்கள்.’’

4: உங்களோடு சேர்ந்தும் உங்களுக்காக ஜெபிக்கவும். ஒரு நம்பிக்கையான ஊழியரைப் பெற்றுக் கொள்ளுங்கள். யாக். 5:13-16ல் சொல்லியிருக்கிறபடி உங்களுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்கும்படி சொல்லுங்கள். இந்த வசனங்களின் (கண்டிப்பை) எச்சரிக்கையைப் பின்பற்றி உங்கள் தவறுகளை ஒருவருக்கொருவர் அறிக்கை செய்தும் நீங்களும் சொஸ்தமாகும்படிக்கு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். ஒரு நம்பிக்கைக்குரிய நம்பத் தகுந்த நண்பனிடம் பேசுவது உங்களை விடுதலை செய்யும் உண்மையான ஊற்றாக இருக்கும். இது ஒரு மத சம்பந்தமான சடங்காச்சாரமாக சீர் குலைந்து விடாமல் பாருங்கள். அது உண்மையானதும் அர்த்தமுள்ள செயல்பாடாக இருக்கட்டும்.

இந்த அனுபவமானது சொஸ்தமாக்கக் கூடிய ஒன்றாக இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் ஜெபம் செய்பவர்களுக்கும், ஜெபம் செய்யும்படி வேண்டிக் கொள்பவர்களுக்குங்கூட இருக்கக் கூடியதாகும்.

5: ஒரு விடுமுறையையோ அல்லது இடைவெளியோ எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பொறுப்புகளிலிருந்து சரியாக ஒரு சிறிது காலம் வெளியே வந்து விடுங்கள். அதற்காக ஒரு உண்மையான விடுமுறை நாளை எடுத்துக் கொள்ள முடியாவிட்டால் அருகில் உள்ள உடன் ஊழியருடன் இல்லங்களை அந்த நாளுக்கென்று மாற்றிக் கொள்வதைப் பற்றி பரிசீலிக்கலாம். இலட்சியமாக ஒரு சமுத்திரத்துக்கு அருகில் வசிப்பவருடன், ஒரு ஏரிக்கரையில் அல்லது நதிக்கரையில் வசிப்பவருடன் மாற்றிக் கொள்ளலாம் அல்லது நீவிர் பெரிய நகரத்தில் வசிப்பவரானால் உம்முடைய வீட்டை நாட்டுபுற சேகரத்திலுள்ள ஒரு மேய்ப்பருடன் மாற்றிக் கொள்ளலாம். இது அதிக செலவில்லாத ஒரு நல்ல மாறுதலாக இரு குடும்பங்களுக்கும் உதவக் கூடும். நீவிர் ஒரு விடுமுறையை எடுக்க முயற்சி செய்து அது உமக்கு உதவுவதாக இல்லாமல் பிரச்சனையை தீவிரமாக்குமானால் பின்னர் நீங்கள் நன்கு விஷயம் அறிந்த திறமையான ஆலோசனையைத் தேடலாம். இதற்கான அடையாளங்கள் அந்த சூழ்நிலைமை தீர்வு காணமுடியாதபடி அபாயகரமானதாக ஒரு சாதாரணமான புறக்காட்சியாலோ அல்லது ஓய்வான செயல்பாட்டினாலோ தீர்வு காணாதபடி ஆகலாம்.

6: அதற்காக ஏதோ திறமை வாய்ந்த மருத்துவருடைய ஆலோசனையை நீவிர் முதலாவதாக எதிர்பார்த்ததை விட உம்முடைய பிரச்சனையானது அதிகமாக முனைப்பு உடையது என்று குறிப்பாக உணர்ந்தால் அந்தக் காரியத்திற்காக முன் கூறப்பட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது நல்லதாகும். நீவிர் ஒரு பொது மருத்துவ நிபுணரையோ அல்லது மருத்துவரையோ ஆலோசனை கேட்க விரும்பினாலும் அவர் அப்படிப்பட்ட விஷயங்களில் நன்கு அறிந்தவரா என்றும் அனுபவம் உள்ளவரா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். எல்லா ஸ்தல மருத்துவர்களும் அவ்வாறு இருக்க மாட்டார்கள். இலட்சியமாக நீவிர் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் மருத்துவர் கிறிஸ்தவரா என்பதை உறுதி செய்து கொள்வதுடன் அவர் உம்முடைய விசுவாசத்தின் உட்கருத்துக்களையும் நீவிர் ஈடுபட்டிருக்கம் வேலையின் தன்மையைப் பற்றி நன்கு முற்றிலும் அறிந்தவராகவும் இருத்தல் நலம்.

**கால அவகாசம் என்பது இன்றியமையாத மூலப் பொருள் ஆகும்.**

இந்த விசேஷித்த நடப்பானது பற்றிய எனது கூர்ந்து கவனித்தலானது இளைப்பாறுதலும் நேரத்தைப் போக்குவதும் சொஸ்தமாக்குதலுக்கான சிறந்த மூலப் பொருட்களாகும் என்று என்னை நம்பும்படி செய்கிறது. தெரிந்திருக்கிறபடி அமானுஷ்யமான சொஸ்தமாக்குதல் உடனே நேரிடக்கூடும். இது ஒரு மகிமையாக நடக்கக் கூடியதாகும். ஆனால் இது எப்பொழுதுமே நேரிடுவதில்லை என்று அறிவேன். ஆகவே இந்த மாதிரி உடனடியான சொஸ்தமாகுதலைப் பெறக்கூடாதவர்களுக்கு நான் சிறிது உதவியையும் உற்சாகத்தையும் அளிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு நேரத்தைப் போக்குதல் என்பது ஒரு தவிர்க்கமுடியாத காரணியாகும். மேலும் அந்த சந்தர்ப்பங்களையும் மீறி உயிர் வாழ்வது எப்படி என்பது முக்கியமாகும். மேலும் அந்த காலத்தில் சொஸ்தமாகுதல் ஏன் நேரிடுவதற்குக் காலத்தை எடுத்துக் கொள் என்பதற்காக இரண்டு காரணங்கள் இருக்கலாம் என்று நம்புகிறேன்.

1: ஏனென்றால் இந்த எரிந்த போகுதலானது வழக்கமாக ஒரு நீண்டு கொண்டு போகும் காலப் போக்கில் நேரிடுகிறது. அந்த மாதிரியான ஒரு காரியம் உடனடியாக மறைந்து போக முடியாது.

2: இந்த சொஸ்தமாகுதல் என்ற நடைமுறை கிரியையானது ஒரு கால கட்ட போக்கில் நடைபெறுவதால் இதனால் பாதிக்கப்பட்டவர் சில பாடங்களைக் கற்கிறார். அதனால் நம்பக் கூடிய வகையில் அவர்கள் இந்த விதமான நோயில் மறுபடியும் விழுந்து விட முடியாது என்பதையும் உறுதிப்படுத்தும். இந்த சொஸ்தமாகுதல் என்ற அனுபவமானது ஒரு சிக்கலான பாதையிலிருந்தோ அல்லது காட்டில் இருந்தோ வெளியே வரக்கூடிய உன்னுடைய வெளியில் வரும் வழியைக் கண்டுபிடித்துக் கொள்வது போலாகும். ஒரு தடவை இந்த வெளியில் வரும் வழியைக் கண்டுபிடித்துக் கொண்டால் அவசியமானால் மறுபடியும் அவ்வாறு செய்யக் கூடும்.

இதற்கான திருப்புமுனையான காரணியாவது இந்த இடையில் நேரிடும் நாட்களை எவ்வாறு வாழ்ந்து உயிர் பிழைப்பது என்பதும் மேலும் அதை குறைந்த அளவு வேதனையோடும் சோர்வோடும்

எவ்வாறு செய்யக் கூடும் என்பதும் தான். ஆகவே இந்த எண்ணத்தை என் சிந்தனையில் கொண்டு நான் சொல்ல விரும்புகிறதாவது:-

**ஓர் உயிர் காக்கும் (மீட்கும்) கொள்கை விதி.**
பல புத்தகங்களை இந்தத் தலைப்பின் கீழ் படித்து சேகரித்த தொகுப்பில் ஒன்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்து கொண்டு இருக்கிறது. இந்த புத்தகத்தை எழுதும் ஆசிரியர் புத்தகத்தின் ஆரம்பமான முகப்பிலே அடிப்படையானது ஆனாலும் அடிப்படையில் மற்றும் வல்லமையான ஒரு கருத்துரையுடன் ஆரம்பிக்கிறார். ஒரு உணர்ச்சி பூர்வமற்ற கருத்துரையாகவும் ஆனாலும் மிகச் சிறந்த வல்லமையான உற்சாகத்தைச் சுமந்து சென்று அந்த நரம்பு தளர்ச்சியுள்ள நபருக்கு அளிக்கக் கூடியதாய் இருக்கிறது. அந்த அறைகூவலானது அந்த நபரின் ஆவிக்குள் ஊடுருவி சரியாகச் சென்று நம்பிக்கையைப் பற்றி பேசுவதாகத் தோன்றுகிறது. அது கூறுவதாவது, **''இங்கே கொடுக்கப்படும் புத்திமதியான ஆலோசனையை நீ பின்பற்றிக் கொள்வாயானால் உன்னை திட்டவட்டமாகக் குணமாக்கும்'' என்பதே.**

''எரிந்து போகுதல்'' என்பது ஒரு நாள் இரவில் நேரிடுவதில்லை என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். அதுவும் உடனடியாகக் குணமாக்கவும் முடியாததாகும். அது பல ஆண்டுகள் மித மிஞ்சிய வேலை செய்வதாலும் மேலும் அடிமனத்தளவில் அழுத்தத்திற்கும் சோர்வுக்கும் ஆளாகி இருப்பதாலும் அடிக்கடி கட்டப்பட்டு வந்த ஏதோ ஒன்றாகும். உமக்கு உமது சுகத்தை திரும்பவும் சுகம் பெறுதல் என்பதற்கு எந்த விதமான நம்பிக்கையுமே கிடையாது என்று உணரும் இருண்ட சோர்வான கால கட்டத்தை சந்தேகமின்றி அனுபவிக்கலாம். மீண்டும் சுகத்தைத் திரும்பப் பெற்ற மற்றும் அநேகரைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். அவர்கள் தாங்கள் முன்னால் இருந்ததை விட பலமுள்ளவர்களாக எழும்பியிருக்கலாம். ஆனால் நீவிர் எப்படியும் எக்காலத்திலும் சுகமடையக்கூடும் என்பதைப் பற்றி கற்பனை செய்து பார்க்க ஒருக்காலும் முடியாது. ''நீங்கள் மீண்டும் சுகம் பெறலாம்'' நீங்கள் மேலும் நலம் பெறலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் வரை நீவிர் உங்கள் சுகத்தை மீண்டும் பெறுதல் என்னும் எதிர்பார்ப்பான சுகபோகத்தை அனுபவித்த மகிழ முடியாது. ஆகவே இந்த கொள்கை விதியானது உயிர் காக்கும் கச்சையைப் போல உனக்கு உதவிக்கரம் கிட்டும் வரைக்கும் உன்னை மிதந்து கொண்டு இருக்கும்படி செய்யக் கூடும்.

**<u>இந்த கொள்கை விதிக்கான நான்கு அங்கங்களான பகுதிகள் ஆவன:</u>**

**1: அதை நேருக்கு நேர் (அ) முகத்துக்கு முகம் சந்தித்துப் பார்.**
அதை விட்டு விட்டு ஓடிப் போக முயற்சிக்காதே. இந்தக் காரியத்திற்கு முந்தி உன்னால் ஓட முடியாது. அது உன்னை ஒரு தரம் இறுகக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் அதை விட்டு விட்டு ஓடி போகலாம் என்று எண்ணுவது பயனற்றதாகும். அதை வெற்றியுடன் தட்டிக் கழிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடிய காலம் ஒன்று ஒரு வேளை இருந்திருக்கலாம். ஆனால் அது எப்படியோ போய்விட்டதால் நீ இந்த எரிந்து போகுதலுக்கு ஒரு பலியாடாக ஆகிவிட்டாய் என்பதைக் கண்டு கொள்ள வேண்டும்.

**2: அதை ஏற்றுக் கொள்.**
அதை எதிர்த்து போராடாதே. வழக்கமாக அதைப் பற்றி ஏன் என்று கேட்கும் சோதனை ஏற்படலாம். ஏன்? இது ஏன் நேரிட்டது? அது ஏன் எனக்கு நேரிட்டது? இது எனக்கு நேரிட வேண்டுமென்று என்ன தவறு செய்தேன்? நான் தேவனுக்கு பிரியமில்லாததை எப்படி செய்தேன். அதனால் எனக்கு நேரிடுவதேன்? என்று கேட்கும் சோதனை வழக்கமாக ஏற்படலாம். மேலும் முடிவில்லாத வினாக்கள் அடங்கிய வட்டங்கள் வினாக்களை எழுப்பக் கூடும். அதற்கான விடைகள் கிடைப்பது அரிதாகும். மனதின் எதிர்மறையான நிலைமை அடிக்கடி ஏற்படுவதால் அதற்கான போக்காவது தன்னையே குற்றஞ்சாட்டிக் கொள்வதாகும். இது ஒருக்காலும் உதவாது. உண்மையில் அது காரியங்களை மேலும் மோசமாக்கும். நீங்கள் கண்டு அறிந்து கொள்ள வேண்டிய காரியங்கள் சிறிது இருக்கலாம். அவற்றை ஏற்றுக் கொண்டு இடைபட வேண்டும். ஆனால் இது வழக்கமாக செய்யக் கூடிய சரியான நேரமாக இருக்காது. இதற்காக குற்றம்சாட்டுபவர் மேல் குற்றம் சாட்டப்படுவது அதிகமாக கூடுமானதாக இருக்கக் கூடும். ஆனால் அது நியாயமாகாது.

அதற்காக என்ன விதமான காரணங்களோ, காரியங்களோ நேரிட்டாலும் அது உமக்கு நேரிட்டது தான். இந்த பிரச்சனையிலிருந்து எந்த அளவான சுய ஆராய்ச்சியோ அல்லது சுய விமரிசனமோ உம்மை விடுவிக்கவே விடுவிக்க முடியாது. ஆனால் உமது விடுதலையோ ஏதோ சிறிது காலத்தை எடுத்துக் கொண்டு நேரிட்டாலும் அந்தக் கால கட்டத்தில் நீங்கள் உயிர் மீண்டு வாழ வேண்டுமென்றால் உங்கள் மனோ நிலையையும் உணர்ச்சி பூர்வ நிலையையும் சம நிலையில் கொண்டிருக்க வேண்டும். ஆகவே இந்த கொள்கை விதியை அதைச் செய்வதற்கான சிறந்த வழியாக நிரூபிக்கப்படுவதாகக் காணலாம்.

கிறிஸ்தவமானது பாவம் என்றும் பாவ மன்னிப்பு என்ற பெரிய தலைப்புகளைச் சுற்றியே சுற்றி வருகிறது. இயேசுவினுடைய திட்டமாவது பாவ மன்னிப்பை கிரயமாகப் பெற்று மெய்யாகவே மனந்திரும்புகிற ஒவ்வொரு பாவிக்கும் அதைக் கொடுப்பதாகும். பாவ மன்னிப்பும் இரட்சிப்பும் சுவிசேஷங்களால் அறிவிக்கப்படும் இரண்டு முக்கியமான ஆய்வு பொருள் தலைப்புகள் ஆகும். ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக திருச்சபையானது இரட்சிப்பை விட பாவத்தைப் பற்றியே அதிகமாக பிரஸ்தாபிக்கிறது. அநேக பிரசங்கிமார்கள் பாவத்தையும், நியாயந்தீர்ப்பையும் குறித்து அதிகமாக வற்புறுத்தி அன்பு, கிருபை, இரக்கம், பாவ மன்னிப்பு என்பவைகளின் நன்மைகளை விட அதிகமாக பிரசங்கிக்கிறார்கள். இதன் விளைவாக அநேகக் கிறிஸ்தவர்கள் அடி மனதளவில் பாவம் தோல்வி விழிப்புணர்வு என்பவைகளைக் குறித்து உணர்வுள்ளவர்களாகிறார்கள். அவர்களுடைய எதிர் மறையான மனப்பான்மையில் எரிந்து போகுதல் என்பது அதைத் தூண்டி விட்டு அதனால் அவர்கள் தோல்வியான மனப்போக்கில் இலகுவில் விழுந்து விடுகிறவர்களாகி தன்னைத் தானே சுய கடிந்து கொள்ளுதலுக்குள் துரத்தி விடுகிறார்கள். இந்த விதமான கண்ணிப்பொறியில் விழுந்து விடாதபடி உறுதியாக இருக்க வேண்டும். உம்முடைய சிந்தனையின் யோசனைகள் விசுவாசத்தின் மகிமையான நேர்மையான அம்சங்களைப் பற்றி பிரஸ்தாபிக்கட்டும். தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை இவைகளைப் பிரஸ்தாபிக்கட்டும். அவரால் முடித்து நிறைவேற்றப்பட்ட வேலையின் ஆச்சரியத்தில் இளைப்பாறு.

எரிந்து போகுதலின் பொதுவான விளைவுகளில் ஒன்று தற்காலிகமாக வேதாகமத்தைப் படிக்க முடியாது போவது தான் அல்லது ஜெபத்தில் தரித்திருக்க கூடாமையுமே இவை இரண்டும் உன்னை குற்றவாளி என்ற போக்கில் கொண்டு வந்து விட்டு விடக்கூடாது. தேவன் உனது சூழ்நிலைமையைப் புரிந்து கொள்கிறார். அவருடன் நீ ஐக்கியம் கொள்ளலாம். சாதாரணமான எளிய முறையில் இதைச் செய்யலாம். உன்னுடைய இருதய ஆழத்திலிருந்து அவருடன் பேசு. எந்த சமயத்திலும் உன் பாரத்தை இறக்கி விடு. அவருடைய மன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக் கொண்டே இருக்கவும்.

3: **மிதந்து கொண்டிரு.** (இதைக் கற்றுக் கொள்வது உண்மையான ஜீவனை பாதுகாப்பதாகும்) இந்த வல்லமையான கொள்கை விதியின் இரகசியம் இது தான். மிதந்து கொண்டிருக்கக் கற்றுக் கொள். இந்த விதமான திருப்பு முனையான வேதனை தரும் காலத்தில் இது மட்டும் தான் உன்னுடைய பகல் இரவுகளுக்கெல்லாம் எல்லா விதமான வித்தியாசங்களையும் உண்டாக்க முடியும். ‘‘மிதந்து கொண்டிருத்தல்’’ என்பது ஒரு மேன்மையான ஒப்புமையாக நீ கற்றுக் கொள்வதற்கான செயல்முறை இதே மாதிரியான போக்கில் ஜலத்தின் மேல் எவ்வாறு மிதப்பது என்பதைக் கற்றுக் கொள்வதாகும். அதை நீ பழக்கிக் கொள்ள வேண்டியதொன்றாக ஆனால் ஒரு தடவை கற்றுத் தேர்ச்சியடைந்தால் அதை எந்த நேரத்திலும் நீ செயலாற்றக் கூடும். யாராவது ஒருவர் நீ எப்படி மிதந்து கொண்டிருப்பது என்பதன் தத்துவத்தை விளக்கிக் கூறக் கூடும். ஆனால் தவிர்க்க முடியாதபடி நீயேதான் அதைச் செய்தாக வேண்டும். வேறு யாராவது அதை உனக்காகச் செய்ய முடியாது.

நீ கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டால் நீ மிதந்து கொண்டிருப்பது போல நரம்பு தளர்ச்சியின் அடையாளங்களாகிய கடல் உன்னை அழித்து விடும்படி மிரட்டுவது போல நீயும் அந்த கடலின் மேல் ஓய்வு ஆக மிதந்து கொண்டிருக்கப் பழக வேண்டும். ஒரு வல்லமையான அலையை எதிர்த்து நீந்த முயற்சிப்பது போல அதை எதிர்த்து போராடாதே அல்லது உன்னைக் கட்டாயப்படுத்திக் கொள்ளாதே. பிரசித்தி பெற்ற சில கடற்கரைகளில் அங்கே வழக்கமாக ஒரு வலிமையான நுரைத் திரள் அங்கு ஓடிக் கொண்டிருக்கும் அது நீந்துதலை உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்யக் கூடும். ஆனால் அது மிகவும் அபாயகரமானதாகவும் அநேகரை மூழ்கச் செய்வதற்கும்

காரணமாயிருக்கும். அபாயகரமான போக்கு அம்சமாக இருப்பது கழி முகத்து நீர் பரப்பாகும். அது அங்கே உண்டாகக் கூடும். உள்நோக்கி உள் வாங்கி வரும் கடல் மட்டத்தின் போக்கால் உண்டாகும். மிகப் பெரிய அலைகளால் அடித்து அடித்து கடற்கரையில் ஒரு பள்ளத்தை உண்டாக்கும். அந்தப் பள்ளம் ஜலத்தால் நிறைக்கப்பட்டு அதன் கனத்தை விட அதை நோக்கி உள்ளே வரும் கடல் நீர் மட்டத்தின் கனம் அளவுக்கு மீறும் பொழுது, அது கழி முகத்தில் நீர் பரப்பை உண்டாக்கி அதன் வழியை வெளியே கடலுக்குள் போகச் செய்கிறது. இவைகளில் ஒன்றில் நீவிர் எப்பொழுதாவது பிடிக்கப்படும்படி நேர்ந்தால் அதை எதிர்த்து போராடுவது வீணாகும். இதற்கான பாதுகாப்புள்ள வழியாவது அந்த கடல் நீர் பரப்பு மட்டம் உன்னை வெளியே சுமந்து கொண்டு வருவது தான். அதை எதிர்த்து போராடுவதை விட அதற்குப் பதிலாக அதன் மேல் ஓய்வாக மிதந்து கொண்டிரு. நீ போராட முயன்றால் அது உன்னை களைப்படையச் செய்து அழித்து விடக் கூடும். நீ மிதந்து கொண்டிருந்தால் ஒரு சிறிது வழியில் உன்னை இழுத்துச் சென்று விடும். ஆனாலும் அது மறுபடியும் உள்ளே வந்து கடற்கரைக்கு அப்பால் கீழே உன்னை அதோடு சுமந்து கொண்டு செல்லும்.

உன்னை அழித்து விடும்படி மிரட்டும் சோர்வுடன் அதன் மேல் மிதந்து கொண்டிரு. நீ அடைக்கலமாக எடுத்துக் கொண்ட படுக்கையிலே மிதந்து வெளியே வா. ஏதோ ஒரு செயல்பாட்டில் மிதந்து கொண்டிரு. அது உன் சிந்தனையிலிருந்து உன்னை சோர்வடையச் செய்யும். எண்ண வட்டத்திலிருந்து உன்னை வெளியே கொண்டு வரும். நீ உள்ளே போவதற்கு அஞ்சும் கடை அல்லது உணவு விடுதியில் சில செயல்பாட்டை மிதக்க விடு. உன்னுடைய அடையாளங்கள் அந்த மிரட்டும் சமுத்திர அலைகளைப் போலவே உன்னை அழிப்பது போல மிரட்டும். நீ முற்றிலுமாக அவைகளின் இரக்கமான பார்வையில் இருப்பது போல உணருவாய். ஆனால் உண்மையில் நீ ஒய்வாக இருப்பாயானால், நீ உயிரோடிருப்பதையே மிரட்டும் அந்த அலைகளின் மேல் மட்டத்தில் மிதந்து கொண்டிருப்பாய். மனச் சோர்வையும் அச்சத்தையும் கடந்து மிதந்து கொண்டிரு. வரவேற்கக் கூடாத ஆலோசனைகளைக் கடந்து மிதந்து கொண்டு மிதந்து கொண்டே இரு. ஆனால் போராடாதே.

**4: காலம் கடந்து போகட்டும்.**

உன்னுடைய சரீர நிலைத் திட்டமானது அது வெறுமையாகிக் கொள்வதற்கு கொஞ்சம் அதிகமான நேரத்தையே ஒரு வேளை எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆகவே நீ திரும்ப சுகம் பெறுவதற்கு சிறிது கால நேரம் எடுக்கலாம். ஆகவே நீ நாட்களை, வாரங்களை, மாதங்களைக் கூட எண்ணக் கூடாது. காலம் கடந்து செல்வதைப் பார்க்காமல் உன் கண்களை மூடிக் கொண்டு அதைத் தவிர நீ தேவனுடைய உதவியால் **நலம் பெறுவாய்** என்று உன்னையே ஞாபகப்படுத்திக் கொள்.

ஆனால் அது வழக்கமாகவே கொஞ்சக் கால அவகாசம் எடுத்துக் கொள்ளும். நீ சுகமடைந்து விடும்படி ஒரு வேளை நீ நம்பிக்கை இழந்த நிலையில் இருக்கலாம். சந்தேகமின்றி காலம் கடந்து போகிறது என்றும் நீ ஒன்றையும் நிறைவேற்றிக் கொள்ளவில்லை என்ற போதுமான குற்ற உணர்வை சந்தேகத்திற்கிடமின்றி நீ அனுபவிக்கலாம். நீ உன்னைத் துரத்திக் கொண்டே இருக்கும்படியாக பழக்கப்படுத்திக் கொண்டிருப்பதால் காலம் வேகமாகப் போய் கொண்டிருப்பதாகவும் நீ சரியாகவே ஓரங்கட்டப்பட்டிருப்பதாக உணருவதால் அது உனக்கு வேதனையைத் தருவதாய் இருக்கும். ஆனால் இந்த விதமான எந்த எதிர்கால பயமும் உனக்கு திரும்ப நலம் பெறுவதற்கு உதவும் படி முன் வராது. இவைகள் எல்லாவற்றிலுமிருந்து நீ கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களில் ஒன்றாவது இளைப்பாறுதல் அவசியமானது என்பதாகும். இந்தப் பாடத்தை இப்பொழுது நீ கற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கு கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் உனக்கு என்றுமே கிடையாது. மேலும் நீ கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பது முற்றிலுமான கட்டளையாகும். சூரியன் மறுபடியும் மறுநாளில் உதிப்பது எவ்வளவு நிச்சயமோ அந்த அளவுக்கு நீ சுகம் அடைந்து மறுபடியும் நலம் பெறுவாய் என்பதும் நிச்சயம். “சாயங்காலத்திலே அழுகை தங்கும். விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.” (சங் 30:5b)

<u>சில நடைமுறை விவாதங்கள் உனது நலத்தை திரும்பப் பெறுவதற்கு உதவக் கூடியவை.</u>

எரிந்து போகுதல் என்ற அனுபவத்தின் கடுமையான வலியினால் பிடிக்கப்படும் பொழுது அவர்களுக்கு சில சரியான நடைமுறை உதவி அவசியமாகும். மிகவும் அதிகமான கருத்துக்களாலும் வெற்றுப் பேச்சான பிரதியுத்தரங்களாலும் அவைகளுடைய போதாமைப் பற்றியது நிரூபிக்கப்பட்டும் வருகிற

ஒரு கால கட்டத்தில் அந்த மனிதனுடைய ஏமாற்றத்தையே அதிகமான கூடுதலாக ஆக்கக் கூடும். அவர்கள் கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியமான கடைசி காரியமாவது யாரோ ஒருவர் இப்பொழுது உன்னையே இழுத்து ஒன்றாகப் பிடித்துக் கொள் அல்லது இந்தக் காரியத்தின் மேல் உச்சக் கட்டத்தை நீ அடைந்தே இருக்க வேண்டும் என்று அவருக்குச் சொல்வது தான். அவர்களுக்கு நம்பிக்கை இழந்த நிலையில் சில எளிதான நடைமுறைக்கேற்ற செயல்படக் கூடிய வழிகாட்டி முறைகள் அவசியமாகும். அவர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய சில கோட்பாடுகளை அவர்கள் நம்பிக்கை இழந்த மனநிலை உணர்ச்சிகளில் இருந்தாலும் அவர்களுக்கு அவசியமாகும். இங்கே இதற்கான சில அந்த வகையான யோசனைகள்.

a: அது யாருக்குமே நேரிடக் கூடியது என்பதை உணர வேண்டும். அது என்றுமே வரக்கூடாத ஒரு நபருக்கு, அப்படிப்பட்ட சோர்வுக்கு எளிதில் பிடிக்கப்படக் கூடியவர் என்றுமே நீர் கற்பனை செய்திராத அந்த ஒரே நபருக்குக் கூட வரலாம்.

b: அது தேவனிடமிருந்து ஒரு நியாயந்தீர்ப்பாகவோ அல்லது தண்டனையாகவோ அனுப்பப்படுவதில்லை. அது உன்மேல் வந்திருக்கக் கூடாது. ஏனென்றால் நீ பாவஞ் செய்து ஒரு பயங்கரமான தண்டனையை பலாபலனாக பெற்றிருப்பதன் காரணத்தினால் தான் வந்தது. அது வழக்கமாக தலைக்கு மீறிய வேலைப் பழுவினாலும், அதிகமான பொறுப்பினாலும் சில அதிகமான சோர்வுக்கு காரணிகளாலும் குறைந்த இளைப்பாறுதலும் குறைந்த ஓய்வும் ஆகியவற்றால் வரும் எதிர்பாரா விளைவுகளாகும்.

C: உன்னிடம் சில அந்தரங்கமான பாவமிருந்து உன்னை ஆழமானதோர் குற்றவுணர்வுக்குள் கொண்டு வந்தாலும் அவைகளில் சோர்வுக்கான ஓர் காரணியாக இருக்கக் கூடுமாகையால் அது நிச்சயமாகவே உணரப்பட்டு மனந்திரும்பி சரி செய்யப்பட வேண்டும். ஏனென்றால் குற்றவுணர்வு எந்த விதமான சந்தேகமுமின்றி சோர்வுக்கு வல்லமையான காரணியாக இருப்பதால் தவிர்க்கப்பட்டு நீக்கப்பட வேண்டும்.

d: அது நாம் வெட்கபடக் கூடிய ஏதோ ஒன்றோ அல்லது மற்ற எந்த விதமான நோயினால் பீடிக்கப்பட்டு அதனால் ஒருவர் குழப்பம் அடைவதால் இனி ஒருவர் வெட்கம் அடைவதற்கு அதிகமாக அதைப் பற்றி சற்றும் வெட்கப்படக் கூடிய காரியமல்ல. இது ஒரு நோயாக நரம்பு மண்டலத்திலும் உணர்ச்சிகளிலும் தோன்றும்படி நேரிட்டு அதைவிட அதிகமான உடல்நிலை அல்லது சரீர உணர்வில் உண்டாகிறது. அநேகமான நோய்கள் இந்தப் பகுதிகளில் எந்த வழிகளிலும் ஆரம்பித்து அவைகள் உணர்ச்சியின் இழுப்பு விசையினால் ஏற்படும் உடல் கோளாறுகள் எனப்படும் சிந்தனையிலோ அல்லது உணர்ச்சிகளிலோ உண்டாக்கப்படும். பிரச்சனைகள் அவைகளால் ஏற்படும் எதிர் விளைவுகளை சரீரத்தின் ஆளுகைப் பிரதேசத்தில் வெளிப்படுத்துகிறது.

e: உங்களுக்கு சந்தேகமின்றி ஒரு நம்பத் தகுந்த நண்பர் அவசியமாகிறார். அவர் நம்பக் கூடியவராக, ஆலோசகராக இந்த விதமான சோதனை காலங்களில் உங்களோடு கூட நடந்து வருகிறவராகவும் இருக்க வேண்டும். இந்த விதமான ஆட்களை கண்டுபிடிப்பது எளிதல்ல. ஏனென்றால் சுமாராக ஒரு சில நபர்களே இந்த பிரச்சனை குறித்த உண்மையான புரிந்து கொள்ளுதலைக் கொண்டிருப்பார்கள். இலட்சியமாக உமது இல்லத் தலைவியை தவிர்த்து மற்றொருவராக இருக்க வேண்டும். அவர் வழக்கமாக அதிக உணர்ச்சி பூர்வமாக புறநிலை ஈடுபாடு உடையவராக எப்படியும் எது நேரிடுகிறது என்பதை முற்றிலுமாக விளங்கிக் கொண்டவராக இருக்க வேண்டியவராக இருக்க அவசியமில்லாதவர். இது உமது இல்லத் தலைவியைப் பற்றிய விமரிசனம் அல்ல. இது உண்மையான விஷயத்தைப் பற்றிய சொற்கூற்றாகும்.

f: உமது இல்லத் தலைவியோ அல்லது குடும்பத்தினரோ கொஞ்சம் திறமை வாய்ந்த ஆலோசனையைப் பெறுவதற்கு அவசியமானவராக இருக்கலாம். அன்புள்ளவர்கள் ஒருவரோடு அதுவும் எரிந்த போகுதலினால் அவதிப்படுகிறவர் ஒருவரோடு வாசம் செய்வது எளிதான காரியம் அல்ல. அவர்கள் எல்லா விதமான உணர்ச்சியான அழுத்தங்களுக்கு ஆளாக்கப்பட்டு அந்த அன்புக்கு உரியவர்களை சோர்வான கால கட்டங்களில் போகும்பொழுது கவனித்து பார்க்கும் அந்த அவசியமானது காயப்படுத்துவதாகவும் தளர்ச்சியுறச் செய்வதாகவும் இருக்கும். அநேக திருமணங்கள் இந்த விதமான காயப்படுத்தும் சோதனையை கொண்டு சுமத்தப்பட்டு விடுவதால் அதிலிருந்து தப்பித்து உயிர் வாழ முடியாது.

g: பழங்காலத்து மொழி எப்பொழுதுமே உண்மை என்பதை ஞாபகத்தில் வைக்கவும். ''ஒரு அவுன்ஸ் தடுப்பானது ஒரு டன் நிவாரணத்தை விடச் சிறந்தது. ஒருக்காலமும் முன் யூகமாக'' இது உனக்கு எப்பொழுதுமே நேர்ந்திருக்கக் கூடாது என்று சொல்ல வேண்டாம். அது யாருக்கேனும் நேரிடக் கூடும் என்பதும் அதன் எச்சரிக்கைக்கு செவி கொடாதவர்களுக்கும், தங்களுக்குள்ள மூல காரணமான சக்திகளின் அளவுக்கும் அப்பால் தங்களை முன்னால் தள்ளிக் கொண்டு இருப்பவர்களையுங்கூட பாதிக்கக் கூடும் என்பது பற்றி எச்சரிக்கையாயிருத்தல் நல்லது.

h: எனக்கு நெருக்கமான ஒரு நண்பன், ஒரு வெற்றி சித்தி பெற்ற மேய்ப்பரான போதகர் எரிந்து போகுதலினால் அவதிப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்தவர் பின்னர் ஒரு காலத்தில் தன்னை நலமாகவும் பலமுள்ளவராகவும் கண்டுணர்ந்து அறிந்து கொண்டு தனது அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்ட நான்கு பாடங்களைப் பகிர்ந்து கொண்டார். அவற்றை உங்களுக்கும் தெரிந்து கொள்ளும்படி அறிவிக்குமாறு என்னை அனுமதியுங்கள்.

- தேவனோடு வேலை செய்யுங்கள். அவருக்காக அல்ல.
- ஜனங்களை பிரியத்துடன் நேசியுங்கள். ஆனால் அவர்களுடைய பிரச்சனைகளை எல்லாம் சுமந்து கொள்ள முயற்சிக்காதீர்கள்.
- சுருக்கமான கணக்குகளை வைத்திருங்கள். உங்கள் தவறுகளை அறிக்கை செய்து மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள்.
- நன்றி செலுத்தும் மனப்பான்மையை விருத்தி செய்து கொள்ளுங்கள். எல்லாக் காரியங்களிலும் நன்றியுடையவர்களாயிருங்கள்.

**i:** இயேசுவின் மேல் உங்கள் கவலைகளையெல்லாம் போட்டுவிட பயிற்சி செய்து கொள்ளுங்கள். இதை நீங்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டும். ஒரு சுமையான பாரமோ அல்லது கவலையோ விரைவாக வந்தவுடன் அது உங்கள் சிந்தனையில் அமர்ந்து கொள்ளும்படி நீங்கள் அதை அனுமதிக்கக் கூடியதற்கு முன்னதாகவே கர்த்தர் பேரில் போட்டு விடுங்கள். இவைகளைச் செய்வதை விட சொல்லுவது எளிதானதுதான். அநேக பிரசங்கிமார்கள் இதைப் பற்றி போதிக்கக் கூடும். ஆனால் அவைகளை பழகிக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் அவர்களுக்கு இல்லை. இதைப் பற்றித் தெரிந்து கொள்வது மட்டும் போதாது. அதைப் பற்றிப் போதிப்பதுங்கூட. ஆனால் அதை நீ கட்டாயமாக செய்தே ஆக வேண்டும்.

**j:** நீ இயேசுவண்டை வந்த பிறகு அவர் மேல் உன் பாரத்தை போட்டுவிட்ட பிறகு அவர் கொடுக்கும் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொண்டு மகிழ்ந்து அனுபவித்து ஒரு விதமான குற்றவுணர்வும் குற்றஞ் சாட்டப்படும் உணர்வும் இல்லாமல் அமர்ந்திரு. அநேக தலைவர்கள் தங்கள் வேலையை விட்டு இடைவெளி எடுத்துக் கொண்டால் குற்றவுணர்வு உள்ளவர்களாக ஆகி விடுகிறார்கள். அவர்கள் தங்களை சரியான இடைவெளி இளைப்பாறுதல் இல்லாதபடிக்கு எந்த நேரமும் வேலை செய்யும் படியான தேவையால் முடுக்கி விடப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கும்படி தங்களை அனுமதித்துக் கொள்கிறார்கள். இயேசுவும் அடிக்கடி ''அப்பால் சென்று சிறிது இளைப்பாறினார்'' என்பதை நினைவு கூறுங்கள். மேலும் அவர் புத்திமதியாக மற்றவர்களுக்குச் சொல்லுகிறதாவது வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத் 11:28-30)

**k:** நீ விசுவாசித்து ''நான் சுகம் பெறுவேன்'' என்று அறிக்கையிடு. உன் சிந்தனையானது நான் ஒருக்காலும் மீண்டும் சுகமடையப் போவதில்லை என்று அலறிக் கொண்டிருக்கும் பொழுதும் நீ ஒரு போதும் சரியாக இருக்கும்படி உணரப் போவதில்லை என்று கதறும் பொழுதும் அவ்வாறு செய்வாயாக. உன்னுடைய உணர்ச்சிகள் மிகவும் சோர்வடைந்து நீ எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருக்கப் போவதில்லை என்று அச்சம் அடையும் பொழுதும், நீ எப்பொழுதும் மகிழ்ச்சியாய் போடப் போவதில்லை என்றும் அல்லது மகிழ்ச்சியில் சப்தமிடுவேன் என்று நினைக்காத பொழுதும் இதையே செய்வாயாக. ஒரு வேளை நீ உனக்கு முன்னால் மில்லியன் கணக்கான மக்கள் இந்த வழியில்

போயிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தாங்கள் திரும்பவும் குணம் அடைந்து மறுபடியும் நல்ல ஆரோக்கியத்தை அனுபவித்தார்கள் என்பதையும் நீ ஒருக்காலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாய். உனக்கு அறிமுகமான சில மக்கள் நீ ஒருக்காலும் சந்தேகப்படாதவர்களும் இந்த மாதிரி அவதிப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முற்றிலுமாக திரும்பவும் குணம் அடைந்து சாதாரணமான வாழ்க்கையை அனுபவித்தும் மகிழ்ச்சியுடன் மறுபடியும் ஒரு முறை கொண்டாடுகிறார்கள்.

**l:** என்னவென்றாலும் நீ மறுபடியும் குணம் அடைதல் பெற சிறிது காலம் எடுக்கும் அந்த நேரத்தை மனதில் குழப்பம் இன்றியோ அல்லது பொறுமையின்றி கழிப்பதோ மிகவும் கடினமானதாகும். நீ சிக்கிரமாக குணம் அடைய விரும்புகிறாய். நாம் அறிந்த கூடுமான காரணங்களுக்காக. ஆனால் இந்த விதமான நோய் அரிதாகவே விரைவில் தெளிவடைந்து நீ அதிக விரைவில் அதன் ஆரம்ப கட்டங்களில் கண்டு உணர்ந்து கொண்டாலும் அதற்கான சாதாரணமான செயலூக்கமான நடவடிக்கையை எடுத்துக் கொண்டால் மட்டுமே அரிதாகக் குணமடையக் கூடும். அதை போதுமானபடியாக ஆரம்பத்தில் கண்டறியாவிட்டால் அந்த எரிந்து போகுதல் என்ற பூதாகரமான கதைக்கு பலியாடாகக் கூடிய நிலைமை ஏற்படும். பிறகு அதற்காக திட்டவட்டமான நேரம் தேவைப்படும் நீ அற்புதமான ஒரு இடைபடுதலை பெறாவிட்டாலும் அது முடியாத காரியமாகும்.

**m:** ஒவ்வொரு நாளும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதை எத்தனை முறை செய்ய முடியுமோ அத்தனை முறை அதிகமாக ஸ்தோத்திரம் செலுத்து. அங்கே பல சமயங்களில் இது மாதிரி செய்யும்படியாக உணருவதற்கு இதுதான் கடைசி முறை என்று உணருவதுண்டு. உன்னுடைய சிந்தனையானது தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதற்கு உன்னிடம் ஒன்றுமேயில்லை என்று உனக்குள் சொல்லுகிறது. மேலும் உனது உணர்ச்சியின் மட்டம் ஆனது மிகக் கீழான மட்டத்தில் இருப்பதால் நீ எந்த காரியத்திலும் மறுபடியும் மகிழ்ச்சி அடைய முடியாது என்று உணருகிறாய். ஒவ்வொரு எண்ணத்தையும் உணர்வையும் புறக்கணித்து எந்த வழியிலாகிலும் தேவனைப் போதித்து துதி செய். உன்னுடைய துதி செலுத்துதலை வலுகட்டாயமாக நீ எப்படி போதித்தாலோ அல்லது உணர்ந்தாலோ சரி உரத்த சத்தமாகச் சொல்லுவாயாக. முன்னதாகப் போய் நீ சொஸ்தமடைந்ததற்காகவும் விடுதலைக்காகவும் விசுவாசத்துடன் அவருக்கு நன்றி சொல்வாயாக. இதையே தான் தாவீது இராஜா தான் மிகுந்த சோர்வும் மன வேதனையும் அடைந்த வேதனையான அனுபவ காலத்தில் இதையே செய்தான். அவனுடைய வார்த்தைகளை சங் 42:11ல் கேட்டு செவிகொடுங்கள். ‘‘என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தயங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு. என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.’’

**n:** தினசரி ஒழுங்கான தேகப் பயிற்சி செய்வதை ஸ்தாபனப்படுத்திக் கொள்ளுங்கள். ஏன் சில மக்கள் எரிந்து போகுதலை அனுபவிக்கிறார்கள் என்பதற்கு ஒரு பகுதியான காரணமாவது அவர்கள் உடல் நலத்தில் சரியாக இருப்பதில்லை. அவர்கள் தங்கள் உடலுக்குப் பயிற்சி கொடுப்பதைப் புறக்கணித்து விடுகிறபடியால் உடல் நலம் சரியானதாக இல்லாதபடி ஆகி விடுகிறார்கள். நீங்கள் ஒரு தடவை எரிந்து போகுதலுக்கு ஆளாகி விட்டால் உன்னைத் தூண்டி எழுப்பி தேக பயிற்சி செய்யும்படி செய்வது மிகவும் கடினமானதாகும். ஆனால் நீ உன்னைத் தானே பலமாக ஏவிக் கொண்டிருந்து அவ்வாறு செய்ய வேண்டும். நீ இதை படிப்படியாகவும் பொறுமையுடனும் செயலாற்ற வேண்டும். ஏனென்றால் உமது சக்தி மட்டங்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதால் நீ செய்ய விரும்புவது போல தோன்றும் கடைசி காரியமானது தேசப் பயிற்சியாக இருக்கும் நடந்து போகுதல் என்பது எடுத்துக் கொள்வதற்கு சிறந்த பயிற்சி ஆகும். ஆரம்பத்தில் மிகக் குறைந்த தூரம் நடந்து விடுவதோடு நீ திருப்தி அடைய வேண்டியதாகும். பிறகு ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் நடக்கும் தூரத்தை அதிகரித்துக் கொண்டு போக வேண்டும். இதற்கு மாறாக சில நோயாளிகள் ஒரு விதமான அதிக முயற்சி இல்லாமலே அதிக தூரம் அவர்களால் நடக்க முடியும் என்பதை அறிந்து கொள்கிறார்கள். மேலும் அதை அதிகமாக ஓய்வுக்கு இடைவெளியாக தங்களுடைய எரிந்து போகுதலினால் தங்கள் மேல் சுமத்தப்படும் சிறைக்கு அப்பால் பட்டதாகக் காண்கின்றனர். நீச்சல் என்பதும் சிறந்த தேகப் பயிற்சியாகவும் புத்துயிர் அளிப்பதாகவும் இருக்கும்.

**o:** ஓய்வு எடுத்துக் கொள்கிறதற்கும் வேடிக்கை சாகசத்திற்கும் நேரத்தை ஒதுக்கிக் கொள். அநேக தலைவர்கள் அவர்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ள நேரம் இல்லை என்று சாதாரணமாக

உணருகின்றனர். அது உங்களுக்கு பெற்றுக் கொள்ளக் கூடாவிட்டால் அதை கட்டாயமாக உண்டாக்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய வேலை அட்டவணையையும் பொறுப்புகளையும் திட்டமிடும் பொழுது நீங்கள் வேடிக்கை சாகசத்திற்காகவும் ஓய்வுக்காகவும் எடுத்துக் கொள்ளும் சில நேரங்களையும் எழுதிக் குறித்துக் கொள்ளுங்கள். நான் சமீபத்தில் இந்த பாடத்தை இறுதியாகக் கற்றுக் கொண்ட ஒரு பிரசங்கியாரைப் பற்றி கேள்விப்பட்டேன். அவர் தன்னுடைய சுறுசுறுப்பான அட்டவணையில் தான் ஒன்றுமே செய்யாது சும்மா இருக்கிற வேளைகளையும் தனித்துக் குறித்துக் கொண்டார். ஒரு நாள் ஒரு நண்பன் அவரைப் பார்த்து ‘‘நீர் வெள்ளிக் கிழமை என்ன செய்து கொண்டு இருந்தீர்?’’ என்று வினாவினர். அதற்கு அந்த பிரசங்கி ‘‘நான் வெள்ளிக் கிழமையன்று ஒன்றுமே செய்யக் கூடாதென்று திட்டமிட்டிருந்தேன்’’ என்று பதிலுரைத்தார். ‘‘ரெம்பவும் நல்லது தான்’’ என்று நண்பர் சொல்ல மேலும் ‘‘எங்கள் திருச்சபையில் நாங்கள் நடத்தவிருக்கும் மகா நாட்டில் நீங்கள் வந்து பேசலாம்’’ என்றும் கூறினார். அந்த பிரசங்கி அவரைப் பார்த்து, ‘‘ஒரு நிமிஷம் பொறுத்திரும்’’ ‘‘நீர் புரிந்து கொள்ளவில்லை’’ நான் அன்று அந்த வெள்ளிக் கிழமை எதையுமே செய்யப் போவதாக இல்லை என்று திட்டமிட்டிருந்தேன். அதைத்தான் நான் செய்து கொண்டிருப்பேன். ஒன்றும் இல்லை என்றார்.

**p:** நீங்கள் அந்த மிகச் சிறிய வார்த்தையைக் கட்டாயமாகச் சொல்ல கற்றுக் கொள்ள வேண்டும். அதைச் சொல்லுவதற்க பல தலைவர்களுக்கு மிகுந்த கடினமான காரியமாகும். அதற்கு இரண்டு எழுத்துக்கள் மட்டும் உண்டு. ஆங்கிலத்தில் ‘‘NO’’ என்றும் தமிழில் இல்லை என்பதாகும். அநேக தலைவர்களுக்கு இதைச் செய்வதற்கு மட்டுக்கு மிஞ்சி கடினமானதாக பார்க்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் - அவர்கள் செய்யும்படியாக சொல்லப்பட்டவைகளை - அதிலும் குறிப்பாக ஊழியமாக இருக்குமானால் அவர்களை செய்ய வேண்டும் என்று உணருகின்றனர். அவர்கள் பகல் இரவு ஆகிய எல்லா நேரங்களிலும் ஒவ்வொருவருடைய கட்டளைக்கும் அழைப்புக்கும் தயாராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு வரும் எந்த அழைப்புக்கும் அது யாரிடமிருந்து பெறப்பட்டாலும் சரி அதற்கு பதில் செய்ய கடமைப் பட்டவர்கள் என்று உணருகிறார்கள். அந்த விதமான மக்கள், இந்த உலகம் முழுவதுமே அவர்களைச் சார்ந்து இருக்க வில்லை என்பதை அவர்கள் கட்டாயமாக உணர்ந்தே ஆக வேண்டும். மேலும் ஆங்காங்கே சுற்றிலும் அந்த மாதிரியான கடமைகளைச் செய்யக் கூடிய சிலரும் இருப்பார்கள். நீங்கள் எவ்வளவு கடினமாக வேலை செய்தாலும் சரி, உங்களால் முழு உலகத்தையும் காப்பாற்ற முடியாது.

**q:** தேவனுடன் உங்களுக்கு உள்ள நேரத்திற்கு முன்னுரிமை தாருங்கள். ஒரு வேளை உங்களுடைய எரிந்து போகுதலான அனுபவ காலத்தில் நீங்கள் வேதாகமத்தைப் படிப்பதையும் ஜெபத்தில் தரித்து இருப்பதையும் கடினமாகக் காணலாம். அதற்காக துக்கப்படவோ அல்லது அதைப் பற்றி குற்ற உணர்வாக இருப்பதாக உணர வேண்டாம். அதற்கான அடிப்படையான காரணமாவது உங்களது ஒரு முனைப்படுத்தும் சக்தி எக்க சக்கமாக வெறுமையாக்கப்பட்டிருப்பதால் அதைக் கொண்டு கடினமானதாகவும் அல்லாமல் முடியாததாகவும் ஏதோ ஒரு காரியத்தில் ஒருமுனைப் படுத்துவதும் கடினமாகும். என்னவென்றாலும் இதற்காக நீவிர் தேவனுடன் நேரத்தை செலவழிக்க முடியாது என்பது அர்த்தமாகாது. ஆனால் நீங்கள் சாதாரணமாக இருப்பதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். வேதத்தைப படிப்பதற்காக மிகவும் கூர்ந்து முயற்சி எடுப்பதற்குப் பதிலாக சில எழுப்புதலான வசனங்களுடன் சாதாரணமாக மேற்போக்காக இடைபடுங்கள். ஒரு வேளை நீங்கள் சங்கீதங்களைப் படித்துக் கொண்டிருப்பது இலகுவாயிருக்கலாம். அந்த நேர்மறையான எழுப்புதலானவற்றோடு காத்திருத்தல் நலம். மெய்யாகவே உங்கள் ஜெபங்களானவை அனைத்தும் முழுவதுமே நீங்கள் ஆழமான பிரச்சனைகளின் வழியாகப் போகும் பொழுது மேலும் உண்மையாக இருக்கலாம். வேதாகமததில் அநேக கதா பாத்திரங்கள் இதைக் கண்டுபிடித்துக் கொண்டனர். வேதாகமத்தில் காணப்படும் ஆழமான வல்லமையுள்ள ஜெபங்கள் கையை விட்டு காலம் கடந்த நிலையிலே ஏறெடுக்கப்பட்டவையாகும். அவைகள் சுருக்கமாயும், குறிப்புணர்த்துவதாயும் இருந்தால் அவைகளுக்கு நல்ல நேரடியான பலா பலனைப் பெற்றுக் கொண்டனர். மேலும் உங்கள் தியான நேரங்கள் கடினமான தத்துவ மேற்கோட்பாடுகளைப் படிப்புக்கான நேரங்கள் அல்ல என்பதை நீர் உணர வேண்டும். அவைகள் தனிப்பட்டு நேருக்கு நேரானதாக இருக்க வேண்டும். அந்நியயோந்நியமானதாகவும் தேவனுடம் உண்மையான உறவு தொடர்பு கொள்ளும் சாதாரணமான நேரங்களாக இருக்க வேண்டும். நீங்கள் தேவனை நீங்கள் முன்னர் ஒருக்காலும் அறிந்திராத ஓர் அரிதான பரிமாண அளவில் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.

r: உங்களுடைய இலக்குகளையும் முன்னுரிமைகளையும் மறு மதிப்பீடு செய்யுங்கள். ஒரு எரிந்து போகுதலான அனுபவத்திலிருந்து அளவுக்கு மிஞ்சிய முக்கியமான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும். அவைகளில் முதன்மையானதும் மிகவும் முக்கியமானது யாதெனில் நீங்கள் முன்னர் ஒரு காலத்தில் செய்து கொண்டிருந்தது போல காரியங்களைச் செய்யும்படி அவசரப்பட்டு திரும்ப ஓடக் கூடாது. உங்களது முந்திய கால வேலைத் திட்டமானது காலப் போக்கில் உங்களுக்கு நாசமாக்கும். விபத்தைக் கொண்டு வந்தது என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். மேலும் அந்த பழைய இயந்திரக் கல்லுக்குள் அகப்பட்டு திரும்ப அதே பிரச்சனையைக் கொண்டு வருவதைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் உங்கள் பணிகளை மதிப்பீடு செய்ய வேண்டும். உங்களுடைய பழைய முன்னாள் சூழ்நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டும். தேவன் உங்களை எதை மாற்ற வேண்டும் என்று விரும்புகிறார் என்பதைப் பார்த்தறிந்து அதை கட்டாயம் நிறைவேற்றுவது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். அவைகளில் முதன்மையான காரியங்களில் ஒன்று நீ தேவனுடன் சேர்ந்து கிரியை செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானஞ் செய்து கொள். நீ செய்வது தேவனுக்காக அல்ல. அவர் உன்னிலும் உன் மூலமாகவும் கிரியை செய்ய வாஞ்சிக்கிறார். தேவன் உன்னை உன்னுடைய சொந்த பலத்திலே உன்னை காப்பாற்றிக் கொள்ள விரும்புவதில்லை. ‘‘கர்த்தருக்கு சேவை புரிவதே’’ நீ திரும்பவும் உன்னுடைய பணிக்கு திரும்ப வருவதற்கு முன்னர் சில சராசரியான கண்டிப்பான மாறுதல் செய்யப்பட்டே ஆக வேண்டும். முன்னுரிமைகள் மிகவும் மெத்தனமாக அல்ல கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படவேண்டும். நீ முதலாவதாக காரியங்களை வைத்துக் கொள்ளும்படியாக கற்றுக் கொள்ள வேண்டும். நீ தேவனிடமிருந்து அவர் எந்த விதமான போக்கில் அவருக்கு ஊழியம் செய்யும்படி உன்னை வாஞ்சிக்கிறார் என்பதை அவரிடமிருந்தே நீ கண்டு பிடித்துக் கொள்ள வேண்டும். உனக்குக் காட்டப்பட வேண்டுமென்று அர்த்தமாகலாம். மேலும் நீயும் உன்னை ஓர் புத்தம் புதிய முக்கியத்துவம் பெற்ற ஒரு ஊழியத்திற்குள் நீ ஈடுபடப் போவதாக உன்னைக் கண்டும் கொள்ளலாம். நீ உன்னை மாற்றிக் கொள்வதற்கு விருப்ப தாயாராக இருக்க வேண்டும். தேவன் இதை அனுமதித்திருப்பாரானால் நீ முழுவதுமாக எரிந்து போகுதலான காட்சியானது உன்னுடைய பிரிக்கப்படாத ஒரே கவனத்தையே பெற்றுக் கொள்வதற்காக அவர் உன்னிடம் ஏதோ முக்கியமானதொன்றைக் கட்டாயமாகச் சொல்லுவதற்காக இருக்கலாம். ஆகையால் நீ அவர் சொல்வதை தெளிவாகக் கேட்டுக் கொள்வதற்குத் தகுதியாக சரியாக ஆகிவிட்டால் அவர் உனக்கு சொல்ல வேண்டும் என்று வைத்திருப்பதைத் தெளிவாகக் கேட்டுக் கொள்வதற்கு நீ உன்னுடைய ஜாக்கிரதையான கவனத்தை அவருக்குச் செலுத்த வேண்டும். அவர் உன்னுடைய தினசரி நடப்பில் குறிப்பிட்ட காரியங்களை மாற்றும் படியாக அவரை அனுமதிக்காவிட்டால் நீ உன்னுடைய நீண்ட கால வேதனையான அனுபவத்தில் மறுபடியும் போய் கொண்டிருப்பதாக உன்னை நீயே கண்டு கொள்ளலாம்.

s: நீ என்னவாக இருந்ததின் வழியாக அடைந்த பலனால் நீ பலமுள்ளவனாகவும் மிகவும் சிறந்த நல்ல மனிதனாகவும் ஆகக் கூடும் என்பதை உணர்ந்தறிந்து கொள். எரிந்து போகுதல் என்பது புது மினுக்குத் தரும் அனுபவமாகும். அது உன்னுடைய ஜீவியத்திலே அநேக காரியங்களை அதுவும் ஆரோக்கியமானவைகளாகவோ அல்லது நல்லவைகளாக இருக்கக் கூடாதவைகளை சலித்து அரித்து எடுத்துக் கொள்ள பயன்படுத்தப்படக் கூடும். அது உன்னுடைய மனப்பான்மையை அநேகக் காரியங்களைப் பற்றியாதானதை மாற்றி உன்னை அதிகமாக புரிந்து கொள்ளக் கூடியவனாக, மற்றவர்கள் மீது நீ முன்னர் கரிசனையாக இருந்ததைவிட அதிகக் கரிசனையுள்ளவனாக உண்டாக்கக் கூடும். நிச்சயமாகவே நீ ஒரு ஞானமுள்ள மனிதனாக நீ முன்னை இருந்ததைவிட ஜீவியத்தையும் ஜனங்களையும் பற்றி உண்மையாகவே முன்னர் தெரிந்து கொண்டதை விட அதிகமாக தெரிந்தவனாக இருக்க முடியும்.

அநேக மக்கள் இதைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய எரிந்து போகுதல் என்ற அனுபவத்தால் பின்னர் காலப் போக்கில் அவர்களை நல்ல மனிதர்கள் ஆகச் செய்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்தும் படியாக ஜீவித்த எண்ணற்ற மக்களைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன். அவர்கள் சொஸ்தமடைந்ததற்குப் பின்னர் வாழ்க்கையை அதிகதிகமாக அனுபவித்து மகிழந்தவர்களை மேலும் அதிகமான உள்ளான திகில்களையும் சோர்வுகளில் இருந்து அவர்களை முன்னொரு காலத்தில் சிறைப்படுத்தியதிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

**t:** சந்தேகத்திற்கிடமின்றி நீ அநேக ஜனங்களுக்கு அதாவது முன்நாட்களில் உன்னால் புரிந்து கொள்ளப்படாதவர்களுக்கு நீ உதவி செய்யலாம். அதிகமான மக்கள் இயற்கையாகவே மற்றவர்களுடன் பொறுமையில்லாதவர்களாக அதாவது நரம்புத் தளர்ச்சியால் கஷ்டப்படுகிறவர்களுடன் அவ்வாறு இருக்கின்றார்கள். இதன் காரணமாவது அவர்களுக்கு அந்த மாதிரியான பிரச்சனைகளின் கடுமையையோ அல்லது தன்மையையோ தெரிந்து கொள்வதற்கான வழி அவர்களுக்கு இல்லாதிருப்பதனால் அவ்வாறு நேரிடுகிறது. இந்த பகுதிகளில் நீங்கள் விசேஷமான பயிற்சி பெற்றிருக்காவிட்டால் உதாரணமாக மனோ தத்துவ நிபுணராகவோ அல்லது மனோ நல மருத்துவராகவோ அந்த தன்மையுள்ள காரியங்களைப் பற்றி ஒருகால் நீங்கள் புரிந்து கொள்ளாதபடிக்கு எந்த வழியும் இல்லை என்றாலும் இந்த அனுபவத்தை நீங்கள் தனிப்பட்ட முறையில் அனுபவித்தால் அன்றி அதைப் புரிந்து கொள்வது அரிதாகும். இந்த விதமான புரிந்து கொள்ளுதலும் கற்பனையான உள்ளக் கிளர்ச்சியும் இல்லாவிட்டால் அந்த மாதிரியான மக்களுக்கு நீங்கள் உதவி செய்யக் கூடுவதோ அலலது உற்சாகப் படுத்துவதற்கோ கிஞ்சித்தேனும் சந்தர்ப்பம் கிட்டாது. அவர்களுக்கு தீங்கு இழைத்து புண்படுத்துவதோ அல்லது உங்களது திறமையற்ற அணுகுமுறையாலும் புரிந்து கொள்ளுதலின் குறைவினாலும் அல்லது ஏமாற்றமடையச் செய்ய சந்தர்ப்பங்கள் உண்டு.

நீங்கள் சுகத்தை திரும்பப் பெறுகிற மாதிரியான வழியில் ஒரு தடவை வந்து விட்டால் நீங்கள் அந்த மாதிரியான ஒன்று போல் உள்ள நிலைமையில் உள்ள மற்றவர்களுக்கு ஒரு வேளை நீங்கள் உதவி செய்ய ஆரம்பிக்கும்படி விருப்பம் கொள்ளலாம். இப்பொழுது நீங்கள் ஓர் புதியதும் ஆழமானதுமான கற்பனையான உள்ளக் கிளர்ச்சியை அவர்கள் கொண்டால் அது உங்களை அவர்களுக்கு உதவி செய்யும்படி விருப்பங் கொள்ளச் செய்யும். என்னவென்றாலும் இதை செய்து பார்க்கும்படி முயற்சி செய்வதற்கு அவசரப்படக் கூடாது. நீங்கள் உங்களுக்கென்று போதுமான நேரத்தை சரியான படி திரும்ப சொஸ்தமாகும்படி எடுத்துக் கொண்டு விட அனுமதித்துக் கொள்ள வேண்டும். அல்லாவிடில் நீங்கள் கற்பனையான உள்ளக் கிளர்ச்சியால் அதற்காகத் தேவைப்படும் அவசியமான தனிப்பட்ட பலத்தை அவசியமற்றதாக ஆகிவிடுகிறது. இந்தத் தேவைக்காக நீங்கள் உங்கள் சொந்த தேவைகளிலிருந்து ஊழியம் செய்வதாக நீங்கள் உங்களைக் கண்டு கொண்டுவிடுவதால் இது உங்கள் சக்தி காரணிகளை வெறுமையாகக் காலி செய்து விடும்.

**u:** நீங்கள் தேவனுக்கும் அவருடைய நாமத்திற்கும் மகிமையைக் கொண்டு வரும்படி ஜீவிக்க வேண்டும். தேவன் சொல்லுகிறதாவது ‘‘ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்’’ (சங் 50:15) என்று சொல்லுகிறார். நீ உன்னுடைய இடுக்கண்களுக்கு மத்தியில் இருக்கும்பொழுது, நீ அடிக்கடி தைரியத்தை இழந்து நீ மறுபடியும் எதையுமே சாதித்து நிறைவேற்ற எப்பொழுதுமே முடியாது என்று உணரலாம். மேலும் நீ பல சமயங்களில் தேவனுக்கென்று நீ பயன்படுவதும் அவருக்கென்று ஊழியம் செய்வதும் முடிந்து விட்டது என்று உணருவாய். மேலும் அவருடைய நாமத்திற்கு ஒரு போதும் மகிமையை கொண்டு வர முடியாது என்றும் கருதுகிறாய். ஆனால் தேவன் இதற்கு எதிர்மறையானதை இந்த வசனத்தில் சொல்லுகிறார். அதாவது நீ உன்னுடைய விசுவாசத்தை தேவன் சொல்லுகிறதின் மேல் உறுதியாக வைக்க வேண்டும். ஆனால் நீ என்னதாக நினைக்கிறாயோ அல்லது உணருகிறாயோ அதன் மேல் அல்ல.

# அதிகாரம் 14 - தலைவருக்குக் கிடைக்கும் வெகுமானம்

''பிரதான மேய்ப்பர் வெளிப்படும் பொழுது மகிமையுள்ள வாடாத கீரிடத்தைப் பெறுவீர்கள்.'' (I பேதுரு 5:4) மேலும் I பேதுரு 5:1-11 வாக்கியங்களைப் படிக்கவும். இந்த வசனங்கள் குறிப்பாக திருச்சபை மூப்பர்களுக்குச் சொல்லப்படுகிறது. (கிறிஸ்தவ தலைவர்களுக்கு) மேலும் அது இரகசியமான தலைப்பாகிய பரிசுகள் (வெகுமானங்கள என்பதை அறிமுகப்படுத்துகிறது) அவைகள் ஒரு நாள் அவர்களுக்கு அள்ளிக் கொடுக்கப்படும். அந்த வெகுமானங்கள் ''கீரிடங்கள்'' என்று சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே இதிலிருந்து சிலர் குறிப்பிடப்பட்ட சில கிறிஸ்தவர்களைக் குறித்து மன ரீதியான காட்சியாக அவர்கள் தங்கத்தால் ஆன கீரிடங்களை அணிந்து கொண்டு பரலோகத்தில் செருக்குடன் நடந்து வலம் வருவார்கள் என்று கற்பனையாகக் கூறப்படுகிறது.

இந்தக் கற்பனைக் காட்சியானது எவ்வளவு சரியானதோ அல்லது சரியானதல்லவோ என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் நான் இந்த வெகுமானங்கள் அளிக்கப்படுவது குறிப்பிட்ட நபர்களுக்கு ஏதோ கவர்ச்சியாக அலங்கரிக்கப்பட்ட காட்சியாக தங்கக் கீரிடத்தை அளிப்பதற்காக அல்ல. அதற்கான உண்மையான நோக்கமாவது அதிகமாக நடைமுறைக்கு ஏற்றதாகவும் அதைவிட அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது. கீரிடம் என்பது பதவிகளுக்குரிய அதிகாரச் சின்னங்களாக பதவி உயர்வையும் அதை அணிந்திருப்பவரின் அதிகாரத் தோரணையையும் காட்டுவதாக இருக்கிறது. அவைகள் அதை அணிந்தருப்பவரின் சுயமான மனோ பாவத்தை உயர்த்துவதற்காக அல்ல அல்லது அவர்களுக்கு விருதுகளாக வழங்கப்பட்டு அவர்களை தங்களைப் பற்றி விழிப்புணர்வுள்ளவர்களாகவும் தங்களைப் பற்றி ஏதோ அலங்காரத்துக்குரியவர்களாக ஆக்குவதற்காகவும் அல்ல. அந்த பதவிக்கான அடையாள வட்டங்களானவை அந்த வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவர்கள் அதிகாரத்துடன் ஊழியம் செய்வதற்கு உதவியாக இருக்கின்றன. இவ்வாறு மூடி சூட்டப்பட்ட இளவரசர்கள் முடிவாக தேவனுடைய இராஜ்ஜியமானது உலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டு உலகத்தில் திரை நீக்கப்படும் பொழுது ஆளுகை செய்யும் சமுதாயத்தின் ஒரு பகுதியினராக இருப்பார்கள். மேசியாவாகிய இயேசு இராஜாதி ராஜாவாக கர்த்தாதி கர்த்தராக அந்த உன்னதமான தேவனுடைய பரிசுத்தவான்கள் அவரோடு உலகத்தில் ஆளுகை செய்வார்கள். இந்த வகையான கீரிடமானது சில குறிப்பிட்ட நபர்கள் அந்த சர்வலோக ராஜ்ஜியத்தில் கொண்டிருக்கும் அந்த அதிகாரத்துவத்தின் அளவை குறித்து காட்டுவதாகும்.

நமது தற்காலத்து தலைமைத்துவத்திலும் அதன் பொருப்பின் பகுதியில் காணப்படும் முக்கிய அம்சமாவது தேவன் நம்மை அவருடைய மேசியாவுடன் ஆளுகை செய்யும்படியாக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். நமது தலைமைத்துவமானது இந்த தற்காலத்தில் அந்த அனாதி மகாதிட்டத்திற்காக நம்மை ஒப்படைப்பு செய்தாரோ அதன் சிறு அம்சமாக இருக்கிறது. அதற்காகவே அவர் நம்மை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். தேவன் தாமே நம்மைத் தமது நித்தியமான இராஜ்ஜியத்திற்கும் அவருடைய நித்திய மகிமைக்கும் அழைத்திருக்கிறார். இந்த தற்காலத்து பிரபஞ்சத்து காட்சியிலே நம்மை அந்த மகா நித்தியமான திட்டத்திற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். அந்தத் திட்டத்தை வரப் போகிற காலங்களில் தேவன் தாமே அதை பூரணமாக்குவார். அவருடைய இராஜ்ஜியத்தின் ஆளுகை ஸ்தாபிக்கப்படும் பூமியிலே அது பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்படும். மேசியா என்றென்றும் சதா காலமும் இந்த உலகத்தில் வாசம் பண்ணும் ஜனங்கள் மேலும் ஆட்சி செய்வார். ''உலகத்தின் இராஜ்ஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய இராஜ்ஜியங்களாயின. அவர் சதா காலங்களிலும் இராஜ்ய பாரம் பண்ணுவார்.'' (வெளி 11:15)

ஆகவே தேவனுடைய இராஜ்ஜியமும் அதில் நமது பங்கும் ஆகிய இவ்விரண்டு காரியங்கள் மேல் உறுதி செய்யப்படுகிறது. அதாவது தேவனுடைய அதிகாரத்துவமும் நமது கீழ்படிதலுமே. இவை இரண்டும் முக்கியமான இரு கோட்பாடுகளாக அவைகளை அவர் நமது ஜீவியத்தில் கிரியை செய்யவும் செயலூக்கமாக இருக்கும்படியாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இறுதியாக நமது தலைமைத்துவப் பங்கின் வெற்றியாவது நாம் தேவனுக்கு நம்முடைய ஜீவியத்தில் அவருடைய அதிகாரத்துவத்திற்கு எவ்வளவுக்கு அதிகமாய் கீழ்படிந்திருந்தோம் என்பதைக் கொண்டு அளவிடப்படும்.

நமது வெகுமானங்கள் நாம் வழி நடத்தி மேய்த்த திருச்சபை எவ்வளவு பெரிது என்ற சாதனைகளுக்காக பெற்றுக் கொள்ளப்படுவதல்ல அல்லது எத்தனை கூடிவரும் சபைகளை நாட்டியிருக்கிறோம் என்பதும் காரணமல்ல. நமக்கு வெகுமானம் அளிப்பதை நிர்ணயிக்கும் விதியானது நமது ஜீவியத்திற்கான அவரது பரலோக தரிசனத்துக்காகவும் நாம் அதை நிறைவேற்றும்படியான நமது பிரதி செயலை நிர்ணயிப்பதாக நமது கீழ்படிதலின் அளவையும் நம்பத் தகுந்த தன்மையின் அளவின் படியே கொடுக்கப்படும்.

**தேவன் வெற்றிக்கு வெகுமானம் கொடுப்பதில்லை. அவர் நமது நம்பத் தகுந்த தன்மைக்கே வெகுமானம் அளிக்கிறார்.**

தேவன் நமக்கு அருளிச் செய்து ஆசீர்வதித்த வரங்களுக்கு நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம். முடிவில் அவர் நமக்கு நமது உக்கிராணப் பொறுப்பை உபயோகித்த அளவிலான நம்பகத் தன்மையான உண்மையின் படியே நமக்கு வெகுமதி தந்தருளுவார். இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்றும் தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக் கடவன். மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். (I கொரி 4:1-2) ‘‘அவனுடைய எஜமான் அவனை நோக்கி, நல்லது; உத்தமமும் உண்மையும் உள்ள ஊழியக் காரனே. கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாய். அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்’’. (மத் 25:21)

நமது கருத்துரை சம்பாஷணையின் கீழ் நாம் கொண்டுள்ள பகுதிகள் என்னவென்றால்:

**1. மூப்பர்களுக்கு உரைக்கப்பட்டவை. (தலைவர்கள், மேய்ப்பர்கள் என்ற போதகர்கள்)**
‘‘உங்களிலுள்ள மூப்பர்களுக்கு உடன் மூப்பனும் கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும் இனி வெளிப்படும் மகிமைக்கு பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்’’ (I பேதுரு 5:1) இந்த 1-11 வசனங்களில் பேசப்படுகிற விஷயங்கள் குறிப்பாக தலைவர்களுக்குப் பொருந்துவதாக இருக்கிறது. அவர்களுக்கு போதனை தரப்பட்டும் ஆலோசனை வழங்கப்பட்டும், எச்சரிக்கை விடுக்கப்பட்டும் பாராட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு ஒரு நாள் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் பொழுது அவர் மகிமையுள்ள வாடாத கீரிடத்தை அளிக்கிறார் என்றும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கீரிடம் உண்மையுள்ள மேய்ப்பர்களுக்காகவே பிரத்தியேகமாக வைக்கப்பட்டு இருக்கிறது.

**2. கிறிஸ்துவின் பாடுகளுக்கு சாட்சியும் உடன் பங்காளிகளுமாக.**
பேதுரு, அப்போஸ்தலர் குறிப்பிட்டு எழுதிய மூப்பர்கள் இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்களும் அவருடைய பாடுகளைக் கண்கூடாகப் பார்த்தறிந்த சாட்சிகளாகவும் ஓரளவு அந்த பாடுகளுக்கு உடன் பங்காளிகளுமாக இருந்தார்கள். இந்த தற்காலத்திய பிரபஞ்சத்தில் அவருடைய பாடுகளைக் கண்கூடாகப் பார்த்த சாட்சிகள் ஒருவருமில்லை. ஆனால் அந்த பாடுகளுக்கு பங்காளிகளாக அநேகர் அக்காலத்தில் இருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் இயேசுவுடன் தங்களை அடையாளங் கண்டு கொண்டவர்கள். நான் எனக்கு சொந்தமான நோக்கில் இந்த நவீன காலத்து மேலும் வழக்கமாக அறியப்படாத பாராட்டப்படாத நமது மார்க்கத்து வீரர்களில் அநேகர் இராஜ்ஜியத்தை ஆளுகை செய்கிறவர்களாக வருவார்கள் என்று நம்புகிறேன். வேற்றுமைப்படுத்தப்பட்டவர்களாக சிறை காவலில் வைக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு இரத்த சாட்சிகளாக மரித்தாலும் அவர்களை தங்களுடைய கர்த்தரும் மேசியாவுமானவருடன் ஆளுகையைச் சுதந்தரித்துக் கொள்ள அவர்களைத் தகுதியுடையவர்களாக்குகிறது.

இந்த இயேசுவுடன் பாடுகளில் அடையாளப் படுத்திக் கொள்ளுதலைப் பற்றி ஏதோ கொஞ்சம் விசேஷம் இருக்கிறது. இந்த விதமான அடையாளங் கண்டு கொள்ளுதலானது அந்த சோதிக்கப்பட்ட உண்மையின் தன்மைக்குள் ஜீவனை ஊதித் தந்து அதை ஒரு இன்றியமையாத தேவையாக அந்த இயேசு இராஜாவுடன் ஆட்சி புரியுமாறு சலுகை பெற்றவர்களுக்கு அது அவசியமானதொன்றாக இருக்கிறது. இந்த விதமான விசுவாசமானது அடிக்கடி விசுவாசிகளுக்குள்ளும், தலைவர்களுக்குள்ளும் நமது உலகத்தின் பல பிரதேசங்களிலுள்ள திருச்சபைகளுக்குள் நிறைவேறுதலும், சித்திரவதை செய்தலும் அந்த நாட்களில் நடைமுறையாகும். மேற்கத்திய உலகத்தில் திருச்சபையானது ஒரு பிரபலமான அந்தஸ்த்தை அனுபவித்தாலும் அந்த நித்தியமான இராஜ்ஜியத்தை ஆளுகை செய்யும்

பதவிகளை சுதந்தரித்துக் கொள்பவர்களில் அநேகர் எங்கே திருச்சபை அற்பமாக அவமதிக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் இருக்கிறதோ அந்த பகுதி சேதங்களிலிருந்தே தோன்றி வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இடுக்கத்தின் காளவாயிலில் தேவன் அவர்களைத் தமது இராஜ்ஜியத்திற்காக உருவாக்கினார். உலகத்தின் வறுமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரும் அநேக கிறிஸ்தவர்கள் அந்த பிரதான மேய்ப்பர் தமது மகிமையில் திரும்ப தோன்றும்பொழுது மிகுந்த ஐசுவரியத்தையும் வெகுமானங்களையும் பெறுவார்கள்.

இந்த விதமான புரிந்து கொள்ளுதலைக் கொண்டுதான் பவுல் அப்போஸ்தலன் தனது உன்னதமான வாஞ்சையாகிய கிறிஸ்துவை அவருடைய பூரணத்துவத்தில் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்தினார் என்று நான் உறுதியாக உணருகிறேன். இப்படிப்பட்ட விஷய அறிவானது கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய அறிவையும் தெரிந்து கொள்ளுதலையும் தனக்குள் கொண்டு அந்த பாடுகளைப் பற்றிய அறிவை அந்த பாடுகளில் ஓரளவு பங்கு எடுத்துக் கொள்ளுவதால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடிவதாகும். பிலிப் 3:10ல் ''இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி'' என்றும் II தீமோத் 2:12ல், ''அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்'' என்கிறார். அத்தகைய பாடுகளை உண்மையாக சகித்தால் தான் கீழ்படிதலுக்கான பண்பாற்றலை உண்டாக்கிக் கொடுத்து, அந்த பண்பாற்றல்தான் கிறிஸ்துவோடு ஆளுகை செய்து இராஜ்யபாரம் செய்கிறவர்களுக்கு அவசியமானதாக இருக்கிறது. மேலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூட, ''அவர் பட்ட பாடுகளினாலே கீழ்படிதலைக் கற்றுக் கொண்டார்'' என்று சொல்லப்படுகிறது. (எபி 5:8)

### 3. போதகருக்கான கட்டாயமாக:

### A: கவனியாது விட்டுவிட்டவைகளை ஒப்புக் கொள் / பொறுப்புகளை விருப்ப ஆயத்தத்துடன் ஏற்றுக் கொள்.

தலைமைத்துவத்தின் பங்கை போதகர் ஏற்றுக் கொள்ளுதலானது எந்த விதமான சுயலாபத்தைக் கருதியோ அதாவது பணத்துக்காகவோ, உணர்ச்சி பூர்வமாகவோ, கௌரவத்திற்காகவோ அல்லது மனோ தத்துவ ரீதியானவற்றிற்காகவோ இருக்கக் கூடாது. அது எந்த விதமான கட்டாயத்தினாலுமல்ல, அதனால் அவருடைய உண்மையான விருப்பத்திற்கு விரோதமாக உந்தப்படாமல் இருக்க வேண்டும். அவர் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாக இருக்க விருப்ப சித்தமுள்ளவனாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியுடன் எல்லா பொறுப்புகளையும் அந்த அழைப்புக்கு உட்பட்ட சகல தியாகமான அர்ப்பணிப்புகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை அவர் உன்னதமான அழைப்பு என்றும் எந்த சாவுக்கேதுவான மனிதனும் பெற்றுக் கொள்ளக் கூடியதும் அதில் கட்டாயமாக உட்புகுந்து, அதற்குள் உட்புகுந்து உன்னதமானதும் நேர்த்தியானதுமான மனப்பான்மையுடன் போக வேண்டும்.

### B: தேவனுடைய மந்தையைப் போஷிப்பாயாக.

ஒரு தலைவர் தழுவி அடையக் கூடிய மகத்தான பொறுப்புகளில் ஒன்றாவது தேவனுடைய மந்தையைப் போஷிப்பதாகும். இது ஒரு உன்னதமான பரிசுத்த அழைப்பாக நமக்கு தேவனால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதை ஒரு உன்னதமான சலுகையான உரிமையாக மகத்தானதோர் பொறுப்பாக எந்த மனுஷனும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும் என்று கண்டு கொள்ளப்படுவது அவசியமாகும். தேவ ஜனங்களுக்கு கற்பிப்பதும் பக்தி விருத்தி செய்வதும் அவருடைய நிகழ்ச்சி நிரலில் உன்னதமான ஸ்தானத்தைப் பெற்றதால் இந்த கதா பாத்திர பாகத்தை தூதர்களிடம் கூட ஒப்புவிக்கும் தைரியம் இல்லாமல் அதை அவருடைய மீட்கும் கிருபையும் இரட்சிப்பை அறிந்தவர்களும் தங்களுடைய ஜீவியத்தை கிறிஸ்துவின் சரீரமாகிய திருச் சபையின் நலனுக்கும் ஆரோக்கியத்திற்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களிடம் மாத்திரமே ஒப்புவிக்கச் சித்தமானார். நமது மன நோக்கானது பிரசங்கிக்கவோ அல்லது கற்றுக் கொடுக்கும் வாஞ்சையால் இராமல் ஆனால் நமது ஆழ்ந்த வாஞ்சையானது தேவ ஜனத்தை பக்தி விருத்தி செய்யவும், பலப்படுத்தவும் ஆசீர்வதிப்பதுமே நாம் வாஞ்சிக்கும் கிரியை செய்யும்படியான பகுதியாகும்.

### C: மனத் தாழ்மையை ஆடையாக தரித்துக் கொள்ளுங்கள்.

வசனம் 6, ''அவர் உங்களை ஏற்ற காலத்தில் உயர்த்தும் படிக்கு தாழ்மை ஒரு தேவனுடைய தலைவனுக்கு இன்றியமையாததாகும்.''. ஏனென்றால் எந்த ஒரு காரியமும் நிறைவேற்றப்படுவது

தேவனுடைய கிருபையினாலும் உதவியினால் மட்டுமே என்பதை மெய்யாக கண்டுணர்ந்து கொள்ளுதலாக சுட்டிக் காட்டுகிறது. நமது உழைப்பும் வேலையும் நமது சொந்த பலத்தாலும் திறமையினாலும் வந்த பலனாக இருக்குமானால் நாம் மெய்யாகவே தேவனுக்காக ஒரு வேலையைச் சாதிக்காதவர்களாக இருப்போம். தேவனுடைய ஒரு உண்மையான வேலையானது அவரால் மட்டுமே நிறைவேற்றப்பட முடியும். நாமும் நமக்கு முடிந்த அளவில் அவருடன் கூட உடன் வேலையாட்களாக இருக்கிறோம்.

**D: மந்தையை முன் உதாரணத்தால் வழி நடத்துக.**

தேவ ஜனங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் உண்மையான உதாரணங்களாகவும் முன் மாதிரிகளாகவும் இருக்கிற தலைவர்கள் அடைவதற்கே தகுதியுடையவர்கள். அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்குப் புத்திமதிகளை உபதேசித்தார்கள். ‘‘நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக இருப்பது போல நீங்களும் எங்களைப் பின்பற்றுகிறவர்களாய் இருங்கள்’’ கிறிஸ்துவைப் பின்பற்றும்படியும் அவரைப் போல இருக்கும்படியாக ஜனங்களுக்கு உபதேசம் செய்பவர்களான தலைவர்கள் தாங்களாகவே கிறிஸ்துவைப் போல் அல்லாதவர்களாக, மாயக்காரராகவும் அவர்களுடைய அழைப்புக்கு பாத்திர மற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

**E: ஒருவருக்கொருவர் பணிந்து கீழ்படிந்து இருங்கள்.**

மற்ற தலைவர்களுக்கு உண்மையாகவே பணிந்து கீழ்படிந்து இருந்தால் அதற்கு ஆதரவளிப்பும் பாதுகாப்பும் இருக்கும். ஒருவருக்கு பணிந்து கீழ்படியும்படி செய்வது தேவனுடைய கிருபையை கவர்ந்து இழுக்கும் ஒரு காரணியாகும். ஏனென்றால் பெருமையுள்ளவர்களை தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ மிகுந்த கிருபை அளிக்கிறார். மனத் தாழ்மையுடன் பணிந்து கீழ்படிதல் பெருமையை விலக்கித் தள்ளி விடுகிறது. அது நமக்குள் ஒரு நேரடியான கிரியை செய்து நம்மை தேவனுடைய இராஜ்ஜியத்தின் பொறுப்பான உரிமைக்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்குகிறது.

**F: மகிமையின் கீரிடத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்** (உண்மையுள்ளவர்களும் கீழ்படிதலுமுள்ள போதகர்களுக்கு)

உண்மையுள்ள போதகர்கள் தங்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு மிகுந்த கனத்தையும் மகிமையையும் கொண்டு வருகிறார்கள். தேவன் ஒரு உண்மையுள்ள மேய்ப்பனால் போற்றப்பட்டு மகிமைப்படுத்தப்படுகிறார். ஆகையால் அவர் கர்த்தருக்கு மகிமையான கீரிடமாக அவருடைய தேவனுக்காக இருக்கிறார். இதுவே தான் குறிப்பாக அவருடைய உண்மையான உழைப்புக்காக அவர் பெறக்கூடிய வெகுமதியாகும். ஆம் அங்கே மெய்யாகவே வேதாகமத்தில் ஐந்து வகையான கீரிடங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒரு விசேஷித்த வெகுமதியாக தேவனுக்கென்று செய்யப்பட்ட உண்மையான ஊழியத்திற்காக வழங்கப்படுகிறவைகளாகும். அவை ஒவ்வொன்றைக் குறித்தும் சுருக்கமாக கவனிப்போமாக.

**வேதாகமத்தில் கூறப்படும் ஐந்து கீரிடங்கள்:**

# **ஜீவ கிரிடம்.** (யாக்கோபு 1:12-18)

சோதனையையும், சோதிக்கப்படுதலையும் சகித்து அதை மேற்கொள்ளுகிறவன், சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமன் என்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கீரிடத்தைப் பெறுவான். (யாக் 1:12) இந்த கீரிடத்தை வெற்றியாகப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று காரணிகள் உண்டு.

- சோதனைகளையும் சோதிக்கப்படுவதையும் சகித்து மேற்கொள்ளுதல்
- அநேக சோதனைகள் வந்தாலும் கிறிஸ்துவில் அன்பு கூற வேண்டும்.
- மரண பரியந்தம் உண்மையாக இருக்க வேண்டும். வெளி 2:10.

# **அழிவில்லாத கீரிடம்** (I கொரி 9:24-27)

மேற்கொண்டு ஆதிக்கத்தையும் தன்னடக்கத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக முயற்சி செய்தல் அல்லது எல்லாவற்றிலும் (தன்னடக்கம்) இச்சையடக்கத்துடன் இருப்பது தேவனுடைய மகிமைக்காகவே. ‘‘பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாக

இருப்பார்கள். (தன்னடக்கமும் சமநிலையும்) அவர்கள் அழிவுள்ள கீரிடத்தைப் பெறும்படி அப்படி செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கீரிடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.'' (I கொரி 9:25) மேலும் I கொரி 10:5-13 பகுதிகளையும் பார்க்கவும்.

# **மகிழ்ச்சியின் கீரிடம்** (I தெச 2:19-20)

எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கீரிடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படி இருப்பீர்கள். நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள். (I தெச 2:19-20) இது ஆத்ம ஆதாயம் செய்பவர்களுடைய கீரிடமாகும். கிறிஸ்துவுக்காக யாரை ஆயத்தம் செய்தார்களோ அவர்கள் அவனுக்குக் கீரிடமாயிருக்கிறார்கள். இந்த ஆத்ம ஆதாயம் செய்தவர்கள் தேவனுடைய நித்தியமான பிரசன்னத்திற்குள் வரும் பொழுது கிறிஸ்துவுக்காக ஆத்ம ஆதாயம் செய்யும் படியான உரிமையைப் பெற்று அவரிடம் கொண்டு வந்த உரிமைக்காக அவர்கள் அவனுக்காக மிகுந்த மகிழ்ச்சியும் மேலும் அவனுக்கு ''மகிழ்ச்சியின் கீரிடமுமாக'' இருக்கிறான்.

# **நீதியின் கீரிடம்** (II தீமோத் 4:5-8)

''நான் தேகத்தை விட்டு பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கீரிடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரம் அல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.'' (II தீமோத் 4:6டி-8) பவுல் தான் ஜீவியத்தில் ஒரு நிலையை அடைந்தான். அங்கே அவன் தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடன் இருக்கப் போவதை தன் மேல் இருப்பதாக உணர்ந்தான். அவன் தான் ஜீவித்த ஜீவியத்தை பிரதிபலிக்கிறான். அதாவது இயேசுவுக்காக அவன் எதிர்பாராத விதமாக நாடகபாணியில் மனந்திரும்பிய காலத்திற்கு பிறகு தான் வாழ்ந்த காலத்தை நினைவு கூறுகிறான். அதற்காக மூன்று ஒப்புடைமைகளை விவரிக்கிறான்.

- அவன் நல்லதோர் போராட்டத்தைப் போராடினான்.
- அவன் விசுவாசத்துடன் தன் மராத்தான் ஓட்டத்தை முடித்தான்.
- அவன் மன விழிப்புணர்வுடன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டான்.

இந்த மூன்று ஒப்புமைகளும் அவனுடைய ஜீவியத்தின் மேல் வந்த தேவனுடைய அழைப்புக்காக அவன் விசுவாசத்தோடு இருந்தான் என்பதும் அந்த அழைப்புக்குரிய பொறுப்பை அவன் நிறைவேற்றி முடித்த விதமும் ஆகியவற்றைச் செய்ய அவன் கையாண்ட பலவேறு வழிகளையும் விவரிக்கின்றன. அவனது ஜீவிய கால முடிவில் அவன் கிறிஸ்துவுக்காகவும் அவருடைய திருச்சபைக்காகவும் அவன் விசுவாசத்துடன் சேவை புரிந்து செய்து முடித்த ஆண்டுகளை அவன் திரும்பிப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவன் இந்த அமைதியான நம்பிக்கையை எதிர்பார்த்தும் அவனுடைய விசுவாசத்துடன் நிறைவேற்றப்பட்ட உண்மையான ஜீவியத்திற்காக அதை அங்கீகரித்து வழங்கப்பட விருக்கும் வெகுமதியானது தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவனுடைய பதவியையும் ஆளுகையின் அதிகாரத்தையும் எடுத்துச்சுட்டிக் காட்டுவதாக இருக்கும்.

# **மகிமையுள்ள வாடாத கீரிடம்** (I பேதுரு 5:2-4)

இது மேய்ப்பருடைய கீரிடமாகும். இது தேவனுடைய ஊழியக்காரனுடைய உண்மையான சேவையை தேவனுடைய ஊழியக்காரனாக அங்கீகரித்து அளிக்கப்படுவதாகும். இதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியத்தின் பலவேறு அம்சங்களாவன:

- கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உண்மையான மூப்பனாக இருப்பது.
- கிறிஸ்துவுடைய பாடுகளில் பங்குள்ளவனாக.
- தேவனுடைய மந்தையை உண்மையாக மேய்த்துப் பாதுகாத்தும்
- அந்த மந்தையின் மீது அதிகாரத்துடன் அல்ல, ஆனால் முன் மாதிரியால் வழி நடத்தி செல்ல.
- அவருடைய பதவியை சுய நலத்திற்காக பயன்படுத்தாமல் இருக்க.

தாவீது இராஜாவுடைய அனுபவமாகிய ஆட்டு மந்தைகளில் பெற்றதைப் போலவே நமக்குத் தெரிந்தபடியே ஆட்டு மந்தையை மேய்ப்பதில் இருப்பதை மாதிரியே சில அம்சங்கள் ஒருவரை

நித்தியமான தேவனுடைய இராஜ்ஜியத்தின் சேவைக்காக ஒருவரை ஆயத்தப்படுவத்திலும் இருக்கின்றன. இந்த அனுபவமே அவனை இஸ்ரவேல் புத்திரர் மீது ஆளுகை செய்வதற்காக அவனை ஆயத்தப்படுவதில் உதவி செய்தது. (ஐஐ சாமு 7:8) ஒரு நபரை கிறிஸ்துவின் வெற்றியுள்ள ஊழியக்காரனாக ஆகும் படி செய்வதற்கும் கிறிஸ்துவுடைய இராஜ்ஜியமானது உலகத்தில் உள்ள இராஜ்ஜியங்கள் மீது ஸ்தாபிக்கப்படும் படி ஆகி அதில் அவரோடு ஆளுகை செய்யும்படியான தகுதி பெறச் செய்வதற்கு இதிலுள்ள கோட்பாடுகள் உதவக் கூடும். (வெளி 11:15)

**4. விசுவாசிகளும் அந்த வெகுமதிகளில் பங்கு பெற்று பகிர்ந்து கொள்ளுவார்கள்.**

இந்த கீரிடங்களும் வெகுமானங்கள் பற்றியும் நாம் சுருக்கமாக கருத்தில் கொண்டவைகள் ஊழியக்காரர்களுக்கும் பிரசங்கிப்பவர்களுக்கும் மாத்திரம் ஒதுக்கித் தனியாக வைக்கப்பட வில்லை. அந்த விதமான பதவிகளை வகிக்காதவர்களுக்கும் கிறிஸ்துவை பலவிதமான ஊழியப் பகுதிகளில் விசுவாசத்துடன் பணிபுரிந்தவர்களுக்குங்கூட பலருக்கும் வழங்கப்படும். அநேக கிறிஸ்தவ தொழில் அதிபர்களுங்கூட அந்த இராஜ்ஜியத்தின் அங்கீகாரத்திற்கும் வெகுமதிகள் பெறவும் தகுதி பெற்றவர்களாய் மேசியாவின் இராஜ்ஜிய நிர்வாகத்தில் முக்கியமான பங்கை நிர்வகிப்பார்கள். ஆகவே இதற்காக திருச்சபை சாரா மக்களுங்கூட தாங்கள் செய்கிற ஒவ்வொரு காரியமும் தேவனுக்காக செய்யப்படுவது போல செய்யப்படுவது என்பது இன்றியமையாததாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் தங்களுடைய தொழிலில் அவ்வாறு கிரியை செய்யும் பொழுது வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவர்கள் எடுத்துக் கொள்ளப் போகும் பாகங்களுக்காக அவர்களை ஆயத்தம் செய்யும்படி அவர்கள் தங்கள் தொழில் துறையில் மேற்கூறிய இராஜ்ஜியத்தில் பதவி வகிக்கும் காரியத்திற்கு தேவையான பலவிதமான கோட்பாடுகளை அங்கே கற்றுக் கொள்கின்றனர். (மத் 10:40-42) ‘‘தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் (கண்டறிந்து, கனப்படுத்தி வரவேற்பவன்) தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்.’’ (பெற்றுக் கொள்வான், பகிர்ந்து கொள்வான்) ஒரு போதகர் ∴ தலைவர், ஆனவர்களை ஆதரித்து நடப்பவர்கள் அதாவது ஜெபத்திலும், இராஜ விசுவாச பக்தியிலும், ஊக்கப்படுத்துவதிலும் கூட்டுறவாக இருப்பதிலும் பங்கு கொண்டவர்கள் அதை போன்ற ஒரு வெகுமதியையும் பெற்றுக் கொள்வார்கள்.

**5. சாத்தான் உங்களை மேற்கொள்ளாத படி அவனை நீங்கள் மேற்கொள்ளுங்கள்.**

இந்த துக்ககரமான உண்மையாவது என்னவென்றால் சாத்தானுக்கு அவனுடைய பலவிதமான தந்திரமான யுக்திகளால் உண்மையாகவே சில தேவனுடைய ஊழியர்களின் வெகுமதியை திருடிக் கொள்ளுவான். அவரை உண்மையாக பல்லாண்டுகள் சேவித்தவர்களில் சிலர் முடிவில் அந்த சத்துருவை அவர்களுடைய சுதந்தரத்தை அவர்களிடமிருந்து திருடி பறித்துக் கொள்ளும்படி அனுமதிப்பது எவ்வளவு துக்கமான காரியமாகும். இந்த பயங்கரமாகச் செயல்படக் கூடுவதை தவிர்ப்பதற்கு வேதாகமத்தில் பின்வரும் எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது.

A: கலங்காமலும் விழிப்புடனும் கண்காணிப்புடனும் எல்லா நேரங்களிலும் இருங்கள்.
B: விசுவாசத்தில் இடைவிடாமல் உறுதியுடன் நின்று சாத்தானை எதிர்த்து நில்லுங்கள்.
C: மனத் தாழ்மையுடன் தாழ்மையால் உடுத்துவிக்கப்படுங்கள்.
D: கர்த்தருக்குள் ஒருவருக்கொருவர் கீழ்படிந்திருங்கள்.
E: இயேசுவின் மேல் உங்களுடைய எல்லா பாரத்தையும் போட்டு விடுங்கள்.

**6. சகல கிருபையின் தேவனானவர்**

சாத்தான் தன்னால் என்ன செய்து சாதித்துக் கொள்ள முடியும் என்ற தன்னடக்கமான விஷயத்தை நாம் கருத்தில் கொண்டுள்ளபடியே, அவன் அவ்வாறு செய்யும்படி அனுமதிப்போமானால் மேலும் நாமும் நமக்குள்ளாக நமது தேவன் ‘‘சகல கிருபைகளின் தேவனாக’’ இருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அவரது கிருபையானது நமது சூழ்நிலைமைகளில் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும்படியாக அபரிமிதமாகப் போதுமானதாக இருக்கிறது என்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும். அவர் உண்மையான தேவனாக தம்மில் அன்புகூர்ந்து அவரது கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் தமது உடன்படிக்கையைப் பாதுகாத்து இரக்கஞ் செய்கிறவராக இருக்கிறார் என்பதையும் கூட நினைத்துப் பார்க்க வேண்டும். (உபா 7:9) அவர் தமது உடன்படிக்கையின் நிபந்தனைகளை தமது இரக்கத்தைக்

கொண்டு நமது தவறுகளையும் பலவீனங்களையும் மூடுவதற்கு முதலீடாக வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வது நமக்கு ஊக்கம் அளிப்பதாகவும் மறுபடியும் நிச்சயப்படுததுவதாகவும் இருக்கும். அது நமது விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி அவரது உடன்படிக்கையின் நிறைவேற்றப்படுதல் என்பது அவருடைய மெய்ம்மையிலும் நமது தரப்பிலும் அல்ல என்றும் உறுதிப்படுத்துகிறது.

**7. தேவன் தாமே உன்னை பூரணப்படுத்தி ஸ்தாபித்து ஸ்திரப்படுத்துவாராக.**
எப்பொழுதுமே நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டியதானது ''ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.'' (பிலிப் 2:13) அதற்கு மேலும் அதற்கு மேல் அளவுக்கு மிஞ்சியும் நமது ஜீவியத்தில் நாம் சாதிக்கக் கூடியதெல்லாம் ஒன்று தனிப்பட்ட முறையிலோ மற்றது நமது ஊழியத்திலோ நிறைவேற்றப்படுவதெல்லாம் ஆச்சரியமான சகல கிருபைகளின் தேவனுடைய ஒப்பற்ற கிருபையினாலே நிறைவேற்றப்படுகிறது. முடிவாக நமது ஜீவியத்திலும் தலைமைத்துவத்திலும் பெறும் வெற்றியானது நமது திறமைகளையோ அல்லது நம்பிக்கையையோ அல்லது நம்பிக்கைக் குறைவையோ சார்ந்ததல்ல. ஆனால் தேவனுடைய உண்மையான சத்தியத்தையே சார்ந்திருக்கிறது.

தேவனுடைய தோற்றப் பார்வையில் முடிவாக அதிக வெற்றியடைந்தவர்களாகக் காணப்படுகிறவர்கள் ஞானத்தில் சிறந்தவர்களோ குணச் சித்திரமானவர்களோ மேலான சாதனை படைத்தவர்களோ அல்ல. ஆனால் முற்றிலுமாகத் தங்களை தேவனுக்கு ஒப்படைப்புச் செய்து சரணாகதி அடைந்தவர்களாக இருப்பதால் அவர் தாமே தமது பணியை அவர்கள் மூலமாக கிரியை செய்யும் படியாய் முடிகிறது. அவருடைய சித்தத்தின் படி நிறைவேற்றப்படுகிற இந்த நடைமுறையில் அவர் தாமே:

– **உன்னை பூரணப்படுத்துவாராக.** பூரணப்படுதல் என்பது தேவனுடைய பார்வைத் தோற்றத்தில் முழுமைபடுதலையும் முதிர்ச்சியையும் தவிர்க்க முடியாதபடி உள்படுத்துகிறது. தேவன் உன்னுடைய ''எல்லா துண்டுதுண்டான பகுதிகள் சகலத்தையும் ஒன்றாகச்'' சேர்த்து வைப்பார். அப்பொழுது உன்னுடைய தலைமைத்துவ பாகத்தை செயலூக்கமுடையதாகவும் கனி கொடுக்கக் கூடியதாகவும் செய்வார். இந்த சந்தர்ப்பமான காலத்தில் அவர் உன்னை முற்றிலும் முழுவதுமாக பொருந்தும்படியாகவோ அல்லது உன்னை நீ என்னவாக இருக்க வேண்டுமோ அதுவாக ஆகும்படி செய்வார் என்பது இதிலிருந்து ஊகித்துக் கொள்ளப்படுவதாகும்.

– **உன்னை ஸ்தாபித்து வைப்பாராக.** ஒரு மரத்தை ஸ்தாபிப்பது போலவே உன்னை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்துவார். அதன் வேர்கள் ஆழமாக பூமிக்குள் ஊன்றி இருப்பது போல செய்வார்.

– **உன்னை பலப்படுத்துவாராக.** அவருடைய தெய்வீக பலம் உன்னில் உள்ளே பாய்ச்சி நிரப்பி அதன் மூலம் பலப்படுத்துவதாக.

– **உன்னை குடி அமர்த்துவாராக.** உன்னை ஒரு உறுதியானதும் அசைக்கப்படக் கூடாததுமான அஸ்திபாரத்தின் மேல் உன்னை வைப்பார்.

அன்பான நண்பர்களே! தேவன் தாமே உங்களை அவருக்கு ஊழியம் செய்யும்படியாக அழைத்திருக்கிறார். அந்த அழைப்பை உன்னை உன் சொந்த பலத்தாலோ அல்லது திறமையாலோ நிறைவேற்றும் படியாகவோ அவர் உன்னை விட்டு விடவில்லை. அவர் யோபுடன் இடைப்பட்டது போலவே ''எனக்கு குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்.'' (யோபு 23:14) அவர் அந்த பணியை உன் மூலமாக நிறைவேற்றும்படியாகக் கிரியை செய்யும்பொழுது மேலும் அவர் உனக்குள்ளும் கிரியை செய்து உன்னுடைய ஜீவியத்திற்கான அவருடைய வைப்புத் தொகையை முழுமையாக்கியும் அதோடு அவருடைய நித்தியமான இராஜ்ஜியத்தில் உன் பாகத்திற்கு உன்னை ஆயத்தப்படுத்துவதற்காகவும்கூட கிரியை செய்வார். தேவன் இதன் மேல் கிரியை செய்யும் பொழுது நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்போம். நாம் விசுவாசத்தில் ஒருவர் மற்றொருவரை விசுவாசத்திலும் ஜெபத்திலும் ஆதரிப்போம். அதனால் அவர் உன்னிலும் என்னிலும் ஆரம்பித்த அந்த நல்ல வேலையை தன்னுடைய நித்தியமான துதிக்கும், கனத்துக்கும், மகிமைக்கும் ஆக முடிப்பாராக.

# தலைமைத்துவத்தின் இருதயமான யோக்கியதாம்சங்கள் (தகுதிகள்)

தலைமைத்துவத்தின் தன்மையை விட தலைமைத்துவத்திற்கான அழைப்பும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தலைமைத்துவத்தின் விமரிசன முக்கியத்துவமும் (கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில்) மேலும் மேற்கொண்ட படிப்பிற்கு அவசியமாகிறது.

நீ அதற்கு யோக்கியதாம்சம் பெற்றவனா? உன்னுடைய ஜீவியத்தின் உன்னதமான ஒரு ஜீவிய காலத்து சாகச் செயலுக்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா! இதற்கு பெரிதான அளவில் எல்லாம் உன்னால் செய்ய முடிந்ததுதான் (அ) உன்னைப் பொறுத்ததுதான். தேவன் தம்மை ஒப்படைப்பு செய்து உன்னை விசுவாசத்தில் வளரும்படி உதவி செய்வதற்கு உனது மட்ட அளவிலான இணைக்கப்பட்ட ஸ்தாபனமே விடுதலை செய்யும் காரணியாக தகுதி பெற்ற இருதயத்திற்கு உன்னை இட்டுச் செல்கிறது. அவர் தாம் நம்பக் கூடிய மக்களாக அவருடைய இருதயத்தின் அன்பையும் திருச்சபைக்குரிய கரிசனையுமே உடையவர்களைத்தான் தேடிப் பார்க்கிறார்.

இந்த படிப்பு தலைமைத்துவத்தின் இருதய யோக்கியதாம்சங்களாக எல்லா கிறிஸ்தவர்களும் பெற்றிருக்க வேண்டியதான ஒரு தகப்பனுடைய இருதயமும் ஒரு வேலைக்காரனுடைய இருதயத்தைப் பற்றியது தான். ஒரு அரசாங்க ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தால் அவைகள் உன் அவசியத் தேவைகளாகிய தகுதிகளாக உனது ஊழியத்தின் பணிக்காக நிறைவேற்றுதலுக்கான செயல்பாட்டுக்கு அஸ்திவாரமாக இருக்கிறது. ஒரு கூடிவரும் சபையின் ஊழியத்திற்கு செயல்வகையாக உன்னுடைய சேவைக்கு அந்த ஆத்மாவாக இருக்கிறது. இவைகள் இருதயத்தின் யோக்கியதாம்ச தன்மைகளாக இருப்பதால் அதன் மேல் சார்ந்து கொண்டு கிறிஸ்தவர்களாக நமது முழு அந்தஸ்த்தையும் அடைந்து விடும்படி நம்புகிறோம்.

**இருதயம் என்ற வார்த்தைக்கு சொல்பொருள் விளக்கம்**
தேவன் தமது ஊழியர்களைப் பார்த்து தங்கள் இருதயங்களை அவருக்கு தரும்படியாகக் கேட்கிறார் என்பதற்கு தேவன் என்ன அர்த்தம் கொடுக்கிறார்? மேற்கத்திய சிந்தனைக்கு இருதயம் என்பது பொதுவாக (முக்கியமான சரீர அவயவத்திற்கு அப்பால்) உணர்ச்சி பூர்வமாக ஒரு நபரால் உணரப்படுபவைகள் என்று பொது அர்த்தம் தரும். உதாரணமாக மேற்கு கோளத்தில் வசிப்பவர்கள் ஒரு மனிதன் ஒரு ஸ்தீரியை தன் முழு இருதயத்தோடு காதலிக்கிறான் என்று சொல்லும் பொழுது நாம் பொதுவாக அதீதமான உணர்ச்சியுடன் என்று அர்த்தம் கொள்கிறோம்.

**எபிரேய அர்த்தங்கள்.** பூர்விகமான எபிரேய சிந்தனைக்கு என்னவென்றாலும் இருதயம் என்பதன் அர்த்தமாவது ஒரு மனிதனுடைய உணர்ச்சிகளை மட்டும் அல்ல. மேலும் அவனுடைய ஆவிக்குரியதும், மனோ ரீதியானதும் சரீர சம்பந்தப்பட்டதை சூழ்ந்து கொண்டது என்று பொருள் படும். எபிரேயர்கள் மனிதனை ஒரு முழு அலகாகவும் அவனது இருதயமும் இந்த சந்தர்ப்பத்தில் தான் விளங்கிக் கொள்ளப்பட்டது. இருதயம் என்பதற்கு எபிரேயப் பதம் labab எனப்படும். அது பொதுவான பொருள் விளக்கத்தின் மத்தியில் மிகவும் உட்பகுதியில் அல்லது எந்த பொருளின் ஒளித்து வைக்கப்பட்ட பகுதி என்று அர்த்தம் கொடுக்கும். ஆகவே வேதாகமமும் சமுத்திரத்தின் இருதயத்தில் என்பதற்கு தமிழில் நடுக்கடல் (யாத் 15:8) என்றும் வானத்தின் இருதயத்தில் என்பதற்கு வானத்தை அளாவிய (உபா 4:11) என்றும் மரத்தின் இருதயத்திலே என்பதற்கு மரத்தின் நடுவில் (II சாமு 18:14) என்றும் பூமியின் இருதயம் என்பதை பூமியின் இருதயம் (மத் 12:40) என்றும் என்றும் தமிழ் வேதாகமம் குறிப்பிடுகிறது. ஆகவே இருதயம் என்ற வார்த்தையானது விரிக்கப்பட்ட அளவில், மனிதனுடைய ஒன்று கலந்த சக்திகளின் ஆசனம் அவனது தனிப்பட்ட ஜீவியத்தின் கேந்திரம் என்றும் பொருள் கொள்ளப்படும். இருதயமானது நமது ஜீவனே வீற்றிருக்கும் சிம்மாசனமாகும். இதை ஊழியத்தோடு தொடர்பு படுத்தும் பொழுது கர்த்தர் ஒரு மனிதனுடைய இருதயத்தை தா என்று கேட்கும் பொழுது அவர் அந்த மனிதனை கர்த்தருடைய பணியில் அவனுடைய முழு ஆள் தன்மையிலிருந்து ஈடுபடும் படியாக வாஞ்சிக்கிறார்.

**கிரேக்க பொருள் விளக்கங்கள்.** ஆங்கில வேதாகமத்தில் பொதுவான கிரேக்க வார்த்தைகளின் ஒன்றான இருதயம் என்பதாக மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க பதம் kardia என்பதாகும். பொதுவான அர்த்தத்தில் kardia என்பது ஆவிக்குரியதும் சரீர பிரகாரமானதுமான ஜீவனுடைய ஆசனமாகிய

கேந்திரம் என்பதைக் குறிக்கிறது. அது ஆத்துமா சிந்தனை ஆகிய இரண்டின் குணாம்சங்களைக் கொண்டது. kardia என்பது பல தடவைகளில் சிந்தனையை ஊற்று என்றும் மனுஷீக யோசனைகள், ஆசாபாசங்கள், வாஞ்சைகள், பசிகள், நேசம், நோக்கங்கள், முயற்சிகள் ஆகியவற்றின் ஆசனம் என்றும் குறிப்பிடுகிறது. சில கிரேக்க ஞானிகள் இந்த கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் 250 தடவைகள் உபயோகிக்கப்பட்டு ஒரு தனி நபரின் ஆள் தன்மை, உள்ளான ஜீவியம், நல்லொழுக்கம் ஆகியவற்றைக் குறிப்பதாக சொல்லுவார்கள். கர்த்தர் தம்முடைய தலைவர்களைப் பார்த்து அவருக்கு அவர்களுடைய இருதயங்களைக் கொடுக்கும்படியாகக் கேட்கும்பொழுது அவர் அவர்களுடைய ஜீவியத்தையே தரும்படியாகக் கேட்கிறார்.

**இருதயத்தின் முக்கியத்துவம்**

சரீரப் பிரகாரமாகக் கூறும்பொழுது இருதயம் என்பது மிகவும் முக்கியமான சரீரத்து அவயவயமாகும். அது இல்லாவிடில் சரீரத்தின் பல திறப்பட்ட அவயவயங்கள் நடைமுறைகள், கிரியைகள் அனைத்துமே நிலை குலைந்து விடும். நின்றும் போகும். ஜீவனும் முடிந்து போகும். நாம் இந்த சரீர இருதயத்திற்கும் ஆவிக்குரிய இருதயத்திற்கும் இடையே சமமானவைகளை எடுத்துக்காட்டி அதன் அதிமுக்கியத்துவத்தை ஒரு தலைவரின் ஆவிக்குரிய ஜீவியத்திலும் அதன் கிரியைகளிலும் காணப்படுவதை எடுத்துக்காட்டலாம்.

<u>**சமன்பாடுகள்**</u>

| **சரீர பிரகாரமான இருதயம்** | **ஆவிக்குரிய பிரகாரமான இருதயம்** |
|---|---|
| ஒரு சரீர இருதயமானது மனிதனுடைய நெஞ்சில் ஏறக்குறைய மத்தியில் இடம் பெற்றுள்ளது. | ஆவிக்குரிய இருதயம் (அ) ஆவியின் இருதயமானது தலைவரின் எண்ணங்கள் வார்த்தைகள், செயல்பாடுகள் மேலும் ஊழியம் ஆகியவற்றின் மத்தியில் இடம் பெற்று ஜீவியத்தில் ஒவ்வொன்றையும் நோக்கி ஊக்கப்படுத்த வேண்டும். |
| ஒவ்வொரு சரீர இருதயமும், ஏறக்குறைய அந்த சொந்தக்காரரின் முடக்கிய முன் கை அளவே பரிமாணத்தால் ஆனது. | ஒவ்வொரு தலைவருடைய ஆவிக்குரிய இருதயம், உண்மையில் அவருடைய கையின் கிரியைகள் பெரிதாகக் காட்டுகிறபடியே இருக்கிறது. |
| ஒரு சரீரப் பிரகாரமான இருதயத்தின் இரத்தம் அதன் சொந்தக்காரர் உண்ணும் உணவின் போஷாக்கில் உள்ள வேறுபட்ட ஊட்டச் சத்துப் பொருட்களால் ஆனது. | ஆவிக்குரிய பிரகாரமான இருதயம் ஆனது அவரது சிந்தனை அனுபவத்தின் மூலமாக புசிக்கப்படுகிறவைகளால் ஆனது. ஆனால் சுத்தமான ஜீவனானது தேவனுடைய வார்த்தையாகிய அப்பத்தை புசிப்பதால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. |
| சரீரத்து இருதயத்தின் குழாய் மூலம் மேலேற்று நிலை முறையானது இருதயத்தின் பெறுதல் / விடுவித்தல் என்ற முறையின் அடிப்படையாகக் கொண்டது. இரத்தமானது இருதயத்தின் மற்றொரு பகுதியின் மூலமாகப் பெற்றுக் கொள்ளப் படுகிறது. | ஒரு தலைவரிடமிருந்து பொங்கி வழிந்தோடும் ஆவிக்குரிய ஜீவனானது அவரது சொந்தமானதும் தனிப்பட்டதுமான பெற்றுக் கொள்ளுதலாக தேவனுடைய அன்பையும், மன்னிப்பையும் பெறுவதாகும். பின்னர் அவரைச் சுற்றி உள்ளவர்களுக்கு அதை விடுவிப்பதாகும். |
| சரீரப் பிரகாரமான இருதயம் சரியாக வேலை செய்யுமானால் இரத்தத்தை சரீரத்தின் ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்கு குழாய் வழியாக ஏற்றம் செய்கிறது. | தலைவரின் ஆவிக்குரிய இருதயமானது பரிசுத்த ஆவியின் ஜீவனைத் தன்னில் சுற்றியோடச் செய்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பரிசுத்த ஆவியானவர் சரியானபடி கிரியை செய்கிறவரானால் அவ்வாறு நேரிடுகிறது. |
| சரீரப் பிரகாரமான இருதயம் இரத்தத்தை சரீரம் முழுவதிலும் குழாய் மூலம் ஏற்றம் செய்து | ஒரு தலைவரின் ஆவிக்குரிய இருதயம் தன்னில் தானே தெரிந்து கொண்டு இயேசுக் கிறிஸ்துவின் |

சரீரத்தை அதன் அசுத்தங்களில் இருந்து சுத்திகரிக்கிறது.

ஆரோக்கியமான சரீரப் பிரகாரமான இருதயம் தானாகவே இயங்கி ஓடிக் கொண்டும் அடித்துக் கொண்டும் இருக்கிறது. அதன் சொந்தக்காரரின் விழிப்பு உணர்வுகளுக்கான முயற்சி இல்லாமல் அவ்வாறு செயல்படுகிறது.

சரீரப் பிரகாரமான இருதயமானது அதிகமாக சில வகையான இருதய நோய்க்கும் உள்ள தாக்கத்திற்கு உள்ளாகிறது. அதுவும் ஒரு கனத்த சரீரத்தில் கொழுப்பு வகையான உணவுகளை உண்பதால் அந்த தாக்கத்திற்கு உள்ளாகக் கூடும்.

சரீரப் பிரகாரமான இருதயமானது அதிகமாக நோய்க்கும் தாக்கத்திற்கும் உள்ளாக்கப்படுகிறது. அதுவும் அந்த சரீரத்தில் மதுபான வகையான பானங்கள் பண்ணுவதால்.

இந்த சரீரப் பிரகாரமான இருதயம் நோய்க்கும் தாக்கத்துக்கும் உள்ளாவது கிஞ்சித்தேனும் தேகப் பயிற்சியை பெறாத சரீரத்தில் அவ்வாறு நேரிடுகிறது.

சரீரப் பிரகாரமான இருதயமானது அதிகமான அழுத்தத்திற்கும் சோர்வுக்கும் அதன் சொந்தக்காரர் அனுபவிக்கும்படி நேர்வதால் நோய்க்கும் தாக்கத்திற்கும் ஆளாகிறது.

சரீரப் பிரகாரமான இருதயம் அதிகமான நோய்க்கும் தாக்கத்திற்கும் ஆளாக்கப்படுவதற்குக் காரணமாவது அதன் சொந்தக்காரர் அதிகமான இருதயத்து குறைபாடுகளை தமது பெற்றோரிடமிருந்து தமது பிறப்பில் பெற்றுக் கொண்ட படியால் அவ்வாறு நேரிடுகிறது.

இரத்தத்தின் சுத்திகரிக்கும் வல்லமையைப் பற்றி பிரசங்கிக்கிறது. தொடர்ந்து கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை சுத்திகரித்துக் கொண்டிருக்கிறது.

தலைவருடைய ஆரோக்கியமான ஆவிக்குரிய இருதயம் தேவனுடைய அன்பு, சந்தோஷம், சமாதானம் இவைகளை எடுத்துக்காட்டி இயற்கையாகவே, தன்னியல்பின்படியே விழிப்புள்ள எந்த முயற்சியோ அல்லது நேர்மையற்ற வேஷத்தைத் தரித்துக் கொண்டோ அல்ல.

ஆவிக்குரிய தலைவரின் இருதயம் ஆனது ஆவிக்குரிய நோய்க்கு ஆளாகக் கூடும். எப்பொழுது என்றால் அந்தத் தலைவர் தேவனுடைய வார்த்தையிலிருந்து ஐசுவரியமான சத்தியங்களை எடுத்துக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளாமல் அவைகளை தன்னுடைய ஜீவியத்திலும் மற்றவர்கள் ஜீவியத்திலும் சுறுசுறுப்பான பங்கை வகிக்கும்படி செய்வதால் ஆகிறது.

ஆவிக்குரிய தலைவரின் இருதயமும் ஆவிக்குரிய நோய்க்கு ஆளாகிறது. ஏனென்றால் அந்த தலைவர் இந்த பிரபஞ்சத்தின் களியாட்ட மதுபானத்தோடும் கவலைகளோடும் விளையாடிக் கொண்டிருப்பதால்.

தலைவரின் ஆவிக்குரிய இருதயம் ஆவிக்குரிய நோய்க்கு ஆளாகிறது. எப்போதென்றால் தேவனுடைய வார்த்தையில் கூறியிருக்கிறபடி தேவனுடைய சித்தத்தை மிகக் குறைந்த அளவில் அந்த தலைவர் செயல்படுத்துகிற காரணத்தில்தான்.

ஆவிக்குரிய தலைவரின் ஆவிக்குரிய இருதயமானது அதிக அளவில் உள்ளாக்கப்படுகிறது. ஏனென்றால் தலைவர் உயர்ந்த அழுத்தமுள்ள ஒரு வாழ்க்கை நடைமுறையில் வாழ்ந்து கர்த்தருடைய கரத்தில் எல்லா கவலைகளையும் ஒப்புவிக்காத காரணத்தினால்.

தலைவரின் ஆவிக்குரிய இருதயத்தை ஆவிக்குரிய நோய்க்கு ஆளாக்கப்படுவது எப்படிஎன்றால் அவருக்கு அதிகமான ஆவிக்குரிய பிரச்சனைகள் இருக்கும்பொழுது அவர் ஆவிக்குரிய மறுபடி பிறத்தலை பரிசுத்த ஆவியினால் பெற்றுக் கொள்ளும் சமயத்தில் உண்மையாகவே அறிக்கை செய்து மனந்திரும்பாத காரணத்தினால் அவ்வாறு நேரிடுகிறது.

இந்த எல்லா மாதிரியான சரீர பிரகாரமான சமன்பாடுகள் தேவனுடைய தலைமைத்துவத்தின் ஜீவியத்தில் ஆவிக்குரிய இருதயத்தின் முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்து சுட்டிக்காட்டுகிறது.

**இருதயத்தை பாதுகாத்தல்**
வேதாகமத்தின் படி பேசுகையில் தன்னுடைய இருதயத்தை பாதுகாத்துக் கொள்ளும்படி ஒரு தலைவருக்குக் குறைந்தது மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது காரணமாவது அவரது இருதயமானது அவருடைய மனப்பான்மைகள் செயல்பாடுகள் அனைத்துக்கும் மூலகாரணமான ஊற்றாகும். இதைப் பின்வரும் வசனங்களில் காண்கிறோம்.

நீதிமொழிகள் 4:23.

– ''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள். அதினிடத்திினின்று ஜீவ ஊற்று புறப்படும்.'' (கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில்)

– ''உன் இருதயத்தை விழிப்புடன் காத்துக் கொள் (எல்லாவற்றிற்கு மேலாக நீயே காவல் செய்) ஏனென்றால் அதிலிருந்து ஜீவ ஊற்று புறப்படும்.'' (விரிவாக்கப்பட்ட மொழிபெயர்ப்பில்)

– ''எல்லா பொக்கிஷங்களைக் காட்டிலும் உன் இருதயத்தைக் காத்துக் கொள். ஏனென்றால் அது எல்லா ஜீவனுக்கும் ஊற்றாகும்.'' (புதிய ஆங்கில மொழிபெயர்ப்பில்)

– ''எல்லாவற்றிற்கும் மேலாக உன்னுடைய நேசத்தைக் காத்துக் கொள். ஏனென்றால் உன் ஜீவியத்தில் ஒவ்வொன்றையும் அது தாக்கம் செய்யும்.'' (ஜீவிக்கும் மொழிபெயர்ப்பில்)

பிலிப்பியர் 4:7.

– ''எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.'' (கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில்)

– ''சகல புத்திக்கும் அப்பாற்பட்ட மேலான தேவ சமாதானம் உங்களைப் படை கொண்டும் குதிரையேற்ற வீரர்களைக் கொண்டும் உங்கள் இருதயங்களையும் சிந்தனைகளையும் பாதுகாப்பார்.'' (விரிவாக்கப்பட்ட மொழிபெயர்ப்பில்)

இந்த வசனங்களில் தலைவருக்கு தமது இருதயத்தை ஒரு போர் வீரர் பட்டணத்து ஒலி முக வாசலைப் பாதுகாப்பது போல பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று புத்தி சொல்லுகிறது. இந்தத் தலைவர் தன்னுடைய ஆசாபாசங்கள் மீது கண் வைத்து காவல் செய்து அந்நியமான பண்பாடுகள் உள்ளே தாக்காதபடி தவிர்க்க வேண்டும். அவர் விழிப்புடன் இருந்து ஒரு காவலாளியின் ஒழுங்குமுறையோடு அந்த காவலாளி ஒரு படை முகாமையோ அல்லது அரணான கோட்டையையோ காத்து அதனுள் இருக்கும் இராஜாவைப் பாதுகாப்பது போல காவல் புரிய வேண்டும்.

இரண்டாவது காரணமாவது ஒரு தலைவர் தனது இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவன் செய்கிற எல்லா ஊழியத்திற்கும் வாயின் வார்த்தைகளுக்கும் ஊற்றாயிருக்கிறது. இதை மத் 12:34b-35 பகுதியில் பார்க்கவும்.

– ''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.'' (கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில்)

– ''நிறைவிலிருந்து பொங்கி ஓடி வழிந்து, இருதயத்தின் அதீதமான மிகுதியால் வாய் பேசுகிறது. நல்ல மனிதன் (உள்ளான) தன் இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளைப் பேசுகிறான். பொல்லாதவனோ தன் பொல்லாத இருதயமாகிய பொக்கிஷ அறையிலிருந்து பொல்லாதவைகளை வீசி எறிகிறான்.'' (விரிவாக்கப்பட்ட வேதாகமம்)

ஒவ்வொரு தலைவரும் அவனது சொந்த இருதயமாகிய பொக்கிஷ அறையிலிருந்து ஒன்று நல்லதோ அல்லது கெட்டதோ ஆனவைகளை சேமித்து வைத்திருக்கிறான். இந்த பொக்கிஷ அறையிலிருந்து நல்லதோ அல்லது கெட்டதோ ஆனவைகளை திறந்த பொக்கிஷ பெட்டகங்களாகிய கர்த்தருடைய ஜனங்களுக்குள்ளவைகளுக்குள் கொண்டு வருகிறான். பழைய ஏற்பாட்டில் இதற்கு அழகான

எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்படுகின்றன. இஸ்ரவேல் வரலாற்றில் அநேக தானியத்தை வைக்கும் களஞ்சியங்கள் திராட்சை ரசமும் எண்ணெய் வைக்கும் பண்டக சாலைகள் ஆயுத கிடங்குகள் பெயரிடப்பட்டு ஜனங்களது நன்மைக்கும் பாதுகாப்புக்காகவும் எற்படுத்தப்பட்டன. சாலமோனும் எசேக்கியாவும் தங்களது பண்டக சாலைகளின் செல்வத்தைக் குறித்து பெருமை பாராட்டினார்கள். (I இராஜா 9:19; II நாளா 32:28) இந்த மாதிரி வழியில் ஒவ்வொரு தலைவரும் தன்னைத் தான் கேட்டுக் கொள்ள வேண்டியது தனது இருதயமாகிய களஞ்சியத்தின் பொருட்களைக் குறித்து பெருமை பாராட்டுகிறானா என்று கேட்டுக் கொள்ள வேண்டும். அவர்களிடமிருந்து கர்த்தருடைய ஜனங்களை போஷித்துப் பாதுகாத்தும் வர வேண்டும். சாலொமோன் தானியம், திராட்சை ரசம், எண்ணெய், இஸ்ரவேலை பாதுகாக்கும் ஆயுத தளவாடங்கள் ஆகியவற்றைச் சேமித்து வைத்திருந்தான். <u>இன்றைய நாட்களிலும் ஆவிக்குரிய தலைவர் தனது இருதயத்தில் தேவனுடைய வார்த்தையை, கர்த்தரின் சந்தோஷத்தை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் சேகரித்து சேமித்து வைக்க வேண்டியதவசியமாகும். (எபேசியர் 6:13-17)</u>

மூன்றாவதாக ஒரு தலைவர் தன் இருதயத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றால் தனக்கோ அல்லது தேவ ஜனங்களுக்கோ ஆவிக்குரிய பரிசுத்த குலைச்சல் ஏற்படுவதைத் தடுத்துக் கொள்வதற்காக அவ்வாறு செய்ய வேண்டும். இதை இயேசு சொன்ன வார்த்தைகளில் இருந்து கண்டறிந்து கொள்ளலாம். பின்பு அவர் ஜனங்கள் எல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி, ‘‘நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள். மனுஷனுக்கு புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது. அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும். கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக் கடவன்’’ என்றார். அவர் ஜனங்களை விட்டு வீட்டுக்குள் பிரவேசித்த போது அவருடைய சீஷர்கள் அவர் சொன்ன உவமையைக் குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள். அதற்கு அவர், நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது என்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது. அதிலிருந்து எல்லா போஜனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசன வழியாய் நீங்கிப் போகும். மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். ‘‘எப்படியெனில் மனுஷருடைய இருதயத்துக்குள்ளிலிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காம விகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பொறாமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப் படுத்தும்’’ என்றார். (மாற்கு 7:14-23) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னதாவது பாதுகாக்கப்படாத ஒரு தலைவருடைய இருதயமானது ஒரு நீண்ட அட்டவணையான பயங்கரமான காரியங்களுக்கு அதாவது இழிவானதும் பொல்லாததுமானவைகளுக்கு, பாலியல் ஒழுக்கக்கேடு, கொலைபாதகம், திருடு, பேராசையான ஆசைகள், அபாயமும் நாசமும் விளைவிக்கக் கூடிய பொல்லாப்பு, கட்டுக்கடங்காத ஆபாசமான நடத்தை, தீங்கு செய்ய நோக்கும் கண்கள், அவதூறு செய்யும் வகையான சொற்களைப் பேசும் வாய், கெடுக்கும் நோக்கங் கொண்ட தவறாகக் காட்டுதலும், தேவனுக்கும் மனிதனுக்கும் விரோதமாக உயர்த்தப்பட்ட பெருமையான இருதயம் நாசத்தை விளைவிக்கும் முட்டாள் தனமான நேசம் ஆகியவைகளாகும்.

சரித்திரத்தின் சில இடைவேளையான காலங்களில் திருச்சபைக்கு நேரிடக்கூடிய சோகமான சம்பவமாவது இந்த வெட்கக் கேடான அட்டவணை அதனுடைய செல்வாக்கு மிகுந்த தலைவர்களுக்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய தலைப்பு பொருள்களாக ஆகி விடுகிறது. எது தவறாகப் போனது? ஏனென்றால் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றிச் சென்றவர்களும் தங்களுடைய இருதயங்களைப் (பாது)காத்துக் கொள்ளாமல் போனதினால்தான். தேவனுடைய மந்தையை மேய்த்துக் காப்பதற்குப் பதிலாக இந்தத் தலைவர்கள் ‘‘காணமல் போய் திரிந்த ஆட்டைப்’’ போலவே ஆனவர்களில் மிக முக்கியமானவர்களாக இருந்தார்கள். ஒரு களியாட்டத்திலிருந்து மற்றொன்றை மேய்ந்து கொண்டு திருச்சபைக்காக தேவன் கொண்டுள்ள சித்தத்தை பாதையை தவற விட்டு இழந்து விட்டார்கள்.

**இருதயத்தின் பண்புகள்**

இப்படியாக ஒரு தலைவருடைய இருதயமானது தேவனுக்கு மிகவும் முக்கியமானதாகக் காண்கிறோம். தேவன் தாமே உன்னைத் தொடர்ந்து சோதித்தும். (உபா. 8:2) இருதயத்தை ஆராய்ந்தும் (ஏரேமி. 17:10) இருதயங்களை (அதாவது தமது தலைவர்களுடைய) நிறுத்தும் பார்க்கிறார். ஒரு தலைவர் கர்த்தருக்கு முன்பாக தாங்கள் பரிசுத்தமுள்ள இருதயத்தைக் கொண்டவர்களாய் இருப்பது அவருடைய பொறுப்பாகும். (யாக் 4:8)

உன்னுடைய இருதயத்தின் நிலைமை என்ன? அதிகமான அளவில் அது கர்த்தருக்கும், ஜனங்களுக்கும் உன்னைச் சுற்றியுள்ள சம்பவங்களுக்கும் உன்னுடைய எதிர் கிரியை செயல்பாட்டினால் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவருடைய ஜீவியத்தில் ஒரு பெரிய தேவையை நீ பார்க்கும் பொழுது அவர்களுக்கு உதவும்படி உன்னிடம் விருப்ப ஆயத்தமான இருதயம் இருக்கிறதா அல்லது உன்னிடம் ''இதைச் சரி செய்ய முடியாது'' என்று சொல்லுகிற இருதயம் இருக்கிறதா? உன்னுடைய சொந்தமான பாவத்தைக் குறித்து கர்த்தர் உன்னை எதிர்த்து நிற்கும்பொழுது உனக்கு என்று மென்மையான இருதயம் உன்னிடம் உள்ளதா? அல்லது ஆ, கர்த்தாவே தயவு செய்து இப்பொழுது அல்ல, நான் இப்பொழுது முக்கியமான ஒன்றின் மத்தியில் இருக்கிறேன். நாம் அதை பின் ஒரு நேரத்தில் நேராக்கி விடக் கூடுமா? என்று கேட்கிற மாய்மாலமான இருதயம் உனக்கு இருக்கிறதா? உள்ளத்தை தூண்டி எழுப்பும் வேத சத்தியத்தை ஒரு நல்ல பிரசங்கத்தில் கேட்கும் பொழுது, அதை பின்னால் வாரத்தின் கடைசியில் அதை நிறைவேற்றும்படி திட்டமிடும் ஒரு தக்க வைத்துக் கொள்ளும் இருதயம் உன்னிடம் இருக்கிறதா? அல்லது ஒரு புதிய கோட்பாட்டை கண்டுபிடித்து மகிழ்ச்சி அடைவதும் ஆனால் அதைச் செயல்பாட்டினால் தொடர்ந்து பின்பற்றி வரத் தவறுகிற இரட்டை இருதயம் உன்னிடம் இருக்கிறதா?

**ஆவிக்குரிய இருதயத்தின் நல்லியல்புகள்** என்ற கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையான மாதிரி படமானது இருதயத்தின் நல்லலியல்புகளைக் கொண்ட அட்டவணையைக் கொண்டுள்ளதாய் வேதாகமத்து வசனங்களை உடன் கொண்டும் அந்த ஒவ்வொரு இயல்புகளின் நேரிடையான அல்லது எதிர்மறையான இரண்டு பக்கங்களையும் விவரித்துச் சொல்லுகிறது. இது உன் சொந்த இருதயத்தை அதன் நிலைமையில் மதிப்பீடு செய்வதற்கு சிறந்ததொரு கருவியாகும். பரிசுத்த ஆவியின் மூலமாகவும், வசனத்தின் மூலமாகவும் உன்னுடைய ஆவியில் காணப்படும் ஆரோக்கியமற்ற நிலைமையைக் குறித்துச் சுட்டிக்காட்டி மறுபடி மாற்றி அமைத்து சீர் செய்யுமாறு தேவன் அதை உபயோகப்படுத்தி உனக்கு உதவி செய்யக் கூடும். ஒரு திருச்சபைத் தலைவராக நீ இருந்தாலும் அல்லது வாஞ்சித்தாலும் அது உன்னுடைய ஆவிக்குரிய பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். மேலும் அதை வாசித்து ஜெபித்து அந்த அட்டவணைப்படி செயல்படும் யாரும் அப்படி செய்வதால் பயன் அடையலாம். இந்த நேரிடையான இயல்புகள் தேவனுடைய வசனத்திலிருந்து பெற்றுக் கொண்ட எழுப்புதல் ஊட்டும் செய்தியில் கிடைத்த வடிகட்டி எடுத்த பண்புகளின் அட்டவணையாகும்.

## ஆவிக்குரிய இருதயத்தின் இயல்புகள்

| நேரிடையானவை | எதிர்மறையானவை |
|---|---|
| விசனமான இருதயம். ஆதி 6:6 | பொல்லாத இருதயம். ஆதி 6:5 |
| மனப்பூர்வமான இருதயம். யாத் 25:2 | கடினமான இருதயம். யாத் 4:21 |
| ஆவி உற்சாகப்படுத்தி எழுப்பின இருதயம். யாத 35:21 | வஞ்சிக்கப்பட்ட இருதயம். உபா 11:6 |
| ஞான இருதயம். யாத் 35:35 | உணரத்தக்கதல்லாத இருதயம். உபா 29:4 |
| வேறே இருதயம். I சாமு 10:9 | மன மேட்டியமையான இருதயம். II நாளா 32:25 |
| உத்தம இருதயம். I நாளா 12:38 | துணிகரங் கொண்ட இருதயம். எஸ்தர் 7:5 |

இளகின இருதயம். II நாளா 34:27
துக்கமான இருதயம். நெகே 2:2-12
உண்மையான இருதயம். நெகே 9:8
இளக்கரிக்கப்பட்ட இருதயம். யோபு 23:16
மாசுபடாத இருதயம். யோபு 31:7
உருகும் இருதயம். சங் 42:4
மெழுகு போன்ற இருதயம். சங் 22:14
மாசில்லாத இருதயம். சங் 24:4
நொறுங்குண்ட இருதயம். சங் 34:18
குழம்பி அலைகிற இருதயம். சங் 38:10
சோர்ந்து போகிற இருதயம். சங் 40:12
பொங்குகிற இருதயம். சங் 45:1
ஆயத்தமாயிருக்கும் இருதயம். சங் 57:7
வாழும் இருதயம். சங் 69:32
உறுதியாயிருக்கும் இருதயம். சங் 112:8
புத்திக்கு அமையப்பண்ணும் இருதயம். நீதி 2:1
காத்துக் கொள்ளும் இருதயம். நீதி 4:4,21
சொஸ்தமன இருதயம். நீதி 14:30
மன மகிழ்ச்சியுள்ள இருதயம். நீதி 17:22
புது இருதயம். எசெக். 18:31; 36:26
சதையான இருதயம். எசேக். 11:19
தீர்மானம் பண்ணும் இருதயம். தானி 1:8
சிந்தனை பண்ணும் இருதயம். லூக். 2:19
மனப்பூர்வமாய் மன்னிக்கும் இருதயம். மத் 18:35
பிழையற்ற பரிசுத்தமுள்ள இருதயம். I தெச 3:13
இரத்தம் தெளிக்கப்பட்ட இருதயம். எபி 10:22
போஷிக்கப்பட்ட இருதயம். யாக். 5:5
சுத்த இருதயம். I பேதுரு 1:22
நிச்சயப்படுத்தும் இருதயம். I யோ. 3:19
உண்மையும் நன்மையுமான இருதயம். லூக். 8:15
கொழுந்து விட்டு எரியும் இருதயம். லூக். 24:25-32
ஒருமனப்பட்ட இருதயம். அப் 2:46
ஒரே இருதயம். அப். 4:32
திறந்த இருதயம். அப். 16:14
கீழ்படிந்த இருதயம். ரோமர் 6:17

மாயமுள்ள இருதயம். யோபு 36:23
மேட்டிமையான இருதயம். உபா 8:14
கல் போன்ற கெட்டியான இருதயம். யோபு 41:24
அக்கிரம இருதயம். சங் 41:6
நியாயக்கேடு செய்கிற இருதயம். சங் 58:2
வழுவிப் போகிற இருதயம். சங் 95:10
மாறுபாடான இருதயம். சங் 101:5
நிணந்துன்னி கொழுத்த இருதயம். சங் 119:70
சோர்ந்து போகும் இருதயம். சங் 143:4
அலட்சியம் பண்ணும் இருதயம். நீதி 5:12
தீங்கை பிணைக்கும் இருதயம். நீதி 12:20
கசப்புள்ள இருதயம். நீதி 14:10
பின் வாங்கும் இருதயம். நீதி 14:14
முடரின் இருதயம். நீதி 15:7
மனுபுத்திரருடைய இருதயம். நீதி 15:11
பகையை வஞ்சகமாய் மறைத்து வைக்கும் இருதயம். நீதி 26:25
இருமனமுள்ள இருதயம். யாக். 1:8
குத்துண்ட இருதயம். சங் 109:22
பொல்லாத இருதயம். மத் 15:19
கலகமுள்ள இருதயம். எரேமி. 5:23
மனப் பெருமையுள்ள இருதயம். ஏசா. 9:10
திருக்குள்ள இருதயம். எரேமி. 17:9
சோரம் போகிற இருதயம். எசேக் 6:9
கல்லான இருதயம். எசெக் 11:19
களைத்துப் போன இருதயம். எசேக் 16:31
வர்மம் வைத்து பழி வாங்கும் இருதயம். எசேக். 25:15
மனங்கசந்து அழும் இருதயம். எசேக் 27:31
மிருக இருதயம். தானி. 4:16
பிரிக்கப்பட்ட இருதயம். ஓசியா 10:2
கொழுத்த இருதயம். மத். 13:15
மடிந்து போகிற இருதயம். நீதி 31:6
சிந்தித்துக் கொண்டிருக்கும் இருதயம். மாற்கு 2:6-8
வைராக்கியமும் விரேதமுள்ள இருதயம். யாக். 3:14
இச்சையுள்ள கடின இருதயம். சங் 81:12
கலக்கமுள்ள இருதயம். யோவான். 14:1

விருத்தசேதனமுள்ள இருதயம். ரோமர் 2:29
விசுவாசிக்கும் இருதயம். ரோமர் 10:9-10

உறுதியுள்ள இருதயம். I கொரி 7:37

விசாலமான இருதயம். I கொரி 6:11
கரிசனையுள்ள இருதயம். I கொரி 8:16
பாடி கீர்த்தனம் பண்ணும் இருதயம். எபேசி 5:19
ஸ்திரப்படுகிற இருதயம். எபி 13:9

விருத்தசேதனம் பெறாத இருதயம். அப். 7:51
இருள் அடைந்த இருதயம். ரோமர் 1:21

மனக்கடினமும் குணப்படாத இருதயம். ரோமர் 2:5

கவலைப்படும் இருதயம். I கொரி 2:4
அந்தகாரப்பட்ட இருதயம். எபேசி 4:18
வழிகளை அறியாத இருதயம். எபி 3:10
பொல்லாத இருதயம். எபி 3:12
குற்றவாளியான இருதயம். I யோ. 3:20
தொய்யும் இருதயம். சங் 61:2
பாவத்தில் பழகின இருதயம். II பேதுரு 2:14

**தலைவரும் ஒரு தந்தையின் இருதயமும்**

**கிரேக்க சொல்பொருள் விளக்கம்.** கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்களுக்கில்லையே. (I கொரி 4:15) இந்த மூல கிரேக்க பாஷையிலே உபாத்தியாயர் என்பது "ஒரு வாலிப பையனான தலைவன், போதிப்பவர், வழிகாட்டி, பாதுகாவலர் அல்லது பணியாளர் அதாவது சிறுவர்களை பள்ளிக்கு கூட்டிச் செல்லும் பதவியையுடைய வேலைக்காரர்" என்று பொருள்படும். கிரேக்கர்களிலும் ரோமர்களிலும் ஒரு போதிப்பவர் நம்பிக்கைக்குரிய வேலைக்காரனாகவோ அல்லது உக்கிராணக்காரராகவோ அதாவது உயர்ந்த குல சமூக மட்டத்தில் பையன்களுடைய ஜீவியத்தையும் ஒழுக்கத்தையும் மேற்பார்வை செய்யும் பொறுப்பை பெற்றவர்கள் ஆவார்கள். அந்த பையன்களை அவர்களுடைய போதிப்பவர் இல்லாமல் அவர்கள் மனிதப் பருவம் அடையும் வரைக்கும், வீட்டை விட்டு வெளியில் போக அனுமதிக்கப்படுவதில்லை. இந்த வார்த்தையானது தன்னுடைய கோட்பாடான கண்டிப்பையும் சுமந்து கொண்டு அந்த பயிற்சியாளர் ஒரு கண்டிப்பான குறை காண்பவராகவும் சரியான ஒழுக்க நெறிகளை இளைஞர்களுக்காக அமல்படுத்துகிறவராகவும் இருப்பார்.

வேதத்தில் இந்த வார்த்தையானது உபாத்தியாயர் என்ற பலமான வித்தியாசத்தைக் காண்பிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் கொரிந்து பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதியதாவது அவர்களுக்கு அநேக உபாத்தியாயர்கள் அதாவது அவர்களுக்கு இலவசமாக கண்டிப்பான போதனையையும் கண்டிப்பான விதிமுறைகளையும் தருகிறவர்கள் உபாத்தியாயர்கள் இருந்தனர். ஆனால் அநேக தகப்பன்மார்கள் அவர்களுக்கு இல்லை. இந்த வார்த்தை உபாத்தியாயர் ஆசிரியர் மாணவர் என்ற உறவுத் தொடர்பை போதனைக்காக குறிப்பிடுகிறது. ஆனால் தகப்பன் என்ற வார்த்தை தந்தை மகன் அன்பின் உறவுத் தொடர்பைக் குறிக்கிறது. நீதிமொழிகளின் புத்தகமானது கோட்பாடான தந்தை மகன் என்ற அன்பின் உறவுத் தொடர்பின் மேல் கட்டப்பட்டது. தந்தையின் ஞானம், அறிவு, ஜீவியத்தைப் புரிந்து கொள்ளுதல் ஆகியவை மகனுக்கு தந்தை மகன் என்ற அன்பின் உறவுத் தொடர்பினால் திரும்பக் கொடுக்கப்படுகிறது.

**எபிரேய அர்த்தங்கள்.** நீதிமொழிகள் பலவற்றில் சப்திக்கும் குரலானது ஒரு தகப்பனானவர் மகனுடன் உரையாடுதலாகக் கொண்டுள்ளது. அது ஒரு தந்தையின் இருதயத்திலுள்ள மனப்போக்கை எடுத்துக் காட்டுகிறது.

- "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள்." (1:8)
- "என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதிக்காதே." (1:10)
- "என் மகனே, நீ அவர்களோடே வழி நடவாமல் இருப்பாயாக." (1:15)
- "என் மகனே, நீ என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்வாயானால்." (2:1)
- "என் மகனே, உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது." (3:1)
- "என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே." (3:11)
- "என் மகனே, இவைகள் உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக. மெய் ஞானத்தைக் காத்துக் கொள்." (3:21)

– ‘‘என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி. என் வசனங்களுக்கு உன் செவியை சாய்ப்பாயாக.’’ (4:20)
– ‘‘என் மகனே, உன் தகப்பன் போதனையைக் காத்துக் கொள்.’’ (6:20)

**இன்றைய திருச்சபையில்**
பவுலின் நாட்களைப் போலவே நமது நாட்களிலும் அது மெய்யாக இருக்கிறது. அதாவது திருச்சபை பத்தாயிரம் உபாத்தியாயர்களைப் பெற்றிருக்கிறது. ஆனால் தகப்பன்மார் அநேகரில்லை. திருச்சபையில் அநேக நிபுணர்களும் தொழில் சார்ந்த ஊழியர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஏறக்குறைய அநேக ஆவிக்குரிய தகப்பன்மார்களை பெற்றிருக்கவில்லை. அநேக அறிஞர்களும் தொழில் சார்ந்த ஊழியர்களும் இன்று திருச்சபையில் பேச்சு திறமை பெற்ற கவர்ச்சியான தூதுக்களை நமது சிந்தனையையும் எண்ணங்களையும் தொடக்கூடியதாக தரக் கூடும். ஆனால் தகப்பன்மார்கள் எங்கே? சில மதசார்பான கல்லூரிகளிலும் இறையியல் சாலைகளிலும் இன்றைய நாட்களில் ஒட்டுமொத்தமான அளவில் உபாத்தியாயர்களை உற்பத்தி செய்வதில் முனைந்து நிற்கின்றன. ஆனால் ஆவிக்குரிய தகப்பன்மார்களை உண்டாக்குவது யார்?

திருச்சபையான தலைமைத்துவம் உடைய பேச்சாளர்களை, கல்வி போதிப்பவர்களை, பயிற்சியாளர்களை என்றைக்குமே அந்த திருச்சபையின் ஆசீர்வாதங்களை, ஏன் ஆவிக்குரிய தகப்பன்மார்கள் கொடுக்கக் கூடிய ஆசீர்வாதங்களை திருடிக் கொள்ளும்படியாக விட்டு விட முடியுமா? இந்த உலகத்திற்கு பல கற்றறிந்த அறிஞர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் சேவை புரிவதற்காக இருக்கிறார்கள். ஆனால் திருச்சபையான உண்மையான ஆவிக்குரிய தகப்பன்மார்களுக்காக அறை கூவல் விடுக்கிறது. திருச்சபைக்கு இனிமேல் கணினி போன்ற மனிதர்கள் ஞாபக வங்கிகளாக வறட்சியான வேதாகமத்தின் ஞானத்தால் நிறைந்து தேவனுடைய வழிகளில் கற்றுக் கொள்ளாதவர்களுக்கு போதிக்கும்படியாக இருக்கிறது. அந்த திருச்சபையானது உண்மையான ஆவிக்குரிய தகப்பன்மார்களை பெற்று அந்த திருச்சபையை கர்த்தரின் வழிகளில் நடத்த கூடியவர்களுக்காக அவசியமாய் வேண்டி நிற்கிறது. கர்த்தரின் ஜனங்களுக்காக இருதயத்தையும் அவசியத் தேவையுடையவர்களுக்காக இரக்கத்தையும் வேண்டி நிற்கிறது.

ஒரு கணினியானது அன்பு, இரக்கம், புரிந்து கொள்ளுதல் இன்றி விஷயதானம் செய்கிறது. ஒரு தலைவர் எவ்வளவு அன்பு உண்டோ அந்த அளவுக்கு அன்பையும், இரக்கத்தையும் புரிந்து கொள்ளுதலையும் கணினியானது காட்டுகிறது போல அவரிடம் தகப்பனுக்குரிய இருதயம் இல்லை என்றால் அவ்வாறு இருக்கும் திருச்சபைக்கு அதிகமான வேதாகமத்தின் அறிவும் போதனையும் சரியாகப் பெற்றுக் கொள்வதற்கு மேல் அதிகமாக தேவையிருக்கிறது. அந்த திருச்சபையானது ஆவிக்குரிய தகப்பன்மார்களுடைய உள்ளான இருதயத்தையும் ஜீவனையுமே போதித்து பகிர்ந்தளிக்கும்படி வேண்டுகிறது. ஆவிக்குரிய ஜீவனைப் பகிர்ந்தளிப்பதாவது என்னவென்றால் கல்லூரி வகுப்பறையில் கல்லூரி பாடப் புத்தகத்திலிருந்து கற்றுக் கொடுக்கப்படக் கூடியதல்ல. ஆவிக்குரிய ஜீவியமானது ஒரு நெருங்கிய உறவுத் தொடர்பை தேவனுடனும் தேவனுடைய ஜனங்களுடனும் விசுவாசத்தில் உண்மையான தகப்பன்மார்களுடைய ஆவிக்குரிய முன் மாதிரியால் மாத்திரமே கற்றுக் கொள்ளக்கூடியதாகும்.

**இயேசுவுடைய தகப்பனாரின் இருதயம்**
நாம் முதலாவதாக தலைவர்கள் எல்லாருக்கும் முடிவான முன் மாதிரியான கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் குணச் சித்திரமான தகப்பனாருடைய இருதயத்தை அவருடைய ஜீவியத்தில் பார்ப்போம். இந்த உலகத்தில் இயேசு பரம பிதாவின் இருதயத்தை முழுவதுமான ஆராய்ச்சியையுடையவராயிருந்தார். அவருடைய வார்த்தைகள் அவருடைய வழிகள், செயல்பாடுகள் அனைத்தும் பிதாவினுடைய இருதயத்தை வெளிப்படுத்தின. ஆகவே அதன்படி இயேசு சொன்னார். ‘‘நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்’’ என்றார். (யோவான் 10:30) ‘‘என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்க பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்.’’ (யோவான் 14:9c, 10c) கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் தகப்பன் இருதயம் போன்ற மனப்பான்மைகளை தேவனுடைய தலைவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருப்பவருடையவைகளைக் காட்டுகிறது.

**தகப்பன் இருதயம் - மனப்பான்மை - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடையது - உதாரணத்துக்காக**

| | |
|---|---|
| மனதுருக்கம் | அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது அவர்கள் மேல் மனதுருகி. (மத் 9:35-36) |
| கரிசனை | ஒரு பரிசேயன் அதைக் கண்டு அவருடைய சீஷர்களை நோக்கி, உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன?வென்று கேட்டார்கள். இயேசு இதைக் கேட்டு ‘‘பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை’’ என்றார். (மத் 9:11-13) |
| விருப்ப சித்தம் | அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து; ஆண்டவரே உமக்கு சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்றார். (மத்தேயு 8:1-3) |
| தாழ்மை | இயேசு நமக்கு தாழ்மையைக் குறித்து ஒரு புதிய சொல் பொருள் விளக்கம் தருகிறார். ‘‘நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ என்றார். (மத். 8:1-3 மேலும் பிலிப். 2:5-10 வசனங்களைப் பார்க்கவும்) |
| அன்பான உபசரிப்பு | மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று மார்த்தாளுக்குச் சொன்னார். மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்கும் இடத்தை விட்டு போகக்கூடாது என்பதற்கான காரணத்தை விளக்கிக் கூறி அவள் அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்படக் கூடாது என்றும் சொன்னார். (லூக்கா 10:38-42; யோவான் 12:1-8) |
| மன்னிப்பு | மன்னிப்புக்கு இயேசு ஒரு புதிய சொற்பொருள் விளக்கம் கொடுத்தார். சிலுவையிலே இயேசு, ‘‘பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே’’ என்றார். (லூக்கா 23:24) உதாரி மகன் என்ற கதையில் அவன் (மகன்) தூரத்தில் வரும் போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தஞ் செய்தான். (லூக்கா 15:32) விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்தீரியைப் பார்த்து ‘‘நானும் உன்னை ஆக்கினைக்கு உள்ளாக தீர்க்கிறதில்லை. நீ போ, இனி பாவஞ் செய்யாதே’’ என்றார். (யோவான் 8:11) |
| நொறுக்கப்பட்ட தன்மை | இந்த பூலோகத்திற்கு இயேசு வந்ததால் தன்னுடைய பரம அதிகாரத்துவத்தை கீழே வைத்து விட்டார். ஆகையால் நொறுக்கப்படுதலுக்கு ஒரு உதாரணமாக சகல தலைமைத்துவம் உடையவர்களுக்கும் அவ்வாறு விளங்கினார். இயேசு ஆவியிலே கலங்கித் துயரமடைந்து இயேசு கண்ணீர் விட்டார். (யோவான் 11:33-36). ‘‘எருசலேமே, எருசலேமே என்று அவர் புலம்பி கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று’’ என்றார். (மத் 24:37) |

| | |
|---|---|
| தன்னை ஜீவபலியாக | இயேசு முடிவான விலையை எவ்வாறு செலுத்த வேண்டும் என்று நமக்குக் காட்டினார். ''ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்'' என்றார். (யோவான் 10:15) |
| ஊழியம் | மேலும் இயேசு எந்த விதமான வேலையும் முக்கியமல்லாததாகவும் அல்ல கனமற்றதாகவும் இருக்கவில்லை என்பதைக் காண்பித்தார். ''ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள்.'' (யோவான் 13:14) |

**தகப்பனுக்குரிய சாந்தம்**

I தெச 2:7ல் பவுல் சொல்லுகிறதாவது, ''ஆனால் உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம். ஆனால் விரிவாக்கப்பட்ட வேதாகமத்தில் இந்த வசனமாவது நாங்கள் உங்களிடத்தில் இருக்கும் பொழுது ஒரு அன்பான தாய் தன்னுடைய பிள்ளைகளைப் போஷித்துப் பாதுகாப்பது போல நாங்கள் சாந்தமாய் நடந்து கொண்டோம்'' என்கிறது. சாந்தம் என்ற வார்த்தை மூல கிரேக்க மொழியில் சிநேகிதமாக, மென்மையாக அல்லது நேயத்துடன் என்று அர்த்தம் தருகிறது. கிரேக்க எழுத்தாளர்கள் இந்த கிரேக்க பதத்தை அடிக்கடி குணாதிசயமாக ஒரு செவிலி அழுகிற குழந்தைகளோடு அல்லது ஒரு ஆசிரியரிடம் கடினமான மாணவர்கள் இருப்பது போல என்று வர்ணிக்கப்படுகிறது. இந்த வார்த்தை ஒரு பாலூட்டும் தாயை வர்ணிக்கிறது.

சாந்தம் என்பது மற்றொரு பண்பாக தகப்பனுடைய இருதயத்தில் காணப்படுகிறது. சாந்தம் என்பது அந்த அன்பான அரவணைப்பாக எல்லா குழந்தைகளும் தாங்கள் வளர்ச்சியடையும் காலத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதை காட்டுகிறது. இந்த சாந்தம் இல்லாவிட்டால் குழந்தைகள் சமநிலையை இல்லாது இருப்பர். தேவனாகிய கர்த்தருடைய வீட்டில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவிருக்கும் சாந்தம் இல்லாவிட்டால் ஒரு பலமுள்ள தலைவர் தேவனுடைய பிள்ளைகளைக் காயப்படுத்தி விடுவார்.

கீழ்காணும் வேத வசன பகுதிகள் சாந்தத்தைப் பற்றியவை. அவை ஒவ்வொரு தலைவரும் தமது ஜீவியத்தில் இந்த நல்லியல்பை விருத்தி செய்யும் படியாக தேவனை அனுமதிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறது. சாந்தம் பற்றிய வசனங்கள்.

| | |
|---|---|
| II தீமோத்தேயு 2:24 | கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாயிருக்க வேண்டும். பவுல் இதை தன் சீஷனாகிய தீமோத்தேயுவுக்கு சொல்லுகிறார். |
| தீத்து 3:2 | ஒருவனும் சண்டை பண்ணாமலும் சாந்த குணத்தைக் காண்பிக்க வேண்டும். |
| யாக்கோபு 3:17 | பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும் பின்பு சமாதானமும் சாந்தமுள்ளதாயுமிருக்கிறது. |
| II கொரி 10:1 | பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு புத்தி சொல்லுகிறேன். |
| கலாத்தியர் 5:22 | ஆவியின் கனியோ, நீடிய பொறுமை, சாந்தம், நற்குணம், விசுவாசம். |

கர்த்தருடைய வீட்டில் இருக்கும் தலைவர் சாந்தத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும். இந்த இருதயத்து மன நோக்கானது அந்தத் தலைவரை திருச்சபையில் உணர்ச்சி பூர்வமானதும் கடினமானதுமான பாடங்களைக் கொண்டு தேவனுடைய ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக

புண்படுத்தப்படாமலும் அல்லது நிரந்தரமாக அவர்களுக்கு மனம் நோகாமலும் இருக்கும்படியாகப் பாடங்களைப் போதிக்க அனுமதிக்கும். சாந்தமானது மக்களைக் கவனித்துக் கேட்கும் படியாகவும் மிகவும் மனமாறக் கூறப்பட்ட கண்டிதமான எச்சரிக்கைகளை ஒரு தலைவர் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று உணருவாரானாலும் அதற்கு பதில் கொடுக்க வேண்டும்.

**தகப்பனுக்குரிய செவிலியர் பணி**

I தெச 2:7 கூறுகிறதாவது "உங்களிடத்தல் பட்சமாய் நடந்து கொண்டோம். பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல" என்கிறது. புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழியில் ஒரு பால் கொடுக்கும் தாயானவள் அந்தக் குழந்தைகள் புஷ்டியாக ஆக்கவும், தேர்ந்தெடுத்த உணவு வகைகளால் அவர்களை போஷித்து வளர்க்கவும் அந்த அளவுக்கு அவள் குழந்தைகளைப் போஷிக்கிறாள். இந்த வார்த்தையானது ஒரு பால் கொடுக்கும் தாய் தன் குழந்தையை பால் மறக்கப்பண்ணு முன்னர் வளர்க்கும் முறையைக் குறிக்கிறது. இது மிகுந்த ஆவலோடும் இளகிய மனதோடும் தன் சிறு குழந்தைகளுக்காக கவனம் எடுத்துக் கொள்ளும் ஒரு தாயைப் பற்றி விவரிக்கிறது.

வேதாகமத்தின் படி இந்த சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தின்படி தான் பெற்றெடுத்த திருச்சபைக்கு சொல்லுகிறதைப் பார்க்கிறோம். அடுத்த வசனத்தில் I தெச 2:8ல் பவுல் ஒரு தகப்பனுடைய இருதயம் பிறரை விடக் கடுமையாக உழைப்பதாக விவரிக்கிறார். ஆகவே அவர் சொல்கிறதாவது, நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல் நீங்கள் எங்களுக்கும் பிரியமானவர்களானபடியினாலே எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்!! அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு சுவிசேஷத்தை மட்டுமல்ல தன்னுடைய சொந்த ஜீவனையும் பலத்தையுங்கூட பகிர்ந்தளித்தான். இந்த கிறிஸ்தவர்களுக்காக பவுல் எதைக் கொடுத்தான். தன் சொந்த பாலகனை பாலூட்டி வளர்க்கும் ஒரு தாயினால் வெளிப்படுத்தப்படும் உணர்வுகளில் இருந்து பார்க்கக் கூடும். இது தான் குழந்தையை வளர்க்கும் ஒரு தகப்பனாரின் உண்மையான படமாகும். ஆண்களைப் பொருத்த கருத்தில் அது பவுல் அப்போஸ்தலனை மாத்திரம் அல்ல மற்றும் ஒவ்வொரு தலைவரையுமே தொடர்பு படுத்துகிறது.

அப். 13:18ல் பழைய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தர் எப்படி தமது ஜனங்களாகிய இஸ்ரவேல் புத்திரரை தாய் தன் குழந்தையை வளர்த்தது போல வளர்த்து காப்பாற்றினார் என்ற வரலாற்றை கூறுகிறது. இந்த வசனமானது "நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்களை ஆதரித்து" என்று கூறுகிறது. செப்துவஜின்ட் மொழி பெயர்ப்பில் இது இவ்வாறு வைக்கிறது, "தேவன் பாலகனை வளர்க்கும் தகப்பனைப் போல இஸ்ரவேல் ஜனங்களைத் தாங்கினார்" என்கிறது. அதைப் போலவே உபாகமம் 1:30 சொல்லுகிறதாவது ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்து கொண்டு போவது போல நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும் நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்து கொண்டு வந்ததைக் கண்டீர்கள். "சுமந்து" என்பதற்கான எபிரேய பதமானது கட்டி எழுப்ப, ஆதரிக்க, பெற்றோரைப் போல வளர்க்க, குழந்தையைப் பாலூட்டி வளர்ப்பது போல, எல்லா காரியமான நடவடிக்கைகளில் உறுதியான நம்பக் கூடிய நிறைவேற்றுதலாகும். எண்ணாகமம் 11:12ல் மோசேயைப் பற்றி இந்த வார்த்தையின் கருத்தாக மோசே ஒரு குழந்தையை பாலூட்டி வளர்க்கும் தந்தையைப் போல இஸ்ரவேலருக்கு இருந்தான் என்கிறது. (ஏசாயா 40:11; 49:23)

கர்த்தரை மனம் நோகப் பண்ணும்படி இஸ்ரவேல் ஜனங்கள் செய்த எல்லாவற்றிற்கும் மோசே அவர்களோடு பொறுமை உடையவனாகவும் கரிசனையுடையவனாகவும் இருந்தான். அவன் குழந்தையைப் பாதுகாத்து வளர்க்கும் தகப்பனைப் போல இருந்தான். இந்த பாலகனை வளர்க்கும் தாயைப் போல என்ற அடைமொழி மோசேயின் ஜீவியத்தில் கிரியை செய்தது. இஸ்ரவேல் ஜனங்களுடைய எல்லா அனுபவங்களின் மூலமாக அவ்வாறு செய்தது. மோசே இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் அதைச் சொன்னாலும் மோசே நல்ல ஜனங்களாக ஆக்கும்படி விலை கூற மோசே முயற்சிக்கவில்லை. மோசே ஒருக்காலும் தேவனைப் பார்த்து அவர்களை கடினமாக நியாயம் விசாரிக்கச் சொல்லவில்லை. அவன் ஒரு செவிலி - தகப்பனாக இருந்தான். ஆகவே அப்படியே ஒவ்வொரு தலைவரும் இருப்பாராக.

**தகப்பனைப்போல் காத்து ஆதரித்தல்**
பவுல் சொன்னதாவது அவர் தெசலோனிக்கேயர்களை ஒரு செவிலியத் தாயார் தன் குழந்தைகளைக் காத்து ஆதரிப்பது போல காத்து ஆதரித்ததாகக் கூறுகிறார். இந்த cherish என்ற ஆங்கில பதத்திற்கு சமமான கிரேக்க பதமானது, அனலூட்ட அடைகாத்து வளர்க்க மென்மையான அன்பினால் காத்து ஆதரிக்க மேலும் மனதுருக்கம் என்றும் பொருள்படும். செப்துஜிந்து இந்த வார்த்தையை ஒரு பறவை தன் குஞ்சுகளை கரிசனையாகப் பாதுகாப்பதற்கு தன் செட்டைகளை அவைகள் மேல் கூட்டில் விரித்து வைத்துக் காப்பாற்றும். (உபா 22:6; மத் 23:37)

ஒரு ஆவிக்குரிய தகப்பன் தேவனுடைய குடும்பத்தில் அவருடைய பாதுகாக்கும் சிறகுகளை சிறியதும் அல்லது பலவீனமானதுமான மந்தையில் உள்ளவைகளை அவைகள் கூட்டில் இருக்கும்போதே வல்லூறுகள் அவற்றை தாக்கி கொள்ளாதபடி பாதுகாக்கும். வழி நடத்தி முன் செல்லுதலில் இது தகப்பனுடைய இருதயத்தை வெளிப்படுத்தும் மற்றொரு சொல் கூற்றாகும். உதாரணமாக (I தெச 2:8,11; பிலிப் 2:22; I தீமோத் 3:1; எபேசி 5:29)ஐப் பார்க்கவும். வழி நடத்துதலைப் பற்றி நாம் வயது வந்தவர்களை திறமையுடனும், புத்திசாலித்தனமாகவும், இறுகலான கப்பல் ஓட்டத்தில் கையாளுவது போல என்று நினைக்கிறோம். <u>ஆனால் தேவன் இதை செவிலியைப் போல் பேணி பாதுகாத்தும் கரிசனையாகவும் மென்மையாகவும், ஊழியஞ் செய்யவும், கற்றுக் கொடுக்கவும் அந்த குழந்தைகளை நேசிப்பது என்றும் கருதுகிறார்.</u>

**பயிர் செய்தல் என்ற உதாரணம்**
ஒரு இளமையான செடியை மென்மையான கரிசனையுடன் அதற்குத் தண்ணீர் பாய்ச்சி ஊட்டி வளர்த்தால் அது சரியாக ஆரோக்கியமான முதிர்ச்சி பெறுகிறது என்பது மற்றொரு அழகிய எடுத்துக்காட்டாக சாந்தம், செவிலியர் பராமரிப்பு கரிசனையோடு பாதுகாத்தல் என்பதற்கு உதாரணமாகிறது. செடிகள் தங்கள் வாழ்நாள் காலத்தில் பலவேறுபட்ட நோய்களால் அவதிப்படலாம். அவைகள் தாவர சம்பந்தமான நோய்களாலும் பூச்சிகளால் நாசமும் சூழ்நிலைமை மாறுதல்கள் அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுதல் என்பவற்றாலும் கஷ்டத்தை அடையலாம். சில செடிகள் பிறவற்றை விட மிகவும் மென்மையானவை, சில செடிகள் புறக்கணிக்கப்படுவதாலும் இன்னல்களை அடைந்தும் ஆனால் மற்றவை அவைகளால் செழித்து வருவதால் காணப்படலாம். ஆனால் ஓர் பழையதான பலமுள்ள அடுத்து வளரும் செடியானது கவனிக்கப்படாமையாலும் சூழிநிலைமை மாறுதல்களாலும் நாசமாகும்படி பாதிக்கப்படும்.

ஒரு தாவரத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் ஆரோக்கியத்தின் நிலைமையைச் சுட்டிக் காட்டுகிறது. ஆரம்ப கால நோய் வாய்படுதலும் சுகவீனமும் வழக்கமாக பார்வைக்குத் தப்பும் அளவுக்கு நுட்பமானது. அந்த தாவரத்துடன் தோட்டக்காரருக்கு நெருக்கமான உறவுத் தொடர்பு இருந்தாலன்றி அந்த தாவரத்தை அழித்து நாசமாக்கக் கூடிய அடையாளங்கள் வெளிக்கு தெரியும் வரை அந்த பிரச்சனையை அவர் கண்டறிய மாட்டார். மோசமான இலையுதிர்தலும் வாடிப் போகுதலும் ஆகியவற்றால் ஒரு தோட்டக்காரருக்கு திடீரென்று அந்த தாவரத்தை பரிசீலனை செய்து அதன் சுகவீனத்தைக் கண்டுபிடிக்கும் நேரம் என்று இல்லை. துர்அதிர்ஷ்டவசமாக இந்த விதமான அவசர கால உதவி அடிக்கடி தேவனுடைய மக்களின் திராட்சத் தோட்டத்தில் காணப்படுகிறது.

அவருடைய தாவரங்கள் அவசர கால நிலைமையை அடைவதைத் தடுப்பதற்கு அந்த தோட்டக்காரர் அந்தத் தாவரத்தின் தேவையான நிலைமையை ஆரம்ப காலத்திலே கண்டறிந்து கொண்டு விட வேண்டும். அப்படி செய்வதால் அந்த தோட்டக்காரர் அந்த தாவரத்தை ஒரு வேளை மரணத்திலிருந்தும் ஒரு வேளை அதைச் சுற்றி இருப்பவைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம். அதன் வேளாண்மை செய்பவர் தனது திராட்சத் தோட்டத்தின் ஆரோக்கியத்தை நிச்சயப்படுத்துவதற்காக தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

எந்த தாவரத்து பிரச்சனைக்கும் தவறான சிகிச்சை முறையை பயன்படுத்துவது அது மிகவும் வீணடிப்பதாகும். ஆனால் அதற்காக உபயோகிக்க ஏற்றது என்று கருதப்பட்ட நிவாரணமான மிகவும் வீரியமாக இருந்தால் அந்த தாவரம் அதைத் தாங்கக் கூடாதபடி வாடிப் போகும். ஆதலால் ஒரு கரிசனையான கவனித்தறியும் தந்தையாக ஒரு வேளாண்மை செய்பவர் தனது தாவரங்களின் பலவிதமான தேவைகளைச் சந்திக்க விழிப்பாக இருக்க வேண்டும். சில செடிகளைத் தொட்டிகளில் மாற்றி நடும்படியாகும். மற்றவைகளுக்கு தொட்டிகளில் மாற்றி நடுவது நிச்சயமான முடிவாகி

விடும். சில தாவரங்களுக்கு முதிர்ச்சி அடைய வேண்டுமானால் தங்கள் வேர்கள் ஓடி வளர்வதற்கு அதிகமான இடம் தேவைப்படும். மற்ற செடிகளுக்கு அவற்றின் வேர்கள் கத்தரிக்கப்பட்டு சிறிய தொட்டிகளில் வைக்க வேண்டியது அவசியமாகும். தேவைகள் வேறுபடலாம். பெருவிரல் ஆட்சியானது தோட்ட வேலையில் கிரியை செய்யாது. சில தாவரங்கள் மேலாக தரை மட்டத்தில் அழகானவைகளாகத் தோன்றலாம். ஆனால் மண்ணுக்கடியில் அங்கே கெட்டுப் போனதும் செத்ததுமான வேர்களை உடையதாய் இருக்கும். ஆச்சரியப்பட போதுமானதாக அதிகமான நீர் பாய்ச்சப்படுவதால் இப்படி நேரிடலாம். ஒரு வேளாண்மைக்காரர் சூரிய வெளிச்சத்திற்கு வெளிப்படுத்துவதால் தன்னுடைய தாவரங்களைச் சாகடிக்கலாம். ஒவ்வொரு தாவரத்திற்கும் தண்ணீர் அவசியம். மேலும் சூரிய வெளிச்சமும் அளவுகளில் தேவையானதாகும். தாவரத்தின் தேவைகளை அவற்றின் இயற்கையான தன்மை படியும் முதிர்ச்சியின் மட்ட அளவிலும் சந்திக்க வேண்டுமானால் ஒரு ஞானமும் அனுபவமும் பெற்ற வேளாண்மைக்காரர் இருப்பது தேவையாகும்.

தோட்ட நிர்வாகத்தில் சொல்லப்படக்கூடிய எல்லா விதமான இயற்கையான கருப்பொருட்கள் அனைத்தையுமே கர்த்தராகிய தேவனுடைய மக்களை வழி நடத்திச் செல்வதற்குங்கூட சொல்லக் கூடும். ஒரு தந்தை - இருதயமுள்ள கிறிஸ்தவத் தலைவர் தேவனுடைய ஜனங்களின் பல திறப்பட்ட தேவைகளையும், முதிர்ச்சி வளர்ச்சி மட்டங்களையும் கூர்ந்து பார்த்தறிந்து அதற்குரிய தேவையான ஊழியத்தை நிறைவேற்றுவார். இந்தத் திறன்பாடானது ஒரு தந்தையின் மென்மையான பாதுகாப்பு கரிசனையும் செவிலியர் பணி செய்யும் அன்பின் இருதயத்தில் உண்டாகும் கனியாகும். பின்வரும் அட்டவணை ஆவிக்குரிய வேளாண் பாதுகாப்பை அந்த வேளாண் பாதுகாப்புக்கும் ஆவிக்குரிய தலைமைத்துவத்திற்கும் இடையிலுள்ள சமன்பாடுகளுடன் சித்தரித்துக் காட்டுகிறது.

| ஆவிக்குரிய வேளாண்மை கோட்பாடுகள் | |
|---|---|
| விவேகமும் அனுபவமுள்ள வேளாண்மை தலைவன் தன் தாவரங்களுக்குக் கொடுப்பதாவது. | தந்தை இருதயத்தைப் பெற்ற தலைவர் தேவனுடைய ஜனங்களுக்குத் தருவதாவது. |
| சூரிய வெளிச்சம் | தேவனுடைய வார்த்தையின் ஒளி |
| ஜலம் | தேவனுடைய ஆவியின் ஜீவ தண்ணீர் |
| பயிர் செய்தல் | ஊழியத்திற்குப் பயிற்சி |
| களை நீக்குதல் | தந்தையின் தன்மையான ஊழியம் |
| சரியான சூழ்நிலைமை | தேவப் பிரசன்னம் நிறைந்த சரியான ஆலயத்து சூழ்நிலை |
| புதிய தொட்டியும் மண்ணும் | கிறிஸ்துவுக்குள் வாழ்க்கை நடைமுறையான நெறி |
| நோய்களுக்கு நிவாரணம் | பிரச்சனைகளுக்கு உதவியும் ஆலோசனையும் |
| ஆரம்பத்தில் நோய் கண்டுபிடித்தல் | ஆரம்ப கட்டங்களில் பிரச்சனையைக் கவனித்துப் பார்த்தல் |
| வளர்ச்சிக்குப் போதுமான இடம் | ஊழியத்தில் வளர்ந்து கிரியை செய்ய போதுமான இடம் பெறுதல் |

**ஆவிக்குரிய வேளாண்மை பிரயோகம்**

ஒரு தகப்பனுக்குரிய ஆவிக்குரிய வேளாண்மைக்கான பின்வரும் கோட்பாடுகளை அப்பியசித்து தேவ ஜனங்களுக்காக கரிசனை எடுத்துக் கொள்வதில் பின்பற்ற வேண்டுவன:

- ஆவிக்குரிய போஷாக்கையும் சமநிலையான கிறிஸ்தவ வளர்ச்சியையும் உண்டாக்கிக் கொள்ளுதல்
- கர்த்தருடைய ஜனங்களுடன் அன்புள்ளத்தோடு பழகுதல்
- தேவனுடைய பிள்ளைகளின் தேவைகளை கூர்ந்து அறிந்து அவர்களது எந்த வளர்ச்சி மட்டத்திலும் தெரிந்து கொள்ளுதல்
- கர்த்தருடைய ஜனங்களோடு சாந்தமான அன்புள்ள உறவுத் தொடர்புகள் கொண்டிருத்தல்.
- தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய உணர்ச்சி பூர்வமான, சரீரப் பிரகாரமான மனநிலை சம்பந்தமான தேவைகளுக்காக ஒரே சீரான கவனம் தருதல்

**தந்தையான போஷாக்கும், கண்டிப்பும்.**
எபேசியர் 6:4ல் செயலூக்கமாக தந்தை சார்ந்த மனப்பான்மையும் கண்டிப்பும் என்பதை இவ்வாறு எடுத்துச் சொல்லுகிறது. ''பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'' என்று கூறுகிறது. விரிவாக்க வேதாகமத்தில் இந்த வசனம் பின்வருமாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ''பிதாக்களே உங்கள் பிள்ளைகளை எரிச்சல் அடையச் செய்து கோபப்படுத்தாதிருங்கள். அவர்களை கோபத்தால் எரிச்சலூட்டி சீற்றம் அடையச் செய்யாதிருங்கள். ஆனால் அவர்களை கர்த்தருக்குள் ஒழுங்கு முறை, ஆலோசனை, கண்டிப்பு இவைகளில் கனிவுடன் பயிற்றுவியுங்கள்.'' இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் குடும்பத்தை எப்படி வளர்த்து நடத்த வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். அவர் தாம் ஒரு தந்தையானவர் எந்த விதமான கொள்கைகளின்படி அதை பிள்ளைகளை வளர்ப்பதற்காக கைக்கொள்ளும்படியாக தந்திருக்கிறார். ஒரு சாதாரணமான தகப்பனாருக்கு அவசியமான மனப்பான்மையும் கோட்பாடுகளுமே ஒரு ஆவிக்குரிய தகப்பனாருக்கும் தமது ஆவிக்குரிய பிள்ளைகளை வளர்ப்பதற்கும் அவசியமாகும். தேவனாகிய கர்த்தருடைய வீட்டுக்கும் இந்த வழி காட்டி நெறிமுறைகள் தங்கள் பிள்ளைகளை ஒரு சமனான வழியில் வளர்ப்பதற்கு அவசியமாக இருக்கிறது. பவுல் இரண்டு வார்த்தைகளை பயன்படுத்தினார் போஷிக்க, கண்டிப்பு என்பவைகளைத் தான் இந்த சமநிலையைக் காட்டுவதற்கு உபயோகித்தார்.

போஷித்தல் என்ற பதத்திற்கு சமமான கிரேக்க வார்த்தையைப் படிக்கும் பொழுது இன்றைய ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் அர்த்தத்தைவிட வேறுபட்ட அர்த்தம் தருவதை பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டு போஷித்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தையானது போதித்தல், ஆதரித்தல், உற்சாகப்படுத்துதல் ஆகிய முறைகளால் குழந்தையின் பலவிதமான வளர்ச்சி மட்டங்களில் அந்த குழந்தையின் விருத்தியை முன்னேற்றுவிப்பதற்கு பயன்படுத்தப்படுவதாகும். அதாவது ஒரு குழந்தையைப் பயிற்றுவித்தும் ஒழுங்கினாலும் சீர்திருத்தத்தினாலும் பாடம் கற்றுக் கொள்ளச் செய்வதாகும். போஷித்தல் என்பது ஒரு குழந்தைக்குள் நல் நடத்தையை உருவாக்குவதற்கான நோக்கத்துடன் சிட்சிப்பதாகும். இந்த வார்த்தையில் பிள்ளைகளைப் பயிற்றுவித்துப் பாடம் கற்பித்தும் அவர்களுடைய சிந்தனையையும் ஒழுக்கத்தையும் சீர்திருத்தம் செய்தும் வார்த்தைகளாலும் செய்கைகளாலும் கண்டனம் செய்யவும் வேண்டும் என்பதுமான கோட்பாட்டையும் உள்ளடக்கிக் கூறும்.

**பேணி வளர்த்தல்.** கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் இந்த பேணி வளர்த்தல் என்பது பல விதமான மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. மூன்று முக்கியமான வடிவத்தில் அவையாவன போதனை, படித்தல், தண்டித்துத் திருத்துவது ஆகும். II தீமோத் 3:16; I தீமோத் 1:20; I தீமோத் 2:25; எபி 12:5; அப் 7:22; வெளி 3:19 ஐப் பார்க்கவும். இயேசு இருதயத்தின் மனப்பான்மையான பேணி வளர்த்தலை தமது போதனையில் விளக்கிக் காட்டுகிறார். கர்த்தராகிய இயேசு உண்மையான அன்பும் மனதுருக்கமும் எல்லா மக்களுக்காகவும் கொண்டிருந்த மனிதன் ஆவார். இதனால் அவர் உண்மையைப் பேசும்படியான ஓர் வழி சில சமயங்களில் அநேக மக்களைப் புண்படுத்துவாதாக இருந்தாலும் அவ்வாறு பேசுவதற்கு அவரை தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர் சமய சார்பான மாய்மாலக்காரரான தலைவர்களை மாத்திரமல்ல தமது சீஷர்களையுங்கூட அவ்வாறு தாக்கி பேசினார். (மத் 15:12; மாற்கு 14:27; யோவான் 6:60-62 வசனங்களை உதாரணமாகப் பார்க்கவும்.) புதிய ஏற்பாட்டு பேணி காத்தலானது சாந்தமாக முதிர்ச்சியைப் பேணி காத்தல் என்று அர்த்தமாகாது. ஆனால் ஒரு குழந்தையை தேவனுக்குள் முதிர்ச்சி அடைவதற்காக பலம் மிக்க போதனை அதற்கு அவசியமாகிறது.

எபேசியர் 6:4ல் குழந்தைகளுக்காக ஒரு தகப்பன் காட்டும் அன்பை மையப்படுத்தவில்லை. அந்த கருத்தாவது அந்த வசனத்தில் காணப்படவில்லை என்றாலும் அதை அவர் மையமாகக் கருதவில்லை. ஆனால் பவுல் அப்போஸ்தலன் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டிய பொறுப்பைப் பற்றி மையமாக வைத்துச் சொல்கிறார். பவுல் தகப்பன்மார்களுக்கு ஒரு முக்கியமான வித்தியாசத்தை தருகிறார். அவர்கள் தங்கள் பிள்ளைகளை மிகச் சரியாக வளர்க்க வேண்டுமானால் அவர்களுக்கு மிகவும் உறுதியான கண்டிப்புடன் போதிக்க வேண்டுமானால் அவர்கள் அதற்கான இருதயத்தையும் கரங்களையும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.

ஒரு ஆவிக்குரிய தகப்பனுடைய ஊழியமானது பலமிக்கதான போதனையையும் சேர்த்தே உட்கொண்டிருக்கிறது. ஒரு உண்மையான ஆவிக்குரிய தகப்பனார் அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளை வல்லமையாக திருத்தி கொண்டு வருவதற்கு அவர் ஆய்த்தமுள்ளவராக இருக்க வேண்டும். கடுமையானதும் ஆனால் சில சமயங்களில் குழந்தைக்கு துக்கம் உண்டாக்கக் கூடியதானதும் என்னவென்றாலும் குழந்தைக்கு இன்னும் அவசியமானது என்று கருதப்படக்கூடிய போதனையால் குழந்தையின் ஒழுக்க நெறியை உருவாக்க வேண்டும். இந்த எபேசியர் 6:4 வசனத்தில் பவுல் பிரயோகிக்கும் பேணிக் காத்தல் என்பது மென்மையானதான வார்த்தையாக அப்படிபட்டது என்று அநேகமான மக்கள் நினைக்கிறது போல அது மென்மையானதல்ல. இன்றைய நாட்களில் திருச்சபையானது ஆவிக்குரிய தகப்பன்மார்களை நம்பிக்கை இழந்த நிலையில் எதிர்பார்க்கிறது. இந்த தகப்பன்மார்கள் திருச்சபையை பூரணமான முதிர்ச்சி அடைவதற்காக அந்த சபையை ஒழுங்குபடுத்தியும், சீர்திருத்தவும் சிட்சித்தும் அவர்களை அந்த நிலையை அடையச் செய்ய தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**கண்டிப்பு.** கண்டிப்பு என்ற சிட்சை எபேசியர் 6:4ல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளபடி ஏதோ ஒன்றிற்காக கவனத்தைப் பெற மென்மையான சிட்சையாலும், எச்சரிக்கையாலும், உபதேசத்தினாலும் கர்த்தராகிய தேவனிடம் இருந்து பெற்றுக் கொண்டது போல என்று அர்த்தமாகிறது. ஆனால் சொல் வழக்குப்படி அது மனத்துக்குள் ஒன்றை செலுத்தி வைப்பதாகும். இத்தோடு சம்பந்தப்பட்ட வார்த்தையானது வாய்மொழியாக உற்சாகப்படுத்துதல் அல்லது அவசியமானால் வாய் மொழியான கண்டனத்தாலும் மறுப்புரையாலும் என்பது கண்டனம் அல்லது எச்சரிக்கை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க பதமானது noutheto எனப்படும். பின்வரும் அட்டவணையான வேதாகமத்தின் பகுதிகள் இந்த கிரேக்க பதத்தை மொழிபெயர்க்கப்படும் பல வித்தியாசமான வழிகளை எடுத்துக் காட்டுகிறது.

- ✶ அப் 20:21 - இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்கு புத்தி சொல்லி
- ✶ ரோமர் 15:14 - ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல.
- ✶ I கொரி 4:14 - எனக்கு பிரியமான பிள்ளைகள் என்று உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்.
- ✶ கொலோ 3:16 - சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு.
- ✶ I தெச 5:12 - உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து

கண்டிப்பு (அ) சிட்சை என்பது ஒழுங்குமுறையைச் சார்ந்த ஒரு பதமாக ஒரு ஆவிக்குரிய தகப்பனாருடைய முக்கியமானதோர் மனப்பான்மையை வருணிக்கிறது. ஒரு ஆவிக்குரிய தகப்பனார் மட்டுமே ஒரு குழந்தைக்கு அதன் வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான வருங்காலத்துக்கும் அவசியமானவற்றை அறிந்திருப்பவராதலால் அந்த போதனைகளை அந்த குழந்தையின் சிந்தனையில் அவைகளை வைக்க வேண்டும். அதற்காக அடிக்கடி புத்திமதி கூறுவதும் அந்த இலக்கை அடைவதற்கான நீதியாகுதலையும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

எல்லா ஆவிக்குரிய தகப்பன்மார்களும் கர்த்தருக்குள் சிட்சை செய்வதைத் தீர்மானஞ் செய்ய வேண்டும். தேவப் பிள்ளைகளுக்கு காலா காலங்களில் முதிர்ச்சியை அடைவதற்கு வலிமையான கண்டிப்பு அவசியமாகும். இக்காலத்தில் அநேக உபாத்தியாயர்கள் ஜனங்களைத் திருப்திபடுத்துவதற்கும் அவர்களைத் திரும்ப வரும்படி செய்வதற்காகவும் உள்ளவைகளையே மட்டும் அவர்களுக்குப் போதிக்கும்படி விரும்புவார்கள். இது எப்பொழுதுமே மக்களுக்கு அவசியமாக இருப்பதில்லை. ஒரு ஆவிக்குரிய தந்தையானவர் தேவ பிள்ளைகளுக்கு குறிப்பாகத் தேவையானவற்றை தெரிந்து அறிந்திருக்க வேண்டும். வலிமையான புத்திமதியாலும் போதனையாலும் அதை அவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும்.

**ஒரு சமநிலையான தந்தையின் இருதயம்**

இந்த படிப்பில் எடுத்துக்காட்டியபடி ஒவ்வொரு தலைவரும் ஒரு ஆவிக்குரிய தகப்பனாருடைய இருதயத்தின் மனப்பான்மைகளை சமநிலையில் வைத்திருக்க வேண்டும். பேணி பாதுகாத்தலும் சிட்சையும் ஆகியவை சாந்தம் போஷாக்கு காத்து ஆதரித்தல் என்பவற்றோடு சமநிலையில் இருக்க வேண்டும். பேணிப் பாதுகாத்தல் சிட்சை என்பவை வல்லமையான வார்த்தைகளாக ஒரு தலைவரின் ஊழியமாகிய தேவ பிள்ளைகளை சீர்திருத்தம் செய்தலும் ஒழுங்கு முறையில் நடத்துதலுமாகிய ஊழியத்தை விவரிப்பனவாகும். இவைகள் அவசியமானவைகள் தான். ஆனால் அவைகள் முற்றிலுமாக முழுமையானவைகள் அல்ல. குறைவுள்ளவைகள். கர்த்தருடைய ஜனங்கள் கண்டனத்தையும் எச்சரிக்கையையும் பேசுகிற ஒரு தலைவருக்கு பிரதியுத்தரம் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் அவர் ஒழுங்குமுறையைக் கடைபிடிப்பதில் ஒரு பக்கம் சாய்ந்தவராக தமது இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டுள்ளதால் தேவனுடைய தலைவர்கள் மக்களுடன் சேர்ந்து அழுது கண்ணீர் சிந்த வேண்டும். அவர்கள் தங்களுடைய பாரங்களை உணர்ந்தவர்களாய் கனமான இருதயத்துடன் இருந்து செயலூக்கமாக ஊழியம் செய்ய வேண்டியதாகும். சாந்தம், அன்பு, இரக்கம், அன்பான வரவேற்பும் ஒழுங்கோடும் உடன் போக வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஜீவியம் இந்த விதமான மனப்பான்மைகள் அனைத்தையும் எடுத்துக் காட்டுகிறது. அவருடைய ஊழியமான வல்லமை மிக்கதொன்றாக தனிப்பட்ட விதமாக கண்டனம், அடி கொடுத்தல், ஒழுங்கு என்பவைகளை கொண்டதாக இருக்க வில்லை. இங்கே கொடுக்கப்பட்டுள்ள சமன்பாடுகளான இந்த சமநிலையை தகப்பனுடைய மனப்பான்மைகள் அவருடைய ஊழியத்தில் கிரியை செய்வதிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல சமநிலையான மனப்பான்மை பகுதிகளான ஒவ்வொன்றும் இந்த அட்டவணையில் அதை முற்றுப் பெற்ற முழுமையான தாக்குவதற்கு அவை இரண்டும் சேர்ந்தே போக வேண்டும்.

| **பேணி பாதுகாக்க மற்றும் எச்சரிக்க** | **அன்பு காட்ட மற்றும் ஆதரிக்க** |
|---|---|
| # ஒழுங்கு | # பொறுப்பு |
| அவனை சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புச் செய்கிறேன். (I கொரி 5:1-8) | கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினாலே உங்களைப் பெற்றேன். (I கொரி 4:15) |
| # கண்டனம் செய்ய | # அன்பு காட்ட |
| உங்களை புகழாமல். (I கொரி 11:17) | உங்கள் மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும் படிக்கு. (II கொரி 2:4) |
| # திருத்தும் நோக்கத்துடன் தண்டி | # உறவுத் தொடர்புகள் |
| நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப் படுத்தியிருந்தும். (II கொரி 7:8) | பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல் உங்களுக்குச் சொல்லுகிறேன். (II கொரி 6:11-13) |
| # சீர்திருத்தம் செய்தல் | # சாந்தமாயிருத்தல் |
| நான் மறுபடியும் வந்தால் தப்பவிட மாட்டேன். (II கொரி 13:1-2) | பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். (II கொரி 10:1) |
| # நேருக்கு நேரான | # ஒப்புரவாகுதல் |
| புத்தியில்லாத கலாத்தியரே, உங்களை மயக்கினவன் யார்? (கலா 3:1) | ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனை சீர் பொருந்தப் பண்ணுங்கள். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கொள்ளுங்கள். (கலா. 6:1-2) |

| # பொறுப்பு | # மனதுருக்கம் |
|---|---|
| நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம். (பிலிப் 1:24) | இப்பொழுது கண்ணீரோடே சொல்லுகிறேன். (பிலிப் 3:18) |

கீழே கொடுக்கப்பட்டுள்ள சமநிலைக்கான எடுத்துக்காட்டு ஒழுங்கு நெறிக்கும் நேசத்திற்கும் உள்ள சமநிலையை ஒவ்வொரு தலைவரும் தமது ஊழியத்தில் கட்டாயமாக நிலை நிறுத்த வேண்டும். இவ்வாறு விருத்தி செய்யப்பட்டால் ஒரு தலைவருடைய ஜீவியத்தின் முக்கியமான இரு பக்கங்களும் ஒருங்கே திருச்சபையின் சமநிலையான வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்கிறது.

**ஒரு சமநிலையான தந்தையின் இருதயம்**

| | |
|---|---|
| 1. பேணி பாதுகாத்துக் கொள் | 1. அன்பு |
| 2. கண்டிப்பு | 2. சாந்தம் |
| 3. போதனை | 3. போஷாக்கு |
| 4. சீர்திருத்தம் | 4. மன்னிப்பு |
| 5. சிட்சை செய்து தண்டனை செய் | 5. பொறுமை |
| 6. அதிகாரத்துவம் | 6. பேணி பாதுகாப்பு தாய் போல் |
| 7. கண்டனம் | 7. இரக்கம் கொண்ட பண்பு |
| 8. எச்சரிக்கை | 8. பாராட்டுதல் |
| 9. உண்மை | 9. இரக்கம் |
| 10. நியாயந்தீர்ப்பு | 10. நீதி வழங்குதல் |

ஆவிக்குரிய தந்தையின் இருதயமானது சாதாரணமாக வயது வந்த மூத்தவர்களிலே காணக்கிடக்கின்றது. அதன் குணாதிசயமான பண்புகளை அபிவிருத்தி செய்வதற்கு வயதும் அனுபவமும் தேவையாய் இருக்கிறது. ஒரு இளவயதினனான மனிதன் குறிப்பிட்ட சில மனப்பான்மைகளையும் கோட்பாடுகளையும் தனது ஜீவியத்தில் ஆரம்ப காலங்களில் பயிற்றுவித்துக் கொள்வதால் மாத்திரம் பெற்றுக் கொள்ள முடிகிறது.

நமது நாட்களில், அநேக குழுக்கள் ஒரு தலைவருக்கு உயர் நிலை கல்வியும் சமூகத்திற்காக ஆயத்தத்தையுமே வற்புறுத்துகிறது. அந்த வேதாகமம் ஆனது, என்னவென்றாலும் தலைவரின் நன்னடத்தைக்கும் தலைவராக சமூக ஆயத்தம் செய்யும் நோக்கமுடையத்தாயிருத்தலுக்கும் அதிகமான அழுத்தம் தருகிறது. ஒரு மனிதனை அவனுடைய இருதயத்தை தயார் படுத்தாமலே அந்த மனுஷனுடைய அறிவுத்திறனை ஆயத்தப்படுத்தி விருத்தி செய்வதால் ஊழியத்திற்கு அவரை ஆயத்தம் செய்ய முடியும். தேவ ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக முதிர்ச்சி அடையும்படியாக உதவி செய்ய வாஞ்சிக்கும் நபர் ஆவிக்குரிய தகப்பனாருடைய இருதய மனப்பான்மைகளை அபிவிருத்தி செய்வதற்கு தேவனுடைய உதவியை நாடுவார்.

**தலைவரும் வேலைக்காரனுடைய இருதயமும்**

ஒரு தலைவர் அநேக மக்கள் சொல்லக் கூடிய பிரகாரமாக வழிகாட்டுகிறவராக, நிர்வாகம் செய்கிறவராக ஒருங்கிணைப்பவராக, தீர்மானங்கள் எடுத்துக் கொண்டு, பொறுப்புகளை ஒப்படைப்பு செய்பவராக வருங்காலத்திற்குரிய திட்டங்களையும் உடையவராக இருப்பார். இந்த சொல் பொருள் விளக்கமானது உண்மையான தலைமைத்துவத்திற்குரிய இன்றியமையாத ஒரு பாகத்தில் குறைவுபடுகிறது. அதாவது ஒரு தலைவராகப்பட்டவர் ஊழியம் செய்யும் நபராகவே இருப்பார். <u>தேவனுடைய மக்களின் ஒரு தலைவர் உள்ளான மனப்பான்மைகளையும் உள் நோக்கத்தையும் கட்டாயமாகக் கொண்டிருந்து ஒரு வேலைக்காரனுடைய வெளி ஊழியத்தையும் பெற்றிருக்க வேண்டும்.</u>

**எபிரேய விளக்கங்கள்.** பழைய ஏற்பாட்டில் பல எபிரேய வார்த்தைகள் வேலைக்காரன் என்று மொழி பெயர்க்கிறது. ஒவ்வொன்றும் ஒரு வேலைக்காரனுடைய இருதயத்தைப் பற்றியதான ஒரு குறிப்பிட்ட பகுதியான உண்மையைத் தருகிறது.

Ebed என்பது வேலைக்காரன் என்பதற்க முதல் எபிரேய பதமாகும். Ebed என்பது பொதுவாக ஒரு அடிமையையோ அல்லது வேலைக்காரனையோ பொதுவாகக் குறிப்பதாகும். இது பல பொறுத்தமான வகையில் பிரயோகிக்கப்பட்டும் அவை எல்லாமே தலைமைத்துவ ஊழியம் என்பதற்கு சொற்பொருள் விளக்கமாக பொறுத்தமாக பயன்படுத்தப்படும். Ebed என்பது ஒரு நபருக்கு அதாவது மற்றொரு நபருக்கு முற்றிலுமாக அவர் வசமே இருக்கும்படியானவர் என்றும் கூறும். (ஆதி 24:1-67) தேவனுடைய பிள்ளைகளின் தலைவர் ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலுமாக அவர் வசமாயும் யாருக்கு ஊழியம் செய்யும்படி அவர் அழைக்கிறாரோ அவர்கள் வசமாயும் இருக்க வேண்டும். ஒரு எஜமானனுக்கு ஊழியம் செய்யும் ஒரு நபருங்கூட Ebed என்று வர்ணிக்கப்படுகிறார். (உபா 15:12-18) அதே போன்ற வழியில் ஒரு தலைவர் அவருடைய எஜமானானாகிய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கும் ஊழியம் செய்ய வேண்டும். அவருடைய பணி அனைத்தும் கிறிஸ்துவுக்கு உழைப்பாக அர்ப்பணிக்கப்பட்டும் மேலும் அவர் யாருக்கு ஊழியம் செய்யும்படி அழைக்கிறாரோ அவர்களுக்கும் பணி செய்ய வேண்டும்.

இந்த வார்த்தையானது மேலும் தன்னுடைய தனிப்பட்ட எல்லா உரிமைகளையும் ஒரு எஜமானுக்கு ஊழியம் செய்யும்படியாக கொடுத்து விட ஒரு அடிமையையும் குறிக்கும். (உபா 15:12-18) ஒரு திருச்சபை தலைவர் தன்னுடைய தனிப்பட்ட உரிமைகள் அனைத்தையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கென்றும் அவர் யாருக்கு ஊழியம் செய்யும்படி அழைக்கப்படுகிறார்களோ அவர்களுக்கும் ஆக அர்ப்பணித்து விட வேண்டும். ஒரு ebed ஒரு இராஜாவின் ஊழியக்காரனாக பணிபுரியும் அடிமையும் ஆவான். (I இராஜா 1:9-47) ஒரு கிறிஸ்தவ தலைவர் இந்த உலகத்து இராஜாக்களுக்கு மேலானவரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிமையாகவும் இருக்க வேண்டும். முடிவாக இந்த வார்த்தை கர்த்தருடைய ஆலய பிரகாரத்தில் தரித்திருந்து ஊழியம் செய்யும் ஒரு நபரையும் குறிப்பதாகும். (I சாமு 3:9) ஒரு கிறிஸ்தவ தலைவர் தேவனுடைய உண்மையான ஆலயமாகிய திருச்சபையை பேணி பாதுகாக்க வேண்டும். தேவனை நோக்கிச் செய்யும் தம்முடைய ஆராதனையாலும் தேவனுடைய ஜனங்களுக்கு ஆற்றும் ஊழியத்தினாலும் அவ்வாறு செய்ய வேண்டும். ebed என்பவரைப் பற்றிப் படிப்பதற்கு பின்வரும் வேதாகமத்தின் பகுதிகளைப் பார்க்கவும். (ஆதி 26:15-24 உம் 32:4-5; எண் 12:7; உபா 7:8; யோசுவா 1:1-2,13,15; 24:29; I சாமு 3:9-10; 29:3; ஏசாயா 20:3; உடன் 49:3; எரேமியா 33:22; யோவேல் 9:29; சகரியா 1:6; 3:8)

‘Abad’ என்பது வேலைக்காரன் என்பதற்கு மற்றொரு எபிரேய வார்த்தையாகும். abad பொதுவாக வேலை செய்யும்படி என்ற அர்த்தத்திலும் வேறுபட்ட விளக்கத்தில் பணிபுரிய என்றும் அர்த்தப்படும். இந்த வார்த்தைக்கு பலவேறுபட்ட பிரயோகத்தில் திருச்சபை தலைமைத்துவத்தை சொல்பொருள் விளக்கம் செய்கிறது. நிலத்தை உழுது பண்படுத்தும் நபர் abad ஆவார். (ஆதி 2:5; 3:23) ஒரு தேவ மக்களுடைய தலைவர் அவர்களுடைய இருதயமாகிய தரிசு நிலத்தை உடைத்து நொறுக்கி, தேவனுடைய வார்த்தையாகிய விதையை அவர்கள் பெற்றுக் கொள்ளும்படியாக அப்படி செய்ய வேண்டும். இந்த வார்த்தை மேலும் ஒரு நபர் தோட்டத்தை திருத்தி பாதுகாப்பவருக்குங்கூட பொருந்துவதாகும். (ஆதி 2:15) ஒரு திருச்சபை தலைவர் தேவனுடைய திராட்சத் தோட்டத்தை கிளை நறுக்கி திருத்தி இயேசு கிறிஸ்துவின் ஆலயமாகிய சபையை சீர்படுத்த வேண்டும். இந்த பெயரான abad ஜனங்களுக்கு ஊழியம் செய்கிற ஆசாரியனையும் குறிக்கும். (எண் 18:7,23) ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவனையே தத்தம் செய்து பலியான சேவையாக தேவன் யாருக்கு ஊழியம் செய்யும்படி அழைக்கிறாரோ அவர்களுக்குப் பணி புரிய வேண்டும். இதற்கான மேற்கொண்ட abad என்பதைப் பற்றிய படிப்புக்கு பின்வரும் வேத பகுதிகளைப் பார்க்கவும். (யாத் 23:25; உபா 4:19,28; யோசுவா 22:5,27; I சாமு 12:14,20; சங் 22:20; 72:1; யோவேல் 2:22-23; எரேமியா 34:14; எசேக் 29:20; 36:9; மல்கியா 3:18)

Sakiyr இது வேலைக்காரன் என்பதற்கு மூன்றாவது எபிரெய பதமாகும். sakiyr என்பது பொதுவாக தினசரி கூலிக்காகவோ அல்லது ஆண்டு வருமானத்திற்காக பணிபுரியும் நபரைக் குறிக்கும். இந்த வார்த்தைக்கு பலவேறுபட்ட பயனுள்ள பிரயோகமாக திருச்சபை தலைமைத்துவத்தின் நிபந்தனைகளை விளக்கம் செய்வதாகும். இந்த sakiyr என்பவன் கூலி பொருத்தப்பட்ட வேலைக்காரன் அவன் தன் எஜமானுடைய குடும்பத்தோடு பஸ்காவை ஆசரிக்க முடியாது. (யாத் 12:3-45) ஒரு திருச்சபையின் தலைவர் கூலி பொறுத்தப்பட்ட பணிவிடை என்ற மனப்பான்மையை மறந்து விட வேண்டும். உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவை புசிக்க வேண்டுமானால் அவன்

விசுவாசத்தால் எஜமானனுக்கு அன்பு - அடிமை என்ற உறவுத் தொடர்புக்குட்பட்டு கூலி பொருத்தப்படட வேலைக்காரனாக இருப்பதை விட முன்னதாக இருக்க வேண்டும். கூலி பொருத்தப்பட்ட வாடகை வேலைக்காரன் அன்பு - அடிமையாக இருக்க மாட்டான். (லேவி 25:39-42) ஒரு கிறிஸ்தவ தலைவர் தன் ஜீவியத்தில் ஒரு குறிப்பிட்ட மையத்திற்கு தனக்கு உரிமைகளை சட்ட ரீதியாக பாதுகாக்கும் உரிமைகளைத் தத்தம் செய்து விட வேண்டும். அவர் தனது தனிப்பட்ட உறவுத் தொடர்பு முறையில் தேவனுடன் இயேசு கிறிஸ்து மூலமாக விசுவாசத்தில் இடைபட்டு, அவருடைய முற்றிலுமான சுயத்தை கிறிஸ்துவுக்காக எங்கு மாற்றுதலாக தரப்பட வேண்டுமோ அங்கு தரப்பட வேண்டும். ஒரு sakiyr என்பவன் அன்பு, அடிமை பெறும் மதிப்பீட்டில் பாதிகூட பெறும் மதிப்பாகப் பெற மாட்டான். (உபா 15:18) ஒரு ஊழியமும் செயல்பாடுகளும் தேவனுடைய அன்பினால் நோக்க ஊக்கம் பெறாவிட்டால் அன்பின் உறவுத் தொடர்பால் நோக்க ஊக்கம் பெற்றவர்களின் பெறும் மதிப்பீட்டில் பாதி கூட பெற மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு sakiyr தற்காலிக வாசம் செய்கிறவனாக அந்த வீட்டில் அடிமையாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவன் ஆவான். (லேவி 25:6) ஆகவே திருச்சபை தலைவர் ஒரு காலத்தில் இயேசு கிறிஸ்து அவரை தமது சொந்த இரத்தத்தால் விலைக்கு வாங்கி தேவனுடைய வீட்டில் ஸ்திரமாக வைப்பதற்கு முன்னால் அவர் ஒரு அலைந்து திரிகிற அந்நியனாக இருந்தார் என்பதை கண்டறிந்து கொள்ள வேண்டும். இந்த sakiyr என்ற பதத்தை உபயோகிக்கும் பிற வேத பகுதிகளாவன யாத் 22:14-15; லேவி 19:13; 22:10; 25:40,50,53)

sharath என்பது வேலைக்காரன் என்பதைக் குறிக்கும் நாலாவது வார்த்தையாகும். இது பொதுவாக இழிவாக குறிப்பிடத்தக்கவை அல்லாத பணிபுரியும் ஒரு நபர் என்பதைக் குறிக்கும். ஒரு ஆசாரியன் தன்னுடைய ஆசாரிய வகுப்பு பதவியில் ஊழியம் செய்கிற அல்லது வேலை செய்கிற ஆசாரியனைக் குறிக்கும். (யாத் 28:35-43) ஒரு திருச்சபையின் தலைவர் பார்வைக்கு முக்கியமானவர் அல்ல என்று தோற்ற பிரமை அளிக்கக் கூடிய வேலைகளை செய்து அவர் தன்னை ஒரு வேலைக்காரன் - ஆசாரியன் என்ற முறையில் தன் பங்கை நிறைவேற்ற வேண்டும். இந்த பதமானது தொடர்ந்து உடன்படிக்கை பெட்டியின் முன்பாக ஊழியம் செய்யும் ஒரு ஆசாரியனுக்கும் பொருந்தக் கூடியது. (I நாளா 16:37) ஒரு தலைவரானவர் தொடர்ந்து பணிக்காக வல்லமையைப் பெற்றுக் கொள்ள கர்த்தருடைய சந்நிதானத்தில் துதி ஆராதனையுடன் காத்திருந்து பெற்றுக் கொள்ளும்படி பொறுப்பானவராக கருதப்படுகிறார். யோசுவா ஒரு sharath ஆக மோசேக்கு இருந்தான். (யாத் 24:13; எண் 11:28) ஒரு தேவனுடைய ஜனங்களின் தலைவருக்கு தாம் அதிகாரம் பெற்றவராக சரியான அதிகாரத்துவத்திற்குக் கீழ் இருந்து தனக்கு மேலுள்ளவர்களுக்கு வேலைக்காரனுடைய இருதயத்தோடு பணி செய்யும் பொழுது மட்டுமே அதிகாரத்துவத்தை உடையவராக இருப்பார்.

**கிரேக்க அர்த்தங்கள்.** புதிய ஏற்பாட்டில் வேலைக்காரன் என்பதற்கு கிரேக்க பதமான doulos என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வேலைக்காரனுடைய இருதயத்தைப் பற்றி எழுத்து வடிவத்தில் நல்லதோர் படத்தைப் பிடித்துக் காட்டுகிறது. பொதுவாக doulos அடிமைத்தனத்தைக் குறிக்கிறது. ஆனால் அதிகமான சாதாரணமாக ஒரு அடிமை தன் சுய விருப்பத்தோடு ஒரு எஜமானனுக்கு ஒரு சட்ட பூர்வமான கடமை முறையால் தன்னை அடிமைப்படுத்திக் கொண்டவன் என்பதைக் குறிக்கிறது. பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய பல நிருபங்களில் இந்த வார்த்தையை உபயோகித்து தன்னைப் பற்றி வருணித்துக் கொள்கிறான்.

| | |
|---|---|
| ரோமர் 1:1 | இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய (doulos) பவுல். |
| பிலிப்பியர் 1:1 | இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய (doulos) பவுல். |
| தீத்து 1:1 | தேவனுடைய ஊழியக்காரனாகிய (doulos) பவுல். |

**அன்பின் அடிமை**

பழைய ஏற்பாடானது உபாகமம் 15:1-23ல் கூறப்படுகிற கோட்பாட்டுக்கான எபிரேய பின்புறக் காட்சியைத் தருகிறது. ஒரு எஜமானன் ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டிய நேரம் வந்தால் ஆறாண்டு கால சேவைக்கு பின்னர் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் அந்த அடிமைக்கு இரண்டு தேர்ந்தெடுக்கும் உரிமைகள் உண்டு. தன் எஜமானனுக்கு எந்த விதமான சட்டத்தின் கட்டுப்பாடுமின்றி அந்த அடிமை பூரணமான சுதந்திரம் பெற்றுக் கொள்ளலாம். ஆனாலும் அவன்

தனது எஜமானனது வீட்டில் அன்பு - அடிமையாகவும் இருக்கலாம். அவன் தன் எஜமானனோடு தங்கியிருக்க தேர்வு செய்து கொண்டால் அவன் தன் எஜமானனுக்கு ஒரு கடனை அடைக்கவோ அல்லது சட்ட பூர்வமான நிபந்தனையுடன் ஊழியம் செய்யும் அடிமைகளை விட தன் எஜமானனுக்கு அவன் விலையேறப் பெற்றவன். அந்த வேலைக்காரன் ஒரு அன்பு - அடிமை ஆக இருப்பவன். தனது எஜமானனிடம் கூறிய தன் சாராம்சம் ஆவது, ''நான் உமது அடிமையாக இருப்பது எனக்கு நல்லது. நான் உம்மையும் உமது வீட்டாரையும் கனப்படுத்துவதால் என்னுடைய ஆழமான அன்பின் அடிப்படையில் நாம் உமக்கு என்றென்றும் ஊழியம் செய்வேன்.''

பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இந்த விதமான ஊழியக்காரனாக இருந்தான். அவன் எந்த ஒரு திருச்சபைத் தலைவரையும் போல அவனும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கிரயமாகப் பெறப்பட்டவன். அவன் இந்த கூலி பொருத்திக் கொண்ட மனப்பான்மையுடன் ஊழியம் செய்வதால் அந்தக் கடனை எக்காலத்திலும் திரும்பத் தர முடியாது என்பதை உணர்ந்திருந்தான். அவன் ஊழியமும் சேவையும் விருப்பத்துடன் இருப்பதினாலும் அன்பினாலும் முற்றிலும் சுத்தமாக ஊக்கப்படுத்தப்பட்டு எங்கு அவ்வாறு செயல்படுகிறதோ அதைத் தவிர குறைந்தது வேறொன்றையும் அவன் வாஞ்சிக்கவில்லை.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் செயலூக்கமான தலைவர்களாக இருக்கிறவர்கள் அவர் பேரிலுள்ள அன்பின் வாஞ்சையால் கர்த்தருக்கு ஊழியம் செய்தவர்களே ஆவார்கள். அத்தகைய தலைவர்கள் பணத்திற்காகவோ, புகழுக்காகவோ, பதவிக்காகவோ, அதிகாரத்திற்காகவோ அல்லது சுய அனுகூலத்திற்காகவோ ஊழியம் செய்பவர்கள் அல்ல. அவர்களுடைய ஊழியமானது நீண்ட கால அழுத்தத்தையோ அல்லது தியாகத்தையோ வேண்டுவதாக இருந்தாலும் அவ்வாறு கிரியை செய்தனர். வேலைக்காரன் இருதயத்தையுடைய தலைவர் தன்னுடைய உறவுத் தொடர்பில் கர்த்தருடைய பாதுகாப்பில் இருப்பாரானால் அவர் தன்னுடைய ஊழியத்தை நேர்மையாகவே சுயமான புகழுக்காகவோ அல்லது இலாபத்திற்காகவோ பணி செய்தார் என்று நிரூபிக்க அவசியமில்லை.

# ஒரு தலைவருடைய இருதயம்

<u>பத்து கோட்பாடுகள் / நிபந்தனைகள் செயலூக்கமான தலைமைத்துவத்திற்காக</u>

| | | |
|---|---|---|
| 1. | ஆண் மகனின் முழு வளர்ச்சி பருவம் | தேவன் முதலாவதாக மனிதனை உண்டாக்குகிறார். பின்னர் அவனுடைய ஊழியம் உண்டாக்கப்படுகிறது. |
| 2. | ஊழியம் | வல்லமையும் வெளிப்படையாகக் காட்டப்படுதல், அபிஷேகம், கனி கொடுத்தல் நேரிடைப்பட்டவை |
| 3. | தூது | சமநிலைப்பட்டது, வேதாகமத்தின் படி அன்பில் சத்தியத்தைப் பேசுதல். |
| 4. | முதிர்ச்சி | நல்ல உறவுத் தொடர்புகள், நல்லொழுக்கம், உண்மையாயிருத்தல் ஒப்புக் கொள்ளப்பட்டது. |
| 5. | திருமணம் | அவரது திருமணம் கிறிஸ்துவையும் அவருடைய திருச்சபையையும் பிரதி பலிக்க வேண்டும். |
| 6. | நடைமுறைகள் | நீதியாகுதல், நன்னெறிப்படி, உண்மை, முழு எண், கௌரவமுடைய. |
| 7. | மரியாதை பண்பு | தன்னலமற்ற, அன்புள்ள, பொறுமையுள்ள, செயலாற்றும் திறமையுள்ள. |
| 8. | பணம் | பணத்தின் மேல் / செல்வம் லஞ்சம் பெறுதல் பேராசை. |
| 9. | ஒழுக்கப் பண்புகள் | தளரா உழைப்பு - குற்றமற்ற வெளியரங்கமான உறவுத் தொடர்புகள். |
| 10. | நோக்கங்கள் | சேவை செய்யவா அல்லது அதிகாரம் செலுத்தவா? தேவனுக்காகவா அல்லது பேராசைக்கா? |

<u>ஒரு தலைவருடைய உண்மையான இருதயமானது:</u>

– உங்களுக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்காக பெரிதானதோர் பொறுப்புணர்வு.
– சாந்தமான ஆவியோடு மக்களை வழி நடத்தி முன் செல்லுதல்.
– உமது ஜனங்களுக்காக அபரிதமான அன்பும் கரிசனையுமுள்ள மேய்ப்பரா அல்லது கூலி பொருத்தப்பட்டவரா.
– அவர்களுடைய தவறுகளையும் தோல்விகளையும் அவர்களோடு அவர்களுக்காக எடுத்துச் சொல்லுதல்.
– அவர்களுக்கு வேலைக்காரனாக இருக்க விருப்ப சித்தமுள்ளவனாகவும் உன்னுடைய ஜீவனை அவர்களுக்காக கொடுக்கவும் வேண்டும்.
– இயேசுவை பின்பற்றிச் செல்லவும் பிறரையும் அதே போல் பின்பற்றி வரவும் சவாலாக இருக்க வேண்டும்.

<u>தலைமைத்துவம்:</u>

– இதனால் கர்த்தருடன் உனக்கு நல்ல தொடர்பு இருக்கிறது என்பதற்கு அர்த்தம் இல்லை.
– முதலாவதாக நீ அங்கிகரீக்கப்பட்டு பின்பு ஒப்புக் கொள்ளப்பட்டும் இறுதியாக ஏற்றுக் கொள்ளப் படவும் வேண்டும்.

– மக்களிடமிருந்து வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படாமல் ஆனால் தேவனாலும் மனுஷராலும் கொடுக்கப்பட வேண்டும்.
– அடக்கு முறையாலும் கொடுங் கோலாட்சியாலும் பிறர் மீது அதிகாரப் பிரபுவாக இருக்காமல் இருக்க வேண்டும்.
– வன்முறையாலும் யுக்தி உத்திகளாலும் பிறரைக் கீழ்படியுமாறு கட்டாயப்படுத்தாமலும் இருக்கவும்.
– பயத்தினால் கீழ்படிதலைப் பெறுகிறபொழுது அது உண்மையாக இருக்க மாட்டாது.

- <u>அதிகாரத்துவம்</u>
  ஒரு தலைவரின் ஜீவியத்தில் தேவனுடைய அதிகாரம் குறைவாக இருக்கும் பொழுது தலைவரானவர் பாதுகாப்பு அற்றவரவராகவும், ஒரு தலைவராக தன்னுடைய ஸ்தானத்தை யுக்தி தந்திரங்களால் பாதுகாத்து கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் நோக்கத்திற்கு உள்ளாவார்.

- <u>அன்பு</u>
  இது ஒரு தலைவருக்கு மிகவும் முக்கியமானது. அவர் தன்னைத் தானே நேசித்துக் கொள்ள முடியாத பொழுது அதன் விளைவாக பிறரையும் அவர் நேசித்துக் கொள்ள வேண்டிய பிரகாரம் அவர்களை நேசிக்க முடியாது.

- <u>பலாபலன்</u>
  இதன் விளைவாக இந்த மாதிரியான தலைவருக்கு பலர் பயப்படுவார்கள். ஏனென்றால் அவர்களுடைய முறையான ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான அன்பு, ஒப்புக் கொள்ளுதல், ஆதரவளித்தல், பாதுகாப்பு இவைகளைக் கொடுக்க முடியாது.

- மேய்ப்பன் எப்படியோ அதே வண்ணம் ஆடுகளும் இருக்கும். இந்த ஆடுகள் பின்னர் தலைவர்கள் ஆக ஆகும் பொழுது அவர்கள் வழி நடத்தப்பட்டபடியே அவர்களும் வழி நடத்துவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு உதாரணம் வேறு எதுவும் இல்லை. தேவனால் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை துர்பிரயோகம் செய்ததால் சந்ததி சந்ததியாக பெண்கள், குழந்தைகள், ஜனங்கள் கோத்திரங்கள் ஆகியவை இந்த அதிகாரப் பிரியர்களான தலைவர்களின் கரங்களால் எவ்வாறு துன்பப்பட்டனர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நாமும் இயேசு ஜனங்களை நடத்தின வழியைக் கற்றுக் கொண்டு மற்றவர்களை அவர் எவ்வாறு நாம் நடத்த வேண்டும் என்று விரும்புகிறார் என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

<u>தலைமைத்துவத்தை நிர்ணயிக்கும் அளவைகள்:</u>

1. <u>ஒரு தலைவர்</u> தன்னுடைய பாதுகாப்பை விட கர்த்தருடன் இருக்கும் உறவுத் தொடர்பைக் கண்டறிந்து கொண்டு தலைவராக அந்தஸ்த்தில் இருப்பதை விடவும் அறிந்து கொள்ள வேண்டும் அல்லாவிடில் தன்னுடைய தலைமைத்துவத்தைப் பற்றி கூறப்படும் விமரிசனத்தை சரியானபடி எதிர் நோக்க முடியாதவராக ஆகிவிடுவார்.

2. <u>ஒரு தலைவர்</u> தனக்குள் தனது ஜனங்களுக்காகவும் அவர்கள் கொள்கைக்காகவும் திறந்ததோர் சிந்தனையை உண்டாக்கிக் கொண்டு அவர்களோடு உடன்பாடு இல்லாவிட்டாலுங் கூட அவர்கள் சொல்வதை மனமாறக் கூறப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. <u>ஒரு தலைவர்</u> தனது குறைபாடுகளை உணர்ந்து கொண்டு, நன்றியறிதலானதோர் மனப்பான்மையை நமக்கு புதிய நூதனமான கருத்துக்களை நம்முடைய கருத்துக்களோடு தருகிறவர்களுக்காக உண்டாக்கிக் கொண்டு அவர்களுடன் ஞானமுள்ள தீர்மானங்களை எடுத்துக் கொள்ளக் கூடிய பிரகாரம் நடக்க வேண்டும்.

4. <u>ஒரு தலைவர்</u> தேவன் ஒரு குழந்தையின் மூலமாக தன்னுடன் பேசக் கூடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் மூலமாக கிரியை செய்த தேவனுடைய வசனத்தையும் அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. <u>ஒரு தலைவரானவர்</u> தன்னுடைய இலக்குகளை விட தன்னுடைய ஜனங்கள் மிகவும் முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மக்கள் அவருடைய இலக்காக இருப்பதால் அவர் இலக்கை நோக்கியதோர் மனப் போக்கை விட ஜனங்கள் மேல் நோக்குடைய மனப்போக்கை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்.

6. <u>ஒரு தலைவர்</u> அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் இருப்பவர்களிடமிருந்து கீழ்படிதலை வேண்டி பெறுவதற்கு முன்னதாக பொறுப்புள்ளதும் அன்பு காட்டுவதும் உதவி செய்வதும் ஊழியம் செய்யுமானதோர் மனப்பான்மையை தனக்குள் இருந்தே வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

7. <u>ஒரு தலைவர்</u> பிறரிடமிருந்து என்ன எதிர் பார்க்கிறார் என்று அவர்களுக்குப் பிரசங்கம் செய்யும் முன்னர் தனக்குத் தானே தேவன் அவரிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பதைப் பிரசங்கித்துக் கொள்ள வேண்டும்.

8. <u>ஒரு தலைவர்</u> கர்த்தருக்குள் வளரும்படியாக அவருடைய மக்களுக்கான சந்தர்ப்பங்களையும் சவால்களையும் படைத்துக் கொள்ள வேண்டும். அது அவர்களை பொறுப்புள்ளவர்களாக சுயமரியாதை உள்ளவர்களாக கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைய முன்னேற்றம் பெறவும் உதவும்.

9. <u>ஒரு தலைவர்</u> தனது மக்களுக்கு தன் மேல் சார்ந்திருப்பதை விட தேவன் பேரில் சார்ந்திருக்க வேண்டும் என்று போதிக்க வேண்டும். கடைசியாக அவர் தன்னை தேவைக்கு மிஞ்சி அதிகமானவராக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

10. <u>ஒரு தலைவர்</u> தனது குழுவுடன் தன்னை ஒன்றுபடுத்தி அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். அவர் மத போதகர்களுக்கும் சாதாரண சபை மக்களுக்கும் இடையே தூரத்தை உண்டாக்கிக் கொள்ளக் கூடாது. இதுவும் அவர் தலைவர் என்ற பதவியில் இருக்கும் காரணத்தினால் தான். அவர் மக்களை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை விட அவர்கள் யாராக இருக்கிறார்கள் என்பதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

<u>**முடிவுரை:**</u> நாம் இந்த தலைமைத்துவ குணச் சிறப்பியல்புகளை விருத்தி செய்து கொள்ளும் பொழுது அது மக்களை மிகவும் எளிதாக அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளச் செய்யும். அவர்கள் நம்மில் கிறிஸ்துவைப் பார்ப்பதால் நம்மைப் பின்பற்றி வரும்படியாக விரும்புவார்கள்.

# ஒரு தலைவரின் சுய கணிப்புக்கான சில வினாக்கள்

பின்வரும் அட்டவணையான கேள்விகள் ஒரு மேய்ப்பன் அல்லது சாத்தியக் கூறு பெற்ற தலைவருக்கு தன்னுடைய சொந்த நல்லொழுக்க முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய உதவக் கூடுமான வழியை உண்டாக்கிக் கொடுக்கும். இன்றைய நாட்களில் தேவன் என்னுடைய தலைமைத்துவத்தில் என்னத்தை எதிர்பார்க்கிறார்? ஒரு சமநிலை பெற்ற தலைவராக இருப்பதற்கு என்ன விதமான விசேஷித்த பண்புகளை நான் நெருக்கமாக அணுக வேண்டும்? நான் ஒரு ஆவிக்குரிய மனிதனா? நீ இந்த பின்வரும் கேள்விகளை உண்மையாகவே உன்னுடைய நல்லொழுக்கத்தைக் குறித்து பிரதிபலிக்கும் பொழுது நீ உன்னுடைய சொந்த தலைமைத்துவ நல்லொழுக்கத்தின் முன்னேற்றத்தை கணக்கீடு செய்து கொள்ள முடியும்.

1. நான் பரிசுத்த ஆவியோடு நெருக்கமான ஐக்கியத்தில் தரித்திருக்கிறேனா?
2. நான் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக் கொள்ளுகிறேனா?
3. நான் தேவ ஜனங்களை நேசிக்கிறேனா?
4. ஒரு குறிப்பிட்ட ஸ்தல திருச்சபையில் தேவ ஜனங்களோடு என்னை அடையாளப்படுத்திக் கொள்கிறேனா?
5. நான் விருப்ப சித்தமாக அதிகாரத்திற்கு பணிந்து கீழ்படிகிறேனா?
6. நான் பாவஞ் செய்த மனுஷனையும் பின்வாங்கிப் போகிறவனையும் நேசித்து அன்பு காட்டுகிறேனா?
7. நான் என்னுடைய முழு இருதயத்தோடும் கர்த்தரை ஆராதிக்கிறேனா?
8. எனக்குள் ஒரு வல்லமையுள்ள ஜெப ஜீவியத்தைப் பெற்று இருக்கிறேனா?
9. அழுத்தமான சூழ்நிலைமைகளில் நான் முதிர்ச்சி பெற்ற மனப்பான்மையைக் கொண்டிருக்கிறேனா?
10. நான் தொடங்கிய அந்தப் பணியை அந்த மற்றொரு மனிதர் முடிக்கும் படியாக அவர் மேல் எந்த விதமான கசப்புணர்ச்சியும் இன்றி அந்த மனிதரை அனுமதிக்கிறேனா?
11. நான் விமரிசனத்தைக் கவனித்துக் கேட்டும் அதை பெற்றுக் கொள்ளவும் செய்கிறேனா?
12. ஒரு பணியை நான் செய்யும்படியாக நன்றாக தகுதி பெற்றிருக்கும் பொழுது மற்றொருவர் அந்தப் பணியைச் செய்யும்படி ஒப்புக் கொடுப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேனா?
13. மற்றொருவர் ஒரு தவறு செய்யும் பொழுது நான் சுய நீதியோடு கெட்ட எண்ணமுடையவன் ஆகிறேனா?
14. நான் மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை அனுமதிக்கிறேனா? அல்லது என்னுடைய நோக்கப் பார்வையை ஏற்றுக் கொள்ளும்படி நான் எப்பொழுதும் விவாதம் செய்கிறேனா?
15. குழப்பான சமயங்களில் எனக்கு உள்ளான சமாதானம் இருக்கிறதா?
16. என்னை வேண்டுமென்றே புறக்கணிக்கும் ஒருவரை நான் மன்னிக்கிறேனா?
17. என்னுடைய கோபத்தை அடக்குகிறேனா?
18. நீண்ட கால இலக்குகளை அடைவதற்கு குறிப்பிட்ட தற்காலத்திய சில மகிழ்ச்சியானவற்றை கடந்து போகிறேனா?
19. நான் தொடங்குகிற சில திட்டங்களை முடித்துக் கொள்கிறேனா?
20. நான் பிறரை எனக்கு முன்னதாக ஏற்றுக் கொண்டு வைத்துக் கொள்கிறேனா?
21. நான் மகிழ்ச்சி தராத ஏமாற்றங்களை கசப்புணர்வின்றி சந்திக்கிறேனா?
22. நான் தவறு செய்யும் பொழுது அதை எளிதாக ஒப்புக் கொள்கிறேனா?
23. நான் என்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுடன் என்னுடைய அர்ப்பணித்தல்களை முடித்துத் தந்தேனா?
24. என்னுடைய நாவை அடக்கக் கூடிய நல்ல சமயங்களில் அவ்வாறு செய்கிறேனா?
25. என்னால் மாற்றப்படக் கூடாத காரியங்களை நான் ஏற்றுக் கொண்டு அத்துடன் சமாதானத்தோடு ஜீவிக்கிறேனா?

**உடன் வேலையாட்களை மதிப்பீடு செய்வதற்கு**

பின்வரும் அட்டவணை ஒரு மேய்ப்பர் தன் உடன் வேலையாட்களை தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்களில் காணப்படக் கூடிய முக்கியமான பண்பியல்களை அடையாளங் காணுதல்.

| | |
|---|---|
| உத்தமம் | இரகசியத்தை பாதுகாக்கிறது. |
| அதே ஆவியையும் பாரத்தையும் பகிர்ந்து கொள்ளுதல். | திருச்சபைலிருந்து சம்பளம் பெறத் தேவை இல்லாமை. |
| உண்மையாயிருத்தல் | திருச்சபையிலிருந்து சம்பளம் பெறத் தேவை இல்லாமை |
| திருச்சபைக்கு அர்ப்பணித்தல் | திருச்சபை சாராத பதவியில் ஜெயம் |
| சரியான மனப்பான்மைகள் | வேதாகமக் கோட்பாடுகளோடு ஒரே சீராக ஜீவித்தல் |
| மேய்ப்பரின் இருதயம் | இந்த உலகின் தெய்வங்களோடு இணங்காமை. |
| ஸ்திரத்தன்மை | நல்ல பழக்கவழக்கங்கள். |
| ஜனங்களோடு ஒன்றுபட்டு போகும் தன்மை | வார்த்தையின் படி செயல்படுபவர் |
| தீர்மானஞ் செய்வதில் உரையாடுதல் | கற்றுக் கொள்ளக் கூடிய ஆவி. |
| அன்பு கொண்டவர் மற்ற ஜனங்களோடு மகிழ்பவர். | தேவனுடைய வீட்டிற்காக அன்பு பாராட்டுதல் |
| ஆளுகை செய்பவராக அல்ல. | சீர்த்திருத்தங்களையும் மாற்றங்களையும் எற்றுக் கொள்பவர். |
| கிருபை மிகுந்தவர் | மற்ற ஜனங்களுக்கு ஆதரவாக, போட்டியாக அல்ல. |
| ஜனங்களை மதிக்காதவராக | பணிவு கீழ்படிதல் இல்லாத. |
| ஒரு வேலைக்காரனுடைய இருதயம் | தாழ்மையான இருதயம் |
| பிறர் காரியங்களில் தலையிடுகிறவராக அல்ல. | வெளிப்படையாக, திறந்த மனதுடன் உண்மையான இயல்புடையவராக. |

ஒவ்வொரு தலைவரும் இந்த மனப்பான்மைகளையும் பண்புகளையும் அவன் அல்லது அவளுடைய ஜீவியத்தில் விருத்தி செய்து கொள்வார்களாக.

.

# உண்மையான கிறிஸ்தவ தலைவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

தேவன் தெரிந்தெடுத்து, அழைப்புக் கொடுத்து, பிரித்தெடுத்து நம்மை வெளி உலகில் அனுப்பும் பொழுது அவர் நம்மிடம் எதிர்பார்த்து தேவையாக்குகிற அநேக காரியங்கள் நமக்குண்டு. காரணம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒரு தலைவராக இருப்பது மகத்தானதோர் பொறுப்பாகும். நாம் இந்த உலகத்தின் கண்களில் நமது போதனையினாலும் பழக்க வழக்கத்தினாலும் தேவனுடைய நாமத்தை உயர்த்தியோ அல்லது மகிமைப்படுத்தவோ செய்யலாம் அல்லது அதை அவதூறு செய்தோ கனவீனப்படுத்தவோ செய்யலாம். கிறிஸ்துவுக்குள் நம்மை பின்பற்றுகிறவர்கள் நம்மை முன் மாதிரியாக இருக்கும்படியாகப் பார்க்கிறார்கள். எபி 13:7ல் சொல்லுகிறபடி, ''தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து அவர்கள் நடக்கையின் முடிவை நன்றாய் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றுங்கள்.'' நாமும் அதன்படியே ஜீவத்து பவுலைப் போல ''நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்'' என்று சொல்லலாம். (I கொரி 11:1)

பின்வரும் அட்டவணையை கவனத்துடன் படித்து அதைத் தொடர்ந்து ஜெபத்தில் தரிந்திருந்து ஜெபித்து உங்கள் பரம பிதாவை நோக்கி அந்த அட்டவணையை உங்களிலும் உங்கள் அழைப்பிலும் ஒரு பங்காக ஆக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள். ''அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானித்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.'' (II தீமோத் 1:9) நம்மை அழைத்தவரை நினைவு கூர்ந்து நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார். இதை அல்லாது அல்லது ஒரு வேளை இதற்கு நேரடியான விளைவாக அவரது ஆசீர்வாதமும் அபிஷேகமும் நம்மேல் நிற்கக் கூடும். ''ஆனால் அவர் எனக்கு சொன்னதாவது என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்தில் என் பலம் பூரணமாக விளங்கும்'' என்றார். (II கொரி 12:9) இதற்காக நாம் மூன்று எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். தேவன் இவற்றை நம்மை விசேஷமாக ஊக்குவிப்பதற்காக கொடுத்திருக்கிறார் என்று நம்புகிறேன்.

**கிதியோன்** தன் சத்துருக்களுக்கு பயந்து திராட்ச ரச ஆலைக்குள் ஒளிந்து கொண்டு அதற்கு பின்புறமாக இருந்து கோதுமையை போரடித்தான். ஆனாலும் அவள் பயத்துடன் இருந்தாலும் தேவன் தரிசனமாகி அவனோடு பேசினார். அவர் சொன்னதாவது ''பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னுடன் இருக்கிறார்'' (நியா 6:11-12) □அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து, ''உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய். உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா'' என்றார். அதற்கு அவன் ''ஆ, என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன். இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்'' என்றான். அதற்குக் கர்த்தர், ''நான் உன்னுடனே கூட இருப்பேன். ஒரு மனுஷனை முறிய அடிப்பதைப் போல நீ மீதியானியரை முறி அடிப்பாய்'' என்றார். (நியா 6:14-16)

**எரேமியா** கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர், ''நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் முன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்'' என்று சொன்னார். அப்பொழுது நான் ''ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ நான் பேச அறியேன். சிறு பிள்ளையாயிருக்கிறேன்'' என்றேன். ஆனாலும் கர்த்தர், ''நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே. நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய் நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் பேசுவாயாக. நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம். உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்'' என்று கர்த்தர் சொன்னார். (ஏரே 1:4-8)

**பவுல்** இந்த நமது விசுவாசத்தின் அப்போஸ்தலன் தன்னுடைய பலவீனத்தை உணர்ந்து கொண்டவனாய் தன் ஊழியத்தைத் தொடங்கினான் என்பது நமக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். (I கொரி 2:3)

**தேவன் தம்முடைய இருதயத்தின்படியே இருக்க வேண்டிய தலைவருக்கான தேவனுடைய தகுதிகள்:**

1. தேவன் வழி நடத்தும்பொழுது அவன் கீழ்படிதல் உள்ளவனாய் இருக்க வேண்டும். (அப் 16:9,10)

2. அவன் தேவனுடைய அழைப்புக்கு விசுவாசமுள்ளவனாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் அவருடைய வல்லமையிலும் கிருபையின் மூலமாக தன் ஜீவியத்தில் இருக்க வேண்டும். (ரோமர் 15:17-19; I தீமோத் 1:12;) உன் ஊழியத்தை நிறைவேற்று. (II தீமோத் 4:5) மற்றொரு தேவனுடைய ஊழியக்காரனுக்கு அதாவது அவருக்கு அல்லது அவளுக்கு உன்னை விட அதிகமான அபிஷேகம் இருக்குமானால் உன்னை தாழ்வாகக் கருதாதே. நீ நீயாகவே இருப்பாயாக. மக்களுடைய ஜீவியத்தில் இருக்கக் கூடிய அபிஷேகமானது அவர்களுடைய ஜீவியத்தில் ஏற்படும் வேறுபட்ட அழைப்பின் படியே வித்தியாசப்படக் கூடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். தேவன் தாமே உன்னைத் தான் உன்னுடைய நல்லொழுக்கத்தோடும் தாலந்துகளோடும் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்துக் கொண்டு உன்னை அவசியமாகக் கருதுகிறார்.

   உன்னை விட மற்றொருவர் மகத்தானதோர் பணியில் ஈடுபட்டு இருப்பாரானால் அவரைப் பற்றி அதைரியப்படாதே. தேவனுடைய இராஜ்ஜியத்தில் நாம் போட்டியில் இருப்பதில்லை. தேவன் உண்மையான விசுவாசத்தில் விருப்பமாயிருக்கிறார். நீ என்ன செய்கிறாய் என்பதல்ல. தேவன் உன்னை அழைத்து, பிரித்து எடுத்து, உன்னை நிறைவேற்றும்படியாக செய்ய வேண்டியதை எவ்வளவு முழு இருதயத்தோடு செய்கிறாய் என்பது தான் பொருட்டாகும்.

3. அவர் கற்றுக் கொடுப்பதற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும். (I தீமோத் 3:2)

4. அவர் நேர்மையாக நடந்து ஊழியம் செய்ய வேண்டும். ‘‘நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து உபதேசத்திலே விகற்பமில்லாதவனும் நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக.’’ (தீத்து 2:7) மற்றொரு விதமாகக் கூறுவதென்றால் நீ நேர்மையாக நடந்து ஊழியம் செய்ய வேண்டும்.

   உன்னுடைய நடவடிக்கைகளையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றி நீ கொடுத்த வார்த்தைக்கு உண்மையுள்ள மனிதனாக அல்லது ஸ்தீரியாக இருப்பாயாக. அவைகளை உன் நாட்குறிப்பில் எழுதி வைத்துக் கொள். அதிக பாரமான நிகழ்ச்சிகளில் ஈடுபடாது உன்னைக் காத்துக் கொள். உன்னால் சந்திக்க முடியாத வேண்டுகோள்களுக்கு ‘‘இல்லை’’ என்று சொல்லக் கற்றுக் கொள். நீ எதிர்பாராத விதமாக ஒரே நேரத்தில் இரு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதாக இருக்குமானால் அந்த நிகழ்ச்சியை பல வாரங்களுக்கு முன்னதாகவே அதை முடியாது என்று நீக்கி விடு. அப்படி நீ செய்யாவிட்டால் தேவனுடைய ஊழியக்காரனாக உன்னுடைய நல்ல பெயருக்கு இழுக்கு உண்டாகும்.

5. அதற்கென்று அவர் வைராக்கியம், அயரா உழைப்புள்ளவராகவும் இருக்க வேண்டும். அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். (I கொரி 15:10; II கொரி 10:12-16)

6. இயேசுவுக்கு புதிய சீஷர்களான மக்களுக்கு அவர் நீடிய பொறுமைக்கு உதாரணமாக இருக்க வேண்டும். (I தீமோத் 1:16)

7. அவர் ஒழுக்கத்தில் குற்றஞ்சாட்டப்படாதவராக இருக்க வேண்டும். (I தீமோத் 3:2உம் தீத்து 1:7) ‘‘ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல் ஞானமுள்ளவர்களைப் போல கவனமாக நடந்து கொள்ள’’ (எபேசி 5:15) மற்ற வார்த்தைகளில் சொல்லுவதென்றால் (எச்சரிக்கையாக், கவனமாக, விழிப்புணர்வுடன்) ஞானத்துடனும் நடந்து மற்றவர்களுக்கு நீ இடறலாக இருக்காதபடி காத்துக் கொள். II தீமோத் 2:16, தீத்து 3:9 ‘‘அவபக்தியான வீண் வார்த்தைகளுக்கு விலகி இருக்கும்படி எச்சரிக்கை செய்வாயாக.’’

8. அவர் தன்னடக்கமுடையவராகவும் ஆழ்ந்த எண்ணமுடையவராக அல்லது அந்த கிரேக்கர் சொன்னபடி தெளிந்த புத்தியுள்ளவனும் தெரிவு செய்யும் திறன் பெற்றவனும், விவேகமும் சாமாத்தியமும் சமநிலையுள்ளவனும் அமைதியும் தன்னடக்கமும் உடையவனாக இருக்க வேண்டும். (I தீமோத் 3:2; தீத்து 1:8)

9. கௌரவமுள்ளவனும், மரியாதை தெரிந்தவனும் பண்பு உள்ளவனுமாய் இருக்க வேண்டும். (I தீமோத் 3:2) உதாரணமாக நீ ஜனங்களுடன் தரித்திருந்தால் ஊழியம் செய்யும்பொழுது எங்கோ ஓரிடத்தில் நீ உன்னுடைய சொந்த வடுக்கையைப் போட்டுக் கொள்ளவும். வேலைக்காரனைப் போல வீட்டு அறைகளை சுத்தம் செய்ய உதவ வேண்டும்.

10. அவர் தாழ்மையுள்ளவராகவும் கடமைப்பட்டவராகவும், பணிந்து கீழ்படிபவராகவும், சாந்தமும் தன்னடக்கமும் உள்ளவராக சகிப்புத் தன்மையுடையவராகவும் இருக்க வேண்டும். ‘‘உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக’’ (பிலிப் 4:5) நாம் தொடர்ந்து கீழ்பட்டவர்களாக இருக்க ஆயத்தமாக இருப்போமானால் ‘‘தேவன் தாமே ஏற்ற காலத்தில் நம்மை உயர்த்துவார்.’’ (I பேதுரு 5:6)

11. கிறிஸ்தவர் அல்லாத மற்றவர்களிடத்தில் நற்சாட்சி பெற்றவராக இருப்பாரானால் அவர் குற்றஞ் சாட்டப்படாதவராகவும் சத்துருவின் வலையில் விழாதவராகவும் இருப்பார். (I தீமோத் 3:7) புற ஜாதிகள் உங்களை விரோதமாய் பேசும் விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு தேவனைச் சந்திக்கும் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள். (I பேதுரு 2:12) அதே சமயத்தில் பவுல் நம்மை கொலோசேயர் 4:5ல் அதை ஞானத்தோடு செய்யுமாறு கண்டித்து புத்தி சொல்லுகிறார்.

12. அவர் மனதுருக்கம் உடையவராய் இருக்க வேண்டும் அல்லது எபி 5:2ல் சொல்லுகிற பிரகாரம் ‘‘தானும் பலவீனமுள்ளவனாயிருக்கிறபடியினாலே அறியாதவர்களுக்கும் நெறி தப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாய் இருக்கிறேன்.’’ பவுல் சொல்லுகிறதாவது II கொரி 11:29ல் ‘‘ஒருவன் பலவீனனால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?’’ என்கிறார்.

13. அவர் ஒவ்வொருவருக்கும் வேலைக்காரனாக இருந்து அவர்களோடு அடையாளங்கண்டு ஐக்கியப்படுத்திக் கொண்டு அவர்களை செயலூக்கத்துடன் ஆண்டவருக்காக இயேசுவுக்காக ஆதாயப்படுத்த வேண்டும். (I கொரி 9:19-23) அவர்கள் ஜனங்களுக்காக ஜாதிகளுடனும் எங்கெங்கு அவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்தார்களோ அங்கெல்லாம் அந்த மக்களுடைய பூர்விக உடைகளையும் வாழ்க்கை நடைமுறைகளையும் அந்த ஜனங்களுக்கோ அந்த முன்வரிசை சுவிசேஷ ஊழியர்கள் தங்களை மாற்றிக் கொண்டார்கள். இப்படி அவர்கள் செய்ததால் கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்வதில் எந்த சுவிசேஷ ஸ்தாபனத்தையும் விட அந்த பிரதேசத்தில் செயலூக்கம் உடையவர்களாய் இருந்தார்கள்.

14. நல்லது எதுவோ அதை மட்டும் நேசிப்பவராக இருக்க வேண்டும். (தீத்து 1:8)

15. அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவராக (அப் 1:8; II கொரி 6:6) தனக்குள் இருக்கும் ஆவியின் வரங்களை புறக்கணித்து வீணாக்காமல் அவர் யாருக்கு மத்தியில் ஊழியம் செய்கிறாரோ அவர்களுக்கு பயன்படுமாறு அன்பினால் அதை உபயோகிக்க வேண்டும். (II தீமோத் 1:6; I தீமோத் 4:14; I கொரி 14:12)

16. அவர் நியாயமுள்ளவராக அதாவது நேர்மையானவராக இருக்க வேண்டும் என்ற கருத்தில் (தீத்து 1:8) பாரபட்சமற்றவராகவும் (I தீமோத் 5:21; தீத்து 3:10-11) மார்க்க பேதங்களின் அபாயத்தைக் குறித்து நமக்கு எச்சரிக்கை விடுக்கிறார். ‘‘வேதப் புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்ன பினபு அவனை விட்டு விலகு’’ அப்படிப்பட்டவன் நிலை தவறி தன்னிலே தானே ஆக்கினை தீர்ப்புடையவனாய் பாவஞ் செய்கிறான் என்று அறிந்திருக்கிறாயே. (தீத்து 3:10-11)

17. அவன் களங்கமில்லாத இருதயத்தோடு அன்பு காட்ட வேண்டும். (I தீமோத் 1:5; II கொரி 6:6) என் பிள்ளைகளே வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியையினாலும் உண்மையினாலும்

அன்பு கூறக் கடவோம். (I யோவான் 3:18) எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும். (I பேதுரு 4:8) பிரியமானவர்களே நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருக்கிறோம். (I யோவான் 3:21)

18. அவர் நல்மனச்சாட்சியுடையவராய் இருக்க வேண்டும். (I தீமோத் 1:5)

19. அவர் பரிசுத்தமுள்ளவராகவும் பரிசுத்த ஜீவியம் செய்கிறவராகவும் இருக்க வேண்டும். (தீத்து 1:8; கொலோ 1:22) நீ அனுசரித்து தேறினவனாகி நல்ல ஊழியக்காரனாக இருப்பாய். (I தீமோத் 4:7) ''ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி'' (தீத்து 2:11-12)

இந்த சமயத்தில் ஒரு எச்சரிக்கையான வார்த்தை பரிசுத்த ஜீவியம் ஜீவிப்பதற்கும் சட்டப் பிரமாணத்திற்குள் வீழ்ந்து விடுவதற்கும் இடையில் ஒரு மெல்லிய கோடு ஓடுகிறது. நீதியான தேவையானவைகளை சட்டப் பூர்வமாக நீ நிறைவேற்றக் கூடும் பரிசுத்த ஆவியின் பலப்படுத்தபடுவதால் சட்ட பூர்வமில்லாமலே அதைச் செய்யும்படி உதவக் கூடும். நீ உன்னை மட்டும் காத்துக் கொள்ளலாம். மேலும் உன்னை யார்மேல் நியமனம் செய்திருக்கிறாரோ அவர்களையுங்கூட அவ்வாறு செய்யலாம். ஆனால் பரிசுத்தமாகுதலைப் பெறுவதற்குப் பதிலாக நீ இயேசு கிறிஸ்துவைப் போலிருக்க முயற்சிக்கலாம். மேலும் சகரியாவின் அபிஷேகம் பெற்ற தீர்க்கதரிசனமானது லூக்கா 1:74b-75ல் கூறியபடி அதே வித்தியாசத்தை உண்டாக்குகிறது. உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாக பரிசுத்ததோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ் செய்யக் கட்டளையிடுவேன் என்று கூறுகிறது. (லூக்கா 1:71b) சட்டபூர்வமான முயற்சிகளால் பரிசுத்த ஜீவியம் செய்வது நியாயந்தீர்ப்புக்கான அச்சத்தைக் கொண்டு வருகிறது. உண்மையான பரிசுத்தமானது பரிசுத்த ஆவிக்கு ஒப்புக் கொடுப்பதால் உண்டாக்கப்படுமானால் பயத்தை உண்டாக்காது. இதற்கான திறவுகோல் சரணாகதி அடைதலாகும்.

20. அவர் ஜெபத்தில் நீண்ட நேரம் தரித்திருந்தும், தியானத்திலும் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும் படிப்பதிலும் செலவழிக்க வேண்டும். (அப் 6:4; II தீமோத் 2:7) நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (II தீமோத் 2:15)

21. அவர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தும், ஒரு போதகராக (மேய்ப்பனாக மந்தையை கண்காணித்தும் தேவன் அவரை அப்படிச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதற்காக அல்ல (I பேதுரு 5:2) சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்கு பலன் உண்டு. உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே. (I கொரி 9:17) நாம் பின்வரும் வேத பகுதிகளில் மேய்ப்பர்களையும் அவர்கள் பொறுப்புகளையும் பற்றி படிக்கும்பொழுது அவர்களுக்கு தேவனுக்கு முன்பாக ஒரு கருத்தூன்றிய பயங்கரமான பொறுப்பு உண்டு என்பது தெளிவாகிறது. (எசேக் 34அதி; ஏசாயா 40:11; 42:19; 56:9-12; எரேமியா 22; 23:1-4; 50:6-7; 19:20, 44-45; சகரியா 10:1-3; 11:4-5,15-17 உடன் யோவான் 10:11-18)

22. தான் ஒரு மேய்ப்பனாக தேவனுடைய வார்த்தையைப் பகுத்து சரியாக போதிக்கிறவனாக தன்னுடைய ஆடுகளுக்கு அவர்களுடைய சரியான நேரத்தில் ஆகாரத்தை தரவும் ஆனால் அதற்கும் மேலாக விசேஷமாக விசுவாசிகளுக்கு ஒரு ஆவிக்குரிய தகப்பனாக இருக்கும்படி அவர் இடைவிடாது தனக்காக ஜெபிக்கவும் வேண்டும். (பிலிப் 2:22 மற்றும் I கொரி 4:15)

23. அவர் தேவனுடைய வார்த்தையை பருவ காலத்திலும் பருவ காலம் இல்லாத வேளைகளிலும் பிரபலமாக பிரசித்தப்படுத்த வேண்டும். ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு'' (II தீமோத் 4:2) ''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியைகளுக்கும் தகுதியுள்ளவனாயிருக்கும்படியாக ஆக வேண்டும்.'' (II தீமோத் 3:16-17)

24. “தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்கிறவனுமாயிருக்க வேண்டும்.” (தீத்து 1:9) அல்லது பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லுகிற பிரகாரம் “உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை கொண்டிரு. இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்.” (I தீமோத் 4:16)

25. அவருக்கு மாயமற்ற விசுவாசம் இருக்க வேண்டும். (I தீமோத் 1:5) கிறிஸ்து இயேசுவின் கிருபையினால் பெருகிற்று. (I தீமோத் 1:14)

26. இதினிமித்தம் அவரும் அவருடைய தேவனுக்காக செய்யும் உழைப்பிலும் நிந்தை அடையவும் விருப்ப சித்தமுள்ளவராய் இருக்க வேண்டும். (I தீமோத் 4:10; II கொரி 6:8) அவர் விடாமுயற்சியோடு சோதனையைச் சந்தித்தும், நெருக்கத்திலும் துன்பத்தையும் சகிக்க வேண்டும். (II கொரி 11:23-33; II தீமோத் 2:9-10; II தீமோத் 2:3) இந்த நடைமுறையில் அவர் தன் பிராணனை தனக்கு விலையேறப் பெற்றதாகக் கருதாமல் கர்த்தருக்காகவும் பிறருக்காகவும் தன் ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாகவும் இருக்க வேண்டும். (அப் 20:22-24; II கொரி 6:9) நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். (யோவான் 10:17)

27. II கொரிந்தியர் 6:13-10ல் மீதியானவற்றை செயலூக்கத்துடன் சராம்சப் படுத்துகிறது. தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம். இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் எவ்விதத்தினாலேயும் எங்களை தேவ ஊழியக்காராக விளங்கப் பண்ணுகிறோம்.

    மிகுந்த பொறுமையிலும் உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், பிரயாசங்களிலும், காவல்களிலும், கலகங்களிலும், கண் விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்திய வசனத்திலும், திவ்விய பலத்திலும், நீதியாகிய வலது இடது பக்கத்து ஆயதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும் எத்ததெரானப்பட்டாலும் நிஜஸ்தராகவும் அறியாதவர்களௌன்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும் சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும் தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும் துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும் தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக ஆக்குகிறவர்களாகவும் ஒன்றுமில்லாதவர்களௌன்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். இதற்குக் காரணமாவது, “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்கள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருப்பவர்கள் துன்பப் படுவார்கள்.” (II தீமோத் 3:12)

28. அவர் ஒரே மனைவிக்குக் கணவராக இருக்க வேண்டும். அதாவது பலதார மணமுள்ளவராக அல்ல. (தீத்து 1:6) எல்லாக் காலங்களிலும் கணவன் மனைவி இடையே நல்ல தகவல் தொடர்புடன் கிரியை செய்வது பாராட்டுக்குரியது. ஒரு தலைவர் திருமணமாகதவராக பவுலைப் போல இருக்கலாம். (I கொரி 7:7-8)

29. அவர் தன் குடும்பத்தை சரிவர நடத்துகிறவராக இருக்க வேண்டும். அந்த கிரேக்கன் சொல்வது போல “முன் வரிசை ஸ்தானத்தில் நின்று தலைமைவகித்து ஆசனத்தில் அமர்ந்து முன் நின்று நடத்தி மேற்பார்வை செய்ய வேண்டும்.” அவருடைய பிள்ளைகள் ஒவ்வொரு அம்சத்திலும் அவருடைய தகுதியைப் பார்த்து அதன் பயனாக அவருக்குப் பணிந்து கீழ்படிய வேண்டும். (அல்லது கிரேக்கன் சொல்லுகிற பிரகாரம்) அவருடைய கௌரவத்தாலும் பெருமிதத்தாலும் பயபக்தியின் காரணத்தினாலும் (I தீமோத் 3:4) மேலும் தீத்து 1:6ஐயும் I தீமோத் 3:4-5ஐயும் பார்ப்பது ஆர்வத்தைத் தூண்டுவதாக ஆபிரகாம் எப்படி தனது சொந்த குடும்பத்தார்களை தேவனுடைய நிபந்தனையான வாக்குறுதியின் கருத்துப்படியே நடத்தினார் என்பதை அறியக் கூடும். (ஆதி 18:17-19) தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச்

சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான். (I தீமோத் 3:4-5) ஆதி 18:17-19 வசனங்களில் கர்த்தர் ஆபிரகாம் பலத்த ஜாதியாவதினாலும் அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும் நான் சொல்லப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்; நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழிகளைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுகிறவன் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். அதற்காக கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்றுவார். நாம் வசனம் 18ஐப் பார்ப்போமானால் அது தான் தேவனுடைய தரிசனத்தின் படியும் அவருடைய உண்மையின் படியேயும் ஓர் நிச்சயிக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும். ஆனாலும் வசனம் 19ஐப் பார்ப்போமானால் அது தேவனுடைய சகல வாக்குத்தத்தங்களின் படிதான் இருந்தது. நிபந்தனைக்குரியதாய் எப்படி ஆபிரகாம் தன் வீட்டாரை தான் காட்டிய முன் மாதிரியால் நடத்திச் சென்றான் என்பதால் உண்டானது. 17ம் வசனத்தை நினைத்துப் பாருங்கள். அது சுட்டிக் காட்டுகிறபடி ஆபிரகாம் தேவனுக்கு சிநேகிதனாய் இருந்தான். அவன் இந்த விதமான உறவுத் தொடர்பால் அவன் வார்த்தையால் தன் பிள்ளைகளுக்குப் போதித்து மேலும் அவனது செயல்களின் மூலமாகவும் செய்து காட்ட வேண்டியிருந்தது. அவர்கள் அவனை நோக்கிப் பார்க்கவும், கனப்படுத்தவும் அதே சமயத்தில் தாங்கள் நட்பு கொள்ளக் கூடிய ஒருவனாக பின்னர் அவர்களுடைய இருதயத்தை பகிர்ந்து கொள்பவனாகவும் இருக்க வேண்டும். (வசனங்கள் 17,20-33ஐ ஒப்பிடுக)

30. அவன் உபசரிக்கிறவனாகவும் கிரேக்கன் சொல்லுகிறபடி அந்நியரை நேசிக்கிறவனாக (I தீமோத் 3:2; தீத்து 1:8) அவனுடைய பங்கிற்கு தன் வீட்டை தட்டு தடங்கலின்றி திறந்த வைத்திருக்க விருப்ப சித்தமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். ''முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.'' (I பேதுரு 4:9)

31. இங்கே குறிப்பிடப்பட்ட தலைமைத்துவ தகுதிப் பண்புகள் அனைத்தும் (வெளி 2:2-5) வசனங்களின் அடிப்படையில் கிரியை செய்யாவிட்டால் பயனற்றதாகி விடும். ''உன் கிரியைகளையும் உன் பிரயாசத்தையும் உன் பொறுமையையும் நீ பொல்லாதவர்களைச் சகிக்க கூடாமலிருக்கிறதையும் அப்போஸ்தலர் அல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும் பொறுமையாயிருக்கிறதையும் என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாச்சப்பட்டதையும் அறிந்திருக்கிறேன். ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்.'' (வெளி 2:2-5) ஒவ்வொரு வழியிலும் உழைத்து துன்பப்படுவது தேவனுக்கு போதாது, முதலாவதாக நமது முதல் கிரியைகளை, தேவனுக்குள்ள முதன்மையான அன்பினால் பொங்கி ஓடுகிற கிரியைகளால் ஆனது பற்றி அவர் நம்மீது ஏங்கி நிற்கிறார். உன்னுடைய மணமகளையும் மணமகனையும் எப்படி நடத்துவாய் என்பதை தியானித்துப் பார். அவர்களுக்கு எப்படி உன்னால் செய்ய முடிந்ததை செய்ய முடியாமல் இருந்தது விசேஷமாக நீ என்னவெல்லாம் சொன்னாய் செய்தாய். அவனைச் சுற்றியும் அவளைச் சுற்றியும் கேந்திரமாக்கினாய் என்பதை தியானம் செய்வாயாக. அதாவது நம்முடைய விளக்குத் தண்டை நீக்கிப் போடுவார். அதாவது நமது ஜீவியத்தின் மேலும் ஊழியத்தின் மேலும் உள்ள அபிஷேகத்தை மற்றவர்களுக்கு ஒளியாய் பிரகாசிப்பதை அதன் இடத்திலிருந்து எடுத்துப் போடுவார். நாம் நமது முதல் அன்பில் கிரியை செய்யாவிட்டால் அவ்வாறு செய்து விடுவார்.

முடிவாக விவெஸ்ட் என்பவரது சிறந்த மொழி பெயர்ப்பான யோவான் 21:15b பகுதியைக் குறிப்பிடுகிறேன். ''என்னுடைய விலையேறப் பெற்ற தன்மையினால் உன் இருதயத்திலிருந்து அழைத்து வெளிப்படுத்தப்பட்ட அன்பை எனக்காகப் பெற்றிருக்கிறாயா? அது ஒரு விசுவாசத்தின் அன்பாக உன்னையே எனக்காகத் தியாகம் செய்யுமாறு பணிக்கும் அன்பாகும்.''

## பவுலின் தலைமைத்துவ நெறிமுறைகள். (II கொரிந்தியர் நிருபத்தை அடிப்படையாகக் கொண்ட படிப்பு)

ஒவ்வொரு தலைவரும் இந்த அட்டவணையை உபயோகப்படுத்தி தான் எவ்வாறு மாதிரித் தலைவரான பவுலின் மட்டத்திற்கு எப்படி எட்டுகிறார் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு உபயோகமாகும். நாம் ஒவ்வொரு தலைவரையும் இந்த குறிப்புகள் ஒவ்வொன்றையும் விரிவாக்கி அவருடைய புரிந்து கொள்ளுதலுக்காகவும் ஊழியத்திற்காகவும் உபயோகிக்க ஒவ்வொருவரையும் உற்சாகப் படுத்துவோம்.

இந்த தலைமைத்துவ குறிக்கோள்களின் வழி காட்டும் முறையால் தலைவர்களுக்கான கட்டாயமாவது:

1. தேவன் அவர்களை அழைத்த இடத்தில் ஊழியம் செய்ய வேண்டும். (II கொரி 1:1; கலா 1:1; அப் 13:2)
2. தேவனிடமிருந்து தாங்கள் பெற்றுக் கொண்ட அதே ஆறுதலுடன் துன்பத்தில் உள்ளவர்களுக்கும் ஆறுதல் தர வேண்டும். (II கொரி 1:4-6)
3. ஜெபத்தின் பேரிலே சார்ந்திரு. (II கொரி 1:11)
4. இந்த உலக மக்களுடனும் திருச்சபையுடன் இடைபடுகிற காரியங்களில் உத்தமமான ஜனமாயிரு. (II கொரி 1:12; அப் 6:3; I தீமோத் 3:7)
5. உன்னுடைய இருதயத்தில் பிறருக்காக ஆர்வத்தைக் கொண்டிரு. (1:13-23; 7:12)
6. ஆவியினால் அபிஷேகம் பெற்றிரு. (1:21-22)
7. மற்ற விசுவாசிகளின் மேல் ஆளுகை செய்யும்படியாக ஆர்வம் கொள்ளாதே. (1:24; லூக்கா 22:24-27)
8. மன்னிப்பு என்ற கோட்பாட்டை செயல்படுத்து. கர்த்தருடைய ஜனங்கள் மேல் சாத்தானுக்கு ஓர் அடி பிடிப்பு கூட அடைய முடியாது. (2:10-11)
9. கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறந்திரு. (2:14)
10. கர்த்தருக்கென்று நற்கந்தமாயிரு. (2:15)
11. அவர்களுக்கு வேண்டிய போதுமானவைகளை தேவனிடம் கண்டு பிடித்துக் கொள். (3:5)
12. அவர்கள் கர்த்தர் தம்மாலே திறமையான ஊழியர்களாக உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைவு கூறு. (3:6)
13. பேச்சில் எளிமையானதும் திறந்ததுமான நம்பத் தகுந்தவைகளை ஒளிவு மறைவு இல்லாமல் சுதந்திரமாகவும் மழுங்கலாகவும் பேசுகிற பேச்சையே பயன்படுத்துக.
14. மகிமையின் மேல் மகிமை அடையும்படியாக மாறுதல்களை உன்னுடைய தனிப்பட்ட முறையில் அனுபவத்தில் காண்க. (3:18)
15. கர்த்தருடைய மகிமையை இந்தக் காரியங்களைச் செய்வதால் எடுத்துக்காட்டுக.
    - வெட்கமான அந்தரங்க காரியங்களை வெறுத்தும்.
    - தந்திரமாய் நடவாமலும்
    - தேவ வசனத்தை புரட்டாமலும்
    - சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே (அவர்கள் ஜீவியத்தில்)
    - தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்.
16. தேவனுடைய வார்த்தையை மனித பலத்தைக் கொண்டல்ல. தேவனுடைய பலத்தினாலே ஊழியம் செய்க. (4:7; I கொரி 2:1-5)
17. தேவனுடைய மகிமையை மண்பாண்டங்களில் (மனுஷீக) பெற்றிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்க. (4:7)
18. எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கி போகிறதில்லை. (4:8)

19. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. (4:8)
20. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. (4:8)
21. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. (4:9; II தீமோத் 2:3-4; சங் 116:10)
22. கர்த்தருக்கு முன்பாக அவர்களது உக்கிராணப் பொறுப்பை நிறைவேற்றும்படி தீர்மானத்துடன் இரு. (4:1,10)
23. மனிதர்களை கிறிஸ்துவுக்காக பிரசங்கிக்கும்படி செய்யவும் தங்களுக்காக அல்ல. (4:5)
24. கர்த்தருடைய காரியங்களுக்காக ஒரு தரிசனத்தை வைத்திரு. (5:7-9)
25. கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய உள் நோக்கத்தைக் கொண்டிரு. (5:9)
26. அவர்கள் தங்களுடைய செய்கைகளுக்காக இன்றைக்கும் வருங்காலத்திலும் நியாயந்தீர்ப்பு அடைவார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள். (5:10)
27. அவர்களுடைய ஜீவியத்தை கர்த்தருடைய ஜனங்கள் பார்த்து ஊக்குவிக்கப்படும்படி நடத்திக் காட்டு. (5:11-13)
28. தேவன் பேரிலுள்ள அன்பினால் அவர்களுடைய ஜீவனை ஆடுகளுக்காக தியாகம் செய்யும்படி கொடுக்கும்படி செய்ய உள்நோக்கம் கொண்டிரு. (5:14)
29. தேவனுடைய ஜனங்களை தேவன் அவர்களை பார்க்கிறபடியே பார்ப்பாயாக. (5:16-17)
30. ஒப்புரவாகி சீர்பொருந்தும் ஊழியத்தை நிறைவேற்று. (5:18)
31. எல்லாருக்கும் வெளிப்படையாகத் தெரியும்படியான வழியில் கர்த்தருக்கு பிரதிநிதிகளாய் இருப்பீர்களாக. (5:20)
32. ஊழியமானது குற்றப்படுத்தும்படியும், கண்டனம் செய்யப்படும்படியும் எந்த இடறலும் உண்டாக்காதே. (6:1-3)
33. அவர்களுடைய ஊழியத்தை (6:4-5) பெரிய சோதனைகளுக்கும் இடையில் பொறுமையைக் கடைபிடித்து நிரூபித்துக் காட்டு.
    – இடுக்கண்கள்
    – நெருக்கங்கள்
    – அடிகள்
    – சிறை காவல்கள்
    – கலகங்களிலும்
    – பிரயாசங்களிலும்
    – கண் விழிப்புகளிலும்
    – உபவாசங்களிலும்
34. அவர்களுடைய ஊழியங்கள் இந்த பண்புகளைப் பெற்றிருக்கின்றன என்பதை நிரூபிக்க.
    – கற்பிலும்
    – அறிவிலும்
    – நீடிய சாந்தத்திலும்
    – தயவிலும்
    – பரிசுத்த ஆவியிலும்
    – மாயமற்ற அன்பிலும்
    – சத்திய வசனத்திலும்
    – திவ்விய பலத்திலும்
    – நீதியாகிய வலது இடது பக்க ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும்
    – கனத்திலும் கனவீனத்தின் மேலும்
    – துர்கீர்த்திக்கு மேல் நற்கீர்த்தியிலும்
35. கீழ்கண்டவற்றை சகிப்பதால் ஊழியத்தை நிரூபிக்க (6:8-10)
    – எத்தர் ஆனால் நிஜஸ்தர்
    – அறியப்படாதவர்கள் ஆனாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாக

– சாகிறவர்களானாலும் பிழைத்திருக்கிறவர்களாக.
– தண்டிக்கப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாக
– துக்கப்படுகிறவர்கள் என்றாலும் சந்தோஷப்படுகிறவர்களாக.
– தரித்திரர்கள் என்னப்பட்டாலும் ஐசுவரியவான்களாக.
– ஒன்றுமில்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாக எங்களை விளங்கப் பண்ணுகிறோம்.

36. பேச எங்கள் வாய் திறந்திருக்கிறது. எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது. (6:11)
37. மாம்சத்தில் எல்லா அசுசியும் நீங்க சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு பூரணப்படுத்து. (II கொரி 7:1)
38. உங்களைக் குற்றவாளியாக்குகிறவர்கள் ஒன்றுஞ் சொல்லக் கூடாதபடி நேர்மையாகவும் உண்மையாகவும் இருங்கள். (7:2)
39. கண்டனஞ் செய்யாமல் கர்த்தருடைய ஜனங்களை உறவுத் தொடர்பு அன்பு என்ற வாய்க்கால்களால் பக்தி விருத்தி செய்யுங்கள். (7:3)
40. அவர்களை ஜனங்களுக்கும் அவர்களுக்காகவும் கொடுங்கள். (7:3)
41. ஜனங்கள் அனுபவிப்பதை நீங்களும் அனுபவியுங்கள். (7:3)
42. தேவனுடைய ஜனங்களுக்கு திறந்த மனதாய் இருங்கள். (7:2-4)
43. தேவ ஜனங்களோடு அனுபவத்தை அவர்களோடு முன்னும் பின்னும் பகிர்ந்து கொள்ள சுதந்திரமாய் இருங்கள். (7:2-4)
44. தேவனுடைய ஜனங்களுக்கு ஆதரவு கொடுங்கள். அதையே அவர்களிடமிருந்து மறுபடியும் பெற்றுக் கொள்ளுங்கள். (7:5-7)
45. சிறுமைப்பட்டவர்கள் என்று அவர்களைக் கனம் பண்ணுங்கள். (7:6)
46. அவர்களுடைய பிரயாசத்தின் பலனாகிய கனியைக் குறித்து ஆறுதலடையுங்கள் இந்த பலாபலனானது அவர்களுடைய போதனைக்கும் கண்டனத்துக்கும் ஜனங்கள் கொடுக்கும் நேரடியான பிரதியுத்தரமாகும். (7:5-7)
47. ஒரு தந்தையைப் போல மந்தையை தண்டித்து திருத்தி அவர்களை தேவனுக்கேற்ற துக்கத்தில் கொண்டு வந்து பிரபஞ்சத்துக்குரிய துக்கத்துக்கல்ல, அன்பினாலே திருத்துதல் ஜீவனையும் ஆனால் வேறெந்த விதமான துக்கமோ மரணத்தைக் கொண்டு வருகிறது.
48. ஜனங்களுக்குள் தேவனுக்கேற்ற துக்கத்தை கொண்டு வரும்படி கிரியை செய்ய அன்பினால் கண்டியுங்கள். இது அவர்களுக்குள் கொண்டு வருகிறவைகளாவன.
    – ஆட்டின் நடையில் மிகுந்த ஜாக்கிரதையான கவனம்.
    – குற்றந்தீர நியாயஞ் சொல்லுதல் (மனந்திரும்பி நற்கிரியைகள் செய்ய)
    – தீங்குக்கு வெறுப்பையும்
    – தேவனைப் பற்றும் பயப்படும் பயம்
    – தேவனுக்கென்று ஆதித ஆவலையும்
    – தேவனுக்கென்று பக்தி வைராக்கியம்
    – தலைவர்களுக்கு ஆறுதலாகவும்
49. மந்தையாகிய சபைக்காக ஜாக்கிரதையும் கரிசனையையும் வெளிப்படுத்தி அதைக் கண்டிப்பினால் காட்ட வேண்டியதிருந்தாலும். (7:12)
50. சபையை நற்கிரியைகளைச் செய்யும்படியாக அவர்கள் அதை ஏற்கனவே நற்கிரியைகளைச் செய்திருந்தாலும் அதைச் செய்யும்படி புத்திமதி சொல்ல வேண்டும். (7:13)
51. அவர்கள் சபைக்கு உண்மையை வெளிப்படுத்தின போது சபையும் அந்த உண்மையை பிறருக்கு அறிவிக்கும். (7:14)
52. ஜனங்கள் உங்களை ஆறுதல்படுத்துவதற்கும் தேவனும் உங்களை ஆறுதல் படுத்துவதற்கும் திறந்தவர்களாய் இருங்கள். (7:6-13)

53. சபையில் உள்ளவர்களுக்குள்ளும் உங்களுக்குள்ளும் நம்பிக்கை இருப்பதாக ஆனால் முக்கியமாக தேவனுக்குள் நம்பிக்கை கொண்டிருங்கள். (7:16)
54. சோதனைகளிலே மகிழ்ச்சியுடன் விடா முயற்சியுடன் இருங்கள். (8:2)
55. தியாகம் செய்ய விருப்ப சித்தமாயிருங்கள். (8:4)
56. போனால் போகட்டும் என்ற விருப்ப சித்தத்துடன் தேவனை அனுமதியுங்கள். (8:6)
57. அன்பிலும் தளரா உழைப்பிலும் புத்திமதி கூறுங்கள். (8:7)
58. ஊழியம் செய்ய விருப்ப சித்தமாய் இருங்கள். சகோதர அன்பினால் அதை செயல்படுத்த பாருங்கள். (8:9)
59. ஒருவருக்கொருவர் ஒருமித்த உதவிக்கரம் கொடுப்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள். (8:14)
60. ஞானமுள்ள ஆலோசனை கொடுப்பதற்கு திறமையாயிருங்கள். (8:14)
61. தேவனே அவர்களுக்கு வேண்டியவற்றைத் தரும் மூலாதாரம் என்று அவரை நோக்கிப் பாருங்கள். அவர்களுடைய தேவைகளைச் சந்திக்க வேறுபட்ட பல கருவிகளை தேவன் பயன்படுத்தலாம். (8:15)
62. நன்றியுடன் நன்றி செலுத்துங்கள். (8:16)
63. தேவனுக்காக வைராக்கியமாய் இருங்கள். (8:17)
64. உத்தமத்தைப் பற்றிக் கொண்டு குற்றப்படுத்தபடாத படிக்கு பார்த்துக் கொள்ளுங்கள். (8:20)
65. தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் உண்மையாய் இருங்கள். (8:21)
66. நல்ல ஸ்தானாதிபதிகளாக இருங்கள். (8:23)
67. அவர்கள் தனிமையாய் இருக்கவில்லை என்றும் அவர்களும் விசுவாசத்தில் தகப்பன் மனதைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள். (8:23)
68. மக்களை தங்களுடைய விசுவாசத்தையும் ஊழியத்தையம் வெளியே எடுத்துக் காட்டும்படி சவால் விடுங்கள். (8:24)
69. அன்பினாலே ஜெநிபிக்கப்பட்ட இருதயத்தைப் பெற்றவர்களாய் இருங்கள். (8:24)
70. கர்த்தரைப் பற்றி ஜனங்களுக்குப் போதிப்பதற்கு அதை அடிக்கடி திரும்பத் திரும்பச் சொல்லி கற்பிக்கும் முறையை உபயோகியுங்கள். (9:1)
71. கர்த்தர் பேரில் மக்களை ஒரு நேரடியான நேர்மைப் பார்வையைப் பெற்றிருக்கும்படி உற்சாகப்படுத்துங்கள். (9:2)
72. சில சமயங்களில் மக்களுக்குத் தங்கள் சொந்த வார்த்தைகளையே ஞாபகப்படுத்துங்கள். (9:3-4)
73. கொடுக்கிறவர்களாலே பணமானது பேராசையால் கவரப்படாமல் இருக்கும் முன் அதை ஒழுங்காக வசூலித்து விடுங்கள். (9:5)
74. தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். (9:6-11)
75. உதாரத்துவமாய் கொடுப்பது பெற்றுக் கொள்பவனையும் கொடுப்பவனையும் ஆக இருவரையும் ஆசீர்வதிக்கிறது என்பது ஜனங்களுக்கு நினைப்பூட்டுங்கள். (9:13)
76. உதாரத்துமாய் கொடுத்தலானது ஆவிக்குரிய தியாக பலியாக தேவனுக்கு துதி செலுத்துவதற்கு ஒப்பானது என்று ஜனங்களுக்கு போதியுங்கள். (9:12)
77. ஜனங்களுக்குள் இருக்கும் நற்குணத்தைப் புகழ்ந்து பாராட்டுங்கள். ஏனென்றால் மக்கள் முயற்சி செய்து அந்த குணத்தை நிறைவேற்றும்படி தகுதியாக ஜீவிப்பார்கள். (9:13-14)
78. ஆவிக்குரிய தைரியத்தில் அல்லாமல் மாம்சீக தைரியத்தில் இயங்காதிருங்கள். (இது தலைவரை ஜனங்களுக்கு மேல் உயர்த்துவதற்காக தன்னையே வெளிப்படுத்துகிறது.) (10:2-3)
79. கலகம் செய்வதும், கீழ்படியாமையினுடையதுமான உள்ளான வேரைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள். வெளித் தோற்றத்தை குறித்து நிதானிக்க வேண்டாம். (10:5-7)
80. சபையாக மந்தையின் பக்தி விருத்திக்காக அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள். அதன் அழிவுக்காக அல்ல. (10:8)

81. நீங்கள் பேசுகிறபடி ஜீவியுங்கள். ஒருவரையொருவர் மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கொள்ளாதிருங்கள். (10:12)
82. தேவன் அவர்களுக்குக் கொடுத்ததை வைத்து ஊழியம் செய்யுங்கள். ஆனால் மக்களை சமய சார்பான பிதற்றுதல்களால் அவர்களை கவர்ந்து கொள்ள முயற்சி செய்யாதிருங்கள். (10:13-14)
83. உங்களுக்குக் கீழ் இருக்கிறவர்களை அவர்கள் கர்த்தருக்குள் வளரும் பொழுதே பூரணராகும்படி கொண்டு வாருங்கள். (10:15-16)
84. கர்த்தரால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டதையே பற்றி பெருமை பாராட்டுங்கள். அவர்களுடைய இருதயத்தின் அறிந்த அறிவின் பேரிலே பெருமை பாராட்டலாகாது. (10:17-18)
85. உங்களுடைய பாதுகாப்பில் இருக்கிறவைகளை எப்பொழுதும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இடுக்கண் வரும்போது ஒரு கூலியாள் செய்வது போல விட்டு விட்டு ஓடி போகாதிருங்கள். (11:1-3)
86. எப்பொழுதும் ஒரு வேலைக்காரனுடைய ஆவியை வெளிக்குக் காட்டுங்கள். யாருக்கு ஊழியஞ் செய்கிறீர்களோ அவர்களுக்கு பாரமாய் இருக்காதேயுங்கள். (11:5-9)
87. அவர்களுடைய சொந்தத் தேவைகளுக்கு அவசியப்படும் பொழுது கொடுத்து உதவுங்கள். ஜனங்களை மட்டும் எப்பொழுதும் அவ்வாறு செய்யும்படி எதிர்பார்க்காதிருங்கள். (11:7-9)
88. மந்தையாகிய சபையை பொய்யான ஊழியங்களைக் குறித்து எச்சரியுங்கள். ஆனால் சத்துருவின் வழிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். (11:12-15)
89. தேவனுடைய அன்பினாலே எப்பொழுதுமான நோக்கமாயிருங்கள். (11:11)
90. அவர்களுடைய வலிமைக் குறைவிலும் பலவீனத்திலுமே மேன்மை பாராட்ட வேண்டும். அவர்களை ஊழியங்களை விட பெரிதாக மேன்மை பாராட்டும்படி செய்து கொள்ளக் கூடாது. (11:21-20; 30-33; 12:5)
91. துன்பப்படுதலோடு ஜீவியத்தில் கஷ்டத்தையம் அனுபவியுங்கள். அதுவும் மற்ற ஜனங்களை விட அதிகமான சமயங்களில். (11:23-29)
92. அவர்களுடைய பதவிகளினால் உண்டாகும் பொறுப்புகளைத் தாங்குங்கள். அந்த வேலையிலிருந்து விடுபடும்படி பகிர்ந்து ஒப்படைப்புச் செய்யாதிருங்கள். (11:28-29)
93. கர்த்தருக்கு முன்பாக தெளிவான மனச் சாட்சியைப் பெற்று இருங்கள். (11:31)
94. மகத்தான வெளிப்பாடுகள் பெறும் சமயத்தில் தாழ்மையுடன் தரித்திருங்கள். (12:1-4)
95. அவர்களுடைய ஜீவியத்தில் தேவன் இடைபடுகிற நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். (12:5-7)
96. அவர்களுடைய பலவீனத்திலே அவர்களுக்குக் கிருபை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். (12:8-9)
97. பலவீனத்திலும் நான் திருப்தியாய் இருக்கிறேன். (12:10)
98. அவர்களுடைய பலவீனத்திலே தேவனுடைய வல்லமையை அறிந்து கொள்ளுங்கள். (12:9)
99. அவர்களுடைய குறைவுகளைப் பார்த்துக் கொண்டும் ஆனால் அவர்களை தேவன் பார்க்கிற பிரகாரம் பாருங்கள். (12:11)
100. அவர்கள் தங்களைக் குறித்து உயர்வாக எண்ணாமலும் மாயமான தாழ்மையைப் பெற்றவர்கள் அல்லாமல் இருப்பார்களாக. (12:11)
101. அவர்கள் தவறாக இருக்கும்பொழுது அதை ஒப்புக் கொள்வார்களாக. (12:13)
102. ஆடுகளான சபைக்காக ஜீவனை தியாகம் செய்யும் ஜீவியத்தை ஜீவிப்பார்களாக. (12:14)
103. கைம்மாறு கருதாது தாராளமாகக் கொடுங்கள். (12:15)
104. கர்த்தருக்கு முன்பாகவும் அவருடைய ஜனங்களுக்கு முன்பாகவும் நிமிர்ந்து நேராக அவருடைய அடிச் சுவடுகளில் நடவுங்கள். (12:18)
105. அவர்களுடைய ஜீவியத்தின் மேலுள்ள அழைப்பைப் பற்றித் தற்காப்பு அளிக்கும்படியாக உணராதிருப்பீர்களாக. (12:19)

106. முன் பாவஞ் செய்த மக்களுடைய பாவத்திற்காக துக்கப்பட வேண்டியதாய் இருங்கள். (12:21)

107. அவர்கள் சொல்லுகிற காரியங்களுக்காக இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படுத்துங்கள். (13:1)

108. ஆவிக்குரிய அதிகாரத்தை பயன்படுத்தி திருச்சபை ஒழுங்கை நிலைநிறுத்துங்கள். (13:2)

109. அவர்களுக்குள் தேவனுடைய வல்லமையை பெற்றிருங்கள். (13:4)

110. அவர்களை கர்த்தருடைய பார்வையில் சோதித்து அறியுங்கள். (13:5)

111. கர்த்தருக்குள் அவர்களுடைய ஸ்தானத்தை அறிந்திருங்கள். (13:6)

112. தீமையை விட்டு விலகுங்கள். (13:7)

113. சுய நலமற்றவர்களாய் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக மாசற்ற அன்பைக் காட்டுங்கள். (13:9)

114. அன்பு, ஆறுதல், சமாதானம், நற்சீர் பொருந்துதல் ஆகியவற்றைக் கொண்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டி எழுப்புங்கள். (13:11)

## பவுலிடமிருந்து தலைமைத்துவதிற்கான உள்நோக்கு மனத் திறன்கள் - பல தரப்பட்ட தகுதிகள்

“ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும் ஜாக்கிரதையுள்ளவனும் தெளிந்த புத்தியுள்ளவனும் யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும் போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப்பிரியனும் அடிக்கிறவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும் பண ஆசையில்லாதவனுமாயிருந்து தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாக கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையில் விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக் கூடாது. அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்.” (I தீமோத் 3:2-7)

ஒரு தடவை ஒரு நண்பர் எனக்குக் கூறியதாவது, உன்னுடைய சொந்த தவறுகளே இரண்டு சிறிய கால்களின் மேல் நின்று சுற்றிச் சுற்றி, ஓடிக் கொண்டிருப்பது இழிவானதில்லையா? என்றார். இந்தக் கருத்துக் குறிப்பானது நம்முடைய ஆவிக்குரிய குறிக்கோள்களை நாம் சுற்றித் சுற்றி ஓடிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது எவ்வளவு அதிகமாக தெளிவாக இருக்கின்றன என்று மறைமுகமாக சொல்வதற்கு பதிலாக இவ்வாறு சாதாரணமாகச் சொல் என்று எனக்கு ஞாபகப் படுத்தியது. பவுல் அப்போஸ்தலன் இந்த தலைமைத்துவ குறிக்கோள்களை உருவங் கொடுத்து தன் நிருபங்களில் விவரித்துக் கூறினான். அவனுடைய ஜீவியத்தைப் பார்ப்போமானால் அந்தத் தலைமைத்துவத்தை மேலும் சிறப்பாகத் தெளிவானதாகக் காணலாம்.

ஒரு உயர்ந்த தலைவனுக்கு நற்கீர்த்தியானது ஆண்டுகளோடு வளர்ச்சி அடையும். நிச்சயமாக பவுலுடைய நல்லொழுக்க ஆவிக்குரிய மகத்துவம் அவனைப் பற்றி எவ்வளவுக் கதிமாக நாம் படிக்கிறோமோ அப்படியே அதை பிரித்துப் பகுத்துப் பார்க்கிறோமோ அந்த அளவுக்கு பிரத்தியட்சமாக இருக்கிறது. அற்புதமாக தேவன் ஆதிகால கிறிஸ்தவ இயக்கத்தின் வலிமையான எதிர்ப்பாளன் ஒருவனை தெரிந்தெடுத்து அவனை தன்னுடைய முதன்மையான தலைவனாக ஆக்கியது. சாதாரணமான வஞ்சகப் புகழ்ச்சியாகும். பவுல் அப்போஸ்தலன் தனிப்பட்டதோர் விதத்தில் தேவையானவைகள் கொடுக்கப்பட்டு தேவன் அழைத்த அழைப்பின் பங்குக்காக அறியப்பட்ட பலதிறன் வாய்ந்த தலைவர்களில் நிச்சயமாக அவன் ஒருவனே ஆவான். அவனுடைய பல திறன்பாடு ஆனது அவன் எவ்வளவு புத்திசாலிதனமாக வேறுபட்ட பார்வையாளர்களுக்கு தன்னை ஒருங்கிணைத்துக் கொண்டான் என்பதில் பிரத்தியட்சமாக இருக்கிறது. பவுல் எந்த வகையான மனிதர்களாக இருந்தாலுஞ்சரி இராஜ தந்தரிகளோ போர் வீரர்களோ மூத்தோர்களோ, குழந்தைகளோ, இராஜாக்களோ, இராஜாங்க அதிகாரிகளோ யாராய் இருந்தாலும் அவர்களை நேருக்கு நேர் முகமுகமாய் பார்த்து பேசுவான். தத்துவ ஞானிகளோடோ, திருமறை ஞானிகளோடோ, புறமதத்து விக்கிரக ஆராதனைக்காரர்களோடோ சாவதனமாய் இருந்து விவாதிப்பேன். பவுலுக்கு பழைய ஏற்பாட்டைக் குறித்து ஒரு புத்தி சிறந்த புரிந்து கொள்ளும் திட்டம் இருந்தது. ஒரு செல்வாக்கு பெற்ற ரபியான கமாலியேலின் கீழ் கற்றுணர்ந்தான். ஒரு மாணவனாக அவன் யாருக்கும் இரண்டாவதாக இருக்க வில்லை. அவனுடைய சொந்த சாட்சியே கூறுவதாவது, “என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய் என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகுந்த பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.” (கலா 1:14)

எந்த அளவினாலும் ஒரு இயற்கையான தலைவனாக பவுல் ஒரு மகத்தான ஆவிக்குரிய தலைவனாக அவனுடைய இருதயமும் சிந்தனையும் தேவனால் சிறை செய்யப்பட்ட பொழுது அப்படி ஆகிவிட்டான். பவுலுக்கு கிறிஸ்துவை மையமாகக் கொண்ட எல்லையற்ற பேராவல் இருந்தது. அவனுடைய மிகவும் சிறந்ததோர் கிறிஸ்துவுக்கான அன்புடன் கிறிஸ்துவின் செய்தியை பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவன் என்ற உணர்வுடன் ஒருங்கிணைந்து இருந்தது. அவனது வல்லமையான வாழ்நாள் மனப்போக்கு (ரோமர் 1:14; II கொரி 5:14) அவனது அங்கீகரிக்கப்பட்ட பிரச்சார ஊழியத்தின் வெறி அவனை எல்லா விதமான கலாச்சார இனவெறி தடங்கல்களையும் குறித்துத் தாண்டிச்

செல்ல உதவியது. எல்லா மக்களும் அவனுடைய கரிசனையாக இருந்தனர். ஒரு மனிதனுடைய ஐசுவரியமோ, வறுமையோ, சமூக அந்தஸ்ததோ, புத்தி நுட்பமோ, அவனுக்கான அவனுடைய கரிசனையை பாதித்ததில்லை. அவனுடைய ஒரு சாலை கல்வியோடும் அனுபவங்களோடும் பவுல் பரிசுத்த ஆவியின் ஞானோதயத்தையும் அகத் தூண்டுதலையும் மகிழ்ந்தனுபவித்தான். பவுல் கற்பித்த தலைமைத்துவ தகுதிகளும் கிறிஸ்துவுக்குப் பின் முதல் நூற்றாண்டுக்கு ஏற்றவைகளாய் இருந்தது போல இன்றும் ஏற்றவைகளாக இருக்கின்றன. நாம் அவைகளை காலத்தால் பழமையானவைகள் என்றோ தூக்கி எறியவோ அல்லது கவலையீனமாக அவைகளை வெறுமனே பதிலுக்கானவைகள் என்று கருதுவதோ நாம் தைரியமாகச் செய்யக் கூடிய ஏற்புடையதாகாது. I தீமோத்தேயுவிலிருந்து மேற்கோளாக கூறப்பட்ட தெரிவுச் சொல்தான் இந்தப் படிப்புக்காக தலைப்பென்று குறிக்கப்பட்டு ஆவிக்குரிய தலைமைத்துவ தகுதிகளை வரையறுத்துக் கூறுகிறது. அதை மறுபடியும் பார்த்து அதன் பகுதிகளை பகுத்துணர்வோம்.

**சமூகத் தகுதிகள்**

திருச்சபைக்குள் இருக்கும் உறவுத் தொடர்புகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு தலைவர் குற்றஞ்சாட்டப்படாதவராக இருக்க வேண்டும். அவருக்கு விரோதமாக குற்றம் எழுப்பப்பட்டால் அது தோல்வியாகும். ஏனென்றால் அவரது ஜீவியம் குற்றஞ்சாட்டப்பட ஏதுவாக எந்தக் காரணத்தையும் அல்லது தீங்கு செய்ததாக பழியைச் சொல்ல இடந்தராது. அவரது எதிராளிக்கு சகதி வீசி எறிகிற இயக்கத்திற்கோ, வதந்தி பரப்பும் சாதனைக்கோ அல்லது புறங்கூறுதலுக்கோ வசதியாக எந்த விதமான திறப்புகளையும் கண்டு கொள்ள முடியாது.

திருச்சபைக்கு புறம்பே உள்ள உறவுத் தொடர்புகளில் இந்த ஆவிக்குரிய தலைவருக்கு நல்ல நற்பெயர் கொண்டவராக இருக்கிறார். இந்த ஆசிரியருக்குத் தெரிந்த மூப்பர் ஒரு வணிக அதிபதியாக அவர் கர்த்தருடைய நாளிலே அடிக்கடி பிரசங்கம் செய்யும் ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்வதுண்டு. திங்கள் கிழமைகளில் அவருக்கு ஏற்படும் எரிச்சலான மன நிலையைப் பார்த்து அவருடைய வேலையாட்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் என்றைக்கு அவர் பிரசங்கித்தார் என்று அவர்களால் சொல்ல முடியும் என்று அவர்கள் சொல்வது வழக்கமாயிருந்தது. நமது திருச்சபைக்கு வெளியில் உள்ளவர்களுக்கு நமது ஜீவியம் நமது சாட்சியின் எதிர்பார்ப்புக்குக் குறைவாய் எப்பொழுது நடந்தது என்பதை சாதாரணமாகப் பார்க்கக் கூடும். நாம் இப்படி முரண்பாடான மாதிரியான ஜீவியத்தை வாழ்ந்து மக்களை வழி நடத்திச் செல்லக் கூடும் என்று நம்ப முடியாது.

வெளியிடத்தார் விமரிசிப்பார்கள். அப்படி அல்லவென்றாலும் கிறிஸ்தவ ஒழுக்கத்தின் உயர்ந்த குறிக்கோள்களை அவர்கள் மதிப்பார்கள். ஒரு கிறிஸ்தவ தலைவர் உயர்ந்த குறிக்கோள்களால் நிறைந்தவராய் பரிசுத்தமானதும் மகிழ்ச்சிகரமானதுமான ஜீவியத்தை அவிசுவாசிகளுக்கு முன்பாக நடத்துவாரானால் அதே மாதிரியான ஒரு அனுபவத்தையும் அவர்கள் பழக்கப்படுத்திக் கொள்ள விரும்புவார்கள். அந்த மூப்பரின் ஒழுக்கமானது அவிசுவாசியின் மரியாதையைப் பெற்று முன் நடத்திச் சென்று அவருக்குள் நம்பிக்கையைத் தூண்டுதல் செய்தும் அவருடைய பெரும் வேட்கையையும் தூண்டி விடும். முன் மாதிரி என்பது நல்லொழுக்க விதியை விட மிகவும் சக்தி வாய்ந்தது.

**நல்லொழுக்க தகுதிகள்**

கிறிஸ்தவ ஜீவியத்திற்குப் பொதுவான ஒழுக்கத்து குறிக்கோள்கள் எப்பொழுதும் இழிவான தாக்குதல்களுக்கு கீழாகிறது. அவைகளில் பாலியல் விசுவாசத்தைத் தவிர எதுவும் அதிகமாக இலக்காகுவதில்லை. கிறிஸ்தவத் தலைவர் மாசு கற்பிக்கப்படாதவராக இந்த முக்கியமான பிரபலமில்லாத குறிப்பினால் பாதிக்கப்படுகிறார். திருமணமான பங்காளருக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். என்பது வேதாகமத்து நியதியாகும். ஆவிக்குரிய தலைவரானவர் சவாலாக்கப்படக் கூடாது. ஒழுக்கமுள்ள மனிதராக விளங்க வேண்டும்.

ஒரு ஆவிக்குரிய தலைவர் மதுபானப் பிரியர் அல்லாதவராக மதுவுக்கு அடிமையாகக் கூடாது. குடிவெறியினால் இருப்பது ஒழுங்கற்ற தனிப்பட்ட ஜீவியத்தைக் காட்டுவதாகும். மதுபானம் குடி என்பது எங்கிலும் அவமானமாகும். அதிலும் ஒரு கிறிஸ்தவனை சிறையாக்குவது மிக மிகப் பெரிய இழிவாகும். ஒரு தலைவர் ஒரு ரகசியமான பழக்க ஈடுபாட்டை அதுவும் பொதுவான பகிரங்கமான சாட்சிக்கு குழி பறிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது.

**மனோ சம்பந்தமான தகுதிகள்**

ஒரு தலைவர் புத்திசாலியாக ஆரோக்கியமான நியாய உணர்வு உடையவராக இருக்க வேண்டும். இந்த குறிக்கோளானது ஒரு சமநிலையான மனதின் தன்மையை பழக்கப்பட்ட தன்னிச்சையடக்கத்தால் விளைகிற மனப்பாங்கை குறிக்கிறது. அதாவது நமது தினசரி சுய ஒழுங்கான உள்ளான ஒழுக்கத்தால் வருகிற விளைவாகும். இதை சில காரணாகாரிய கச்சை என்றும் இச்சை வெறியின் கடிவாளம் என்றும் குறிப்பிடுவார்கள். பூர்விகக் கிரேக்கர் இந்தத் தகுதியைப் பெரிதும் மதித்தவர்கள் இதை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சிந்தனையாக திடீரென உண்டாகும் தூண்டுதல்களால் அசைந்தாட முடியாதபடி இருக்கக் கூடியவை அல்லது எல்லை மீறி பறக்கக்கூடாதவை என வர்ணனை செய்தார்கள். தைரியம் அல்லது துணிவு என்பது கிரேக்கர்களுக்கு தங்க இடை நிலையாக முரட்டுத்தனத்துக்கும் கோழைத்தனத்துக்கும் கருதப்பட்டது. தூய்மை அல்லது சுத்தம் என்பது அதீதமான நாணத்திற்கும் ஒழுக்கக்கேட்டிற்கும் இடைப்பட்ட நிலையான சிந்தையை உடையவர் தனது ஆளுமைத் தன்மை, பழக்கங்கள் ஆசா பாசங்கள் இவற்றின் ஒவ்வொரு பகுதியின் மேலும் கட்டுப்பாட்டை உடையவராக இருப்பார்.

நன்னடத்தைக்குரிய தலைவர் மரியாதைக்குரியவராவர். ஒழுங்குபடுத்தப்பட்ட ஜீவியமானது ஒழுங்குபடுத்தப்பட்ட சிந்தனையின் கனியாகும். ஒரு தலைவரது ஜீவியமானது தேவனுடைய ஒழுங்கு முறையையும் அவருடைய அழகையுங்கூட பிரதிபலிக்க வேண்டும்.

பின்னர் இந்தத் தலைவர் ஆயத்தமானவராகவும் கற்பிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும். ஒரு தலைவருக்குள் இந்த வாஞ்சைக்காக இந்த நெருப்புப் பொறிக்காக காத்திருந்து கவனித்துப் பார். அது மற்றவர்களுக்கு உதவி செய்யும்படி சந்தர்ப்பங்களை உண்டாக்குகிறது. மேலும் ஆவிக்குரிய ஜீவியத்தின் அர்த்தத்தையும் விளங்கிக் கொள்ளச் செய்கிறது. அந்த தலைவர் ஆவியின் மகிழ்ச்சியில் களி கூறுகிறார். அதனால் மற்றவர்களும் தேவனை அறியும்படியாக விரும்புகிறார். மேலும் ஒரு தலைவர் தனக்குக் கீழ் உள்ளவர்களுக்குப் போதித்தலுக்கான பொறுப்பானது. அவருடைய குற்றஞ்சாட்டப்படக் கூடாத ஜீவியத்தால் ஆதாரப்படுத்தப் பட வேண்டும்.

போதனை செய்வது கடினமான பணியாகும். அதை நன்றாக செய்வதற்கு காலம், ஆயத்தம், படிப்பு, ஜெபம் ஆகியவை தேவையாக இருக்கிறது. ஒருவர் புலம்பியது போல நம்மில் உபாத்தியாயர்களுக்காக, மனிதர்களுடைய இருதயத்தை எப்படியென்று படித்தறியக் கூடியவர்களானவர்கள் தாங்கள் கற்றறிந்த சத்தியத்தை ஜனங்களுடைய தேவைக்குப் பொருந்தும்படி செய்து ஒரு நல்ல மருத்துவர் நோயாளிகளை சோதித்தறிந்து அவர்களுடைய நோய்களுக்கு நிவாரணம் அளிப்பது போலு செய்ய வேண்டும். அங்கே திறந்த மயமானதும் மறைக்கப்பட்டதுமான ஆத்துமா நோய்கள் அதிகக் கொடூரமானதாகவும் நாள்பட்டதாகவும் அதிகமானதாக அளவுக்கு மிஞ்சியதாகவும் ஆழமாக ஆசனத்தில் அமர்ந்திருக்கிறவைகளான நோய்கள் இயேசுவுக்குள் இருக்கும் சத்தியத்தினாலே குணமாக்க முடியும். ஆனால் இது தான் ஒவ்வொரு அவசியத்திற்கும் தேவையான அதே உண்மை அல்ல. எப்படி ஒரே மருந்து ஒவ்வொரு நோய்க்கும் நிவாரணம் ஆக முடியாதது போல இருப்பதாகும். ஆகவே தான் நாம் அயரா உழைப்புடன் வேதத்தை படித்து பரிசுத்த ஆவியின் எப்பொழுதுமான வல்லமையுள்ள ஒளி வெளிச்சத்திற்காக இடைவிடாது ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும்.

ஜாண் வெஸ்லிக்கு இந்த வரங்கள் இருந்தன. அவர் எப்பொழுதும் புத்தி நுட்பத்தை தரம் குறைந்த இகழ்ச்சிக்கு ஈடுபடுத்தாது வேதத்தைப் பற்றிய அறிவை எப்பொழுதும் முன்னேற்றம் செய்யவும் மக்களிடையே ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக்கவும் எப்பொழுதும் முயற்சித்துக் கொண்டிருந்தார். அவர் மதிநுட்பம் பெற்றவரும் ஆங்கில இலக்கியத்தில் மனதில் பதியக் கூடிய மொழி ஆதிக்கம் உடையவராகவும் மதி நுட்ப தாலந்து பெற்றவராகவும் இருந்தார். ஒரு நிபுணரான பிரசங்கியார் புராதன இலக்கியங்களிலும் பொது இலக்கியத்திலும் பரஸ்பரமான அறிவுக்குரிய மகத்தான சாட்சியை கொடுக்கும் வெஸ்லியின் பிரசங்கங்களைத் தவிர வேறு ஒன்றையும் பற்றி தெரியாது என்று பிரகடனம் செய்தார். ஆனால் அவர் ஒரே ஒரு புத்தகத்தை விரிவாக அறிந்த ஒரு நபராக அறியப்பட்டிருந்தார். இந்த விதமான விரிவாக்கம் வேதாகமத்தை மையமாகக் கொண்டு ஆவிக்குரிய உயர்ந்ததோர் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆவிக்குரிய தலைவருடைய மதிநுட்பமான உதாரணமாகக் கருதப்படுகிறது.

**ஒரு மனிதரின் தனித்தன்மைக்கான தகுதிகள்**

நீ ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண்பதை விட ஒரு சண்டையை துவங்குவாயானால் நீ ஒரு திருச்சபையை நடத்துவதாக கருத்தில் கொள்ளாதே. ஒரு கிறிஸ்தவ தலைவர் அன்புடன் பழகுகிறவராகவும் சாந்தமாகவும் சர்ச்சைகளை விரும்பாதவராகவும் இருக்க வேண்டும். அந்தத் தலைவரானவர் சீர்திருத்தம் செய்கிற ஒருவராகவும் நீதிக்குள் இருக்கும் அநீதியை நிவாரணம் செய்கிறவராக இருக்க வேண்டும். அரிஸ்டாட்டில் கற்பித்தாவது ஒரு தலைவரானவர் தீமையை விட நன்மையை ஞாபகத்தில் வைத்திருப்பவராக. ஒரு நன்மையானதைச் செய்கிறதை விட நல்லதைச் செய்தவர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை கற்றுத் தருகிறார். இந்த தலைவர் சுறுசுறுப்பான கரிசனை உள்ளவராக அமரிக்கையாக மட்டும் இருக்காது. ஆனால் நிச்சயமாக விடுபட்டவராக இருக்கக் கூடாது. ஆனால் மனப்போக்கில் நேராகவும் எப்பொழுதும் சமாதானமான தீர்வு காண்பவராக எந்த விதமான வெடித்துச் சிதறும் சூழ்நிலையை சிதறடித்துக் குறைக்கிறவராகவும் இருக்க வேண்டும்.

பின்னர் இந்த தலைவர் அந்நியரை உபசரிக்கிறவராக இருக்க வேண்டும். ஊழியமானது எப்பொழுதுமே தொந்தரவுக் கொடுக்கும் சுமத்தப்பட்ட ஒன்றாகக் காணக்கூடாது. ஆனால் ஊழியம் செய்ய சந்தர்ப்பம் அளிக்கும் சலுகையாகக் கருத வேண்டும். சிலர் சொல்லுகிறபடி ‘‘ஒரு கண்காணியானவன் உபசரிக்கிறவனாகவும் தேவனுடைய வேலைக்காரரை மகிழ்ச்சியுடன் எப்பொழுதும் தன் வீட்டிற்குள் அழைத்து வரவேற்கிறவனாகவும் இருக்க வேண்டும்.’’

பவுல் இந்த நிருபத்தை தீமோத்தேயுவுக்கு எழுதுகிற போது சத்திரங்கள் மிகக் குறைவான எண்ணிக்கையாயும் அசுத்தமாகவும் மேலும் தங்களில் நடத்தப்படும் ஒழுக்கக் கேடான சூழ்நிலைக்கும் பெயர் பெற்றவையாயிருந்தன. விருந்தினரான கிறிஸ்தவர்கள் உபசரிக்கும் திறந்த கதவுகளையே சார்ந்து இருந்தனர். பேராசையும் அதன் உடன் இரட்டையரான பண ஆசையும் ஒரு நபர் தலைவனாவதற்கு தகுதியற்றவனாக ஆக்குகிறது. ஊழியத்தை செய்யும்பொழுது ஒரு தலைவரின் சிந்தனையில் பணத்தால் ஆன வெகுமதி நுழைய முடியாது. ஒரு தலைவர் குறைந்த வருமானத்துடன் கூடிய ஒரு நியமனத்தை உயர்ந்த வருமானமுள்ள பதவியைப் போல் கருதி அதை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**இல்லத்தைக் குறித்த தகுதிகள்**

திருமணமான கிறிஸ்தவத் தலைவர் ‘‘தன் குடும்பத்தை நன்றாய் நிர்வாகம் செய்யும் திறமையை எடுத்துக் காட்டுவதுடன் தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்.’’ (I தீமோத் 3:4) நான் முகத்தில் புன்சிரிப்பற்ற கடின குணமுள்ள ஒரு முற்பிதாவை நகைச் சுவையால் பாதிக்கப்படாதவராகவும் உணர்ச்சிகளால் ஊடுருவப்படாதவருமாகிய ஒரு முற்பிதாவைப் பற்றிய ஓவியத்தை ஒப்புக் கொள்ள முடியாது. ஆனால் பவுல் ஒரு நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்ட இல்லத்தை அங்கே பரஸ்பரமான மரியாதையும் ஆதாரமான ஒற்றுமையும் ஆதார சுருதி அலகுகளாக இருக்கும் வீட்டையே வற்புறுத்திக் கூறுகிறார். வீட்டை ஒழுங்காக வைக்கத் தவறி விடுவது அநேக ஊழியங்களையும் சுவிசேஷ பிரச்சாரகாரர்களையும் தங்களுடைய முழுமையான திறன்பாட்டில் இருந்து விலகச் செய்கிறது.

இந்த இலக்கை அடைய வேண்டுமானால் ஒரு வாழ்கைத் துணைவியானவர் ஒரு தலைவருடைய ஆவிக்குரிய இலக்கை அடையும் பேராவலைப் பகிர்ந்து கொண்டு அவசியமான தியாகச் செயல்களில் சேர்ந்து பங்கெடுத்துக் கொள்ளவும் விருப்ப சித்தத்துடன் இருக்க வேண்டும். அநேகமான தாலந்துள்ள தலைவர்கள் உயர்ந்த பதவிகளையும் ஆவிக்குரிய செயலூக்கத்தையும் ஒத்துழைக்காத மனைவியையுடைய காரணத்தால் அவற்றை இழந்து விட நேரிட்டது. ஒரு நற்செய்கையான நன்மை செய்கிறதும் மகிழ்ச்சியான ஒழுங்கும் ஒரு வீட்டில் இல்லை என்றால் ஒரு கிறிஸ்தவ ஊழியக்காரரை ஒரு ஊழியத்தைத் தாங்கி நிர்வாகம் செய்யும்படி எதிர்பார்க்கக் கூடுமா? குழந்தைகள் கட்டுப்பாடின்றி நடந்து கொண்டால் விருந்தினரை உபசரிக்க முடியுமா? ஒருவருடைய சொந்த குடும்பமானது ஒரு ஒழுங்கற்றதாக இருக்குமானால் மற்ற குடும்பங்களுக்கு செய்யும் ஊழியம் செயலூக்கத்துடன் இருக்க முடியுமா?

**முதிர்ச்சி**

ஆவிக்குரிய முதிர்ச்சியானது ஒரு நல்ல தலைமைத்துவத்திற்கு இன்றியமையாதது. ஒரு புதிய வார்த்தைப் பாடு எடுத்தவர் அல்லது புதிய விசுவாசியைத் தலைமைத்துவத்திற்குள் தள்ளி விடக்

கூடாது. ஒரு தாவரமானது கீழ்நோக்கி வேர்களை வளரச் செய்து காலம் எடுத்துக் கொண்டு முதிர்ச்சியை அடைய வேண்டும். இந்த நடைமுறையை விரைவு படுத்த முடியாது. அந்த வித்தானது கீழ்நோக்கிப் போகும்படி வேரெடுத்து தான் மேல் நோக்கிச் சென்று கனிகொடுக்கும் முன்னதாக அவ்வாறு வளர வேண்டும். புதிய அனுபவமில்லா ஊழியர்கள் அபரிமிதமாக தாவரத்தை வளரச் செய்து அவைகளை சிலுவையால் வெட்டி கிளை திருத்தப்படாமல் இன்னும் இருந்தால் அவ்வாறு அடர்த்தியானதாக இலைகள் பெற்றிருக்கும். I தீமோத் 3:10ல் உதவிக்காரர்களுக்குரிய தகுதிகளைக் குறிப்பிடும்பொழுது ''அவர்கள் முன்னதாக சோதிக்கப்பட வேண்டும்'' என்று வற்புறுத்துகிறார்.

தீமோத்தேயு எபேசு சபைக்கு போதகராக நியமிக்கப்பட்ட பொழுது அது 10 ஆண்டுகள் வயது நிரம்பப் பெற்றிருந்தது. இந்த திருச்சபையில் ஒரு நட்சத்திர கூட்டமான தாலந்தைப் பெற்ற போதிப்பவர்களைப் பெற்றிருந்தபடியால் அங்கே அனுபவ முதிர்ச்சி பெற்ற அநேக மனிதர்கள் இருந்தார்கள். ஆகவேதான் புதிய ஊழியர்கள் முதிர்ச்சி அடையும் பவுலுடைய வற்புறுத்துதலானது மற்றவர்களைப் போல் வயது வந்தவர்களாக அல்ல. ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக வேர் விட்டு கனி கொடுக்கும்படி அவசியமாயிற்று. ஆனால் பவுல் முதிர்ச்சி பெறுவதைத் தகுதியாக ஒரு புதிய ஸ்தாபனத் திருச்சபையைக் கிரேத்தா தீவில் நடத்துவதற்காக வற்புறுத்தவில்லை. (தீத்து 1:5-9) ஏனென்றால் அங்கு முதிர்ச்சி பெற்ற அங்கத்தினர்கள் பிரசன்னமாயிருக்க வில்லை. ஒரு திருச்சபையைக் கட்டுகிற ஆரம்ப காலங்களில் நாம் முதிர்ச்சி பெறுவதை வற்புறுத்த முடியாது. ஆனால் அந்த ஊழியத்தை முன்னேற்றம் செய்யும் ஊழியர்கள் ஒழுக்கத்தில் ஸ்திரமாகவும், ஆவிக்குரிய புறநோக்கும், பதவிக்காக பேராசைப்படாதவர்களாக இருக்கும்படியாக ஒவ்வொரு எச்சரிக்கையையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பவுல் எச்சரிக்கை விடுப்பதாவது, ஒரு நபர் தலைமைத்துவத்திற்கு தயாராக இல்லாமல் அதின் பங்கில் புகுத்தி விடப்படுவாரானால் ஒரு கால் அவர் இறுமாப்புடையவராகி பிசாசானவன் அடைந்த அதே நியாயந்தீர்ப்பில் விழும்படி ஆவான். (I தீமோத் 3:6) ஒரு புதிய விசுவாசிக்கு மக்களை விவேகத்துடன் நடத்துவதற்கு அத்தியாவசியமான ஆவிக்குரிய ஸ்திரத் தன்மையைப் பெற்றிருக்க முடியாது. முக்கியமான உயர்ந்த தலை ஸ்தாபனங்களை அதிகமான ஆரம்ப கால கட்டங்களில் வருங்காலத்தில் கூட சிறப்பாக பணியாற்றக் கூடிய வெளிப்படையான தாலந்துகளையுடையவர்களுக்குக் கொடுப்பது விவேகமற்றதாகும். ஏனென்றால் அது அவர்களைக் கெடுத்து விடக் கூடும். திருச்சபை வரலாற்று கதையிலிலும் அதன் சுவிசேஷ பிரச்சாரத் திட்டங்களிலும் இவ்வாறு விரைவில் நியமனம் பெற்றவர்களின் தோல்வியைப் பற்றிய உதாரணங்கள் நிரம்பப் பெற்றுள்ளன. திடீரென புதிதாக மற்றவர்கள் அதிகாரத்தில் நியமிக்கப்பட்டு இருப்பார்களானால் அதனால் அதிகமாக இறுமாப்புக் கொள்ளும் சுயத்தால் உண்டாகும் அபாயத்தைச் சந்திப்பார். அதற்கு பதிலாக இந்த முன்னேற்றமுள்ள விசுவாசியானவருக்கு தாழ்ந்த அந்தஸ்தில் உள்ளதும் முக்கியத்துவம் குறைந்துள்ளதுமான பணிகளில் ஊழியம் செய்யும்படியாக விரிந்ததோர் சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும். அப்படி செய்வதால் அவைகள் அவருடைய இயல்பானதும் ஆவிக்குரியதுமான வரங்களை விருத்தி செய்து கொள்ள முடியும். அவரை விரைவாக முன்னேற்றுவித்தால் அவர் இறுமாப்பு அடைய முடியாது. அவரை வெளிக்குத் தெரியாதபடி அடைத்து வைப்பதோ அதைரியப்படுத்தவோ கூடாது.

பவுல் தனது முதல் சுவிசேஷ பிரச்சாரப் பயணத்தில் தான் சென்ற ஒவ்வொரு இடத்திலும் மூப்பர்களை நியமிக்க வில்லை. சில சமயங்களில் மற்றொரு சுவிசேஷ பயணத்திற்காக காத்திருந்தார். அப்படிப்பட்ட நேரங்களில் ஆவிக்குரிய அபிவிருத்தியைப் பற்றிய கேள்விகளுக்கு திருப்தியாக பதில் தந்த பிறகே அதைச் செய்வதற்காக காத்திருந்தார். (அப் 14:23) தீமோத்தேயு பவுலின் முதல் சுவிசேஷ பிரயாணத்தின் போது இரட்சிக்கப்பட்டார். ஆனால் இரண்டாவது பிரயாணம் வரைக்கும் அர்ப்பணிக்கப் படவில்லை.

முதிர்ச்சி என்பது ஒரு தயாளமான ஆவி நிறைந்ததும் விசாலமான தரிசனத்தாலும் காட்டப்படுகிறது. பவுலுக்கு கிறிஸ்துவுடன் ஏற்பட்ட எதிர்பாராத சந்திப்பு அவனை குறுகிய மனப்பான்மையான வைராக்கியத்தில் இருந்ததிலிருந்து முழு மனதுடன் செயல்படும் தலைவனாக மறுரூபப்படுத்தினது. அவனுக்குள் வாசம் செய்த கிறிஸ்து மற்றவர்களுக்காக அவனுடைய கட்டுக்கடங்கா உணர்ச்சியை விசாலப்படுத்தி அவனுடைய உலகத்தைப் பற்றிய நோக்கப் பார்வையை விரிவுபடுத்தியும் அவனுடைய திடமான நம்பிக்கைகளை ஆழப்படுத்தியது.

இந்தத் தலைமைத்துவத்திற்காக மேலே கூறப்பட்ட கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு அவசியத் தேவைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி மதச் சார்பற்ற வட்டங்களிலும் ஒப்புக் கொள்ளப் படுகிறது. ஒரு அவிசுவாசியானவர் இலட்சிய தளத்து தளபதியாக வருணிக்கப்படுபவர், "அவர் விவேகம் உள்ளவராக தன்னடக்கம் உடையவராக சாந்தமும், சிக்கனமும், இடைவிடாத உழைப்பும், மதி நுட்பமும் பணத்தின் மேல் ஆசையில்லாதவராக இளைஞராக அல்லாமலும் அதிக வயது சென்றவராக அல்லாமல், கூடுமானால் குடும்பத் தலைவரான தகப்பன் சாதுரியமாகப் பேசுகிறவராகவும் நற்கீர்த்தி உடையவராகவும் இருக்க வேண்டும்." சாதாரண உலகமானது தனது தலைவர்களுக்கு இடையே இப்படிப்பட்ட தராதரத்தை வேண்டுமானால் ஜீவனுள்ள தேவனுடைய திருச்சபையானது தனது தலைவர்களை எவ்வளவு அதிகமான முன்னெச்சரிக்கையுடன் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

**பின் குறிப்பு**

பொறுப்பை விருப்ப சித்தத்துடன் ஏற்பது ஒரு தலைவருக்கான அடையாளமாகும். யோசுவா மனிதனாக இருந்தான். சரித்திரத்தில் மகத்தான தலைவர்களில் ஒருவனாகிய மோசேயைப் பின்பற்றிச் செல்வதற்கு அவன் தயங்கவில்லை. மோசே போதாது என்று காரணங்காட்டிச் சொல்வதற்கும் அதிகமான காரணங்கள் யோசுவாவுக்கு இருந்தது. ஆனால் யோசுவா மோசே செய்த பாவத்தைத் திரும்ப செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவனுக்குத் தரப்பட்ட அந்தப் பணியை உடனடியாக ஏற்றுக் கொண்டு அந்த வேலையைத் தொடங்கும்படி செயல்பட்டான். எலியாவும் மேலே (பரலோகத்திற்கு) எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு எலிசாவும் அதற்குள் அடியெடுத்து வைக்க பின்வாங்க வில்லை. அந்த விழுந்த சால்வையினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அவன் ஏற்றுக் கொண்டு அவனுடைய சொந்த உரிமைப் படியே அவன் தலைவனாக ஆனான். இந்த ஒவ்வொரு காரியத்திலும் அந்தத் தலைவர்களுக்கு தெய்வீக அழைப்பு நிச்சயப்படுத்தப்பட்டது. ஒரு தடவை அந்த சர்ச்சையானது ஒழுங்கு செய்யப்பட்டால் தேவன் அவர்களுக்கு முன் வைத்ததைச் செய்வதற்கு யாரும் தயங்க வேண்டுவதில்லை.

வேறொரு சகாப்தத்தில் வாழ்ந்த கீர்த்தி பெற்ற கண்காணியானவர் ஜீவியத்திற்காக முன் வைத்த நியதிகள் இன்றைய நாட்களுக்கும் பொருத்தம் உடையதாக இருக்கிறது.

- ஜெபத்தையும் வேத வாசிப்பையும் முடித்த பிறகு ஆர்வத்துடன் அந்த நாளின் முக்கியமான வேலையை ஆரம்பிக்கவும்.
- உன்னுடைய சுறுசுறுப்பையும் குறுகிய கால அவகாசத்தைப் பற்றியும் முறுமுறுக்காதே. ஆனால் எல்லாவற்றைச் சுற்றிலும் காலத்தை கிரயம் பெற்று ஆதாயப்படுத்திக் கொள்.
- தபால் கடிதப் போக்குவரத்துக்கள் உள்ளே கொண்டு வரப்படும்பொழுது முறுமுறுக்காதே.
- கடமைகளை பாரச் சுமையின் கீழ் கஷ்டப்படுவது போல தோன்றுவதால் அதை பெரிதுபடுத்திக் கூறாதே. ஆனால் எல்லா பொறுப்புகளையுமே சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் ஏற்று நடத்துக.
- கூட்டமான வேலைகளுக்காக அல்லது மிகவும் கனவீனமான அனுபவங்களுக்காக மற்றவர் கவனத்தை ஒரு போதும் கவராதே.
- எதிர்ப்புக்கோ கண்டனத்திற்கு முன்னதாக தவறு இழைத்த அந்த ஒருவருக்காக தேவனிடமிருந்து உண்மையான அன்பைப் பெற்றுக் கொள். அல்லவென்றால் உன்னுடைய நல்நோக்கத்துடன் செய்யப்பட்ட கண்டனமானது எவ்வளவு பயனற்றதாகவோ, தெளிவற்றதாகவோ ஒரு வேளை சினத்தை எழுப்பக் கூடியதாகவும் ஆகலாம்.
- நீ கேள்விப்படுகிற ஒவ்வொன்றையும் நம்பாதே. புறங்கூறுதலையும் பரப்பாதே.
- பாராட்டப்படுதலையும், நன்றிக் கடனையும் மரியாதையையும் அல்லது முன்னர் பணி காலத்திற்காக அன்பான உணர்வுகளைத் தேடாதே.
- உன்னுடைய ஆலோசனை அல்லது அபிப்பிராயம் கலந்து ஆலோசிக்கப்படவில்லையானும் கலந்து ஆலோசித்து புறக்கணித்து வைத்து விடப்பட்டாலும் புகார் செய்வதைத் தவிர்த்து விடு.

- வேறு யாருடனாவது உன்னை உனக்கு சாதகமான முரண்பாட்டில் வைத்துக் கொள்வதற்கு அனுமதிக்காதே.
- உன்னுடைய சொந்தத் தேவைகளுக்காகவோ கரிசனைக்காகவோ சம்பாஷணையைப் பொறுத்தவரை அழுத்தம் கொடுக்காதே.
- உனக்கு எந்த விதமான சலுகைகளையோ, பட்சபாதங்களையோ தேடாதே. உனக்கு இளகிய மனதுடன் இருக்கும்படியும் கேட்காதே. உன் வழியில் வருவதை ஏற்றுக் கொள்.
- பழியை உன் மேல் ஏற்றுக் கொள். அதை பகிர்ந்து கொள்ளவோ மாற்றி விடுவதற்கோ முயற்சிக்காதே.
- உன்னுடைய சொந்த வேலைகளுக்கோ அல்லது குறிக்கோள்களுக்கோ கொடுக்கப்படவேண்டிய மதிப்பு மற்றொருவருக்குக் கொடுக்கப்பட்டால் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவாயாக.

# வேதாகமத்தின் ஆவிக்குரிய அதிகாரத்துவத்தை விளங்கிக் கொள்ளுதல்

## அதிகாரம் 1 - இராஜ்ஜியத்தின் அதிகாரத்துவம்

இந்த உலகம் எப்பொழுதுமே சந்தித்திராத ஒளிக்கும் இருளுக்கும் இடையே நடக்கும் ஒரு மிகப் பெரிய போராட்ட கால கட்டத்திற்குள் வந்திருக்கிறோம். இது ஆண்டாண்டு காலமாக நடக்கும் போராகும். இது அச்சத்திற்கான காலமும் அல்ல. நாம் ஏற்கனவே வெற்றி சிறந்த கொடியின் கீழ் நிற்கிறோம். சிலுவை என்பது தேவனுடைய வல்லமையாகும். அவருடைய வல்லமையானது இதற்கு முன் எந்தக் காலத்திலும் பூமியில் வெளிப்படுத்தப்படாத வண்ணம் உலகத்தில் வெளிப்படுத்தப்படப் போகிறது. நமது ஸ்தானத்தை பூரணமானதோர் ஒப்படைப்போடு சிலுவையின் சத்துருக்களுக்கு முன்பாக புறங்காட்டாதபடி, எடுத்துக் கொள்ள வேண்டியதற்கு இதுவே நேரமாகும். இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை எல்லா சத்துருக்களுக்கும் விரோதமாக செயல்படும். நாம் அது வெளிப்படுத்தப்படப் போகும் நேரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறோம்.

கர்த்தர் சொன்னதாவது, ''அறுப்பு உலகத்தின் முடிவு.'' (மத் 13:39) இந்த அறுப்பானது நல்லதோ கெட்டதோ விதைக்கப்பட்ட ஒவ்வொன்றையும் அறுவடை செய்வதாகும். மிகவும் மகிமையானதும் வல்லமையுடையதுமான திருச்சபை வெகு விரைவில் மிகுந்த ஆழமான அந்தகாரத்தை எதிர்கொள்ள வேண்டிருக்கிறது. வழிபாடுகளும் வேறுபட்ட மதக் குழுக்களும் போதனைகளும், புதிய சகாப்தமும் (மற்ற மார்க்கங்களுடன் கலந்த கலப்படமான இந்து மதம்) ஆகிய வல்லமைகள் தீடீரென்று அதிகரித்திருக்கிறது. ஆனால் இந்த தீங்கான தாக்குதலைச் சந்திப்பதற்கு கர்த்தர் தமது மக்களுக்குத் தேவையான பலமில்லாமல் விட்டுவிடவில்லை. வெள்ளம் போல் சத்துரு வரும்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடி ஏற்றுவார். (ஏசாயா 59:19) இவ்வாறு வழிபாட்டு அமானுஷயமான வல்லமைகள் வளர்ந்து கொண்டிருக்கும் காலத்தில் இந்த திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட அமானுஷ்யமான வல்லமை மென்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தேவன் தீர்க்கதரிசிகளை எழுப்பும்படி ஆரம்பித்திருக்கிறார். அதாவது சத்துருவின் தந்திரங்களை முன்னறிந்து திருச்சபையானது தன்னுடைய தீய யுத்த தந்திர யுக்தியை சாத்தான் செயல்படுத்த முயற்சிக்கும் முன்னர் திருச்சபையானது பதிவிருந்து தாக்கி முறிய அடிக்கக் கூடும்படி அவ்வாறு செய்கிறார். இது அடிக்கடி அதிகமான எண்ணிக்கையில் நேரிடுவதால் இந்த ஊழியத்திற்கு திறந்தவர்களாயிருப்பவர்களுக்கு அந்தப் போரில் குறிப்பிடத்தக்க அனுகூலத்தைத் தருகிறது.

அந்த சத்துருவினால் நாம் பக்கக் குருடராக ஆகிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இந்த எதிர் போராட்டத்திற்காக கர்த்தர் ஒரு சேனையை எழுப்பிக் கொண்டிருக்கிறார். இவை அந்த சத்துருவின் வல்லக் கோட்டைகளைத் தெய்வீக வல்லமை பெற்ற போராட்ட ஆயுதங்கள் தாக்கி விடும். நாம் புதிய சகாப்த்தத்தும் மற்ற வழிபாட்டு முறைகளுக்கு முன்பாக கூனி குறுகி நிற்காமல் அவைகளை அறுவடை வயல்களாகவே பார்க்க வேண்டும். என்னவென்றாலும் இந்த சகாப்தத்தின் முடிவு காலத்தை நோக்கி நாம் போய் கொண்டிருக்கையில் இந்த ஒளிக்கும் அமானுஷ்யமுள்ளதாகும். அமானுஷ்யமான நடுநிலைமையின் நாள் முடிந்து விட்டது. நாம் தேவனுடைய ஆவியின் மெய்யான வல்லமையை அறிந்திருக்காவிட்டால் நாம் மேலும் அதிகமாக தீயவனுடைய பலத்துக்கு அடிமையாகி விடுவோம். எவரெவருடைய அச்சங்களும், தத்துவங்களும் தேவனுடைய அமானுஷ்யமான வல்லமையைக் கூட புறக்கணித்து விடும்படியாக வழி நடத்திச் சென்றதோ அவர்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் அமானுஷ்யமான அந்த பொல்லாத வல்லமைக்கு எளிதான வேட்டையாடப்படும் விலங்காக தங்களைக் கண்டு கொள்வார்கள். நாம் ஈடுபட்டிருக்கும் போரின் தன்மையை நாம் அறிந்து கொண்டு வெற்றி அடையும்படியாக போர் செய்ய வேண்டும். சாத்தானும் அவனுடைய சேனையான தூதர்களும் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டு மேலும் மிகுந்த சீற்றத்துடன் கீழே பூமிக்கு வந்து கொண்டிருக்கிற கால கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். அவர்கள் நியாயமாகப் போரிடுவதோ அல்லது மனுஷீக நிபந்தனைகளின் பேரிலோ போரிட மாட்டார்கள். அவர்கள் தங்களுக்குள் இருக்கும் ஒரு சிறு அளவு பலத்துடனும் போரிடுவார்கள். திருச்சபையானது நமக்கு தேவன் இந்த போரை நாம் நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு வழங்கும் எந்த சிறிதளவு வல்லமையோடும் போர் செய்வதற்காக தகுந்தவாறு ஆயுதம் தரித்திருக்க வேண்டும்.

**மனிதர்கள் அமானுஷ்யத்தில் நடக்கவே சிருஷ்டிக்கப்பட்டார்கள்**

மனிதர்கள், தேவனோடு ஒருமித்து ஐக்கியத்தில் இருக்கும்படியாகவே படைக்கப்பட்டார்கள். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கமே ஆவியான தேவனுடன் ஐக்கியத்தில் ஒருமித்து இருக்கவும் அவரை ஆவியில் தொழுது கொள்ள (ஊழியம் செய்ய)வும் வேண்டும். ஏனென்றால் அவருக்குள் ஒரு வெறுமையானது உள்ளிருந்து அவரை ஆவிக்குரியதும் அமானுஷ்யமானதற்குள் இழுத்துக் கொள்கிறது. இது மெய்யான ஆவியால் நிறைவேற்றப்படாவிட்டால் நாம் தவறு செய்யும் ஆவியால் வஞ்சிக்கப்படுவோம். மனிதனுக்குள் இருக்கும் ஆவிக்குரிய சூன்யம் (வெறுமை) நிரப்பப்பட்டு விடும். ஒருவர் குறிப்பிட்டுச் சொன்னது போல, ''ஒரு மனிதனுக்கு உணவை நீ மறுத்தால் அவன் விஷத்தை விழுங்கி விடுவான்'' என்பதாகும். மனிதர்களுக்கு தேவனுடன் அமானுஷ்யமான உறவுத் தொடர்பு கொள்ளும் உரிமையை மறுக்கப்பட்டால் அவர்கள் ஒடுக்கப்படுதலுக்கும் அமானுஷ்யமான தீய சக்திகளின் வஞ்சிக்கப்படுதலுக்கும் ஆளாக்கப்படுவார்கள்.

**சோதனை**

தேவன் மனிதர்களை வஞ்சிப்பதுமில்லை. அவர்களைச் சோதிப்பதுமில்லை. இந்த சோதனைகள் முன்னேற்றத்தை நோக்கங்களாகக் கொண்டவை. நீ ஒரு பாடசாலையில் அடுத்த மட்டத்துக்குப் போக தகுதியுள்ளவன் என்பதை நிரூபிப்பதற்காக நீ பரீட்சைகளில் தேறியிருக்க வேண்டியது போலவே, நம்முடைய ஜீவியத்திலும் தேவனால் அனுமதிக்கப்பட்ட பரீட்சைகள் இருக்கின்றன. ஆகவே அவர் நம்மை அதிகமான ஆவிக்குரிய அதிகாரத்தோடு நம்மை நம்பக் கூடும்படி அப்படி செய்கிறார். பரீட்சைகள் தேவனுக்காக அல்ல. இந்த பரீட்சைகள் நமது இருதயத்தில் உள்ளவைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தை மட்டும் கொண்டவை அல்ல. நமது இருதயங்களை மாறுதல் அடையும்படி செய்வதற்காகும். இந்த பரீட்சைகள் நம்மை நமது எஜமானருடைய உபயோகத்திற்காக தகுந்த பாத்திரங்களாக வனையப்படுகிறது. உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்தில் நடக்கும்படியாக அழைக்கப்படும். ஒவ்வொருவரும் தேற வேண்டிய முதன்மையான பரீட்சையாவது ஒதுக்கித் தள்ளும் பரீட்சையாகும்.

இவ்வாறு ஒதுக்கித் தள்ளும் பரீட்சையானது தேவனுக்கு அவருக்குத் தாமே மிகவும் கடினமான பணியாக இருந்திருக்கும். அவர் தம்முடைய சீஷர்கள் எல்லாராலும் தமக்கு அவர்கள் அதிகமாக தேவைப்பட்ட நேரத்தில், அவர்களால் கைவிடப்பட்டதை அவர் சகித்துக் கொள்ள வேண்டியதிருந்ததும் அல்லாமல் அவர் உலகத்தின் பாவத்தை தம்மேல் சுமந்து கொள்ளும்படி ஏற்றுக் கொண்ட போதும் பிதாவால் கைவிடப்பட்டு போனதையுங்கூட சகிக்க வேண்டியதிருந்தது. இந்த உன்னதமான அதிகாரத்து பதவிக்கு அழைக்கப்பட்ட அந்த ஒருவரே அந்தக் கடினமான கைவிட்டு விடப்படும் சோதனையில் தேற வேண்டியிருந்தது. இது எதன் காரணத்தினால் என்றால் <u>**அதிகாரத்துவமானது அடிப்படையில் நாம் மற்றவர்களுடனும் தேவனுடனும் நமக்கு வல்லமையும் செல்வாக்கும் அளிக்கப்படும் பொழுது எப்படி உறவு கொள்ளுகிறோம் என்பதில் இருக்கிறது.**</u> இது பரீட்சையானது. தங்கள் இருதயங்களில் உண்மையாய் இருப்பவர்களை அரசியல் சம்பந்தமாக நலம் அளிக்கும் காரியங்களில் எது வரைக்கும் அளிக்குமோ அது வரைக்கும் கீழ்படிந்துள்ளவர்களிடமிருந்து பிரித்தெடுக்கிறது. எவ்வளவுக்கு அதிகமாக ஆவிக்குரிய அதிகாரத்துவத்தில் நடக்கும்படி அழைக்கப்படுகிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக இந்த பரீட்சையானது அவ்வளவுக்கு அதிகமாக இது வழக்கமாக நமது ஜீவியத்திலும் இருக்கும். சகல அதிகாரமும் வல்லமையும் ஆளுகையும் இயேசுவுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர் முற்றிலுமாக கீழ்படிந்து இருந்தார். நாமும் கீழ்படிந்திருந்தால் அதிகாரத்துடனும் வல்லமையுடனும் ஆளுகையுடனும் நம்மை நம்ப கூடிய அளவுக்கு நம்மிடம் அவை ஒப்புவிக்கப்படும். உண்மையான இயேசுவின் ஊழியமாவது ஒரு வல்லமையான ஊழியமாகும். ''அவர் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினார்.'' (அப் 1:1) நாமும் அவரைப் போல இருந்து அவர் செய்த வேலைகளையே செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நமக்கும் இதைச் செய்ய வல்லமை இருக்க வேண்டும். இந்த வல்லமையால் இடை கட்டப்பட்டு இந்த வல்லமை நமக்கு ஒப்புவிக்கப்பட வேண்டுமானால் நாம் இதற்கு நம்பிக்கையுள்ளவர்களென்று நிரூபிக்கப்பட வேண்டும். நாம் மனுஷீக ஒப்புக் கொள்ளுதலையோ அல்லது அங்கீகாரத்தையோ நேசிப்பதை விட சத்தியத்தை மென்மேலும் அதிகமாக நம்ப வேண்டும். நமது சொந்த பிராணனை நாம் நேசிப்பதை விட நாம் அதில் அதிகமாக அன்பு கூற வேண்டும். அந்த வல்லமையில் கேடு உண்டாக்கும் சக்தி இருக்கலாம்.

ஆகவே தான் ‘‘வல்லமை கேடு உண்டாக்கும். பூரணமான வல்லமை பூரணமாக கேடுண்டாக்குகிறது’’ என்று அடிக்கடி சொல்லப் படுகிறது. அங்கே இதற்கான உண்மை இருக்கிறது. அதன் காரணமாகவே தான் ஏன் நாம் முற்றிலும் சரியாகப் பரீட்சிக்கப்படவேண்டும். அதுவும் மெய்யான வல்லமையை நமக்கு ஒப்புவித்து நம்புவதற்கு முன்னால் அவ்வாறு செய்யப்பட வேண்டும்.

இந்த புதிய சகாப்தத்திலும் மற்றும் வழிபாடுகளிலும் அங்கே அதே சமயத்தில் மிக அதிகமாக விடுவிக்கப்படும் போலியான வல்லமையும் உண்டு. அவைகள் சாத்தானிய மூல ஆரம்பத்தில் துவங்கும் அமானுஷ்யமான அனுபவங்களையே வலியுறுத்துகின்றன. அவைகள் வேதாகமத்து அனுபவங்களை போலவே ஒன்று போன்ற அனுபவங்களின் பிரதி மூலங்களாகும். அவர்கள் தேவனுடைய மனிதர்களும் ஸ்தீரிகளும் நடந்து உள்ளே வரும்படி அழைக்கப்பட்ட வல்லமையை போலவே போலியாக செய்து நடித்து விடுகின்றனர். ஆகவே தான் ஏன் போலி நாணயங்கள் இருக்கின்றன என்பதற்கு ஒரே காரணமாவது நிஜமான பணம் புழக்கத்தில் இருப்பதனால் தான். சாத்தான் இதை தன் சொந்தக் காரணங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறான். ஆனால் கர்த்தர் தனது கடைசி கால ஊழியத்தை நிறைவேற்றும் படியாக அதிகமான வல்லமைக்குள் நடக்க வேண்டியவர்களைச் சோதிப்பதற்காக அவைகளை அனுமதிக்கிறார். இந்த விதமான சாத்தானிய செயல்பாடுகளின் அதிகரிப்பு இருக்கிறது. ஏனென்றால் நிஜத்தின் அதிகரிப்பும் அங்கு இருக்கிறது. இது திருச்சபையைக் குழப்பம் செய்யும் நோக்கத்துடனே செய்யப்படுவதாகும். ஏனென்றால் திருச்சபையானது உண்மையான வரங்களையும் அனுபவங்களையும் ஒதுக்கி விலக்கி விடும். இந்த வரங்களின் தாக்கமானது கடைசி நேரத்தில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற உதவி செய்யக் கூடும் என்பதை சாத்தான் நன்றாக அறிவான். சாத்தான் ஆனவன் இப்படிப்பட்ட சாத்தானிய நடவடிக்கைகளால் அந்த அமானுஷ்யமான வல்லமைக்குள் நடக்கும்படியாக அழைக்கப்பட்டவர்களான கிறிஸ்தவர்களை வஞ்சிக்கும்படியாக முயற்சிக்கிறான். ஆனால் அவர்கள் அடிக்கடி திருச்சபையால் புறக்கணிக்கப்பட்டும் தப்பாகப் புரிந்து கொள்ளப்பட்டும் பரிசுத்த ஆவியினுடைய ஊழியத்தின் வல்லமையை அறியாதவர்களாகவோ அல்லது புரிந்து கொள்ளாதவர்களாகவோ இருப்பார்கள். இந்த ஒதுக்கி விடப்படுதல் என்ற பரீட்சையில் நன்றாகச் செய்யாதவர்கள் எப்பொழுதுமே சாத்தானுடைய வஞ்சனைக்கு இலக்கான ஆளாவார்கள்.

தேவனுடைய மனுஷன் / ஸ்தீரி ஒவ்வொருவருக்குமே ஒதுக்கி விலக்குதல் அல்லது புறக்கணித்தல் வருகிறது. அவருடைய ஊழியர்களுக்கு இதை அவர் அனுமதிப்பது அவர்கள் அவருடன் முற்றிலுமாக அதிகமாக அடையாளப்படுத்திக் கொள்ளுவதற்காகவே அப்படி செய்கிறார். மிகவும் மாண்புள்ள சுத்தமான மனிதர் இந்த உலகில் நடந்தது உண்டானால் அவரை அடிக்கடி புறக்கணித்து, நிந்தித்து, அவரைப் பற்றி பொய்யைச் சொல்லியும் ஏன் காட்டிக் கொடுத்துங் கூட மறுதலித்தும் அவருடைய சொந்த நண்பர்களாலே கைவிடப்பட்டும் போனார். அவர் விளக்கிக் கூறிய பிரகாரம் சீஷர்கள் குருவுக்கும் மிஞ்சி மேலானவர்கள் அல்ல என்பது அவருக்கும் நேரிடுமானால் அது நமக்கும் நேரிடவும் கூடும். ஆனால் இது நமக்குரிய சந்தர்ப்பம் ஆகும். இந்த விதமான மகத்தான அநீதிகளை இந்த மகத்தான அன்பினால் எடுத்து வெளிக்குக் காட்ட முடியும். நம்மில் எத்தனை பேர் இன்று அடுத்த மறுநாள் நமக்கு உற்ற நண்பர்கள் நம்மைத் தெரிந்திருந்துங்கூட மறுதலிக்கப் போவார்களேயானால் அவர்களோடு ஒரு மாலைப் பொழுதைக் கழிக்கும்படி யோசித்திருப்போமா? அவர் அவர்களுடைய கால்களைக் கூட கழுவினார். (அவர்) இயேசு தமக்கு சொந்தமானவர்களை அவர்களுடைய நடத்தையைக் கூட பொருட்படுத்தாது அவர்களை நேசித்தார். அவர்கள் அவ்வாறு இல்லாமல் இருந்தாலுங்கூட அவர் அவர்களுக்கு உண்மையாக (விசுவாசமாக) இருந்தார். நாம் புறக்கணித்து அவதூறு செய்யப்படுகிறதை விட தேவனுடைய மெய்யான அன்புக்குள் வளர்வதற்கு வேறு மகத்தான சந்தர்ப்பம் ஒன்றுங் கிடையாது. தன்னை சிலுவையில் அறைந்தவர்களைக் கூட மன்னிக்கும்படி இயேசு பிதாவைக் வேண்டிக் கொண்டார். ஸ்தேவனும் இதே மன்னிப்பையே தன் மேல் கல்லெறிகிறவர்களுக்கும் தருமாறு வேண்டிக் கொண்டான். தேவன் அன்பாகவே இருக்கிறார். அவருடைய ஆவியில் ஊழியம் செய்கிறவர்கள் அன்பினால் ஊழியம் செய்ய வேண்டும். அதுவும் அந்த அதீதமான அன்புடன் அந்த அதீதமான வல்லமையுடனும் நம்மிடம் நம்பகமாக ஒப்புவிக்கப்படக் கூடியானதை நமது ஜீவியத்தில் புறக்கணிக்கப் படுதலை தேவன் அனுமதிக்கிறார். ஏனென்றால் நம்மை நமது சொந்த தீய உள்நோக்கங்களிலிருந்து பிரித்தெடுக்க உதவி செய்து அவருடைய அன்பிலே வளர்வதற்கான சந்தர்ப்பங்களைக் கொடுத்து உதவுவதற்குத் தான். மக்கள் நம்மைப் புறக்கணிக்கும் பொழுது நாமும் புறக்கணிக்கப்பட்டதாக உணருவோமானால் நாம் இந்த உலகத்திற்கு

இன்னும் மரித்து போகவில்லை என்பதை வெளிப்படுத்தி விடுகிறது. ஏனென்றால் ஒரு மரித்துப் போன மனிதன் புறக்கணிக்கப்படுதலை உணர்ந்து கொள்ள முடியாது? அவனுக்கு எந்த விதமான சித்திரவதையும் இருக்காது உணரவும் மாட்டான். புறக்கணிக்கப்படுதல் உண்மையான ஊழியத்துடன் வருகிறது. அந்தப் புறக்கணிக்கப்படுதலானது உண்மையான ஊழியத்தில் கிரியை செய்வதற்கு நமக்குள்ள அரிய சந்தர்ப்பங்களில் ஒன்றாகும். அதுவே தேவனுடைய உண்மையான அன்பை எடுத்துக்காட்டும். <u>ஒருவர் மனம் காயப்படாமல் புறக்கணிக்கப்படுதலைக் கையாளுவது ஆவிக்குரிய முதிர்ச்சியின் சிறந்த வெளிக்காட்டுதல்களில் ஒன்றாகும். அதுவே சரியான கிறிஸ்துவைப் போன்ற சாயலாகும்.</u>

தேவனுடைய மெய்யான தீர்க்கதரிசிகளாக அழைக்கப்பட்ட அநேகர் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் பாதுகாக்கப்படுதலையும் மீதியான கிறிஸ்துவின் சரீரமாகிய மூடியினால் மறைக்கப்படுவதையும் மறுத்த மறைக்கப்படுதலை அடிக்கடி ஒதுக்கி புறக்கணித்தனர். ஏனென்றால் திருச்சபையின் தலைமைத்துவமானது தப்பிதமாகப் புரிந்து கொண்டு சில சமயங்களில் மறுத்தனர். மறுபடியும் கர்த்தர் இந்த தப்பாக புரிந்து கொள்ளுதலை அனுமதிக்கிறார். ஏனென்றால் புறக்கணித்தலோடு சரியாக இடைபடக் கற்றுக் கொள்ளுதலானதற்கு அந்த அமானுஷ்யமான அறிவையோ அல்லது வெளிப்பாட்டையோ சுமந்து செல்லப் போகும் பொறுப்பையுடைய யாருக்குமே அதிகாரத்துவம் மிகவும் அவசியமானது. நாம் பகுத்தறிதல் என்று அழைக்கப்படுவதன் பெரும்பகுதி திருச்சபையில் இன்று உண்மையாகவே சந்தேகம் என்ற ஐயப்பாடாக அடிக்கடி பொருமையால் அல்லது பிரதேச பாதுகாப்பால் நோக்கத் தூண்டுதல் பெறுகிறது. இதன் காரணமாகத் தான் அநேக நல்ல உண்மையான ஊழியங்கள் மற்ற கிறிஸ்தவர்களால் தாக்கப்படுகிறது. அன்பைத் தவிர மற்ற பிரிதொன்றும் நமது பகுத்தறிதலை உருக்குலைத்து விடும். அதன் காரணமாகத் தான் பவுல் பிலிப்பியருக்கு விளக்கிக் கூறியதாவது, ‘‘மேலும் உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெறுக வேண்டும்.’’ (பிலிப் 1:9)

தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் அவருக்காக பேசும்படி போவாமானால் அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டும். அவருடைய அன்பு சில சமயங்களில் கடுமையானது. சில சமயங்களில் அவரது அன்பே ஒழுங்கு நெறியைக் கொண்டு வரும். ஆனாலும் அது அன்பாகவே இருக்கிறது. தேவனுடைய நியாயந்தீர்ப்புங்கூட அவரது அன்பின் வெளிப்பாடாகும். அவர் நமக்கு அன்பு கொடுத்த பகுதிகளில் மட்டுமே. நமக்கு உண்மையான ஆவிக்குரிய அதிகாரம் உண்டு. அவருடைய அன்பின் அஸ்திபாரத்திலிருந்து ஊழியஞ் செய்யும்பொழுது மாத்திரமே நமது ஊழியம் உண்மையான ஊழியமாயிருக்க முடியும்.

ரோமர் 11:29 சொல்லுகிறதாவது ‘‘தேவனுடைய கிருபை வரங்களும் அவர் அழைத்த அழைப்பும் மாறாதவைகளே’’ என்கிறார். நாம் உண்மையில்லாதவர்களாக இருக்கும் பொழுதுங்கூட தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். தேவன் ஒரு கிருபையின் வரத்தை அருளும் பொழுது அதை அவர் மறுபடியும் எடுத்துக் கொள்ள மாட்டார். நாம் உண்மையில்லாதவர்கள் ஆனாலும் தவறாக பயன்படுத்தினாலுங்கூட அதை எடுத்துக் கொள்ள மாட்டார். இதன் காரணத்தினால் தான் சொஸ்தமாக்கும் வரங்கள் அல்லது அற்புதங்கள் செய்யக் கூடிய வரங்களையுடைய மனிதர்கள் பாவத்திற்குள் அல்லது கேட்டிற்குள் விழுந்து விடக் கூடும். ஆனால் இந்த வரங்கள் மேலும் கிரியை செய்யக் கூடும். இதே போல உண்மைதான் ஆவிக்குரிய தீர்க்கதரிசன வரங்களைக் குறித்தும் இதனால் என்ன காரணம் என்றால் நாம் ஒரு ஊழியத்தை வரத்தினாலாவது கனிகளினாலாவது தீர்ப்புச் செய்வது கூடாது என்பது முக்கியமாகும். வல்லமையிலும் வெளிப்பாட்டு வரங்களினாலும் கிரியை செய்பவர்கள் அவர்கள் புறக்கணிக்கப்படுதலாலும் கலகத்தாலும் பாதிக்கப்படுவார்களானால் அவர்கள் தேவனுடைய வரங்களைப் பயன்படுத்தி தேவனுடைய மெய்யான ஊழியத்திற்கு பிரிவினையையும் நாசத்தையும் கொண்டு வருவார்கள். இது புரிந்து கொள்வதற்கு கடினமானதென்றாலும் ஆனால் கர்த்தராகிய தேவனுடைய உண்மையினால் இது தேவையான அவசியமாகும்.

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின்படி ஒரு ஆசாரியனுக்கு சொறி இருந்தால் ஊழியம் செய்ய அனுமதிக்கப் படலாகாது. சொறி என்பது சொஸ்தமாக்கப்படாத காரியமாகும். நம்முடைய விஷயத்திலும் இது உண்மையாகும். நமக்கும் குணமாக்கப்படாத ஆவிக்குரிய காயங்கள் இருக்கும்பொழுது

மற்றவர்கள் நம்மை நெருங்க முடியாது. நாமும் நமது மெய்யான ஆசாரியத்துவ ஊழியத்திஜல் கிரியை செய்ய முடியாது. தங்களுடைய சொந்த புறக்கணிக்கப்படுதல், கசப்பு மற்றும் குணப்படாத காயங்களில் இருந்து பிரசங்கம், தீர்க்கதரிசனம், ஊழியம் செய்பவர்களை சாட்சியாக நம்மில் அநேகர் பார்த்திருக்கக் கூடும். அது அவர்களுடைய ஊழியத்திற்குக் கேடாகும். நாம் காயப்படுத்தப்படாமல் புறக்கணித்தல் அல்லது மற்றும் அநீதிகளை கையாளக் கூடும் வரைக்கும் நாம் ஆவிக்குரிய ஆசாரியத்துவமான எல்லா மெய்யான ஊழியத்திற்கும் அஸ்திபாரமான அந்த ஆசாரியத்துவத்திற்கு நாம் ஆயத்தமாக இருக்க மாட்டோம்.

**ஆவிக்குரிய அதிகாரத்திற்கு அஸ்திவாரம்**

பவுல் தீமோத்தேயுவுக்கு விளக்கிக் கூறியதாவது, ‘‘கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்திலும் நல்மனச் சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்தில் பிறக்கும் அன்பே.’’ (I தீமோத் 1:5) பவுல் கொரிந்தியருக்குப் புத்திமதி சொல்லி கூறியதாவது, ‘‘ஞான வரங்களை விரும்புங்கள்’’ என்றார். (I கொரி 14:1) ஆனால் அவர்களுக்கு வரங்களை தங்கள் இறுதியான இலக்காக ஆக்கிக் கொள்வதற்காக ஒரு காலும் புத்திமதி சொல்லவில்லை. நமக்கு ஞான வரங்களும் ஆவியின் வல்லமையும் தேவை. அவற்றை திருச்சபையும் தேவையாகக் காண்கிறது. அதிலும் அதற்குத் தற்காலத்தில் அறிந்திருக்கிற பிரகாரத்திற்கும் அதிகமாக தேவையாகிறது. அதிலுங்கூட நமக்கும் ஊழியம் செய்வதற்காக அதுவும் புண்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆக, நமது ஊழியங்களை ஸ்தாபனம் பண்ணுவதற்காக அல்ல, அல்லது பெரிய மகா நாடுகளைக் கூட்டுவதற்காகவும் அல்ல. நாம் இலக்கை பார்வையிலிருந்து இழந்து விட்டால் அதாகப்பட்ட அன்பு, ஒரு தூய்மையான இருதயம் ஒரு நல்மனச் சாட்சி நேர்மையானதோர் விசுவாசம் ஆகியவற்றை இழந்து விட்டால் நாம் வழியை விட்டு விலகிப் போனவர்கள் ஆவோம்.

எல்லா ஆவியின் வரங்களும் தீர்க்கதரிசனத்தையும் சேர்த்து விசுவாசத்தினால் கிரியை செய்கின்றன. விசுவாசமானது அன்பின் மூலமாக கிரியை செய்கிறது. (கலாத்தியர் 5:6 ஐப் பார்க்கவும்) உண்மையான விசுவாசம் என்பது தேவன் தாமே குறிப்பிட்ட சில காரியங்களைச் செய்யக் கூடும் என்ற நம்பத் தன்மை மட்டும் அல்ல. அது தேவன் அதை செய்யும்படி ஏன் வாஞ்சிக்கிறார் என்பதை அறிந்து கொள்வதுதான். அச்சம் என்பது விசுவாசத்திற்கு எதிரானது. ‘‘அன்பினாலே பயமில்லை. பூரணமான அன்பு பயத்தை புறம்பே தள்ளும்.’’ (I யோவான் 4:18) அன்பானது தேவன் நம் மூலமாகவும் நமக்காகவும் இயங்குவதை தடை செய்யும் ஒவ்வொன்றையும் புறம்பே தள்ளுகிறது. அன்பு என்ற அஸ்திபாரத்தின் மேல் ஆவிக்குரிய அதிகாரம் இருக்கிறது. அதன் வழியாக ஆவியின் வரங்கள் கிரியை செய்கின்றன. ஆவியின் வரங்கள் கட்டும் அஸ்திபாரம் ஒன்றை பெறும் வரைக்கும் அவைகளைத் தேடுவது வீணாகி விடும். அந்த அஸ்திபாரத்தின் பலத்தைக் கொண்டே நம்மிடம் கொண்டு அதன் பலத்தை நிர்ணயித்து விடலாம்.

**இந்த ஆவியின் வரங்கள் தேவனுடைய அன்பாகும்.**

‘‘நாம் வரங்களை மட்டும் தேடக் கூடாது. ஆனால் கொடுப்பவரையே தேட வேண்டும்’’ என்பது பிரபலமான சொல்லாகி விட்டது. இது மாண்புடையதாக ஒலிக்கலாம். ஆனால் அது தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டதாகும். ஏனென்றால் அது நமக்கு புத்திமதி கூறுகிறதாவது ‘‘அன்பை நாடுங்கள். ஞான வரங்களையும் விரும்புங்கள்’’ என்று கூறுகிறது. (I கொரி 14:1) இந்த ஆவியின் வரங்களும் அன்பும் ஒன்றுக்கொன்று பிரிந்து பரஸ்பரமாக தனிப்பட்டதல்ல. நாம் அன்பை நாட வேண்டும். ஆவியின் கனிகளை முதலாவதாகவும் தேட வேண்டும். அதற்கு நாம் வரங்களைக் கூட தேடக் கூடாது என்பது அர்த்தமல்ல. ஆனால் நாம் இரண்டையுமே நாட வேண்டும்.

அவர் நமக்குத் தமது அன்பை பரிசுத்த ஆவியின் வரங்களின் மூலமாக வெளிப்படுத்துகிறார். நாம் மிக்க ஆவலுடன் அவற்றை அந்த வரங்களை வாஞ்சிக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டும். ஏனென்றால் நாம் பிரியமாய் இருக்கிறோம். இயேசு நோயாளிகளை சொஸ்தமாக்கினார். ஏனென்றால் அவர்களை (மக்களை) நேசித்தார். அவர்கள் தேவையில்லாமல் கஷ்டப்படுவதை அவர் விரும்பவில்லை. அவர் அறிவுள்ள வார்த்தைகளைக் கொடுத்தார். ஏனென்றால் அவர் மக்களை நேசித்து அவர்களுக்கு தேவன் அவர்களை அறிந்திருக்கிறார் என்ற வெளிப்படையான உண்மையை அவர்களில் தாக்கம் செய்ய விரும்பினார். அந்த ஆவியின் வரங்கள் இயேசுவை ஏதோ கொஞ்சம் செய்தது ஆனால் ஏதோ கொஞ்சம் என்று சாதாரணமாக உணர்வதற்கல்ல. தமது அன்பினால்

அவ்வாறு செயல்பட்டார். கர்த்தர் அந்த வரங்களைத் திருச்சபைக்கு வழங்கினார். ஆகவே நாம் அவருடைய அன்பின் விரிவாக்கங்களாக தேவையானவர்களுக்கு வாஞ்சையோடு ஊழியம் செய்யும்படியாகச் செய்தார். இயேசு தம்முடைய மிக மகத்தான அற்புதங்களை பிறர் அறியாத யாவருக்கும் சொல்லக் கூடாது என்றும் சொன்னார். ஆனால் ஆலயத்திற்கு போய் தேவனுக்கு நன்றி செலுத்தும் படியாகக் கூறினார். இயேசு ஆவியின் வரங்களை மக்களை ஆழமாக உணரச் செய்வதற்கு மட்டும் பயன்படுத்தவில்லை. ஆனால் அவர்களை நேசிப்பதற்கும், அவர்களுடைய தேவையான இடத்தில் தொடும்படியாகவும் பயன்படுத்தினார்.

இயேசு தேவனுடைய வல்லமையைக் கொண்டு மக்களுடைய மனதில் ஆழமாக பதியச் செய்யும்படி மட்டும் விரும்பவில்லை. அவர் யூதர்களுக்கு அவர்கள் வேண்டிக் கொண்டபடியே வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் கேட்கும்பொழுது யூதர்கள் மற்றொரு அடையாளத்திற்காக மட்டும் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் இயேசுவை வானத்தில் ஏதோ ஒன்றைச் செய்யும்படி கேட்டார்கள். யோசுவாவைப் போல சூரியனை நடுவானத்தில் நிற்கும்படி செய்யவோ அல்லது சூரிய பாகையின் நிழலை ஏசாயா செய்தது போல் மாறி சுற்றி வரவோ செய்யும்படி விரும்பினார்கள். கர்த்தர் அதைச் சுலபமாகச் செய்திருக்கலாம். ஆனால் அவர் அதை இன்றைக்கும் செய்யலாம். அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதிய அவருடைய வல்லமையைக் கொண்டு செய்ய முடியுமானால் அவரால் முடியும் மக்கள் மனதில் அவருடைய வல்லமையைக் கொண்டு பதிய வைப்பது ஆவியின் வரங்களுக்கு முக்கியமான காரணமல்ல. ஜனங்களுக்காக கொண்ட அன்பே முதன்மையான காரணமாகும்.

சாத்தான் இயேசுவை தேவனுடைய வல்லமையை சுய நலமுள்ள காரணங்களுக்காக பயன்படுத்தச் செய்யும்படியாக முயற்சி செய்து சோதித்தான் அல்லது அவர் யார் என்பதை சோதித்தறிய அப்படி செய்தான். உண்மையிலே அவருக்குக் கொடுக்கப்பட்ட வல்லமையானது அவர் யாரென்று சாட்சி பகர்வதற்காகவே தரப்பட்டது. ஆனால் அவர் அதைத் தானாகவே செய்ய விரும்பவில்லை என்பது முக்கியமானதாகும். அவர் பிதாவையே அதைச் செய்யும்படி அனுமதித்தார். இயேசு பிதாவை மகிமைப் படுத்துவதிலே முழுவதும் மையமாகக் கொண்டிருந்தார். மேலும் பிதாவும் குமாரனை மகிமைப் படுத்துவதையே மையமாகக் கொண்டிருந்தார். ஒருவரும் தன்னைத் தானே மகிமைப்படுத்த முயற்சி செய்யவில்லை.

<u>கர்த்தர் தம்முடைய அமானுஷ்யமான வல்லமையைக் கொண்டு தமது வார்த்தையை பரிசோதிக்க உபயோகித்தார். அவர் அனுப்பியவர்களையும் அவ்வாறு அவர் கட்டாயம் செய்யும்படியாக நாமும் அவரை நம்ப வேண்டும்.</u> நாம் ஆவியின் வரங்களைக் கொண்டு நமது ஊழியத்திற்கு சாட்சி சொல்லும்படியாக அவைகளைத் தேடும் போதெல்லாம் நாம் கிருபையிலிருந்து விழுந்து விடக் கூடிய நடைமுறையில் இருக்கிறோம். <u>நாம் நம்மையே இயேசுவைப் பற்றி சாட்சி கூறவும் அவரது நாமத்தை உயர்த்தவும் நமது ஊழியங்களை உறுதிப்படுத்துதலையும் அவருடைய பொறுப்பிலே முழுவதுமாக விட்டு விட வேண்டும்.</u>

அநேகர் அற்புதங்களை நாடுகிறார்கள். ஏனென்றால் அந்த அற்புதங்கள் எப்படி விசுவாசி அல்லாத உறவினரை அல்லது நண்பர்களை அது தாக்கம் செய்ய முடியும் என்று அறிந்திருக்கிறார்கள். சில அற்புதங்கள் அவிசுவாசிகளைத் தாக்கம் செய்வது என்பது மெய்தான். ஆனால் அவைகள் பார்வைக்குச் சாட்சியாக இருந்தாலும் பொருட்படுத்தாது தாக்கம் அவர்கள் மேல் உணடாகப் பெற மாட்டார்கள். இயேசு லாசருவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பின பிறகுங்கூட யூதர்கள் அவரை கொலை செய்யும்படியாகத் தான் மேலும் அதிகமாக வகைதேடினார்கள். அவிசுவாசிகள் அற்புதங்களால் தாக்கம் பெற்றால் அது அதிசயமான இலாப வெகுமதியாகும். ஆனால் நாமும் அற்புதங்களையும் அல்லது வல்லமை ஊழியங்களையும் ஜனங்களை ஆழமாக பதிய வைக்கும்படி மட்டும் தேடுவோமானால் நாம் அடைய வேண்டிய எல்லையைத் தப்பும்படி விட்டு விடுவோம். கர்த்தர் மகத்தானதோர் அற்புதத்தைச் செய்யும்படியாக முதன்மையான உள் நோக்கமாக இருக்கும்பொழுது அதை அவர் செய்வதை அரிதாகவே பார்த்திருக்கிறேன்.

**உண்மையான முதிர்ச்சியாவது அன்பாகும்**

நாம் புறக்கணிக்கப் படுவதாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறதினாலும் நாம் சோதிக்கப்படுகிறோம். <u>ஏனென்றால் நாம் புறக்கணித்தலை மேற்கொள்ளவே அவ்வாறு பரீட்சிக்கப்படுகிறோம். நாம் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டுமானால் நாம் முதிர்ச்சியின் மட்டத்திற்குக் கட்டாயமாக</u>

வரவேண்டும். அங்கே தான் "கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது." (II கொரி 5:14) அன்பானது கஷ்டப்பட்டு அனுபவித்த தீங்குகளை கணக்கில் எடுத்துக் கொள்ளாது மேலும் புறக்கணிக்கப்படுவதால் உள்நோக்கப் படுத்தப்படுவதில்லை. மேலும் அது நம்மை பழி வாங்குவதற்கோ அல்லது நம்மையே நிரூபித்துக் காட்டுவதற்கோ நம்மைத் துரத்துகிறது.

ஆவிக்குரிய வரங்கள் அன்பினால் உள்நோக்கப் படுத்தப்படாதவைகளாவன "சத்தமிடுகிற வெண்கலம் ஓசையிடுகிற கைத்தாளம்" (I கொரி 13:1) போலவும் இருக்கும். ஆவிக்குரிய வரங்களானவை அன்பில் தரை தட்டிக் கொள்ளாதவை வழக்கமாக முழக்கமிடுகிறவையாகும். இவைகள் மிகுந்த எக்காள முழக்கத்தோடும் அதீதமான எழுச்சியோடும் வந்து சுய முன்னேற்றத்தின் மேல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சத்தமிடுகிற வெண்கலமும் ஓசையிடுகிற கைத்தாளமும் உண்மையான முரசொலியை கேட்பதற்குத் தடைகளாகும். ஆனால் ஒருவர் தேவனுடைய அன்பினால் கட்டுப்பட்டு இருப்பாரானால் அவர் மகிமைப்படுவதையும் ஆராதிக்கப்படுவதையும் காணும் அந்த ஒரே வாஞ்சையினால் எரியுண்டது போலாகி விடுவார்கள்.

உண்மையான அன்பானது சகிப்பும் பொறுமையும் உடையது. அங்கே, நிச்சயமாகவே திருச்சபையை முதிர்ச்சி அடையவும் கிறிஸ்துவுக்கு கீழ்படிதலாகவும் இருக்கும்படி அழைக்கப்படுவதற்கு ஓரிடம் இருக்கிறது. இதுவே தீர்க்கதரிசன ஊழியத்தின் அடிப்படையான கிரியையாகும். ஆனால் அது அன்பினால் நிறைவேற்றப்பட வேண்டும். பொறுமையின்மையினாலும் சகிப்பின்மையாலுமல்ல. நாமும் சில சமயங்களில் சுமார் ஐந்து, பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாம் எங்கு இருந்தோம் என்பதைத் திரும்பிப் பார்க்க அவசியமாக இருக்கிறது. நாம் அந்த சமயத்தில் எந்த மட்டங்களில் இருந்தோமோ நாம் இருந்த அதே சமயத்தில் அதே மட்டங்களில் இருந்தவர்களிடம் நாம் பொறுமையின்றி நடந்து கொண்டோமோ? தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கிருபையை விட குறைந்தளவு கிருபையையே நாம் ஜனங்களுக்குத் தருகிறோமா?

திருச்சபையில் அதிகம் முதிர்ச்சி அடைவதில்லை. ஏனென்றால் அது முதிர்ச்சியடையாமல் இருப்பதாக யூகிக்கப்படுகிறது. ஒரு இரண்டு வயது குழந்தை முதிர்ச்சி பெறுவதில்லை. அது அவ்வாறு இருப்பதாகவும் கருதப்படுகிறது. ஒரு இரண்டு வயது குழந்தை டயப்பர் என்ற உள்ளாடையை அணிவது முற்றிலுமாக ஒப்புக் கொள்ளப்படக் கூடியது தான். ஆனால் இப்பொழுது ஒரு பதினைந்து வயது பிள்ளை அந்த உள்ளாடையை இன்னும் அணிந்து கொள்வதென்றால் அது பிரச்சனைக்குரியது. என்னுடைய இரண்டு வயது குழந்தை என்னுடைய ஏழு வயதுள்ள மகன் செய்கிறவைகளைச் செய்யும்படி முயற்சிக்கக் கூடாது. அந்த அளவு முதிர்ச்சியை அந்தக் குழந்தையிடமிருந்து எதிர்பார்ப்பது அவனை ஆர்வம் குறைந்து ஏமாற்றம் அடையச் செய்யும். மேலும் அவனுடைய முன்னேற்றமான வளர்ச்சியை மெய்யாகவே தடை செய்யும். நான் அவனை அவனது வயதிற்கேற்ப ஒழுங்காக நடக்கவும் முதிர்ச்சி அடையும்படி விரும்புகிறேன். அதைவிட அதிகமாக நான் அவனிடமிருந்து கிடைக்கும்படி எதிர்பார்க்கக் கூடாது. நாமும் இதே போன்ற பொறுமையை திருச்சபையோடும் கொண்டிருக்க வேண்டும். நாமும் மக்கள் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதை கவனித்துணர்ந்து அவர்களை சரியான ஒழுங்கு நெறிக்குள் நடத்தி சென்று அந்த அளவுக்கேற்ற முதிர்ச்சியைப் பெறச் செய்ய வேண்டும்.

திருச்சபையைத் தகுதிபடுத்துமாறு ஊழியம் செய்யும் ஒவ்வொரு ஊழியமும் தங்களுடைய தனிப்பட்ட எதிர்பார்ப்புகளை அதன் மேல் சுமத்தாதபடிக்கு கவனத்துடன் இருக்கவும். கர்த்தரையே அவருடைய எதிர்பார்ப்புகளுக்காகத் தேட வேண்டும். முன்னாட்களில் புறக்கணித்தலின் ஊடாகக் கடந்து சென்ற ஊழியர்கள் அதிலிருந்து அவர்கள் சொஸ்தமாக்கப்படாமல் சில சமயங்களில் அடுத்த பணி ஏற்பாட்டை தங்களை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்ற தீர்மானத்துடன் எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் மீது மெய்ம்மை அற்ற அழுத்தங்களை சுமத்திக் கொள்வதற்குக் காரணமாக அதை ஆக்கிக் கொண்டு விடச் செய்யும். மேலும் அவர்களுடைய சபையாக மந்தையிலுள்ளவர் மீதும் அதைச் சுமத்திக் கொள்வதால் இது மேலும் அதிக தோல்விகளுக்கு இட்டுச் செல்கிறது. இது ஒரு ஒழுக்கங்கெட்ட வட்டமாக புண்படுத்த மக்களான ஒரு நீண்ட வரிசையையும் மேலும் ஒரு ஊழியத்தை மிகக் கசப்புடனும் பாதுகாப்பு இன்றியும் கிரியை செய்யும்படி விட்டு விடுகிறது. மறுபடியுமாக நாம் நமது மகத்தான திட்ட அழைப்பை பரத்திலிருந்து பெற்றிருக்கிறோம் என்றும் அறிந்திருக்கிறோம். நாம் தேவனுக்கு பிதாவினால் அறியப்பட்டவர்கள் என்றும் அறிவோம். அதனால் மற்ற மனிதர்கள் நம்மைப் பற்றி என்ன நினைத்தாலும் அது பொருட்டல்ல. இந்த விதமானதோர்

விடுதலை எந்தவொரு ஊழியருக்கும் மிகவும் அவசியமானதாகும். உண்மையான ஊழியத்தில் நாம் கர்த்தருடைய நுகத்தைத் தவிர மற்றொரு நுகத்தைச் சுமந்து கொண்டு சென்று ஊழியம் செய்ய நம்மால் கூடாது. நாம் மனிதர்களுடைய எதிர்பார்ப்புகளால் கட்டுப்பாடு செய்யப்படும்படி நம்மை நாமே அனுமதித்துக் கொள்ளக் கூடாது. அதிலும் நமது சொந்தமான எதிர்பார்ப்புகளை அல்ல. கர்த்தருடையவைகளை மாத்திரமே. அவர் தம்மால் நமக்கு அதிகாரம் கொடுக்கப்படாத ஏதோன்றையும் செய்யும்படியாக அவர் நம்மை எதிர்பார்ப்பதில்லை.

இயேசு உலகம் என்றுமே அறியாத அறியக் கூடிய மகத்தானதோர் புறக்கணிக்கப்படுதலை அனுபவித்தார். தன்னாலே உண்டாக்கப்பட்ட உலகத்தாலே அவர் புறக்கணிக்கப்பட்டார். அவர் அன்பிலே வந்தார். சொஸ்தமாக்குகிறவராகவும் ஒடுக்கப்பட்டவர்களை விடுவிக்கிறவராகவும் வந்தார். அவன் ஒருக்காலும் ஒரு பாவமும் செய்ததில்லை. ஆனால் அவர் மிகவும் கொடுமையான இழிவாக்கும் மரணத்தைச் சந்தித்தார். அவரைக் கொலை செய்தவர்களுக்காகவே அந்த மரண கஸ்தியைத் தாங்கினார். அவர் அந்த பெரிய தீங்கையும் அந்த மிகுந்த அநீதியையும் இந்த உலகமே ஒருக்காலும் அறியாதவைகளை மன்னிப்பை அளிப்பதற்கும் தன்னைச் சித்திரவதை செய்தவர்களையே இரட்சிக்கும்படியான சந்தர்ப்பமாகச் செய்தார். கர்த்தர் தம்மைப் பின்பற்றி வந்தவர்களையும் அதையே செய்யுமாறு கட்டளையிட்டார். நாமும் நமது சிலுவைகளை ஒவ்வொரு நாளும் அவர் செய்தது போலவே எடுத்துச் செல்ல வேண்டும். அதை நாம் செய்வோமானால் நமக்கு தீமையை நன்மையினால் வெல்லும் வல்லமையைப் பெற்றுக் கொள்வோம். விளைவிக்கப்படுகிற ஒவ்வொரு தீங்கும், மனிதர்களை தங்களுக்குள் இருக்கும் தீங்கினின்று விடுதலை செய்யக் கூடிய நன்மைக்காக எதிர் சமநிலைப்படுத்தும் வல்லமையாக பயன்படுகிறது. சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியர்களாக நாம் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் நாம் ஒவ்வொரு புறக்கணிக்கப்படுதலையும் தேவனுடைய அன்பைக் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக ஆக்க வேண்டும்.

**சொஸ்தமாக்கும் அதிகாரம்**

கர்த்தருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். இந்த குறிக்கோள் நமக்குங்கூட உண்மையானதாகும். அந்த ஒரே இடத்தில் நாம் எங்கே காயப்பட்டமோ அங்கே சொஸ்தமாக்கும் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்ளலாம். நாம் பொய்யாகத் தூற்றப்பட்டால் நமக்கு மற்றவர்களைச் சொஸ்தமாக்கும் அதிகாரம் கிடைக்கும். நாம் சொஸ்தமான உடனே தூற்றப்பட்டவர்களையும் குணமாக்கும் அதிகாரம் பெறுவோம். நாம் சொஸ்தமடைந்த பொழுதுங்கூட அந்தப் பகுதியிலே நாம் உணர்வுள்ளவர்களாகவே இருப்போம். அந்த உணர்வடைதல் கவனித்து பார்த்தறிவதாக ஆக்கப்பட்டு நாம் கஷ்டப்பட்டதைப் போலவே கஷ்டப்பட்டவர்களான மற்றவர்களையும் வெகு விரைவில் கண்டு பிடித்துக் கொள்ள பிரயோகிக்கப்படுகிறது. உண்மையான ஊழியத்திற்குத் தேவைப்படும் மனதுருக்கத்தில் ஊழியஞ் செய்யக் கூடும்படி இந்த கண்டுணர்தல் ஆக்குகிறது.

இந்தக் காரணத்திற்காகவே நாம் அடைந்த ஒவ்வொரு காயத்தையும் நமது ஜீவியத்தில் கர்த்தர் அனுமதித்திருக்கிறார். அதே பகுதிகளில் சொஸ்தமாக்கும்படி அதிகாரத்தை அவர் நமக்குங்கூடக் கொடுக்கக் கூடும். அந்த காரணத்திற்காகவே பவுல் தன்னுடைய காயங்களையும் பாடுகளையும் குறித்து அவனுடைய அதிகாரம் கேள்விக் கிடமான பொழுது அவற்றைச் சுட்டிக் காட்டினான். உங்களுடைய பாடுகளை வீணடிக்காதீர்கள்! அவைகள் உண்மையிலே தங்கத்தை விட விலையேறப் பெற்றவை ஒரு தடவை சொஸ்தமாக்குதலுக்கு எந்த விதமான மதிப்புக் கொடுக்கப்படலாம்? மனிதர்கள் தேவனாகிய கர்த்தருடைய அன்பையும் இரக்கத்தையும் புறக்கணிக்கக் கூடிய அளவுக்கு ஒரு மையத்தை அடைந்து அதற்கு மேல் திருத்தப்பட முடியாதவர்களாகி விடுகிறார்கள். இது யூதாஸ்க்கு நேர்ந்தது. இந்த மையத்தில் தேவனுடைய இரக்கத்திற்கு பதிலாக நியாயந்தீர்ப்பு இடம் பெறுகிறது. ஆனாலும் ''நியாயந்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்'' (யாக் 2:13) என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மனிதர்களோடு உள்ள தேவனாகிய கர்த்தருடைய நீடிய பொறுமையானது வழக்கமாக நியாயந்தீர்ப்பு கூறப்படுவதற்கு நாம் சகிக்க விருப்ப சித்தமாயிருப்பதையும் அதிகமாக மிஞ்சி நிற்கிறது. ஒரு பெற்றோர் மற்றவர்களுடன் இருப்பதைப் பார்க்கிலும் தங்களுடைய சொந்தப் பிள்ளைகளுடன் ஏறக்குறைய மிகவும் அதிகமாக பொறுமையாய் இருக்கும்படி விரும்புவது போல கர்த்தரும் பொதுவாக மனிதர்களுடனும் மிகவும் அதிகமாக பொறுமையுடன் இருக்கிறார். ஏனென்றால் அவர்கள் அவருடைய சொந்த பிள்ளைகளாவார்கள். அவர்களுக்காகவே அவர் தமது சொந்த குமாரனை துன்பப்படுத்தி

பாடுபடவும் பின்னர் அவர்களுக்காக கொலை செய்யப்படவும் அனுப்பினார். ஏனென்றால் அவர்களை அவர் நேசிக்கிறார். தேவனுடைய குமாரன் மனிதர்களுக்காக அந்த கொடுமையையும் அநீதியையும் அடைந்து பாடுபடக் கூடுமானால் அதுவும் நமக்காக அப்படிச் செய்வாரானால் நாமும் அதற்கு எவ்வளவு அதிகமாக அவருடைய மகத்தான இரட்சிப்பை விரிவாக்க எவ்வளவு பாடுகளைப்பட்டு அனுபவிக்க விருப்ப சித்தமாய் இருக்க வேண்டும்.

## அதிகாரம் 2 - போலியான ஆவிக்குரிய அதிகாரத்துவம்

மாந்திரீகம் என்பது முக்கியமான போர்களில் ஒன்றாக மேற்கொள்ளும்படி ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட கொஞ்சஞ் குறைய அனைவரும் சந்திக்கும்படி கட்டாயமாகும். அநேகர் இந்த வல்லமையைக் குறித்து விழிப்பாக இருப்பதில்லை. அது நிச்சயமாக அவர்களுக்கு எதிராக அணிவகுத்து நிற்கிறது. அதன் காரணமாக அதனால் அநேக தேவையற்ற காயங்களை அடைந்து கஷ்டப்படுகிறார்கள். வேதாகமத்தின் முக்கியமான உருவக அணியானது எலியாவுக்கும் யேசபேலுக்கும் இடையில் நடந்த போராட்டத்தில் காணப்படுகிறது. இந்த சராம்சத்தின் தீர்க்கதரிசி முடிவான சூன்யக் காரியானவளுக்கு விரோதமாக செய்யும் போர். இந்த வகையான போர் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக அதனால் வரும் விளைவானது அவர்கள் தங்களுடைய அழைப்பை நிறைவேற்றுவார்களோ அல்லவோ என தீர்மானிக்கக் கூடியதாகும். இந்த யேசபேலுடன் நடத்திய போரில் எலியாவுக்கு தடங்கலான கஷ்டத்தை அனுபவித்தான். அதனால் அவனுடைய கச்சையை மற்றெருவனுக்கு அவன் கொடுக்க வேண்டியதாயிற்று. பின்னர் நாட்களில் எலிசா தேவனால் எலியாவுக்கு வழங்கப்பட்ட திட்டங்களில் பலவற்றை நிறைவேற்ற வேண்டியதாயிற்று. அவன் இன்னும் அதிகமானவற்றை நிறைவேற்றினான். அவன் உலகத்தில் ஜீவித்து பிறகு உலகத்தில் ஜீவித்த மகா பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவனாக வாழ்ந்து பின்னர் பரலோகத்திற்கு அக்கினி இரதத்தில் உயரே எடுத்துக் கொள்ளப்பட்ட கனத்தை உடையவன் ஆனான். என்னவென்றாலும் அவனால் தனக்கு செய்யும்படியாகக் கொடுக்கப்பட்ட எல்லாவற்றையுமே நிறைவேற்ற முடியவில்லை. நாம் எவ்வளவு செய்தோம் என்பதைப் பொருட்படுத்தாது யேசபேலின் ஆவியானது நமக்கு விரோதமாக வந்து நமது அழைப்பை முடிக்கக் கூடாதபடி நம்மை தடை செய்யும்.

நாம் அனாவசியமாக சத்துருவை உயர்த்த விரும்புவதில்லை. மேலும் சத்துருவுக்கு அஞ்சுவது வேதாகமத்தின் படியானதல்ல. ஆனாலும் நாம் அவனுடைய தந்திரத் திட்டங்களை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும் அல்லது அவைகளால் நாம் முறியடிக்கப்படுவோம். யேசபேலுடைய ஆவியானது ஆவிக்குரிய அதிகாரத்திற்குள் நடக்கும் யாருக்கும் விரோதமாக பிரயோகிக்கப்படும் வல்லமையான சத்துருவின் ஆயுதமாக பிரயோகிக்கப்படும். அந்த வல்லமையை நாம் கனப்படுத்தாவிட்டால் அது நம்மை கடினமாக எதிர்த்து அடித்து ஏற்ற சமயத்தில் தாக்கி விடும். சரியாக எலியாவுடைய மகத்தான வெற்றிக்குப் பின்னர் பயம் எதுவுமின்றி எதிர்த்தும், பொய்யான தீர்க்கதரிசிகளில் பல நூறு பேர்களைக் கொன்ற பிறகும் இந்த ஒரு ஸ்தீரியான யேசபேல் அவனைப் பிடித்துக் கொன்று போடுவதாக பிரதிகனை செய்கிறாள். எலியா தன் ஜீவன் தப்ப ஓடிப் போகிறான். பிறகு அவன் மோசமான மனச் சோர்வுக் கீழாக வருகிறான். ஆகவே அவன் மேலும் ஜீவித்திருக்க விரும்பவில்லை. யேசபேலின் ஆவியின் வல்லமையை குறைவாகவும் கீழாகவும் மதிப்பீடு செய்கிறவர்கள் பயங்கரமான அதிர்ச்சிக்குள்ளாகிறார்கள். ஒரு வேளை ஒரு பயங்கரமான தோல்வியாயிருக்கலாம். இந்த பயங்கரமான பொல்லாங்கான தந்திரத்தினால் நான் என்னுடைய தனிப்பட்ட முறையில் அநேக திருச்சபைகள் அழிக்கப்பட்டதையும் அநேக தேவ மனுஷர்கள் ஒன்றுமில்லாமல் போனதையும் கண்டிருக்கிறேன்.

மாந்திரீகமானது சமீப கால ஆண்டுகளில் உலகம் முழுவதுமே வியக்கத்தக்க விதமாய் அதிகரித்திருக்கிறது. இந்த இயக்கத்தின் வெளிப்படையாக சொல்லப்படும் இலக்குகளாவது வேதாகமத்தின் கிறிஸ்தவத்தை மிதவாதப்படுத்தி அடிமைப்படுத்தி அழித்து விடுவதாகும். அநேகக் கிறிஸ்தவர்கள் தற்காலிகமாக மாந்திரீகத்தை உபாவசம் பண்ணுகிறவர்களால் ஏதோ ஒரு வடிவத்தில் தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். இந்த தாக்கங்களை கண்டு உணர்ந்து கொள்ளுதலும் அவைகளை எப்படி மேற்கொள்வது என்பதை அறிந்து கொள்ளுவதும் தீர்க்கதரிசிகளுக்கு மாத்திரம் அல்ல.

எல்லா விசுவாசிகளுக்கும் முக்கியமானதாகும். ஆனால் தீர்க்கதரிசிகள் கேள்விக்கிடமின்றி இந்த போரின் முன் வரிசையில் இருந்த எலியா அவனுடைய காலத்தில் இருந்தது போல இருக்க வேண்டும்.

**இந்த போரில் நமக்கு அனுகூலங்கள்**

நாம் சத்துருவினுடைய தந்திரங்களைக் குறித்து அறியாமையிலிருக்கக் கூடாது. (II கொரி 2:11ஐப் பார்க்க) ''சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவை அல்லவே.'' ''விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோவென்று வகைத் தேடிச் சுற்றித் திரிகிறான்.'' விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (I பேதுரு 5:8-9) சாத்தானுடைய தந்திரங்களை புரிந்து கொள்ளுதல் குறிப்பாக அந்தப் போரில் நமக்கு அனுகூலத்தை அதிகரிக்கிறது. கர்த்தருடைய பக்கத்தில் நிற்பது இறுதியான ஜெயத்தை உறுதிப்படுத்துகிறது. திருச்சபையானது ஜெயங்கொள்ளும் சுவிசேஷம் இறுதியாக நிலைநிற்கும். இதற்குரிய நம்முடைய விவாதமாவது இவை நம் மூலமாக நேரிடுமா? அல்லது நமக்குப் பின்வரும் சந்ததியார் இந்த மேலான இறுதி வெற்றியை காண்பார்களா? என்பதுவே.

திருச்சபை சரித்திர காலம் முழுவதுமே ஒரே ஆவிக்குரிய போராகும். முடிவு காலம் நெறுங்கும் பொழுது அது மேலும் உத்வேகமாக அதிகரிக்கிறது. இப்பொழுது சாத்தான் பரமண்டலங்களிலிருந்து கீழே பூமிக்குத் தள்ளப்பட்டு விட்டான். இங்கே அவன் மிகுந்த சீற்றத்தோடு வந்து கொண்டிருக்கிறான். எப்படி இருப்பினும் நாம் அஞ்ச வேண்டியதில்லை. நமக்குள் இருக்கும் அவர் இந்த உலகத்தில் இருப்பவனிலும் பெரியவராயிருக்கிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகச் சிறியவனாக இருப்பவன் எந்த அந்திக் கிறிஸ்துவையும் விட மிகுந்த வல்லமையுடையவனாயிருக்கிறான். இன்றைய நாட்களில் எந்த ஒரு மகா வல்லமையான இராணுவ வல்லமையும், அது சத்துருவினால் தாக்கப்படுவதை கண்டு அறிந்து கொள்ளாவிட்டால் ஜெயிக்கப்படக் கூடியதாயிருப்பது போல நாமும் சாத்தானுடைய தந்திரங்களை அடையாளங் கண்டு அறிந்து கொள்ள முடியாவிட்டால் முறியடிக்கப்படக் கூடியவர்கள் ஆவோம். நம்மை அவன் தோற்கடிக்கக் கூடிய ஒரே வழியானது நமது சொந்த அறியாமையும் தான் என்ற மன நிறைவுமாகும். நாம் நமது கிறிஸ்துவுக்குள் ஸ்தானத்தில் நிற்போமானால் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொண்டு விழிப்புடன் தரித்திருந்தால் நாம் நிலைத்து நிற்பதுவும் அல்லாமல் பாதாளத்தின் வாசல்களையும் மேற்கொள்ளுவோம்.

**மாந்திரீகம் என்பது என்ன?**

<u>மாந்திரீகம் என்பது ஆவிக்குரிய அதிகாரத்தின் போலியான வடிவமாகும். அதாவது ஒரு பொல்லாத ஆவியைப் பயன்படுத்தி ஒரு நபரை ஆளுகை செய்து, தந்திரம் செய்து, மற்றவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகும்.</u> பவுல் அப்போஸ்தலன் இந்த மாந்திரீகத்தை (பில்லி சூனியம் என்றும் பெயர் பெறும்) மாம்சீகத்தின் ஒரு கிரியை என்று பெயரிட்டான். (கலா 5:20ஐப் பார்க்க) அதன் மூல ஆரம்பத்தை பாலியல் தன்மையில் கொண்டிருக்கவில்லை. என்னவிருந்தாலும் அது வழக்கமாக சாத்தானுடைய வல்லமையாக விரைவில் ஷீண தசை அடைகிறது. நாம் நமது உணர்ச்சி அழுத்தங்களை மற்றவர்களைக் கையாளுமபடி செய்தால் அது ஒரு வகையான அடிப்படை உருவமான சாத்தானிய வல்லமை ஆகும். நாம் அதிகமான புகழுரையையோ அல்லது ஆத்மீக வல்லமையையோ சேவையை நாம் தேவனுடைய ஊழியத்திற்காகக் கூட பதிவு செய்யப்படுமானால் அது மாந்தீரிகமாகும். வணிக அதிபர்கள் ஒரு ஒப்பந்தத்தை தொடர்ந்து பிடித்துக் கொள்ளும்படி அழுத்த மையங்களை கண்டு கொள்ளத் திட்டம் இடும்போது அதுவும் மாந்தீரிகமாகும். தந்திரமான திட்டம் வகுக்கும் யுக்தி உபாயங்களைக் கொண்டு விற்பனையை முன்னேற்றுவிக்கும் ஏற்பாடுகளை அனைத்தும் மாந்தீரிகத்தின் வடிவங்களேயாகும். நிபுணர்களிடையே புதிய கால இயக்கமானது உள் பாய்தலை செய்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும். அவைகள் உண்மையான வல்லமையைக் கண்டு கொள்கின்றன.

இந்த போலியான ஆவிக்குரிய அதிகாரத்தை எதிர்க்கும் தற்காப்புக்கு அடிப்படையான திட்டமானது உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்துவத்தில் நடப்பதேயாகும். மாந்தீரிகத்தை மேற்கொள்வது எளிது. ஆனால் அது சுலபமானதல்ல. அது தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் புகுந்து அவரது நுகத்தை எடுத்துக் கொள்வது எளிது. ஆகவே தான் இந்தக் காரணத்துக்காக அப்போஸ்தலனாகிய

பவுல் திருச்சபையை எச்சரித்தான். ஆகிலும் சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையிலிருந்து விலகும்படி கெடுக்கப்படுமோ என்று பயந்திருக்கிறேன். (II கொரி 11:3) நாம் முக்கியமாக கிறிஸ்துவின் மீதுள்ள பக்தியான அன்பிலிருந்து விலகிப் போகும்படியாக நாம் வஞ்சிக்கப்படுகிறோம். நாம் குறிப்பிடும் குணச்சித்திரமான மாந்திரீகமானது (இது எந்த இயக்கத்தையோ மக்கள் கூட்டத்தையோ குறிப்பிடுவதல்ல) வழக்கமாக ஒரு திருச்சபைக்குள்ளோ ஊழியத்திலோ புகுந்து கொண்டு அதீதமான தன்னலமான ஆசைகளால் அப்படி புகுந்து விட முடிகிறது. இந்தத் தன்மையானது கட்டி எழுப்பும் முயற்சியை ஆரம்பிக்கும் படியாக நம்மை நடத்திச் சென்று அதனால் நம்மை தேவனுடைய இளைப்பாறுதலிருந்து விலகிப் போகச் செய்து தேவனுடையது அல்லாத நுகங்களை நம்மீது ஏற்று எடுத்துக் கொள்ளச் செய்கிறது.

தேவன் நாம் செய்யும்படியாகக் கொடுக்கிற ஒவ்வொரு காரியமும் நம்மை அதைச் செய்ய வல்லமை தருகிறது. நம்முடைய சொந்த பலத்தில் துவங்கும் ஒவ்வொரு காரியமும் நமது சொந்தப் பலத்தினால் நிலைநிறுத்தப்பட வேண்டும். அது நம்மை சோர்வுக்குள்ளும் காரிய தந்திரத்திற்கும் கட்டுப்பாட்டுக்குள்ளும் நடத்துகிறது. சத்தியத்தின் மேல் நம்மை நாட்டுவோமானால் நமக்குக் கரிசனையானவைகளை நிறைவேற்றும்படி கர்த்தரை விசுவாசித்தலும் மாந்திரீகத்தின் அழுத்தத்திற்கும் தாக்கத்திலிருந்தும் விடுதலையாகி இருக்க வேண்டுமானால் கர்த்தரை விசுவாசித்தல் இன்றியமையாததாகும்.

**அதிகாரத்தின் மெய்யான ஆசனம்**

இயேசு தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது ஒரு உருவக அணியாகவுள்ளது. தாவீதுடைய வழக்குப் பிரகாரமான உட்காரும் சிம்மாசனத்தில் இயேசு உட்கார்ந்திருக்கவில்லை. தாவீது உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்தின் ஸ்தானத்தை ஸ்தாபித்தான். அது உண்மையிலே இறுதியாக தேவனுடைய இராஜ்ஜியத்தில் கொடுக்கப்படும். ஆபிரகாம் விசுவாசத்திற்கு என்ன செய்தானோ அதையே தாவீதும் ஆவிக்குரிய அதிகாரத்திற்குச் செய்தான். தாவீது எப்படி ஒரு உண்மையான அதிகாரத்து ஆசனத்தை ஸ்தாபித்தான். அவன் எளிதாக அதிகாரத்தை எடுத்துக் கொள்ள மறுத்தான். தனக்கு செல்வாக்கையும் தேடிக் கொள்ள மறுத்தான். ஆனால் முற்றிலுமாக கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருந்து தனக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஸ்தானத்தில் தன்னை ஸ்தாபிக்கும்படி நம்பிக்கை வைத்தான். தாவீது தனக்கென்று அங்கீகாரத்தையோ செல்வாக்கையோ தேடும்படி தன் கைகளை உயர்த்தவில்லை. நாமுங்கூட உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்தில் நடந்து போக வேண்டும் என்றாலும் மனுஷீகமான அரசியல் வல்லமை வேண்டுமென்றோ அப்படி செய்யவில்லை.

எந்த விதமான அதிகாரமும் அல்லது செல்வாக்கோ நமது சொந்த யுக்திகளால் அல்லது சுய முன்னேற்றத்தாலோ நாம் பெற்றுக் கொள்வது நமக்கு ஒரு தடுக்கும் தடங்கல் மரமாகவே இருக்கும். மேலும் அது ஒரு உண்மையான அழைப்பையும் அதிகாரத்தையம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஆன நமது திறமையை தடங்கல் செய்து கொண்டே இருக்கும். நாம் தாவீதைப் போல மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தில் நடந்து போக வேண்டுமானால் நாம் முழுவதுமாக கர்த்தரில் நம்பிக்கை வைத்து நம்மை அதற்குள்ளும் அவர் குறித்த காலத்துக்குள்ளும் ஸ்தாபிக்குமாறு விட்டு விட வேண்டும். பேதுரு புத்திமதி கூறியது போல ''ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.'' (I பேதுரு 5:6) நமது அழைப்புக்கும், உண்மையான ஊழியத்தில் நடக்கக் கூடிய சாத்தியகூறுகளை அழித்து நாசம் செய்யக் கூடியதாக செல்வாக்கையும் முதிர்ச்சி பெறாததற்குமான நிலைமையில் அதிகாரத்தை வாஞ்சிப்பதும் ஆகியவற்றை விட வேறொன்றுமே இருக்கக் கூடியதல்ல. முதிர்ச்சி அடையாத வெற்றி நமக்கு நேரிடக் கூடியவைகளில் மிகவும் மோசமான காரியங்களில் ஒன்றாகும். தாவீது அழைக்கப்பட்டும் இராஜாவாக அபிஷேகம் பல ஆண்டுகளுக்கு முன்னதாகப் பெற்றிருந்தாலுங்கூட அவன் முற்றிலும் பொறுமையாக அந்த ஸ்தானத்திற்காகக் காத்திருந்தான். தாவீது தன்னை இராஜா என்று அழைத்துக் கொள்ளவில்லை. தேவன் அதை செய்யும்படி அனுமதித்தான். மேலும் ஜனங்கள் தேவனுடைய சித்தத்தை கண்டறிந்து கொள்ளுமாறு பொறுமையாகக் காத்திருந்தான். இதற்கு முரணாக யேசபேல் தன்னை ஒரு தீர்க்கதரிசினி என்று சொல்லிக் கொள்கிறாள். (வெளி 2:20) நாமும் ஊழியத்தில் தங்களுடைய சொந்த அங்கீகாரத்தை ஸ்தாபிக்க விரும்பும் யாரைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

கர்த்தர் முன்னேறச் செய்யும்பொழுது அந்த அதிகாரத்தைச் செலுத்துவதற்குக் கிருபையையும் ஞானத்தையுங்கூட கொடுக்கிறார். தேவன் நம்மை அறிந்திருக்கிறார் என்றும் நமது ஊழியத்தை ஸ்தாபித்திருக்கிறார் என்பதை அறிவதை விட நமக்கு பெரிதான பாதுகாப்பு வேறொன்றுமில்லை. நம்முடைய சொந்த முன்னேற்றத்தினாலும் யுக்தி தந்திரத்தாலும் சம்பாதித்துக் கொண்டதோர் ஸ்தானத்தை நிலை நிறுத்திக் கொள்ளும்படியாக முயற்சிப்பதை விட பாதுகாப்பின்மையை வெகு விரைவில் பெருகி வளரும்படி செய்வதற்கு இஞ்சித் தேனும் ஒன்றுங் கிடையாது. இதுதான் ஒரு வேளை பிரதேச பதப்படுத்துதல்களும் பிரிவினைகளும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் தற்காலிகமாக தங்கி இருக்கிறதற்கு அதிகமான காரணமான வேராகும். மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தில் ஸ்தாபனமாயிருப்பது சத்துருவானவன் உள்ளே புகுந்து விடக் கூடாத அரணான கோட்டையாகும். அப். பவுல் விளக்கிக் கூறியதாவது ‘‘சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார்.’’ (ரோமர் 16:20) நாம் தேவனால் ஸ்தாபனம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளும் பொழுது சத்துருவை முற்றிலுமாக நசுக்கி போடும் சமாதானத்தைப் பெற்றுக் கொள்கிறோம். தங்களை அதிகார ஸ்தானத்தில் அல்லது செல்வாக்கில் ஸ்தாபிக்கப்பட்டவர்களுக்கு சிறிதேனும் சமாதானம் இல்லை. நாம் அநியாயமாய் சம்பாதித்த செல்வாக்கு அதிகரிக்கும் பொழுது அதை ஒன்றாகக் சேர்த்துப் பிடித்துக் கொள்வதற்கு அதிகமான முயற்சியும் யுக்தி முறையும் அவசியமாகும். நமது ஆவிக்குரிய இலக்குகள் எவ்வளவு மாண்புடையதாக இருந்தாலும் நாம் யுக்தி முறையினாலும், பகட்டாலும், ஆத்ம பலத்தாலும் செய்கிற எந்தக் காரியமும் போலியான ஆவிக்குரிய அதிகாரத்தால் ஆன மாந்தீரிகத்தால் செய்யப்படுகிறது. அப்படி செய்யப்படுவது முடிவான தோல்விக்கே தீர்ப்புச் செய்யப்படுகிறது.

ஆகவே பில்லி சூனியத்திலிருந்து நம்மை விடுவிக்கும்படி நாம் பெறும் முதலாவது கோட்பாடானது நாம் நாமாகவே உபயோகித்த எல்லா வழிகளையும் விட்டு மனந்திரும்புவதே ஆகும். சாத்தான் சாத்தானைத் துரத்த முடியாது. பில்லி சூனியமானது அதனுடைய அதீதமான தீங்கான சாத்தானிய வடிவங்களில் நமது ஜீவியத்திலே திறந்த வாசலை உண்டாக்கிக் கொண்டு நாம் நாமாகவே ஒரு ஸ்தானத்தை சம்பாதித்துக் கொள்ள யுக்தி முறையினால் அல்லது கட்டுப்பாடு செய்வதனால் நாம் உபயோகிப்போமானால் அது அவ்வாறு திறந்த வாசலை உண்டாக்கிக் கொள்ளும். திருச்சபையைக் கட்டி எழுப்ப முயற்சிப்பதை பிரத்தியட்சமாக நியாயமான காரணா காரியத்தின் கீழ் நாம் அந்த மாதிரியான சாதனங்களை உபயோகித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் முட்டாளாக்கப்படக் கூடியவர் அல்ல. அவ்வாறே சத்துருவுங்கூட. தேவன் கட்டுகிற யாதொன்றும் மனித பலத்தால் கட்டப்படுகிறவை அல்ல. ஆனால் பரிசுத்த ஆவியினாலே கட்டப்படுகிறது. நாம் மற்ற எந்த வழிகளிலும் கட்டுகிற ஏதோன்றும் சிலுவைக்கு இழுக்காகும். ஆனால் இறுதியாக ஆவியானவர் கட்டுகிறதை எதிர்க்கும் மாம்சம் ஆவியை எதிர்த்து போரிடும். நாம் மாம்சத்தின் பார்வைக்கு எவ்வளவு நல்லதாகச் செய்ய முயற்சித்து செய்தாலும் அது பொருட்டாகாது.

**பார்த்து உணர்ந்து பகுத்து அறியும் வரம்**

இந்த ஆவிகளைப் பகுத்தறியும் படி பரிசுத்த ஆவியினால் வழங்கப்படும் வரமாவது திருச்சபைக்குள் நிலவும் ஆவிக்குரிய விளைவு உண்டாக்கும் திறன்பாடுகளின் அடி மூலத்தை பகுத்தறிந்து கொள்ளச் செய்வதுதான். இன்றைய நாட்களில் பகுத்தறிதல் என்பதன் பெரும்பாகமானது மெய்யாகவே சந்தேகத்தால் வேரோடி பரிசுத்த ஆவியினால் பெறப்படுவதைவிட அதுவும் ஒரு பிரதேச ஆவியோடு சுயமான பதப்படுத்துதலுக்கு உட்பட்டு விடுகிறது. இதுவுங்கூட இன்றைய நாட்களில் திருச்சபையில் செலுத்தப்படும் அதிகாரத்தில் மிகுதியானது போலியான காரணத்தினால் அதை உபயோகிப்பவர்களை கடு முயற்சி எடுக்கச் செய்தும் பயம் நிறைந்தும் அவர்களால் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியாத படி நெருக்கமாக்கிக் கொள்ளப்படுகிறார்கள்.

உண்மையான ஆவிக்குரிய பகுத்தறிதலானது அன்பில் வேரூன்றி இருக்கிறது. அந்த ‘‘அன்பானது நீடிய சாந்தமும் தயவும் உள்ளது அன்புக்கு பொறாமை இல்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.’’ (I கொரி 13:4-7 ஐப் பார்க்கவும்) ‘‘சகலத்தையும் விசுவாசித்தலும், சகலத்தையும் நம்புதலும் சகலத்தையும் சகித்தலும்’’ ஆகியவற்றைச் செய்ய தயாராக இருப்பதை அநேகர் அதை அதீதமான சூதுவாதற்றதாக

பகுத்து அறிவதை விட அவ்வாறு கருதுகிறார்கள். ஆனால் இதற்கு எதிர்மறையானதே உண்மையாகும். நாம் தேவனுடைய அன்பின் கண்களின் மூலமாகப் பார்க்கவில்லையானால் நாம் தெளிவாகப் பார்க்க மாட்டோம். மேலும் நாம் பார்ப்பதை சரியாக வியாக்கியானம் பண்ணவும் முடியாது. உண்மையான பகுத்தறிதலானது தேவனுடைய அன்பின் வழியாக மாத்திரமே கிரியை செய்ய முடியும். தேவனுடைய அன்பை பரிசுத்தமாக்கப்படாத இரக்கத்தோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அது தேவனால் ஒப்புக் கொள்ளப்படாத காரியங்களுக்காக ஒப்புதல் அளிக்கிறது. தேவனுடைய அன்பானது முற்றிலும் சுத்தமானதாக இருந்து சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும் இடையே வித்தியாசப்படுத்துகிறது. அதுவும் எப்பொழுதுமே அதுவும் சரியான காரியங்களுக்காக எப்பொழுதும் செய்கிறது. பாதுகாப்பினை, சுயபாதுகாத்தால், சுய முன்னேற்றம், குணப்படுத்தப்படாத காயங்கள், மன்னிக்க முடியாத தன்மை, கசப்பு முதலானவை குழப்பத்தை உண்டாக்கி உண்மையான ஆவிக்குரிய பகுத்தறிதலை மட்டுப்படுத்துகிறது.

**ஆவிக்குரிய முதிர்ச்சி**

புறக்கணிக்கப்படுதலையும் தப்பாகப் புரிந்து கொள்ளுவதையும் கர்த்தர் செய்தது போலவே அவற்றை மேற்கொள்ளும்படி கற்றுக் கொள்ளுதல் தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களை மன்னிக்கும்படி ஜெபம் செய்வதால் செய்ய முற்படுவது உண்மையான ஆவிக்குதிய அதிகாரத்திலோ அல்லது மெய்யான ஊழியத்திலோ நாம் ஆவிக்குள் நடந்து போக வேண்டுமானால் அந்த ஜெபம் ஏறெடுப்பது மிகவும் முக்கியமானதாகும்.

நாம் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டுமானால் நாம் ‘‘கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது’’ என்ற முதிர்ச்சியின் மட்டத்திற்கு நாம் வர வேண்டும். அன்பானது நமக்கு இழைக்கப்பட்டு துன்பப்பட்ட தீங்குகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. மேலும் புறக்கணிக்கப்படுவதால் நோக்கப்படுத்தப்படுவதுமில்லை. இவை நம்மை நாமாக இருக்கிறோம் என்பதை நிரூப்பிக்கும் முயற்சியில் பழி வாங்குதலுக்கு நம்மை துரத்துகிறது. மெய்யான அதிகாரத்தில் நடப்பதிலிருந்து நம்மை வீழ்ச்சிக்கு நடத்திச் செல்கிறது.

**சுய முன்னேற்றம்**

சுய முன்னேற்றமானது தெய்வீகத் தொடர்புக்கு நடத்துகிறது. ஒருவருடைய வரத்தின் மிஞ்சிய முன்னேற்றமானது அந்த நபருடைய ஊழியத்தில் மற்ற குறிப்பிடத்தக்க பிரச்சனைகள் இருக்கலாம் என்றும் அந்த வரமானது மெய்யானதாக இருந்தாலுங்கூட அப்பிரச்சனைகள் இருப்பதற்கு நிச்சயமான அடையாளமாகும். ஒரு தீர்க்கதரிசி தன்னையே முன்னேற்றுவித்துக் கொள்கிறவன் வெளிப்பாட்டுக்கும் தெய்வீகத் தொடர்புக்கும் இடையே உள்ள கோட்டைக் கடப்பதற்கான வழக்கமான முடிவை அடைவான். உண்மையான வெளிப்பாடானது தங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்து பணிந்து கீழ்படிகிறவர்களுக்கே வரும். ஆனால் அதற்காக பெற முயற்சி செய்கிறவர்களுக்கல்ல.

தீர்க்கதரிசன அனுபவம் ஒருவருடைய முதிர்ச்சிக்கோ அல்லது முக்கியத்துவத்திற்கோ சாட்சியிடாது. முதிர்ச்சி பெற்ற தீர்க்கதரிசிகள் கர்த்தருடன் ஒரு உறவுத் தொடர்பையும் அந்நியோந்நியத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அனுபவங்களைப் பெறுவதைவிட அதிகமான இடம் முன்னதற்குத் தருவார்கள். அந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பவர்கள் அவைகளை பெற்றுக் கொள்வதில் வெற்றி பெறுவர். ஆனால் தவறான வழியில் மூலமாக அதை அடைவார்கள். வெளிப்பாடு என்பது ஒரு தீர்க்கதரிசிக்கு அவனுடைய முயற்சி இல்லாமலே வரும். ஒரு ஆப்பிள் மரம் தான் ஒரு நாளுக்கு எத்தனை ஆப்பிள் பழங்கள் உண்டாக்குகிறோம் என்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அது உண்மையான ஆப்பிள் மரமாக இருந்தால் ஆப்பிள் பழங்கள் உண்டாகும். என்னவென்றாலும் அவன் தேடுவதற்கும் முயற்சிப்பதற்கும் இடையே வித்தியாசப்படுத்த வேண்டும். ஆவியின் வரங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வது சரியே. நாம் அதற்காக கடுமையாக முயற்சிக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல. உண்மையாகத் தேடுகிறவர்கள் சமாதானத்துடன் ஓய்வாக இருப்பார்கள். ஆனால் மன அமைதியை இழக்கமாட்டார்கள். நாம் இருபத்தைந்து வருடங்களாக ஜெபம் ஏறெடுத்து மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஜெபித்தேன். அதாவது பவுல் இருந்தது போல அதற்கு முன்னால் நான் அந்த மட்டத்தை அணுகுவதற்காக அனுபவங்களை பெற்றிருந்தேன். மேலும் விசுவாசம் பொறுமை இவற்றின் மூலமாகவேத்தான் நாம் அந்த வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்கிறோம். (எபி 6:12ஐப் பார்க்க)

‘‘விசுவாசிக்கிறவன் பதறான்’’ ஏசாயா 28:16. மெய்யான விசுவாசம் பொறுமையினால் எடுத்துக் காட்டப்படுகிறது. விசுவாசம் தேடுகிறது. ஆனாலும் ஓய்வு கொண்டு தேவ ஞானத்தை நம்புகிறது.

நமது சுய முன்னேற்றத்தின் (பதவி உயர்வு) வழியாக நாம் பெறும் ஒவ்வொரு சிறு பகுதியான செல்வாக்கும் என்றோ ஒரு நாள் நமக்குக் கண்ணியாக ஆகி விடும். நம்முடைய சுய பதவி உயர்வு காரணமாக நமக்குக் கிடைக்கும் பணமோ அல்லது மூலாதாரமானவைகள் உண்மையாகவே நாம் அழைக்கப்பட்ட ஊழியத்தில் நடந்து போவதற்கு ஒரு தடையாக ஆகக் கூடும்.

நமது கடினமான முயற்சியாலும் சுய பதவி உயர்வாலும் நாம் எதை லாபமாகப் பெற்றுக் கொண்டாலும் நாம் அதை தாங்கிக் கொண்டே ஆக வேண்டும். அது தான் நம்மை தேவன் நம்மை எங்கு அழைத்தாரோ அங்கே நடப்பதிலிருந்து தவிர்த்து விடும். அதாவது தவறாக வழி நடத்துவதல்ல. சூதுவாதற்ற யாராக இருந்தாலும் நம்மைப் பின்பற்றலாம். திறமையாகக் கையாளுதலும் பிரபலப்படுத்துதலும் சாவுக்கேதுவான சத்துருக்களாக தீர்க்கதரிசன ஊழியத்திற்கு மட்டுமல்ல மற்றெல்லா ஊழியங்களுக்கும் சத்துருவாக இருக்கின்றன. மெய்யான ஊழியத்தையும் உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய யாருமே தேவன் அவர்களுக்கு அளிக்காத செல்வாக்கை ஒரு சிறு துளி கூட விரும்ப மாட்டார்கள்.

**மனுஷனைப் பற்றிய பயமானது மாந்திரீகத்திற்கு நடத்திச் செல்கிறது**

உண்மையான ஊழியத்தையும் தேவனிடமிருந்து அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்ட நபர் இந்த போலியான ஆவிக்குரிய அதிகாரம் அல்லது மாந்திரீகம் என்பதில் எப்படி விழுந்து விடக் கூடும் என்பதற்கு சவுல் இராஜா நல்ல உதாரணம் ஆவான். பலியை செலுத்துவதற்கு முன்னர் சாமுவேலுக்காகக் காத்திருக்கும் படியாகக் கட்டளை அவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவன் அழுத்தங்களுக்கு கீழ்பணிந்து முன் ஏற்பாடின்றி முதிர்ச்சி அடையும் முன்பாக செலுத்தினான். ‘‘ஜனங்கள் என்னை விட்டு சிதறிப் போகிறதையும் குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும் பெலிஸ்தர் மிக்மாசிலே கூடி வந்திருக்கிறதையும் நான் கண்ட படியினாலே (I சாமு 13:11) என்று கூறினான்.’’ அதுவும் மையத்தில் விழுந்து விடுகிற அநேகர் வழி விலகிப் போகிறார்கள். நாம் ஜனங்களுக்கு பயப்படும்படி ஆரம்பிக்கும்பொழுது அல்லது சந்தர்ப்பங்களில் நாம் தேவனுக்கும் அதிகமாக தேவன் நம்மை விட்டு விடுவதாகப் பயப்பட்டாலும் நாம் உண்மையான விசுவாசத்திலிருந்து விலகிப் போகிறோம்.

**கோட்டைக் கடக்கும்பொழுது**

சவுல் தான் பலிகளைச் செலுத்துவதற்கு தகுதியைப் பெற்றிருக்காத பொழுது பலிகளைச் செலுத்தியதால் கட்டளையை மீறினான் என்பது குறிப்பிடத்தக்கது. சவுல் பென்யமீன் கோத்திரத்திலிருந்து வந்தவன் லேவிக் கோத்திரத்தை சேர்ந்தவன் அல்ல. இந்த மாதிரி தான் பில்லி சூனியமானது வழக்கமாக நம்மைத் தடுமாறும்படி செய்ய காரணமாகிறது. அது நமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் ஆளுகைக்கு அப்பால் போகும்படி கட்டாயப்படுத்தும்பொழுது அப்படி ஆகிறது. பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணம் போய் சேரும்படி அவனுக்கு நியமிக்கப்பட்ட அதிகார ஆளுகை எல்லைக்கு அப்பால் போக அவன் ஆராயாமல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று விளக்கிக் கூறினான். அந்த சமயத்தில் தேவன் அவன் மீது வைத்த பூகோள எல்லை இதுதான். அதுவே பின்னர் தெரிந்த பிரகாரம் எடுக்கப்பட்டு விட்டது. ஆனால் பவுல் அதைக் கடந்து போகாதபடிக்கு இருக்கும்படியாக எச்சரிக்கையாக இருந்தான். நம்மை கிரியை செய்யும்படி தேவன் அழைத்தற்கு அவருடைய கிருபைக்கு அப்பால் கடந்து போவோமானால் அதற்குப் பிறகு சத்துருவுக்கு நாம் எளிதான இலக்காக ஆகி விடுவோம். உன்னை சாத்தான் நிறுத்தி வைக்க முடியாவிட்டால் உன்னை அதிகத் தூரம் தள்ளிக் கொண்டு போக முயற்சிப்பான்.

இதுவே மிகப் பெரிதான மகா ஊழியங்கள் 1980 முதலான பத்தாண்டுகளிலான காலத்தில் வீழ்ச்சியாகும். மேலும் அந்த மகா ஊழியங்களோடு சரியாக நிற்க முயன்ற பல எண்ணற்ற சில சிறு ஊழியங்களுக்கும் வீழ்ச்சியாகும். இந்த கால கட்டத்தில் முன்னேற்றுவிக்கப்பட்ட திரித்து புரட்டப்படும் விசுவாசக் கோட்பாடுகளுக்கு ஏற்படக்கூடிய தவிர்க்க முடியாத விளைவுகள் இதுவாகும். மெய்யான விசுவாசமானது எப்பொழுதுமே பெரிதாகவோ அல்லது சற்று நல்லதாகவோ ஆக்கப்பட்டு எடுத்துக் காட்டப்படுவதில்லை. ஆனால் சில சமயங்களில் தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானாலுங்கூட அது முடிவானதாக ஆக்கப்படுகிறது. அதைத் தான் ஈசாக்கைப் பலியாக

தந்த போது ஆபிரகாம் செய்வதற்கு விருப்ப சித்தமுடையவனாய் இருந்தான். நீ 500 நபர்களுக்கு தளபதியாக இருக்கும்படி அழைக்கப்பட்டால் பதவி உயர்வுகளாலும் நல்ல விற்பனை செய் திறனாலும் நீ உன்னுடைய திருச்சபையின் வருகை பதிவேட்டை உயர்த்தக் கூடும். நீ மேலும் 5000 எண்ணிக்கைக்கு வளர முடியுமானாலும் ஒரு நாள் வரும் அன்று திருச்சபை பிரியும் பொழுது அந்த பிரிவுகள் நீ எதற்காக அபிஷேகத்தைப் பெற்றாயோ அதற்குத் திரும்ப சரியாகக் கொண்டு வந்து விடும். ஒரு நாள் வரும் அப்பொழுது எந்த அளவான பிரபலமோ அல்லது ஆத்ம பலமோ அந்த பணியை ஒன்றாகக் கூட்டிச சேர்த்து ஒருங்கிணைத்து நீ எதற்காக கிருபை பெற்றாயோ அதற்கு அப்பாலும் நிலைநிறுத்தும். இதை நீ எதற்காக கிருபை பெற்றாயோ அதற்கும் அப்பால் பிடித்து நிறுத்துவதற்கு ஒரே வழியாவது குறைந்தது ஓரளவுக்கு வழிபாட்டு முறை ஆவது தான். அதன் கீழ் கூடுவோர் அனைவரும் ஆவிக்குரிய அதிகாரமுங்கூட தேவ கிருபை குறித்து ஒரு ஆழமான புரிந்து கொள்ளுதலை பெற்றுக் கொள்வார்கள். அவர்களுடைய மகா பெரிய பயமாவது அவரது கிருபை வாசம் செய்யும் இடத்தை விட்டு விலகிப் போவதுதான். யாக்கோபுவும் பேதுரும் இதைப் புரிந்து கொண்டனர். அதைத் தான் ஏன் அவர்கள் இருவரும் வற்புறுத்திக் கூறியதாவது ''தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'' என்று சொன்னார்கள். (யாக் 4:6; மேலும் பார்க்க I பேதுரு 5:5) தேவன் எதைச் செய்யும் படியாக அழைத்தாரோ அதற்கு மேல் அப்பால் போக நம்மைக் கட்டாயப்படுத்துவது பெருமையே. இந்த பெருமையின் முடிவான வடிவமானது ''நான் தான் உலகத்தைக் காப்பற்ற வேண்டும்'' என்கிற மனப்பான்மை தான். ஒவ்வொரு மனுஷீகத் தேவைக்கும் நாம் பிரதியுத்தரம் செய்ய முயற்சிக்கும் பொழுது நாம் உண்மையான மனதுருக்கம் கொள்ளலாம். ஆனால் அது அதன் நல்ல உச்ச மட்டத்தில் மனுஷீக மனதுருக்கமாக இருந்து நம்மை ஏதோ ஒன்றில் நடக்கும்படியாக முயற்சிக்கும் படியாக வஞ்சிக்கிறது. அதையுங்கூட கர்த்தராகிய இயேசு தாமே அவர் அந்த மாதிரி செய்யவில்லை என்று கூறியிருக்கிறார்.

**மரணத்துக்கேதுவான கண்ணிப்பொறி**

பில்லி சூனியமானது அடிப்படையில் மனிதனுடைய பயத்தில் வேரூன்றி இருப்பதால் ''மனுஷனுக்கு பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்.'' (நீதி 28:25) பில்லி சூனியத்தினால் கிரியை செய்ய ஆரம்பிப்பவர்கள் பொறியில் பிடிபடுவார்கள். பயமே கண்ணியாகும். அந்தத் திட்டமோ அல்லது ஊழியமோ நாம் பிரபலமாகவும் திறன்பாட்டாலோ அல்லது கட்டுபாட்டினாலோ கட்டி எழுப்பியது எவ்வளவு பெரிதானதோ அதற்கு மேல் அதிகமாக நாம் எதையோ அல்லது யாரையோ நம்மால் திறன்பாட்டாலோ அல்லது கட்டுப்பாட்டாலோ கையாளக்கூடாததால் அவர்களைப் பற்றி அதற்கு அதிகமாக பயந்திருப்போம். இந்த சாவுக்கு ஏதுவான கண்ணியினால் பிடிக்கப்பட்டவர்கள் உண்மையான அபிஷேகத்திலும், அதிகாரத்திலும் உள்ளவர்களுக்கு அதிகமாக பயப்படுவார்கள். ஏனென்றால் அவர்கள் திறன்பாட்டாலும் அல்லது ஆவியை கட்டுபடுத்துகிறதினாலும் சிறிதேனும் பாதிக்கப்படாதவர்கள்
ஆவார்கள்.

இதன் காரணமாகவே சவுல் தாவீதின் மேல் கோபமடைந்து அதனால் அவனை அழித்து விடும்படி காய்மகாரமாய் பார்த்தான். தாவீது அவன் பார்வைக்கு அச்சமயம் ஈயைப் போலிருந்துங்கூட. இந்த மாதிரி திறன் கையாளுதலும், கட்டுப்பாடும், நமது இருதயங்களின் மேல் ஆளுகை மேற்கொள்ளும் பொழுது அது போல சித்த பிரமையும் ஆகும். இந்த மாதிரியான சாவுக்கேதுவான கண்ணியில் விழுந்து போனவர்கள் பகுத்தறிவில்லாமல் எரியுண்டவர் போல அவர்களுடைய கட்டுப்பாட்டை மிரட்டுகிறவர்கள் யாரானாலும் அவர்களைத் துரத்திவிடவோ அல்லது அழித்து விடவோ முனைவார்கள். அவர்களிடமிருந்து அதிகாரம், அங்கீகாரம், பாதுகாப்பு இவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள் சவுலைப் போலவே சூன்யக்காரியின் வீட்டைச் சென்றடைவார்கள். இதற்காகத் தான் சாமுவேல் சவுலைப் பார்த்து ''இரண்டகம் பண்ணுதல் பில்லி சூனிய பாவத்திற்கு சரியாய் இருக்கிறது'' என்று சொன்னான். (I சாமு 15:23) ஆவிக்குரிய அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் கலகம் செய்யும்பொழுது அந்த வெறுமையானது போலியான ஆவிக்குரிய பில்லி சூனிய அதிகாரத்தில் நிரப்பப்படும். இந்த செயல்பாடானது பிரபல்யத்தின் மேலும் ஆத்ம பலத்தின் எளிதான சார்ந்திருத்தலில் ஆரம்பித்து விடும். ஆனால் மனந்திரும்புதல் இல்லாவிடில் அதீதமான சாத்தானிய உருவங்களான உத்தேசமும் முரட்டாட்டமும் ஆகியவற்றில் முடிவுறக் கூடும். சவுல் இராஜாவின் காரியத்தில் நடந்தது போலவே நடக்கும். சவுல் உண்மையான

ஆசாரியர்களைக் கொன்றான். கர்த்தரை உண்மையாய் பின்பற்றிய இருதயமுடையவர்களை சித்திரவதை செய்தான். அவனுடைய ஜீவியத்தின் கடைசி நாளை அஞ்சனக்காரியின் வீட்டில் போக்கினான். அவனுடைய ஜீவியத்தின் இயல்பான முடிவு போன திசையிலே முடிந்தது.

ஆவிக்குரிய அதிகாரம் என்பது அபாயகரமான தொழிலாகும். நாம் தாவீதைப் போல ஞானமுள்ளவர்களாக இருந்தால் அதிகாரத்துவ அந்தஸ்த்தைத் தேட மாட்டோம். அப்படியே நமக்கு ஒன்று கொடுக்கப்பட்டாலும் அதைத் தருவது கர்த்தர் தான் என்று நிச்சயப்படுத்திக் கொள்ளும் வரைக்கும் நாம் அப்படிப்பட்ட ஒன்றையுமே ஏற்றுக் கொள்ள மாட்டோம். தேவனால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரையும் அவன் இயேசுவுக்குக் கொடுத்த அதே சோதனையால் கவர்ந்திழுக்கிறான். நாம் அவனுக்கும் அவன் வழிகளுக்கும் தலை குனிந்தால் அவன் இராஜ்ஜியங்கள் மீது நமக்கு அதிகாரத்தைத் தருவான். தேவன் நம்மை இராஜ்ஜியங்கள் மீது ஆளுகை செய்யும்படியாகவுங்கூட அழைத்திருக்கிறார். ஆனால் அவருடைய வழிகள் நம்மை சிலுவைக்கு நேராக நடத்தி செல்கிறது. மேலும் நாம் எல்லாருக்கும் ஊழியக்காரன் ஆனால் மாத்திரமே அதைப் பெற்றுக் கொள்ள முடியும். சாத்தானுடைய சோதனையானது தேவன் மெய்யாகவே நம்மை அழைத்து பெற்றுக் கொள்ளும்படியாக எதை வைத்தாரோ அதை அடைவதற்கு விரைவானதும் சுலபமானதுமான வழியேயாகும்.

**உண்மையான அதிகாரத்துவத்தின் பொறுப்பு**

தாவீதுக்கு அடைமொழியாக அடிக்கடி அதிகமாக உபயோகப்படும் சொற்றொடராவது ''அவன் தேவனிடத்தில் விசாரித்தான்'' என்பதே. அந்த சில சமயங்களில் கர்த்தரிடத்தில் விசாரிக்காமல் அவன் பெரிய தீர்மானங்களை எடுத்துக் கொண்ட பொழுது அதனால் அந்த விளைவுகள் நாசமாக்குவதாக இருந்தது. இந்த உத்தேசத்தினால் வந்த விளைவுகளால் கஷ்டப்பட்டது தாவீது மாத்திரம் அல்ல. அவனுக்குக் கீழ் இருந்த மனிதர்களுங்கூட கஷ்டத்தை அனுபவித்தனர். அந்த அதிகாரப் பதவி எவ்வளவுக்கு உயரமோ அதற்கேற்ப அதிகமாக அது அபாயகரமானதாகும். மேலும் அதே மாதிரி அதிகமான ஜனங்களும் பார்வைக்கு முக்கியமில்லாத தீர்மானங்களால் அவர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆதாம் வீழ்ச்சி அடைந்த பொழுது எண்ணிக்கையற்ற ஆத்துமாக்களும் கஷ்டத்துக்குள்ளாக்கப்பட்டன. அதிகாரத்துடனே முற்றிலும் மெய்யான பொறுப்பும் கூடவே வருகிறது. ஆகவே தீங்கான வழி தவறிப் போன ஆத்துமாக்கள் மாத்திரமே அந்த அதிகாரத்தை சுய நலமான காரணங்களுக்காகக் கெஞ்சித் தவிக்கும். உண்மையான ஆவிக்குரிய அதிகாரமானது தேடிப் பெற்றுக் கொள்ளக் கூடிய கௌரவம் அல்ல. அது சுமந்து செல்லக் கூடிய பாரச் சுமையாகும். அதிகாரத்தையும் செல்வாக்கையும் தேடும் அநேகர் தாங்கள் தேடிக் கேட்பது இன்னதென்று அறிய மாட்டார்கள். மேலும் அவர்களுடைய முதிர்ச்சியின்மையானது அவர்களுக்கு ஏற்ற காலத்திற்கு முன் வழங்கப்பட்டால் அதுவே அவர்களுக்கு முடிவான தீர்ப்பாகும்.

கிருபையின் காலத்திற்கு முன்னதாக ஓராயிரம் ஆண்டுகள் முன்னே தாவீது ஜீவித்திருந்தாலும் அவனுங்கூட கிருபையைப் பற்றி அந்த காலத்தில் வாழ்ந்த யாராவது ஒருவரைப் போலவே அறிந்திருந்தான். ஆனாலும் அவனுங்கூட தவறுகள் செய்தான். அதனால் ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு தேசம் விளைந்தது. அந்த ஒரு காரணத்தினால் சாலோமோனும் தன் தந்தையைப் பார்த்துக் கவனித்திருந்தபடியால் அந்த ஒரு காரியமாக அவன் வாஞ்சித்தது தேவனுடைய ஜனங்களை ஆளுவதற்கு அவசியமான ஞானத்தை மட்டும் கர்த்தரிடம் கேட்டான். திருச்சபையில் தலைமைத்துவ பதவிக்காக அழைக்கப்பட்ட யாருமே அந்த மாதிரியான பக்தியில் இருக்க வேண்டும். ஒரு ஆவிக்குரிய அதிகாரத்துவ பதவியில் இருந்திருக்காமல் இருந்தாலுங்கூட உத்தேசம் என்பத நம்மை கொன்று விடும். நாம் அதிகாரத்துவ ஸ்தானத்தில் இருந்தாலுங்கூட அது ஏறக்குறைய நிச்சயமாகவே நமது வீழ்ச்சிக்கு நடத்திச் சென்றும் மேலும் மற்றும் அநேகருடைய வீழ்ச்சிக்கும் நடத்திச் செல்லக் கூடும். வசனத்தைப் பற்றிய அறிவு வரமானது அதிகாரத்தின் ஒரு பயமுறுத்தும் எடுத்துக்காட்டாகும். அத்துடன் அது அதீதமான உள்ளக் கிளர்ச்சியைக் கொண்டு செல்கிறது. ஆனால் ஆவிக்குரிய அதிகாரத்தில் நடக்கும்படியாக அழைக்கப்பட்டவர்கள் வசனத்தைப் பற்றிய ஞானத்தைப் பற்றிய வரத்தை, வார்த்தையை பற்றிய அறிவு வரத்தை விட மேலும் அதிகமாக தேடுவார்களானால் அவர்கள் நல்லதையே செய்தவர்களாவார்கள். நமக்கு வசனத்தின் அறிவு பற்றிய வல்லமையானது கர்த்தருடைய வேலையைச் செய்யும்படி நமக்கு தேவையானதே. ஆனால் அந்த வல்லமையை சரியான முறையில் பயன்படுத்த நமக்கு ஞானம் அவசியமே.

**பாதுகாப்பு வலை**

தாழ்மைக்கு முன்னதாக பிரபலமான மேம்பாட்டை அடைபவர்கள் விழுந்து விடுவார்கள். ஏனென்றால் தேவன் பெருமையுள்ளவர்களை எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (யாக் 4:6) ஆகையால் நமக்கு ஞானம் இருக்குமானால் நாம் தாழ்மையைத் தேடுவோம். அதுவும் அந்தஸ்த்துக்கு முன்னரே தேடுவோம். உண்மையான அதிகாரம் தேவனுடைய கிருபை மேல் கிரியை செய்கிறது. அந்த அதிகாரத்திற்குள் எவ்வளவு அதிகமாக நடக்கிறமோ அதற்கு அதிகமான கிருபை நமக்குத் தேவை. ஆவிக்குரிய உண்மையான அதிகாரத்தை நாம் பெற்றிருப்பது. ராஜா நமக்குள் வாசம் செய்யும் அளவுக்கு நாம் பெற்றிருக்கிறோம். உண்மையான ஆவிக்குரிய அதிகாரம் என்பது ஒரு அந்தஸ்த்தில் அல்ல அது கிருபையாகும். போலியான ஆவிக்குரிய அதிகாரமானது கிருபைக்குப் பதிலாக தனது அந்தஸ்த்தின் மேல் நிற்கிறது. மிக உயர்ந்த ஆவிக்குரிய அதிகாரத்துவமான இயேசு தமது ஸ்தானத்தை பயன்படுத்தி தனது ஜீவனைத் தந்தருளினார். மேலும் தமக்கு பின்னால் பின்பற்றி வருகிறவர்களையும் தங்களது சிலுவைகளை எடுத்துக் கொண்டு அதே போல் தங்கள் ஜீவனையும் கொடுக்கும்படி கட்டளையிட்டார். மேலும் இடையே ஒரு எளிய வேறுபடுத்திக் காட்டும் காரணி இருக்கிறது. பொய்யானவர்கள் தங்கள் வரங்களையும் மக்களையும் தங்களுக்காக உபயோகிக்கிறார்கள். உண்மையான ஊழியங்கள் தங்கள் வரங்களை தாங்களையே மக்களுக்காக கொடுத்து விடுகிறார்கள். மறுபடியும் சுய நலத் தேடுதல், சுய பதவி உயர்வு, சுய பேணிக் காத்தல் ஆகியவை மிகவும் நாசத்தை, உண்மை ஊழியங்களுக்கு உண்டாக்கும் சக்திகளாகும். நாமுங்கூட சவுல் இராஜாவைப் போல தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தாலும் நம்மையும் அந்த தீய சக்திகள் நம்மேல் கட்டுப்பாடு எய்துமானால் நாமுங்கூட அந்த பில்லி சூனியத்திற்குள் விழுந்து விடக் கூடும்.

# அதிகாரம் 3 - பில்லி சூனியத்திற்கு எதிரான நமது கேடகம்

தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் பில்லி சூனியத்தை உபயோகிப்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுவதுமன்றி அவர்களும் அதைச் செய்பவர்களின் முக்கியமான இலக்காக ஆகக் கூடும் என்பதைப் பற்றி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அதுவும் அந்த ஒரு சத்துருவை நாம் உள்ளே இருந்தும் புறம்பே இருந்தும் விழிப்புடன் கவனிக்க வேண்டும். அது நம்முடைய இருதயங்களில் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளும் சமயம் போலவே அது நம்மை புறம்பே இருந்து தாக்கும் பொழுதும் அதே போல தந்திரமானதுதான். இந்த விதமான பில்லி சூனியம் தான் மிகவும் சில சமயங்களில் நாம் கறுப்பு மந்திர வித்தை என்று அழைக்கிறோம். ஆனால் அது வழக்கமான வடிவமான வெள்ளையான மந்திர வித்தையாகும். இதற்குள் தாங்கள் நேர்மையாக நடக்கும் படியான நம்பிக்கையில்லாத நன்றாக அர்த்தமுள்ள மக்களையும் உள்ளாக்கிக் கொண்டு அதன் காரணமாக தந்திரமான திறன்பாட்டால் கையாளப்பட்டு செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளும் தந்திரமான வடிவங்களுக்குள் விழுந்து விடுகிறார்கள்.

ஒரு பிரத்தியட்சமான வெள்ளை மாந்திரீக வித்தையின் வடிவமானதை திருச்சபையில் நாம் குணச் சித்திரமான மாந்திரீக வித்தை என்றழைக்கிறோம். இது எந்த விதமான தனிப்பட்ட காரணிகளையும் விட திருச்சபைக்கு அதிகக் கூடுமான சேதத்தை விளைவித்திருக்கிறது. ஆனால் இது வரை முழுவதுமாக புரிந்து கொள்ளப்பட்டோ அல்லது எதிர்த்து போரிடப்பட்டதாகவோ இல்லை. இது அறைகுறையான (என்று பேரிட்டு அழைக்கப்படுகிற) ஆவிக்குரிய தன்மையாக ஒரு மிக உயர்ந்த ஆவிக்குரிய முகமூடியை பயன்படுத்தி செல்வாக்கைப் பெறவோ அல்லது கட்டுபாடு செய்யவோ உபயோகிக்கப்படுகிறது. இதுவே பொய்யான தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள், கனவுகள், தரிசனங்கள் இவற்றிற்கு மூல காரணமாக முடிவாக அழிக்கவோ அல்லது பணியை மிதப்படுத்துவோ அல்லது தலைமைத்துவத்தை அந்த குறிப்பிட்ட மையம் வரைக்கும் அவர்களை மேற்கொண்டு பிரதி கிரியை செய்தும் அந்த தீர்க்கதரிசனம் முழுவதையுமே இழிவாகப் பேசி விடுகிறார்கள். இந்த வடிவமான மாந்திரீக வித்தையைப் பயன்படுத்தும் நபர் ஏறக்குறைய எப்பொழுதுமே தனக்கு கர்த்தருடைய சிந்தனையே இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதனால் அந்த தலைமைத்துவம் முரட்டாட்டமான கலகத்துக்குள்ளாகி விடுகிறது.

**முகஸ்துதி அல்லது முகமன் பேசுதல் எங்கும் உன்னைக் கொண்டு போகாது**

முகஸ்துதி என்பது எதிரியின் மோசமான யூக உத்தியாகும். அது ஒரு திருச்சபையையோ அல்லது ஊழியத்தையோ தேவனுடைய சித்தத்திலிருந்து திருப்பி விடும் நோக்கம் உடையது. பில்லி சூனியத்திற்குள் விழுந்து விட்ட தீர்க்கதரிசிகள் சுய பதவி உயர்வு மூலமாக அடிக்கடி சத்துருவினால் இந்த வழியில் பயன்படுத்தப்படுவார்கள். உன்னை நீ செல்லும் வழியில் இருந்து தங்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவதால் திசை திருப்பி விடுவார்கள். இது இதற்கும் அதிகமாக மிகுந்த பகட்டாகவும் கவர்ச்சியாகவும் தேவன் உன்னை செய்யுமாறு அழைத்ததை விட மேலாகக் காணப்படும். இந்த வழியில் இருதயமும் அதன் ஊழியத்தின் மூல சக்திகளும் பக்க வழியாகப் போகச் செய்து வழக்கமாக தோல்வியினால் நாசத்தை அடையும். செல்வாக்கை வளர்த்துக் கொள்ள ஆடம்பரமான தரிசனங்களைக் கொடுக்க முயற்சிப்பவர்களையும் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அத்தகைய வார்த்தைகளையே அவைகளைப் பகிர்ந்து கொள்வதால் எதையுமே லாபமாக அடைய முடியாதவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் அல்லது யாருடைய உத்தமமானது முழுவதுமாக ஸ்தாபிக்கப்பட்டதோ அவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளவும். ஆனால் தங்களையே நிலையாக ஸ்தாபித்துக் கொள்ள முயல்பவர்களிடமிருந்து ஒருக்காலும் பெற்றுக் கொள்ளலாகாது.

அரிதான அறிவுக்கு மிஞ்சிய வரங்களையும் அதிகாரங்களையுமுடைய தீர்க்கதரிசிகள் இந்த நூற்றாண்டில் மற்றவர்களால் லஞ்சம் பெற்று அவர்களுக்கு அவர்கள் இருந்ததை விட அல்லது ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்டதை விட அவர்கள் மகத்தானவர்கள் என்றும் அவர்களுக்குத் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். நியாயந்தீர்ப்பு நாளிலே இந்த வடிவமான மாந்திரீக வித்தையானது திருச்சபைக்கு மிகவும் அதிகமாக நாசம் விளைவிப்பதாக வழிபாட்டு முறைகளும் புதிய சகாப்தமும் மற்றெல்லா வழிபாடுங்களும் ஒருங்கிணைத்து விளைவிக்கும் தாக்கத்தைவிட அதிகமானதாக நாம் பார்த்து அறியலாம். வழிபாட்டு முறைகளிலிருந்து வரும் பொய்யான தீர்க்கதரிசிகளை நாம் பகுத்துணர்ந்து கொள்ளலாம். ஆனாலும் திருச்சபையில் இருக்கிறவர்களை அவர்கள் மெய்யான விசுவாசிகளாய் இருக்கலாம். ஆனாலும் அவர்களை வேறுபடுத்திப் பார்ப்பது கடினமானதாகும். ஆம் ஒரு உண்மையான விசுவாசியானவர் ஒரு பொய்யான தீர்க்கதரிசியாக இருக்கலாம். தேவனிடமிருந்து அழைப்புக்கான திட்டத்தைப் பெறவில்லை என்ற உத்தேசமானது நாம் பொய்யான ஊழியத்தில் இருக்கிறோம் என்றாகும். தீர்க்கதரிசன அதிகாரமானது வேறு எந்த விதமான ஆதாரச் சான்றுகளாலும் ஸ்தாபனம் செய்ய முடியாது.

சிபாரிசு கடிதங்களுக்கு அங்கு இடமுண்டு. ஆனாலும் நாம் யாரையுமே தங்களுடைய ஆவிக்குரிய அதிகாரத்தை நிறுவும்படி எந்த பள்ளியில் படித்தோம் என்றும் பெற்றுக் கொண்ட பட்டங்களைக் கொண்டும் யாருடைய ஊழியத்தின் கீழ் அவர்கள் இருந்தனர் என்றும் இவைகளைப் பயன்படுத்தி தங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தை ஸ்தாபிக்க விரும்பினால் அவர்களைக் கேள்விக்கணைகள் தொடுத்து விசாரிக்க வேண்டும். மேலும் தங்களுடைய சொந்தத் தீர்க்கதரிசன கதைகளைப் பற்றிய பிரதாபத்தை எப்பொழுதும் சொல்லிக் கொண்டே இருப்பவர்களைப் பற்றியும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மிகவும் சிறப்பாக இது முதிர்ச்சிக் குறைவுக்கு சாட்சியாகும். உண்மையானவர்களாகவே இருக்கிறவர்கள் தேவனுடைய அவருடைய தூதர்களுடனும் போதுமான கூட்டுத் தோழமை கொண்டிருந்தபடியால் வேறு யாரும் அவர்களை நம்பினாலும் அதைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். நாம் இந்த பொய்யான தீர்க்கதரிசிகள் வைக்கும் கண்ணிகளிலிருந்து தப்பி சுதந்திரமாக இருக்க வேண்டுமானால் நாம் சுய பதவி உயர்வை கண்டு அறியத் தொடங்கி அதை பயன்படுத்துபவர்களின் ஊழியத்தை புறக்கணிக்க வேண்டும்.

**பில்லிசூனியத்திற்கு எதிர்ப்பு**

அந்த அடிப்படையான வியூக யுக்தியை கொண்டு நாம் கட்டாயமாக பயன்படுத்தி பில்லி சூனிய வல்லமையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளுமாறு செய்வதாவது நம்மைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிப்பதேயாகும். இதற்கு நாம் அவர்களுடைய பணிகளை ஆசீர்வதிக்கிறோம் என்று அர்த்தமாகாது. நாம் அவர்களுக்காக ஜெபிக்கிறோம் விரோதமாக அல்ல. முதிர்ச்சி பெறாத அல்லது ஸ்திரமில்லாதவர்களாக யுக்தி திறன்பாடுகளுக்கும் சுயபதவி உயர்வுக்கும் கீழ் விழுந்து விட்டவர்களை நாம் ஆசீர்வதித்து அதாவது சத்தியம், உத்தமம் இவற்றிற்காக பரஸ்பரம் விட்டுக் கொடுக்காமல் நிலை நிற்கிறோம். அவர்களுடைய ஊழியத்தை நாம் புறக்கணிக்கக் கூடும்.

அவர்களைப் புறக்கணிக்காமலே. ஆனால் அதை விட விடுதலை மீட்ச்சி என்றதன் வழியில் போக அவர்களுக்கு உதவி செய்தும் விட வேண்டும். நம்மை பில்லி சூனியம் மற்றும் இதர வல்லமை வடிவங்களால் நம்மை சபிக்கும்படியாக முயற்சிப்பவர்களை நாம் ஆசீர்வதிக்க வேண்டும். சத்துருவானவன் நம்மைக் கொண்டு அதே ஆவியை உபயோகிக்கும்படி செய்வான். ஆகவே நாம் அந்த அதே தீங்கை நாம் ஒழித்து விடும்படி முயற்சிக்கும் தீங்கையே நாம் பெருக்கல் வழி பெறுகச் செய்து விடுவோம். நாம் மாம்சத்தையும் இரத்தத்தையும் எதிர்த்து யுத்தம் செய்யவில்லை. நமது போராயுதங்கள் மாம்சீகமானவை அல்ல. ஆனால் ஆவிக்குரியவை. (எபேசி 6:12) நம்மைத் தாக்கும் மக்களைக் குறித்து நாம் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்க ஆரம்பிக்கும் பொழுது கட்டுபாடு செய்யும் வல்லமையும் யுக்தத் திறன்பாடும் அவர்கள் மேலும் நம்மேலும் உடைத்து நொறுக்கப்படுகின்றன. நாம் தீமைக்கு பதிலாக தீமை செய்யாமல் தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும்.

**புதிய சகாப்தத்து பில்லி சூனியத்தைப் புரிந்து கொள்ளுதல்**

இந்த புதிய சகாப்தத்து இயக்கம் அடிப்படையாக மாந்திரீகமும் உறிந்துயிசமும் ஒன்றாகக் கலந்து வெள்ளை ஆடை நிபுணர்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக மாறுவேடத்தில் புகுத்தப்பட்டதாகும். இந்த வடிவமான ஆவிக்குரிய தன்மை இந்தக் கூட்டத்தையே இலக்காக்கிக் கொள்வதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. ஏறக்குறைய 5800 ஆண்டுகளாக இந்த பூலோகத்தின் 6000 வருஷ கால எழுதப்பட்ட சரித்திரத்தில் 90% சதவிகிதமான தொழிலாளர்கள் அனைவரும் விவசாயத் தொழிலாளர்களே ஆகும். ஆனால் சரியாக ஒரு நூற்றாண்டுக்கு சற்று முன்னர் அந்த புள்ளி விவரங்கள் அனைத்தும் எதிராக மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. ஆகவே மேற்கத்திய தொழிலாளர்களில் 5% சதவிகிதத்திற்கு குறைவானவர்கள் வேளாண் தொழிலாளர்களே. இந்த மாற்றங்கள் அனைத்தும் தொழில் நுட்ப முன்னேற்றங்களால் விளைந்த விளைவாகும். இந்த 5% சத விகித்தினர்களால் விவசாயத்தில் தொழில் செய்பவர்கள் இக்காலத்தில் அந்த 95% சதவிகித்தினர் சென்ற நூற்றாண்டில் உற்பத்தி செய்ததை விட அதிகம் உற்பத்தி செய்ய முடியும்.

இந்த 1950களின் மத்தியில் வெள்ளை காலர் அணிந்த தொழிலாளர்கள் மேற்கத்திய நாடுகளில் ஊதா காலர் அணிந்த தொழிலாளர்களை விட எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். அந்த காலத்திலிருந்து இந்த பெரும்பான்மையானது வளர்ந்து இன்று வரைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டு ஊதா காலர் தொழிலாளிகள் விவசாயத் தொழிலாளிகள் வந்த வழியில் சமீப காலம் வரைக்கும் போவார்கள். அவர்கள் சமுதாயத்தில் ஒரு சிறிது பின்னத்து அளவு மக்களாக சேர்ந்து இணைந்து இருப்பார்கள். கர்த்தர், அறிவும் பெறுகிப் போகும் என்று முன்னுரைத்த பொழுது ஒரு சிலரே இது எந்த அளவுக்கு நேரிடக் கூடும் என்பதை புரிந்து கொண்டிருந்தனர். இந்தக் காலத்தில் தகவல் என்பதே மிகவும் மதிப்புள்ள பொருளாக உலகில் இருந்தது. அந்த தகவலை கூட்டிச் சேர்த்து, விளக்கம் கூறி, பெட்டிகளில் அடைத்தும் அறிவை மாறுதல் செய்வது உலகில் மிகப் பெரிய தொழில் துறை ஆகும். இந்த அறிவு தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் அதிக எண்ணிக்கையுள்ளவர்களாக மட்டுமல்ல மேலும் அவர்கள் மிகுந்த ஐசுவரியமும் மிகுந்த வல்லமையும் உடையவர்கள். திருச்சபையானது கிட்டிச் சேர முடியாதபடி தோல்வி அடைந்தது பெருக்கத்திற்கும் மற்ற வழிபாடுகளுக்கும் போஷிக்கப்பட உதவி செய்கிறது. நாம் ஆவியாயிருக்கும் தேவனுடன் அந்நியோந்நியமாக இருக்கும்படியாக மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபடியால் மனிதனுக்குள் வேதாகமத்தின்படி ஒரு வெறுமை இருக்கிறது. அது மனிதனுக்குள் வேதாகமத்தின்படி அமானுஷ்யத்துவத்திற்காக பசியை உண்டாக்குகிறது. தேவனுடைய மெய்யான அமானுஷ்யமான வல்லமையைப் பற்றி அறியாதவர்கள் தீங்குக்கும் சத்துருவின் போலியான அமானுஷ்யமான வல்லமைக்கும் நேராக இழுத்துக் கொண்டு விடுவான். இதை பவுல் விளக்கிக் கூறியதாவது, “தேவனுடைய இராஜ்ஜியம் பேச்சிலே அல்ல. பெலத்திலே உண்டாயிருக்கிறது.” (I கொரி 4:20) சாத்தான் இதை அறிந்திருக்கிறான். மேலும் அவன் போர் களத்தில் போரிடுவதற்கு பேச்சு மட்டத்தில் நடத்துவதோடு முற்றிலும் திருப்தி அடைந்து விடுகிறான். நாம் கோட்பாடுகளைப் பற்றி எவ்வளவு உண்மையாக அல்லது எவ்வளவு நன்றாக விவாதிக்க முடியும் என்பதையும் பொருட்படுத்தாது தேவனுடைய வல்லமையைப் பற்றி அறியாதவர்களை வெல்வதற்கு சாத்தானுக்கு கொஞ்சங்கூட பிரச்சனையே இல்லை. இராஜ்ஜியம் பேச்சிலே அல்ல. பலத்திலே இருக்கிறது. உண்மையாகவே வேதாகமத்தை நம்புகிறவர்கள் வல்லமையில் நடப்பார்கள். நீதி என்பது நமது இருதயங்களில் நம்புகிறதினால் வரும் பலன் ஆகும். நமது சிந்தனையில் அல்ல. தேவனுடைய வல்லமையை அறியாதவர்கள் தங்கள் சிந்தனையில் மட்டுமே அவரை நம்புகிறார்கள்.

பெந்தெகொஸ்தே, குணசித்திரமான, முழு சுவிசேஷம் அத்துடன் மூன்றாவது அலை இயக்கங்களில் தன்னையே வெளிப்படுத்திக் கொண்ட கொஞ்சமான மூட்டாள்தனத்தின் வெளிச்சத்தில் அந்த இயக்கங்கள் தேவனுடைய வல்லமையை அறிந்திருந்த படியால் ஏன் அநேகர் பரிசுத்த ஆவியின் வரங்களிலிருந்து வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்பதை சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இதுவும் கூட உண்மையான விசுவாசிகளை, மற்றும் மதக் கோட்பாடுகளையும் மத நம்பிக்கைகளை மட்டும் தெரிந்து வைப்பவர்களிடமிருந்து தனித்து பிரித்து எடுக்க உதவும் பரீட்சைகளில் ஒன்றாகும். தேவன் தாமே உலகின் பைத்தியமானவைகளையே ஞானிகளை வெட்கப்படுத்தும்படித் தெரிந்து கொண்டார். தாழ்மையானவர்கள் மட்டுமே அவர் என்ன செய்கிறாரோ அதற்கு வருவார்கள் அவர்களுக்கு மட்டுமே தமது கிருபையை அருளுகிறார். தேவனுடைய அமானுஷ்யமான ஆவிக்குரிய வல்லமையை புறக்கணித்த திருச்சபைகள் நாளடைவில் அவசியப்படாதவைகளாக ஆகி அமானுஷ்யமான போராட்டத்தில் ஒரு உலகத்தைச் சேர முடியாதவர்கள் ஆகிறார்கள். சமுதாயமானது எவ்வளவுக்கு மத சார்பற்றதாக ஆகிறதோ அவ்வளவுக்கு அதிகமாக அமானுஷ்யமானதோடு ஐக்கியம் கொள்ளும்படியாக மனிதனுக்குள் இருக்கும் பசியை சரியாக அந்த மத சார்பற்ற தன்மை மிகைப்படுத்திக் காட்டுகிறது. ஆகவே தான் நாத்திகவாதிகள் மிகவும் இழிவான பில்லி சூனியம் கறுப்பு மாந்திரீகம் ஆகிய வடிவங்களின் பால் சார்ந்து போகும் போக்கிலும் இழுக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களை மனிதனுக்குள் உறைவிடமாகக் கொண்டிருக்கும் வல்லமைகளை தாங்கள் தொடுவதாக நினைக்கும்படியாக வஞ்சிக்கப்படுகிறார்கள். ஆனால் அவைகள் உண்மையில் சாத்தானியமே. திருச்சபைக்குள் இந்த கிறிஸ்தவ மிஷனரி ஸ்தாபனங்களும் இயக்கங்களும் ஆகியவை தேவனுடைய அமானுஷ்யமான வல்லமையை ஒரு காலத்தில் புறக்கணித்தவை. அவர்களுடைய சொந்தமான மக்களுக்குங்கூட அவர்கள் வேண்டாதவர்களாகவும் சலிப்பு உண்டாக்குபவர்களாகவும் அவர்கள் மிகவும் சுருங்கிப் போய் ஜனங்களைக் கவர்ச்சிப்பதற்கு கொஞ்சமோ அல்லது ஒன்றுமே வல்லமை அவர்களுக்கு இருப்பதில்லை. அந்த திருச்சபைகளிலும் மற்ற மத ஸ்தாபனங்களிலும் பெரும்பான்மையானவை தேவனுடைய வல்லமையை புறக்கணித்தால் புது சகாப்த இயக்கத்தின் தாக்கத்துக்கு ஏற்கனவே விழுந்து போயிருக்கிறார்கள். மற்றவர்கள் அந்த இயக்கத்தின் ஆவிக்கு மற்ற வடிவங்களில் விழுந்து போய் இந்த புரட்டர்களையும் அவிசுவாசிகளையும் அங்கத்தினர்களாக ஆக்கிக் கொண்டு ஆனால் உண்மையாகவே அவர்களை போதகர்களாகவும் தலைவர்களாகவும் அவர்களை அர்ப்பணம் செய்கிறது. இதற்கு முரணாக இந்த மத பாகுபாடுகளும் இயக்கங்களும் தேவனுடைய அமானுஷ்யமான வல்லமையை பிரசங்கித்தும் அதில் நடந்து போகிறவர்கள் வளர்ந்து கொண்டு போவதுமல்லாமல் ஆனால் ஒரே கூட்டமான குழு என்று அளவிடப்பட்டால் அவர்கள் மிகவும் வெகு வேகமாக உலகில் வளர்ந்து கொண்டிருக்கிற இயக்கமாக இருப்பார்கள்.

பவுல் அப்போஸ்தலன் பிரபலமாக அறிவித்ததாவது, ''உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்தினால் அல்ல. தேவனுடைய பெலத்தினாலே நிற்கும்படிக்கு என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நய வசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதி படுத்தப்பட்டதாயிருந்தது.'' (I கொரி 2:4-5) தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் தீங்கு ஆகியதன் இராஜ்ஜியத்திற்கும் இடையே நடக்கும் மோதுதலானது சத்தியத்திற்கும், பாவத்திற்கும் இடையே நடக்கும் மோதுதலாகும். மேலும் அமானுஷ்யமான வல்லமையின் நேருக்கு நேர் மோதுதலாகும். அந்த இரண்டு எதிர் கட்சியினருமே சாத்தானுடைய வீழ்ச்சியினால் உண்டாக்கப்பட்டதும் மனிதனுக்குள் இருப்பதுமான வெறுமையை நிரப்புவதற்காக நிற்பதாகும்.

மனிதனுடன் தேவனுடைய இடைபடுதலான சரித்திரம் முழுவதுமே அமானுஷ்யமான வல்லமையால் காட்டப்படும். வல்லமை காட்சிகளும் அதற்குள் அடங்கும். நாம் தேவனுடைய அமானுஷ்யமான வல்லமையில் நடக்காவிட்டால் நம்மை வேதாகம மக்கள் என்று உரிமை கோருவது முரண்பாடாகும். வேதாகமத்தை மெய்யாகவே நம்புகிறவர்கள் அதில் எழுதப்பட்டவைகளையே செய்து நிறைவேற்றுவார்கள் என்று வேதாகமமே போதிக்கிறது. ஒரு வேளை வல்லமையற்ற கிறிஸ்தவர்களால் ஒரு காலுமில்லாத படியாக உபாயமாக தோற்றுவிக்கப்பட்ட மிக மிக இழிவுபடுத்தும் கிறிஸ்தவ மதக் கோட்பாடானது இன்றியமையாததாகக் கூறுவதாவது பரிசுத்த ஆவியானவர் ஒரே ஒரு புத்தகத்தை மாத்திரம் எழுதி விட்டு பின்னர் ஓய்வு எடுத்துக் கொண்டார் என்கிறது. நமக்கு அவர் இனி மேல் தேவை இல்லை என்று உட்கருத்தாகக் கூறுவது, அவரைப் பற்றி ஒரே ஒரு புத்தகம் நமக்கு இருக்கிறது என்று சொல்வது நகைப்புக்குரியதானது மட்டுமல்ல. அது ஒரு உயர்ந்த

ஒழுங்கு முறையின் வஞ்சிப்பதாகும். வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்தது போலவே கர்த்தர் இன்றும் இருக்கிறார். மேலும் அன்று அவர் செய்தவைகள் ஒவ்வொன்றையுமே இன்றும் அவர் செய்து கொண்டு இருக்கிறார்.

வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட உண்மையான கிறிஸ்தவமானது வார்த்தைகளால் அடங்கியது மட்டுமல்ல தேவனுடைய அன்பு, இரட்சிக்கும் வல்லமையையும் சொஸ்தமாக்கும் வல்லமையையும் விடுவிக்கும் வல்லமையையும் கொண்ட செய்யப்பட்ட எடுத்துக் காட்டுகளும் அடங்கப் பெற்றது. இயேசுவும் சொன்னதாவது, நீர் (பிதா) என்னை உலகத்தில் அனுப்பியது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் என்றார். (யோவான் 17:18 ஐப் பார்க்க) இயேசு தேவனுடைய சொஸ்தமாக்கும் வல்லமையையும் மேலும் இரட்சிக்கும் வல்லமையைப் பற்றி மாத்திரம் பேசவில்லை. அதை செய்தும் எடுத்துக் காட்டினார். நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமானால் அவர் பிரசங்கித்து செய்து காட்டியது போலவே நாமும் அவரைப் போல் பிரசங்கித்தும் தேவனுடைய அன்பையும் வல்லமையையும் செய்து எடுத்துக் காட்ட வேண்டும். அவர் உலகில் வெளியே சீஷர்களை அனுப்பிய பொழுது அவர்கள் இராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கித்த பொழுது நோயாளிகளை சொஸ்தமாக்கவும் அவர்கள் பிசாசுகளைத் துரத்தும்படியும் அனுப்பினார். அவர் என்றும் மாறதவர் அவர் அவருடைய உண்மையான தூதுவர்களை அனுப்பும் வழியையும் அவர் மாற்றிக் கொள்ள வில்லை.

முடிவு ஆன கடைசி கால முடிவைக் குறித்த வேதாகமத்து தீர்க்கதரிசனங்களில் பல காலத்தின் அமானுஷ்யமான தன்மையைக் குறித்து பேசுகின்றன. தேவனுடைய வல்லமையில் நடந்து போகாத சபைகள் காலத்தோடு இடைபடுவதிலும் அதற்கு விரோதமாக எழும்பும் வல்லமைகளை எதிர்த்து நிற்பதிலும் அதிகரித்த போதுமானவைகளாக அல்லாமல் ஆகி விடும். இந்த சத்துருவின் வல்லமையை மேற்கொள்ளுவதற்கு நாம் மேலும் ''ஆவலுடன் ஆவிக்குரிய வரங்களை வாஞ்சிக்க வேண்டும். அதிலும் ஞான வரங்களை விரும்புங்கள். விசேஷமாய் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.'' (I கொரி 14:1) வஞ்சிக்கும் சத்துருவின் போலியான அமானுஷ்யமான வல்லமையை எதிர்த்து நிற்கும் முதல் பாதுகாப்பாவது தேவனுடைய மெய்யான வல்லமையை அறிந்து கொள்வதாகும்.

**மிகவும் சரியாக நாடுங்கள்**

அநேக விசுவாசிகள் இக்காலத்தில் ஆவிக்குரிய வரங்களை வாஞ்சிக்கிறார்கள். நாமும் அவற்றை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் ''ஆவலுடன்'' வாஞ்சிக்க வேண்டும். பெரும்பான்மையான திருச்சபைகள் தற்காலத்தில் தேவனுக்காக திறந்தவைகளாக அவைகளை தேவன் தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துதல் மூலமாக அவைகளைப் பயன்படுத்துமாறு இருக்கின்றன. ஆகவே தேவன் கட்டளையிட்டிருக்கிறது என்னவென்றால் பெற்றுக் கொள்ளும்படியாக ஒருவர் கேட்க வேண்டும் தேட வேண்டும் தட்டிப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். கர்த்தருக்காகத் தாங்கள் திறந்தவர்களாக பயன்படுத்தும்படி இருக்கிறவர்கள் மெய்யாகவே அவர்கள் ஏறக்குறைய உபயோகப்படுத்தப்படவில்லை. திறந்தவர்களாக இருப்பது என்பது வழக்கமாக அச்சம் நிறைந்தவர்களாகவோ அல்லது தோல்வியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அதிக பெருமையுள்ளவர்களாகவே இருப்பவர்களுக்கு வழக்கமான மூடும் திரையாகும். அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் விசுவாசத்தையும் தேடும் வாஞ்சையையும் கொண்டிருக்க வேண்டும்.

தேவனுக்கு மிகவும் அருகில் நாம் விரும்புகிறபடி இருப்பதற்காக தேவன் நமக்காக வழியை உண்டு பண்ணியிருக்கிறார். வேதாகமத்தின் சரித்திரத்தில் எந்த தனிப்பட்ட ஒரு மனிதனாவது இன்று உயிரோடு இருப்பவர்களில் நீ தேவனுக்கு அருகில் இருப்பதை விட யாருமே அவ்வாறு இருக்க முடியாது. தேவனுக்கு மிக அருகாமையில் இருப்பவர்களுக்கும், அருகாமையில் இல்லாதவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசமானது என்னவென்றால் அவருக்கு அருகாமையில் இருப்பவர்கள் அவரை அதிகமாக வாஞ்சிக்கும்படியாக போதுமான அளவில் தேடுகிறார்கள். இந்தக் கருத்தானது அவருடைய வார்த்தையில் நமக்கு அளிக்கும் ஒவ்வொன்றைக் குறித்தும் இதே போல் மெய்யாகும். ஆவிக்குரிய ஞான வரங்களை மிகவும் போதுமானதாக ''ஆர்வத்துடன் வாஞ்சிக்கிறவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளும் வரைக்கும் தேடுவது போதுமானதாகும். ஆனாலும் நாம் கேட்கலாம்'' இது சுய பதவி உயர்வென்று எளிதாக ஆகாதா? என்ற வினாவைத் தொடுக்கலாம். அது அப்படி இருக்கக் கூடும். நாம் மிகவும் கேவலமான சுய நலமிக்க காரணங்களுக்காக

வரங்களைத் தேடக் கூடும். மேலும் நாம் மிகவும் அதீதமான சுத்தமான உள் நோக்கங்களோடும் கூடத் தேடலாம். நம்மில் அநேகர் இந்த இரண்டு எல்லை விளிம்புகளுக்குள் எங்கோ விழுந்து விடக் கூடும். நான் என்னுடைய உள்நோக்கங்கள் சுத்தமானவைகள் அல்ல என்று கண்டு தெரிந்து கொள்கிறேன். ஆனால் நான் வேண்டிக் கொண்டு என்னுடைய உள்நோக்கங்களைத் திருத்துமாறு கர்த்தரிடம் ஜெபத்தில் ஏறெடுக்கும்பொழுது அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிகிறதினால் தேடிக் கொண்டிருக்கிறேன். நாம் நம்முடைய சுய நலமான உள் நோக்கங்களோடு எந்த விதமான வேதாகமத்தின் ஒழுங்கு நெறிகளான ஜெபித்தல், ஆராதித்தல், சாட்சி கூறுதல் ஆகிய செயல்பாடுகளைச் செய்து கொள்ளலாம். இதனால் இந்த செயல்பாடுகளைச் செய்வதை முற்று புள்ளி வைத்து நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தமா? அப்படி அல்லவே அல்ல. நாம் வெவ்வேறு உள்நோக்கங்களோடு அவற்றைச் செய்ய விளைகிறோம். நமது உள்நோக்கங்கள் பூரணமாகும் வரைக்கும் காத்திருப்போமானால் நாம் அவைகளில் ஒன்றையும் ஒருபோதும் செய்ய மாட்டோம். நாம் அடிக்கடி அவைகளை அவ்வாறு செய்வதால் நாம் மாறுதல் அடைகிறோம். நாம் கர்த்தருடைய பிரசன்னத்தில் வரும்படியாக அவ்வாறு மாற்றப்படுவதில்லை. நாம் கர்த்தருடைய பிரசன்னத்துக்குள் வருவதால் மாற்றப்படுகிறோம்.

பரிசுத்த ஆவியின் வரங்களுக்குள் நடக்கும்படியாக நாம் தேடுவது தேவனைத் தேடுவதற்கான ஒரு வடிவமாகும். அதிலும் மேலும் அதிகமான முக்கியமாய் கீழ்படிந்திருப்பதாகும். நம்முடைய தேவன் அமானுஷ்யமானவர் நாம் மெய்யாகவே அவருடன் அந்நியோந்நியத்தை அமானுஷ்யமானதுடன் ஐக்கியத்தை வாஞ்சிக்காவிட்டால் அதை பெற்றுக் கொள்ள முடியாது. மதக் கோட்பாடுகளால் கடினப்பட்டவர்களுங்கூட அவர்களுடைய பலக் குறைவை நியாயப்படுத்திக் கொண்டு அமானுஷ்யமானதற்காக தங்கள் இருதயங்களில் ஏங்குகிறார்கள். தேவன் சர்வ வல்லமையுள்ளவராய் இருக்கிறபடியால் தேவனை அவர் இருக்கிற பிரகாரமாய் அறிந்து கொள்வதிலிருந்து அவர்களை அப்பால் வைத்துக் கொள்வதற்கு அவர்கள் தங்களது பயங்களை அனுமதித்துக் கொள்கிறார்கள். நாம் எல்லாரும் ஆவிக்குள் ஐக்கியத்தில் இருக்கும்படியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். அது அமானுஷ்யமானது அல்லாவிட்டால் அது ஆவிக்குரியதாக இருக்க முடியாது.

**சத்தியமும் வல்லமையும்**

மெய்யான வேதாகமத்தின் அடிப்படையிலான கிறிஸ்தவமானது உண்மையான தேவனுடைய வார்த்தையாக தேவனுடைய வல்லமையால் உண்மை உறுதி செய்யப்படுகிறது. இயேசுவானவர் சுற்றித் திரிந்து ''செய்யவும் உபதேசிக்கவும்'' தொடங்கினார். (அப் 1:1) அவர் போதிக்கும் முன்னதாக அற்புதங்களைச் செய்தார். தேவனோடு மறுத்துச் சொல்ல முடியாத எதிர் பாராச் சந்திப்பை உடையவர்கள் அவர் தங்களோடு பேசுவதற்கு அதிகமான திறந்த மனம் உடையவர்களாக இருப்பார்கள் என்றும் அறிந்திருந்தார். இயேசுவின் வல்லமையும் அவரது சுவிசேஷகர்கள் எடுத்துக் காட்டியதும் அவர்களுடைய போதனையை உறுதிப்படுத்தவும் ஒளி யூட்டவும் செய்கிறது. அந்த செயல்பாடு இன்னும் மெய்யாகவே இருக்கிறது. அந்த தேவனுடைய வல்லமையின் எடுத்துக்காட்டுகள் நுண்ணறிவு கோட்பாடுகளை அவருடைய போதனையில் மெய் விசுவாசமாக மாற்றுகிறது. உள்ளான மனிதனை மாறுதல் அடையச் செய்வதற்கு தேவனுடைய வார்த்தையும் அவருடைய வல்லமையும் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொள்கிறது. இவை இரண்டுமின்றி நமது வெளிப்புற நடத்தையை நாம் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் நம்முடைய இருதயமானது தொடப்படாமல் இருக்கிறது. நாம் சத்துருவுடைய ஆவிக்குரிய தாக்கத்திலிருந்தும் வல்லமையிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமானால் அந்த இருதயத்திற்குள்ளிருக்கும் ஆவிக்குரிய வெறுமையானது தேவனுடன் கொண்டிருக்கும் மெய்யான ஐக்கியத்தால் நிரப்பப் பட வேண்டும்.

ஏனென்றால் மாந்திரீகமானது அடிப்படையில் போலியான ஆவிக்குரிய அதிகாரமாக இருப்பதால் நாம் தேவனுடைய வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் முற்றிலுமாக பணிந்து கீழ்படிந்திருந்திருந்தால் மட்டுமே மாந்திரீகத்தின் வல்லமையிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட முடியும். மேலும் அதற்காக நாம் முழுவதுமாக சத்தியத்திற்கு ஒப்படைப்புச் செய்யப்பட்டிருக்க வேண்டும். நமக்குள் இருக்கும் அந்த ஆவிக்குரிய வெறுமையானது தேவனுடைய உண்மையான வல்லமையாலும் உண்மையான அதிகாரத்தினாலும் நிரப்பப்படாவிட்டால் ஏதோ ஒரு வடிவத்தில் அபாயகரமாக பில்லி சூனியத்தின் கீழ்படுத்தப்பட்டு நாம் கடைசி கால கட்டத்தின் முடிவுக்கு நெருங்கும் பொழுது அவ்வாறு ஆக்கப்படுவோம். அர்மெகதான் யுத்தமானது ''தீர்மானத்தின் பள்ளத்தாக்கு'' என்ற இடத்தில் யுத்தம்

செய்யப்படுகிறது. அந்த நாளில் உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் அந்த தீர்மானஞ் செய்யும் இடத்திற்கு தீர்மானஞ் செய்யுமாறு கொண்டு வரப்படுவார்கள். அது வல்லமையின் நேருக்கு நேர் எதிர் மோதுதல்களாக பின்னர் வல்லமையும் அதிகாரமும் தேர்ந்தெடுக்கப்படுகிறது. நாம் தேவனுடைய வல்லமையையும் அதிகாரத்தையுமே தேர்ந்தெடுப்போம் அல்லது சத்துருவானவனின் வல்லமையையும் அதிகாரத்தையுமா? ஆனால் நாம் எதை அனைவரும் தேர்ந்தெடுப்போம்.

**போலியானவற்றை பகுத்துணர்தல்**

ஆவியின் வரங்கள் ஒவ்வொன்றும் திருச்சபைக்குக் கிடைக்கப் பெற்றவைகாளனவை தற்காலிகமாக சத்துருவினால் போலியாக வஞ்சிக்கப்படுகிறது. ஆவிக்குரிய வரங்களைப் புறக்கணிக்கும்படியாக பயத்தின் காரணமாக உண்டாக்கப்படுபவைகளால் வஞ்சிக்கப்படாமல் இருக்கும்படியாக காக்கப்படுபவை நிச்சயமாகவே வஞ்சிக்கப்பட்டு விடும். நாம் விசுவாசத்தினால் நடக்க வேண்டும். பயத்தினால் அல்ல. ஜீவனுக்கு நடத்திச் செல்லும் வழியில் நாம் நீடித்து நிற்க வேண்டுமானால் நாம் விசுவாசத்தினால் நடக்க வேண்டும். நாம் பயத்தை பின்பற்றினால் பயம் நம்மை வஞ்சிக்கப்படுவதற்கு நேராக நடத்திச் செல்லும். அதற்காக ஆபிரகாமுடைய விசுவாசத்தை போன்றதொரு விசுவாசத்தை நமக்கு தெரிந்த ஒவ்வொன்றையும் பின்னாக விட்டு விட்டு போகும்படி செய்கிற விசுவாசத்தை நாம் தேவன் செய்கிறதை கண்டுபிடித்துக் கொள்ள வேண்டுமானால் தேவன் காட்டுகிற ஒன்றையே தேட வேண்டும்.

பாதாளத்தின் வாசல்கள் என்பவை நம்முடைய ஜீவியத்தில், கூடிவரும் சபைகளில், இயக்கங்களில் மதத் தத்துவங்களில் சத்துருவானவன் உள்ளே நுழையும் வாசல்களாகும். பயம் என்ற முக்கியமான பெரிய வாசலைத் தான் அவன் பயன்படுத்துகிறான் எப்படியென்றால் விசுவாசம் என்ற வாசலை நம்முடைய ஜீவியத்துக்குள் வருவதற்கு தேவன் வரும்படியாக உபயோகப்படுகிறதைப் போலவே செய்கிறான். நாம் தேவனுடைய வல்லமைக்குள் நடக்க வேண்டுமானால் நாம் தேவனுக்குள் அதிகமாக விசுவாசத்தை வைத்திருக்க வேண்டும். நாம் சத்துருவுக்குள் நம்மை வஞ்சிக்கும்படியாக செய்யப்படுவதை விட அவருக்குள் விசுவாசத்தைக் கொண்டு சத்தியத்திற்குள் நடத்த வேண்டும். விசுவாசம் என்பது தேவனுடன் ஐக்கியத்திற்கு வாசலாகும். ஏனென்றால் நாம் யாராலும் பார்க்கக் கூடாதவரை நாம் பார்க்கக் கூடுமான விசுவாசமானது நம்மை இயற்கையான ஆளுகைக்கு அப்பாற்பட்ட அமானுஷ்யத்திற்குள் சேரும்படி இட்டுச் செல்கிறது. நாம் விசுவாசத்தில் நடக்கும் பொழுது நமது இருதயத்தின் கண்களால் பார்க்கத் தொடங்குவதை அதிகமான மெய்யானதாக நமக்கு ஆக்கப்பட்டு நமது இயற்கையான கண்களால் பார்ப்பதை விட அவ்வாறு ஆக்கப்படுகிறது. இதற்கு பிறகு நாம் அநித்தியமானதை விட நித்தியமானவற்றிற்காக அதிகமாக ஜீவிக்கத் தொடங்குகிறோம். இந்த உலக ஞானத்தின்படி நடக்கிறவர்களுக்கு மெய்யான விசுவாசத்தில் நடக்கிறவர்கள் சாதாரணமாகவே பைத்தியமாகக் காணப்படுவார்கள் அல்லது சாதாரணமான ‘‘இயற்கையான சிந்தனையுடையவர்களுங்கூட’’ அவ்வாறு காணப்படுவார்கள்.

நாம் கர்த்தரை நோக்கி தெளிவாகப் பார்க்க ஆரம்பித்து மற்ற எல்லாவற்றையும் விட அவருக்கு ஊழியம் செய்து கனப்படுத்தும் பொழுது பில்லி சூனியத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படும் பொழுது நாம் ஒரு பெரிய அடி முன் எடுத்து வைக்கிறோம். இதற்குப் பிறகு பிரபஞ்சத்தின் மேல் ஆசையுள்ளவர்கள் அல்லது பில்லி சூனியத்தின் வல்லமையில் இயங்குபவர்களின் ஆகியவர்களின் செல்வாக்கு, யூக தந்திரங்கள், கட்டுப்பாடு ஆகியவற்றின் கீழ் இனி எக்காலத்திலும் கீழ்படுத்தப்பட்டு இருப்பதில்லை. நாம் ஒளியை பற்றிப் படிக்கத் தேவையாயிருப்பது போல அந்த காரத்தைப் பற்றி நாம் படிக்கத் தேவையில்லை. ஒளியானது அந்த காரத்தை விட வல்லமையானது. நமது நிழல்களை இரவில் நாம் திறக்கும்பொழுது இருள் உள்ளே வருவதில்லை. ஒளி இருளில் பிரகாசித்து இருளை அகற்றுகிறது. ஒளி எப்பொழுதுமே இருளை மேற்கொள்ளும். நாம் தேவனுடைய உண்மையான அமானுஷ்யமான வல்லமையில் நடந்தால் நாம் அந்த தீங்கு விளைக்கும் அமானுஷ்யமான வல்லமையை நிச்சயமாகவே மோசே எகிப்தின் மந்திரவாதிகளை குழப்பம் அடையச் செய்தது போலவே அதை மேற்கொள்ளலாம். மோசே வல்லமையில்லாமல் எகிப்திற்கு போயிருந்தால் அவன் வெற்றி பெற்றவனாக ஆகியிருக்கமாட்டான். நாமுங்கூட மனிதர்களை நம்முடைய சொந்த பலத்தால் விடுவிக்குமாறு முயற்சிக்கக் கூடாது. சத்துருவை எதிர்த்து அவனுடைய அதிகரிக்கும் வல்லமையைத் துரத்தி விடுவதற்கு தேவனுடைய வல்லமையை எடுத்துக் கொண்டாக வேண்டும்.

**கோழைகளின் வல்லமை - கறுப்பு மாந்திரீகம்**
குறி சொல்லுகிறவர்கள் வழக்கமாக உண்மையான ஆவிக்குரிய அதிகாரமுள்ளவர்களை எதிர் கொண்டு மோதுவதைத் தவிர்ப்பார்கள். ஏனென்றால் அவர்கள் மூலமாக இயங்கும் சாத்தான்கள் தாங்கள் தாழ்த்தப்படுவதற்கு நியாயமாக பயப்பட்டு தங்களைத் தாங்களே மேற்கொள்கிறார்கள். இவைகள் இன்னுங்கூட மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தில் வளர்ந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்காகக் கனி கொடுக்கிறவர்களைத்தாக்கும். ஆனால் அதை வழக்கமாக இரகசியமாகவே செய்யும். இதை அவர்கள் மறைமுகமாக அவர்களுடைய கருப்பு மாந்திரீகத்தின்படி பலிகள் செலுத்தியும் சபித்தும் இதை செய்வார்கள்.

சாத்தானிய பலிகளில் வல்லமை இருக்கிறதென்பதை நாம் அறிந்து அவற்றை எதிர்க்க வேண்டுமானால் நாம் கட்டாயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். II இராஜா 3:27ல் மோவாபிய இராஜா தன்னுடைய சேஷ்ட புத்திரனை அவனுடைய சாத்தானிய தெய்வங்களுக்கு பலியாக செலுத்தினான். ''அப்பொழுது இஸ்ரவேலர் மேல் கடுங்கோபம் மூண்டதினால் அவர்கள் அவனை விட்டுப் புறப்பட்டு'' திரும்பி விட்டார்கள். (மோவாபைத் தாக்காமல்) வேதாகமத்தின் படி ஒரு கிறிஸ்தவன் சத்துருவுக்கு பயப்படுவது சரியல்ல. ஆனால் நாம் சரியாகப் புரிந்து கொண்டு அவனுடைய வல்லமையைக் கனப்படுத்தவில்லை என்றால் நாமும் அதனால் வெல்லப்படக் கூடியவர்களாக இருப்போம்.

# அதிகாரம் 4 - மாந்திரீகத்தின் ஒழுங்கு முறையான தாக்கங்கள்

நாம் மாந்திரீகத்தால் சபிக்கப்பட்டிருப்பதை நாம் கண்டறிந்து கொள்வதால் அதற்கு விரோதமாக நம்மைப் பாதுகாத்துக் கொண்டு இருளில் ஒளி வீச வேண்டும். மாந்திரீகமானது குழவிகளைப் போல் தங்களது பலியாள்களை திரும்பத் திரும்பக் கொட்டி கொட்டி அவைகள் கொல்லப்படவோ அல்லது துரத்தி விடவோ படும் வரைக்கும் கொட்டித் தீர்த்து விடும். பின்வருபவைகளை நான் ''மாந்திரீகத்தின் கொடுக்குகள்'' என்று அழைக்கிறேன். மாந்திரீகமானது உனக்கு விரோதமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதற்கு இவையே அடையாளங்கள். தனிப்பட்ட முறையில் இந்த அடையாளங்கள் மற்றக் காரணங்களால் என்று கூறப்படுகிறது. ஆனால் அவைகள் தமது கிரமத்துப்படி ஆரம்பிக்குமானால் அதற்கு மாந்திரீகமே மூல காரணமாகும்.

**கொடுக்கு 1 - ஊக்கம் குறையச் செய்தல் (அ) அதைரியப்படுத்துதல்**
ஒவ்வொருவரும் சமயா சமயங்களில் ஊக்கங் குன்றியிருப்பர் அதற்கு பல வேறுபட்ட காரணங்கள் இருக்கின்றன. என்னவென்றாலும் வளர்ந்து கொண்டிருக்கும் ஊக்கக் குறைவுக்கு நாம் அடிமைப்பட்டு எந்த நியாயமாய் தோன்றுகிற காரணமுமில்லாமல் இருப்போமானால் அதற்கு கூடுமான ஒரு மூல காரணமாக மாந்திரீகத்தை கட்டாயமாக எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு காரியமும் தவறாகப் போவது போல் தோன்றும் பொழுது மேலும் கஷ்டங்கள் மேற்கொள்ள முடியாதது போல தோன்ற ஆரம்பிக்கும் பொழுது மேலும் மேற்கொண்டு போவதற்கு கடினமாயிருக்கிறது என்று நினைக்கும் பொழுதும் மெய்யாகவே காரியங்கள் வழக்கத்தை விட அவ்வளவு மோசமாக இல்லாத பொழுதிலும் நீங்கள் ஒரு வேளை ஆவிக்குரிய தாக்குதலுக்கு உட்படலாம். சத்துருவினுடைய முக்கியமான வியூக உத்தியானது உன்னை உற்சாகக் குறைவினால் நோயுண்டாகச் செய்து உன்னை அடுத்த மட்டத்து தாக்குதலுக்கு பலவீனமடையச் செய்வது தான். அதாவது:

**கொடுக்கு 2 - குழப்பம்.**
மறுபடியும் நாம் பொதுவானதும் ஊடுருவிப் பரவும் குழப்பத்தின் ஆவிக்காக பார்த்திருந்து ஆக வேண்டும். அதற்கான வெளிப்படையான காரணம் ஒன்றுமே இருக்காது. இங்கே தான் நாம் எதைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் பற்றிய தெளிவை நாம் இழந்து விடும்படியாக ஆரம்பிக்கிறோம். இது தான் நிச்சயமாக நமது தீர்மான வைராக்கியத்தை பலவீனப்படுத்தக் கூடியது. இந்த குழப்பமானது ஊக்கக் குறைவுடன் ஒன்றுபட்டு இணைந்து நம்மை மேலும் பலவீனமாக்கி மேலும் வரக்கூடிய தாக்கத்துக்குள்ளாகும்படி செய்கிறது. இந்த தாக்குதல் வழக்கமாக வரக் கூடிய வடிவமாவது.

**கொடுக்கு 3 - சோர்வு**

இது எளிய ஊக்கக் குறைவை விட ஆழமான பிரச்சனை ஆகும். அது ஒரு அசைக்க முடியாத பயங்கரமான விளைவாக ஊக்கக் குறைவுக்கும் குழப்பமும் ஒருங்கிணைவதால் உண்டான விளைவாகவும் மேலும் வழக்கமாக இந்த காலத்தின் போக்கில் வந்து நுழையக் கூடிய ஒரு ஆவிக்குரிய ஒழுங்கு முறையைக் குறித்த பொதுவான அசட்டைத்தனமும் அந்த மேற்சொன்ன பயங்கரத்துக்கு காரணமாகிறது. இது எதற்கு நடத்திச் செல்கிறது என்றால்:

**கொடுக்கு 4 - தரிசனத்தின் இழப்பு**

இது முன் கூறப்பட்ட கொடுக்கு கொட்டுதல்களின் இலக்காக அதன் எல்லாவற்றாலும் உண்டாகும் விளைவாகும். மேலும் எல்லாவற்றினாலும் உண்டாகும் விளைவின் இயல்பை அதிகரிக்கும்படியாக வேலை செய்வதாகும். இங்கே தான் முதலிடமாகத் தேவன் நம்மை இந்த வேலைக்குத் தான் அழைத்தாரா என்பதைச் சந்தேகிக்க ஆரம்பிக்கிறோம். இந்த குழப்பத்தின் புயலின் ஊடாக நாம் கப்பலைக் கொண்டு செலுத்த வேண்டுமானால் அதற்கான ஒரே வழி நமது கப்பல் ஓடும் வழியிலே கட்டுப்படுத்தி வைத்துக் கொள்வது தான். நாம் எங்கே போகிறோம் என்பதை நாம் அறிந்திருக்காவிட்டால் நமது வழியை கட்டுக்குள் வைக்க முடியாது. நாம் போகும் திசையை பற்றி எல்லாமாக சேர்ந்து கேள்வி கேட்கத் தொடங்கினால் நமது செல்லும் வழியை கட்டுக்குள் வைக்க முடியாது. இது நம்மை அந்த சமயங்களில் வட்டங்களாக வழி விலகிப் போகச் செய்து ‘‘நமது அடிச் சுவடுகளுக்கான நேரான வழியை’’ உண்டாக்கும்படியாக நமக்கு மிகவும் அவசியமான நேரத்தில் வழி தவறச் செய்யும். இது அடுத்த மட்டத் தாக்கத்துக்கு நம்மை அமைத்து வைத்து விடுகிறது.

**கொடுக்கு 5 - குழப்பத்தில் தன்னை இழக்கச் செய்தல்**

இது சோர்வு குழப்பம், தரிசன இழப்பு ஆகியவற்றின் ஒன்று சேர்ந்ததன் விளைவாகும். இந்த மட்டத்தில் நாம் கட்டுக்குள் வைத்து செல்லும் படியான வழியை நாம் சரியாக அச்சமயத்தில் மறக்காவிட்டாலும் நாம் திசை காட்டும் கருவி காட்டும் திசையை படிக்கும் திறமையைக் கூட இழந்திருப்போம். வேதாகம வார்த்தைகள் நம்மிடம் இனி ஒரு காலத்திலும் பேசப் போவதில்லை. நாம் கர்த்தருடைய சத்தத்தை நம்பமாட்டோம். மேலும் அதிகமாக அபிஷேகம் பெற்ற போதனைகளும் பிரசங்கமுங்கூட தேவை இல்லாததாகத் தோன்றும். இது தான் ஆவிக்குரிய தகுதியற்ற தன்மையுடையதாய் செய்யப்படும் மையம், கிரியை செய்ய முடியாத திறமை அதன் விளைவாக வருவது:

**கொடுக்கு 6 - பின் வாங்கி விடுதல்**

நம்முடைய நோக்கத்திலிருந்தும் திருச்சபையில் மற்றவர்களுடன் கொள்ளும் ஐக்கியத்திலும் அடிக்கடி நமது குடும்பத்தினரிடமிருந்தும் மற்ற நமது நெருக்கமானவர்களுடன் இருந்தும் விட்டு ஒதுங்கிக் கொள்ளுதல் அல்லது பின வாங்கி விடும் பொழுது இது வருகிறது. பின் வாங்கி ஒதுங்கிக் கொள்ளுதல் நம்பிக்கை இழப்பு அல்லது நம்பிக்கை இழந்த தன்மைக்கு கொண்டு வருகிறது.

**கொடுக்கு 7 - நம்பிக்கையின்மை**

போர் களத்திலிருந்து பின்வாங்கி விலகுவது வெகு சீக்கிரத்தில் நம்பிக்கை இழந்த தன்மைக்கு நடத்துகிறது. நம்பிக்கை இல்லாவிடில் நாம் சத்துருவினால் சோதனையின் வழியாகவோ, வியாதியோ அல்லது மரணம் என்பவைகளின் மூலமாக எளிதாகத் தோற்கடிக்கப்படுவோம் விஞ்ஞானத்தினாலுங்கூட நம்பிக்கையை நீக்கி விட்டால் ஆரோக்கியமான நபர் கூட வெகு சீக்கிரத்தில் ஷீண தசை அடைந்து மரித்து விடுவார்கள். நம்பிக்கையுடன் மனிதர்களும் ஸ்தீரிகளும் ஒரு சரீரம் சாதாரணமாக மரிக்கும் காலத்தை கடந்தே நீண்ட காலம் ஜீவித்திருக்கிறார்கள். <u>நம்பிக்கையின்மை தோல்விக்கு முறிய அடிக்கப்படும்படி நடத்திச் செல்லும்.</u>

இந்த வியூக யுக்தியில் நம்மை பலவீனப்படுத்தவிருக்கும் சத்துருவின் நோக்கம் என்பதை நாம் பார்த்து நாம் பின்னாக விழுந்து விடும்படி ஆரம்பிப்போம் பிறகு நாம் வெகு சுலபமாக எடுத்துக் கொள்ளப் படுவோம். வேதாகமத்தில் அமலேக்கியர் சாத்தானுக்கும் அவனது சேனைகளுக்கும் குறிப்பானவர்கள். பலவீனமானவர்களையும் எதிர்ப்பு பாதுகாப்பு அற்றவர்களைத் தாக்குவதே அமலேக்கியருக்கு வழக்கமான அப்பியாசமாகும். இஸ்ரவேலரது முகாம் வனாந்தரத்தைக் கடந்த உடனே அமலேக்கியர் முகாமுக்கு பின்னால் விழுந்து விட்டவர்களை தூக்கி எடுத்துக் கொண்டார்கள்.

இதற்காகத் தான் இஸ்ரவேலுக்கு அமலேக்கியருடன் இடைவிடாப் போர் என்றும் நிகழும் என்று சொல்லப்பட்டது. இஸ்ரவேலருடைய இராஜாக்களுக்கு அவர்களோடு போர் செய்யும்படி கட்டளையிடப்பட்ட பொழுது அவர்களை (அமலேக்கியரை) முழுவதுமாக அழித்துப் போட வேண்டும் என்றும் கொள்ளை பொருளை எடுக்கக் கூடாததென்றும் கட்டளை கொடுக்கப்பட்டது. நமக்கும் சாத்தானுக்கு விரோதமாக இடைவிடா போருண்டு. நாம் யாரையும் சிறையாகப் பிடிக்கக் கூடாது. தேவனுடைய ஊழியத்தில் இருக்கிற அவருடையவைகளையும் நாம் உபயோகிக்க முடியாது. சவுல் இராஜா கீழ்படியாமல் ஆகாகை, அமலேக்கியரின் இராஜாவை உயிரோடே விட்டு வைத்த பொழுதும் கொஞ்சம் கொள்ளைப் பொருளை ''கர்த்தருக்குப் பலியிடும் படிக்கு'' தப்ப வைத்தான். இது தேவனுடைய ஜனங்களுக்கான ஒரு தலைவருக்கு ஏற்படக் கூடிய மிகவும் முட்டாள்தனமான செயலுக்கு பிரதியாக இருந்தது. அந்த நாட்களில் ஒரு பகைவனான இராஜாவை போருக்குப் பிறகு உயிரோடு வைப்பது இரண்டு காரணங்களுக்காக மாத்திரம் செய்யப்பட்டது. அவனை ஒரு நேச அரசனாக ஆக்கவோ அல்லது அடிமைப்படுத்துவதற்காகத் தான். சவுல் அந்த சாத்தானையே உருவகமாக ஆக்கின ஒருவனை ஒரு நேச அரசனாக அல்லது அடிமையாக ஆக்கலாம் என்று முட்டாள் தனமாக நினைத்தான்.

சவுலை ஒரு அமலேக்கியன் கொன்றது விபத்தல்ல. பின்னர் அவனுடைய மரண செய்தியை தாவீதிடம் எடுத்துச் சென்றான். இந்த அமலேக்கியன் இந்த செய்தியானது தாவீதுக்குப் பிரியமாயிருக்கும் என்று நினைத்தான். ஆனால் தாவீது அதை பகுத்துணர்ந்தான். அவனைக் கொன்று போடச் செய்தான். (II சாமு 1:1-16ஐப் பார்க்கவும்) <u>நாம் கர்த்தருக்கு கீழ்படியாவிட்டாலும் நாம் போரிடுகிற அந்த சத்துருவை முற்றிலுமாக அழிக்காவிட்டாலும் அவன் நம்மை அழித்து விட முடிவு செய்வான்.</u> அந்த சத்துருவுடன் எந்த விதமான உடன்பாடும் இருக்க முடியாது. அவன் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். நமது சத்துருவை அடிமையாக பயன்படுத்தலாம் என்று முட்டாள்தனமாக நினைக்கக் கூடாது. அவனுடைய வஞ்சனையான துரோகத்தில் அவன் அந்த போக்கையே மாற்றி சீக்கிரமாகப் போட்டு விடுவான்.

பில்லி சூனியமானது திருச்சபைக்கு விரோதமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதை அடையாளங் கண்டு கொள்ள தவறிய அநேகர் தோல்வியைத் தழுவினார்கள். தரிசனத்தை இழந்தார்கள். ஊழியத்தையும், அவர்களது குடும்பங்களையும் ஏன் தங்கள் ஜீவியத்தையுங் கூட இழந்து போனார்கள். இது ஒரு உணர்வெழுச்சி அல்ல. இது ஒரு உண்மையான விஷயமாகும். பவுல் சொன்னதாவது, ''மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல. துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் நமக்கு போராட்டம் உண்டு.'' (எபேசி 6:12) மல்யுத்தம் என்பது போராட்டத்திற்கு நெருங்கிய வடிவமாகும். அந்த சத்துரு போர் செய்யப் போகிறான். அவன் நம்மோடு மல்யுத்தம் செய்யப் போகிறான். நாம் இப்பொழுது சரியாக போரிடப் போவதில்லை என்று தீர்மானித்தால் நாம் செயலற்றவர்களாக ஆகி விடுவோம். ஒரு கிறிஸ்தவனுக்கு அவன் உயிரோடு பிழைத்திருக்க வேண்டும் என்று விரும்பினால் அவன் ஆவிக்குரிய போரிடுவானோ அல்லது போரிடமாட்டானோ என்பதற்கு தேர்ந்தெடுக்கும் உரிமை ஒன்றுங் கிடையாது. ஆனால் இந்த பில்லி சூனியத்தை எப்படி எதிர்த்துப் போராடுவது? <u>நாம் அதற்காக ஒவ்வொரு வெற்றிக்கும் தேவையான ஆவிக்குரிய போராட்டத்தின் அடிப்படையான குறிக்கோள்களை முதன் முதலாவதாக பார்த்தறிய வேண்டும்.</u>

வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தில் பரிசுத்தவான்கள் (விசுவாசிகள்) சாத்தானை மேற்கொள்வதாகப் பார்க்கிறோம். 1 ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும் 2 தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் 3 மரணத்திலும் தங்கள் ஜீவனை பிரதானமாகக் கருதாமல் (வெளி 12:11ஐப் பார்க்கவும்)

# நாம் ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால் மேற்கொள்வோம். அந்த ஆட்டுக் குட்டியானவர் சிலுவையின் மூலமாக எதை அவர் ஏற்கனவே நமக்கு நிறைவேற்றித் தந்திருக்கிறாரோ அதன் மேல் நமது ஸ்தானத்தை எடுத்தும் கொள்ளும்பொழுது அதற்கான ஜெயம் ஏற்கனவே ஜெயம் பெற்று விட்டது. நாம் அதை இழந்து விடுவதற்கான மார்க்கமானது நாம் அவரில் நிலைத்து நிற்கும் காலம் வரைக்கும் நமக்கு கிடையாது.

# தங்கள் சாட்சியான வசனமாவது சத்திய வேதாகமம் ஆகும். சத்துரு இயேசுவை சவால் விட்டு அழைத்த ஒவ்வொரு நேரமும் இயேசு எளிதாக வேத வசனத்திலிருந்து பிரதியுத்தரம்

கொடுத்தார். அதனால் சத்துருவுடைய சோதனைகளை தேவனுடைய வசனமானது ஆவியின் பட்டயமாகும். அதனால் அவனுடைய வஞ்சனையான வார்த்தைகளினாலும் கொடுக்கப்படும் அடிகளை நாம் அவனைத் தாக்கித் தடுத்து நிறுத்த முடியும். எல்லா ஆயுதங்களிலும் நாம் ஆவியின் பட்டயத்தை எடுத்துத் தரித்துக் கொள்ளும்படியாகக் கட்டளையைப் பெறுகிறோம். (எபேசி 6:10-18 பார்க்க) இந்த பட்டயம் மாத்திரமே எதிர்த்து தாக்கும் ஆயுதமாகும்.

# ''மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்'' என்பது எந்த விதமான விலையையும் பொருட்படுத்தாமல் அவரைப் பின்பற்றும்படி முழுவதுமான அர்ப்பணிப்பையே இது வெளிப்படுத்துகிறது. ஆகவே நாம் அனுதினமும் நமது சிலுவைகளை எடுத்துக் கொண்டு சுவிசேஷத்திற்காக எல்லாக் காரியங்களையும் செய்யும்படியாகவும் பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்த அவருக்கென்று பிழைத்திருக்க வேண்டும். (II கொரி 5:15b) நாம் சுயத்தை மையமாகக் கொண்டிருப்போமானால் அப்படி நாம் இருக்கும் வரைக்கும் எதிரியின் தாக்குதலுக்கு ஆளாகிறவர்களாக இருப்போம்.

நாம் நம்மை உலகத்திற்கு மரித்தவர்களாக இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டவர்களாக நம்மை எண்ணிக் கொள்ளும் பொழுது சத்துருவானவன் இனி எக்காலத்திலும் நம்மை நெருங்கி வர முடியாது. ஏனென்றால் அவரை அவன் எக்காலத்திலும் நெருங்க முடியாது. நாம் இந்த உலகத்திற்கு மரித்தவர்களானால் இந்த செத்த மனிதனுக்கு என்ன செய்யப்படக் கூடும்? இந்த மரித்தவர்களை புண்படுத்தவோ, சோதிக்கப்படவோ, பயப்படவோ அல்லது தொடர்ந்து சுலபமாக வெளியே வரக்கூடிய வழியைப் பார்த்துக் கொண்டிருப்பதும் கூடாத காரியம். ஏனென்றால் அவர் நமக்காக ஏற்கனவே அதற்கான முடிவான விலையைச் செலுத்தியிருக்கிறார்.

இவை அனைத்துமே ஒவ்வொரு ஆவிக்குரிய வெற்றிக்கும் அவசியமானதாகும். இதை விடக் குறைந்த தெதுவும் ஜெயத்தை விடக் குறைவானதிலே முடியும். நாம் சமயா சமயங்களில் நிறுத்திக் கொண்டு முன்னேறிச் செல்லலாம். ஆனால் சீக்கிரமாகவோ அல்லது பின்னரோ நாம் பின்நோக்கித் தள்ளப்பட்டு விடுவோம். ஆனாலும் இந்தக் காலத்தின் முடிவில் தேவனுக்கு விரோதமாக ஒரு சேனையானது எழுப்பப்பட்டு அது சமயா சமயங்களில் முன்னேறிச் செல்வதோடு நின்று விடாமல் அவர்கள் போர் செய்யுமாறு தங்களை அர்ப்பணித்துக் கொண்டும் அவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட ஜெயத்தை சத்துருவின் மேல் முழுவதுமாக ஜெயம் பெறும் வரைக்கும் நின்று விட மாட்டார்கள்.

மேலும் முழுவதுமான வெற்றியானது கர்த்தர் திரும்ப தாமே திரும்பி வராமல் பெற்றுக் கொள்ள முடியாதென்பதை புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஆனால் நாம் அவர் வரும் வரைக்கும் போராட வேண்டும். நாம் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு சிறு நிலத்தைக் கூட எடுத்துக் கொள்ளும் படியாக போரிட வேண்டும். அவர் திரும்ப வரும் வரைக்கும் வந்து பிரசன்னமாகி நம்மைத் திரும்ப மேலே அவருடன் போகும் வரைக்கும் அந்த யுத்தத்தை முடிக்கும் வரைக்கும் நாம் போரிட வேண்டும். ''பூமியும் அதன் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.'' (சங் 24:1) சாத்தானுடைய ஆளுகையிலிருந்து முற்றிலுமாக இந்த உலகம் திரும்பி ஜெயிக்கப்படும் வரைக்கும் அந்த போர் முடிவதில்லை. நாம் ஜெயிக்கக் கூடும் என்று விசுவாசிக்காவிட்டால் நம்மில் யாருமே போரிட்டு ஜெயித்து விட முடியாது. வேதாகமத்து முழுவதுமான தீர்க்கதரிசனமான சாட்சி என்னவென்றால் கர்த்தரும் திருச்சபையும், சத்தியமும் ஆகியவை ஜெயங் கொள்ளும் என்பதாகும். சாத்தான் கீழே பூமிக்கு தள்ளப்பட்டு விடுவான். அவன் மிகுந்த சீற்றத்தோடு வந்து விடுவான். அப்பொழுது உலகமே இதற்கு முன்னர் என்றுமே அறியாத ஒரு கஷ்ட காலம் வரப் போகிறது. ஆனாலும் நாம் தான் ஜெயிப்போம்.

ஏசாயா 14:16-17 நாம் சாத்தானை நோக்கிப் பார்க்கும் பொழுது உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப் பார்த்து உன்னைக் குறித்துச் சிந்தித்து இவன் தானா பூமியை தத்தளிக்கவும் கஷ்டப்படவும் செய்தவன் என்று அவனுடைய பரிதாப நிலைமையைக் குறித்து வியப்படைவார்கள். இந்த பரிசுத்தவான்களில் மிகச் சிறியவன் அவனை விட அல்லது அவனுடைய அந்திக் கிறிஸ்துவை விடப் பெரியவனாக இருப்பான். இந்தக் காலத்தைக் குறித்து நாம் பயப்பட வேண்டாம். இதுதான் நமக்கு சந்தர்ப்பம்! ஏசாயா 60:1-2ல் பிரபலமாகக் கூறியபடி இருள் பூமியை மூடிக் கொள்ளும்

பொழுது கர்த்தருடைய மகிமை அவருடைய மக்கள் மீது பிரகாசிக்கும். அந்த இருளானது அவருடைய மகிமையை நம்மேல் மேலும் அதிகமாகப் பிரகாசிக்கும்படி செய்யும். நாம் ஜெயங் கொள்ளுவதற்காக போரிட ஆரம்பிக்க வேண்டும். அந்த சத்துருவுக்கு கொஞ்சமேனும் இடங் கொடுக்கக் கூடாது. அவன் திருடிக் கொண்டதை மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த பில்லி சூனியத்தை செயலூக்கத்துடன் எதிர்த்து போரிட வேண்டுமானால் சாத்தான் நம்மை விட்டு ஓடிப் போகும் வரைக்கும் நாம் அவனை எதிர்த்துப் போரிடப் போகிறோம் என்று தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். நமது இலக்காவது நாம் எதிரியை நமது சொந்த ஜீவியங்களிலிருந்து சாதாரணமாக துரத்தி விடுவதை விட மேலானது. பின்னர் நாம் அவனை அவனுடைய கோட்டையை யாரிடமெல்லாம் ஸ்தாபித்திருக்கிறானோ அந்த ஒவ்வொருவரிடமிருந்தும் அவன் துரத்தி விடப்படும் வரைக்கும் அவனை தொடர்ந்து போவதற்கு விரும்புவோம். பின்வருகிறவைகள் சாத்தானை அந்தக் குறிப்பிடப்படும் ஏழு பகுதிகளிலிருந்து பில்லி சூனியத்தின் மூலமாக அவன் செய்யும் தாக்குதல்களை எதிர்த்து போராடுவதற்கு சில வழிகள்.

1) **ஊக்கப்படுத்தப்படாமை.** அதாவது அதைரியமடைதல் இந்த அதைரியமடைதல் தேவனிடமிருந்து ஒரு போதும் வருவதில்லை. அவரே விசுவாசத்தையும் நம்பிக்கையும் ஆக்குகிறவர். இது நம்மை ஒரு போதும் ஏமாற்றுவதில்லை. நமக்கு தேவையாக இருக்கும் பொழுது நம்மை ஒழுங்கு படுத்துகிறார். ஆனால் அவர் அதைரியமடைவதால் நோய் வாய் படும்படியாக இதை ஒருக்காலும் செய்வதில்லை. ‘‘பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும் இரக்கத்தாலும், நற்கனிகளாலும், நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயும் இருக்கிறது.’’ (யாக். 3:17) அதைரியப்படுதல் என்பதை பரத்திலிருந்து வருகிற ஞானம் என்று எங்குமே கூறப்படுவதில்லை. அது ஆவியின் கனியுமல்ல. நாம் வெகு விரைவாகவும் நமது சுபாவத்தின் படியும் அதைரியப்படுதலைப் புறக்கணித்து அதற்கு நாம் யோசனைகளிலே இடம் எதுவுமே தரக் கூடாது. நாம் நினைக்கிற படியே அல்லது உணருகிற பிரகாரமே நடத்தப்பட வேண்டும். அப்படியே நாம் ஒவ்வொரு எண்ணத்தையும் சிறைபடுத்தி அவைகள் சகலத்தையும் தேவனுக்குக் கீழ்படிகிறவைகளாகச் செய்ய வேண்டும். நாம் போகும் வழியை எப்பொழுதுமே அதைரியமானது அதிகாரமாகக் கட்டளையிட்டுச் சொல்ல விடக் கூடாது. விசுவாசம் என்பது ஆவியின் கனியாகும். நமது அதைரியத்தை எதிர்க்கும் ஆயுதங்களில் நமது கேடகமாகும். நாம் அதைரியப்படுமாறு தொடங்க ஆரம்பித்தால் அது நாம் நமது கேடகத்தை கீழே போட்டு விட்டதே காரணமாகும். அந்த கேடகத்தை எடுத்துத் தரித்துக் கொள்ளுங்கள்!

2) **குழப்பம்.** தேவன் குழப்பத்தை உண்டாக்குகிறவர் அல்ல என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உன்னைத் தாக்கும்படி வருவது எதுவோ அது தேவனிடமிருந்து வருவதில்லை. இராணுவத்தில் முக்கியமான போரின் ஏதுக்களின் ஒன்றாக ஒரு வீரன் கையாளப் பயிற்றுவிக்கப்படுவது குழப்பத்தை கையாளுவது தான். எங்கும் எந்த போரிலாவது குழப்பம் இல்லாத போர் இருப்பது அரிதாகும். மிகச் சில போர்கள் அல்லது நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் திட்டமிட்டபடியே செயல்படுவதில்லை. ஆவிக்குரிய போரிலும் இது உண்மையாகும். ஒழுங்கில் பயிற்சி பெற்ற போர் வீரன் போர் முறையின் இந்த அம்சத்தைப் புரிந்து கொள்வார் என்றால் குழப்பத்தைத் தனக்குச் சாதகமாக உபயோகிக்கக் கற்றுக் கொள்கிறார். அதை அவர் அதைரியப்படுதலை அதிகரிக்கும் படியாக அனுமதிப்பதில்லை. ஆனால் எதிர்பார்ப்புடன் ஆரம்பித்து ஒரு சந்தர்ப்பத்துக்காகப் பார்த்திருந்து அந்த சத்துருவின் மேல் ஒரு அனுகூலத்தை அடையும்படியாக அதைத் தொடங்குகிறார். குழப்பம் என்பது போரின் ஒரு பகுதி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் பாதிக்கப்பட்டால் அதற்காக ஆச்சரியப்படுவதற்கில்லை. நின்று எதிர்த்து போரிட வேண்டும் என்ற நமது தீர்மானம் வெகு விரைவில் இந்த தாக்கத்தின் தன்மையை ஒழித்து விடும்.

3) **மனச் சோர்வு.** தேவன் காயீனுக்கு அவனுடைய மனச் சோர்வுக்காக மிகவும் விளைவைத் தரக் கூடிய செயலூக்கமான ஒரு நிவாரணத்தைத் தந்தார். அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி ‘‘உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முக நாடி ஏன் வேறுபட்டது? இது மனச் சோர்வைக் குறிக்கும் பழங்காலத்திய சொல் வழக்கு மரபு)? நீ நன்மை செய்தால்

மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் அவன் ஆசை உன்னைப் பற்றி இருக்கும் நீ அவனை ஆண்டு கொள்வாய்.'' (ஆதி 4:6-7) ஏனென்றால் மனச் சோர்வானது வழக்கமாக குழப்பமும் மனச் சோர்வையும் நம்மை நமது அடிப்படையான ஆவிக்குரிய ஒழுங்கு நெறியிலிருந்து வழி விலகிப் போகச் செய்யும்படியாக வசனம் (அ) வார்த்தை ஜெபம், ஐக்கியம் ஆகியவற்றிலிருந்து வழி விலகிப் போகும் படி செய்து விடுகிறது. அவைகளை மறுபடியும் பொறுக்கி எடுத்துக் கொண்டு தீர்மானத்துடன் எடுத்துக் கொள்வது ஏறக்குறைய எப்பொழுதுமே கீழ் நோக்கி வளையமிட்டுச் செல்வதை பின்னோக்கமாக மாற்றி விடும். நாம் செயல்படும்படியாக அழைக்கப்பட்டதைச் செய்யும்படியாக நம்மை மையப்படுத்திக் கொள்வோமானால் நம்மை சுலபமாக சிக்கலுக்குள்ளாக்கிய பாவத்தை விட்டு எறிந்து விடக் கூட முடியும்.

4) **தரிசன இழப்பு.** இந்த தாக்குதலையும் நமக்கு சாதகமாக ஆக்கி விடக் கூடும். மேலும் அதை ஒரு சந்தர்ப்பமாக உபயோகிக்கலாம். நீ உன்னுடைய தரிசனத்தை இழந்து விடும் படியாக ஆரம்பிக்கும் பொழுது உன்னுடைய தரிசனத்தை பலப்படுத்தும்படியாக உன்னை ஒப்படைப்பு செய்து கொள். உன்னுடைய வேர்களை ஆழமாகப் போய் ஊன்றச் செய்து உன்னுடைய நோக்கத்தை மேலும் உறுதியாக தேவனுடைய வசனத்தில் பற்றி வைத்துக் கொள். தேவன் எப்பொழுது உன்னை அந்த நோக்கத்துக்குள் நடத்திச் செல்ல ஆரம்பிக்கிறாரோ நாம் எப்படி அவர் நம்முடன் பேசுகிறார் என்பதைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர் உன்னை நடத்திச் சென்ற வழிகளை எல்லாம் மீள் பார்வை செய்து அவருடைய வழி நடத்துதலை இன்னுங்கூட அதிகமாக உறுதியாக ஸ்தாபிக்கும்படி வேதாகமத்தை தேடிப் பார்த்துப் படிப்பாயாக.

எல்லாவற்றிற்கும் மேலாக உன்னுடைய பாதையில் நிலைத்திரு. உன்னுடைய வழியை மாற்றாதே. எப்பொழுது என்றால் உன்னுடைய புதிய வழியை நீ தெளிவாகக் கண்டு கொள்ளும் வரைக்கும் அதை மாற்றாதே. முதலாம் உலகப் போரில் சத்துருவின் செயலூக்கமான யுத்த தந்திரங்களில் ஒன்று நேசக் கட்சியினரின் யுத்த தளவாட வாகனங்களுக்கு முன்பாக ஒரு புகையிலான திரையை உண்டு பண்ணுவதுதான். அந்த தளவாட வாகனங்கள் புகைக்குள் நுழைந்த பிறகு தங்கள் பார்வையை இழந்து விட்டதால் அவர்களுக்கு தெரிந்து கொள்ளக் கூடிய எந்த ஒலியையும் தீடீர் கருத்தையும் உணரும் பொழுது அந்த ஒலிகள் வரும் திசையை நோக்கித் திரும்பிப் பார்ப்பார்கள். இந்த விளைவால் வரும் மோதுதலின் விளைவாக எதிரியின் டார்பிடோ குண்டுகளை விட அதிக எண்ணிக்கையான கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. முடிவாக நேசக் கட்சியினர் ஒரு எளிய யுக்தியை விருத்தி செய்து கொண்டு அதை மேற் கொள்ளுவதற்கு செய்தனர். இதே மாதிரியான யுக்தி நமக்கும் கிரியை செய்யக் கூடும். அந்த புகைக்குள் இருக்கும் பொழுது ஒவ்வொரு கப்பலும் தாங்கள் முன்னர் சென்ற அதே வழியைப் பற்றிக் கொண்டு எந்த விதமான வழி விலகிப் போகுதலுமில்லாமல் போய் கொண்டு இருக்க வேண்டும். இவ்விதமாக அவர்கள் வெகு சீக்கிரத்தில் கப்பலைச் செலுத்தி மற்ற பக்கத்திற்கு வெளியே வந்து சுத்தமான காற்றுக்குள் கடந்து வருவார்கள். இதே விதமான யுக்தியானது வெகு விரைவில் நமது பார்வையை மேகம் போன்று மறைப்பதிலிருந்து தப்பித்து விடுவார்கள். நீ உன்னுடைய பார்வையை இழக்கும் பொழுது உன்னுடைய வழியை கைப்பற்றிக் கொண்டு முன்னேறிச் சென்று கொண்டே இரு.

5) **மாறுபட்ட நிலை குலைதல்.** ஒரு தளவாட விமான பறக்கும் வழிகாட்டுபவராக. நான் ஒரு விமானிக்கு முதலாவதாக நான் கற்பிக்க வேண்டியது என்னவென்றால் கருவிகளைக் கொண்டு உயரப் பறக்கும் பொழுது அவனுடைய உணர்ச்சிகளை (ஸ்திரம்) என்று நம்ப முடியாது. அதனால் அதைப் புறக்கணிக்கப்பட வேண்டும். அப்படி தளவாடக் கருவிகள் தகுந்த நிலைக்கு வந்தால் ஒரு விமானி தன்னுடைய உணர்ச்சிகளைக் கொண்டு பறந்து வெகு விரைவில் விமானத்தின் கட்டுப்பாட்டை இழந்து விடுவான். நீ மேகங்களால் சூழப்பட்டு இருக்கும்பொழுது நீ முற்றிலுமாக சரியாகவும் நீ நேராகவும் மட்டத்திலும் பறந்து போய் கொண்டிருக்கலாம். ஆனாலும் திரும்ப வேண்டும் என்பது போலவும் உணரலாம். இந்த மாதிரியான உணர்வுக்கு எதிர் செயல்பட்டால் நீ திரும்பும்படி ஆரம்பித்து போகும் வழியை விட்டு விலகிப் போகச் செய்தும் மேலும் விமானத்தை தலை கீழாகத் திருப்பவும் முற்படலாம்.

ஒரு குறிப்பிட்ட வானவூர்தி ''நெறி நிலை தெரிமுறை'' பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. ஒரு குழுவான விமானிகள் தளவாட கருவிகள் நிலைவர நிலைமைக்குள்ளாக பறந்து கொண்டு போகப் பட்டனர். ஆனால் அவர்களுக்கு தளவாடக் கருவிகளைப் பற்றிய பயிற்சி கொடுக்கப்படவில்லை. அவர்களில் ஒரு நூறு சதவிகித்தினர் தங்கள் விமானங்களைச் செலுத்த முயன்ற போது தங்கள் விமானத்தின் மீதுள்ள தங்கள் கட்டுப்பாட்டை இழந்தனர். அவர்கள் தங்களுடைய சொந்தவுணர்வுகளைக் கொண்டு வழிகாட்டும்படி முயன்ற பொழுது அவ்வாறு நடந்தது. கிறிஸ்தவர்களுக்கும் குறைந்த பார்வையில் அல்லது ஆவிக்குரிய மேகங்களால் பார்வை குறையும் பொழுது தங்கள் உணர்வுகளின் மேல் வழிகாட்டுதலுக்கு சார்ந்து இருக்கிறார்கள். இதனால் தங்கள் கட்டுப்பாட்டை இழந்து விடுகிறார்கள். இதே தான் அவ்வாறு செயல்படும் கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் உண்மை என்று நான் நம்புகிறேன்.

நாம் நடந்து போகும்படி நமக்காக கொடுக்கப்பட்ட தேவையான தளவாடக் கருவிகள் நமக்காக கொடுக்கப்பட்டவை வேதாகமத்தில் காணக்கிடக்கின்றன. நாம் நமது உணர்வுகளால் நடக்கக் கூடாது. ஆனால் தேவனுடைய வசனத்தின் நிச்சயமான சாட்சியிலுள்ள விசுவாசத்தினால் நடக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையானது நமது நிலையில் நம்மை நிற்கச் செய்து மேலும் போகும் பாதையில் நமது நம்பிக்கையை அதன் பால் வைப்போமானால் நமது உணர்வுகள் நம்மை அதற்கு எதிர் மாறாக செய்யும் படி சொன்னாலும் நமது ஸ்தானத்தில் அது நிற்கச் செய்யும்.

6) **பின்வாங்கிப் போகுதல்.** சமீபத்திய பெர்சிய வளைகுடா போரில் பெரும்பான்மையான விபத்துக்கள் ஒன்று இருப்பில் உள்ளவர்களுக்கோ அல்லது சாதாரண குடி ஜனங்களுக்கோ நேரிட்டது. போரில் மிகவும் பாதுகாப்பான இடத்தில் இருப்பது என்றால் முன்னணியில் இருப்பது தான். இதுவும் ஆவிக்குரிய போரில் உண்மையாகும். நீ போருக்குள் போகும்படியாக தள்ளப்பட்டால் நீ சிறிது நேரம் வெளியில் வரும்படி கேட்க முடியாது. முன்னணியிலும் நீ எதிரியைப் போரை நிறுத்தும்படியாகக் எதிரியைப் பார்த்து கேட்க முடியாது. ஏனென்றால் உனக்கு தலைவலி இருக்கிறதென்பதாலோ அல்லது உனக்கு காபி அருந்த வேண்டுவதால் யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்றோ எதிரியை கேட்க முடியாது. முன்னணியில் அங்கு இருக்கும் அபாயங்களை அறிவாய். அதனால் உன்னுடைய காவலாளனை கைவிட்டு விடாதே.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவன் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும் அனுதினமும் முன்னணி வரிசையிலே நிற்கிறான். சாத்தான் உனக்கு வெளியே போகும் இடைவெளி நேரம் தரமாட்டான். நாம் நம்மை சாதாரண குடி மக்களாகவே மட்டும் போர் வீரர்களாக அல்ல என்று கருதத் தொடங்கும் பொழுது நாம் சாத்தானுடைய தாக்குதல்களுக்கு அதிகமாக தோற்கடிக்கப்படக் கூடிய இலக்காவோம். கிறிஸ்தவன் எவனும் ஒருக்காலும் இருப்பு போர் வீரனாக இருப்பதில்லை. மிக அபூர்வமாகவே எல்லை முழுவதும் எல்லா நேர முழுவதிலும் போர் நடக்கக் கூடும். போர் செய்வதை அந்தந்த நேரங்களில் ஒத்தி போடப்படுவதுண்டு. ஆனால் நீ தான் முன்னணி வரிசையில் இருக்கிறாய் என்று நீ அறிந்து கொள்ளும் பொழுது உன்னுடைய இடைவெளி கூட கண்காணிக்கப்பட்டு ஒரு புதிய தாக்குதல் எந்த நேரத்திலும் வரக்கூடும் என்று தெரிந்து கொள்ளப்படுகிறது. கிறிஸ்தவர்கள் அவர்களுடைய ஆவிக்குரிய சர்வாயுத வர்க்கங்களை ஒருக்காலும் எடுத்து விடக் கூடாது தங்களுடைய கண்காணிப்பு காவலையும் இழந்து விடக் கூடாது.

யுத்த களத்தில் போர் நடக்கும் பொழுது வியூக யுக்தியான பின்வாங்குதல்களுக்கான நேரங்களும் சந்தர்ப்பங்களும் இருக்கும். நாம் நம்மை ஆவிக்குரிய பிரகாரமாக அளவுக்கு மீதி ஒப்படைப்புச் செய்தாலும் பின் வாங்கவும் வேண்டும். ஆனால் அது போர் களத்திலிருந்து பின் வாங்கி வருவதைப் போல ஆகாது. நம்மை ஒப்படைப்புச் செய்திருந்தாலுங் கூட பின் வாங்குதல் கடைசியான முயற்சியாக இருக்கக் கூடாது. பின் வாங்கும் சேனையானது தன்னுடைய அதீதமான முறியடிக்கப்படக் கூடிய நிலைமையில் இருக்கிறது. என்ன இருந்தாலும் கூடுமானால் நாம் நமது நிலைமையில் தரித்து நின்று எதிர்க்கும் படியாக நமது ஸ்தானமானது பலப்படுத்தும் வரை தரித்து நிற்க வேண்டும்.

‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்’’ என்று தேவனுக்கு நன்றி கூற வேண்டும் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. (I கொரி 15:57) மேலும் ‘‘இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்கிறவர்களாய் இருக்கிறோம்.’’ (ரோமர் 8:37) இன்னும் கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (II கொரி 2:14) கிறிஸ்துவுக்குள் தோற்கடிக்கப்படுதல் என்று இரண்டில் ஒன்று என்று தெரிந்து கொள்வதல்ல. அவர் நம்மை நடத்திச் சென்று செய்கிற காரியத்தில் நாம் வெற்றியைப் பெறுவோம். நான் அதை விட்டு வெளியே வந்தால் மட்டுமே தோற்கடிக்கப்படுவதற்கு வழியாகும். நாம் தகாத நம்பிக்கையுடன் தேவனால் கட்டளையிடப்படாமல் செயல்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ளும் பொழுதும் நாம் விட்டு விலகக் கூடாது. நாம் மனந்திரும்ப வேண்டும். விட்டு விலகுவதற்கும் தடை செய்து நிறுத்திக் கொள்வதற்கும் மனந்திரும்புதல் என்ற காரணத்தால் ஒரு வித்தியாசம் உண்டு. ஒன்று தோல்வி மற்றொன்று ஒழுங்காக்குதல் என்பது இந்த ஒழுங்காக்குதல் மேற்கொண்டு வெற்றிகளைப் பெறுவதற்கு விளைவாக இருக்கும். நம்மை விடுவிக்கும் சத்தியத்தினாலே மனந்திரும்புதல் வருகிறது. தோல்வியானது எதிரியின் வல்லமையால் விளையும் ஆவிக்குரிய அடிமைத்தனத்திற்கு வழி நடத்தும்.

7) **மனச் சோர்வு.** மனிதனைக் குறித்த கர்த்தருடைய முதல் அறிக்கையாவது அவன் தனியாக இருப்பது அவனுக்கு நல்லதல்ல என்பதாகும். நாம் அனைவரும் சமுதாயப் பண்புள்ள கூடி வாழ் ஜெந்துக்களாவோம். ஐக்கியத்திலிருந்து நாம் பின்வாங்கிக் கொண்டால் நாம் வழக்கமாக நம்பிக்கையை இழந்த தன்மையான ஆழமான படுகுழிகளுக்குள் விழுந்து விடுவோம். அதாவது மனச் சோர்வாகும். இந்த மையத்திலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் வளையங்களில் நாம் திரும்பவும் ஐக்கியத்திற்குள் திரும்பி வந்து அந்த சரிவை மாற்றித் திரும்பச் செய்வதற்கு உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது நாம் தோல்வி அடைவோம்.

பில்லி சூனியம் என்பது அடிப்படையில் மற்றவர்களைச் சபிக்கும் பழக்கமாகும். இந்த சாபம் விடுதல் வழிபாடுகளின் வழியாகவோ அல்லது கறுப்பு மாந்திரீகக் கலைகளாலே சாதாரணமாக வருவதில்லை. ஆனால் நம்மை நேசிக்கிற நல்ல நோக்கம் உடையவர்களாலுங்கூட வரக் கூடும். அவர்கள் நம்மை ஆசீர்வதிக்கும் படியாக முயற்சிப்பார்கள். மாந்திரீகம் என்பது தந்திர யுக்தி அல்லது கட்டுப்பட்ட ஆவியில் வேரூன்றிக் கொண்டு யார் மூலமாக வருகிறதென்பதை பொருட்படுத்துவதில்லை.

தனது மகனையோ (அ) மகளையோ தான் தெரிந்தெடுப்பவரை திருமணஞ் செய்யுமாறு பில்லி சூனியத்தின் மூலமாக தந்திர யுக்திகள் செய்கிறாள். மேலும் அப்படிப்பட்ட உறவுத் தொடர்புகளுங்கூட தந்திர யுக்திகளாலும் கட்டுப்பாட்டினாலும் ஒன்று சேர்த்து பிடித்து வைத்துக் கொள்ளப் பட வேண்டும். இந்த ஜெபக் குழு மற்றவர்களை வெளிக்குக் காட்டிக் கொடுக்கும்படி ஜெபத்தை பயன்படுத்துகிறதாவது தந்திர யுக்திகளுக்காக வேண்டி புறம் பேசுகிறது. இது ஜெபம் அல்ல. இது மாந்திரீகம் ஆகும். கிறிஸ்தவ பத்திரிக்கை தர்மம் என்ற பெயரால் எழுதப்படுவதெல்லாம் திருச்சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற ஒரு முயற்சியில் தகவல் தரப்படுவதெல்லாம் கிசுகிசு பேச்சுகளாக நல்லொழுக்கமற்ற பாதிப்பு அல்லது தந்திர யுக்திகளுக்கு பயன்படுத்தப்படுவதாகும். இதுவுங்கூட பில்லி சூனியமே.

ஆவிக்குரிய தலைவர்கள் யாரெல்லாம் தந்திர யுக்திகள், பிரபலம், கட்டுப்பாடு ஆகியவற்றைப் பயன்படுத்தி தங்களுடைய திருச்சபைகளையோ அல்லது கிரியைகளையோ கட்டி எழுப்புகிறவர்கள் மாந்திரீகத்துக்குச் சமமானதோர் போலியான ஆவிக்குரிய அதிகாரத்தில் கிரியைகளை நடப்பிக்கிறார்கள். வணிக பள்ளிக் கூடங்களிலே அதிகமாக என்ன போதிக்கப்படுகிறதோ அதெல்லாம் ஒரு வடிவமான தந்திர யுக்தி அல்லது கட்டுப்பாடு ஆகும். அதுவே பில்லி சூனியமாகும். திருச்சபையில் மத சார்பற்ற பத்திரிக்கைகளிலிருந்தும் வணிக உலகத்திலிருந்தும் கடனாகப் பெறப்படும் யூக யுக்தி தந்திரங்களில் பெரும்பான்மையானவை இந்த விதமான மாந்திரீகத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்த நேரத்திற்கென்றுள்ள நமது நோக்கத்தை சுதந்திரமாக நிறைவேற்ற வேண்டுமானால் இது அகற்றப்பட வேண்டும்.

அநேகமான நுகங்களும் மனுஷீக எதிர்பார்ப்புகளும் ஏதோ கொஞ்சம் யுக்தி தந்திரங்களின் வல்லமையும் மாந்திரீகமும் அவைகளும் இணைக்கப்பட்டு சத்துருவினால் ஒரு பலமான அரணாக ஸ்தாபிக்கப்பட்டு நமது ஜீவியத்தில் தேவனுடைய அழைப்பை எதிர்க்கும் போராட்டமாக ஸ்தாபிக்கிறது. நமது பெற்றோர், ஆசிரியர்கள், எஜமானர்கள், முதலானவர்களின் எதிர்பார்ப்புகள் புறக்கணிப்பதற்கு அனுமதி பெற்ற உரிமை அல்ல. நாம் பிறக்கு முன்னரே நாம் கர்த்தரால் அறியப்பட்டு இருக்கிறோம். அவர் இந்த மாதிரியான பல தாக்கங்களை நமது ஜீவியங்களிலே அவருக்குள் இருக்கும் நோக்கத்தை, நோக்கியே செலுத்த உதவுவதற்கென்றே வைத்து இருக்கிறார். ஆனால் நுகங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளில் சில நல்நோக்கமுடைய பெற்றோர் ஆசிரியர் பயிற்சியாளர்களால் நம்மேல் சுமத்தப் படுகிறவைகளை அகற்றி எறியப்பட வேண்டும். நம் மேல் சுமத்தப்பட்ட நுகங்கள் தேவனிடமிருந்து வராதவைகளைப் பற்றி நமது அழைப்பையும் அவருக்குள் நமது நோக்கத்தையும் அறியும்படி வரும்பொழுது அவைகள் நமக்குத் தெளிவாக்கப்படும். இதன் சத்தியமானது நம்மை சுதந்திரர்களாக விடுவித்து விடும்.

நாம் எடுத்து ஏற்றுக் கொள்ளும் நுகமானது கர்த்தருடைய நுகத்தை மாத்திரமே எடுத்துக் கொள்ள வேண்டும். அவருடைய நுகம் மெதுவாயும் அவருடைய சுமை இலகுவாயுமிருக்கிறது. நாம் அதைத் தழுவிக் கொள்ளும் பொழுது நாம் உண்மையாகவே இளைப்பாறுதலும் புத்துணர்ச்சியையும் மனச் சோர்வுக்கும் அதைரியப்படுதலுக்கும் பதிலாக நாம் கண்டு கொள்வோம். இந்த வெள்ளை மாந்திரீகத்தின் வடிவங்களானவை கறுப்பு மாந்திரீகக் கலைகளின் மூலமாக வரும். அதே அளவு வல்லமையை சரியாகப் பெற்றிருக்கக் கூடும். நன்மை தீமை அறியத் தக்க விருட்சத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. வெள்ளை மாந்திரீகமானது வழக்கமாக நல்லெண்ணங்களில் வேரூன்றி இருக்கிறது. ஆனால் இது அறிவு விருட்சத்தின் நல்ல பக்கமாகும். இதனால் கொடுக்கப்படும் கனியானது இந்த மரத்தின் தீங்கான பக்கத்தில் இருந்து கொடுக்கப்படும் கனியைப் போலவே விஷமுடையதாக இருக்கும். வெள்ளை மற்றும் கறுப்பு மாந்திரீகங்கள் இரண்டுமே வெவ்வேறு கிளைகளாக இருக்கலாம். ஆனால் அவைகளுக்கு அதே வேரும் அதே மாதிரியான சாவுக் கேதுவான விஷமும் உடையதாய் இருக்கும்.

ஸ்திரமில்லாதவர்கள் இதைப் புரட்டித் திரித்து அவர்களுடைய ஜீவியத்தின் மேல் இருக்கும் தேவனுடைய ஒப்படைக்கப்பட்ட ஒருவனாக உருவகப்படுத்தப் பட்டவன். அவனுடைய மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்துவத்திலிருந்து விழுந்து விட்டு போலியான ஆவிக்குரிய அதிகாரத்தில் கிரியை செய்கிறவனாக இருந்தான். <u>தாவீது இராஜா மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்துவத்திற்கு உருவகமாக இருந்தான். தாவீது எப்படி சவுலுக்கு பிரதி கிரியை செய்தான். சவுல் அவனைத் துரத்தும் வரைக்கும் தாவீது சவுலின் வீட்டில் ஊழியம் செய்ய விருப்ப சித்தமாய் இருந்தான்.</u> அப்படியிருந்துங்கூட பிறகு அவன் ஒரு போதும் பழி வாங்கியதில்லை. கலகம் செய்யவோ சவுலுடைய அதிகாரத்திற்கு குழி பறிக்கவோ முயற்சிக்கவில்லை. ஆனால் அவனை ‘‘கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவராமே’’ என்று கனப்படுத்தினான்.

சவுலினுடைய இடத்தை தாவீது எடுத்துக் கொள்ளும் படியாக அழைக்கப்பட்டாலும் சவுலுக்கு விரோதமாக அவனுடைய கை ஒரு போதும் ஓங்கினதுமில்லை. ஆனால் தேவன் அவனை உண்மையாகவே அழைத்திருப்பாரானால் அவரே தான் அவனை ஸ்தாபிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். அவன் யுக்தி தந்திரவாதங்களுக்கும் அல்லது கட்டுப்பாட்டின் ஆவிக்கும் சரியான எதிர் மறையானவைகளையே அவன் வெளிக்கு செய்து காட்டினான். அதனால் அவன் தீமையை நன்மையால் வென்றான். தாவீது அந்த இராஜ்ஜியத்திற்குள் போவதற்கு யுக்தி வாத தந்திரங்களால் வன்மையான வழியை உண்டாக்கி இருப்பானானால் அவன் நிச்சயமாகவே ஏறக்குறைய சவுலைப் போலவே பில்லி சூனியத்திற்குள் விழுந்திருப்பான். ஆனால் தாவீது வித்தியாசமானதோர் ஆவியை உடையவனாய் இருந்தான்.

எந்த விதமான பில்லி சூனியத்திற்கு இலக்கு ஆனவர்கள் வழக்கமாக மேலே அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுக்குகளால் வரிசையாக தாக்கப்படுதலை உணருவார்கள். நாம் அந்த தாக்குதலுகளுக்கு ஆக்க பூர்வமாக பதில் கொடுத்தால் நாம் நாமே அதனுடைய பாதிப்புகளிலிருந்து சுதந்திரமாக இருக்கக் கூடாதாகையால் என்றாலும் பில்லி சூனியத்தில் கிரியை செய்கிறவர்களை நாம் விடுவிக்குமாறு உதவவும் கூடும். இந்த யுக்திவாத தந்திரமும் கட்டுப்பாட்டு ஆவிகளும் பயத்தின் மூலமாக உள்ளுக்குள் நுழைந்து விடுகின்றன. பயப்படுகிறவர்களும் பாதுகாப்பு அற்றவர்களுமே

மற்றவர்களை கட்டுப்படுத்தும்படியாக பேயாட்டமாக ஆடி அதற்காக தீங்கான பாதிக்கும் தாக்கத்தை உபயோகிக்கிறார்கள். அதற்காக பூரணமான அன்பின் வெளிக்கு எடுத்துக் காட்டுதலை இந்த பயங்களை விரட்டி அகற்றுவதற்கு ஆக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. உங்களைத் தாக்குகிறவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்கு தேவனுடைய பூரணமான அன்பின் ஒரு வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபத்தை ஏறெடுங்கள். நமது மகத்தான மகா பெரிய ஜெயமாவது அந்த சத்துருவின் பிடியிலுள்ளவர்களை நாம் சார்பாக ஆதாயப்படுத்திக் கொள்வதற்காகவே அவர்களுக்கு இடுக்கண் உண்டாக்குவதற்காக அல்ல.

**கண் பார்வை தெரியாமல் உன் பக்கமாகவே**

பில்லி சூனியத்தின் மற்றொரு மூல காரணமாகவே ஆகி நமது ஊக்கக் குறைவு, குழப்பம், மனச் சோர்வு, தரிசன இழப்பு, நிலை தடுமாறுதல், நம்பிக்கை இழந்து போகுதல் ஆகிய இவைகளுக்கு அதிகமாக எதிர்பாராத அநேக மூல காரணங்களில் ஒன்றாக ஆகி விடக் கூடும். நம்மைத் தானே! நாம் யூகத் தந்திரங்கள், பிரபலம் அல்லது மற்றவர்களைக் கட்டுபாடு செய்ய இவற்றை உபயோகிக்கும் பொழுது நம்மை அதன் விளைவுகளுக்குத் திறந்தவர்களாக நம்மை ஆக்குகிறோம்.

இந்த மூல காரணத்தைக் கண்டுபிடிக்கும் படியாக நாம் மற்றவர்களை நோக்கிப் பார்ப்பதற்கு முன்னர் நாம் முதலில் நம்மை நாமே நோக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும். சாத்தான் நம்முடைய சாத்தானை அகற்ற முடியாது. நாம் நாமே பில்லி சூனியத்திற்குள் இயங்கிக் கொண்டிருப்போமானால் மற்றவர்களிடமிருந்து இந்த பில்லி சூனியத்தை அகற்றி விட முடியாது. மாந்திரீகத்து அடிமையானவர்கள்களில் அநேகர் மாம்சத்தில் இருந்து இதனுடன் போரிடும் படியாக முயன்றிருக்கிறார்கள். சரியாக அதே ஆவியை பயன்படுத்தியே அவ்வாறு முயற்சித்தார்கள். நாம் அதையே செய்யும் பொழுது நமது சொந்த ஜீவியங்களில் ஓர் அடி நிலையைப் பெற்றுக் கொள்ளுகிறது. அந்த நிலையானது நாம் மற்றவர்களை விடுவிக்கும் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முன்னதாகவே தகர்த்தெறியப்பட வேண்டும்.

திருச்சபைக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் பில்லி சூனியத்தின் ஒவ்வொரு உருவமான வெளிப்பாடுகளை கீழ்படுத்தி விடுவதே பிதாவினுடைய கவனமாகும். அது ஒரு ஆபத்தான தவறாக அதை தொடர்ந்து நீடித்து தங்கி இருப்பதை பொறுத்துக் கொள்ள முடியாது. இந்த பயங்கரமான தீங்கிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு தான் மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தில் நடப்பவர்களுக்கு மட்டுமே நம்பிக்கையோடு கொடுக்கக் கூடிய முன்னோடியில்லாத வல்லமையில் நாம் சுதந்திரமாக நடக்க முடியும்.

# அதிகாரம் 5 - யேசபேலின் ஆவி

இந்த யேசபேலினுடைய ஆவியானது ஒடுக்கப்படுதலும் தவறாக பயன்படுத்தப்படுதலும் ஒருவரை கசப்புக்கும் கலகம் செய்யவும் திருப்பும் போது உள்ளே நுழைந்து விடுகிறது. தேவன் ஒடுக்கப்படுகிறவர்களுக்கு மனதுருக்கம் உடையவர் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் யேசபேலுக்குங்கூட மனதுருக்கம் கொண்டிருந்து அவள் ‘‘மனந்திரும்பும் படியாய் அவளுக்கு தவணை கொடுத்தேன்.’’ (வெளி 2:21). என்னவென்றாலும் அவளைப் பொறுத்துக் கொண்டதற்காக அந்தத் திருச்சபைத் தலைவர்களைக் கடிந்து கொண்டார். (வசனம் 20) நமக்கு எல்லா பாவிகள் மீதும் மனதுருக்கம் இருக்க வேண்டும். ஆனால் அவர்களுடைய பாவங்களை நாம் பொறுத்துக் கொள்ள முடியாது.

யேசபேலுடைய ஆவியை உடையவர்கள் ஊழியத்திற்காக ஏறக்குறைய ஒவ்வொரு அபிஷேகம் பெற்ற திருச்சபையோடும் தங்களை இணைத்துக் கொள்வார்கள். நம்முடைய முடிவான இலக்காவது அவர்களை விடுவிக்கும்படியாக எப்பொழுதும் பார்த்தும் அவர்கள் குணமாக்கப்படவும் வேண்டும். தங்கள் வழிகளை விட்டு அவர்கள் மனந்திரும்பாவிட்டால் அவர்கள் நீக்கி விடப்பட வேண்டும். அவர்கள் ஒவ்வொன்றையும் தொடர்ந்து வரும் ஊக்கமின்மை நொறுக்குதல், நாசத்தை விளைக்கும் பிரிவினைகள் ஆகியவற்றை விடுவித்து விடும் அந்த பிரிவினைகள் ஆனவை அநேகரை ஆழமாகக் காயப்படுத்தப்பட்டவர்களாக ஆக்கி விடக் கூடும்.

முதலாவதாக நாம் யேசபேலின் ஆவியை அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். பின்வருபவை இந்த ஆவியோடு பொதுவாக இணைத்து கூறப்படும் குணக் கூறுகளாகும். யேசபேலின் ஆவியை உடையவர்களுக்கு இருக்கக் கூடியவை:

1) தங்களுடைய வெளிப்பாடுகளின் மூலமாக தங்களைப் பற்றியே தொடர்ச்சியாக சாட்சி கூறுவார்கள்.
2) அடிக்கடி நிலைவரமான அங்கீகாரத்தைத் தேடுவார்கள். பிரசங்க பீடத்திலிருந்து அல்லது தலைவர்களால் தங்களைப் பற்றிச் சொல்லப்படுவதின் மேல் அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள். மேலும் புண்படுத்தப்படுவதாகவோ அவர்கள் அப்படி அல்லவென்றால் தூரமாக விலகிப் போய் விடுவார்கள்.
3) தலைவர்களுக்கு நெருக்கமாக இருக்குமாறு முயற்சிப்பார்கள். வழக்கமாக முகஸ்துதியையோ அல்லது ஆடம்பரமான தீர்க்கதரிசனங்களையோ கையாளுவார்கள்.
4) மிகவும் ஆபூர்வமாக அதிகாரத்திலிருக்க விரும்புவார்கள். ஆனால் சிம்மாசனத்துக்கு பின்னணியில் இருக்கும் வல்லமையான அதிகாரமாக இருக்க விரும்புவார்கள்.
5) வழக்கமாக திருச்சபையில் பலவீனமான அங்கததினர்களைக் கவர்ச்சித்து அவர்களை ஆவிக்குரிய அடிமைத்தனத்துக்குள்ளாகத் தொடங்கி அவர்களை முகஸ்துதியாலும் ஆடம்பரமான தீர்க்கதரிசனங்களாலும் கவர்ச்சிப்பார்கள்.
6) அவர்களுடைய ஆவியில் அடிமையானவர்களைப் பயன்படுத்தி அவதூறையும் அதிருப்தியையும் பிரிவினையையும் பரப்புவார்கள்.
7) அடிக்கடி திருமண தரகர்களாக இருக்க முயற்சிப்பார்கள். பிறகு அந்த இணைக்கப்பட்ட உறவுத் தொடர்பை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பார்கள்.
8) அதிகமான சமயங்களில் மன வலிமை குறைந்த மனைவியை (ஆசாபைப் போல) பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்களை பலமுள்ளவர்களாக, ஆவிக்குரியவர்களாக மகா தாலந்துள்ளவர்களாக பிரகடனம் செய்வார்கள்.
9) மற்றவர்களிடமிருந்து தீர்க்கதரிசனங்களைத் திருடிக் கொண்டு தங்களைச் சற்று நல்லவர்களாகப் பார்க்கும் படியாகச் செய்து கொள்வார்கள்.
10) வழக்கமாக சித்திரவதை செய்யப்பட்டவர்களாக உணருவார்கள்.
11) அடிக்கடி சாக்குப் போக்கு சொல்வார்கள். அவர்களுடைய சொந்த பாவத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.
12) வழக்கமாக வேலை செய்பவர்களாக, அடிக்கடி உபவாசித்தும் ஜெபித்தும் கொள்ளுவார்கள். அதுவும் ஆவிக்குரியவர்கள் என்று கருதப்பட வேண்டும் என்ற ஆவலுடன் இருப்பார்கள்.
13) அடிக்கடி கசப்புள்ளவர்களாகவும் விசேஷமாக தங்களுடைய தகப்பனார் அல்லது மற்றொரு அதிகாரம் பெற்ற மனிதர் மீது கசப்பைக் காட்டுவார்கள்.
14) எப்பொழுதுமே பிழையுள்ள தர்க்க உணர்வும் அதுவும் அறைகுறையான ஆவிக்குரிய அதிகாரத்தில் மூடி மறைக்கப்பட்டதாக அதுவும் ஆவிக்குரியவர்கள் மட்டுமே அதைப் புரிந்து கொள்ள முடியும் என்பது மறைமுகமாகக் கூறப்படும்.

### யேசபேலிடமிருந்து விடுதலை

முதலாவதாக யாராவது ஒருவர் இந்த வகையான குணாதிசயங்களில் ஒன்றையோ அதிகமானவைகளையோ பெற்றிருப்பார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் யேசபேலுடைய ஆவியை அல்ல. என்னவென்றாலும் இவைகளில் பெரும்பான்மையானவை இந்த பிரச்சனையோடு இடைபடுகிற உமக்கு நன்கு தெரிந்தவருக்கு பொருத்தமானதாக இருக்குமானாலும் இவைகள் அனைத்தும் பயங்கரமான குறைகளாக ஒருவரைத் தாக்குவதால் அவர் குணப்படுத்தப்பட்டவராக அல்லது அவருக்கு ஒரு ஊழியத்தை ஒப்புக் கொடுக்கவோ அல்லது திருச்சபையில் அதிகாரம் கொடுக்கப்படுவதற்கு முன்னதாக இவைகளிலிருந்து குணமாக்கப்பட்டு ஆக வேண்டும்.

சில தத்துவ நிபுணர்களும் ஊழியர்களும் வீழ்ச்சியின் காலத்தின் போதே இந்த ஆவி தோட்டத்துக்குள் விடுவிக்கப்பட்டதென்று நம்புகிறார்கள். அப்படியானால் அது ஒரு வேளை ஏவாள் வஞ்சிக்கப்படக் காரணமாயிருந்த ஆவியாகக் கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவளுடைய புருஷன் வீழ்ச்சிக்கான பழியை நகர்த்தி அவள் மீது சுமத்துவதால் வந்த விளைவாக இருக்கலாம்.

(ஆதி 3:12ஐப் பார்க்க) தேவன் ஆதாமுக்குத் தான் அந்த மரத்திலிருந்து கனியைப் புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார். ஏவாளுக்கு அல்ல. ஏவாள் சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்ட போதிலும் ஆதாமே பொறுப்பை உடையவன். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஆனால் அவன் பாவம் செய்தான். வீழ்ச்சிக்கு முன்னர் ஏவாள் அவனுக்கு வாழ்க்கை துணைவியாக இருந்தாள். அந்த சாபமானது ஸ்தீரிக்கு ‘‘உன் ஆசை உன் புருஷனைப் பற்றி இருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்வான்’’ என்று கொடுக்கப்பட்டது. (ஆதி 3:16)

இந்த வீழ்ச்சியின் சாபமானது கிறிஸ்துவுக்குள் தீர்க்கப்பட்டு விட்டது. இது சட்ட ரீதியாக சிலுவையில் நிறைவேற்றப்பட்டது. நாம் எல்லோரும் வீழ்ச்சியின் விளைவுகளில் இருந்து மீட்கப்பட்டபடியால் ஒரு ரட்சிப்பு நிறைவேற்றப்படுமா? (பிலிப் 2:12-13) இந்த புதிதாக மனிதனுக்கும் ஸ்தீரிக்கும் இடையே உண்டு பண்ணப்பட்ட உறவுத் தொடர்பானது மனிதனானவன் ஸ்தீரி மீது ஆளுகை செய்வதற்கல்ல. ஆனால் அந்த இருவருமே சேர்ந்து ஆளுகை செய்ய வேண்டும் என்று தான். நாம் எல்லோரும் வீழ்ச்சியின் விளைவுகளிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிற படியால் இந்த உறவுத் தொடர்பானது மிகவும் நெருங்கினதாக அது முதலாவதாக எதற்கென்று நியமிக்கப்பட்டதோ அந்த வழிக்கே திரும்பி விட வேண்டும். நாம் எப்பொழுதுமே நமது இறுதியான இலக்கைக் குறித்த பார்வையை இழந்து விடக் கூடாது. நாம் முழுவதுமாக கிறிஸ்துவுக்குள் தங்கி இருக்கும்படியாக வந்தால் அவருக்குள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. (கலா 3:28) மேலும் நாம் புரிந்து கொள்ள வேண்டியதாவது சாபத்தின் அந்த அளவு ஒரு பகுதியாக மனிதன் ஆனவன் ஸ்தீரியின் மேல் ஆளுகை செய்ய வேண்டும். அது போலவே ஸ்தீரியும் ஆளுகை செய்யப்பட வேண்டும். சமாதானமும், நிறைவேறுதலும் அவர்கள் வீழ்ச்சியின் விளைவுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு சரியான உறவுத் தொடர்பில் ஒருவருக்கொருவர் வாழக் கூடுமானால் அந்த இரண்டு கூறப்பட்ட பண்புகளும் அவர்களுக்கு வராது. (கிடைக்காது)

வழி நடத்துதலுக்கும் ஆளுகை செய்தலுக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் இருக்கக் கூடும். ஒருவர் தாம் மெய்யான தாலந்துள்ள தலைவராக இல்லாமலே ஆளுகை செய்யக் கூடும். ஒரு மெய்யான வரம் பெற்ற தலைவர் கொள்கைகளை தான் வழி நடத்துகிற அளவுக்கு ஆணை பிறப்பிக்க மாட்டான். என்னவென்றாலும் கிறிஸ்துவுங்கூட தான் திரும்பி வரும் பொழுது இருப்புக் கோலால் ஜாதிகளை ஆட்சி செய்வார். ஆனால் அவருடைய மணவாட்டியும் அவருடைய பாரிசத்தில் இருப்பாள்.

வேதாகமத்தில் வீழ்ச்சியின் காரணமாக ஒரு கணவனுக்கு தன் மனைவி மேல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதைப் பார்க்கிறோம். ஆனால் வேதம் எங்கிலும் ஒரு குறிப்பிட்ட வேதாகமத்தின கட்டளையாக அதிகாரமானது பெண்கள் ஆண்கள் மேல் செலுத்தும்படி கொடுக்கப்பட்டதாக நாம் பார்க்க முடியாது. வேதத்தில் பெண்களுக்கும் அதிகாரம் கொடுத்தாக நாம் பெற்றிருக்கிறோம் என்று நாம் நினைக்கிறோம். இதற்கு ஸ்தீரிகள் மனிதர்கள் மேல் அதிகாரம் பெற முடியாது என்பது அர்த்தமல்ல. எனக்கு தீர்க்கதரிசன வரம் பெற்ற மூன்று குமாரத்திகள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக தேவன் எவ்வளவு குறிப்பாக பேச முடியும் என்பதை விரைவில் படித்துக் கொண்டேன். அவர்கள் மூன்று பேராக ஆன காலத்தில் அவர்கள் என் கவனத்தை அவர்கள் விரும்பிய நேரத்தில் பெற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு என் மேல் அதிகாரம் ஒன்றுங் கிடையாது. ஆனால் என்னுடன் அவர்களுக்கும் அதிகாரம் இருக்கிறது. இதே மாதிரி வழியிலே தான் திருச் சபைக்கும் கிறிஸ்துவுக்கு மேல் அதிகாரம் கிடையாது. மேலும் ஒருபோதும் கிடையாது. ஆனால் நமக்கு அவரோடு அதிகாரம் உண்டு. அவருடைய மணவாட்டியாக அவருடன் அதிகாரம் செலுத்தி ஆளுகை செய்வது நமக்கு இலக்காகும். அவருடைய இலக்காவது நாம் அவருடன் கூட ஒன்றாக இருந்து அவர் உலகத்தில் செய்ததை விட மகத்தான கிரியைகளை நாமுங்கூட செய்வோம். இதே தான் ஒவ்வொரு கணவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இலக்காக அவசியம் இருக்க வேண்டும்.

**யேசபேலுக்காக நம்பிக்கை**

வேதாகமம் எல்லாவற்றிலும் ஆச்சரியமானதொரு கூற்றாக தேவனுடைய அன்பும் கிருபையாலும் தேவன் யேசபேலுக்கு மனந்திரும்பும்படி தவணை கொடுத்தார். அவள் கர்த்தருடைய ஜனங்களை வஞ்சித்த பொழுதுங்கூட அவ்வாறு செய்தார். முதலாவது அவளுக்கு கால அவகாசத்தை

மனந்திரும்பும்படியாக தந்தார். ஏனென்றால் அது செயல்பட காலம் எடுத்துக் கொள்கிறது. இந்த தீங்கானது தனது வேர்களை ஒரு நபருக்குள் மிகவும் ஆழமாக வேரூன்றிக் கொண்டு அது ஒரு நீண்ட காலத்து மிகவும் வித்தியாசமான மீட்சிகளில் ஒன்றாக இருக்கக் கூடும். என்னவென்றாலும் சாத்தான் ஒரு நபருக்குள் எந்த ஆழமான அளவுக்கு தனது வேர்களை ஊன்றிக் கொள்ள முடியுமோ அப்படியே எவ்வளவு ஆழமாக கர்த்தரால் கொள்ள முடியுமோ அப்படியே எவ்வளவு ஆழமாக கர்த்தரால் அவர்கள் ஒரு தடவை மீட்கப்பட்டவுடனே அவருடன் நிரப்பப்படுவார்கள்.

இந்த ஆவியிலிருந்து மீட்கப்பட்டவர்கள் மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தை அறிந்து கொள்ள கூடியவர்களாக வந்து அந்த மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் நடப்பார்கள். இந்த ஆவியிலிருந்து விடுதலை பெற்ற ஒரு ஸ்தீரி மிகவும் அழகியதும் கிருபை நிறைந்ததுமான உதாரணங்களாக எவற்றிற்கு ஏவாள் உண்மையாகவே இருக்கும்படியாக குறிக்கப்பட்டிருந்தாளோ அந்த மாதிரி ஸ்தீரிகளில் ஒருத்தி ஆவாள். இவ்வாறு விடுதலை பெற்ற மனிதன் சிறந்த உதாரணமான பிரபு குலமாகவும், கனத்துக்குரியவனாகவும் உண்மையான ஆவிக்குரியவனாகவும் இருக்கும்படியாக ஆதாம் அழைக்கப்பட்டானோ அதே மாதிரியான சிறந்த உதாரணமும் ஆவான்.

ஒரு தடவை இந்த பிரச்சினையை மேற்கொண்டு விட்டால் அது இந்த கடைசி காலத்தில் நமக்கு தேவைப்படுகிற ஆவிக்குரிய அதிகாரத்திற்கு அவசியமான நம்பிக்கையின் உயர் மட்டங்களை அடைவதற்கான படிக்கல்லாக ஆகக் கூடும். நாம் மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் விரோதமாக போரிடக் கூடாது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தர் யேசபேலுக்கு மனந்திரும்பும்படி கால அவகாசம் கொடுக்கக் கூடுமானால் நாமும் அவளுடைய பொல்லாத வழிகளை எதிர்த்து நிற்க வேண்டும் அல்லது இந்த வல்லமையானது மகா பெரிய நாசத்தை திருச்சபைக்கு விளைவிக்கும்.

# அதிகாரம் 6 - ஆவியின் கட்டுப்பாடும் சட்டரீதியான சார்பும்

நமது ஆத்துமாக்களின் எதிரியான சத்துருவினுடைய அடிப்படையான யுக்தி வியூகங்களில் ஒன்று ஆவிக்குரிய ஏதேச்சாதிகாரத்தினால் திருச்சபையை அடிமைப்படுத்திக்கொள்வதாகும். இது விசுவாசிகளை பயம், அச்சுறுத்தல் மூலமாக கட்டுப்பாடு செய்தும், ஒடுக்கவும் செய்யப்படுகிறது. பயம் என்பது விசுவாசத்திற்கு எதிர் வல்லமையாகும். இவை இரண்டும் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஜீவ மரணப் போராட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்களின் இருதயத்திற்கான அதி முக்கியமான போர் களங்களில் ஒன்றாக இருப்பது ஆவிக்குரிய அடிமைத்தனத்துக்கு விரோதமாக செயல்படுவது விடுதலை ஆகும். பவுல் அப்போஸ்தலன் குறிப்பிட்டதாவது, “நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்.” (ரோமர் 10:10). பயமும் பயமுறுத்தப்படுதலும் ஆகியவை ஒரு மனிதனை கட்டாயமாக தங்களுடைய சிந்தனைகளைக் கொண்டு நம்பிக்கை கொள்ளவும் அவர்களுடைய உணர்ச்சிகளோடுங்கூட அவ்வாறு நம்பிக்கை கொள்ளும்படி செய்யும். ஆனால் அவைகள் மனிதனுடைய இருதயங்களை ஒரு போதுமே மாற்ற முடியாது. பயமும் பயமுறுத்தப்படுதலும் யாராவது ஒருவருக்கு விரோதமாக உபயோகப்படுத்தப்பட்டால் அவர்கள் உண்மையான விசுவாசத்தை பெற்றுக் கொள்ளும்படியாக பயனளிக்காது. பயம் என்பது அந்தகார இராஜ்ஜியத்து வல்லமையாக அடிமைப்படுத்துகிறது. பயமானது நம்மைக் கட்டுப்படுத்த முடியுமானால் ஒரு கருத்தில் அந்த பயமானது நமக்கு அதிபதியாகி விடுவான். தேவனுக்குள் இருக்கும் விசுவாசமானது நம்மைக் கட்டுப்படுத்தும் அளவு ஆனது நம்முடைய ஜீவியத்தில் அவருடைய கர்த்தத்துவத்தை தீர்மானிக்கிறது. விசுவாசமானது தேவனுடைய இராஜ்ஜியத்தின் வல்லமை ஆகும். அது மக்களை விடுதலையாக்கி தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும்படி செய்கிறது. பயமானது வெளி உலகத்து அழுத்தம், பயமுறுத்துதல் இவற்றின் மூலமாக மனிதரை ஆளுகை செய்கிறது. விசுவாசம் இருதயத்திலிருந்து ஆளுகை செய்கிறது.

ஒரு கிளிக்கு சரியான காரியங்களை சொல்லவும் செய்யவும் கற்றுக் கொடுக்கக் கூடும். ஆனால் அவைகள் அதனுடைய இருதயத்தில் இருக்க முடியாது. இது வெறும் கிளிப் பேச்சேதான். ஒப்புக் கொள்ளுதல் என்பது பயமுறுத்துதலின் பேரிலோ அல்லது கட்டாயத்தின் பேரிலோ அடிப்படையானதாக

இருக்குமானால் அது உண்மையான நீதியாகுதலுக்கு அல்லது இருதய மாற்றத்துக்கு அந்த தத்துவக் கொள்கை எவ்வளவு சரியானதாகவோ அல்லது மெய்யாக இருப்பதையோ பொருட்படுத்தாமல் அதுவே நம்மீது கட்டாயமாக ஆக்கப்படுகிறது. உண்மையாக இருக்குமானால் நமது விசுவாசம் இருதயத்திலிருந்து உண்டாக வேண்டும். சிந்தனையிலிருந்தும் அல்ல. ஏனென்றால் ''ஜீவ தண்ணீர்கள்'' நமது உள்ளான மனுஷனிலிருந்து மட்டுமே அதாவது இருதயத்திலிருந்து மட்டுமே வர முடியும். நமது இருதயங்களிலிருந்து நாம் ஜீவிக்க முடியாவிட்டால் நாம் ஒரு போதும் உண்மையாக சத்தியத்தில் வாழ முடியாது. மெய்யான ஜீவ தண்ணீர்கள் தங்கி இருக்கும் இடமான இருதயத்திலிருந்து நாம் பிரசங்கிக்கும் வரை நமக்கு மெய்யான ஜீவியத்தைப் பகிர்ந்தளிப்பதானதை நாம் போதிக்கவோ அல்லது பிரசங்கிக்கவோ முடியாது. இருதயத்திலுள்ளவைகளுக்கு விசுவாசத்துடன் இருக்க வேண்டுமானால் அதற்கு விடுதலையான சுதந்திரம் வேண்டும்.

''இருதயத்தை'' உணர்வுகளோடு இணைக்கும் போக்கு சமயங்களில் குழப்பதை உண்டாக்கும். நமது உணர்வுகள் இருதயத்திலிருந்து வரலாம் அல்லது நமது உண்மையான இருதயம் அல்லாத பிற மூல காரணங்களிலிருந்தும் வரலாம். சில ஜனங்கள் அதிலும் சில கிறிஸ்தவர்களுங்கூட மெய்யாகவே தங்களுடைய இருதயங்களைப் புரிந்து கொள்கிறார்கள். அநேகர் தங்களுடைய இருதயங்களை ஆவிக்குரிய அல்லது சமுதாய முகப்புகளால் மூடிக் கொள்கிறார்கள். அதனால் அங்கு இருப்பவைகளோடு தொடர்பு கொண்டு இருப்பதில்லை. ஏரேமியா விவரித்துச் சொன்ன பிரச்சனையும் நமக்கு இருக்கிறது. ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்.'' (எரேமியா 17:9) அதினாலுங்கூட நாம் ஒரு உண்மையான இருதயத்தைப் புரிந்து கொண்டு அதன்படி ஜீவிப்பது என்பது முக்கியமானதாகும். ஏனென்றால் மெய்யான ஜீவ தண்ணீர்கள் பெருகி ஓடி வருவது அந்த ஒரு இடத்திலிருந்து மட்டுந்தான்.

மெய்யான விசுவாசத்தின் முடிவான இலக்குகளில் ஒன்று மனிதர்களுடைய இருதயத்தை மாற்றுவது தான். பிறகு அவர்களை தங்களுடைய இருதயத்தின் படியே ஜீவிப்பதற்காக விடுதலை செய்து விட வேண்டியது. நமது இருதயங்கள் ஜீவ தண்ணீரின் நீர் தேக்கங்களாக இருப்பதால் நமது இருதயங்களின்படி நாம் ஜீவிப்பதற்கு சுதந்திரமாக இருக்கும் பொழுது மனிதர்கள் தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கிறதற்காக ஜீவத் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கிறிஸ்தவர்கள் தான் உலகத்திலே அதிகமான சுதந்திரம் பெற்ற மனிதர்களாக இருக்க வேண்டும். மேலும் மீதியான மனித வர்க்கத்தினரிடமிருந்தும் ஒரு பிரத்தியேகமான வித்தியாசத்துடன் இருக்க வேண்டும். உண்மையான கிறிஸ்தவமானது இறுதியாக உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும் பொழுது அது உலகத்திற்கு மகத்தான ஒளியாய் இருக்கும். சகல மனிதர்களும் தாங்கள் தாங்களாகவே எதற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க போகிறார்கள். இது முடிவு காலத்திற்கு முன்னர் நேரிடும். ஏன் இப்பொழுதே நேரிடக் கூடாது? ஏன் நமக்கே நேரிடக் கூடாது?

எழுப்புதல் என்பது முக்கியமாக விசுவாசிகளுக்குள்ளே ஜீவ தண்ணீரைத் திறந்து விடுவது தான் அதன் காரணமாகவே ஒவ்வொரு எழுப்புதலுக்கும் உள்ள சத்துருக்களில் மகத்தானதொன்று கட்டுப்பாட்டு ஆவியாய் இருக்கிறது. இந்த கட்டுப்பாட்டின் ஆவியானது விசுவாசிகளை அடிமைப் படுத்திக் கொண்டு ஒவ்வொரு எழுப்புதலையும் சிருஷ்டித்து நிலை நிறுத்துகிற ஜீவ தண்ணீர்கள் பிரவாகித்து பெருகி விடுவதை நிறுத்தி விடுகிறது. சாத்தான் வெளிப்படையாக நாம் நம்புகிறவைகளை நமது இருதயங்களால் அல்ல. நமது சிந்தனையில் நம்புகிறவைகளை எதுவரைக்கும் நம்புகிறோமோ அது வரைக்கும் அதைப் பற்றி கொஞ்சமேனும் கரிசனை கொண்டிருப்பதில்லை. இந்த மாதிரி வழியில் சத்தியம் என்பது தடுப்பூசியைப் போல பயன்படுத்தப்பட்டு நமது மனசாட்சியை திருப்திபடுத்துவதற்கு போதுமான அளவே நமக்குக் கொடுக்கப்படுகிறது. மற்றும் இருதயங்களை மாற்றுவதற்கும் போதுமானதாக இல்லாமலும் மேலும் உண்மையான விசுவாசத்தைக் கொண்டு வந்து ஒரு ஜீவ தண்ணீர்களின் பிரவாக ஓடச் செய்வதற்கும் பயன்படுத்தப் படுகிறது. சாத்தானுடைய வியூக யுக்தியாவது மதத்தை நுண்ணறிவாக வைத்துக் கொள்வது தான். சத்தியங்கள் நுண்ணறிவுக்கு நீங்கள் விரும்புகிற அளவுக்கு அவன் சத்தியத்தை தந்து நீ தவறாக பயன்படுத்துகிறாா் என்று அவன் அறிந்து கொள்ளும் காலம் வரைக்கும் உனக்கு கொடுப்பான். அவன் இந்த சத்தியங்கள் நுண்ணறிவுக்கும் அப்பால் இருதயங்களைப் பொய் சேரும் பொழுது அதை நிறுத்துவதற்காக ஒரு

காட்டுப்பாட்டின ஆவியை அனுப்புகிறான். கர்த்தர் இந்த சத்தியத்தை மனிதனை விடுதலையாக்கி சுதந்திரமாக விடும்படி உபயோகிக்கிறார். ஆனால் சாத்தான் அந்த சத்தியத்தால் மனிதர்களை கட்டவும் அவர்களை பரிசுத்த ஆவிக்கு பதிலாக ஒரு கட்டுப்பாட்டின் ஆவிக்குப் பணியவும் செய்கிறான்.

**கீழ்படிதலின் இயல்பு**

அந்தகார இராஜ்ஜியத்திற்கும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் இடையே உள்ள அடிப்படை போராட்டங்கள் அடிமைத்தனத்தையும் சுயாதீனத்தையும் சம்பந்தப்பட்டது. இயேசு சொன்னதாவது, ''நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்;'' என்றார். (யோவான் 8:31-32) அவருடைய சத்தியமானது, நாம் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கம் காலம் வரைக்கும் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். ஆனால் நாம் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். இந்த சத்தியம் நம்மை விடுதலையாக்கும் மேலும் சுயாதீனமானது இருதயத்திலிருந்து சத்தியத்தை அறிந்து கொள்ள அவசியமாகும். கீழ்படிதல் என்பது கர்த்தருக்கு முக்கியமானது. ஆனால் தேவன் கீழ்படிதலுக்கு பின்னே போவதில்லை. அவர் நம்மை சரியான காரணங்களுக்காக கீழ்படிய வேண்டுமென்று விரும்புகிறார். ஏனென்றால் நாம் அவருடைய இருதயத்தைப் பெற்றிருக்கிறோம்.

ஒரு ஸ்தீரி அதிகாரத்திற்கு அவளுடைய பணிந்து கீழ்படிதலின் அடையாளமாக ஒரு காது மூடு திரையை அணிந்து கொண்டு ஆலயத்துக்கு வரலாம். அந்த மூடு திரையை அணிவதால் அவளை பணிந்து கீழ்படிய வைக்கிறதா? ஒரு மூடு திரையை அணிவது பணிந்து கீழ்படிதல் அல்ல. அதை விட அதற்கு ஓர் அடையாளமே ஆகும். ஒரு கலகக் குணம் நிறைந்த ஸ்தீரியும் இந்த மூடு திரையை அணியலாம். தன்னுடைய முரட்டாட்டத்திற்கு இழப்பீடாகக் கூட அதைச் செய்யலாம். அதுவும் அவளுடைய பணிந்து கீழ்படியா குறைவை மூடி மறைப்பதற்கான ஒரு முயற்சியாகவும் இருக்கலாம். கர்த்தர் நம்மை பணிந்து கீழ்படிதலுக்காக அடையாளங்களை அணிந்து கொள்ளுமாறு கேட்பதில்லை. ஆனால் அவர் இருதயத்திலிருந்து பணிந்து கீழ்படிதலை வரும்படியாகப் பார்க்கிறார். திருச் சபையால் ஆணையிடப்படும் அநேக தத்துவ கோட்பாடுகள் தத்துவ மூடு திரைகளை அணிந்து கொள்வதில் அதிகமாக வற்புறுத்துகின்றன. அவைகள் நம்முடைய இருதயத்தில் மாறுதல்கள் ஏற்படுவதைவிட அந்த மூடு திரை அணிவதையே வற்புறுத்துகின்றன. கர்த்தர் நாம் எதை நம்புகிறோம் என்பதில் மட்டும் கரிசனையாக இருப்பதில் நாம் எப்படி நம்புகிறோம் என்பதிலும் கரிசனையாக இருக்கிறார்.

மனிதனிடமிருந்து தேவன் வேண்டுவதெல்லாம் கீழ்படிதலைத் தான். தோட்டத்திலே ஆதாம் ஏவாளுக்குக் கூட ஒரு தெரிந்தடுத்தலைக் கொடுத்திருக்க மாட்டார். அவர் மனிதனை எப்பொழுதுமே கீழ்படியும்படி அவர் செயல்முறைத் திட்டமாக்கி இருக்கலாம். ஆனால் அவர் தனக்கென்று ரோபோக்களை மட்டும் வைத்திருக்கலாம். இருதயத்திலிருந்து உண்மையான கீழ்படிதலை பெற்றிருக்க வேண்டுமானால் அதற்காக கீழ்படியாதிருக்கவும் சுயாதீனம் இருந்தாக வேண்டும். அதன் காரணமாகத் தான் கர்த்தர் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை தோட்டத்தில் வைத்திருந்தார். மனிதனை தடுமாறும்படிக்கு காரணமாக அதை அவர் வைக்க வில்லை. ஆனால் அந்த இடத்தைத் தான் மனிதன் தனக்குக் கீழ்படியாதிருக்கும்படி தேர்வு செய்யக் கூடிய இடமாகும். நாம் ஆவியிலும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமானால் இருதயத்திலிருந்து தொழ வேண்டுமாகிலும் ஆராதிக்க வேண்டாம் என்று தேர்வு செய்வதும் இருக்க வேண்டும்.

**இருதயத்திலிருந்து தொழ அல்லது ஆராதிக்க**

ஒருவர் எதிர் மாறாகச் செய்த படியாக திறமையில்லாதவரிடமிருந்து ஆராதிப்பதால் என்ன நன்மை வரப் போகிறது. நமது குறிப்பிட்ட முறையான ஆராதனைக் கூட்டங்கள் நமது ஆராதிக்கும் நிலவரத்திற்கு சுட்டிக் காட்டுவதென்றால் கர்த்தர் ஒரு கணினியை மாத்திரம் கண்டுபிடிப்பதை மாத்திரம் செய்திருப்பார். அந்த கணிணியில் அவைகளில் ஆயிரக்கணக்கானவைகள் தன்னை துதித்து சங்கீர்த்தனம் செய்வதையே நிகழ்ச்சி ஒழுங்காகச் செய்திருப்பார். நாம் எப்பொழுது நிற்க வேண்டும். எப்பொழுது உட்கார வேண்டும். எப்பொழுது பாட வேண்டும் என்று சொல்லப்பட்டால் அவைகளில் ஏதேனும் நமது இருதயத்தில் இருந்து வந்திருக்குமா? நமக்கு ஒழுங்கு இருக்கலாம். அது நல்லதாகத் தோன்றலாம். ஆனால் அது தேவனுடைய இருதயத்தைத் தொடக் கூடுமா? அது எப்படி தொடக் கூடும் என்பதை கண்டு கொள்வது கடினமாகும். எந்தப் பாகுபாட்டு ஆராதனை

முறை என்பது அது பாரம்பரியமானதா? பெந்தெகொஸ்தே முறையா அல்லது அருட்கொடை முறையா அல்லது மூன்றாவது அலையைச் சார்ந்ததா? என்பது வழக்கமாக அந்த சபையினரை அதன் முக்கியமான பகுதியான பிரசங்கத்திற்காக ஆவியில் அனலூட்டி ஆயத்தப்படுத்துவதற்கான சிறிது முயற்சிக்கும் அதிகமானதாகும்.

நமது ஆராதனை வழிபாட்டில் உண்மையான ஆராதனை முறையை அடைவது என்பதை கர்த்தரிடம் தேடி பெற்றுக் கொள்ள வேண்டும். மிகவும் முன்னேற்றம் அடைந்த ஆராதனை முறையுங்கூட வெகு விரைவில் ஆவிக்குரிய திரும்பத் திரும்பச் செய்யும் வழிபாட்டு கண்ணிக்குள் விழுந்து அதை அடிப்படை வாய்பாடமாகக் கற்றுக் கொண்ட சடாங்காச்சாரங்களுக்கும் சற்று அதிகமாகிறது. அதைத் தான் கர்த்தரும் அதை ஆராதனை என்று ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்கிறார். ஆராதனை வழிபாடானது நமது இருதயங்களை தேவனுடைய இருதயத்தை தொடும்படியாக செய்ய முடியாவிட்டால் அப்படிப்பட்ட ஆராதனையானது ஆராதனை அல்லவே அல்ல. அது மிகவும் முழங்கி கூச்சலிட்டு சத்தமிடுவதுதான். நாம் தேவனுடைய இருதயத்தைத் தொடுவோமானால் நமது இருதயங்களும் மாற்றம் அடையும். ஒவ்வொரு ஆராதனை முறையும் கர்த்தருடைய பிரத்தியட்சமான பிரசன்னத்தை நேருக்கு நேர் சந்திப்பதால் இருக்க வேண்டும். நாம் கர்த்தருடைய மகிமையைத் தரிசிக்கக் கூடுமானால் அந்த மகிமையால் நாமும் மாற்றம் பெறக் கூடும். என்னவென்றாலும் உண்மையான ஆராதனை கர்த்தரைப் பார்ப்பதற்கு முயற்சிப்பதால் வருவதல்ல. நாம் அவரைத் தேடுவதால் வருவதாகும்.

இதற்காக சில வெளிப்படையான நடைமுறை படிகள் இருக்கின்றன. நமது ஆராதனைக்கும் முறைமைகளுக்கும் ஒரு மெய்யான பிரசன்னத்தை கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும்படியாக அவைகளை எடுத்துக் கொள்ள முடியும். முதலாவதாக மக்கள் அவர்களுக்கு விருப்பமானால் உட்கார்ந்து கொள்ளட்டும். அவர்களுக்கென்று சுதந்திரமாக இருக்க வேண்டுமானால் உட்கார்ந்து கொள்ளட்டும். ஆனால் அவர்கள் நின்று கொண்டு ஆராதித்தால் அது மெய்யாகவே கர்த்தரைக் கனப்படுத்துவதாகும். வேல்ஸ் நாட்டு எழுப்புதலின் காரணமாகப் பிறந்த (அல்லது மறுபடியும் பிறந்த) ''ஆவியில் பாடி சங்கீர்த்தனம் செய்வதும் மிகவும் அற்புதமானதோர் நடைமுறையாக தனிப்பட்டவர்களை அவர்களுடைய சொந்த ஆராதனை முறையால் ஆராதிக்கும்படியாக அனுமதிப்பதால் அவர்களை தேவனுடைய இருதயத்தை மெய்யாகவே தொடக் கூடியதாக இருக்கும். எதுவரைக்கும் என்றால் அதுவுங்கூட மற்றொரு சடங்காச்சாரமாக ஆகாத வரைக்கும்தான். அதுவும் யந்திரகதியாகும் பொழுது அதுவும் மற்றொரு பாரம்பரியத்தைப் போலவே அது எதிர்மாறான விளைவை உண்டாக்கக் கூடியதாகும். ஆனால் விசுவாசிகளை தங்களுடைய இருதயங்களில் உள்ளவைகளை கர்த்தருக்கென்று விடுதலையாகப் பாடி ஆராதிக்கும் பொழுது ஆவியோடும் உண்மையோடும் தொழுது ஆராதிக்கக் கூடிய மகத்தான கூறாகக் கூடும்.''
அதிகமான கூடி வரும் சபைகளுக்கு அவர்களுக்கு சிறிது ஒழுங்கையும் போகும் மார்க்கத்தையும் கொடுக்கக் கூடிய ஆராதனைத் தலைவர்கள் அவர்களுக்கு அவசியம். கர்த்தர் ஒவ்வொரு காரியத்திலும் தலைமைத்துவத்தை ஆராதனையிலுங்கூட பயன்படுத்துவதை தாவீதுடைய ஆசாரிப்புக் கூடாரத்திலும் பரலோகத்தைப் பற்றி வெளிப்படுத்துதல்களிலுங்கூட அதைப் பார்க்கிறோம். ஆனால் நாம் மெய்யான ஆராதனையைத் தொடவேண்டுமானால் அங்கு ஓர் இடத்திலிருந்து ஆராதனைத் தலைவர் வழியை விட்டு வெளியில் வர வேண்டும். ஏனென்றால் நமது கவனம் தலைவர் மீதே இருக்கும்பொழுது நாம் கர்த்தரை நமது இருதயங்களில் இருந்து மெய்யாகவே ஆராதனை செய்கிறவர்களாக தலைவரைப் பின்பற்றுகிறவர்களாய் இருப்பதால் அவ்வாறு ஆராதிக்கிறவர்களாக இருக்க மாட்டோம்.

ஒரு ஆராதனைத் தலைவரை உடைய பல கூடிவரும் சபைகளுக்குப் போயிருக்கிறேன். ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் முழுவதுமாக நடத்தப்படுவதாக உரிமை கொண்டாடுகிறார்கள். ஆனால் உண்மையான விஷயமாக அவர் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவதை விட முதிர்ச்சி அடையாத முரட்டாட்டமானவர்களால் நடத்தப்படுகிறார்கள். ஒரு கூடிவரும் சபையை விடுவிக்குமாறு இவ்வாறு காலத்துக்கு முன் எடுத்துக் கொள்கிற முயற்சியானது அழிவுக்கு ஏதுவாகும். ஆனாலும் நமக்கு அந்த மட்ட அளவுக்கு முதிர்ச்சி பெறுவதற்கான தரிசனத்தைப் பெற்றிருக்க வேண்டும். இந்த மெய்யான ஆராதனையானது கர்த்தருடைய வெளியரங்கமான பிரசன்னத்தை கொண்டு வரக் கூடிய ஒரு மைய அளவுண்டு. அதை மாமிசமோ அல்லது பிசாசோ அதற்குள் தங்களைக்

காட்டிக் கொள்வதற்கு தைரியம் போதாது. ஆனாலும் மாமிசமோ பிசாசோ காலா காலங்களில் உள்ளே வந்தாலும் அதற்காக அக்கினியே இல்லாவிட்டாலுங்கூட அச்சமயத்திற்குச் சமயம் காட்டு அக்கினி போன்ற அக்கினியைப் பெற்றிருப்பது நல்லது. என்னவெனில் அங்கே இருதயத்திலிருந்து வரும் கீழ்படிதலுக்கு ஆன சாத்திய கூறாக தேவன் மனிதனுக்கு தெரிந்து எடுத்துக் கொள்வதற்கென்று ஒன்றை கொடுக்க வேண்டியதிருந்தது.

தெரிந்து கொள்வதற்கான உரிமையான சுதந்திரம் எவ்வளவுக்கு அதிகமோ அதே மாதிரியான தவறுதலானதைத் தெரிவு செய்யும் சாத்தியக் கூறும் அதிகம் இருக்கும். அதற்கென்று தேவனுக்கான உண்மையான இருதயத்திலிருந்து வரும் கீழ்படிதலுக்கான சாத்தியக் கூறும் அதிகம் இருக்கும். நாம் அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகளையும், மதிற் சுவர்களையம், தடுப்புக்களையும், நமது ஊழியம் நிகழ்ச்சி நிரல்கள், தத்துவங்கள் இவற்றைச் சுற்றி நிறுத்தும் பொழுது அவைகள் கீழ்படியாமல் போகக் கூடாதவைகள். ஆகையால் நாம் ஆவிக்குரிய இயந்திர மனிதர்களை அதாவது அதைச் சொல்லவோ அல்லது அதன்படி செய்யக் கூடுமானவைகளாக இருந்தும் அவைகளின் இருதயத்திலிருந்து வருகிறவைகள் அல்ல. இது உண்மையான கிறிஸ்தவ மார்க்கத்தை உண்டு பண்ணுவதற்கு பதிலாக அதற்கு நேரான எதிர் விளைவுகளை உண்டாக்குவதற்கு நேரிடும்.

**ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால்**

''அந்த அப்போஸ்தலன் கற்பித்தபடி'', கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. (II கொரி 3:17) நாம் ஆவியினால் நடந்து போக வேண்டுமானால் அதற்கு விடுதலையும் இருக்க வேண்டும். நாம் ஒரு திட்டமான விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் நிலைநிறுத்தி கீழ்படிதலை வற்புறுத்த வேண்டுமானால் நாம் ஆவியில் நடக்கும் நமது திறமையை விலக்கிக் கொள்கிறோம். புதிய ஏற்பாடானது மற்றொரு பிரமாணமாக இருக்க வேண்டும் என்பதல்ல. அது நமக்காக வழிகாட்டி முறைகளை கொடுக்கும் படியாகவும் அதே நேரத்தில் அநேக பிரச்சகைளைக் குறித்தும் அதிலும் மிகவும் முக்கியமானவைகளைப் பற்றியும் நாம் நமாகவே கர்த்தரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளும் சுதந்திரத்தை விருத்தி செய்து கொள்ளவும் செய்கிறது. கர்த்தருடைய ஆடுகள் அவருடைய சத்தத்தை அறிந்திருக்க வேண்டும். மேலும் புதிய ஏற்பாட்டுச் சுதந்திரமானது நாம் ஒவ்வொருவரையும் அவரைத் தேடவும் நாமே அவரை அறிந்து கொள்ளவும் கட்டாயமாக ஆக்குகிறது. உதாரணமாக கர்த்தர் தம்முடைய திருச்சபையை தமது சொந்த மாதிரியிலே கட்டப்பட வேண்டும் என்பதில் மிகுந்த கரிசனையுடையவராய் இருக்கிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் திருச்சபை நிர்வாகத்தையும் அதன் அமைப்பையும் குறித்து வேண்டுமென்றே இருபொருள்படுவது மிகவும் வியப்புக்குரியதாகும். நாம் விரும்பியதை செய்யலாம் என்பதற்காக அப்படியல்ல. ஆனால் நாம் அவரைத் தேடியும் அவரிடமிருந்து கேட்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அப்படி இருக்கிறது. அங்கே சில முக்கியமான பொதுவான கோட்பாடுகளை திருச்சபை அமைப்பைக் குறித்தானதாக நாம் காணக் கிடைக்கப் பெறலாம். ஆனால் அவைகள் தாமே பொதுவானவைகளாக இருக்க வேண்டும் என்றும் அதனால் அவருடைய திருச்சபை கட்டுபவர்கள் அவரைத் தேடவும் அவரிடமிருந்து செவி கொடுக்கவும் வேண்டிய அவசியத்தை விருத்தி செய்யவும் அவ்வாறு இருக்கிறது. ஏனென்றால் அவரே தான் தமது வீட்டைக் கட்டி எழுப்புகிறவர் ஆவார்.

கர்த்தர் புதிய ஏற்பாட்டை நமக்குத் தந்திருப்பது நாம் ஜீவியம், திருச்சபை இவைகளுடன் நாம் எவ்வாறு அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளுகிறோம் என்பன போன்றவைகளைக் குறித்து பொதுவான வழிகாட்டு முறைகளையும் தெளிவாகக் கோடிட்டு காட்டவும். அதனால் நாம் வாழ்க்கைப் பாதையில் தங்கி நிலைத்திருந்து அதன்படி ஒத்துப் போகவும் பண்ணுகிறது. என்னவென்றாலும் இந்த வழிகாட்டி நெறிகள் அனைத்தும் பொதுவானவைகளாக இருக்கும்படி அனுமதித்து சுதந்திரமான விடுதலையை முன்னேற்றுவிக்கவும் உதவுகிறது. நாம் வரை முறையின்றி நடப்பதற்காகதல்ல. ஆனால் நாம் அவரைத் தேடுவதற்காகவும் மேலும் அவரது பரிசுத்த ஆவியைப் பின்பற்றி ''எல்லா சத்தியத்திற்குள்ளும்'' நடத்தப் படுத்தப்படும் படியாகவும் இருக்கிறது.

நம்மை விட்டு அவர் போன போது கர்த்தர் அவர் நமக்கென்று ஒரு புத்தகத்தை விட்டுப் போவதாகவும் அது நம்மை சகல சத்தியத்திற்குள் நடத்தும் என்றும் சொல்லவில்லை. அவர் நமக்கு விட்டுச் சென்ற விலையேறப் பெற்ற அந்த புத்தகத்திற்காக நன்றிக் கடன் உள்ளவர்களாக இருக்க

வேண்டும். ஆனால் அவர் அதை பரிசுத்த ஆவியானவரின் இடத்தையோ அல்லது நமது ஜீவியத்தில் அவரின் இடத்தையோ எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இருக்க வில்லை. அது கிரியை செய்யும் பொழுது அது தவறாக பயன்படுத்தப்படுவதுமன்றி அது ஒரு விக்கிரகமாகவும் ஆகி விடுகிறது.

கிறிஸ்தவம் என்பது முக்கியமாக கிறிஸ்துவுடன் ஏற்படும் உறவுத் தொடர்பாகும். அந்த உறவுத் தொடர்பு முக்கியமாகத் தகவல் பரிமாற்றம் தான். கர்த்தராகிய இயேசு தமது சோதனை காலத்தின் போது உறுதியாகக் கூறியபடியே ''மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.'' (மத் 4:4) நாம் முன்னால் குறித்துச் சொன்னபடியே இந்த வார்த்தை நிகழ்காலத்தில் ''புறப்படுகிறது'' புறப்பட்ட என்ற இறந்த கால வினைச் சொல்லாக அல்ல. அவர் முன்னொரு காலத்தில் சொன்னபடி நாம் ஜீவிப்பது போதுமானதாகாது. ஆனாலும் நாம் இன்றைக்கும் அவரிடமிருந்து கேட்டுக் கொண்டு இருக்க வேண்டும். இதனல் புதிய தத்துவ கோட்பாடுகள் ஸ்தாபிப்பது என்பது உட்கருத்தல்ல அல்லது வேதத்தின் நெறிமுறைகளை கூடுதலாக சேர்ப்பதற்காகவும் அல்ல. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக எப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருக்கிற தனிப்பட்ட உறவு தொடர்பாக நாம் அவரோடு கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இதுவே வனாந்தரத்தில் மன்னாவைப் பற்றிய பாடமாக இருந்தது. அது ஒவ்வொரு நாளும் புதிதாக சேகரிக்கப்பட வேண்டும். நாமுங்கூட ஒவ்வொரு நாளும் அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். ஏனென்றால் நாம் எல்லாரும் அவர் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தையினால் ஜீவிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். அது தொடர்ந்த ஒரு உறவுத் தொடர்பைப் பிரதிபலிக்கிறது. இந்த உறவுத் தொடர்பின் தன்மையானது தகவல் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. நமது விசுவாசத்தின் இயல்பும் நாம் அவருடன் கொண்டிருக்கம் தகவல் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. புதிய ஏற்பாடு இந்த சுதந்திரத்தை முன்னேற்றுவித்து அது நம்மை தகுதியாக்கி நாம் ஒவ்வொருவரையுமே இந்த தகவல் பரிமாற்றத்தை அபிவிருத்தியடையும் படி செய்கிறது.

உண்மையான உறவுத் தொடர்புக்கு சுதந்திரம் என்பது முன் அவசியமானதாகும். ஒரு மனிதன் தன் மனைவியுடன் உறவுகளைக் கட்டாயமாகப் படுத்தினால் அது கற்பழிப்பு ஆகும். அன்பு அல்ல. கர்த்தர் தம்முடைய மணமகளை அதாவது திருச்சபையை கற்பழிப்புச் செய்ய மாட்டார். ஆனால் அவர் அவளுடன் காதல் அன்பு காட்டுவார். அதாவது அன்பினால் ஒப்படைப்புச் செய்யும் வாஞ்சை அவளுக்குள் உண்டாகக் காரணமாவார். நமக்கு பொல்லாப்புச் செய்பவனே நம்மைக் கட்டாயப்படுத்தி அழுத்தம் கொடுத்து கீழ்படிதலுக்கும் ஒப்படைப்புச் செய்வதற்கும் ஆளாக்குகிறான். அப்படிப்பட்ட போக்கு ஒருக்காலும் நீதியாகுதலை கொண்டு வர முடியாது. அந்த நீதியாகுதல் ஒன்று தான் இருதயத்திலிருந்து வரக் கூடும். திறமையாகக் கையாளுதல், பயமுண்டாக்குதல் மேலும் கட்டுப்பாடு ஆகியவை மெய்ம்மையின் ஆவியில் இருந்து வருவதில்லை. ஆனால் அவைகள் அனைத்தும் தீய ஆவிகளாக மனிதரை சத்தியத்திலிருந்து துரத்தி விட்டு அவர்களைக் கொண்டு போய் அந்தகார இருளுக்குள் கட்டி வைக்க முயற்சிக்கிறது.

# அதிகாரம் 7 - நவீன கால பரிசேயர்கள்

மத சீர்திருத்த காலத்தின் ஆவிக்குரிய போர்க் களங்களின் பெரிதான ஒன்றாவது பொது ஜனங்களின் கைக்கு எட்டாமலே சத்திய வேதத்தை வைத்திருப்பது சாத்தானுடைய முயற்சியாகும். இன்றும் இந்த போர் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. ஏனென்றால் பொது ஜனங்கள் கர்த்தரின் வார்த்தையைப் பெற்றுக் கொள்ளும் பொழுது புரட்சி தொடங்கி விட்டதென்றும் இந்த பொல்லாத காலத்தின் அதிபதியாக இருந்தவன் கீழே தள்ளப்படும் படியாக இருக்கிறான் என்பதை நன்கு அறிவான். இந்தக் காரணத்திற்காகவே கர்த்தர் சாட்சியாக அவர் தாமே மெய்யான மேசியா என்றும் ''ஏழைகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும்'' என்று கூறினார்.

கர்த்தர் ஏழைகளை நேசிக்கிறார். ஆனால் இதற்கும் ஒரு வியூக யுக்தியான முக்கியத்துவம் உண்டு. தற்காலத்து ஆளுநர்களும் ஆவிக்குரிய ஆளுநர்களுங்கூட வழக்கமாக மிகவும் சௌகரியமாகவும் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளை மிகவும் பாதுகாப்பாகவும் வைத்துக் கொண்டு தேவனுடைய வார்த்தைக்குப் பிரதியுத்தரமாக ஜீவ தண்ணீரை விடுவிக்குமாறு தேவையான

தீவிரவாத கீழ்படிதலுடன் செயல்படுகிறார்கள். இந்த ஜீவ தண்ணீரில், இருந்து தான் திருத்தம் பெருகி ஓடுகிறது. உண்மையான சீர்திருத்த ஒரு புரட்சியாகும். அது மாற்றத்தைக் கொண்டு வருகிறது. சௌகரியமாக இருப்பவர்கள் மாறுதல்களை எதிர்ப்பார்கள்.

பொது ஜனங்களின் கைக்கு இட்டாமல் தேவனுடைய வார்த்தையை வைத்திருக்கும் போரானது இஸ்ரவேல் தேசத்தில் நமது கர்த்தர் தாமே பூமியில் இருந்த காலத்தில் கூட நீடித்து கொண்டிருந்தது. ஆர்வம் உண்டாக்கக் கூடியவாறு வேதத்தை நேசித்து அதைக் கனப்படுத்திய பரிசேயர்கள் அந்த காலத்து எந்த வகையான பிரிவினர்களைக் காட்டிலும் அந்த சத்துருவின் சேனைத் தளவாடங்களாக அந்த போரில் செயல்பட்டனர். இந்த விதமான பக்தியின் காரணமாக பல நூற்றாண்டு காலங்களாக கையாளப்பட்ட நகல் எடுப்பதும் மறு நகல் எடுப்பதுமான செயல்களால் வேதாகமத்தின் உத்தமத்துவத்தைப் பாதுகாக்கும் முக்கியமான பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக வேதத்தை நேசிக்கும் ஒவ்வொரு பிரியர்களும் அவர்களுக்கு அதிகம் நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். இந்த வேதத்தைப் புரட்டர்களிடமிருந்து பாதுகாக்கும் வைராக்கிய பக்தியில் பரிசேயர்கள் தங்களது சொந்தமான அந்த நியாயமான வசனத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதை விட தங்கள் சொந்தமான பாரம் பரியத்தை அடிப்படையாகக் கொண்ட வேத வியாக்கியானத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள்.

இந்தப் பாரம்பரியமானது அவர்களைக் காணாமல் தப்பவிட்டு சித்திரவதையுங்கூட செய்யக் காரணமாகி அந்த ஒருவரையே வசனத்தின் தத்ரூப உருவகமான வரை அவ்வாறு செய்யும்படி செய்தது. இன்று கிறிஸ்தவத்திற்குள் தீவிர பழமை விரும்பிகளின் முகாம்கள் நிறைந்து அதே முகாம்களில் நவீன பரிசேயர்கள் அவர்களுடைய ஆவிக்குரிய முன்னோடிகள் செய்த முக்கியமான அதே காரியங்களைச் செய்தும் வேதத்தை புரட்டுதலில் இருந்து பாதுகாக்க விரும்பும் பக்தி வைராக்கியத்தில் அவர்கள் எதிர் செயலான வியாக்கியானத் திட்டத்தை நிலை நிறுத்துகிறார்கள். இந்த திட்டமானது உண்மையிலே வேதத்தை தப்பாக அர்த்தம் பண்ணுகிறவர்கள் அநேகருடைய புரட்டுதலில் இருந்து பாதுகாக்கிறது. ஆனாலும் அதே சமயத்தில் தீவிரமாக சத்தியத்திற்கு கீழ்படிகிறவர்கள் அதைப் பெற்றுக் கொள்வதிலிருந்து தடை செய்யப்படுமாறு கிரியை செய்கிறது. சத்தியத்தை நேசிக்கிறவர்கள் ஒவ்வொருவரும் பிழையற்ற சரியான தத்துவ கோட்பாடுகளையே விரும்புகின்றனர். என்னவென்றாலும் நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும் பொழுது நாம் எவ்வளவு சரியாக நமது கோட்பாடுகள் இருந்தது என்பதற்காக அல்ல, அதை விட நமது கிரியைகளால் நாம் நியாயம் தீர்க்கப்படுவோம். பிழையற்ற கோட்பாடு என்பது தன்னில் தானே முடிவல்ல. நாம் கிறிஸ்துவின் சாயலாக நம்மைத் தானே நேருக்கு நேர் எதிர் கொள்வதற்கான வழியாக நம்மை சற்று நன்றாக அவரில் தங்கி நிலைத்திருக்கச் செய்கிறது. பிழையற்ற கோட்பாடுகள் நாம் தேவனுக்குக் கீழ்படிந்திருக்கும் படியாக நம்மை தேவனுடைய சித்தத்தை நன்றாகத் தீர்மானிக்கும் படியாக உதவுகிறது. ஆனாலும் நாம் வேதாகமத்தை மனனஞ் செய்திருந்த போதிலும் நாம் இன்னும் சத்தியத்தை அறிந்திருக்க மாட்டோம். ஏனென்றால் சத்தியம் என்பது ஒரு தனித்தன்மை பெற்றது பரிசேயர் வேதத்தில் பிரியமாய் இருந்தார்கள். ஆனால் இன்றும் அநேகர் இதே வஞ்சனையான கண்ணியில் வேட்டை பொருளாக விழுந்து விடுகின்றனர். நாம் தேவனுடைய வசனத்தில் பிரியமாய் இராமல் அவரிடத்தில் பிரியமாய் இருக்க முடியாது. ஆனாலும் நாம் எழுதப்பட்ட வார்த்தைகளை அவருக்கு மேலாக உயர்த்தி வேதத்திலிருந்து ஒரு விக்கிரகத்தை உண்டாக்கி தேவனுடன் நமக்கு இருக்கும் உறவுத் தொடர்புக்குப் பதிலாக வைத்துக் கொண்டு, திருச்சபையிலிருந்து பரிசுத்த ஆவியானவரை நீக்கி விட முடியும்.

அநேக விசுவாசிகள் எழுதப்பட்ட வசனங்களை அதிகமாகக் கனப்படுத்தும் அபாயத்துக்குள்ளாகவில்லை. ஆனால் அதை விட கொஞ்சங்கூட கனப்படுத்தாமல் அந்த விலையேறப் பெற்ற வெகுமதியை கர்த்தரிடமிருந்து அவருடைய ஜனங்களுக்கு வருவதைப் புறக்கணிக்கிறோம். என்னவென்றாலும் இந்த புறக்கணித்தலின் பெரும் பகுதியானது மதக் குருக்களான வல்லுநர்களால் உண்டாக்கப்பட்டு அவர்களால் அந்த தவறைப் பற்றிய அச்சத்தை பகிர்ந்தளித்ததால் அநேகக் கிறிஸ்தவர்கள் சத்தியத்தை ஆராய்வதற்கு பயப்படுகிறார்கள். அதே சமயத்தில் அநேக கிறிஸ்தவர்களின் தலைவர்கள் ஜீவ வார்த்தைக்கு மேலாக எழுதப்பட்ட வசனத்தைக் கனப்படுத்தியும் புத்தகமான கர்த்தரையே புத்தகத்தின் கர்த்தருக்கு பதிலாக வைத்து ஆராதிக்கிறார்கள். அதனால் இது புதிய ஏற்பாட்டை மற்றொரு பிரமாணப் புத்தகமாக உண்டாக்குவதற்குக் காரணமாகிறது.

அந்த பரிசேயர்களைப் போலவே வேதத்தை அதீதமாக நேசிக்கும் பிரியர்கள் தாமே வார்த்தையான அவருக்கு மிகப் பெரிய சத்துரு ஆவார்கள். வெளிப்படையாக வேதாகமத்தின் உத்தமத்துவத்தைப் பாதுகாப்பவர்கள் தான். சத்தியத்திற்கு மிகப் பெரிய சத்துருவாய் இருக்கிறார்கள். இந்த நவீன பரிசேயர்கள் பயம், பயமுறுத்தப்படுதல் ஆகிய சத்தியத்தின் பிரதான சத்துருக்களாக தங்கள் முன்னோர் செய்தபடியே அப்படியே இருக்கிறார்கள். பயத்தால் கட்டுப்பாடு செய்யப்படுகிறவர்கள் பயமுறுத்துதல் மூலமாக அவர்களால் கட்டுப்படுத்தக் கூடாதவர்களாலே அதிகமாக மிரட்டப்படுவார்கள்.

தேவனை தங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறவர்கள் தாங்கள் விசுவாசிக்கும் அந்த ஒருவரை கண்டு அறிவார்கள். நாம் தேவனால் அறியப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் தெரிந்திருப்போமானால் மற்ற யாராவது ஒருவர் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி வெளிப்படையாக கரிசனையாக இருக்க மாட்டோம். ஆகையால் உலகத்திலுள்ள எவராலும் நாம் மிரட்டப்படவோ பயமுறுத்தப்படவோ மாட்டோம். இந்த மாதிரியான சட்ட திட்டத்தை உடையவர்கள் எது சரி என்பதை எந்த விதமான அரசியல் தாக்கமுமின்றி தெரிவு செய்து கொள்வார்கள்.

**பொய்யான சகோதரர்கள்**

இயேசு பாவிகளிடம் சகிப்புடன் இருந்தார். ஆனால் அவர் பரிசேயர்களையோ, சட்ட நிபுணர்களையோ சிறிதேனும் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தானும் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க மாட்டார்கள். மற்றவர்களையும் பிரவேசிக்கும்படியாக விடவும் மாட்டார்கள். நவீன கால பரிசேயர்கள் அவர்களுடைய வேத வியாக்கியான தத்துவ கோட்பாடுகளிலிருந்து பிரிந்து விலகிப் போகிறவர்களை சத்துருக்களாகப் பார்ப்பார்கள். மேலும் பொய்யான போதகர்களாகவும் கள்ளத் தீர்க்கதரிசிகளாகவும் கருதுவார்கள். உண்மையாகவே ஆங்காங்கு சில கள்ளப் போதகர்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் இருப்பார்கள். என்னவென்றாலும் அப். பவுலின் வியாக்கியானத்தின்படி கள்ள சகோதரர்கள் என்பவர்கள் இன்றைய நாட்களில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுவதை விட முற்றிலும் வித்தியாசமானவர்கள். ‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவு பார்த்து நம்மை அடிமைகளாக்கும் பொருட்டாக பக்க வழியாய் நுழைந்த கள்ள சகோதரர்கள் நிமித்தம் அப்படி ஆயிற்று’’ என்று பவுல் எச்சரிக்கை செய்கிறார். (கலா 2:4) பயத்தையும் பயமுறுத்துதலையும் உபயோகித்து பிறரை தங்களுடைய கொள்கைகளுக்கு ஒத்துப் போகும்படி அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நினைப்பவர்களை அடிக்கடி கள்ளப் போதகர் என்று வரிசைப்படுத்தப்பட்டு வெகு உக்கிரமாக அவர்களால் தாக்கப்படுகிறவர்களை விட அவர்களை அந்த பாகுபாட்டில் வைக்க வேண்டும்.

**வசன வியாக்கியானம் சார்ந்த பிரச்சனைகள்**

இந்த வசன வியாக்கியான திட்டங்களில் பெரும்பாலானவை கள்ள உபதேசங்களையும் தவறுகளையும் தவிர்க்கும் முயற்சியான மேன்மையான நோக்கத்தைக் கொண்டதாகும். மேலும் ஒரு விசுவாசியை தேவனுடன் தனக்குச் சொந்தமான உறவுத் தொடர்பை உண்டாக்கிக் கொண்டு அவரை ஆவியிலும் உண்மையோடும் ஆராதிப்பதற்கு தேவையாகிற சுயாதீனத்தை அழித்து விடுவதையும் தடை செய்கிறது. துர்அதிர்ஷ்டவசமாக அந்த நிவாரணங்களில் பல வகைகளான அதிகமானவை வியாதிகளை விட அதிகம் தீங்கு விளைவிப்பதாக அவைகள் எதற்கு நிவாரணமாக செய்யப்பட்டதோ அதைவிட மோசமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இது சரியான விருத்தியான முன்னேற்றத்திற்கு விரோதமானதல்ல. மேலும் ஹெர்மிநியூட்டிக்ஸ் (அ) வசன வியாக்கியான முறையானது சாதாரணமான வியாக்கியான முறையாகும். என்னவென்றாலும் தனிப்பட்ட நபர்கள் அவர்களாகவே தேவனிடமிருந்து படிக்க, புரிந்து கொள்ள சிந்திக்க, செவி கொடுத்து கேட்டுக் கொள்ளுதல் ஆகிய திறமையை விருத்தி செய்வதைத் தடை செய்வதற்கு ஒரு எச்சரிக்கையாகும்.

கத்தோலிக்கரும் பழமை விரும்பும் புராட்டஸ்டாண்டு வசன வியாக்கியான பிரிவினரும் ஜனங்களை பயத்துடனும் தேவனிடம் நடத்தி செல்வதை விட அந்த பயமான நுகத்தில் பூட்டி இணைத்து விட்ட குற்றத்திற்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு முன்பு இருந்த பரிசேயர்களைப் போலவே பழமை விரும்பும் பங்கு பிரிவுகளின் தலைவர்கள் தடுப்புகளை ஏற்படுத்தி தனி நபர்களை வேதத்திலிருந்து புதிய வெளிப்பாடுகளையும் வியாக்கியானங்களையும் பெறுவதிலிருந்து தடை செய்கிறார்கள். உண்மையாகவே இந்த ஒரே வார்த்தையான ‘‘புதிய வெளிப்பாடு’’ என்பதை அவர்கள் வழக்கமாக

சபித்துக் கொண்டு வேதத்திற்கு மேலும் கூடுதலானவற்றைச் சேர்ப்பதாக மனிதர்களை பழிசாற்றுகிறார்கள். ஆனால் இது இப்பொழுது அப்படி என்று ஒன்றும் ஆகவில்லை. இந்த அவசியமான புதிய வெளிப்பாடானது வேதத்தை அதிகரித்துக் கொண்டதும் அல்லது ஆழமான புரிந்து கொள்ளுதலுமாகும். வேதத்திலிருந்து புதிய வெளிப்பாடுகளுக்கு மிகுந்த பலமாக எதிர் செயல்பாடு செய்கிறவர்கள் இவைகளில் ஒன்றான எல்லாவற்றை விடவும் இந்த பயங்கரமானதோர் உத்தேசத்தால் தவறு இழைக்கிறார்கள். அதாவது அங்கே தெரிந்து கொள்ள வேண்டியவைகளை ஏற்கனவே அவர்கள் அறிந்திருப்பதாகக் கொண்டிருக்கும் அந்த நம்பிக்கையே.

வசன வியாக்கியான கோட்பாடுகளில் மிகவும் வியக்கத்தக்க சில கோட்பாடுகள் எந்த ஒரு நேர்மையான சத்தியத்தை வாஞ்சிக்கும் பக்தரை நித்திய ஜீவனுக்கென்று நடத்திச் செல்லும் பாதையில் நிலைநிற்பதற்கு உதவியாக இருக்கக் கூடும். துர்அதிர்ஷ்டவசமாக இவை அனைத்தும் மேலும் பல கோட்பாடுகள் அதாவது அவசியமில்லாத தத்துவங்களால் முன் தீர்மானிக்கப்பட்ட வியாக்கியானங்களைப் பாதுகாக்கும்படியாக நிர்மானிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அவசியமில்லாத தத்துவ கோட்பாடுகள் ஒருவருடைய விஸ்தாரம், தரிசனம், ஏறக்குறைய சகல வேதாகமத்து போதனைகளைப் பற்றிய இந்த மேற்கூறிய திறன்பாடுகளைக் கொண்டு மட்டுப்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றன.

நாம் தற்போது வேதத்திலிருந்து புரிந்து கொள்வதை விட மிக அதிகமாக வேதத்திலிருந்து புரிந்து கொள்ள வேண்டியது அதிகமாக இருக்கின்றது என்பது கண்கூடு. பழமை விரும்பும் வசன வியாக்கியான கோட்பாடுகளில் சில அம்சங்கள் தடை செய்கின்றது அல்லது மிகக் குறைவாகவும் அதீதமான ஊக்கத்தை மேற்கொண்டு வேதத்திலிருந்து ஆராய்ச்சியையும் புரிந்து கொள்வதிலும் இருந்து இழந்து விடச் செய்கிறது. இது ஒரு அபாயகரமானதும் நாசத்தையும் விளைவிக்கக் கூடிய தவறாகும். திருச்சபையானது அதனுடைய சகல தத்துவ போதனை முகாம்களோடும் பழமொழியான குருடரான மனிதர்களையும் யானையையும் பற்றியே கதை போன்றதாகிறது. யானையின் காலைத் தடவிப் பார்த்தவனுக்கு யானை மரத்தைப் போல தோன்றியது. வாலைத் தடவி கண்டுபிடித்தவனுக்கு அது நகைப்புக்குரியதாக ஒரு கயிறு போல காட்சி அளித்தது. அதன் காதை தடவிப் பார்த்தவன் மற்ற இருவரும் தவறாகக் கணித்து விட்டார்கள். அது ஒரு பெரிய இலையைப் போல தோன்றியது. அவர்கள் அனைவருமே பகுதி பகுதியாக சரியாகப் பார்த்தார்கள். ஆனால் முழுவதிலும் தவறாக கண்டுபிடித்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு அவர்கள் புரிந்து கொண்டதை ஒருங்கிணைத்துப் பார்க்கும் வரைக்கும் அவர்கள் யானை இன்னதென்பதை அடையாளங் காண முடியவில்லை.

அந்த விவேகியான சங்கீதக்காரன் பலர் அறியக் கூறியதாவது ‘‘உம்முடைய வசனம் சகலமும் சத்தியம்.’’ (சங் 119:160) என்பதாகும். நம் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு பகுதி உண்மையாக இருக்கலாம். ஆனால் அது கிறிஸ்துவின் சரீரத்தின் பிற பகுதிகளோடு சரியாக ஒருங்கிணைத்துப் பொருத்தப்பட்டால் அன்றி அது முழுவதுமான உண்மையாகாது. பல திறப்பட்ட முகாம்களில் இருந்து பெறப்படும் கிறிஸ்தவ வியாக்கியானமானது நன்றாகப் புரிந்து கொள்ளப்பட்டும் விவாத பரிமாற்றம் செய்யப்படுவது நம்மை தவறானவற்றில் தடுக்கி விழவிடாமல் நல்லதை நாம் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கக் கூடும். உண்மையான ஆவியை அறிந்து கொண்டவர்கள் அந்த ஆவியானவருக்குள் இந்த விசுவாசத்தைக் கொண்டு இதைச் செய்ய முடியும். துர் அதிர்ஷ்ட வசமாக பயத்தினால் அதிகமாக கட்டுண்டவர்கள் இந்த வியாக்கின தேவையை அதிகமாக உடையவர்களாக சத்தியத்திற்குள் அவர்களை வழி நடத்தும் படியாக பரிசுத்த ஆவியில் அபூர்வமாக நம்பிக்கையைக் கொண்டிருப்பார்கள். கட்டுப்பாட்டு (அடிமைத்தன) ஆவியால் கட்டுண்டவர்கள் தங்களை வஞ்சிக்கும் படியாக சாத்தானிடத்தில் அதிகமாக நம்பிக்கைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தில் அவர்களை நடத்திச் செல்வதில் விசுவாசம் கொள்வதை விட, அவ்வாறு சாத்தானிடம் நம்பிக்கை கொண்டிருப்பார்கள்.

ஏதோ ஒன்றை பகீரங்கமாகக் கூறுவது வேதாகமத்தின் படியானது அல்ல ஏனென்றால் அது வேதாகமத்தில் காணப்படவில்லை என்பது வேதாகமத்தை தவறாகப் பொருத்திக் காட்டுவதாகும். வேதாகமத்து சத்தியங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பது. எதற்காகவென்றால் எவை எல்லாம் குறிப்பாகத் தடை செய்யப்படவில்லையோ அவற்றை நாம் சுதந்திரத்துடன் செய்வதற்காகவும், அவைகளில் குறிப்பிடபடாதவைகளில் ஏதோன்றையும் நாம் செய்து விடாதிருக்கவுமே. புதிய

ஏற்பாட்டில் எது குறிப்பாகத் தடை செய்யப்படவில்லையோ அதைச் செய்வதற்கு நாம் சுயாதீனத்தைக் கொடுத்து விட வேண்டும். பிறகே நாம் அதனால் உண்டாகும் கனியை தேவனிடமிருந்து வந்ததா? அல்லவா? என்பதை தீர்ப்புச் செய்ய வேண்டும். இந்த சுதந்திரமானது நாம் செய்வது ஒவ்வொன்றும் சரியானது என்று அர்த்தமாகாது. ஆனால் அது இந்தக் காரியங்களில் தேவனுடைய சித்தத்திற்காகவும் தீர்ப்புக்காகவும் தனித்தனியாக காத்திருக்க வேண்டும் என்று சாதாரணமாக அர்த்தம் கொடுக்கும். கர்த்தர் தாமே நாம் நமது சொந்தமாக தீர்ப்பு செய்வதை பயன்படுத்துகிறோமா அல்லது அதை விட அந்தக் காரியத்தில் அவரிடம் கேட்கிறோமா? என்று கர்த்தர் பார்க்கும் நேரங்களும் உண்டு. நாம் முதிர்ச்சி அடையும்பொழுது அநேகமாக எல்லா நேரங்களிலும் நமது தீர்க்காலோசனையை உபயோகிப்பதையே தேவன் அனுமதிப்பார். எனது மகளைப் பார்த்து அவளுடைய சிநேகிதிகளில் ஒருத்திக்கு சாட்சி சொல் என்று சொன்னபொழுது அவள் அவ்வாறு செய்தாலும் அது என்னை ஒரு அளவுக்கு திருப்திபடுத்தும். ஆனால் அவள் தனது சொந்த விருப்பத்தில் அதைச் செய்தது என்று ஏறக்குறைய அந்த அளவுக்கு வர முடியாது.

முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர் குழு கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போகப்படவில்லை. தேவனாலே அவர்கள் அனுப்பப்பட்டனர். அவருடைய சிந்தனையை அவர்கள் பெற்றிருந்ததால் அவர்கள் அதிகமான நேரங்களில் தங்களது தீர்க்காலோசனையையே பயன்படுத்தினார்கள். கர்த்தர் அவர்களுக்காக விசேஷமான ஆலோசனையோ அல்லது ஆலோசனையில் மாற்றத்தையோ கொடுக்கும்படியாகத் தேவையாய் இருந்த பொழுது அவர் அவர்களுக்கு ஒரு சொப்பனத்தையோ தரிசனத்தையோ அல்லது தீர்க்கதரிசன வார்த்தையையோ கொடுத்தார். ஆனால் வேதத்தின்படி சாட்சியாகத் தந்தார். அது உண்மையிலே வெகு அரிதானதாகும். கர்த்தர் தமது மக்கள் எல்லோரையும் அவருடைய சத்தத்தை அறிந்து கொண்டு அவருடன் தனிப்பட்ட முறையில் நெருக்கமாகவும் ஒரு உறவு தொடர்பை வைத்துக் கொள்ளும்படியாக விரும்புகிறார். எல்லா உறவுத் தொடர்புகளும் தகவல் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் எல்லா தகவல்களும் விரிவான பொதுக்கட்டளைகள் அல்ல. அநேக மக்கள் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு அடிமையாகி விடுகின்றனர். அது தீர்க்கதரிசன வார்த்தைகளை சோக முடிவான துர்பிரயோகத்திற்கு வழி நடத்துகிறது. என்னுடைய தத்தி தடுமாறி நடக்கும் பாலகனுக்கு எப்பொழுதும் குறிப்பிட்ட தொடர்ந்து வழி காட்டுதல் தேவை. அதற்கு மேல் ஒன்றும் அவசியமில்லை. ஆனால் அது என்னுடைய பத்து வயது குழந்தை விஷயத்தில் உண்மையாகாது. நாம் முதிர்ச்சி அடைய அடைய நமக்குக் குறைந்த வழி நடத்துதல் மட்டும் போதுமானது. அதற்கு மேல் ஒன்றும் தேவையில்லை. ஒவ்வொரு சிறிய தீர்மானத்திற்கும் கர்த்தரிடமிருந்தே கேட்க வேண்டும் என்பது அது முதிர்ச்சி பெறாததற்கு அடையாளமாகும். அது முதிர்ச்சி அல்ல. தீர்க்கதரிசிகள் குருக்களாக இருக்க வேண்டியதில்லை. மேலும் வேதங்கூட ஜாதகமாக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கல்ல. அப்படியுங்கூட, விசுவாசிகளுக்கு கர்த்தரைப் பற்றித் தாங்களே அறிந்து கொள்ள சுதந்திரம் அவசியமானாலும் அது போலவே தங்களுடைய சொந்த உறவுத் தொடர்புகளை அவருடன் விருத்தி செய்து கொள்ளவும். கர்த்தருடைய சத்தத்தை அறிந்து கொள்ளவும் சுதந்திரம் அவசியமானாலும் அவர்களுக்குத் தங்கள் சொந்த தவறுகளை அவர்கள் செல்லும் வழியில் செய்து கொள்ளவும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒவ்வொரு தத்துவ கோட்பாடுகளைக் குறித்தும் எல்லோரும் ஒன்று போல ஒருமனமாக நம்பும்படி செய்வது அவருக்கு இயல்பாகவே சிறிய காரியமாகும். ஆனால் உண்மையான ஒருமனப்பாடு ஆனது ஒருமனப்பாடு ஆகாதபடியிருக்க தெரிவு செய்யப்படாவிட்டால் அதை ஒருக்காலும் அடைய முடியாது. ஆவிக்குரிய ஐக்கியமானது ஒரே விதமான தத்துவ கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஆனால் அது முதலாவதாக தேவனுக்காக கொண்டிருக்கும் அன்பிலும் பின் மற்றவர்களுக்காக ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் அன்பிலும் அடிப்படையாகக் கொண்டது.

தேவனுடைய திட்டத்தின்படி நாம் தற்காலத்தில் ஒரு கண்ணாடி வழியாக இருட்டாகவே பார்க்கிறோம். ஒவ்வொருவரும் ஒரு முழுப் படத்தின் ஒரு பாகத்தையே பார்க்கக்கூடியவர்களாக இருக்கிறோம். நாம் நம்முடைய பாகங்களை ஒருங்கே இணைத்துப் பார்க்கக் கற்றுக் கொள்ளும் வரைக்கும் நாம் முழுச் சித்திரத்தையுமே பார்க்க முடியாது. தேவனுடைய ஒருமைப்பாடு என்பது ஐக்கியத்தில் ஒத்திருப்பது அல்ல பல வேற்றுமையான பாகங்களின் ஒற்றுமையாகும். உண்மையான இருதயத்தின்

விசுவாசமாவது மிகவும் வேற்றுமையுடையவர்களுக்காக சகிப்புத் தன்மையுடையவார்களால் சாட்சியாக்கப்படுகிறது. இருதயத்திலே உண்மையான ஒற்றுமையிருக்க வேண்டுமானால் இந்த சாட்சி மிகவும் அவசியமாகும்.

**ஒவ்வொருவரும் தங்களுக்கு சொந்தமாக மன்னாவை சேகரிக்க வேண்டும்.**
இஸ்ரவேல் புத்திரருக்கு வானத்திலிருந்து மன்னா கொடுக்கப்பட்ட பொழுது ஒவ்வொரு வீட்டாரும் தங்களுக்குச் சொந்தமாக மன்னாவை சேர்க்க வேண்டியதிருந்தது. பரலோக மன்னாவைச் சேகரிப்பதற்கும் இந்த உண்மை பொருந்தும். நமது ஆவிக்குரிய ஆகாரத்திற்காக தலைவர்களை மட்டும் நாம் சார்ந்திருக்கக் கூடாது. தேவனுடைய வார்த்தையை ஊழியம் செய்வதற்காக தங்களை ஒப்புக் கொடுத்துள்ள தலைவர்களையும் போதகர்களையும் இது குறைவாக மதிப்பது என்பதல்ல, இஸ்ரவேல் சபையினருக்கு ஊழியம் செய்வதற்காக லேவியர் இன்றியமையாது இருந்தது போலவே இன்றைக்கும் தலைவர்கள் இன்றியமையாதவர்களாக ஆவார்கள். ஆனால் தலைவர் தனிப்பட்ட நபருடைய கடமையையோ அல்லது தனிப்பட்ட் வீட்டாருடைய கடமையையோ ஏற்றுக் கொள்ள முடியாது. தேவனுடைய வசன ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுத்தவர்களால் தரப்படும் பொதுவான போதனைக்கும், ஒவ்வொரு வீட்டாரும் தங்களுக்காக சேகரித்துக் கொள்ள வேண்டிய பரலோகத்து அனுதின அப்பத்திற்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது.

ஒரு பயிற்சி பெறாத மனிதன் தவறுதலுக்கோ அல்லது கள்ள உபதேசத்திற்குள்ளோ விழுந்து விடாமல் எப்படி வானத்திலிருந்து புதிய வார்த்தையைப் பெற்றுக் கொள்ளும் படியாக சத்திய வேதத்தை எப்படி அணுக முடியும்? மனிதனுக்கு எழுதப்பட்ட தேவ வார்த்தைகள் முதலாவதாகக் கொடுக்கப்பட்ட நாலாயிரம் ஆண்டு காலமாக தேவனுடைய ஜனங்கள் சந்தித்த மிகவும் முக்கியமான விவாதங்களில் இதுவும் ஒன்றாகும். கிறிஸ்தவத்தின் மகா பெரிய போராட்டங்களில் ஒன்று சாதாரண மக்களுக்கு வேதத்தை கிட்டி அணுகும்படி செய்து அந்த சத்தியத்தைத் தாங்களாகவே வியாக்கியானம் செய்வதற்கான சுதந்திரத்திற்காகவே நடந்தது. அங்கே ஒரு தேவாதி தேவன் பல பொருள் பெற்றவராக (ஒன்றுக்கு மேற்பட்ட பல அர்த்தங்கள்) அர்ப்பணிக்கப்பட்டவராக வேதாகமத்தின் வியாக்கியானத்திற்காக ஒரு முழுமையான பிரமாணமோ அல்லது நடைமுறையோ ஸ்தாபிக்கப்படுவதற்கு தடை செய்கிறவராக இருக்கிறார். இந்த விதமான பல பொருள் விளக்கமானது பரிசுத்த ஆவியானவர் சத்தியத்திற்குள் நம்மை நடத்தும்படியாக நாம் அவர் பால் சார்ந்திருப்பதற்காகத் திட்டமிடப்பட்டது. வேதத்தைத் தாங்களாகவே வியாக்கியானம் செய்யக் கூடிய ஒரு நடைமுறையையோ அல்லது கோட்பாட்டையே உண்டாக்கிக் கொள்ளக் கூடும் என்று மனிதர்கள் உத்தேசம் செய்வது தன்னில் தானே தோன்றும் ஆழமான மனிதக் குலத்து அகந்தையாகும். அந்த வகையான கோட்பாடுகள் இந்த வியாக்கியானம் செய்யும் பாரத்தை ஒரு விஞ்ஞானத்தின் மேலாக பரிசுத்த ஆவியின் இடத்தில் அதற்கு பதிலாக சுமத்தி விடுகிறது. இதுவும் தன்னில் தானே உண்மையான கிறிஸ்தவத்தின் இயல்பிலிருந்து தனியாக அப்பால் விலகி விடுவதாகும். அதாவது தேவனுடன் கொண்டுள்ள உறவுத் தொடர்பிலிருந்து அப்பால் போவதாகும். இந்த மாதிரியான காரியங்கள் நேரிடக் கூடுமானால் அது ஏன் வேதத்தில் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. மேலும் ஏன் வேதாகமத்தை எழுதிய ஆசிரியர்கள் அவர்களாகவே இந்த கோட்பாடுகளை விட்டு அடிக்கடி விலகிப் போனார்கள். நிச்சயமாகவே வேதத்தின் சத்தியங்களைத் தேடும் அறை கூவலில் உதவி செய்கிற சில கோட்பாடுகள் இருக்கின்றன. ஆனால் வேத வியாக்கியானத்திற்கென்று முழுவதுமான முழுமையான பிரமாணங்களோ அல்லது வியாக்கியான முறைகளோ கிடையாது. நமது சொந்த விஞ்ஞான ஞானத்தை பரிசுத்த ஆவியானவருக்கு பதிலாக பிரதியாக நாம் உத்தேசம் செய்யும்பொழுது நாம் அந்த செயல்பாட்டாலே அபாயகரமான தவறுக்குள் வீழ்ச்சி அடைந்து விடுகிறோம்.

வேதத்தில் பல முரண்பாடு போல தோன்றும் மெய்யுரைகள் இருக்கின்றன. ஏனென்றால் சத்தியமானது இந்த எல்லை மீறிய விளிம்புகளுக்கிடையே ஏற்படும் மனோ உணர்ச்சிகளின் சோர்வுகளால் அதற்குள்ளாகவே காணக் கிடக்கின்றது. பரிசுத்த ஆவியானவரால் மாத்திரமே இந்த விதமான சத்தியத்தை நாம் கண்டுணரக் கூடியதாகச் செய்து இந்த வழியை விட்டு விலகித் தவறிப் போகச் செய்யும். அந்த எல்லைகளின் விளிம்புகளுக்கிடையே நம்மை சமநிலையில் வைக்கிறது. வேதத்தை வியாக்கியானம் செய்வதில் அதீதமான அகவுணர்வுடன் இருக்கும்படியாக இந்த மேற்கூறிய நிலையானது கதவுகளைத் திறப்பதில்லையா? ஆம் அது தான் வர வேண்டிய குறிப்பு மையமாகும்!

உண்மையான கிறிஸ்தவமானது தேவனுடைய சத்தியத்தைத் தேடும் தனிப்பட்ட சொந்த அறைகூவலுக்காக ஒரு வியக்கத்தக்க சுதந்தரத்தை முன்னேற்றுவிக்கிறது. நமது சிந்தனையினால் அல்ல நமது இருதயங்களிலிருந்து நாம் விசுவாசிக்க வேண்டுமானால் அதற்காகத் தேவைப்படும் வியக்கத்தக்க சுதந்திரம் ஆகும்.

**ஒற்றுமையின் ஒரு உயர்ந்த உருவகம்**

வியாக்கியானத்திற்கென்றோ அல்லது தத்துவ கோட்பாடுகளை பற்றிய முழுமையான பிரமாணங்களை நாம் பெரிதாக உருவகப் படுத்தும் பொழுது அது ஒரு ஒழுங்கு ஒற்றுமையை போன்ற தோற்ற ஒற்றுமையை பிரபலப்படுத்தலாம். ஆனால் அந்த ஒழுங்கும் ஒற்றுமையும் புறத் தோற்றமேயன்றி உள்ளானதல்ல. இந்த தடையான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு நீக்கப்பட்டவுடனே அங்கே எந்த அளவுக்கு ஒழுங்கும் ஒற்றுமையும் இருக்கிறது என்று வெகு விரைவாகப் பார்க்கலாம். ஆனால் அதிகமான நேரங்களில் நாம் அழிவான குழப்பத்தையே பார்க்கலாம். ஒரு தடவை மார்டின் லூதர் குரல் கொடுத்துச் சொன்னது போல ''ஒரு ஆவிக்குரிய மனிதனுக்கு ஒரு உடன்படிக்கை (தொடர்பு) தேவையில்லை. ஆனால் ஆவிக்குரியவன் அல்லாத மனிதன் ஒன்றை தன்னால் வைத்துக் கொள்ள முடியாது.'' நாம் மனிதர்களை நம்முடைய தத்துவங்களுக்கு ஒத்துப் போகும்படி செய்ய முயற்சித்தாலும் அல்லது அவர்களை மனிதவர்க்கத்து உடன்படிக்கைகளாலும் பிணைப்பட்ட செயல்களாலும் அவர்களை நம்முடைய ஐக்கியத்திற்கு ஒப்படைப்புச் செய்யும்படி செய்தாலும் நாம் ஒருகால் தத்துவத்திற்குள் உண்மையானதோர் விசுவாசத்திலும் அல்லது மெய்யான ஐக்கியத்திற்குள்ளும் வரும் திறமையை ஒன்றுமில்லாமல் போகச் செய்தவர்கள் ஆவோம். ஒரு வேளை நாமே நம்மை பின்வருங்காலத்தில் திருச்சபையில் பிரிவினை செய்யப் பண்ணுகிறவர்களாவோம்.

நாம் சட்டம் ஒழுங்கு இல்லாத நாளில் ஜீவித்துக் கொண்டிருப்பது உண்மைதான். உண்மை, கௌரவம், ஒரு மனிதனுடைய வார்த்தையே அவன் கொடுக்கும் ஒப்பந்தம் என்ற நம்பிக்கையைக் காண்பது என்பது மிகவும் கடினமாகும். இப்படியுங்கூட சட்ட அமல் என்பது சட்ட ஒழுங்கின்மைக்கு பதிலல்ல. அது சட்ட ஒழுங்கின்மையை போஷிக்கிறது. அதன் காரணமாகவே பவுல் சொல்கிறார். ''பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்'' ''எழுத்துக் கொல்லுகிறது ஆவியோ உயிர்ப்பிக்கிறது'' (I கொரி 15:56; II கொரி 3:6).

நாம் ஒரு நபரிடம் சட்டத்தை சுமத்தும்பொழுது நாம் அந்த பிரச்சனையை பெரிதுபடுத்தியும் அந்த நபருக்கு அதை மேற்கொள்ளக் கூடிய கிருபையைக் கொடுக்காமலும் அதை மேலும் மோசமாக்கி விட்டு, இந்த வழியில் அந்த பாவத்தை உலகத்திற்கு வெளிப்படுத்துகிறோம். நமது வலுக்கட்டாய நிலையானது பலம் போதுமானதாக இருந்தாலும் அந்த நபரை நாம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம். ஆனால் அந்த வலுக்கட்டாயங்கள் நீக்கப்பட்டு விட்டால் அவர் மேலும் மோசமாகி விடுவார். சட்டத்தைப் பயன்படுத்தி ஒரு குற்றவாளியை காவலில் போடலாம். ஆனால் நம்மால் அவரை மாற்ற முடியாது. நமது காவலில் இருந்து வெகு விரைவாக விடுவிக்கும் மாத்திரத்தில் அவன் தொடர்ந்து குற்றத்தையே செய்வான். ஏனென்றால் அவன் மாற்றம் அடையவில்லை.

**சாராம்சம் (சுருக்கம்)**

உள்ளான மனிதனுக்குள் கர்த்தர் உண்மையைத் தேடுகிறார். நாம் நமது இருதயங்களில் உண்மையாக இருக்கும்பொழுது நாம் நேர்மையாக இருப்போம். ஒருவரும் நம்மை பார்க்காத சமயத்திலும் ஒருவரும் அதைக் கண்டுபிடிக்க கூடாத பொழுதும் நாம் அவ்வாறு இருப்போம். ஏனென்றால் சத்தியம் நமது இருதயத்திற்குள் வாசம் செய்கிறது. நாம் உடன்படிக்கைகளாலும் பிணைப்படுத்ததுதலினாலும் விசுவாசிகளின் மீது வெளியரங்கமான வலுக்கட்டாயங்களைத் திணித்து அவர்களிடம் ஒற்றுமையைத் தேடுவோமானாலும் மேலும் அந்த உடன்படிக்கைகளும் பிணைப்படுத்துதல்களும் புதிய ஒப்பந்த உடன்படிக்கைக்கு நாம் வைத்திருப்பதற்கும் மேல் அப்பால் சென்று நாம் ஜனங்களை கிறிஸ்துவின் சார்பில் அல்லாமல் நம் சார்பில் அவர்களைச் சேர்த்துக் கொள்கிறவர்களாக இருப்போம். அது ஏறக்குறைய அதிகமாகவே ஒரு ஆவிக்குரிய சோக முடிவாகவே முடிந்து போகும். மனிதர்கள் தாங்கள் செய்யும் வாக்குறுதிகளை நேர்மையாகவே அதைச் செய்யும் பொழுது அதை கைக் கொள்ளவதிலே நேர்மையாக இருக்கும்படியாக வாஞ்சிப்பார்கள். ஆனால் நாம் அனைவரும் மாற்றங்களால் ஆகிய நடைமுறைக்குள்ளாகப் போய்க் கொண்டிருக்கிறோம்.

மனிதர்கள் தாங்கள் நிலைத்திருக்கும்படி விரும்புகிற காலத்திற்கு அதிகமாக அவர்களை நிலைத்திருக்கும்படி நாம் பிடித்துக் கொள்வோமானால் அவர்கள் தாங்கள் செய்த ஒப்படைப்பின் பிரகாரம் சிறிது நீண்ட காலம் தங்கி இருக்கலாம். ஆனால் முடிவில் அவர்கள் விட்டு நீங்கி விடுவார்கள். இது இந்த உறவுத் தொடர்பில் மிகவும் மோசமான கண்ணீரை உண்டாக்குவதாலும் மேலும் ஒரு வேளை அதிகமான மக்களும் அதனால் பாதிக்கவும் படுவார்கள். ஏனென்றால் குற்றவுணர்வினாலும் மேல் சுமத்தப்பட்ட அடிமைத்தனத்தாலும் அவ்வாறு ஆகிவிடுவார்கள்.

கர்த்தர் தமது சீஷர்களை தம்மை விட்டுப் போகும் பொழுது அதை எளிதாகவும் அவருடன் அவர்கள் தங்கி இருப்பதைக் கடினமாகவும் செய்தார். நாம் ஏன் அதை வித்தியாசமாக செய்யும்படி முயற்சிக்கக் கூடாது? நாம் ஒருவரை ஒப்படைப்புச் செய்யும்படியாக அவருடைய இருதயத்தில் இல்லாதபோது அப்படி செய்யும்படி ஏன் விரும்ப வேண்டும்? ஒரு மனிதன் சுதந்திரமாகப் போகும்படியாக இருக்கும் பொழுதுதான் அவன் தொடர்ந்து தங்கியிருப்பான். அவனுடைய இருதயத்தில் உண்மையாகவே அவன் நம்மோடிருக்கிறானா என்பதை நாம் அறிந்திருக்கிறோமா?

மனிதர்களை நம்முடன் அந்த மாதிரி உடன்படிக்கைகளால் கட்டி வைத்துக் கொள்ளும் பொழுது நமக்கு அது சிறிது அதிகமாகப் பாதுகாப்பை அளிக்கலாம். ஆனால் அது பொய்யான தொன்றாகும். நாம் கொண்டு வந்திருக்கும் யாரோ ஒருவருடைய அடிமைத்தனத்தின் பலத்தில் இந்த பாதுகாப்பை வைத்துக் கொள்வதாகும். கர்த்தருக்குள் விசுவாசத்தினாலோ அல்ல அவர் கட்டி எழுப்புகிற எது ஒன்றினாலுமல்ல. ஒரு வாக்குறுதி, உடன்படிக்கை செய்வது மிகவும் கடினமான காரியம் அதை நாம் மீறி விட்டால் அது நம்மை கடிந்து கொள்ளுதலுக்குள் கொண்டு வரக் கூடும். கிறிஸ்துவுக்குள் நாம் வைத்திருக்கும் புதிய உடன்படிக்கையில் நமது திருமண வாக்குறுதிகளுங்கூட சிலரால் வேதாகமத்தின் படி பாத்திரமான வாக்குறுதிகளாகக் கருதப்படுகிறது. எனது தனிப்பட்ட முறையில் ஒப்பந்தங்கள் செய்வதை விட அங்கு சிறிது அதிகமாக சுதந்திரம் இருக்கிறதென்று நம்புகிறேன். என்னவென்றாலும் நாம் கிறிஸ்துவுடன் கூட இணைக்கப்பட்டிருப்போமானால் நாம் ஏற்கனவே அவருடைய சரீரத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக ஒருவருடன் இணைந்திருக்கும் படியாக நமக்கு ஒரு கூடுதலானதோர் ஒப்பந்தம் ஏன் நமக்குத் தேவையாய் இருக்கிறது. ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும்படியாக வலுக்கட்டாயமாக நம்மை ஆக்கும்பொழுது அதாவது ஜனங்களுடனும் கூடிவரும் ஸ்தல சபையுடனும் இயக்கங்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் ஆனவை. புதிய ஏற்பாட்டுக்கு புறம்பே வெளியில் செய்து கொள்ளும் ஒப்பந்தமாகும். மேலும் புதிய ஏற்பாடும் சரித்திரமும் கூட அது மிகவும் மோசமாக முடியக் கூடும் என்று சாட்சி கூறுகிறது. பேதுரு தான் கர்த்தரை ஒருக்காலும் மறுதலிக்கப் போவதில்லை என்று செய்த ஒப்படைப்பை அதை ஒரு இரவு முழுவதுங்கூட அவனுக்கு அதைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை.

நான் மிகவும் பேச்சுத் திறமையும் அசைக்கவுங் கூடிய செய்திகளை தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தின் அழகைக் குறித்த செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனாலும் அந்த உறவுத் தொடர்புக்கு நேரிட்ட அவலமான சோக முடிவானது வேதனை தரக் கூடிய மாதிரியாக இந்த குறிப்பு மையம் வரைக்கும் அதாவது யோனத்தான் தன்னை தாவீதுடைய வீட்டிற்கு ஒப்படைப்புச் செய்திருந்தாலும் சவுலுடைய வீட்டிலே தானே மரணமடைந்தான். என்னவென்றாலும் தாவீது அந்த ஒப்பந்தத்தை யோனத்தானுடைய புத்திரரோடும் நிறைவேற்ற வேண்டுமென்ற தாவீதுடைய இருதயத்தை பாராட்டியே ஆக வேண்டும். ஒரு பண்புள்ள உயர்ந்த ஆத்துமா தான் செய்த ஒப்பந்தத்தை எதிர் கட்சியினர் கைக் கொள்ளவில்லை யென்ற பொழுதும் நிறைவேற்றுவார்கள். நாம் ஏன் மக்களை தேவையற்ற கட்டாயத்துக்குட்படுத்தி நம்மோடு இணைந்திருக்கவோ அல்லது ஊழியம் செய்யும்படி வற்புறுத்தவோ வேண்டும்? இந்த இயல்பானது நமது தலைமைத்துவத்தின் ஆழமற்ற தன்மையையும் கர்த்தருடைய பிரசன்னம் குறைவாய் இருப்பதையும் பிரதிபலிக்கிறது. கர்த்தர் பூமியில் உயர்த்தப்பட்டிருக்கும் பொழுது சகல மனிதர்களும் அவரிடம் இழுத்துக் கொள்ளப்பட்டு விடுவார்கள். நமக்கு சாய்ந்து கொள்ள வேறே ஆதாரம் அவசியமில்லை. நம்மை நாமே உயர்த்திக் கொள்ள முயற்சிக்கும்பொழுது அல்லது அவரிடமாக இழுக்கப்பட்டு விடும் பொழுதும் அல்லது அவரது இடத்தில் நமது கிரியைகள் செய்யும் பொழுதும் மனிதர்களை நமக்கு ஒப்படைப்புச் செய்யும் படியாக அல்லது நமது வேலைக்கு அவ்வாறு செய்யும் படியாக வற்புறுத்தும் பொழுதும் அதையே நாம் இப்பொழுதும் செய்கிறோம். ஜனங்கள் தவிர்க்க முடியாத படியாக ஏமாற்றம் அடைந்தவர்களாய் மிகவும் பயங்கரமான காயப்பட்டவர்களாக சிதறுண்டு போவார்கள்.

எருசலேமில் உள்ள முதல் ஆலோசனை சபையானது திருச்சபை சரித்திரத்திலே முக்கியமான பிரகடனங்களுக்கு விளைவாய் இருந்தது. மேலும் அவர்கள் ஒரு வேதாகமத்து சார்பான சுதந்திரத்தை கிறிஸ்தவர்களுக்காக ஸ்தாபித்திருந்தார்கள். பரிசேயர் பிரிவிலிருந்து வந்த விசுவாசிகளுடன் போராடின பின்னர் அவர்கள் இளமையான திருச்சபையை மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளும்படியாக வற்புறுத்திக் கொண்டிருக்கும்பொழுது அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் கூறியதாவது, ''எவையெனில் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும் நெருக்குண்டு செத்ததிற்கும் வேசித்தனத்துக்கும் நீங்கள் விலகியிருக்க வேண்டும் என்பதே. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமல் இருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாய் கண்டது. இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக் கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக'' என்று எழுதினார்கள். (அப் 15:28-29)

இதற்கு நாம் வேறு ஏதாவது ஒன்றைச் செய்யக் கூடும் என்று அர்த்தமாகுமா? அதாவது தொலைக்காட்சியில் நாம் விரும்புவதையெல்லாம் பார்க்கலாம் என்றும் பாலியல் படப் புத்தகங்களைப் பார்ப்பதும், சூதாட்டம் நாம் செய்யக் கூடியனவா? ஆம் இல்லவே இல்லை. அதற்கு அர்த்தமாவது நாம் அனைவருமே பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டு அவருக்கு கீழ்படிவது அவசியமாகிறது. அதற்கு பொருளாவது நாம் பூரணமான அன்பின் பிரமாணத்தால் நடக்கும்படி கற்றுக் கொள்வதாகும். நாம் கர்த்தரையும், நமது குடும்பத்தையும் நமது திருச்சபையையும் நமது அயலகத்தாரையும் அன்பு கொண்டு நேசிக்க வேண்டும். அவர்களைப் புண்படுத்தும் எந்த விதமான காரியங்களையும் செய்யாமலும் அவர்களுடன் நமது நேரத்தை செலவழிக்கும் பொழுது அற்ப காரியங்களுக்காக நமது நேரத்தையும் வீணாக்குவதும் கூடாது.

<u>அந்தக் கட்டுப்பாட்டின் ஆவியானது மனித வர்க்கத்து ஒப்பந்தங்களாலும் குற்றவுணர்வையும் அழுத்தத்தையும் உபயோகிப்பதால் அடிக்கடி வெளிப்படுத்தப்படும் அந்த ஆவியானது தான் போலியான ஆவிக்குரிய அதிகாரத்துவத்தின் வெளிப்பாடாகும். இயேசு நமக்குள் வாசம் செய்யும் அளவுக்கு மாத்திரம் நமக்கு மெய்யான ஆவிக்குரிய அதிகாரம் உண்டு.</u> அவர் நமக்குள் வாசம்பண்ணும் பொழுது அவர் தமது திருச்சபையைக் கட்டுகிறார் என்பதிலும் அதை அவர் பூரணமாகத் திறம்படச் செய்கிறார் என்பதையும் கவனிப்பதில் மிகக் கூர்மையாக விழிப்புடன் இருக்கிறோம். ஆகையால் நாம் சற்று ஓய்வாக இருக்கக் கூடும். நாம் மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தில் கிரியை செய்யும் பொழுது நாம் அவருடன் நுகத்தால் இணைக்கப்பட்டுள்ளோம். இதற்கு அர்த்தமாவது அவர் தாமே பாரத்தை இழுத்துச் செல்லும் ஒருவர் என்று அறிகிறோம். அவருடைய நுகமானது உண்மையாகவே மெதுவாகவும் அவரது சுமை இலகுவானதாகவும் இருக்கிறது. நாம் அதை எடுத்துக் கொள்ளும் பொழுது நாம் உண்மையாகவே நமது ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலைக் காண்கிறோம். நம்முடைய சொந்த பலத்திலே கட்டிக் கொண்டிருக்கும் பொழுது நாம் முயற்சியை மாத்திரமே செய்ய வேண்டும். ஒரு கிறிஸ்தவனுடைய நடைக்கு சுதந்திரமானது மிகவும் அவசியமாகும். சுதந்திரத்தில் பெறுகுவதே நமக்கு எப்பொழுதும் இலக்காக இருக்க வேண்டும். ஆனால் புரிந்து தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் சுதந்திரத்தில் பெறுகுவது முதிர்ச்சியும் அதிகரிப்பதில் உறவுத் தொடர்புடையதாகும். எனது மூன்று வயது குழந்தைக்கு நான் என்னுடைய பத்து வயது பிள்ளைக்கு கொடுக்கிற அளவுக்கு நெருக்கமாக சுதந்திரம் தருவது கூடாது. தெரிந்துள்ள படியே புதிய விசுவாசிகள் பொதுவாக அதிகமான கண்காணிப்பையும் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்களை விட அதிகமான உதவியையும் பெற்றுக் கொள்வது தேவையாகும். <u>இதற்கான உண்மையான விவாதமாவது, மனிதர்களுடைய இருதயத்தை மாறுதலடையச் செய்யும் மனிதனுடைய கட்டுகளுக்கும் அழுத்தங்களுக்கும் அடிப்படையாகக் கொண்டிராத ஆவிக்குரிய சுயாதீனத்தையும் சத்தியத்தையும் மனிதர்கள் ஒத்துப் போகச் செய்யும்படியாக முன்னேற்றுவிக்கிறோமா? நமக்கென்று சுதந்திரம் இல்லாவிட்டால் நமக்கென்று உண்மையான ஆராதனையைப் பெற முடியாது.</u>

# அதிகாரம் 8 - நமது மகா பெரிய வல்லமையும், நமது மகா பெரிய சத்துருவும்

தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக தொடர்ந்து நடைபெறுகிற இரண்டு ஊழியங்கள் உண்டு:- ஒன்று பரிந்து பேசும் ஊழியம். மற்றொன்று குற்றம் சாட்டும் ஊழியம். இயேசு தமது ஜனங்களுக்காக பரிந்து பேசுவதற்காகவே ஜீவிக்கிறார். நாம் அவருக்குள் தங்கி வாசம் பண்ணும் அளவுக்கு இயேசு நம்மை பரிந்து பேசுவதற்காக உபயோகிக்கிறார். அவருடைய ஆலயமானது ''எல்லா மக்களுக்கும் ஜெப வீடாக'' இருக்க வேண்டும். சாத்தான் ''சகோதரர்கள் மேல் குற்றஞ் சாட்டுகிறவன்'' என்று அழைக்கப்படுகிறான். மேலும் அவனுடைய ஊழியமானது இரவும் பகலும் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. (வெளி 12:10ஐப் பார்க்க) என்று நமக்கு சொல்லப்படுகிறது. சத்துருவானவன் நமது ஜீவியத்தில் கிட்டிச் சேரும் அளவுக்கு அவன் நம்மை குற்றஞ் சுமத்தவும், விமரிசனம் செய்து குற்றங் கண்டுபிடிக்கவும் பயன்படுத்துவான். தோட்டத்தில் இருந்த இரண்டு விருட்சங்களைப் போல இந்த ஊழியங்களில் எதைத் தெரிந்து எடுத்துக் கொண்டு தழுவிக் கொள்வது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

சாத்தான் ஆனவன் பரலோகத்திலிருந்து தள்ளுண்டு போன போதும் சிங்காசனத்தை எக்காலத்திலும் கிட்டி சேர முடியாதிருக்கும் போதும் எப்படி அவன் பரிசுத்தவான்கள் மீது தேவனுக்கு முன்பாகக் குற்றஞ் சாட்ட முடியும் என்ற கேள்வியை நாம் கேட்கலாம். இதற்கான விடையாவது சிம்மாசனத்தைக் கிட்டிச் சேரக் கூடிய பரிசுத்தவான்களைப் பயன்படுத்தி இந்த விதமான சாத்தானின் வேலையை செய்ய வைக்கிறான் என்பதே. சாத்தான் பலவிதமான பட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறான். ஆனாலும் நிச்சயமாகவே அவனுடைய மிகவும் செயலூக்கமான வேஷமாவது ''சகோதரர் மேல் குற்றஞ் சுமத்துகிறவன்'' என்பதே. இந்த நாமகாரணப் பெயர் சாத்தானுக்குக் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் அவனுடைய செயலூக்கத்தால் சகோதரனை சகோதரனுக்கு விரோதமாக திருப்பி விடுவது தான். பிரிவினை உண்டாக்குவது அவனுடைய விசேஷித்த திறன்பாடு. திருச்சபை மீது சாத்தானுடைய மகத்தான வெற்றியாவது சகோதரர்களை ஒருவருக்கு எதிராக மற்றவரை திருப்பி விடுவதாகும். ஒளியையும் வல்லமையையும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் சாட்சியை அழிப்பதற்கென்று குற்றம் சுமத்துவதே அவனுடைய மிகுந்த செயலூக்கமும் சாவுக்கேதுவான ஆயுதமாகவும் இருந்தது.
சாத்தானுடைய ஆளுகைக்கு எதிரான மகா பெரிய மிரட்டுதலாவது திருச்சபையின் ஒற்றுமையாகும். இயேசு ஒருமித்து போகும் இரண்டு பேர்களுக்கு இயேசு அருளிச் செய்த அதிகாரத்தை சாத்தான் நன்றாக அறிந்திருக்கிறான். இரண்டு பரிசுத்தவான்களுக்கு இடையே ஏற்படும் நிர்வாகத்தின்படி பிதா அவர்கள் கேட்பதை தந்தருளுவார் என்பதையும் அறிவான். ஒரு பரிசுத்தவான் ஆயிரம் பேரை முறிய அடிக்க முடியும் என்றும் அவர்களில் இரண்டு பேர் பத்தாயிரம் பேரை ஓடும்படியாக முறிய அடிக்க முடியும் என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறான். ஒற்றுமை என்பது நமது ஆவிக்குரிய அதிகாரத்தை அதிகரிப்பது மட்டுமல்ல. அதை விளக்கிக் கூறுவதற்கு அதிகமாக பெருக்கல் வழியாக பெருக்கம் அடையச் செய்கிறது.

பரிகசிப்பதற்கு காரணமாக பழி சுமத்துகிறவர் நம்மில் அதிகம் பேருக்குள் கிட்டிச் சேர வசதியாயிருந்தது. நமது பாதுகாப்பின்மையின் மூலமாக அதுவும் நம்மை எல்லைக்குட்பட்ட பிரதேச பாதுகாக்கும் அணியாக்குகிறது. பாதுகாப்பு இல்லாதவர்கள் தங்களால் கட்டுபடுத்த முடியாத எந்த விதக் காரணிகளாலும் மிரட்டப்படுகிறார்கள். நாம் தத்துவக் கோட்பாடுகளையோ அல்லது போலியான உயர்ந்த உறுதிபாட்டினால் சத்தியத்தை அல்லது ஆடுகளை பாதுகாக்கவோ பயன்படுத்தலாம். ஆனால் நான் ஒருக்காலும் திருச்சபையில் பிரதேசப் பாதுகாப்பில் வேர் ஊன்றிய ஒரு பிரிவைப் பார்த்ததே இல்லை. நமது ஆளுகை பிரதேசங்களைப் பாதுகாக்கும்படி நாம் முயற்சிக்கும் பொழுது அதன் விளைவாக ஏற்படும் பிரிவு நம்முடைய மெய்யான அதிகாரத்தையும் அபிஷேகத்தையும் கூட நம்மை விட்டுப் போகும்படியாக வெட்டி விடுகிறது. இதன் முடிவாக நாம் எந்த ஒரே காரியத்தை நமது முரட்டுத் துணிச்சலால் பாதுகாத்துக் கொள்ள முயற்சித்தோமோ நாம் இழந்து விடுவதே அதன் விளைவாகிறது. இது ஒரு மறுக்கப்படக்கூடாத ஆவியின் பிரமாணமாக நீ உன்னுடைய ஜீவனைக் காத்துக் கொள்ள முயற்சித்தால் நீ அதை இழந்து போவாய் என்று கூறுகிறது. நீ கர்த்தருடைய நாமத்திற்காக உன் ஜீவனை இழப்பாயானால் அதை நீ கண்டு பிடித்துக் கொள்வாய்.

ஏசாயா இந்த விவாதத்தை அதிகாரம் 58ல் மிகவும் சுருக்கமாக பேசுகிறான். ‘‘அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி எனக்கு முன்னாலே செல்லும். கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். அப்பொழுது நீ கூப்பிடுவாய். கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார். நீ சத்தமிடுவாய் ‘‘இதோ நான் இருக்கிறேன்’’ என்று சொல்லுவார். நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச் சொல்லையும், நீ உன் நடுவில் இருந்து அகற்றி விடுவாய்.’’ (வசனங்கள் 8-9)

<u>உன்னுடைய ஜீவியத்தில் அதிகமான ஒளி உனக்குத் தேவையா? நமக்கு ஏன் சுகத்தை திரும்பப் பெறுதலும் சொஸ்தமாகுதலும் வருவதில்லை என்று வியப்படைகிறாயா? உன்னை ஏன் பாடுகள் கர்த்தருடைய மகிமையை விட உன்னைத் தொடர்ந்து வருகிறது? நீ கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறாய். ஆனால் அவர் உனக்கு மறு உத்தரவு கொடுப்பதில்லை. நீ அவரை நோக்கி அபயமிடுகிறாய். ஆனாலும் அவரை கண்டுபிடிக்க முடிவதில்லை. இதற்கான காரணமாவது ஏறக்குறைய எப்பொழுதும் ஒன்று போலவே தான் இருக்கிறது.</u> அதாவது நமது (மத்தியிலே) நடுவிலே ஒரு நுகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். விரல் நீட்டுதல் என்றும் நிபச் சொல் என்றும் (பொல்லாத வார்த்தைகளையும்) அழைக்கப்படுகிறது. அது குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியாகும். அவர் ஏசாயாவின் மூலமாக நமது ஜீவியமானது அந்த நுகத்தை நீக்கி விடும் பொழுது புரட்சிகரமாக மாறக் கூடும் என்று வாக்குறுதி தருகிறார். அந்த ஞானவான் சாலோமோன் கூறியபடி, ‘‘நீதிமான்களுடைய பாதையோ நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும் துன்மார்க்கருடையோ பாதையோ காரிருளைப் போலிருக்கும். தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள்.’’ (நீதி 4:18-19)

நாம் நீதியில் நடப்போமானால் நாம் அதிகதிமான வெளிச்சத்தில் நடப்போம். அந்த கரத்தில் நடந்து இடறி விழுகிறவர்களுக்குள் அந்த அந்தகாரத்துக்கான காரணத்தை அரிதாகவே அறிந்து கொள்கிறார்கள் அல்லது அவர்கள் அதற்குள்ளாக இருக்க மாட்டார்கள். அந்த குற்றங் கண்டுபிடிக்கிற நபர் வழக்கமாக தன்னைத் தவிர மற்றவர்கள் ஒவ்வொருவரையும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருப்பான். கர்த்தர் சொன்னபடியே அவன் சகோதரரின் கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்து போடுவதில் சுறுசுறுப்பாக இருப்பதால் அவன் தன் கண்ணில் இருக்கிற பெரிய உத்திரத்தை அவன் கண்களால் பார்க்க முடியாது. இது தான் அவனுடைய கண் தெரியாத குருட்டுத் தனத்திற்குக் காரணமாகும். நாம் மற்றொரு சகோதரரையோ அல்லது சகோதரியையோ பற்றிக் குற்றம் கண்டுபிடிக்கும் பொழுது தேவனுடைய மகத்துவமான கைவேலையானது நமது தராதர மட்டத் தளவுக்கு இருக்கவில்லையாதலால் நாம் அதை இதை விட நன்றாகவே செய்திருப்போம் என்று நாம் மெய்யாகவே சொல்லிக் கொண்டிருப்போம். நம்மில் யாராவது ஒருவர் நாம் எவ்வாறு கட்டாயமாக இருக்க வேண்டுமோ அவ்வாறு நம்மை செய்து கொள்ள முடியும். நம்மையே நாம் அவ்வாறு செய்யக் கூடாதபடி முடியாமல் இருக்கும்போது எப்படி மற்றவர்களைச் செய்ய சொல்ல முடியும்? நாம் மற்றொருவருடைய பிள்ளைகளைக் குற்றம் சொல்லும் பொழுது யார் அதை குற்றமாக எடுத்துக் கொள்வார்கள்? அந்த பெற்றோர்களே! இதுவும் தேவனுக்கும் குறைந்த உண்மையாகாது. <u>நாம் தேவனுடைய பிள்ளைகளை நியாயம் விசாரிக்கும் பொழுது நாம் அவரையே நியாயந் தீர்க்கிறோம். நாம் அவரது தலைவர்களில் ஒருவரை நியாயந்தீர்க்கும் பொழுது நாம் அவருடைய தலைமைத்துவத்தையே நியாயந்தீர்க்கிறோம். நாம் அதினால் அதைப் பற்றி அவர் அளிக்கிற தலைமைத்துவத்தைப் பற்றி அவர் என்ன செய்கிறார் என்று அவருக்கே தெரியாது என்று சொல்லி விடுகிறோம்.</u>

இந்த முறுமுறுத்தலும் புகார் சொல்லுவதுமே அதே பிரச்சனையாக வறண்ட வனாந்தரமான பிரதேசங்களில் அலைந்து கொண்டிருந்த இஸ்ரவேல் புத்திரரின் முதல் சந்ததியாரான மக்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வதிலிருந்து தடுத்திருந்தது. இந்த முறுமுறுத்தலே அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் வறண்ட பிரதேசங்களில் அலைந்து திரியும்படி செய்யக் காரணமாய் இருந்தது. இந்த முக்கியமான காரணத்தினால் தானே அநேக கிறிஸ்தவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நடப்பதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் ஜீவியங்களை அதே மலைகளைச் சுற்றிச் சுற்றி வனாந்தரத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு எச்சரிக்கை கொடுத்தபடியே, ‘‘சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள், சகோதரனுக்கு விரோதமாய் பேசி, நியாயப்பிரமாணத்தைக்

குற்றப்படுத்துவாயானால் நீ நியாயப்பிரமாணத்தின் படியே செய்கிறவனாயிராமல் அதற்கு நியாயாதிபதியாய் இருப்பாய். நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அளிக்கவும் வல்லவர். (நாம் நியாயப்பிரமாணத்தை நியாயம் தீர்க்கும் பொழுது அந்த பிரமாணத்தைத் தந்தவரையும் நியாயந்தீர்க்கிறோம்?) மற்றவனைக் குற்றப்படுத்துவதற்கு நீ யார்?'' (யாக் 4:11-12)

நாம் ''விரலை நீட்டி குற்றப்படுத்தும் பொழுது'' நாம் நுகத்தைப் பூட்டிக் கொள்கிறோம். கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார். ''நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிறதீர்ப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.'' (மத் 7:1-2)

**வறுமையின் ஆவி (அ) தரித்திரத்தின் ஆவி**

ஒரு சமயம் நான் மிகவும் வல்லமையான வறுமையின் ஆவியின் கட்டுக் கீழ் இருந்த ஒரு மாநிலத்துக்குப் போயிருந்தேன். அப்படிப்பட்ட ஒரு மாநிலத்தை நான் இந்த தேசத்தில் பார்த்தேன். அங்கே இருந்த ஜனங்களில் விசேஷமாக அவர்கள் இடையே காணப்பட்ட பண்புகளில் ஒன்று அவர்கள் ஐசுவரியவான்களை அல்லது நன்றாகப் பிழைத்திருக்கிறவர்களை எப்படி ஏளனமாகவும் விமரிசனம் செய்கிறார்கள் என்பதுவாகும். இதனால் தான் இந்த மக்கள் தங்களைத் தானே தங்களுடைய சொந்த தீர்ப்புகளான நுகத்தில் பூட்டிக் கொண்டு விட்டதால் ஆசீர்வதிக்கப்படக் கூடாதபடியாக ஆகி விட்டார்கள்.

நாம் சில சமயங்களில் இழிவு படுத்தப்படலாம். சில சமயங்களில் நாம் அதிகமாகப் பெற்றிருக்க அவசியமாகலாம். அதற்காகவுங்கூட அப்.பவுல் சில சமயங்களில் பசியாக இருக்க நேரிட்டாலுங்கூட அவர் நம்மை மிகவும் கண்டிப்பாகவே ''உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதும் என்றிருக்கக் கடவோம்'' என்று எச்சரித்து உரிமை கொண்டாடினார். (I தீமோத் 6:8) அதனாலுங்கூட நான் இழிவு படுத்தப்படலாம் என்றாலும் நான் அதை தேவனுக்குப் பணிந்து கீழ்படிவதால் அப்படிச் செய்ய விரும்புகிறேன். மேலும் அதை என்னுடைய ஜீவியத்தில் அவர் என்ன செய்ய வேண்டும் என்று முயற்சிக்கிறாரோ அதை வறுமையின் ஆவிக்குக் கீழ்படிவதால் அதைச் செய்யும் படியாக முற்படமாட்டேன். என்னுடைய சொந்தமான மற்றவர்களைப் பற்றி நான் செய்யும் தீர்ப்புகளால் என்னை நிச்சயமாகவே வறுமையுடன் நுகத்தில் பூட்டி விடப்படும் படியாக விரும்பமாட்டேன்.

இந்த விதமான நிலைமையில் நான் சந்தித்த போதகர்களில் அநேகர் தங்களையும் தங்களது கூடிவரும் சபைகளையும் வறுமையின் ஆவியோடு தங்களை உண்மையாகவே பூட்டிக் கொண்டு எப்படி மற்ற தேவ மனுஷர்கள் காணிக்கைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்று விமரிசிக்கிறார்கள். இந்த விதமான அவர்களது தீர்ப்பின் காரணமாக அவர்கள் வேதாகமத்தின் படியான காணிக்கையைக் கூட குற்றவுணர்வின்றி எடுத்துக் கொள்ளும்படி அவர்களால் முடிவதில்லை. காணிக்கைகளை எடுப்பதில் அதிக நேரம் செலவழிப்பவர்களைப் பற்றி அவர்கள் சந்தேக வித்துகளை விதைத்து விட்டதால் அவர்களுடைய சொந்த ஜனங்களுங்கூட அவர்களும் நேரம் எடுத்துக் கொள்ளும் பொழுது அவர்களைப் பற்றி சந்தேகப்படத் தொடங்குகிறார்கள். அவர்களுடைய தீர்ப்பானது அவர்கள் மீதே திரும்ப வரும்பொழுது அவர்கள் அந்த காரத்தை மட்டுமே அறிந்து கொள்கிறார்கள். அவர்களுடைய தேவைகளைப் பொறுத்த அளவில் பதில் தரப்படாத ஜெபங்களையுங்கூட அறிந்து கொள்கிறார்கள். நிதி நிலைமைகளைப் பொறுத்தமட்டில் எது உண்மையோ அதுவே ஆவிக்குரிய வரங்களைப் பொறுத்த மட்டிலும் உண்மையாக இருக்கக் கூடும். நான் அந்த நிலைமையில் குறிப்பிடக்கூடிய ஆவிக்குரிய அதிகாரப் பொறுப்புகளை உடைய பலரைச் சந்தித்திருக்கிறேன். அவர்களுக்கு தேசிய அல்லது சர்வதேச செல்வாக்கை கட்டாயமாகப் பெற்றிருக்கக் கூடும். ஆனால் அவர்கள் தங்களுடைய ஜீவியங்களை கனியே கொடாமல் வளர்ச்சியில் சுருங்கிக் கொண்டு போகும் திருச்சபைகளுக்கே ஊழியம் செய்கிறார்கள்.

சில சமயங்களில் நமது கூட்டங்கள் கூட சுருங்கிப் போகக் கூடும். ஏனென்றால் நாம் சரியான காரியங்களையே செய்கிறோம். கர்த்தர் செய்தது போலவே தமக்குச் சொந்தமானவர்கள் பிரிந்து போனது போல அவர்கள் பெற்றுக் கொள்வதற்குக் கடினமானவற்றை போதித்த பொழுது அவ்வாறு

போய் விட்டார்கள். ஆனால் இந்த மனிதர்களுடன் இவ்வாறான காரியம் நடைபெற வில்லை. அவர்கள் செல்வாக்கில் அதிகரித்துக் கொண்டிருக்கும் மற்றவர்களுடைய ஊழியங்களை தீர்ப்புச் செய்தும் விமரிசனம் செய்தும் தங்களை நுகத்தில் பூட்டிக் கொள்கிறார்கள். அவர்களுடைய அபிஷேகமும் அதிகாரமும் கொடுத்திருக்க வேண்டிய கனியை உண்டாக்கியிருக்க வேண்டியதான ஒரு மேடையை தேவன் அவர்களுக்குத் தந்திருக்கக் கூடும். நமது விமரிசனம் நம்மை வறுமைக்குள் கொண்டு வந்து விடும். ''மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும். அதில் பிரியப்படுகிறவர்கள் அதன் கனியைப் புசிப்பார்கள்.'' (நீதி 18:21)

குற்றங் கண்டுபிடித்தல் என்பது அகந்தையின் வெளிப்பாடுகளின் உச்சமான கட்டமாகும். ஏனென்றால் அது உயர்வு மனப்பான்மையைத் தரித்துக் கொள்கிறது. பெருமையானது எந்த விவேகமுள்ள மனிதனும் பயப்படுகிறதான தேவனுடைய எதிர்ப்பைக் கொண்டு வருகிறது. ''தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.'' (யாக் 4:6) தேவன் நம்மை எதிர்த்து நிற்கும்படி செய்வதை விட நாம் நரகத்திலுள்ள எல்லா பிசாசுகளையும் எதிர்க்கும்படி செய்வது நல்லதாகும்.

**உண்மையானது கொன்று விடக்கூடும்**

நமது குற்றங் கண்டுபிடித்தலானது நமது பார்த்து அறியும் உணர்வில் வேர் கொண்டிருக்கக் கூடும். நாம் குற்றம் கண்டுபிடிக்கக் கூடியவர்கள் தவறில் இருக்கலாம். இந்த போதகர்கள் மற்றவர்கள் பணத்தை யுக்தி வாதத்தாலும் ஆடம்பரத்தாலும் சில சமயங்களில் நேரடியான வஞ்சனையாலும் சேகரித்தவர்களைக் குற்றங் கண்டு பிடித்தது மிகச் சரியாக இருக்கலாம். நாம் பார்த்தறிந்த உணர்வுபடியே நடக்க வேண்டும். இதை அப்போஸ்தலர்கள் பின்வருமாறு கூறும்பொழுது அதை எளிதாக்கினார்கள். ''நாம் திருச்சபைக்குள் இருப்பவர்களைக் குறித்து தீர்ப்பு செய்வதில்லையா?'' இதன் விவாதமாவது நாம் பார்த்து அறிந்து உணர்ந்து கொள்வதை எப்படி இடைபடப் போகிறோம்? நாம் அதைக் கொண்டு குற்றஞ் சாட்டப் போகிறோமா? அல்லது பரிந்து பேசப் போகிறோமா? எந்த ஊழியத்தில் நாம் ஒரு பங்காக இருக்கப் போகிறோம்? நாம் பார்த்து அறிந்து உணர்ந்து கொள்வதை எப்படி சந்தித்து கிரியை செய்யப் போகிறோம் என்பது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியங்களினால் உண்டாகும் பலா பலன்களை எவ்வாறு நிர்ணயிக்கக் கூடும்? ''பேலியாளின் மனுஷனாகிய ஒரு துன்மார்க்கன் ஆகடியம் பேசித் திரிகிறான். அவன் தன் கண்களால் சைகை காட்டி தன் கால்களால் பேசி தன் விரல்களால் போதனை செய்கிறான். அவன் இருதயத்திலே திரியா வரம் உண்டு. இடைவிடாமல் பொல்லாப்பைப் பிணைத்து வழக்குகளை உண்டுபண்ணுகிறான். ஆகையால் சடுதியில் அவனுக்கு ஆபத்து வரும். சகாயமின்றி சடுதியில் நாசமடைவான்.'' (நீதி 6:12-15)

கர்த்தர் சுட்டிக் காண்பித்த கடைசி காரியம் என்னவென்றால் நாம் எப்பொழுதும் இடறல் உண்டாக்க விரும்புகிறவர்களாக இருப்போமானால் நாம் பிறவாதிருந்தால் நமக்கு நலமாயிருக்கும். அதுவும் அவருடைய சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்கினாலும் அதுவே தான் பலன். மத்தேயு 18ம் அதிகாரத்தில் பாவத்தில் இருக்கும் ஒரு மனிதனுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி தெளிவான கட்டளைகளைக் கொடுத்தார். நம்மை இடறுதல் உண்டாக்கும் தடைகளாக ஆகி இருக்கக் கூடாது என்பதற்காகவே இப்படி செய்தார். முதலாவதாக அவனிடம் தனியாகப் போய் சந்திக்க வேண்டும். அவன் நமது ஆலோசனைகளைப் புறக்கணிப்பானானால் நாம் மற்றொரு சகோதரனுடன் போய் அவனைச் சந்திக்க வேண்டும். அவன் இரண்டு பேருடைய ஆலோசனைகளைப் புறக்கணித்த பிறகே நாம் அந்தப் பிரச்சனையை எடுத்துக் கொண்டு மீதியிருக்கும் சபைக்கு முன்னே எப்போதாவது போக வேண்டும். இந்த முன் மாதிரியான ஆலோசனையை நாம் பின்பற்றாவிட்டால் நாம் என்றுமே விரும்பாதபடி ஆகக் கூடிய கடைசியான காரியமாக ஆகும் ஆபத்தில் இருப்போம். அந்த ஒருவனுக்காக நமது கர்த்தர் தமது ஜீவனையே கொடுத்திருப்பதால் அந்த ஒரு நபரே இடறுவதற்கான காரணமாக இருப்போம்.

மத்தேயு 18ம் அதிகாரத்தில் கூறப்பட்டவைகளைச் சீர்த்திருத்தம் கொண்டு வருவதற்காக பின்பற்றாமல் இருப்பதற்கு சொல்லப்படும் எண்ணற்ற சாக்கு போக்குகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதற்காக சொல்லும் பிரபலமான ஒரு சாக்குப் போக்காவது! ''அவர்கள் எனக்கு செவி கொடுத்துக் கவனிக்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்'' என்பதே. நான் மேலும் மற்றொரு சாக்குப் போக்கையும்

கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது ‘‘நமக்கென்று ஒரு பொது ஊழியம் என்று இருந்தால் நாம் அவர்களைப் பகிரங்கமாக காட்டிக் கொடுக்கக் கூடிய உரிமை நமக்கு இருக்கிறது’’ என்பதாகும். இது ஒரு முட்டாள்தனமானது ஏனென்றால் ஒவ்வொரு ஊழியமும் கொஞ்சம் ஓரளவுக்கு பொதுவானதாகும். தேவனுடைய வார்த்தைக்கு நாம் ஒத்துப் போகாதபடிக்கு நம்மை சுதந்தரமாக்கும்படியாக அது பகிரங்கமாக ஆகும். அளவை நிர்ணயிப்பது யார்? தேவன் அதற்கென்று அப்படிப்பட்ட நிபந்தனைகளைக் கொடுக்கவில்லை. இந்த விதமான சுதந்திரத்தை எடுத்துக் கொள்கிறவர்கள் இயேசுவால் தாமே கொடுக்கப்பட்ட தெளிவான கட்டளைகளோடு இதனால் தேவனுடைய வார்த்தையோடு அதிகமாக சேர்க்கும்படியான அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிமை பாராட்டுகிறார்கள். ஒரு மனிதன் பாவத்தில் இருக்கிறான் என்று நாம் நம்புவோமானாலும் அவனுக்கென்று பெரிய ஊழியமிருந்தாலும் அவன் நம்மால் சேரக் கூடாதவனாக இருந்தாலும் நாம் தான் அவன் மேல் தீர்ப்புச் சொல்லும்படி அழைக்கப்பட்டவர்களல்ல என்பதை முடிவாகக் கொள்ள வேண்டும். அந்த மாதிரியான காரியத்தில் நாம் அவர்களைக் குற்றஞ் சாட்டாமல் அவர்களுக்காக பரிந்து பேச வேண்டும். கர்த்தர் தாமே தமது சொந்த வீட்டைப் பற்றி தீர்ப்புச் சொல்லக் கூடியவர். நாம் தான் அவர் உபயோகிக்கும்மாறு அவரால் விரும்பப்படுகிறவர்கள் என்று கருதப்படுவோமானால் அவர் நமக்கென்று ஒரு வழியை உண்டு பண்ணுவார். அவர் நமக்கு என்று ஒரு வழியைத் திறக்காவிட்டாலும் அவர் தமது சொந்தமான நேரத்திலே அதைச் செய்யுமாறு நாம் அவரை விசுவாசிக்கக் கூடும். மறுபடியும் அந்த பாவத்தில் இருக்கும் சகோதரன் அடையக்கூடிய தீர்ப்பிலும் மிகக் கடுமையான தீர்ப்புக்குள் நாம் வருவதில் இருந்து நம்மை பாதுகாப்பதற்காகவேதான்.

கர்த்தரால் குறித்துச் சொல்லப்பட்ட மாதிரியாக பாவத்தில் இருக்கும் ஒரு சகோதரனோடு நாம் இடைபடும் பொழுது அந்த மாதிரியைப் பின்பற்றாவிட்டால் மற்ற யாருடனாவது குறைந்தது அதைப் பற்றி கொஞ்சங் குறைய பகிரங்கமாகப் போவதற்கும் கூட அல்லது அதைப் பற்றி பேசவுங்கூட நமக்கு முற்றிலுமாக எந்த விதமான உரிமையும் கிடையாது. அந்தக் காரியத்திற்காக மற்றொரு அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அதைப் பகிர்ந்து கொள்ளவுங் கூடாது. நாம் மற்ற யாரோ ஒருவருடைய அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் அழைப்பது என்பது தேவன் அதை புறங்கூறுதல் என்று அழைக்கிறார். அவரை முட்டாளாக்கப்பட விடமாட்டார். அந்த விதமான பகுத்தறிவின்மைக்கு நாம் விலை கொடுக்க வேண்டும். அவருடைய கட்டளையாவது முதலாவதாக அந்த நபரைத் தனிமையில் சந்திக்க வேண்டும். நாம் அதைச் செய்து முடித்த பிறகே மற்றொருவரிடம் நடக்க வேண்டும். அதன் பிறகே அந்த பாவத்திலிருக்கும் நபருக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு போக வேண்டும். நமது இலக்காவது அந்த சகோதரனை அவனுடைய பாவத்திலிருந்து விடுதலை செய்வதே அவரை வெளிக்கு காட்டிக் கொடுப்பதற்காக மட்டும் அல்ல. பவுல் எச்சரித்தாவது, ‘‘சகோதரரே ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனை சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு.’’ (கலா 6:1)

**அன்பு (சகல பாவங்களையும்) மூடும்**

மற்றொருவருடைய பாவத்தைச் சம்பந்தப்பட்ட நமது சவால்களில் அற்பத்தனத்துக்கு அடிமைப்பட நம்மை அனுமதியோம். ‘‘அன்பு திரளான பாவங்களை மூடும்.’’ (I பேதுரு 4:8) கர்த்தரால் மன்னிக்கப்பட்டு முடிவுறாத நூற்றக்கணக்கான தவறான காரியங்களை நம்மில் பெரும்பாலோர் இன்னும் நமது சொந்த ஜீவியத்தில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர் வழக்கமாக அவைகளில் ஒன்றிரண்டில் மட்டும் ஒரே சமயத்தில் இடைபடுகிறார். அவைகளை மட்டுமே எல்லாம் நாம் கையாளக் கூடியவை ஆகும். சாத்தானுடைய யுக்த உத்திகளில் ஒன்று ஆவது அவற்றில் ஒன்றை உபயோகிக்க முயற்சித்து நம்மை நமக்கிருக்கும் மற்றும் முன்னூறு பிரச்சனைகளை நாம் இடைபடும்படி முயற்சித்து முடிவில் ஏமாற்றத்தையும் தோல்வியையுமே சந்திக்கும்படியாகச் செய்கிறான்.

மத்தேயு 18ம் அதிகாரம் நமது சகோதரன் நம்மை எவ்வாறு புண்படுத்தினான் என்பதை மற்ற நமது சகோதரர்கள் ஒரு கழகக் கூட்டமாக அதை அறிவதற்காகப் பயன்படுத்தும் படியாகக் கொடுக்கப்படவில்லை. நமக்குள் அன்பிருந்தால் அவற்றில் அதிகமானவற்றை மூடி மறைத்து நமது சகோதரருக்கு அனாவசியமான காயத்தை உண்டாக்காமல் இருக்கும்படியாகவே. இந்த வேதாகமப் பகுதியை நாம் உபயோகித்து மேலும் சகல வேதப் பகுதிகளானவைகளான அன்பிலும் நமது சுய பாதுகாப்பையோ அல்லது பழிக்கு பழியாகவோ இல்லாமல் பயன்படுத்த வேண்டும்.

உண்மையாகவே நமது கர்த்தராகிய இயேசு தாமே அவரே நமது பூரணமான மாதிரியாவார். வெளிப்படுத்தின விசேஷத்தில் அவர் அந்த ஏழு சபைகளைச் சீர்திருத்தம் செய்யும்பொழுது திருச்சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முற்றிலும் பூரணமான மாதிரியை நமக்குக் கொடுத்தார். முதலாவதாக அவர் ஒவ்வொரு சபையையும் புகழ்ந்து பேசி அவர்கள் சரியாகச் செய்வதை மேற்கொண்டு எடுத்துக் காட்டினார். பிறகு அவர் நேருக்கு நேரடியாகவே அவர்களுடைய பிரச்சனைகளைக் குறித்து பிரஸ்தாபித்தார். நம்புவதற்கு அரிதாக அவர் யேசபேலுக்கு மனந்திரும்பும் படியாக ஒரு சந்தர்ப்பத்தையும் தந்தருளினார். பிறகு அவர் ஒவ்வொரு சபைக்கும் அந்தப் பிரச்சனைகளை மேற்கொண்டதற்காக வெகுமதியை அற்புதமான வாக்குறுதியாக அருளினார். கர்த்தர் என்றும் மாறாதவர். இன்றைய நாட்களில் அவர் சீர்திருத்தத்தைக் கொண்டு வரும் பொழுது அது எப்பொழுதுமே ஊக்கப்படுத்துதல் நம்பிக்கை வாக்குத்தத்தங்கள் என்பவற்றால் மூடப்பட்டுள்ளன.

‘‘சகோதரர்களைக் குற்றஞ்சாட்டுகிறவனுங்’’ கூட சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வர முயற்சிக்கிறான். அவனுடைய நடைமுறைகளும் இலக்குகளுங்கூட கண்கூடாகவே முற்றிலும் வித்தியாசமாக இருக்கின்றன. இயேசு உற்சாகமாக ஊக்குவித்து நம்பிக்கையை அளிக்கிறார். சாத்தான் கடிந்து கொண்டு நம்பிக்கையின்மையை பகிர்ந்தளிக்க முயற்சிக்கிறான். இயேசு ஒருவரைக் கட்டி எழுப்பி அதனால் சீர்திருத்தத்தை அவர்கள் கையாளக் கூடும்படியாகச் செய்கிறார். சாத்தான் உங்களை கிழித்துக் கீழே எறிந்து விட்டு அதை விட்டுப் போகச் செய்யும்படியாக முயற்சிக்கிறான். இயேசு நம்மில் அன்புகூர்ந்து நம்மை அவர் வைக்கக் கூடிய உயர்ந்த இடத்தில் கொண்டு போய் வைக்கிறார். சாத்தானுடைய இலக்கு நாசமாகிய அழிவேயாகும்.

பெந்தெகொஸ்தே மற்றும் பண்பு இயல் இயக்கங்களில் காணப்படும் படியான அற்புதமான இயல்பியலாவது ஆவிக்குரிய வரங்களிலும் ஆவிகளைப் பார்த்து அறியும் உணர்வுக்களுக்காகக் கருத்தாய் இருப்பவர்களின் திறன்பாடு இன்மையாகும். அந்த அதீதமான சாவுக்கேதுவான எல்லாவித சத்துருவின் ஆவியைச் சற்றும் பார்த்து அறியும் உணர்வே மிகக் குறைந்ததாகத் தோன்றுகிறது. அதாவது ‘‘சகோதரர் மேல் குற்றஞ் சாட்டுகிறவன்’’ ஞானஸ்நானம் பெறாதவர்களையும் அல்லது நம்மைப் போலவே ஆவிக்குரிய அதிகாரம் பெறாதவர்களுக்கு விரோதமான நமது தீர்ப்பானது நம்மை ஆவிகளைப் பார்த்து அறியும் உணர்வுத் திறமை இல்லாமையோடு நம்மை நுகத்தில் பூட்டியிருக்கும் காரணத்தினால் இருக்கக் கூடுமா? இந்த பார்த்து அறிந்து உணரும் ஆவிக்குரிய வரம் இல்லாமலுங்கூட யாக்கோபு ஞானத்தின் மூலகாரணத்தைப் பார்த்து அறிந்து உணரும் அறிவுக்கான தெளிவான வழி காட்டும் முறைகளைக் கொடுத்திருக்கிறார். அவைகளைக் கவனித்துக் கேட்டிருந்தாலுங்கூட திருச்சபையானது அவளுடைய மிகவும் இழிவை அடையக் கூடிய தோல்விகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கும்.

‘‘உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக் கடவன். உங்கள் இருதயத்தில் கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால் நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய் பொய் சொல்லாமலும் இருங்கள். வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ அங்கே கலகமும் துர்ச் செய்கைகளும் உண்டு. இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகி பேய்த்தனத்துக்குரியதுமாயிருக்கிறது. பரத்திலிருந்து வருகிற சமாதானமும், சாந்தமும், இணக்கம் உள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியான கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.’’ (யாக் 3:13-18)

நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். அந்த விதமான சகல கிருபையும் நமது ஜீவியத்தில் முழுவதிலும் அதைச் செய்யும்படியாக அதைப் பெற்றுக் கொள்வதற்காக நமக்குத் தேவையாயிருக்கிறது. நாம் கிருபையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் கிருபையைக் கொடுக்கும்படியாக நன்றாகக் கற்றிருக்க வேண்டும். ஏனென்றால் நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். நாம் இரக்கத்தைப் பெற வேண்டும் என்று எதிர்பார்ப்போமானால் நாம் இரக்கத்தை விதைக்கும்படியாக ஆரம்பிப்பது நல்லதாகும். அதிலும் நம்மில் பெரும்பான்மையோர் நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய இரக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்குத் தேவையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். நாம் விரும்பிச் செய்யக்கூடிய மெய்யான கடைசி காரியமாவது அந்த நாளில்

கர்த்தருக்கு முன்பாக வந்து நம்முடைய சகோதரருடைய இரத்தத்தை நமது கைகளின் மேல் வைத்திருக்க வேண்டும். கொலை செய்யாதிருப்பாயாக என்பதும் கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். தன் சகோதரனை வீணன் என்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். மூடனே என்று சொல்லுகிறவன் எரி நரகத்துக்கு ஏதுவாய் இருப்பான். ஆகையால் பலி பீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து உன் பேரில் உன் சகோதரனுக்கு குறைவுண்டென்று அங்கே நினைவு கூறுவாயாகில் அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டு போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும் நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக் கொடாமலும் நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமல் இருக்கும்படியாக நீ உன் எதிராளியோடே வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. பொருந்தாவிட்டால் நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்கு மட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (மத் 5:21-26) இந்த எச்சரிக்கைக் கொடுக்கப்படும் சந்தர்ப்பமாவது நாம் ஒரு சகோதரனை புறங்கூறி அவதூறு பேசி குற்றவாளியாயிருந்தால் நாம் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைப் பற்றி அந்த சகோதரனோடு ஒருமனம் பொருந்தும் வரைக்கும் மறந்து விட வேண்டும். நாம் அடிக்கடி நமது பலிகளும், காணிக்கைகளும் நமது பாவங்களுக்குப் பதிலாக இழப்பீடு செய்யக்கூடும் என்று நினைக்கலாம். ஆனால் அவைகள் ஒருக்காலும் அவ்வாறு செய்யாது. நாம் கடன்பட்ட கடைசி காசைக் குறைவின்றி செலுத்தும் வரைக்கும் அல்லது நாம் அவதூறு தூற்றிய சகோதரனுடன் ஒருமனம் பொருந்தும் வரைக்கும் நமது தீர்ப்புகளால் நாமே உண்டாக்கிய சிறைக்குள் நாம் தங்கியிருக்கிறவர்களாய் இருப்போம்.

கர்த்தர் சொன்னதாவது அவர் திரும்பி வரும் பொழுது அவர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரித்து அவற்றிற்கிடையே நியாயந்தீர்ப்பார். (மத் 25:31-46 ஐப் பார்க்கவும்) செம்மறியாடுகளாக நியாயந்தீர்க்கப்பட்டவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வார்கள். வெள்ளாடுகள் என்று பெயரிடப்பட்டவர்கள் நித்தியமான நியாயந்தீர்ப்பை அடையும்படி அனுப்பப்பட்டார்கள். இந்த விதமான பிரிவுபடுத்துதல் ஆனது எப்படி அவர்கள் கர்த்தரை விசாரித்தார்கள் என்பதால் தீர்மானிக்கப்பட்டது. அதுவும் அவர்கள் அவருடைய ஜனங்களை எவ்வாறு நடத்தினார்கள் என்பதிலும் பிரதிபலிக்கப்பட்டது. மேலும் யோவான் சொன்னபடி “தான் தேவனிடத்தில் அன்பு கூறுகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்?” (I யோவான் 4:20) தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். அவனுக்குள்ளே நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள். அவர் தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் நம் சகோதரருக்காக நமது ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (I யோவான் 3:15-16)

திருச்சபை சரித்திரத்திலே மகா சோகமான முடிவுள்ள நிகழ்ச்சிகளில் ஒன்று தேவனுடைய ஒவ்வொரு இயக்கங்களின் தலைவர்களும் பின் அடுத்துத் தொடர்ந்து வரும் இயக்கங்களுக்கு எதிர்ப்பாளர்களும் துன்பப்படுத்துகிறவர்களுமாக ஆகிப்போன வழியேயாகும். இன்றைய நாள் வரைக்கும் இந்தப் போக்கானது தோற்றுப் போகவில்லை. எண்ணற்ற தலைவர்கள் தங்களுடைய ஜீவியத்தை விசுவாசத்துடனும் நன்றாகச் செலவழித்திருக்கிறார்கள். குற்றஞ் சுமத்துகிறவனுக்கு அதாவது அவர்களை அடுத்த இயக்கத்திற்கு இடறுதலாக உண்டாக்கும்படியாக அவனுக்கு ஏற்ற பாத்திரங்களாக ஆகி முடிந்து விடுகிறார்கள்.

கர்த்தர் இந்த விதமான கடுமையான தாக்குதலை தமது திருச்சபையைச் சுத்திகரிக்கும்படியாக அனுமதிக்கிறார். மேலும் அதிகரித்த வல்லமையுடனும் அதிகாரத்துடனும் அவரால் விடுவிக்கப்படும்படியாக இருப்பவர்களான பலருக்குள்ளே தாழ்மையில் கிரியை செய்யும்படியாகவும் இதை அனுமதிக்கிறார். மேலும் குற்றஞ் சுமத்துகிறவனை தமது திருச்சபையில் தலையைக் காட்டும்படியாகச் செய்து அவன் தலையை தம்மால் வெட்டி விடக் கூடும்படியும் அவ்வாறு

அனுமதிக்கிறார். கர்த்தர் தாமே பொய்யாக ஒரு வழியில் குற்றம் சுமத்தபடுகிறவர்களை மெய்ப்பித்துக் காட்டி நிலை நிறுத்தி தம்முடைய ஜனங்களுக்குள் பரிசுத்தமானதும் மாசற்றதுமான பயத்தை உண்டாக்கி அதனால் நாம் தொடர்ந்து நமது இருதயங்களில் குற்றஞ் சுமத்துகிறவனுக்கு ஆளுகை கொடுக்கப்படாதபடி செய்வதற்காக அவ்வாறு செய்கிறார்.

நமது தலைவர்களை ஒரு இயக்கத்திலிருந்து அடுத்து வரும் இயக்கத்தை எதிர்ப்பவர்களாக ஆகும்படியாகச் செய்யக் காரணமாயிருப்பது என்ன? இதற்காக சில முக்கியமான விஷயங்கள் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியவைகளாக நாம் அதை நம்மிடமிருந்து அவர்களுக்குக் கொடுத்து விட வேண்டும் அல்லது நாமும் அந்த தவறைத் திரும்பவும் செய்கிறவர்களாக இருப்போம். நாம் நினைக்கலாம் நாம் அதை எப்பொழுதுமே செய்ய மாட்டோம் என்றும் கூறலாம். ஆனால் ஒவ்வொருவரும் நினைத்ததும் (அ) யோசித்ததும் அதுவே தான். அன்றியும் அவர்கள் அவ்வாறு சொல்லியும் அதே தவறைச் செய்வதில் முடிவாக ஆகிவிட்டார்கள். ''இப்படியிருக்க, தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்.'' (I கொரி 10:12) நாமே அதைச் செய்ய மாட்டோம் என்று நாமே யூகித்துக் கொள்ளச் செய்யும் பெருமையே நமது வீழ்ச்சிக்கு நடத்திச் செல்லும் சரியான காரணிகளில் ஒன்றாகும்.

இந்த பிரச்சனையானது உண்மையாகவே திருச்சபையின் சரித்திர காலத்திற்கு முன்னரே இருந்ததாக அந்த உண்மையான இரு சகோதரர்களும் இந்த உலகில் பிறந்த காலத்திற்கே திரும்பவும் போகிறது. மூத்தவன் இளையவனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் யோவான் கூறுவது போல, ''நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதி முதல் கேள்விப்பட்ட விசேஷமாய் இருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம். அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான். தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளாயிருந்த தனிமித்தம் தானே.'' (I யோவான் 3:11-12) பரிசுத்த ஆவியின் ஒவ்வொரு இயக்கமான அசைவும் திருச்சபைக்கு அதிகமான ஒளியைத் திரும்ப பெற்றுக் கொள்வதற்கு அதன் விளைவாக இருந்தது. இது ஒரு புதிய சத்தியமல்ல. ஆனால் இந்த சத்தியமானது திருச்சபையின் சரித்திரத்தின் இருண்ட காலத்தில் அதனால் இழந்து போன சத்தியமாகும். நாம் எதிர்ப்பு என்று அழைப்பதையும் பொருட்படுத்தாமல் அதன் அதிகமானவற்றிற்கு காரணம் அதனுடைய பொறாமையாகும். தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் அல்லது தாங்கள் பெற்றுக் கொண்ட வெளிச்சத்திற்கு ஒரு காலத்தில் மட்டும் விசுவாசமாய் இருந்தவர்களுங்கூட கர்த்தரை தங்களைத் தவிர மற்றவர்களை உபயோகித்து விடுவார் என்பதை அவர்களால் நம்பக் கூடாதபடியாக ஆகி விடுகிறார்கள். தேவன் தம்முடைய சத்தியத்தையும், நோக்கங்களையும் மேலும் அதிகமாக திரும்பக் கொண்டு வரும்படி உபயோகித்து விடுவார் என்பதை அவர்களால் நம்ப முடிவதில்லை.

இயற்கையான தலைமைத்துவ திறமைகளை உடைய தலைமைத்துவமானது திருச்சபையில் வழக்கமாக மகா உயர்ந்த செல்வாக்குள்ள பதவிகளை அடைந்தவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் கோழைகள் அல்ல. அவர்களுக்கு தலைமைத்துவத்தை விட்டுக் கொடுத்து விடுவது மிகவும் கடினமானதாகும். அதிலுங்கூட நாம் நமது இயல்பான தலைமைத்துவ திறமைகள் பேரில் சார்ந்து, கர்த்தருக்குக் கீழ்படிவதற்கு பதிலாக முன் சொன்னபடி சார்ந்து இருப்போமானால் நிச்சயமாகவே நாம் ஒரு இடறுதலுக்கேற்ற தடையாக ஆகக்கூடிய முடிவான தோல்விக்கு ஏறக்குறையத் தீர்ப்படைந்தவர்களாக ஆவோம். ஆவிக்குரிய மெய்யான தலைமைத்துவமானது வேலைக்காரன் என்ற தாழ்மையில் வேரூன்றி இருக்கிறதேயல்லாமல் நமது இயற்கையான திறமைகளில் அல்ல. உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்தில் எவ்வளவுக்கு அதிகமாக அப்.பவுல் வளர்ச்சி அடைந்தானோ அவ்வளவுக்கு அதிகமாய் வைராக்கியமாய் தீர்மானம் உடையவனாக ஆகி மாம்சத்தில் தன் நம்பிக்கையை வைக்காது தன்னுடைய பலவீனத்தில் தேவனை மகிமைப் படுவதையே நாடினான். நாம் நாமாகவே ஸ்தாபித்துக் கொண்ட ஆளுகைப் பிரதேசங்களை மட்டுமே நாம் பாதுகாக்க வேண்டும். தங்களுடைய அதிகாரத்தை மெய்யாகவே தேவனால் ஸ்தாபித்து வைக்கப்பட்டவர்கள் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டவைகளை பாதுகாத்து வைத்துக் கொள்ள உதவி செய்யும்படியாக தேவனை விசுவாசிக்க வேண்டும்.

இந்த பயங்கரமான கண்ணிக்குள் விழுந்து விடாதபடி தடுத்துக் காக்கும் நிவாரணமாகத் தலைவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியது மனத் தாழ்மையும் யோவான் ஸ்நானகன் என்பவருடைய தன்மையையுமே. உண்மையான ஆவிக்குரிய ஊழியத்திற்கென்றுள்ள மகத்தான வகையைச் சேர்ந்த மனிதர்களில் ஒருவர் ஆவார். அவருடைய இந்த ஜீவியத்தின் நோக்கமாவது இயேசுவுக்காக வழியை ஆயத்தம் பண்ணி அவரை நோக்கி சுட்டிக் காட்டி அந்த மகா பெரியவர் பெருகவும் பிறகு தான் சிறுகவும் வேண்டும் என்று வாஞ்சித்தார். யோவானுடைய மகிழ்ச்சியாவது மணவாளனுடைய மகிழ்ச்சியைக் காண்பது தான்.

உண்மையான ஆவிக்குரிய தலைவர்களுக்கு ஆவிக்குரிய பிரதானிகளுடைய உள்ளான மனப்பான்மை இருக்க வேண்டும். ஒரு பிரதானியுடைய முழு நோக்கமும் இராஜாவுக்கு மணமகளை ஆயத்தம் செய்வதாகும். அந்த பிரதானிக்கு அந்த மணமகளை விரும்பும் விருப்பம் கூட இருக்க முடியாது. அவனுடைய மகிழ்ச்சி முழுவதும் இராஜாவுடைய மகிழ்ச்சியில் இருக்கும். இயேசு தன்னைத் தாமே வெறுமையாக்கி தனக்கென்ற பேரும் புகழும் இல்லாதவராகி அடிமையின் ரூபமெடுத்துக் கொண்டார். ஆதலால் உண்மையான ஆவிக்குரிய அதிகாரத்தில் கடக்கிறவர்கள் அனைவரும் அதையே தரித்துக் கொள்ள வேண்டும். நாம் ஊழியத்தைப் பயன்படுத்தி நமக்கு பேரையும் புகழையும் உண்டாக்கிக் கொள்ளும் பொழுது நமக்கு ஊழியம் செய்யக் கூடியவர்களைக் கண்டுபிடித்துக் கொண்டும் நம்மையே நிரப்பிக் கொள்ளவும் வேண்டும். நமக்கென்று கிறிஸ்துவினுடைய அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டோம். மூத்த தலைமுறை தலைமைத்துவம் எப்பொழுதுமே இடறுதலுக்கான தடையாய் இருக்கவில்லை. புதிய தலைமுறையினருங்கூட மூத்த தலைமுறையினரின் இடறுதலுக்குக் காரணமாக அவர்களைப் போலவே இருந்தனர். நாம் தான் புதிய தலைமுறையினர் (மூத்த தலைமுறையினருக்கு முற்றிலும் வித்தியாசமாக) என்று யூகித்துக் கொள்ளும் அதே அகந்தையானது ஒரு பெருமையிலே வேரூன்றியுள்ளது. அதை தேவன் தான் எதிர்க்க வேண்டும். கர்த்தருக்கும் அவருடைய ஜனங்களுக்குமாக விசுவாசத்துடன் ஊழியம் செய்யும்படியாக தங்களுடைய ஜீவியங்களையே கொடுத்திருக்கிற மனிதர்கள் ஸ்தீரிகளுடைய முகத்தில் அவர்களை இழிவு படுத்தும்படி அடிக்கப்படும் அடியாகும்.

இயேசு யோவான் ஸ்நானகனை மூத்த தலைமுறையின் ஒரு பகுதியாய் இருந்ததற்காக பரியாசம் செய்யவில்லை. அவர் அவனைக் கனப்படுத்தினார். இயேசு தம்மையே யோவானுடைய ஊழியத்திற்குக் கீழ்படித்தினார். இந்த பணிந்து கீழ்படிதலானது யோவானுக்கு அவரைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும்படியாக அனுமதிக்கு உட்படுத்தவில்லை. ஆனால் அவர் யோவானை அங்கீகரித்து அவனையும் அவனுடைய ஊழியத்தையுமே கனப்படுத்தினார். தவறாக பயன்படுத்தப்பட்டு தீங்கிழைக்கப்பட்ட சிறுவர்கள் ஏன் தீங்கிழைப்பவர்களாக வளர்கின்றனர்? ஏன் குற்றம் சுமத்தப்பட்ட பரிசுத்தவான்கள் குற்றம் சுமத்துகிறவர்களாக ஆகின்றனர்? இந்த இரண்டுக்குமான விடையானது ஒன்று போலவே தான். தவறிழைக்கப்பட்ட குழந்தைகள் வழக்கமாக தங்களுடைய பெற்றோர்களைப் பார்த்துத் தீர்ப்புச் செய்து அவர்களைப் போல இருக்கக் கூடாது என்று தீர்மானிக்கின்றனர். ஆகவே அவர்கள் எதிர் செயல் புரிகிறவர்களாக ஆகின்றனர். இது அவர்களை கிருபைக்குள் நடத்துவதில்லை. ஆனால் அவர்களுக்குள் கசப்பை ஊட்டி வளர்க்கிறது. இது முடிவாக அவர்கள் தங்கள் பெற்றோரைப் போலவே ஆகி விடும்படியாக விளைவாகிறது. தாழ்மை, மனந்திரும்புதல், மன்னிப்பு ஆகியவை மாத்திரமே இந்த வட்டத்தை உடைக்க முடியும். பெற்றோருடைய பாவங்கள் நாம் சிலுவையின் கிருபையை பெரும் வரைக்கும் பிள்ளைகளுடைய பாவங்களாகவே ஆகி விடும். தேவன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். இதைப் புரிந்து கொள்ளுகிறவர்கள் தேவனுடைய உதவி இல்லாமலே தங்கள் பெற்றோரைப் போலவே இருப்பார்கள்.

தங்களுக்கு முன்னிருந்த ஒவ்வொருவரையும் போலவே துன்பப்படுத்தப்பட போகிற ஒரு சந்ததி இருக்கும். ஆனால் அது தனக்கு அடுத்து வரும் சந்ததியை சித்திரவதை செய்யாது. இந்த இயக்கமானது சந்ததிகளின் பெருமைக்கு அடிபணியாது அதாவது அவர்களுடன் எல்லாம் முடிந்து விடும் என்ற யூகத்தினாலே தான். இந்த சந்ததி சிலுவையின் கிருபையைக் கண்டு கொண்டு, தங்களை தவறாக பயன்படுத்தியவர்களை இருதயத்திலிருந்து மன்னித்து விட்டதால். இந்த சந்ததியானது மேலும் கண்டு உணர்ந்து கொள்வதுடன் அவர்களுடைய பிள்ளைகள் ஆவிக்குரியவர்களாகவும் இயல்பானவர்களாகவும் இருப்பதில் நம்பிக்கை கொண்டு அவர்கள் போனதை விட அதிகமாக கிறிஸ்துவுக்குள் சென்று அதிலே தானே மகிழ்ச்சி அடைவார்கள். அவர்கள்

தங்கள் ஜீவியத்தைக் கொடுத்து அந்த தலைமுறையினருக்கு வழியை எவ்வளவு மெதுவாக ஆக்க வேண்டுமோ அவ்வளவு மெதுவாக ஆக்கி விட்டு அதில் மகிழ்ந்திருந்து அந்த சந்ததி உயரப் போகும்பொழுது தாங்கள் குறைந்து போக மகிழ்வார்கள். அவர்களுக்கு எலியாவின் ஆவி இருந்து பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடமும் திரும்பும் படி செய்யும்.

அந்த மாதிரியான சந்ததியாக இருக்கக் கூடிய திறன்பாடு கர்த்தருக்கென்றும் அவரது முடிவான நோக்கங்களுக்காகவும் வழியை ஆயத்தம் பண்ணும். இந்த ஆயத்தப்படுத்துதலாவது அந்த இரண்டு ஊழியங்களில் எதை தெரிந்து கொள்கிறோமோ அந்த முறையால் நிர்ணயிக்கப்படுகிறது ஒன்று குற்றஞ் சுமத்தும் ஊழியம் மற்றொன்று பரிந்து பேசும் ஊழியம். இப்பொழுது நாம் அந்த பயங்கரமான நுகமான ''விரலை நீட்டுதல்'' என்ற நுகத்தை நமது மத்தியிலிருந்து அகற்றி விட்டு நமது குற்றங் கண்டுபிடித்தலை பரிந்து பேசுவதாக மாற்றத் தொடங்குவோம்.

''அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும். கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். அப்பொழுது கூப்பிடுவாய். கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார். நீ சத்தமிடுவாய். ''இதோ நான் இருக்கிறேன்'' என்று சொல்லுவார். நுகத்தடியையும் விரல் நீட்டுதலையும் நிபச் சொல்லையும் நீ உன் நடுவிலிருந்து அகற்றி விடுவாய். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நிர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீர் ஊற்றைப் போலவும் இருப்பாய். உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பழாய் கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள். தலைமுறை தலைமுறையாய் இருக்கும். அஸ்திபாரங்கள் மேல் நீ கட்டுவாய். திறப்பானதை அடைக்கிறவன் என்றும் குடியிருக்கும் படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்.'' (ஏசாயா 58:8-9,11-12).